# கல்விக் கழகக் கட்டுரை

புதுவைக் கல்விக் கழகத்தின்

வெள்ளிவிழா நினைவு மலர்

கல்விக் கழகம்

புதுச்சேரி.

## முன்னுரை

புதுவைக் “ கல்விக்கழகத்தின் ” வெள்ளி விழா நினைவாக இந்நூல் “ கல்விக்கழகக் கட்டுரை ” என்னும் பெயரால் வெளிவருகிறது. கல்விக்கழகம் இருபத்தைந்து ஆண்டுகளாகச் செய்துவரும் தொண்டின் அறிகுறியாகவும் இது கொள்ளத்தக்கது.

தமிழ் நாட்டிலுள்ள தமிழ்ப்பேரறிஞர் பெரும்பாலோரின் கட்டுரைகளைக்கொண்டு திகழ்வதால் இந்நூல் தமிழருக்கு எத்துணைப் பயனுள்ள தென்பதை ஈண்டு எடுத்தியம்பத் தேவையில்லை.

இது வெளிவருதற்குப் பலவகையாலும் துணைபுரிந்த தமிழ்ப் புலவர்களுக்கு யாம் பெருநன்றி செலுத்துகின்றோம்.

தமிழுலகம் இதனை ஆதரிக்குமுகத்தான், இன்னும் விழுமிய முறையில் தம் தொண்டினைத் தொடர்ந்து நடத்திவரக் கல்விக் கழகத்தாரை ஊக்குவிக்கும் என்பது எமது நம்பிக்கை.

புதுவை
கர. 1951.

ரா. தேசிகன்
அமைச்சர்,
கல்விக்கழகம்.

## பொருள் அடக்கம்


| பொருள் | பக்கம் |
|---|---|
| 1. வாழ்த்து (கவிமணி-தேசிக-விநாயகம்பிள்ளை) | 1 |
| 2. வாழ்த்துச் செய்தி (திவான்பகதூர். C. S. இரத்தினசபாபதி முதலியார், கோவை) | 2 |
| 3. நமது கழகம் (திரு. தெய்வசிகாமணி, B.A.,B.L., Chevalier de la Legion d'Honneur கழகத் தலைவர்) | 4 |
| 4. தாம்பிர பர்ணி (திரு. எஸ். வையாபுரிப்பிள்ளை B.A.,B.L.) | 7 |
| 5. தமிழர் திருமணம் (திரு. ரா. சேதுப்பிள்ளை, B.A.,B.L.) | 18 |
| 6. மெய்கண்டார் வரலாறு (திருமந்திரமணி—துடிசைகிழார். அ. சிதம்பரனார்) | 23 |
| 7. பாரதியும் பெண்மையும் (திருமதி இராசாமணி அம்மையார் B.A. (Hons) L.T. சென்னை) | 48 |
| 8. நாகப்பட்டினம் (திரு. புலவர். டாக்டர். மா. இராசமாணிக்கனார், M.A.,L.T.,M.O.L.,Ph.D) | 52 |
| 9. திருவள்ளுவரும்—திருக்குறளும் (திரு. ஆ. கார்மேகக்கோனார், தமிழாராய்ச்சித்துறைத் தலைவர், அமெரிக்கன் கல்லூரி, மதுரை) | 56 |
| 10. கம்பரும் காப்பியச் சுவையும் (திரு. E. S. வரதராஜய்யர், B.A., அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆராய்ச்சித்துறை ஆசிரியர்) | 60 |

11. இருந்தமிழ் — 68
(திரு. சிவக்கவிமணி, C.K. சுப்பிரமணிய முதலியார், வழக்கறிஞர், கோவை)

12. இலக்கிய ஓவியங்கள்—முத்தொள்ளாயிரம் — 72
(திரு. புலவர். சரவண. ஆறுமுக முதலியார், தமிழ்ப்பேராசிரியர், ஆசிரியர் கல்லூரி, சென்னை)

13. கல்வியென்னும் பல்கடற் பிழைத்தும் — 78
(திரு. வி. கலியாணசுந்தர முதலியார்)

14. இசைபெறு திருக்குறள்—கசடறக் கற்க — 82
(திரு. புரட்சிக்கவிஞர்—பாரதிதாசன்)

15. கம்பர் காவியத்தில் ஓர் ஓவியம் — 85
(திரு. ஆலாலசுந்தரஞ்செட்டியார், தமிழ்ப் பேராசிரியர், சென்னை)

16. திருவள்ளுவர் பெயர்க் காரணம் — 93
(திரு. வித்துவான். ஆ. சிவலிங்கனார், விரிவுரையாளர், சி.பா.சு. தமிழ்க் கல்லூரி, மயிலம்)

17. திருவெம்பாவை — 101
(திரு. நீ. கந்தசாமி பிள்ளை அவர்கள், அமைச்சர், கரந்தைத் தமிழ்ச்சங்கம், தஞ்சை)

18. எது அறிவு ? — 113
(திருச்சி திரு. கி. ஆ. பெ. விசுவநாதம்)

19. யாதும் ஊரே யாவருங் கேளிர் — 117
(திருமதி. மேரி. மாசில்லாமணி அம்மையார், M.A.,L.T., கிறித்துவப் பெண்கள் கல்லூரி, சென்னை)

20. உழைக்க வேண்டும் — 120
(கவிமணி-தேசிக-விநாயகம்பிள்ளை)

21. கொல்லைப்புறக் காட்சிகள் — 122
(திரு. ரா. தேசிகன், B.A.,B.L., Officier d'académie, புதுவை)

22. சமயம் — 126
(திரு. சச்சிதானந்தம்பிள்ளை, B.A.,L.T., அண்ணாமலைப் பல்கலைக் கழகம்)

23. விஞ்ஞான வித்தின் விரிவு — 132
(திரு. புலவர். சுந்தர-சண்முகனார், புதுவை)

24. கம்பர் காட்டும் பெண்கள் 137
(வித்துவான், பண்டித, திரு. கா. பொ. இரத்தினம், B.A. (Hons) Lond., B.O.L. (Madras) விரிவுரையாளர் அரசினர் கலாசாலை, கொழும்பு)

25. நிலவு தந்த குறள் விருந்து 141
(திரு. வித்துவான், G. சுப்பிரமணியப்பிள்ளை, M.A., B.L.)

26. வாழ்க்கைக் குறிக்கோள் 146
(திருமதி. S. ருக்குமணி அம்மையார்)

27. நாகப்பட்டினத்துப் புத்த சைத்தியம் 154
(திரு. சித்தாந்த கலாநிதி. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை, தமிழாராய்ச்சி விரிவுரையாளர், அ.ப. கழகம்)

28. கல்வியும் கேள்வியும் 164
(தருமபுர ஆதீன வித்துவான், திருவண்ணாமலை ஆதீன விரிவுரையரசு, "செட்டிநாடு" இதழாசிரியர், பாலகவி, வயிநாகரம் வெ. இராமநாதன் செட்டியார், தேவகோட்டை)

29. தமிழ்த் தெய்வம் 166
(திரு. வித்துவான். ஈ. பண்டார நம்பியார், பூதப்பாண்டி)

30. கம்பர் ஓர் ஏழை 173
(திரு. கோவைகிழார் C.M. இராமச்சந்திரஞ் செட்டியார் B.A., B.L.)

31. திருக்குறள் 178
(திருமதி. இராசரத்தினம் அம்மையார் M.A., L.T., தமிழ்ப்பேராசிரியை, சென்னை)

32. சமய ஆக்கம் 182
(திரு. கவிஞர். அ.கு. ஆதித்தர்)

33. ஊசலாட்டம் 184
(திரு.டி. பி. நவநீதகிருஷ்ணன், M.A. அண்ணாமலைநகர்)

34. பரிமேலழகர் 187
(திரு. வித்துவான், சி. துரைசாமி, தலைவர், தமிழ்க்கல்லூரி, மயிலம்)

35. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தமிழ் நாடகங்கள் 189
(திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், M.A., B.L., M.O.L.)

36. கம்பன் நீதியந் தலைவன் 207
(வித்துவான். திரு. சுந்தர-குமரன், கல்வே கல்லூரி, புதுவை)

37. தமிழன் உள்ளம் 212
(வித்துவான். திரு. சி. இராசகோபாலப் பிள்ளை, தலைமைத் தமிழாசிரியர், நகர உயர்நிலைப் பள்ளி, குடந்தை)

38. ஒரு நிகழ்ச்சிச் சித்திரம் 219
(வித்துவான். திரு. R. S. மயில்சாமி P.O.L. பழனி.)

39. தமிழ் வளர்ச்சி 222
(வித்துவான். திரு. மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை, கச்சியம்பதி.)

40. அழியாக் கவிஞன் 226
(திரு. அ. ச. ஞானசம்பந்தன், M.A., சென்னை)

41. தொண்டர் சீர் பரவுவார் 228
(வித்துவான். திருமதி. சு. கரும்படுசொல்லி, திருவையாறு)

42. உலகு ஒரு பாடசாலை 232
(திரு. பண்டித. அ. நாராயணசாமி நாயுடு, காரைக்கால்)

43. படித்த பெண் 236
(தமிழ்ப் புலவர். திருமதி. S. இலட்சுமி, பழனி.)

44. கல்வியும் கற்பனையும் 237
(திரு. பி. கோதண்டராமன், M.A.,B.L.)

45. கல்வியும் கலையும் 240
(திரு. கனகராஜன், B.O.L. புதுக்கோட்டை)

46. கருவூர்த் தேவர் 242
(புலவர். திரு. க. வெள்ளை வாரணனர், அண்ணுமலை நகர்.)

47. தொல்காப்பியம் 248
(திரு. வித்துவான். வே. வேங்கடராஜலு ரெட்டியார்)

48. பழந்தமிழ் நாடும் நகரமும் 254
(திரு. டாக்டர். அ. சிதம்பரநாதச் செட்டியார், M.A.,Ph.D., தமிழ்ப்பேராசிரியர், அண்ணுமலைநகர்)

49. கல்வி கேள்வி—திருக்குறள் 260
(திரு. வீ. உலகவூழியனர்)

50. தமிழினம் தாழ்ந்ததேன் ? 265
(திரு. கா. அப்பாத்துரை, M.A.,L.T.)

51. கவின் கலை 268
(திரு. தமிழ்மணி, சாமி-வேலாயுதம்பிள்ளை)

52. பொய்ம்மை நெஞ்சமும் புலமைப் பஞ்சமும் 274
(நாவலர், நீதிவாதி, பேராசிரியர், இளசைகிழார், திரு. சோமசுந்தர பாரதியார் அவர்கள், M.A.,B.L.)

53. அழகும் கனவும் 282
அருட்பா விளக்கம் 283
(திரு. கவியோகி. சுத்தானந்த பாரதியாரவர்கள்)

54. சங்கப்புலவர் குன்றியனுர் கவிநயம் 295
(திரு. புதுவை—அரசமணி)

55. வரலாறும் வரலாற்றுசிரியனும் 302
(திரு. ர. திருநாவுக்கரசு, புதுவை)

56. கோவையார் ஓவியக் காட்சி 307
(திரு. பேராசிரியர், கவியரசு, அரங்க-வேங்கடாசலம் பிள்ளை)

57. குறுந்தொகையில் சில உவமைகள் 311
(புதுவை, வித்துவான். திரு. மு. த. வேலாயுதனர்)



கழகம் நிறுவியோர்
1926



திரு. சு. சுவாமிநாததிட்சதர், B. A., L. T.
முதலாண்டுவிழாத் தலைவர்



திரு. அ. வே. முத்தைய முதலியார், B. A., B. L.
2, 4-ஆம் ஆண்டுவிழாத் தலைவர்



நெல்லிக்குப்பம், திரு. மா. இரத்தினம் பிள்ளை,
3-ஆம் ஆண்டுவிழாத்தலைவர்



திரு. அ. செகநாத நாயடு
5, 6-ஆம் ஆண்டுவிழாத் தலைவர்



**திரு. பண்டித. அ. நாராயணசாமி நாயுடு,**
7, 8, 9-ஆம் ஆண்டுவிழாத் தலைவர்



**திரு. நீ. கந்தசாமி பிள்ளை,**
(கரந்தைத் தமிழ்ச் சங்கம்)
10-ஆம் ஆண்டுவிழாத் தலைவர்



தமிழ்ப் பெரியர், திருவாளர்,
**திரு. வி. கலியாணசுந்தர முதலியார்**
11-ஆம் ஆண்டுவிழாத் தலைவர்



**திரு. S. சச்சிதானந்தம் பிள்ளை,**
**B. A., L. T.**
12, 13-ஆம் ஆண்டுவிழாத் தலைவர்



திரு. கி. இராமலிங்க முதலியார், M. A.
14, 15-ஆம் ஆண்டுவிழாத் தலைவர்



திரு. சாமி. வேலாயுதம் பிள்ளை, B. A., L. T.
16-ஆம் ஆண்டுவிழாத் தலைவர்



திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை,
M. A., B. L., M. O. L.
17-ஆம் ஆண்டுவிழாத் தலைவர்



திரு. S. ஆறுமுக முதலியார்,
M. A., L. T., M. O. L.
18-ஆம் ஆண்டுவிழாத் தலைவர்



திரு. டாக்டர். அ. சிதம்பரநாதச் செட்டியார், M. A. Ph. D.
19-ஆம் ஆண்டுவிழாத் தலைவர்



திரு. ரா. பி. சேதுப் பிள்ளை, B. A., B. L.
20-ஆம் ஆண்டு
(முதல் நாள்) விழாத் தலைவர்



திரு. வித்துவான்,
மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை,
20-ஆம் ஆண்டு
(இரண்டாம் நாள்) விழாத் தலைவர்



புதுக்கோட்டை திவான்,
கான்பகதூர்,
**P.** கலிபுல்லா சாகிபு பகதூர், M. A., B. L.
21-ஆம் ஆண்டுவிழாத் தலைவர்



திரு. திருமந்திரமணி, துடிசைகிழார்,
அ. சிதம்பரனுர்
22-ஆம் ஆண்டுவிழாத் தலைவர்



திரு. வித்துவான்,
சி. இராசகோபாலப் பிள்ளை
23, 24-ஆம் ஆண்டுவிழாத் தலைவர்



திரு. டாக்டர். மா, இராசமாணிக்கம் பிள்ளை,
M. A., L. T., M. O. L., Ph. D.
பதினெண் கீழ்க்கணக்கு மாநாட்டுத் தலைவர்



கழகத்தின் புதுக்கட்டிடப் புகுவிழா
1933




கழக உறுப்பினர்கள்
1951

# வாழ்த்து

2358

(கவிமணி-தேசிக-விநாயகம் பிள்ளை)

பாரில் என்றும் சுதந்திரத்தைப்
பாது காக்கும் நகரமெனப்
பேரு யர்ந்த புதுவைநகர்
பேணுங் கல்விக் கழகத்தின்
சீர ணிந்த வெள்ளிவிழாச்
சிறப்பில் மலர்ந்த மலர்கங்கை
நீர ணிந்த இறையருளால்
நித்தம் வாழ்க வாழ்கவே

# புதுவைக் கல்விக் கழகத்தின் வெள்ளி விழா நினைவு மலருக்குச் செய்தி

(திரு. திவான்பகதூர் C. S. இரத்தினசபாபதி முதலியார் அவர்கள், கோவை)

---

புதுவைக் கல்விக் கழகத்தின் வெள்ளி விழா நடைபெறப்போவதை அறிந்து அளவிலா ஆனந்தம் கொண்டேன். மக்களிடைக் கல்வியைப் பரப்புவதையே தன் பிரதான நோக்கமாகக்கொண்டிருக்கும் கல்விக் கழகம் மேன்மேலும் விருத்தி யடைந்து நாட்டிற்கு அரும் சேவைசெய்ய எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவா ராக !

கல்வி என்ருல் படிப்பு என்று அநேகர் எண்ணியிருக்கின்றனர். அது தவறு. கல்விக்கும் படிப்பிற்கும் அதிக வித்தியாசம் உண்டு. கல்வியை ஒரு இலக்ஷியம் என்று வைத்துக் கொண்டால், படிப்பு அவ்விலக்ஷியத்தை அடைய ஏதுவாகும் ஒரு கருவியேயாகும்.

"எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு"

என்கிருர் பொய்யாமொழிப் புலவர்; அதாவது இலக்கங்களும் எழுத்துக்களும் வாழும் மனிதர்களுக்குக் கண்களுக்கொப்பானவை என்கிருர். கண்கள் நமக்கு எவ்வகையில் பிரயோஜனப்படுகின்றன ? பலவற்றையும் பார்த்து, அவைகளை ஆய்ந்து, அவைகளில் நல்லவைகளை நமக்குப் பயன்படுத்திக்கொள்ள நம் கண்கள் நமக்கு உதவுகின்றன. அஃதேபோல் எண்ணும் எழுத்தும் ஆகிய "பள்ளிப்படிப்பு" என்னும் கண்களைக் கொண்டு உலகில் நடக்கும் காரியங்களைப் பார்த்து, அவைகளில் நல்லனவற்றைத் தேர்ந்து, பிறவற்றைக் கூடுமானல் நம் முயற்சி கொண்டு சீர் திருத்தி நல்லனவாக்கி, இன்றேல் அவைகளைத் தள்ளிவிட்டு, பிறரும் நாமும் ஆன்ம லாபம் அடையும் வகையில் நம் வாழ்வை அமைத்துக்கொள்ள வேண்டும் என்பது தான் மேற்படி குறளின் கருத்து. அவ்விதம் நம் வாழ்வைத் தகுந்த முறையில் வகுத்துக் கொள்வதுதான் உண்மைக் கல்வி. அக்கல்வியைப் பூரணமாக அடையப் படிப்பு ஒரு கருவியேயாகும்.

"கல்வி" என்பது "கல்" என்னும் பகுதியிலிருந்து வந்தது. தோண்டி யெடுக்கப்படுவது கல். "மனிதன்" என்னும் பூமியிலிருந்து தோண்டி யெடுக்கப் படும் "பண்பு" தான் கல்வி. பண்பு என்பது நற்குணங்கள் சேர்ந்து நலம்பெறும் தன்மையே. புனித மனிதத்தன்மை மானிடர் அனைவரிடமும் புதைந்துகிடக்கத் தான் செய்கிறது. சிலரிடம் உண்டு ; பிறரிடம் இல்லை என்ற கூற்று உண்மை அல்ல என்பதே என் துணிவு. சிலரிடம் அப்பண்பு வெளிக்குக் கொண்டுவரப்படாமல்

நசிந்துவிடுகிறது. அத்தகையோரை நாம் தீயோர் என்கிறோம். சிலரிடம் அப்பண்பு நன்கு வெளிக்கொண்டுவரப்பட்டு மக்களுக்கும் உலகத்திற்கும் உதவும் முறையில் திகழ்கின்றது. அவர்களை நாம் ஒழுக்க சீலர்கள் என்றும், பரோபகாரிகள் என்றும் சொல்லுகிறோம். எனவே, உயரிய பண்பு உகந்த முறையில் வெளிக்கொணரப்பட்டால் எல்லோருமே தர்மசீலர்களாகவும் தமக்கென்று வாழாப் பிறர்க்குரியாளர்களாகவும் விளங்குவார்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. இவ்விலக்ஷியத்திற்கு, அதாவது உண்மைக் கல்விக்கு ஏற்ற கருவி படிப்புத்தான். இக்கல்வியை அடையும் வகையில்தான் படிப்பு அமையவேண்டும். இதைக் கருத்தில் கொண்டுதான் புதுவைக் கல்விக் கழகம் செயலாற்றி வருகின்றது என்று அறிந்து உளம் பூரிக்கின்றேன்.

"இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகளியற்றல்
அன்ன சத்திர மாயிரம் வைத்தல்
ஆலயம் பதி னாயிர நாட்டல்
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோ ரேழைக் கெழுத் தறிவித்தல்"

என்கிறார் பாரதியார். எனவே, ஏழைகளுக் கெழுத்தறிவிப்பதையும் தன் நோக்கங்களில் ஒன்றாகக் கொண்ட புதுவைக் கல்விக் கழகம் எத்துணைக்கோடி புண்ணியம் ஆற்றிவருகிறது என்பது அளவிடற்கரியது.

வாழ்க புதுவைக் கல்விக் கழகம் ! வாழ்க கல்வி ! !

# நமது கழகம்

(திரு. அ. வி. தெய்வசிகாமணி, B. A., B. L., Chevalier de la Legion d'Honneur), (கழகத் தலைவர்)

இறைவன் திருவருளால் புதுவைக் கல்விக்கழகம் இற்றைக்கு வெள்ளி விழா கொண்டாடும் நிலையில் வந்துளது பற்றி நாம் அனைவரும் மகிழ்ச்சியுறுகிறோம். நமது கழகத்தின் தோற்றத்தைப்பற்றியும் அதன் வளர்ச்சியைப்பற்றியும் இங்கு ஒருவாறு குறிப்பிட வேண்டிய கடமையைக் கொண்டுள்ளேன்.

பிரஞ்சு ஆட்சியிலுள்ள இப்புதுவைமாநகரத்தில் தமிழ்ப் புலவர்களும், புரவலர்களும் நிரம்ப இருந்த காலம் உண்டு. பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றுண்டுகளின் புதுவையின் வரலாறு இதனை நன்கு உணர்த்துகின்றது.

பிற்காலத்தில் புதுவையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் தமிழ்மொழியின் ஆக்கம் குன்றத் தலைப்பட்ட தென்பதை எவரும் மறுக்க இயலாது. பிரஞ்சுக்கல்லூரியில் புகும் மாணவர்கள் தாய்மொழியில் பற்றின்றித் தமிழைப் புறக்கணிப்பாராயினர். மாணவர்கள் கல்லூரியில் தமிழ் மொழியில் உரையாடுதல் கூடாதென்றும் தடை செய்யப்பட்டனர். இதனுல் வாழ்க்கைக்கு அவசியமாகப் பிற மொழிப் பயிற்சியை மேற்கொண்ட தமிழர் தமிழ்மொழியில் ஆர்வங்கொள்ளாது அதனை ஒதுக்குவார் ஆயினர். தமிழ் மொழி ஒன்றையே கற்பித்துவந்த திண்ணைப்பள்ளிகள் எண்ணிக்கையும் சில சட்டதிட்டங்களால் நாளடைவில் குறைவதாயிற்று.

ஆயினும், ஆங்காங்கே தமிழ் மொழியைத் தனியே கற்ற அறிஞர்கள் ஒரு சிலர் இருந்துவந்தனர். அவர்கள் அவ்வப்போது தமிழின் உயர்வையும், அழகையும் அதனைக் கற்கவேண்டிய அவசியத்தையும் மக்களுக்கு எடுத்துரைப்பாராயினர். இதனுல் அவர்கள் தமிழின் மேன்மையை உணராதிருந்த பிறமொழிப் பயிற்சியாளர்களைத் தங்கள் தாய் மொழியாந் தமிழ்மொழியை விரும்பிக்கற்க வழி செய்தார்கள்.

பிறமொழிப் பயிற்சியோடு தமிழை ஆராய்ந்த பலர் தாம் கற்ற இரண்டு மொழிகளையும் ஒப்புநோக்கி, இலக்கியச் செறிவு, சொன்னயம், பொருணயம் முதலியவற்றை ஆராயத் தலைப்பட்டனர். தமிழின் அருமையும், இனிமையும் அவர்களுக்குப் புலனுயின. தமிழை ஆதரிக்கவேண்டுமென்றும், அதனை வளர்க்கவேண்டுமென்றும் கருதினர். புதுவையில் அதற்கென இரண்டொரு கழகங்கள் நிறுவப்பட்டன. கலைமகள் கழகம், புதுவைத் தமிழ்ச் சங்கம் முதலியன சிறப்பாகக் குறிக்கத் தக்கன.

இத்தகைய கழகங்களின் மொழித்தொண்டு புதுவையின் தென்பகுதியிலுள்ள சில இளைஞர்களின் கருத்தைக் கவர்ந்தது. 1912-ம் ஆண்டின் தொடக்கத்தில் மாணவர் பதின்மர் " சேந்திலேர் தோட்டம் " என்னும் அரசாங்கப் பூங்காவில் ஒன்றுகூடிக் " கல்விப் பிள்ளைகள் இணக்கம் " என்ற பெயரோடு ஒரு கழகத்தைக் கல்வி வளர்ச்சிக்காகவும், சிறப்பாகத் தமிழ்மொழிப் பயிற்சிக்காகவும் நிறுவினர். இக்கழகம் வளர்மதியென வளர்வதாயிற்று. படிப்பகம், நூல் நிலையம், இராப்பாட சாலை முதலிய உறுப்புக்களைத் தன்னகத்தே கொண்டு தொண்டு புரிந்துவந்தது. இக்கழகத்தின் சீரிய அமைப்பு அக்காலத்தில் புதுவையில் சிறந்து விளங்கிய பெரியோர்களின் அன்பையும் அருளையும் பெறுவதற்குப் பெருந்துணை செய்தது. அப் பெரியோர்களுள் சிறப்பாகக் குறிக்கத்தக்கவர்கள் திருவாளர்கள் கவிச்சக்கரவர்த்தி சி. சுப்பிரமணிய பாரதியார், வ. வே. சு. அய்யர், புலவர். சி. பங்காரு பத்தர் முதலியவர்கள் ஆவார்கள்.

பிரஞ்சு அரசாங்க விதியொன்று, உறுப்பினர் இருபதின்மர்களுக்கு மேற்பட்ட எண்ணிக்கையுடைய கழகங்கள் அரசாங்கத்தார் அனுமதி பெற்றிருத்தல் வேண்டுமென்று கூறுகிறது. "கல்விப் பிள்ளைகள் இணக்க"த்தின் வளர்ச்சிக்கு ஊறு நேராதிருக்க அரசாங்க அனுமதி வேண்டியதாயிற்று. அக்கழகம் தன் பெயரை மாற்றிக் "கல்விக் கழகம்" என்னும் புதுப்பெயரால் அட்சய ஆண்டு சித்திரைத் திங்கள் ஏழாம் நாள் அரசியலார் உத்தரவு பெற்றுப் புதுத்தோற்றத்துடன் பொலிவதாயிற்று. மேற்குறித்த நாளே கழகத்தின் தொடக்க நாளாகவும் கொள்ளப்பட்டது.

நமது கழகம் தோன்றி இற்றைக்கு முப்பத்தொன்பது ஆண்டுகளாயின என்றாலும், அரசாங்க அனுமதியோடும், இப்பொழுதுள்ள " கல்விக்கழகம் " என்னும் பெயரோடும் இருபத்தைந்து ஆண்டுகளாகத் திகழ்ந்துவருவதாலேயே இவ்வாண்டில் அதன் வெள்ளி விழாக் கொண்டாடுவதாயிற்று.

கல்விக்கழகம் தமிழ்ப் பேரறிஞர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றித் தமிழ்ப் பணியே தன் தலையாய பணியெனத் தொண்டு செய்வதாயிற்று. படிப்பகம், நூல் நிலையம், இராப் பாடசாலை முதலியவற்றை முன்னிலுஞ் சிறப்பாகக் கவனிக்கத் தொடங்கிற்று. கழகத்தில் பயில்வோர்களுக்குத் தேர்வுகள் நடத்திப் பரிசுகளும் வழங்கப்பட்டன. வாய்ப்பு நேர்ந்தபோதெல்லாம் தமிழ் அறிஞர்களைக் கொண்டு சொற்பெருக்காற்றச் செய்து மக்களுக்குத் தமிழ் ஆர்வத்தைக் கழகம் ஊட்டிவந்தது. தமிழ் இலக்கிய வகுப்புக்கள் தொடங்கப்பட்டன. இலவசமாகத் தமிழ்ப்பாடஞ் சொல்லப்பட்டுவந்தது. தமிழ் வித்துவான்கள் பலர் எவ்வித ஊதியமும் கருதாது இத்துறையில் உதவி செய்து வந்தனர்.

கழகத்தின் செல்வ நிலையைச் சீர்படுத்துவான்வேண்டிப் பிரஞ்சு மொழியிலுள்ள சில நாடக நூல்கள் தமிழில் மொழிபெயர்த்துப் புதுவையிலும், திருப்பாதிரிப்புலியூரிலும் நடிக்கப்பட்டன. அரசாங்கப் பேரலுவலாளர்கள் அவற்றை வியந்து பாராட்டினர். அந்நாடகங்களால் கிடைத்த வருவாயைக் கொண்டும், உறுப்பினர் பலர் உதவியதாலும் கழகத்துக்கெனச் சொந்தமாக அழகியதோர் கட்டிடம் புதுவை, சான்றோர் வீதியில் கட்டப்பட்டது. விலைமதிப்புள்ள அக்கட்டிடத்தையே கழகம் இன்று தன் இருப்பிடமாகக் கொண்டுள்ளது.

ஆண்டுதோறும் கல்விக்கழகம் விழாக்கள் நடத்தி மக்களுக்குத் தமிழ்ச்சுவையும், அறிவுணர்வும் அளித்துவருகிறது. தமிழ்நாட்டுப் பேரறிஞர் பெரும்பாலோர் கல்விக்கழகத்துக்கு வந்து தம் கைம்மாறு கருதாப் பேருதவியைப் புரிந்து தம் ஆதரவையும் நல்கி வருகின்றனர்.

தமிழ்நாட்டில் இதுகாறும் நடைபெருத முறையில் சருவசித்து ஆண்டில் பதினெண் கீழ்க் கணக்கு மாநாடு ஒன்றை நமது கல்விக்கழகம் தமிழ்ப்புலவர் பலர் ஆதரவோடு நடத்தி வெற்றிகண்டது நாடறிந்ததொன்ரும்.

நமது கழகம் தமிழன்னைக்கு எந்தெந்தத் துறையில் ஆக்கம் தேடவேண்டுமோ அந்தந்தத் துறையிலெல்லாம் இறங்கித் தொண்டுபுரியச் சித்தமாயிருக்கிறது. அது குறித்து வருங்காலத் திட்டங்கள் பலவற்றை விரிவாக வகுத்துக்கொண்டிருக்கிறது. இதுகாறும் அது செய்துவந்த பணியின் பயனை நுகர்ந்த தமிழ்மக்கள்,சிறப்பாகப் புதுவைத் தமிழர்கள், கல்விக்கழகத்துக்கு உறுதுணையாக இருந்து அதன் எதிர்காலப் பெருந்திட்டங்களை நிறைவேற்றி வைத்துத் தமிழ்மொழியையும், தமிழர்களையும் உயர்நிலையடையச் செய்வார்களென்று நம்புகிரேம். கலை மடந்தை துணை செய்வாளாக !

# தாம்பிர பர்ணி

(திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை,—B.A., B.L.)

தாம்பிர பர்ணி நமது பாரத தேசத்தின் தென்கோடியில் ஓடும் ஒரு முக்கிய மான நதி. இது, திருநெல்வேலி ஜில்லாவில், மேற்குத்தொடர் மலையைச் சார்ந்த பெரிய பொதிகை என்னும் அகஸ்திய மலையில் உற்பத்தியாகி, மன்னார் குடாக்கட லில் சங்கமிக்கிறது. இந்நதியின் நீளம் 75-மைல்தான். 1750-சதுரமைல் பரப்புள்ள பிரதேசத்தைச் செழிக்கச் செய்கிறது. மேற்குத்தொடர் மலையில் மட்டும் 200-சதுர மைல் அளவுள்ள இடத்தில் மழை பொழிந்து இதன் நீர் பெருகுகிறது. தென் மேற்குப் பருவமழையும் வடகிழக்குப் பருவமழையும் இந்நதியின் நீர்ப்பெருக்கிற்கு உதவுகின்றன. மரங்கள் நெருங்கியடர்ந்த பள்ளத்தாக்குக்களினூடே முதலாவது விரைந்தோடி, பின் 100-அடித் தாழ்ச்சியிலிருக்கும் ஒரு பெரிய குன்றின்மேலாகப் பாய்ந்து விழுகிறது. பிற்பாடு அருவி அருவியாக அடுத்தடுத்துப் பல குன்றுகளில் விழுந்து செல்லுகிறது. சிறிது தூரத்தில் இடது பக்கத்தினின்றும் பேயாறு, உள் ளாறு என்ற இரண்டு சிற்றாறுகள் இதிற் சேருகின்றன. பின்னர், ஒரு செங்குத் தான மலையினின்றும் மிகப் பெரியதோர் அருவியாகக் கீழே விழுகிறது. இந்த அருவி வீழ்ச்சி நம்மை மயிர்க்கூச்செறியச் செய்கிறது. இதுதான் பாண தீர்த்தமாக விளங்குவது. இவ்வருவி விழுமிடத்தின் அடியில், வலது பக்கத்தில் சிங்கம்பட்டி ஜமீனில் உற்பத்தியாகும் பாம்பாறு வந்து சேருகிறது. ஒன்றரை மைலுக்குப் பிற் பாடு இடது பக்கத்திலிருந்து காரியாறு என்பதொன்றும் வந்து கலக்கிறது. மிகப் பிரபலமான சொரிமுத்தையன் கோவிலைப்பற்றிப் பலரும் அறிவார்கள். இது பாம் பாறு கலக்குமிடத்திலிருந்து சுமார் 3-மைல் தொலைவில் உள்ளது. இந்தத் தூரத் தில் மைலுக்கு 20-அடிகள் வீதம் நதி தணிந்து செல்லுகிறது. ஆனால், கோவிலின் பக்கத்தில் நதி வந்ததும் அதன் வேகமும் இழுப்பும் அதிகம். பின்பு, 5-மைல் அளவிற்கு அது ஒரு பீடபூமியின் வழியாகக் கடந்து முண்டன்துறைக்கு வருகிறது. இதன் அருகில் சேர்வையாறு என்ற ஒரு முக்கியமான உபநதியைப் பெறுகிறது. பின், அடுத்தடுத்திருக்கும் இரண்டு பெரிய மலைகளால் இரண்டாகப் பிரிவுபட்டு, பாபநாசத்திற் கருகிலுள்ள குன்றுகளை அடைந்து, அங்கிருந்து 300-அடித்தாழ்ச்சி யிற் கீழே பாய்கிறது. இதுதான் கலியாண தீர்த்தம். பாய்ந்து விழுந்த இடத்தில் உயர்ந்தோங்கி நிற்கும் குன்றுகளால் பிரிவுபட்டு மூன்று நதிகளாகத் தனித்தனி சென்று, அரை மைலுக்கு அப்பால் ஒன்றுசேருகிறது. சிறிது தூரத்தில் பாபநாசம் உள்ளது. இதுவே, தாம்பிர பர்ணி நதி மலையிற் செல்லும் நெறியாகும்.

பாபநாசத்திலிருந்து கிழக்காக மன்னார் குடாக்கடலிலுள்ள புன்னைக்காயல் என்ற இந்நதியின் முகத்துவாரத்திற்கு 60-மைல்கள் உள்ளன. இடையே தென்

காசி, அம்பா சமுத்திரம், திருநெல்வேலி, ஸ்ரீவைகுண்டம், திருச்செந்தூர் முதலிய தாலுகாக்களின் வழியாக இந்நதி பாய்ந்து செல்லுகிறது. அம்பா சமுத்திரம் தாலுகாவில் மைலுக்கு 6-அடி வீதமும், ஸ்ரீவைகுண்டம் தாலுகாவில் வரும்பொழுது மைலுக்கு 3-அடி வீதமும் நதி கிரமமாகத் தாழ்ந்து வருகிறது. சாதாரணமாக வெள்ளம் வரும்போது, அம்பா சமுத்திரம் பிரதேசத்தில் 15-அடி ஆழமும், ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டிற்குப்பின் 6-அடி ஆழமும் இருக்கும். அம்பா சமுத்திரத்தில் நதியின் அகலம் 300-அடிதான். ஆனால், கடலிலிருந்து 12-மைலுக்கு உள்ளாகவிருக்கும் ஆழ்வார் திருநகரிக்கு வரும்பொழுது கால்மைல் தூரமாக அகன்றுவிடுகிறது.

இடையிடையே சில உபநதிகள் இந்நதியோடு கலக்கின்றன. கல்லிடைக்குறிச்சிக்கு 2-மைல் மேற்காகக் கன்னடியன் அணைக்கட்டை அடுத்து மணிமுத்தாறு வந்து சேருகிறது. பின், வராக நதியும், கடனு நதியும் ஒன்றுசேர்ந்து திருப்புடை மருதூரில் இடது பக்கமாக வந்து கலக்கின்றன. பின்னர் பச்சையாறு. இது நாங்குனேரி, திருநெல்வேலி தாலுகாக்களின் வழியாய்ப் பாய்ந்து பயிர்களைச் செழிக்கச் செய்து தருவையில் பாளையங்காலில் விழுகிறது. கடைசியாக, சித்திரா நதி என்ற பெயருள்ள சிற்றாறு. இந்நதி குற்றாலமலைகளில் உற்பத்தியாகித் தேனருவி, செண்பாடவி அருவி, குற்றால அருவி முதலிய பல அருவிகளாக விழுந்து விழுந்து செல்லுகிறது. இந்நதி செல்லுமிடங்கள் மிகவும் செங்குத்தாக உள்ளன. இதன் நீளம் 40-மைல். இதில் 18 அணைக்கட்டுக்கள் உள்ளன. 27000-ஏக்கராப் பூமியைச் சாகுபடி செய்து சீவலப்பேரியில் வந்து தாம்பிர பர்ணியுடன் கலக்கிறது.

தாம்பிர பர்ணி நதியிலும் அணைக்கட்டுக்கள் பலபல உள்ளன. வெள்ளம் அயலிடங்களில் பரவாதபடி நதியின் இருபக்கங்களிலும் கரைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஸ்ரீவைகுண்டம் அணைக் கட்டிலிருந்து இரண்டரை மைல் கழிந்து தொடங்குகிற அணைப்புக்கரை 16-மைல் தொடர்ந்து செல்லுகிறது. அதாவது முகத்துவாரத்திற்கு இப்பால் 2-மைல்வரையில் இக்கரை தொடர்ச்சியாய் அமைந்திருக்கிறது. நதி முற்காலத்தே சங்கமித்த இடத்தில் இப்பொழுது மணல்மேடு பாய்ந்துள்ளது. இதனால் கடல் பின்வாங்கிப் போயிருக்கிறது. கடற்கரையில் வந்து சேர்ந்ததும், இந்நதி வளைந்து வளைந்து செல்லும் கழிகளின் வழியாகச் சென்று கடலோடு கலக்கிறது. இரண்டு பிரதான முகத்துவாரங்கள் புன்னைக்காயலில் உள்ளன. ஒன்றில் ஒருபொழுதும் அடைபடாது நீர் சென்றுகொண்டிருக்கும். மற்றொன்று ஆண்டிற் சில மாதங்கள் அடைபட்டிருக்கும். இதுதான் தாம்பிரபர்ணி நதி நிலத்தில் செல்லும் நெறி.

தாம்பிர பர்ணி என்று மிகச் சாதாரணமாக இன்று வழங்கி வருகிறோம். இப்பெயரின் வரலாற்றைச் சிறிது நோக்குவோம். இப்போது நிர்ணயிக்கக்கூடிய அளவில் கி.பி. 5-ம் நூற்றாண்டிலிருந்தேனும் இப்பெயர் வழங்கிவருகிறது என்று சொல்லலாம். வடமொழியிலே வியாஸ பாரதத்தில் வனபர்வத்தில் (அத். 86) யுதிஷ்டிரருக்குத் தீர்த்த மகிமைகளை உரைக்குமிடத்தில் தாம்பிர பர்ணி நதி குறிக்கப்படுகிறது. இவ்வாறே வால்மீகி இராமாயணத்தில் கிஷ்கிந்தா காண்டத்தில் (அத். 47, ஸ்லோ. 17) சுக்கிரீவன் சீதையைத் தேடத் தெற்கு நோக்கிக் குரங்குப்படைகளை

அனுப்புகிற இடத்தில், முனி சிரேஷ்டரான அகஸ்தியருடைய அனுமதியின் பேரில் நீங்கள் தாம்பிர பர்ணி என்ற முதலைகள் நிரம்பிய பெரிய நதியைக் கடந்து செல் லுங்கள். அந்நதி அழகிய சந்தனச் சோலைகளால் மூடப்பெற்ற திட்டுக்களை யுடைய தாய்க் கணவனிடத்து அன்புள்ள யுவதியானவள் புக்ககம் புகுமாறுபோலச் சமுத் திரத்தில் சென்று விழும் என்று சொல்லப்படுகிறது. இவ்விரண்டு இதிகாஸங்களி லும் தாம்பிர பர்ணியைக் குறிக்கும் பகுதி பிற்காலத்துச் சேர்க்கையாகவே பெரும் பாலும் இருத்தல் கூடும். காளிதாஸன் (கி.பி. 5-ம் நூற்றுண்டு) தனது ரகுவமி சத்தில் (IV, 50) "பாண்டியர்கள் ரகுவின் அடிமிசை விழுந்து வணங்கித் தங்கள் புகழனைத்தையும் திறையாகக் கொடுப்பதுபோல் தாம்பிர பர்ணி விழுகின்ற கடலி டத்து உண்டாகும் சிறந்த முத்துக்களைத் தொகுத்துக் கொடுத்தனர்" என்று கூறு கிறன். வராக மிகிரனும் (கி.பி. 505-587) தனது பிருகத் ஜாதகத்தில், பாண்டிய அரசனையும், தாம்பிர பர்ணி நதியையும் முத்துக்குளித்தலையும் கூறுகிறன். மார்க் கண்டேய புராணத்திலும் (அத். 27, 52), இன்னும் பல புராணங்களிலும் தாம்பிர பர்ணி நதி கூறப்பட்டுள்ளது.

ஆகவே, கி. பி. 5-ம் நூற்றுண்டு முதல்தான் தாம்பிர பர்ணி என்ற நதிப் பெயர் வழங்கிவருதற்கு உறுதியான சான்றுகள் உள்ளன. இக்காலத்திற்கு மிகமிக முற்பட்டு வேறெரு வழக்காறு இருந்தது. மெகஸ்தனிஸும் (கி.மு. 302), பெரி புளூஸ் நூலாசிரியனும் (கி.பி. 80), டாலமியும் (கி.பி. 150) "தாப்ரபனெ" என்ற பெயராலும், கிர்நார் சிலாசாஸனத்தில் அசோகச் சக்கரவர்த்தியும் (கி.மு. 273-232) பௌத்த ஆசிரியர்கள் சிலரும் "தாம்ப பன்னி" என்ற பெயராலும் சிங்கள நாட்டை (இலங்கைத் தீவை) வழங்கியிருக்கின்றனர். இவ்விரு பெயர்களும் "தாம் பிர பர்ணி" என்பதன் மரூஉவாதல் வெளிப்படை. இலங்கையிலிருந்து அதற்கு எதிராகவுள்ள நமது தென்னட்டில் குடியேறிய ஒருசார் மக்கள் தங்கள் தீவின் பெயரால் தென்னட்டில் ஓடும் பிரதான நதியை வழங்கினர் என்று கொள்ளலாம். தாம்பிர பர்ணி என்ற நகர் ஒன்று இலங்கையிலுள்ளதாக மார்க்கண்டேய புராணம் (அத். 58, 28) கூறுவதும், தாம்பிர பர்ணி நதி கடலோடு கலக்குமிடத்திற்கு நேராக இலங்கைத் தீவு உள்ளதும் இங்கே அறியத்தக்கன.

தமிழ் நாட்டிலுள்ள ஒரு நதிக்குத் தமிழில் பெயரொன்று வழங்கியிருக்க வேண்டுமென்று சிலர் ஊகிக்கலாம். இந்த ஊகம் அவசியமானதன்று. தமிழ்நாட்டி லுள்ள தமிழ் மக்கள் வடமொழியில் பெயர்களை வைத்துக்கொள்ளவில்லையா? அவ்வாறு வைத்துக்கொள்ளும் ஒவ்வொருவருக்கும் தமிழ்ப் பெயரொன்று இருத் தல் வேண்டும் என்று துணிவது சரியாகுமா? இது போலத்தான் மேற்கூறிய ஊகம். எனினும், தமிழ்ப் பெயரொன்று தாம்பிர பர்ணிக்கு இல்லாமற் போக வில்லை. உண்மையில் "பொருநை" என்ற பெயரொன்று இந்நதிக்கு இலக்கிய வழக்கில் உள்ளது.

இனி, இப்பொருநை என்ற பெயரை நோக்குவோம். இது தனிப்பட "பொருநை" (புறம். 387) எனவும், "தண்பொருநை" (புறம். 11) எனவும், "ஆன் பொருநை" (புறம். 36, அகம். 93) எனவும் சங்க இலக்கியங்களிற் காணப்படுகிறது. இப்பெயர் கள் அனைத்தும் சேரநாட்டுக்குத் தலைநகராய் விளங்கிய வஞ்சி-கருவூரைக் கரையிற்

கொண்ட ஒரு நதியையே குறிப்பனவாம். தாம்பிர பர்ணியைக் குறிப்பனவல்ல. கி.பி. 8-ம் நூற்றுண்டிற்கூட இவற்றுள் ஒன்றுகிய "தண் பொருநை" சேரநாட்டுக்குரியதாகவே வழங்கப்பட்டுள்ளது. "பூந்தண் பொருநைப் பொறையன்" (23, வரி 83) எனவும், தண்பொருநை* சூழ்தரும் வஞ்சியார் கோமான்" (29,வாழ்த்து) எனவும் சிலப்பதிகாரம் கூறும். எனவே, கி.பி. 8-ம் நூற்றுண்டுவரை இப்பெயர்கள் தாம்பிர பர்ணி நதிக்கு வழங்கவில்லை என்று கொள்ளலாம். ஆனுல், 9-ம் நூற்றுண்டில் பொருநை வேறு, ஆன்பொருநை வேறு எனக் கொள்ளப்பட்டது. அந்நூற்றுண்டில் தோன்றிய திவாகரம் இடப்பெயர்த் தொகுதியில்,

> பொருநை தண் பொருந்தம் (51)
> ஆனி வானி ஆன் பொருந்த மாகும் (54)

என்று தனித்தனியே உணர்த்துகிறது. இவ்வேறுபாடு பிங்கல நிகண்டின் அச்சுப் பிரதியிலும் காணப்படுகிறது. நிகண்டு சூளாமணியிலும்,

> 'பன்னிய பொருநையின் பேர் பகர்ந்ததண் பொருந்தமாகும்'

என வந்துள்ளது. முதல் இராசராசனது 28-ம் ஆண்டு (கி.பி. 1013) வட்டெழுத்துச் சாஸனமொன்றில்†(I.M.P. Vol. III, TINN. 434)சீவலப்பேரியை அடுத்துச் சித்திரா நதி தாம்பிர பர்ணியோடு கலக்கும் நதிப்பகுதி "தண் பொருந்தம்" என்று வழங்கப்படுகிறது. இதனுல் தண்பொருந்தம் என்பது அரசாங்கமொப்பிய உலகவழக்கில் இருந்ததென்று தெரிய வருகிறது. இச்சொல்தான் "தண்பொருநை" எனவும், "பொருநை" எனவும் மருவி வருதற்கு இயைபு உண்டு. நச்சினுர்க்கினியர், "யாறுங் குளனுங் காவும் ஆடி" எனவரும் கற்பியல் சூத்திரத்தின் (50) உரையில்," காவிரியும் தண்பொருநையும் ஆன் பொருநையும் வையையும்போலும் யாற்றிலும்" என வேறு பிரித்துக்கூறியுள்ளார். இவர் "தண்பொருநை" என்ற மரூஉப்பெயரை ஆண்டுள்ளமை தெளிவாம். எனவே, பொருநை, தண்பொருநை, தண் பொருந்தம் என்பவை கி.பி. 9-ம் நூற்றுண்டளவில் தாம்பிர பர்ணியையே குறித்தற்கு வழங்கலாயின.

> பொன்னித் துறைவனை வாழ்த்தினவே
> பொருநைக் கணவனை வாழ்த்தினவே
> கன்னிக் கொழுநனை வாழ்த்தினவே
> கங்கை மணுளனை வாழ்த்தினவே (581)

எனக் கலிங்கத்துப் பரணியிலும்,

---

* 'ஆன் பொருநை' எனப் பிரதிபேதம் உண்டு.

† 'தண் பொருந்தத்தின் வடகரை தென்திருமாலிருஞ்சோலை எம் பெருமானுக்கு' என்பது இச்சாஸனம். (411 of 1906).

The River was also called Porundam and Mudigondasola p. peraru (Ep.Ind. xi (1914) (p. 205). It is mentioned in Rock Edicts ii and xiii of Asoka (?) and in Ch xi of the Arthasastra of Koutilya.... see also the authors article in Ind, Anti., vol xlvii (1918). p. 48—V. A. Smith's Early History of India (1924), p. 469 f. n.

பொன்னிக்குங் கோதா விரிக்கும் பொருநைக்கும்
கன்னிக்குங் கங்கைக்கும் காவலனை (232)

என இராசராசன் உலாவிலும் பொருநை என்ற பெயர் பயின்றுவருகின்றது. இங்கே பொருநை என்றது சங்க காலத்துப் பழைய வழக்கினை ஆதாரமாகக்கொண்டு சேர நாட்டு நதியைக் குறிப்பதாகும் என்று சிலர் கருதுவர். ஆனல், மேற்சுட்டிய பரணியும், உலாவும் தோன்றிய காலத்திற்குரிய வழக்கின்படியே தாம்பிர பர்ணியைக் குறிப்பதெனக் கொள்ளுதல்தான் நேரிது. கம்ப-ராமாயணத்தில், (கிட்கிந்தா. நாடவிட்ட. 31)

தென்றமிழ்நாட் டகன்பொதியில் திருமுனிவன் தமிழ்ச்சங்கம் சேர்கிற்பீரேல்
என்றுமவன் உறைவிடமா மாதலான் அம்மலையை யிடத்திட் டேகிப்
பொன்றிணிந்த புனல்பெருகும் பொருநையெனுந் திருநதி பின்பொழிய நாகக்
கன்றுவளர் தடஞ்சாரல் மயேந்திரமா நெடுவரையும் கடலுங் காண்டிர்.

என்ற செய்யுளில் "பொருநை" என்பது தாம்பிர பர்ணியையே குறிக்கிறது. இராசராசனது காலத்தையடுத்துக் கம்பன் வாழ்ந்தவன் என்பது இங்கே அறியத்தக்கது. பொருநையைப் "பொருநல்" என நம்மாழ்வார் வழங்கியுள்ளார். "பொருநல் வடகரை தொலைவில்லி மங்கலம்" (6, 5, 8) என்பது அவரது திருவாக்கு. திருவாய்மொழியில் 9, 2, 1 முதலிய பிற இடங்களிலும் இவ்வழக்குக் காணப்படுகிறது.

பொருநை, தண்பொருந்தம் என்பன அதனல் வளம்பெறும் நாட்டிற்கும், அதனை ஆளும் அரசனுக்கும் அடைமொழியாகி, அந்நாட்டின் சிறப்பையும் அரசன் சிறப்பையும் உணர்த்துவதற்கு வழங்கலாயின. அரசனுக்கு அடைமொழியாய் வந்தமை மேற்காட்டியவாறு "பொருநைக் கணவன்" எனப் பரணியிலும், "பொருநை காவலன்" என உலாவிலும் பயின்றதனல் அறியலாம். இங்கு பொருநை நதி வளம் படுத்தும் நெல்லைச்சீமையின் அரசன் என்பது பொருளல்ல ; பாண்டி நாட்டிற்கு அரசன் என்பது பொருள். நாட்டிற்கு அடைமொழியாய்த் "தண் பொருந்தம்" வந்துள்ளமை பெரிய புராணத்தில் காணலாம். அங்கே,

வல்லமணர் தமைவாதில் வென்றதுவும் வழுதியுடல்
புல்லியகூன் நிமிர்த்ததுவும் தண்பொருந்தப் புனனட்டில்
எல்லையிலாத் திருநீறு வளர்த்ததுவும் இருந்தவத்தோர்
சொல்லஅது கேட்டுவந்தார் தூயபுகழ் வாகீசர். (நாவுக். 399)

என வருகின்றது. வேறொரு புனனடு இருத்தலால் தண்பொருந்தம் என்ற விசேஷணம் சேர்க்கப்பட்டது. பொருநையின் பரியாயமாகிய "தண் பொருந்தம்" என்ற பெயர் இங்கே வழங்கப்பட்டது. பாண்டிநாடு முழுவதுமே "தண்பொருந்தப் புனனடு" என்று குறிக்கப்பட்டுள்ளது.

பொருநை, பொருநல், தண்பொருநை, தண்பொருந்தம் என்பன இவ்வாருக, ஆன் பொருநையைக் குறித்துச் சிறிது சிந்திப்போம். இது காவிரியாற்றுடன் கலக்கும் ஓர் உபநதி என்பது,

காவிரி யன்றியும் பூவிரி புனலொரு
மூன்றுடன் கூடிய கூடல் அனையை

எனவரும் பதிற்றுப் பத்தின் (50) அடிகளுக்குத் தரப்பட்டுள்ள பழைய உரைப் பகுதியால் விளங்குகிறது. உரை வருமாறு :

> " மூன்றுடன் கூடிய கூடல் " என்றது அக்காவிரிதானும் ஆன் பொருநையும், குடவனாறும் என இம்மூன்றும் சேரக்கூடிய கூட்டம், என்றவாறு, அக் காவிரி யனையையாவதேயன்றி, மூன்றுடன் கூடிய கூட்டத்தனையை எனக் கொள்க."

இங்குக் கூறிய ஆன் பொருநை என்ற உபநதி திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் கருவூரை யடுத்தோடும் நதியென்று முடிபு கண்டனர் ஸ்ரீ. ரா. இராகவையங்காரும் (வஞ்சிமாநகர் : 1932, பக். 92) ஸ்ரீ. மு. இராகவையங்காரும் (சேரன் செங்குட்டுவன் : 1937, பக். 161-163). இது பொருத்தமென்றே தோன்றுகிறது.

தாம்பிர பர்ணிக்குரியதாக மேற்குறித்த பெயர்களுள் " பொருநை " என்பது தவிர மற்றவையெல்லாம் இலக்கிய வழக்கிலும் மறைந்துவிட்டன. இப்பெயர் வரலாறு அறிதற்குரியது. இதனைத் தாம்பிர பர்ணி என்ற பெயரில் வரும் " பர்ணி " என்பதன் திரிபு என்று பிஷப் கால்டுவெல் கருதுகிறார். ஆனால், உண்மையில் நெல்லை, சென்னை என்பனபோல இதுவும் முழுப்பெயர் குறைந்த மரூஉப் பெயரே யாகும். இதன் முழுவடிவம் " பொருந்தம் " என்பது. இப்பொருந்தம் என்பதற்கும் பர்ணி என்பதற்கும் யாதொரு தொடர்பும் இல்லாமை எளிதிற் புலப்படும். எனவே, கால்டுவெல் கூறுவது ஒப்புக்கொள்ளத் தக்கதல்ல. பொருந்தம் என்பதும் தண்பொருந்தம் என்ற பெயரின் பிற்பகுதியேயாகும். பிற்குறித்த பெயர் மேலே கூறியபடி சிற்றாறு அல்லது சித்திரா நதி தாம்பிர பர்ணியோடு கலக்கும் சங்கமப் பகுதிக்கு முதலில் உரியதாயிருந்தது. சிறிது பிற்பட்டே தாம்பிர பர்ணி நதியின் பெயராக வழங்கலாயிற்று. எனவே, இப்பெயரில் வரும் பொருந்தம் என்பது காரணப்பெயராதல் விளங்குகிறது. பொருந்துதல் என்ற வினையடியாகப் பிறந்து " கூடல் " அல்லது " சங்கமம் " என்ற பொருளைக் கொண்டதாகிறது. தண் என்ற அடைமொழி குளிர்ச்சி அல்லது தாழ்ச்சி அல்லது நீர் என்று பொருள்படும். ஆதலால், பொருந்தம் என்பதன் மரூஉவாகவே பொருநை என்ற பெயர் கொள்ளற்குரியது. முதல் இராசராசன் காலத்தில் " தண்பொருந்தம் " என்ற பெயர் வழங்கியுள்ளமை மேலே காட்டினோம். ஆதலால், அவ்வரசன் காலத்திற்குச் சிறிது முன்பு அதாவது கி.பி. 9-ம் நூற்றாண்டு தொடங்கிப் " பொருநை " என்ற பெயர் இலக்கிய வழக்கிற் புகுந்ததெனக் கொள்ளுதல் பொருந்தும். இது பற்றியே "பொருநை" என்று தம் காலத்து இலக்கிய வழக்கில் வரும் பெயர் " தண்பொருந்தம் "என்று உலகவழக்கில் வழங்கும் நதியைக் குறிக்கும் என்ற பொருள்படத் திவாகரர் (கி.பி. 9-ம் நூற்றாண்டு) சூத்திரம் செய்தனர். " பொருநல் " என்பதனை வழங்கும் நம்மாழ்வார் சிறிது பிற்பட்டவராதல் வேண்டும். இவர் கி.பி. 10-ம் நூற்றாண்டினர் என்பதற்கு இங்குக் கூறியதும் ஒரு சான்றாகும்.

மேற்கூறியபடி பாண்டி நாட்டிற்கும் பாண்டியனுக்கும் இந்நதி சிறப்பு அளித்தது. இதனால் இந்நதியின் பெருமையை ஒருவாறு உணரலாம். இவ்வளவு

பெருமை பெறுதற்குக் காரணம் என்ன ? தாம்பிர பர்ணி நதியின் கரையிலும் சங்கமத் துறையிலும் விளங்கிய ஊர்கள் என்றே சொல்லலாம். இவற்றுள் கொற்கையே மிகத் தொன்மை வாய்ந்தது. இது சங்க இலக்கியங்களில் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. முத்துக் குளித்தல் இங்கே நிகழ்ந்த பெருஞ்செயல்.

வலம்புரி மூழ்கிய வான்திமில் பரதவர்
ஒலிதலைப் பணிலம் ஆர்ப்பக் கல்லெனக்
கலிகெழு கொற்கை யெதிர்கொள இழிதரும்

என்பது அகநானூறு (350). இங்கு விளைந்த முத்தினுற் பெரும் புகழ்பெற்று இவ்வூர் விளங்கியது.

பேரிசைக் கொற்கைப் பொருநன்

என்பது அகநானூறு (296). இங்குள்ள கடற்கரை மிகப்பெரியதோர் துறையாகப் பூர்வத்தில் இருந்தது.

மறப்போர்ப் பாண்டியர் அறத்திற் காக்கும்
கொற்கையம் பெருந்துறை முத்தி னன்ன

என்பது அகம் (277). இங்கே முத்துக் குளிக்கும் பரதவருடைய சேரிகளும் பாக்கங்களும் இருந்தன.

சீருடைய விழுச்சிறப்பின்
விளைந்து முதிர்ந்த விழுமுத்தின்
இலங்குவளை யிருஞ்சேரிக்
கட்கொண்டிக் குடிப்பாக்கத்து
நற்கொற்கையோர் நசைப்பொருந

என்பது மதுரைக் காஞ்சி (வரி, 134-138).

இங்ஙனமே கொற்கையில் நிகழ்ந்த முத்துக்குளித்தலைக் குறித்துக் கிரேக்க தேசத்தவர்களான பெரிப்ளூஸ் நூலின் ஆசிரியனும் (கி.பி. 80), டாலமியும் (கி.பி. 150) கூறியுள்ளார்கள். வடமொழி ஆசிரியர்களான காளிதாஸனும், வராக மிகிரனும் கொற்கையைக் குறியாது பொதுப்படத் தாம்பிர பர்ணியில் முத்துக் குளித்தலைச் சொல்லியுள்ளமை மேலே குறிக்கப்பட்டது. சங்க காலத்தில் தாம்பிர பர்ணி கடலோடு கலக்கும் இடத்தில் கொற்கை இருந்தது. ஆதலால்,அது கடற்கரையூர் என்றே சங்க நூல்களில் குறிக்கப்பட்டது ; நதிக்கரையிலூர் என ஓரிடத்தும் கூறப்படவில்லை. பல நூற்றுண்டுகளுக்குப்பின், மணல் மேடிட்டுக் கடல் பின்வாங்கிவிடவே கொற்கை* சங்கமத் துறையினின்று நான்கு மைலுக்கு இப்புறத்தே தாம்பிர பர்ணியின் வடகரையில் ஒரு சிற்றூராக அமைந்துள்ளது.

---

* It is impossible to name a date for the abandonment of Korkai as a port, but the coins of that mint are supposed to extend up to about A. D. 700—V. A. Smith's Early History of India (1924). p. 470.

கொற்கையைப்போலவே தொன்மையும் பெருமையும் வாய்ந்தது திருச்செந்தூர். இதனைக்குறித்துப் புறநானூற்றில் (55),

வெண்டலைப் புணரி யலைக்கும் செந்தில்
நெடுவேள் நிலைஇய காமர் வியன்றுறைக்
கடுவளி தொகுப்ப ஈண்டிய
வடுவா ழெக்கர் மணலினும் பலவே.

எனக் கூறப்பட்டுள்ளது. கொற்கையைப்போல இதுவும் கடற்கரைப் பட்டினமாகவே கூறப்பட்டிருப்பது காணலாம். ஆனால், தாம்பிர பர்ணி கடலை அனுகுமிடத்துப் பல சிறு கால்வாய்களாகப் பிரிந்து கழிகளின் வழியாகப் போகிறது. வடக்கே தூத்துக்குடி முதல் தெற்கே குலசேகர பட்டினம்வரை இக்கால்வாய்கள் உள்ளன. இப்பாசன நிலத்தில் கடற்கரையை அடுத்துள்ள இடம் மணற்பாங்காகவும் சிறுபான்மை அங்கங்கே சிறிது பள்ளமாகவும் பெரும்பான்மை சமப்பரப்பாகவும் உள்ளது. ஆதலால் அங்கங்கே நீர் தேங்கிக் கிடக்கிறது. இவ்வாறு தேங்கிக் கிடக்கும் இடம், மணல்மேட்டுக்கு இப்புறம் திருச்செந்தூரிலிருந்து குலகேசர பட்டினம்வரை ஆறுமைல் தூரம் அகன்றிருக்கிறது. இக்காரணத்தால்தான் திருச்செந்தூர் தாம்பிர பர்ணி நதியின் கரையிலுள்ளதாகக் கூறப்பெறவில்லை.

மேலே குறித்த செய்யுள் ஒரு முக்கியமான விஷயத்தையும் தெரிவிக்கிறது. திருச்செந்தூரில் சுப்பிரமணிய சுவாமி வீற்றிருத்தலை இது சிறப்பாகக் குறிப்பிடுகிறது. ஆகவே, சமயம் பற்றி இந்நகர் ஒரு சிறந்த ஸ்தலமாக சங்க காலத்தில் தானே விளங்கியது புலனும். இந்த நிலைமை சங்க காலத்து இறுதியில், அதாவது கி.பி. 3-ம் நூற்றுண்டின் பின்னர் அமைந்ததாகக் கொள்ளலாம். இக்காலத்திற்குப்பிற்பாடு சைவம், வைஷ்ணவம் முதலிய சமயங்களுக்குரிய ஸ்தலங்களே தாம்பிர பர்ணிக் கரையிலும் அடுத்தும் பெருகித் தோன்றின. இந்நகரங்களுள் முதலாவது கூறத்தக்கது திருக்குற்றுலம். தாம்பிர பர்ணியின் உபநதியாகிய சிற்றுறு தோன்றும் மலைப்பகுதியில் இது உள்ளது. இதனைக் குறித்துத் திருநாவுக்கரசர்,

குற்று லத்துறை கூத்த னல்லால் நமக்கு
உற்று ராருளரோ

என்று பாடியுள்ளார். சம்பந்தர் "வம்பார் குன்றம்" என்ற பதிகத்தையும், இப்பதியிலுள்ள குறும்பலாவைக் குறித்து, "திருந்த மதிசூடி" என்ற பதிகத்தையும் பாடியுள்ளார். மாணிக்கவாசகரும்,

குற்றுலத் தமர்ந்துறையும் கூத்தாவுன் குரைகழற்கே
கற்றுவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே

எனப் பாடினர். இவையெல்லாம் இந்தத் தலம் சமய நோக்கில் சிறந்து விளங்குவதை நன்கு தெரிவிக்கின்றன.

கி.பி. 7-ம் நூற்றுண்டில் தாம்பிர பர்ணிக் கரையிலுள்ள நெல்வேலி என்ற ஸ்தலமும் பிரபலமாகிவிட்டது. இந்த நகரைக்குறித்து "மருந்தவை மந்திரம்"

என்ற ஒரு பதிகத்தைச் சம்பந்தர் பாடியிருக்கின்றனர். நாவுக்கரசர் திருநெல்வேலிக்குச் சென்றுள்ளதாக,

பொங்கு தமிழ்த் திருநாட்டுப்
புறம்பணேசூழ் நெல்வேலி....
எங்கு நிகழ் தானங்கள்
எல்லாம்புக் கிறைஞ்சுவார் (திருநாவுக். 410)

என்ற பெரிய புராணச் செய்யுள் கூறும். எனினும், இவர் இந்நகரைக் குறித்துப் பாடியதாகப் பதிகம் யாதும் காணப்படவில்லே. இது கவனிக்கத்தக்கது.

ஏறத்தாழ நாவுக்கரசர் காலத்தேயே தாம்பிர பர்ணி உற்பத்தியாகும் பொதியில் மலேக்குச் சமயம் பற்றிய ஒரு பெருமை ஏற்பட்டது. இம்மலேயைப் பொதியம் என்றும், பொதியை என்றும் பொதிகை என்றும் பிற்காலத்தார் வழங்கினர். பரஞ்சோதிமுனிவர் தம் திருவிளேயாடற் புராணத்தில்,

பொருவில் வேயென்னும் மென்றேட்
பொதியமாஞ் சயிலப் பாவை
பெருகுதண் பொருநை என்னும்
பெண்மகட் பெற்று ளன்றே. (நாட்டுப்-7)

எனப் பாடினர். சங்க நூல்களில் பொதியில் என்று இம்மலே பல செய்யுட்களில் குறிக்கப்படுகிறது. ஆனால், பரிபாடலில் தவிர வேறு ஓரிடத்திலேனும் இச் சமயப் பெருமை காணப்படவில்லே. பரிபாடலின் காலம் கி.பி. 7-ம் நூற்றுண்டாகும். இதில் (பரிபாடல், 11) " பொதியில் முனிவன் " என அகஸ்தியர் குறிக்கப்படுகிறார். இவரைக்குறித்த வரலாறு பிரசித்தமானது. கயிலாசத்தில் பார்வதிக்கும் சிவபிரானுக்கும் திருமணம் நிகழ்ந்தது. அப்பொழுது தேவர், முனிவர் முதலிய அனைவரும் அக்காட்சியைத் தரிசிக்க அங்குச் சென்றுவிட்டனர். பாரம் மிகுதியால் வடகோடி தாழ்ந்து தென்கோடி உயர்ந்துவிட்டது. அகஸ்தியரை அவரது பத்தினி லோபாமுத்திரையுடன் தெற்கே சென்று பூமியைச் சமப்படுத்தும்படியாக இறைவன் ஆணையிட்டனராம். அங்ஙனமே, ஆணைபெற்று அகஸ்தியர் தெற்கே வரும்பொழுது தாமரை மாலே ஒன்றை எடுத்து வந்தனராம். முனிவர் பொதியில் வந்து சேர்ந்ததும் அங்கே இறைவன் அவருக்குத் திருமணக் காட்சி அளித்தனர். அப்பொழுது அந்தத் தாமரைமாலேயானது ஒரு அழகிய பெண்ணுகை வடிவெடுத்தது. அகஸ்தியர் அதைக் கண்டதும், " நதியாக ரூபமெடுத்துச் செல்லுக " எனப் பணித்தனர். இவ்வாறு தோன்றியதே தாம்பிர பர்ணி நதியாம் என்பர். இந்நதி சென்ற இடமெல்லாம் அகஸ்தியர் விமானத்தில் சென்று அங்கங்கே தீர்த்தங்களேயும் புண்ணிய ஸ்தலங்களேயும் அமைத்தனராம். பாபநாசத்திற்கு மேற்பகுதியில் 32-தீர்த்தங்கள் தேவர்களின் பொருட்டும், அதற்குக் கீழாக 86-தீர்த்தங்கள் மக்களின்பொருட்டும் இயற்றினர் என்று ஒரு வரலாறு கூறும். வேறுவகையாகவும் இவ்வரலாறு வழங்கும். இங்ஙனமாக நதிவளத்தால் நாட்டைச் செழிப்பித்து, புண்ணிய ஸ்தலங்களால் சமயவுணர்ச்சியையும் பக்தியையும் விளேவித்து, இலக்கணம் இயற்றித் தமிழ் மொழியைப் பேணி வளர்த்து, பின் பொதியில் மலேயையே தமது நித்தியவாச ஸ்தலமாகச் செய்துகொண்டனராம். அகஸ்தியருக்குப் " பொதியில் முனிவன் "

என்ற பெயர் பொருந்துமல்லவா ? பொதியில் மலையின் பெருமை எவ்வாறு கொண்டாடப்பட்டது என்பதை,

அவமி கும்புலப் பகைகடந்து உயிர்க்கெலாம் அன்பாம்
நவமி குங்குடை நிழற்றிமெய்ச் செய்யகோல் நடாத்திச்
சிவமி கும்பர ஞானமெய்த் திருவொடும் பொலிந்து
தவமி ருந்து அரசாள்வது தண்டமிழ்ப் பொதியம். (நாட்டுப். 43)

என்ற திருவிளையாடற் செய்யுள் நன்கு புலப்படுத்துகிறது.

மேற்குறித்த கதையை அடிப்படையாகக் கொண்டு தாம்பிர பர்ணியின் இரு கரைகளிலும் பல க்ஷேத்திரங்கள் தோன்றின. இங்ஙனம் தோன்றிய ஸ்தலங்களும் ஒருசில சிலாசாஸனங்கள் போற்றும் பெரும்புகழ் வாய்ந்தன. அம்பா சமுத்திரம் என்று தற்காலத்து வழங்கும் ஊர் கி.பி. 9-ம் நூற்றுண்டில் "இளங்கோக்குடி" என வழங்கப்பட்டு புண்ணிய ஸ்தலமாக விளங்கியது (I.M.P. Vol. III, TINN 29). சேரண்மாதேவி என்று வழங்கும் ஊர் கி.பி. 10-ம் நூற்றுண்டில் "நிகரிலிசோழ விண்ணகர்" என்று பெயர்பெற்று ஒரு சிறந்த புண்ணிய ஸ்தலமாகக் கருதப்பட்டது (I.M.P,Vol,III, TINN-110). திருப்புடை மருதூர் என்று வழங்கும் ஊர் "திருபடு மருதில்" என்ற பெயரோடு சிறந்த சிவஸ்தலமாகப் போற்றப்பட்டது (I.M.P.Vol,III, TINN. 126). சிவலப்பேரி என்று வழங்கும் ஊர் தென் திருமாலிருஞ்சோலை என்ற பெயர்கொண்டு சிறந்த விஷ்ணு க்ஷேத்திரமாகக் கொண்டாடப்பட்டது (I.M.P,Vol, III,TINN. 434). "முக்கூடற் பள்ளு" என்ற பிரபந்தம் இவ்வூரைப்பற்றிப் பாடப்பெற்றதேயாகும். இவையெல்லாம் கி.பி. 9, 10-ம் நூற்றுண்டளவில் தோன்றிய திருப்பதிகள். இக்காலத்திற்குப் பின்பு தோன்றியவை இங்குக் கொடுக்கப்படவில்லை.

இக்கால வரையறைக்குள் ஆழ்வார்கள் பாடியருளினமையால் சில ஸ்தலங்கள் பெருமை பெற்றன. இவற்றுள் "ஆழ்வார் திருநகரி" என்பது நம்மாழ்வாரது நகரமாக மிகப் பிரசித்தி பெற்றதாம். இந்நகரிக்கு முற்காலத்து வழங்கிய பெயர் திருக்குருகூர் என்பது. "குருகூர்ப் பள்ளு" என்ற சிறு பிரபந்தத்தில் தாம்பிர பர்ணி ஆற்றின் வரத்து மிக அழகாகச் சொல்லப்பட்டுள்ளது. ஸ்ரீவைகுண்டம், புளியங்குடி, திருக்கோளூர், வரகுண மங்கை என்ற திருப்பதிகள் நம்மாழ்வாரால் மங்களா சாஸனம் செய்யப்பெற்றவை.

மேற்சொன்ன திருப்பதிகளுள்ள காரணத்தால் தாம்பிர பர்ணியின் பெருமை நாளடைவில் மிகவும் சிறந்து வளர்ந்தோங்கியது. பல மாகாத்மியங்களும் இந்நதியின் புகழை வளர்க்கலாயின. வடமொழியில் "தாம்ர பர்ணி மாஹாத்ம்யம்" என்ற ஒரு நூல் உள்ளது. தமிழிலும் "தாம்பிர பர்ணிப் புராணம்" என்ற ஒரு நூல் சுமார் 60-ஆண்டுகளுக்கு முன்னர் இயற்றப்பெற்றது.* இத்தனிப் புராணங்களில் தவிர, திருநெல்வேலி ஸ்தல புராணம், பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம் முதலிய ஸ்தல புராணங்களிலும் இந்நதியின் பெருமையை விரிவாகக்

* *இதனை இயற்றியவர் எனது பிதாமகர் இராம முனிசிப் சங்கரலிங்கம்பிள்ளை.*

காணலாம். திருநெல்வேலிப் புராணத்தில் வரும் செய்யுளொன்று மக்களுக்கு இந்நதி பயன்பட்ட தன்மையை நன்கு விளக்குகிறது.

ஆதியில் விளையும் ரத்நம் ; ஆனதோர் பொருநை நாப்பண்
மேதகு திவ்யமான தாம்பிரம் விளைவ தாகும் ;
சோதிவெண் தரளம் அந்தம் துலங்குற விளையும் ; நாளும்
நீதிசேர் இனிய நீரால் நிறைசெல்வம் எவர்க்கும் உண்டாம்.
(தாம்ப பன்னி, 32)

இவ்வாறு சமயத்தால் நேர்ந்த பெருமையைத் தவிர, கல்வியின் வளர்ப்புப் பண்ணையாகவும் இந்நதி பெருமை பெற்றுள்ளது. நதிக்கரையூர்களிலும், அடுத்துள்ள ஊர்களிலும் பெரும்புலவர்கள் வாழ்ந்து கல்வி நிலையம் எனப் புகழ் சிறந்து விளங்கினர். சங்க காலத்தில் வெள்ளூர்க் காப்பியனுர், மாறேக்கத்து நப்பசலையார் முதலியோரைக் கூறலாம். வெள்ளூர் ஸ்ரீவைகுண்டத்தை அடுத்துள்ளது ; மாறேகம் கொற்கையைச் சூழ்ந்த நாடு. இடைக்காலத்தில் நல்லாதனுர், நாற்கவி ராஜ நம்பி, திருக்குருகைப் பெருமாள் கவிராயர், குமரகுருபரர் முதலியோரைக் கூறலாம். பிற்காலத்தில், திரிகூட ராஜப்பக் கவிராயர், சிவஞான முனிவர், சங்கரநமச்சிவாயர் முதலியோரைக் கூறலாம். ஆழ்வார் திருநகரி, நெல்வேலி முதலிய திருப்பதிகள் டாக்டர் சாமிநாதையர் முதலியோருக்குப் பண்டை இலக்கியங்களைத் தொகுத்துதவிய பெருமையை யுடையன.

இப்பெருமைகள் ஒருபுறம். தொன்று தொட்டுரிய, நேரடியான இயற்கைப் பெருமை யாதெனில் இந்நதி பயிர் செழிக்கச்செய்து நாட்டை வளம்படுத்திவரும் பெருமையேயாம். நெல்வேலிச் சீமையை,

" திரைபடு பொருநை நீத்தம் செவிலிபோல் வளர்க்கும் "

என்றனர் பரஞ்சோதி முனிவர். தற்காலத்தும் மின்சார சக்தியை விளைத்து, ஆலைகளை இயக்கி, மக்களுக்கு இந்நதி பெரும்பயன் அளிப்பதில் முயன்று வருகிறது. இந்நதி ஜீவநதி. பொருநைமாதாவின் கருணைவெள்ளம் இன்றும் வற்ருது பாய்ந்து மக்களது உயிரையும் உள்ளத்தையும் தளிர்க்கச் செய்கிறது.

# தமிழர் திருமணம்

(திரு. ரா. பி. சேதுப்பிள்ளை, B. A., B.L.)

" களவு செய்வாரோடு உறவு செய்யாதே " என்பது தமிழ்நாட்டுப் பழமொழி. எனினும், களவிலே இரண்டு வகையுண்டு. பொன், பொருள் ஆகிய உடைமையைக் களவு செய்வார் ஒரு வகையினர். பொன்னினும், பொருளினும் மேலாகிய உள்ளத்தைக் களவு செய்வார் மற்றொரு வகையினர். உடைமையைக் கவரும் கள்வரைத் திருடர் என்று எல்லோரும் தூற்றுவர். ஆனால், உள்ளத்தைக்கவரும் கள்வரைக் காதலர் என்று நல்லோரும் போற்றுவர். நீதி நூல்களிற் சிறந்த திருக்குறள், காதலரிடையே நிகழும் களவின் தன்மையை எழுபது பாட்டால் எடுத்துரைக்கின்றது. தேவாரம் முதலிய தெய்வப் பாமாலைகளிலும் ஆண்டவனை "உள்ளங் கவர் கள்வன் " என்று ஆன்றோர் புகழ்ந்துள்ளனர்.

இத்தகைய உயரிய களவின் நுணுக்கங்களைத் தமிழ்க் காவியங்களிலே காணலாம். மலைநாட்டில் குறவர் குடியில் வளர்ந்துவந்த வள்ளி என்னும் நலமார்ந்த நங்கையைக் காதலித்து, அவள் தேனூறு சொல்லுக்கு வாயூறி நின்ற வேலவன் திருவிளையாடல் தமிழில் ஒரு பெருங்காவியமாகத் திகழ்கின்றது. வில்லின் செல்வனாகிய இராமன், மிதிலைமாநகரில் சீதையைக்கண்டு காதலித்த முறையினைக் கம்பர் அழகுற எழுதியுள்ளார். அவர் இயற்றிய காவியத்தில் காதலர் காட்சியை மிதிலைக் காட்சிப் படலத்திலே காணலாம். மணப்பருவமடைந்த சீதை அரச வீதியில் அமைந்த ஒரு கன்னிமாடத்திலே வாழ்கின்றாள். ஒரு நாள் மாலைப்பொழுது: கதிரவன் பொன்னொளி பரப்புகின்றான் ; மாடத்தின் மேடையிலே நிற்கின்றாள் சீதை. மெல்லிய பூங்காற்று வீசுகின்றது. அவள் கண்ணெதிரே அன்னப் பறவைகள் கொஞ்சிக்குலாவுகின்றன. அப்போது வீதியின் வழியாக இராமன் தம்பியோடு வருகின்றான். விசுவாமித்திர முனிவர் முன்னே செல்கின்றார். தற்செயலாகக் கன்னிமாடத்தைக் கண்ணெடுத்துப் பார்க்கின்றான் இராமன். சீதையும் எதிர்நோக்குகின்றாள். இருவர் கண்ணும் கலக்கின்றது ; காதல் பிறக்கின்றது. மாசற்ற இருவர் மனமும் காதல் என்னும் பாசத்தால் இணைக்கப்படுகின்றது. இராமன் உள்ளத்தைக் கவர்ந்துகொள்கிறாள் சீதை. சீதையினுள்ளத்தைக் கொள்ளைகொள்கிறான் இராமன் ; ஆயினும் மனத்திலெழுந்த காதலை மறைத்து வழிநடந்து செல்கின்றான். தன் கருத்திலமைந்த காதலனைக் கண்ணெதிரே காணாது சீதை மயங்குகின்றாள் ; காதலன் வடிவத்தைத் தன்னுள்ளத்தில் அழகொழுக எழுதிப்பார்த்து மகிழ்கின்றாள். நீலமேனி, நிமிர்ந்த தோள், செங்கமலக்கண், சிவந்த பாதம்—இவை அவள் மனக்கண்ணெதிரே காட்சி தருகின்றன.

சீதையின் நிலை இவ்வாறாக, இராமன் முனிவரோடும் தம்பியோடும் மிதிலை மன்னனது மாளிகையை அடைகின்றான். கன்னிமாடத்திற் கண்ட மங்கையின் வடிவமே அவன் கருத்தை முற்றும் கவர்ந்து நிற்கின்றது. எவ்வுருவமும் அவள் திருவுருவமாகவே திகழ்கின்றது. மறுநாட் காலையில் இராமனையும் தம்பியையும் மிதிலை மன்னனிடம் அழைத்துச் செல்கின்றார் முனிவர். சீதையின் திருமணத்திற்காக வைத்திருந்த வில்லை ஒடித்து அம்மங்கையை இராமன் மணந்துகொள்கின்றான். இவ்வாறு சீதையின் திருமணத்தைக் காதல்மணமாகவே காட்டுகின்றார் கம்பர்.

திருத்தொண்டர்களில் ஒருவர் காதல் மணம் புரிந்த கதையைப் பெரிய புராணத்திற் காணலாம். சிறந்த சிவனடியார்களில் ஒருவர் சுந்தரமூர்த்தி. அவர் பெயருக்குப் பொருத்தமான அழகு வாய்ந்தவர். திருவாரூரில் இறைவனை வழிபடச் செல்லும் நெறியில் அவர் ஓர் இளநங்கையைக் கண்டார். அவள் நடையும், அழகும், அவர் கருத்தைக் கவர்ந்தன. அந்த நங்கையும் சுந்தரரை நோக்கினாள். இருவர் கண்களும் காதலுரை யாடின. கண்வழியாகப் புகுந்த காதல் இருவர் உள்ளத்தையும் இணைத்தது.

"கற்பகத்தின் பூங்கொம்போ காமன்தன் பெருவாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ புயல்சுமந்து
விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக்கொடியோ
அற்புதமோ சிவனருளோ அறியேனென் றதிசயித்தார்."

பேரழகு வாய்ந்த அப்பெண்மணி யாரோவென்று வியப்பும் திகைப்பும் அடைந்தார். ஆலயத்திற் சென்று தம் காதலை இறைவனிடம் தெரிவித்தார். அந்நங்கையை மணம் செய்வதற்குத் திருவருளின் துணையை நாடினார்.

அவர் நிலை இவ்வாறாக, நங்கையும் மையல் நோயால் நையலுற்றாள். நம்பியின் அங்கநலங்களை எண்ணியெண்ணி உள்ளம் தளர்ந்தாள்.

"முன்னேவந் தெதிர்தோன்றும் முருகனோ பெருகொளியால்
தன்னேரில் மாரனோ தார்மார்பின் விஞ்சையனோ
மின்னேர்செஞ் சடையண்ணல் மெய்யருள்பெற் றுடையவனோ
என்னேஎன் மனம்திரித்த இவர்யாரோ எனநினைந்தார்."

இருவர் காதலையும் அறிந்தார் திருவாரூர்ப் பெருமான். தம்மடியவராகிய இருவர் கருத்தையும் நிறைவேற்றினார். சுந்தரமூர்த்தியும் அவர் காதலியும் கடிமணம் புரிந்து களிப்புற்றார்கள். இவ்விருவரும் செய்துகொண்ட மணம் உண்மைக் காதலின் நீர்மையை நன்கு காட்டுகின்றது. இருவரும் ஒரு குலத்தவரல்லர் ; ஓர் ஊரினர் அல்லர் ; ஒருவரை ஒருவர் முன்னறிந்தவரல்லர். ஆயினும் காதல் என்னும் பாசம் இருவரையும் இணைத்து இல்லறத்தில் சேர்த்தது.

காதலற்ற மணத்தில் இன்பமும் இல்லை, பயனும் இல்லை. இவ்வுண்மையை அவ்வையார் சுருங்கச் சொல்லி விளங்கவைத்தார். உறுதிப்பொருள்கள் என்று கூறப்படுகின்ற அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கின் தன்மையையும் ஒரு பாட்டிலே அவ்வையார் நன்கு எடுத்துக் கூறியுள்ளார்.

"ஈதல் அறம், தீவினைவிட்டு ஈட்டல் பொருள், எஞ்ஞான்றும்
காதல் இருவர் கருத்தொருமித்து—ஆதரவு
பட்டதே இன்பம், பரனை நினைந்து இம்மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு."

என்பது அவ்வையார் வாக்கு. வறியார்க்குக் கொடுப்பதே அறம். நல்வழியிற் சேர்க்கும் செல்வமே பொருள். காதலர் இருவர் கருத்து ஒருமித்து வாழ்வதே இன்பம். அறனும் பொருளும் இன்பமும் விட்டநிலையே பேரின்ப வீடு என்பது அவ்வையார் பாட்டின் கருத்து.

மணம் என்ற அழகிய சொல்லால் மங்கலமாகிய கல்யாணத்தைக் குறித்தனர் பண்டைத்தமிழர். மணச்சடங்குகள் தொன்றுதொட்டுத் தமிழ்நாட்டிலுண்டு. நல்ல நாளும் பொழுதும் பார்த்துத் திருமணம் நடத்துதல் இந்நாட்டு வழக்கம். கண்ணகிக்கும் கோவலனுக்கும் நிகழ்ந்த திருமணம் சிலப்பதிகாரத்தில் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளது. திருமணத்திற்காகக் குறித்திருந்த முழுத்தத்தில் மங்கலவாத்தியம் முழங்கிற்று. மணமக்களின் செல்வச்செழுமைக்கு ஏற்ப முத்துப்பந்தல் அமைக்கப்பெற்றிருந்தது. அவ்வழகிய பந்தலில் திருமணச் சடங்கு நிகழ்ந்தது.

"நீல விதானத்து நித்திலப்பூம் பந்தர்க்கீழ்
வானூர் மதியம் சகடணைய வானத்துச்
சாலி யொருமீன் தகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிட"

தீவலம் செய்து திருமணம் புரிந்தான்.

தமிழ்க்காவியங்களில் விரித்துரைக்கப்படுகின்ற காதல்துறைகளெல்லாம் பெரும்பாலும் கவிஉலகத்திலேயே காணப்படுவனவாகும். கவிஞர் எழுதிக்காட்டும் கற்பனையுலகத்தில் மணமகன் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன் ; ஆண்மையும் அழகும் கல்வியும் செல்வமும், பிறநலங்களும் பொருந்தப்பெற்றவன். மணமகளும் தன்னிகரில்லாத தலைமகள். இருவரும் மனங்கலந்து, மணம் புரிந்து இன்புற்றிருப்பர். இவ்வாறு கவிஞர் காட்டும் மணமக்களுக்கும் இவ்வுலக வாழ்க்கையில் நாம் காணும் மணமக்களுக்கும் வேற்றுமை மிகவுண்டு. மணப்பருவமுற்ற ஒரு நம்பிக்கும் நங்கைக்கும் பெற்றோர் மணம் பேசிமுடிக்கும் முறையே பெரும்பாலும் நடைமுறையில் காணப்படுகின்றது. இத்தகைய திருமணங்களும் தமிழ்க்காவியங்களிலே குறிக்கப்படுகின்றன.

முற்காலத்தில் செட்டியார், வேளாளர் முதலிய பெருங் குலங்களில் நிகழ்ந்த திருமணம் பெரிய புராணம் போன்ற நூல்களால் நன்கு விளங்குவதாகும். நாகப்பட்டினத்தில் வாழ்ந்தான் பரமதத்தன் என்னும் ஒரு வாணிகன். அவன் மணப்பருவமுற்றான். காரைக்கால் என்ற ஊரில் வணிகர் குலத்தில் புனிதவதியென்னும் பெண் மங்கைப்பருவமுற்றிருந்தாள். பரமதத்தனுடைய தந்தை பெண்கேட்பதற்குச் சில பெரியோரை அனுப்பினான். அவர்கள் புனிதவதியின் தந்தையிடம் போந்து மணம் பேசிய செய்தியைப் பெரிய புராணம் கூறுகின்றது.

"வந்தமூ தறிவோர்கள் மணங்குறித்த மனைபுகுந்து
தந்தையாம் தனதத்தன் தனைநேர்ந்து நீபயந்த
பைந்தொடியை நிதிபதி மைந்தன் பரமதத்தனுக்கு
முந்தை மரபினுக்கேற்க முறைமைமணம் புரிகென்றுர்."

இங்ஙனம் மணம் பேசி உறுதிசெய்த பின்னர் ஒரு நல்ல நாளில் புனிதவதிக்கும் பரமதத்தனுக்கும், பெண்வீட்டிலே திருமணம் நடைபெற்றது. இப்புனிதவதியே காரைக்கால் அம்மையார் என்று சைவ உலகம் போற்றும் புண்ணியவதியாயினுள்.

இனி, வேளாளர் குலத்தில் நிகழ்ந்த மற்றெருரு திருமணத்தைப் பார்ப்போம். திருநாவுக்கரசருடைய தமைக்கையார் திலகவதி. அவள் பன்னிரண்டு வயதுற்றுள். வேளாளர் குலத்தில் ஆண்மையும் அழகும் வாய்ந்த கலிப்பகையார் என்பவர் விளங்கினுர். திலகவதியை மணம் செய்துகொள்ள விரும்பிய கலிப்பகையார் பெண் கேட்கச் சில பெரியோரை அனுப்பினுர். அவர்கள் திலகவதியின் தந்தையிடம் சென்று கலிப்பகையார் கருத்தைத் தெரிவித்தார்கள்.

"அணங்கனைய திலகவதியார் தம்மை ஆங்கவர்க்கு
மணம்பேசி வந்தவரும் வந்தபடி அறிவிப்பக்
குணம்பேசிக் குலம்பேசிக் கோதில்சீர்ப் புகழனுர்
பணம்கொளர வகலல்குற் பைந்தொடியை மணநேர்ந்தார்."

இவ்வாறு குலப்பொருத்தமும் குணப்பொருத்தமும் பார்த்து உறுதிசெய்த திருமணத்திற்கு இடையூறு நேர்ந்தது. மணமகனுகிய கலிப்பகையார் அரசனுடைய படைத்தலைவர். வடநாட்டில் ஒரு போர் மூண்டது. அரசன் கலிப்பகையாரைப் போர் புரிய அனுப்பினுன். அமர்க்களத்தில் கலிப்பகையார் சேனை கடும்போர் புரிந்து வெற்றிபெற்றது. ஆயினும் படைத்தலைவர் புண்பட்டுப் போர்க்களத்தில் விழுந்து உயிர் துறந்தார். அச்செய்தியைக் கேட்டார் திலகவதி. மணமகனுகக் குறிக்கப்பட்ட தலைமகன் இறந்தபின்னர் அவள் உயிர்வாழ இசையவில்லை. மணம் பேசி முடிந்த பொழுதே தான் அவருக்கு மனைவியாய்விட்டதாகக் கருதினுள். தம்பியாகிய திருநாவுக்கரசரை நோக்கி உருக்கமாகத் தன் கருத்தைத் தெரிவித்தார்.

"எந்தையும் எம்மனையும் அவர்க்குஎனைக் கொடுக்க இசைந்தார்கள்
அந்தமுறையால் அவர்க்கே யுரியது நான் ஆதலினுல்
இந்தஉயிர் அவர் உயிரோடு இசைவிப்பன்"

என்று உறுதியாகத் தெரிவித்தாள். அவ்வுரை கேட்ட திருநாவுக்கரசர் திடுக்கிட்டார். அவ்வாறு செய்யலாகாதென்று அவளடியில் வீழ்ந்து கெஞ்சினுர். அவர்நிலை கண்டு இரக்கமுற்று உயிர்தரித்திருந்தாள் திலகவதி. இவ்வரலாற்றுல் வேளாளர் மணமுறையும் கற்புநெறியும் இனிது விளங்குகின்றன.

காதல் மனையாளும் கணவனும் கருத்திசைந்து நடத்தும் அறமே இல்லறம் எனப்படும். அத்தகைய இல்லறத்தினும் நல்லறம் வேறென்றில்லை. இல்வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருளை ஈட்டுதல் கணவன் கடமை. அப்பொருளைக் கொண்டு வீட்டுக்கு ஆவன செய்தல் மனையாள் கடமை. இதனுலேயே அவள் இல்

லாள் என்றும், மனையாள் என்றும் குறிக்கப்படுகின்றாள்." இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை " என்றார் ஒரு கவிஞர். மனையாளை " வாழ்வரசி " என்பர் தென்தமிழ் நாட்டார். அப்பழஞ்சொல் வாவரசி எனச் சிதைந்து வழங்குகின்றது. இல்வாழ்க்கையில் கணவனே அரசன் ; மனையாள் அரசி என்பது அச்சொல்லால் அறியப்படுகின்றதன்றோ? ஆணுக்குப் பெண் அடிமை என்பது பழந் தமிழ்நாட்டில் இல்லை. அன்பும் அறமும் இல்வாழ்க்கையை மேற்கொண்ட இருபாலார்க்கும் பொது என்றார் திருவள்ளுவர்.

" அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கைப்
பண்பும் பயனும் அது."

என்பது அவர் அருளிய திருக்குறள். பெண்மையைப்பேணாத நாடு என்றும் பெருமை யுறமாட்டாது. இல்லறத்தைப் போற்றாத நாடு எந்நாளும் ஏற்றமுறமாட்டாது. இதுவே தமிழிலக்கியங்கள் எடுத்துரைக்கும் உண்மையாகும்.

# மெய்கண்டார் வரலாறு

(திரு. திருமந்திரமணி—துடிசைகிழார் அ. சிதம்பரனுர்)

## (a) நடுநாடு

தொண்டை மண்டலத்திற்கும் சோழ மண்டலத்திற்கும் நடுவே யுள்ளது நடு நாடு. சேர-சோழ-பாண்டியர் ஆட்சிக்காலத்தில் நடுநாடானது மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு மூன்று குறுநில மன்னர்களால் ஆளப்பட்டு வந்தது. அப்பகுதிக ளாவன :—

(1) " திருக்கோவலூரை"த் தலைநகராகக்கொண்ட " சேதி நாடு ";

(2) " ஆற்றூரை"த் (ஆறை நகர்) தலைநகராகக்கொண்ட " மகத நாடு ";

(3) " திருவெண்ணெய் நல்லூரைத் " தலைநகராகக்கொண்ட " திருமுனைப் பாடி நாடு " என்பனவாம்.

## (b) திருமுனைப் பாடி நாடு

### (i) எல்லை

மின்னுறு "குணக்கு"க் கடற்கரை வரைக்கு
மிகுமேவு மலர்ச்சோலை,"தெற்கு" விளங்கு திரு அரத்துறை,
வதிட்டகுடி வெள்ளாறு,"மேற்றிசை" கொல்லிமலையாம்,
தென்னியல் "வடக்குப்" புனற்றருங் கடியாறு செப்பும்
இந்நான் கெல்லையுள் "திருமுனைப் பாடி நாடு"

என்ற பாசுரப்படி "வடக்கே" கெடில நதியையும், "கிழக்கே" கடற்கரையையும், "தெற்கே" திருவரத்துறை—வதிட்டகுடி என்னும் தலங்களையும், வெள்ளாற்றை யும், "மேற்கே" கொல்லிமலையையும் எல்லையாக உடையது திருமுனைப் பாடி நாடு. இப்போது பிரஞ்சுக்காரருக்குச் சொந்தமான புதுச்சேரியும் அக்காலத்தில் திருமுனைப் பாடி நாட்டைச் சேர்ந்திருந்தது.

சமய ஆசாரிய சுவாமிகளில் இருவர்—அப்பர் சுவாமிகளும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும்—சந்தானசாரிய சுவாமிகளில் இருவர்—மெய்கண்ட சிவாசாரியாரும், அருணந்தி சிவாசாரியாரும்—அவதரித்த பெருமையை உடையது இந்நாடு.

## (ii) திருப் பெண்ணுகடம்

அத்தகைய பெருமைவாய்ந்த திருமுனைப்பாடி நாட்டில் "திருக்கடந்தை" என்று வழங்கும் "திருப்பெண்ணுகடம்" என்னும் ஊர் அந்நாட்டிற்கு ஒரு திலகம் போன்றது.

பெண்+ஆ+கடம்=பெண்ணுகடம். பெண்=தேவகன்னியரும்; ஆ=காம தேனுவும்; கடம்=தேவேந்திரனுடைய வெள்ளையானையும் பூசித்த நகர் ஆதலின் அப்பெயர் பெற்றது.

திருஞானசம்பந்த சுவாமிகளும், அப்பர் சுவாமிகளும் அத்தலத்திற்குச் சென்று பாடியுள்ளார்கள். அத்தலத்திலுள்ள கோவிலுக்கு "திருத்தூங்கானை மாடம்" என்று பெயர். இம்மாதிரி பல ஊர்களில் கோவிலுக்கு ஒரு பெயர்—ஊருக்கு ஒரு பெயர் உண்டு. உதாரணமாக :—

| ஊர்ப்பெயர் | | கோவிற்பெயர் |
|---|---|---|
| 1. புக்கொளியூர் | ... ... ... | அவிஞசி |
| 2. இரும்பை | ... ... ... | மாகாளம் |
| 3. உஞ்சேனை | ... ... ... | மாகாளம் |
| 4. அம்பர் | ... ... ... | மாகாளம் |
| 5. கறையூர் | ... ... ... | பாண்டிக் கொடுமுடி |
| 6. ஆரூர் | ... ... ... | பூங்கோயில் |
| 7. திருவெண்ணெய் நல்லூர் | ... ... | திருஅருட்டுறை |
| 8. வஞ்சி | ... ... ... | அஞ்சைக்களம் |
| 9. பேரூர் | ... ... ... | பட்டீச்சுரம் |
| 10. கடம்பூர் | ... ... ... | கரக்கோயில் |
| 11. கருப்பறியலூர் | ... ... ... | கொகுடிக் கோயில் |

முதலியன காண்க.

நீலமேனி வாலிழைபாகன் மகிழ்ந்து வீற்றிருக்கும் திருக்கடந்தை நகர் தூங் கானை மாடச் சுடர்க் கொழுந்தையும், கடந்தை நாயகியையும் தொழுதால், இப்பிறவி யில் அவர்களுக்கு வினைகாரணமாக ஏற்படும் உடற்பிணி ஒடுங்கும், கேடுகள் எல் லாம் அடங்கும், துன்பத்துக்கு ஏதுவாகிய பிறவி ஒழியும் என்று திருஞானசம்பந்த சுவாமிகள் தம்முடைய தேவாரங்களில் கூறுவாராணுல் அத்தலத்தின் மகிமை உரைக்கற்பாற்றன்று.

## (c) (i) அச்சுதன் களப்பாளர்

இத்தகைய பெருமைவாய்ந்த திருப்பெண்ணுகடத்தில் தொண்டை நாட்டுப் பரம்பரைச் சைவ வேளாள குலத்திலே, தொண்டை மண்டலத்தாருக்கு உரிய பன் னீராயிரம் கோத்திரங்களில் ஒன்றுகிய "களப்பாளர் குடியிலே, அச்சுதன்" என்

பார் கி.பி. 13-ம் நூற்றுண்டின் முற்பகுதியில் சிறந்து விளங்கினுர். இவர் படிப்பிலும் ஒழுக்கத்திலும் சிறந்தவர். திருமுறைகளிடத்தில் பக்தி உடையவர். சிவபூசையும் திருமுறைப் பாராயணமும் உடையவர். குலகுருவிடத்தில் அளவிறந்த அன்பு உடையவர். அருட்செல்வமும் பொருட்செல்வமும் ஒருங்கே வாய்ந்தவர். அவரை "அச்சுதன் களப்பாளர்" என்று கூப்பிடுவார்கள். வேறு கோத்திரங்களிலும், வேறு பல திறப்பட்ட மக்கள் வகைகளிலும்," அச்சுதன் " என்னும் பெயருடையார் பலர் இருந்தனர் ஆகலின், அவர்களினின்றும் வேறு பிரித்து அறியும் பொருட்டு, இவரை அவர் பெயருடன் கோத்திரப்பெயரையும் கூட்டி அழைத்து வந்தார்கள். அது அக்கால வழக்கு.

வாணர் கோத்திரத்தைச் சேர்ந்தவர்களே நெற்குன்றவாணர்—ஏகம்பவாணர்-நின்றைக்காளத்திவாணர் என்று வழங்கி வந்தது இலக்கியங்களால் அறியக்கிடக்கிறது.

வாணர் என்ற பட்டப்பெயர் உடையவர்கள் மூவகையர். தொண்டைமண்டல வேளாளரில் " வாணர் " கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு வகையர். சிவப்பு இந்தியர் பரம்பரையைச் சேர்ந்த இரணியன்-பிரகலாதன்-மாவலி முதலியோர்களுடைய பரம்பரையைச் சேர்ந்தவர்கள் இரண்டாவது வகையர். அவர்களையெல்லாம் " மாவலி வாணர் " என்று அடைகொடுத்தே வழங்குவார்கள் ஆன்றோர்கள். இவ் வழக்கு இலக்கியங்களால் அறியக்கிடக்கின்றது. இனி, தமிழ்நாட்டு யாழ் வகைகளில் பேரியாழ், மகரயாழ், சகோடயாழ் முதலிய யாழ்களை வாசிக்கும் " பெரும் பாணர்களும்," செங்கோட்டியாழாகிய சிறுயாழை வாசிக்கும் " சிறுபாணர்களும் " என்ற வாணர் பரம்பரையினர் மூன்றுவது வகையினர். பாணர் என்பது வாணர் என்று மருவி வழங்கும். சில புலவர்கள் வேளாள வாணரையும் மாவலி வாணரையும் ஒரே வகையினர் என்று தவருக எழுதியுள்ளார்கள். அக்கூற்றுப் பொருந்தாது என்பதனைப் பல ஆதாரங்களுடன் " ஏகம்பவாணர் வரலாறு " என்ற நூலில் பரக்கக் காட்டியுள்ளேன், ஆண்டுக் கண்டுகொள்க. அது மாதிரி, களப்பாளரையும் களப்பிரரையும் ஒன்றுபடுத்திச் சில புலவர்கள் எழுதியுள்ளார்கள். அது தவறு என்பதனைக் காட்டுவாம்.

## (c) (ii) களப்பாளர் வேறு களப்பிரர் வேறு

சில தமிழ்ப்புலவர்கள் களப்பாளரைக் களப்பிரர் என்று கூறியும் எழுதியும் வருகின்ருர்கள். அவர்கள் எல்லாம் தொண்டைமண்டல வேளாளருடைய சரித்திரத்தைச் சரியானபடி அறிந்துகொள்ளாததனுல் அவ்வாறு தவறி எழுதியுள்ளார்கள்.

### களப்பாளர்

களப்பாளர் என்பார் தொண்டைமண்டலத்தில் உள்ள 24 கோட்டங்கள், 79 நாடுகள், 1900 நத்தங்கள், பன்னீராயிரம் கோத்திரங்கள் என்று வரையறுக்கப்பட்ட பரம்பரைச் சைவ வேளாளர்களில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்.

கி.மு. 50 முதல் கி.பி. 37 வரை தொண்டைமண்டலத்தையும் சோழமண்டலத்தையும் ஆட்சிசெய்த இரண்டாம் கரிகாலன் என்பான் மேலே கூறிய கோட்டங்கள், நாடுகள், நத்தங்கள் அவ்வளவையும் *குறும்பர்களிடமிருந்து வென்று, பன்னீராயிரம் கோத்திரத்தாருக்கும் பங்கிட்டுக்கொடுத்து, செப்புப் பட்டயமும் செய்து கொடுத்திருக்கிறான். பட்டயம் கொடுத்ததுடன் திருவேகாம்பரநாதர் கற்பக்கிரகத்துக் குமுதவரையிலும் கல்லில் எழுதிச் சாசனமும் செய்து கொடுத்திருக்கிறான். அப் பன்னீராயிரம் கோத்திரத்தாரும் தொண்டை நாட்டை கி.பி. முதல் நூற்றாண்டு முதல் கி.பி. மூன்றும் நூற்றாண்டு வரை ஏறக்குறைய 250 ஆண்டுகள் சோழ அரசின்கீழ், சுய ஆட்சியுடன் ஆண்டுவந்திருக்கிறார்கள். கி.பி. மூன்றும் நூற்றாண்டின் மத்தியில் பல்லவ குடும்பத்தைச் சேர்ந்த “ பப்பசாமி ” என்பவன், ஆந்திரநாட்டில் அக்காலத்தில் ஆட்சிசெய்திருந்த “ களப்பிரரைத் ” (வடுகக் கருநடர்) துணையாகக் கொண்டு, தொண்டை நாட்டின்மீது படையெடுத்து வந்து, நாட்டைக் கைப்பற்றி, பன்னீராயிரம் கோத்திரங்களில் பல குடும்பங்களை நாட்டைவிட்டுத் துரத்திவிட்டு,அரசாளத் தொடங்கினான். அக்காலத்தில் சோழர்களுடைய ஆட்சி வலிகுன்றிவிட்டது.

பல்லவருடைய ஆட்சி தொண்டைநாட்டில் கி.பி. 225 முதல் கி.பி. 880 வரை நடந்துவந்தது.

ஆந்திர நாடும் கன்னட நாடும் களப்பிரர் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. வடுகரும் கருநடரும் சேர்ந்த கூட்டமே †களப்பிரர் ஆவர். அதனால் அவர்களுக்கு “ வடுகக் கருநடர் ” என்ற பெயரும் உண்டு.

கி.பி. 500-ல் “ முதலாம் ஜயசிம்மன் ” என்பான் மேலைச்சளுக்கிய ராஜ்யத்தை ஸ்தாபிக்கிறவரையில், ஆந்திர-கருநாடக நாடுகளைக் களப்பிரர்(வடுகரும் கருநாடரும்) ஆண்டுவந்தார்கள். முதலாம் ஜயசிம்மன் ஆந்திர நாட்டுக்கு வரும்போது, களப்பிரர் வலிகுன்றி இருந்தனர். ஒரு பகுதியார் பல்லவர் உதவிபெற்று, சோழ நாடு பாண்டிய நாடுகளைக் கைப்பற்றி ஆண்டுவந்தார்கள். சோழநாடு-பாண்டிய நாடுகள் களப்பிரர் ஆட்சியில் கி.பி. 250 முதல் கி.பி. 520 வரை அல்லலுற்று இருந்தன.

கி.பி. 520-ல் பாண்டியநாட்டில் மூர்த்திநாயனாரும், தொண்டைநாட்டில் கூற்றுவநாயனாரும், ஆந்திரநாட்டில் முதலாம் ஜயசிம்மனும் கிளம்பிக் களப்பிரருடன் போர்தொடுத்து, அவர்களை அறவே ஒழித்து, மீண்டும் சோழ-பாண்டிய அரசுகளை

---

* குறும்பர்கள்=தொண்டைநாட்டில் குறுநில மன்னர்களாக இருந்தவர்கள். ஆட்டிடையர்கள் அல்லர். தண்டக வனத்தை அழித்து, நாடு, நகரங்களை உண்டுபண்ணி, கோட்டை கொத்தளங்களைக் கட்டினவர்கள். அதனால் அவர்களுக்குக் “ காடுவெட்டிகள் ” என்றும், “ காடவர்கள் ” என்றும், “ பல்லவர்கள் ” என்றும் பெயர்கள் உண்டு.

†களப்பிரர்=களபரர், களவர், களமர், களபரு, களப்ரா என்று மருவி வழங்கும். வடுகரும் கருநடரும் ஒன்றுகூடிப் பல்லவர்களுடைய உதவியும் பெற்று, தொண்டை நாடு, சோழ நாடு, பாண்டிய நாடுகளில் கலகத்தை உண்டுபண்ணி ஆட்சி செலுத்தியவர்கள் ஆனபடியால் அப்பெயர் பெற்றார்கள்.

நிலைநிறுத்தினர்கள். பாண்டியநாட்டில் மூர்த்திநாயனருடைய ஆட்சி கி.பி. 520 முதல் கி.பி. 575 வரையும், தொண்டைநாட்டில் ஒரு பகுதியில் கூற்றுவநாயனருடைய ஆட்சி கி.பி. 475 முதல் கி.பி. 550 வரையும் நடைபெற்றன.

களப்பிரர் எல்லாம் சமணமதத்தை அநுசரித்தவர்கள். சைவ-வைஷ்ணவ விரோதிகள்.

கி.பி. 225 முதல் கி.பி. 880 வரை தொண்டைநாட்டை ஆண்ட பல்லவர்களும் சமணமதத்தை அநுசரித்தவர்களே. முதலாம் மகேந்திர வர்மன் (600-625 A.D.) காலத்தில்தான் " அப்பர் சுவாமி " களால் அரசனும் ஏனைய பல்லவர்களும் சமணத்தை ஒழித்துவிட்டுச் சைவமதத்தை அநுசரித்தார்கள். அதுமுதல் பல்லவர்கள் சைவர்களாகவே இருந்து பல கோவில்களைக் கட்டி, சிறந்த தொண்டு செய்துவந்துள்ளார்கள்.

பல்லவர்களில் இரண்டாம் மகேந்திர வர்மன் என்ற ஐயடிகள் காடவர் கோனும் (650-655 A.D.), இராச சிம்மன் என்ற காடவர் கோன் கழற்சிங்க நாயனரும் (685-710 A.D.) சிறந்த அடியார்கள். அறுபான் மும்மை நாயன்மார்களின் எண்ணிக்கையில் சேர்ந்தவர்கள்.

பாண்டியர் நாடு சமணர்களாகிய களப்பிரர் ஆட்சியில் இருந்தபோதுதான், பாண்டிநாட்டில் உள்ள " எட்டு " மலைகளில் எண்ணுயிரம் சமணர்கள்(களப்பிரர்) வந்து குடியேறினர்கள். இச்சமணர்களைப்பற்றித்தான் திருஞானசம்பந்தர்

" ஆனைமாமலை ஆதியாய இடங்களில் பல அல்லல்சேர்
ஈனர்கட்கு எளியேனலேன் "

என்று பாடியுள்ளார்.

இதுகாறும் கூறியவாற்ருன் களப்பிரர் வேறு—களப்பாளர் வேறு என்பதைக் காட்டினும்.

" பாண்டியர் வரலாறு " எழுதிய " T.V. சதாசிவ பண்டாரத்தார் " அவர்களும் பக்கம் 33-34 ல் களப்பிரர் தமிழ் நாட்டவர் அல்லர் ; களப்பாளர் தமிழ்நாட்டவர்; களப்பிரர் வேறு களப்பாளர் வேறு என்றும், களப்பிரர் தென்னிந்தியர் என்று சில ஆராய்ச்சியாளர் கூறுவது பொருந்தாது என்றும், தமிழ்நாட்டுக் குறுநிலமன்னர்களாகிய முத்தரையரும் களப்பிரர் வகையைச் சேர்ந்தவர் என்பதும் ஏற்புடைத்தன்று என்றும், " களப்பாள் " என்ற சோணுட்டு ஊர் ஒன்றில் முற்காலத்து வாழ்ந்துவந்த அரசியல் தலைவன் ஒருவன் " களப்பாளன் " என்று சிறப்பித்து வழங்கப்பட்டமையால் அவன் வழியினர் களப்பாளர் என்னப்பட்டார் என்றும் வரைந்துள்ளமை காண்க.

இக்களப்பிரர் என்ற வடுகக் கருநடரைப்பற்றி இதுவரை எந்த ஆசிரியரும் சரியான சரித்திரம் எழுதவில்லை. அவர்களுடைய சரித்திரம் எழுதப்பட்டால்தான் கி.பி. மூன்ரும் நூற்ருண்டிலிருந்து கி.பி. ஆரும் நூற்ருண்டுவரை உள்ள சோழ-பாண்டிய நாட்டு இருண்ட காலம் வெளிச்சம் பெறும்.

*கி.பி. 350-ல் " புத்ததத்தர் " என்னும் பவுத்த சமயப் புலவர் ஒருவர், தம் மாணவி " சுமதி " யின் வேண்டுகோளால்," அபிதர்மாவதாரம் " என்ற நூலைச் சோழ நாட்டில் உள்ள பூதமங்கலத்தில் (பெரிய புராணங் கூறும் போதி மங்கை) இருந்து எழுதிய காலத்தில் " அச்சுதலிக்கந்தன் " என்னும் " களப்பிர அரசன் " உலகத்தை ஆண்டான் என்று கூறுகிறுர். அதனுல், சோழநாட்டில் உள்ள பூத மங்கலத்தில் அக்காலத்தில் பவுத்த சந்நியாசிகள் நிறைய இருந்தார்கள் என்றும் களப்பிர அரசன் " உலகத்தை ஆண்டான் " என்று கூறியதால் சோழநாட்டில் சில பகுதிகளும் பாண்டி நாடும் களப்பிர அச்சுதலிக்கந்தன் வசம் இருந்ததாகவும் அறிகிறோம்." அச்சுதன் " என்ற பெயரை வைஷ்ணவரைப்போலவே, சமணமதத் தைத் தழுவிய களப்பிரரும் வைத்துக்கொண்டிருந்திருக்கிறுர்கள்.

பாண்டியநாடு களப்பிரர் ஆட்சியில் இருந்தபோதுதான் திகம்பர சமணர் அனை வரும் கூடித்† தமிழ்ச்சங்கம் ஒன்றை கி.பி. 470-ல் நிறுவி," வச்சிரநந்தி " என்ற திகம்பர சமண சந்நியாசியைத் தலைவராக வைத்து, திருப்பரங்குன்றத்துப் பக்கம் இருந்த தென்மதுரையில் நடத்திவந்தார்கள் என்று" திகம்பர தரிசனம் " என்ற நூல் கூறுகிறது. இந்த வச்சிரநந்தி தமிழ்ச்சங்கமானது கி.பி. 470 முதல் கி.பி. 520 வரை ஐம்பது ஆண்டுகள் நடைபெற்றது. கி.பி. 520-ல்(1) "மூர்த்தி நாயனுர்" களப்பிரரைப் பாண்டி நாட்டினின்றும், (2)" கூற்றுவ நாயனுர் " களப்பிரரைத் தொண்டை நாட்டினின்றும் துரத்தி அடித்தார்கள்.

களப்பாளரும் களப்பிரர்தான் என்று கூறுகிறவர்கள் களப்பாளனுகிய கூற்றுவ நாயனுர் எப்படிக் களப்பிரரை விரட்டி அடித்தார் என்பதை மறந்து எழுதுகிறுர் கள். களப்பிரர் ஆட்சி கி.பி. 520-ல் முடிவு அடையவே, வச்சிரநந்தி தமிழ்ச்சங்க மும் முடிவை அடைந்தது.

## C (iii) சடையப்ப முதலியார்

அச்சுதன் களப்பாளர் என்பார் திருப்பெண்ணுகடத்தில் வாழ்ந்துவந்த காலத் தில், திருமுனைப்பாடி நாட்டின் தலைநகராகிய திருவெண்ணெய் நல்லூரில் அந் நாட்டின் குறுநில மன்னர் " சடையப்ப முதலியார் " வாழ்ந்துவந்தார்.

திருமுனைப்பாடி நாட்டை கி.பி. 7-ம் நூற்றுண்டு இறுதியிலும், 8-ம் நூற்றுண் டின் முதலிலும் சுந்தரமூர்த்திகள் காலத்தில் " நரசிங்க முனையரையர் " என்ற குறுநில மன்னர் ஒருவர் பல்லவப் பேரரசின்கீழ் திருவெண்ணெய் நல்லூரில் ஆண்டுவந்ததாகவும், அவரே திருநாவலூர் சுந்தரமூர்த்திகளை வளர்த்துவந்தார் என்றும் பெரிய புராணம் பேசுகிறது. அப்படி இருந்த சடையப்ப வள்ளலுக்கு அந்த

---

* Vide *சோழர் வரலாறு பக்கம்.* 8 by *மா. இராசமாணிக்கம் பிள்ளை*, M. O. L.

† Vide *தமிழ்ச் சங்கங்களின் வரலாறு*, *பக்கம்* 137 by *துடிசைகிழார்.*

(1) and (2) Vide *பெரிய புராணம் மூர்த்திநாயனுர்* and *கூற்றுவனுயனுர்.*

நாடு எப்படி வந்தது ? எப்போது வந்தது? என்பதனை அறிந்துகொள்ளுவதற்கு ஒவ்வொருவரும் ஆசைப்படுவார்கள்.

கி.பி. 825 முதல் கி.பி. 854 வரை தொண்டைநாடு, நடுநாடு, சோழநாடுகளை ஆண்டுவந்த தெள்ளாறு எறிந்த " மூன்றும் நந்திவர்மன் " இறந்தபின்,பல்லவ அரசு ஆட்டம் கண்டுவிட்டது. கி.பி. 854 முதல் கி.பி. 875 வரை ஆண்ட " நிருப துங்க வர்ம " னும் அவன் மகன் " அபராஜிதனும் " (கி.பி. 875-கி.பி. 893) பல முள்ளவர்கள் அல்லர். கி.பி. 880-ல் நடந்த "திருப்புறம்பயம்" போரில்," முதலாம் ஆதித்த சோழன்" பல்லவ அபராஜிதவர்மனை முறியடித்துத் தொண்டைநாட்டைக் கைப்பற்றினன் என்று திருவாலங்காட்டுப் பட்டயமும், கி.பி. 893-ல் நடந்த போரில் பெரிய யானைமீது இருந்த அபராஜிதவர்மனை " முதலாம் ஆதித்த சோழன் " கொன்று, கோதண்டராமன் என்ற பட்டம் பெற்றான் என்று கன்னியாகுமரிக் கல் வெட்டும்* கூறுகின்றன. அபராஜிதனுக்குப்பின் "கம்பவர்மன்" (893-910 A.D.) பட்டத்துக்கு வந்தான். இவனை முதலாம் பராந்தகச் சோழன் முறியடித்துப் பல்லவ ராஜ்யத்தைச் சோழநாட்டோடு இணைத்துக்கொண்டான். அப்போது சோழனுக்குத் துணையாக இருந்த வள்ளல்கள் குறுநில மன்னர்களுக்குச் சிறுசிறு நாடுகள் சுதந் திரமாக வழங்கப்பட்டன. பல்லவ அரசு ஒழிந்தபின் எந்தெந்த நாடு எவ்வெவர் இடமிருந்து பல்லவர் கி.பி. மூன்றும் நூற்றாண்டில் கைப்பற்றினார்களோ அந்தந் தப் பரம்பரையினர்க்கு அந்தந்த நாடு திருப்பிக்கொடுக்கப்பட்டது. அந்த முறையில், நடுநாட்டில் உள்ள திருமுனைப்பாடி நாடு சடையப்ப முதலியார் மூதாதையர்க்கும், சேதி நாடு மலைமன்னர் பரம்பரையினர்க்கும் கொடுக்கப்பட்டன. அவ்வாறு வந்தது தான் திருமுனைப்பாடி நாடு சடையப்ப முதலியார் கைக்கு.

திருவெண்ணெய் நல்லூர் என்பது," வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் " என்று சுந்தரமூர்த்திகள் பாடியபடி பெண்ணையாற்றுத் தென்கரையில் உள்ள ஊர். ஊரின் மேற்புறம் ஒரு பெரிய ஏரி இருக்கிறது. மண் வளம் உள்ளது. விளைவு மிகுந்தது.

சடையப்ப முதலியாருடைய அரண்மனை இப்போது இருக்கும் மெய்கண்டாருடைய ஆலயத்தையும், அதன் வடக்கும் தெற்கும் உள்ள நிலத்தையும் உட்கொண்டதாய் இருந்தது. அவருடைய கழனிகள் ஏரிக்கு வடபுறமும் ஊருக்கு மேல்புறமும் இருந் தன. அக்கழனிகளில் ஒன்றில் பயிரிடப்பட்ட கரும்பில் முத்து விளைந்ததாக அவரு டைய சரித்திரமும், தொண்டைமண்டல சதகமும் பேசுகின்றன. அவர் மூவேந்தர் களிடத்திலும் நட்புரிமை பாராட்டி வந்தனர். மூவேந்தர்களும் திருவெண்ணெய் நல்லூருக்கு அடிக்கடி வரப்போக இருந்தனர் என்று தெரிகிறது.

கவிச்சக்கரவர்த்தி கம்பர் இவர் வீட்டில்தான் வளர்ந்தார். இவருடைய பிள்ளை "காங்கேய பூபதி முதலியா" ருடன் கம்பர் படித்தவர். இவருடைய தூண்டுதலின் பேரில் கம்பர் இராமச் சரிதத்தைப் பாடிச் சாலிவாகன சகம் 1107-ல்(1185 A. D.)அரங் கேற்றுவித்தார். கம்பருடைய காலம் 1146-1216 A.D. என்பர் ஆராய்ச்சியாளர்.

---

*சோழர் வரலாறு பக்கம் 27–by M. Rajamanikam Pillai

சடையப்ப முதலியாருக்குக் "காங்கேய பூபதி" என்ற மகனார் ஒருவரும், அவருக்குப்பின் " மங்களாம்பிகை " என்ற ஒரு பெண்ணும் உண்டு. வெகுநாள் பெண் குழந்தை இல்லாமல் இருந்து, அவ்வூர் அம்பிகையின் அருளால் பிறந்த மகவானதால் அம்மகவுக்கு அம்பிகையின் பெயரையே சூட்டி, நாளொரு மேனியும் பொழுது ஒரு வண்ணமுமாக வளர்த்தார்கள்.

மங்களாம்பிகை மங்கைப் பருவத்தை அடைந்ததும், தகப்பனார் அந்த அம்மைக்குத் தகுந்த வரனைத் தேடிக்கொண்டு இருக்கும்போது, திருப்பெண்ணாகடத்தில் வாழ்ந்துவந்த " அச்சுதன் களப்பாளரைத் " தேர்ந்து எடுத்தார். இருவருக்கும் திருவருளால் மணம் முடிக்கப்பட்டது.

## (d) மெய்கண்டார் பிறப்பு

அச்சுதன் களப்பாளர் திருமணம் முடித்துக்கொண்டு, திருப்பெண்ணாகடம் சென்று, தம் இல்லக்கிழத்தி மங்களாம்பிகையோடு அறநெறியில் இல்லறம் நடத்தி வந்தார். குழந்தைகள் இல்லாமலே பல ஆண்டுகள் கழிந்தன. இதன் நடுவில் சடையப்ப முதலியாரும் இறந்துவிட்டார். அச்சுதன் களப்பாளர் பிள்ளைப்பேறின்மை கருதி, நனி வருந்தி, தம் குலகுருவாகிய திருத்துறையூர் சகலாகம பண்டிதர்*"சதா சிவ சிவாசாரியிடம் " சென்று, தம் குறையை விண்ணப்பித்தார்.

†திருத்துறையூர் சதாசிவ சிவாசாரியார் என்பவர் ஆதிசைவர். வேதங்கள், ஆகமங்கள், பத்ததிகள், ஒழுக்க நூல்கள் எல்லாம் நன்றாகப் படித்தவர். ஒழுக்கம் வாய்ந்தவர். தமிழ், சமஸ்கிருதம் (கிரந்தம்) என்ற இருமொழிகளிலும் வல்லவர். ஆன்மார்த்தமாகச் சிவபூசையைக் கைக்கொண்டவர். அத்துடன் பன்னிரு திருமுறைகளையும் முறையாகப் பாராயணம் செய்யும் நெறியையும் உடையவர்.

ஆதிசைவர் வடநாட்டுப் " பிராமண " வகுப்பைச் சேர்ந்தவர் அல்லர். தமிழ் நாட்டு "அந்தணர்" பிரிவைச் சேர்ந்தவர் ஆவர். தொல்காப்பியத்தில் கண்ட அந்தணர்—அரசர்—வணிகர்—வேளாளர் என்ற நாற்பிரிவுகளுள் முதற் பிரிவைச்சேர்ந்தவர். அந்தணர்—அரசர்—வணிகர்—வேளாளர் என்ற சொற்கள் ஆரியமொழியில் வழங்கப்படும் பிராமண-க்ஷத்திரிய-வைசிய-சூத்திரர் என்ற சொற்களின் மொழி பெயர்ப்பு அல்ல. ஆரியர்கள் இந்தியாவுக்குள் புகுமுன்னரே அந்தணர்—அரசர்—வணிகர்—வேளாளர் என்ற பிரிவுகள் தமிழ் மக்களுள் உண்டு என்பது சரித்திரம்.

---

*இவரே அருணந்தி சிவாசாரியார் என்பவர் ஆவர். இவருடைய இயற்பெயர் சதா சிவ சிவாசாரியர். மெய்கண்டாரால் கொடுக்கப்பட்ட தீக்கை நாமம் அருணந்தி சிவா சாரியர் என்பது. இவருடைய இயற்பெயர் சதாசிவ சிவாசாரியர் என்று திருநெல் வேலிப் "பால்வண்ண முதலியார்" அவர்களால் ஓலைச்சுவடிகளில் இருந்து கண்டு பிடிக்கப்பட்டது.

†விழுப்புரத்துக்கும் பண்ணுருட்டிக்கும் இடையேயுள்ள ஒரு பாடல்பெற்ற தலம்.

சரித்திரம் தெரியாதவர்கள் மயங்குவார்கள். வரலாற்றுநூல் எழுதுகிறவர்கள் இம் மாதிரியான மயக்கங்களைத் தீர்த்துக்கொண்டு மேற்செல்லவேண்டும். அதுதான் முறையாகும்.

சதாசிவ சிவாசாரியார் அச்சுதன் களப்பாளர் கூறியவற்றை மனத்துட்கொண்டு, அவருடைய குறையைப் போக்குவான் கருதி, சிவபெருமான் திருவுள்ளம் எப்படியோ? என அறிவான் வேண்டி, பிற்றைநாள் பூசை முடிந்ததும், தமிழ்நாட்டின் வழக்கப்படி, பச்சைப்பட்டும் வெண்பட்டும் விரித்த அறுகாற்பீடத்தில் திருமுறைகளை வைத்து, அர்ச்சித்து, சிவபெருமானை நினைந்து கயறுசார்த்திப் பார்க்க, " கண்காட்டு நுதலானும் " என்னும் திருஞானசம்பந்த சுவாமிகளுடைய திருவெண்காட்டுப் பதிகத்தில்

" பேயடையாப் பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம் பெறுவர் ஐயுற வேண்டா வொன்றும்
வேயன தோளுமை பங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே "

என்ற பாடல் உதயமாயிற்று. அப்பாட்டில் " வெண்காட்டு முக்குளநீரில் படிந்தவர்களுடைய பாவம் நீங்கப்பெற்று, பிள்ளையினோடுள்ள நினைவாயினவே வரம் பெறுவர் ; ஒன்றும் ஐயுற வேண்டாம் " என்னும் பொருள் இருக்கக்கண்டு, குலகுரு மனமகிழ்ந்து கொண்டாடி, அப்பதிகம் முழுதும் படிக்க, ஏழாவது பாட்டில், " வினைதுரக்கும் முக்குள நன்குடையானும் முக்கணுடை இறையவனே " என்று சம்பந்த சுவாமிகள் மறுபடியும் கூறியிருப்பதை நோக்கி, மனமிக மகிழ்ந்து, அச்சுதன் களப்பாளரை நோக்கி," நீவிர் திருவெண்காடு அடைந்து முக்குள நீர் படிந்து வெண்காட்டுப் பெருமானையும், உமை அம்மையாரையும் வழிபட்டுவந்தால் அறிவறிந்த மக்கட்பேறு தவறாமல் கிடைக்கும் " என்று கூறினார். அக்காலத்தில் தமிழ் மக்கள் திருமுறைகளிடத்தில் வைத்த அன்பும் வைராக்கியமும் இத்தகையவென இதனால் அறியக்கிடக்கின்றது.

சதாசிவ சிவாசாரியார் அவ்வாறு கூறியதும் அச்சுதன் களப்பாளர் சிவபெருமான் திருவருளை வியந்து, குருவினுடைய ஆசியையும் பெற்று, விடைபெற்றுக் கொண்டு, திருப்பெண்ணாகடம் போந்து தம் வாழ்க்கைத் துணைவியும் கற்புக்கரசியுமாகிய "மங்களாம்பிகை" யுடன் நடந்தவற்றைக் கூறி, யாத்திரைக்கு எனக்குறித்த ஒரு நன்னாளில் மனைவியொடும் பரிசனங்களுடனும் திருவெண்காடு அடைந்தார்.

திருவெண்காட்டில் சோம-சூரிய-அக்கினி என்ற முச்சுடர்களின் பெயர்களால் அமைந்த முக்குளத்திலும் விதிப்படி நீராடி, நியமங்களை முடித்துக்கொண்டு,வெண்காட்டுநாதரையும் உமை அம்மையாரையும் வழிபட்டுவரும் நாளில், ஒருநாள் அச்சுதன் களப்பாளர் சொப்பனத்தில் சிவபெருமான் தோன்றி," அன்ப ! நீ செய்யும் வழிபாட்டுக்கு மனம் உவந்தனம். உனக்கு அணிமையில் உன் மனைவியின் மாட்டு உலகர் உய்ய அறிவறிந்த பிள்ளை உதிப்பான். கவலற்க " என்று கூறி மறைந்தருளினார்.

அச்சுதன் களப்பாளர் சிவபெருமான் கருணையை வியந்து, தாம்கண்ட கனவை மனைவியாரிடம் கூறி, மனமகிழ்ச்சி மிக்காராய்ச் சிவதரிசனம் செய்துகொண்டு, *மாகேசுர பூசையையும் நடத்திவந்தார். அவ்வாறு இருக்கும் காலத்தில், மங்களாம்பிகை சின்னாளில் கருவுற்றமை குறிகளால் அறிந்து, அவ்வம்மாதங்களில் செய்யும் சடங்குகளை விதிப்படி செய்துவந்தார். மங்களாம்பிகையின் தந்தை காலமாய்விட்டபடியால், அண்ணன் காங்கேய பூபதியும் அடிக்கடி திருவெண்காடு போந்து, மங்களாம்பிகைக்குத் தந்தை வீட்டார் செய்யவேண்டிய சீர்-சிறப்புக்களைச் செய்துவந்தார்.

மங்களாம்பிகை பத்தாவது மாதத்தில் ஓர் அருமை வாய்ந்த ஆண் மகவை† ஈன்றாள்.

தந்தையார் அப்பிள்ளைக்கு " வெண்காட்டுப் பெருமாள் " என்று திருவெண்காட்டு நாதர் பெயரையே சூட்டி மகிழ்ந்தார். குழந்தை பிறந்தவுடன் செய்யவேண்டிய முன்கிரியைகள் (பூர்வக் கிரியைகள்), (1) " பிறப்பின் குறிப்பு எழுதுதல் " (ஜாதகர்மம்), இது பிறந்த அன்று செய்தல் ; (2) குழந்தையை அறைவீட்டிலிருந்து சுத்தமான வேறு அறைக்குக் கொணர்ந்து " தொட்டிலில் இடல் " (உத்தாபனம்),

---

*மாகேசுரபூசை=சைவ தீக்கைகளாகிய சமயம்—விசேடம்—நிர்வாணம்—ஆசாரியாபிடேகம் முதலியவைகளைப் பெற்று, சைவ ஒழுக்கம் வாய்ந்தவருக்குச் செய்யும் பூசை. ''கொண்டுவந்து மனைபுகுந்து'' என்னும் பெரிய புராணச் செய்யுள் பார்க்க.

†அச்சுதன் களப்பாளரும் அவர் மனைவியும் முக்குளத்திற்கு நீராடச் சென்றபோது, ஒருநாள் வெண்காட்டுப் பெருமாள் திருவருளால் குளத்தின் படியில் ஓர் ஆண் குழந்தை அழுதுகொண்டிருக்கக் கண்டு, மகிழ்ந்து, அவர்கள் இருவரும் எடுத்து வந்து வளர்த்து வந்தனர் என்று சில புலவர்கள் எழுதியுள்ளனர். இந்த மாதிரி வரலாற்றுக்கு ஆதாரம் எதுவும் காட்டவில்லை. இயற்கைக்கு மாறுபாடாகக் கூறுபவர்கள் தக்க ஆதாரங்களைக் காட்டாவிட்டால் அவர்களுடைய கூற்று வலிபெறாது என்பதனை அறிக. சில நூல்கள் வெண்காட்டுப் பெருமாள் திருவெண்காட்டிலேயே பிறந்தார் என்று கூற நிற்க, சில புலவர்கள் கருத்தரித்தது திருவெண்காட்டில் என்றும், கருத்தரித்தவுடன் ஊர் வழக்கப்படி காங்கேய பூபதி முதலியார் தங்கை மங்களாம்பிகையைத் திருவெண்ணெய் நல்லூருக்கு அழைத்துச் சென்று, 5-7-9 மாதங்களில் செய்யவேண்டிய சடங்குகளைச் செய்து, அங்கேயே வைத்திருந்தார் என்றும், குழந்தை திருவெண்ணெய் நல்லூரிலேயேதான் பிறந்தது என்றும், குழந்தைக்குத் திருவெண்ணெய் நல்லூர்ப் பெருமான் பெயரைச் சூட்டாமல், திருவெண்காட்டு நாதர் அருளால் பிறந்தமையால் அப்பெருமான் பெயரையே சூட்டினார் என்றும் கூறுகிறார்கள். குருவின் ஆணையால் பிள்ளை வேண்டுமென்று வரம் கிடக்கப்போனவர், தம் மனைவி கருத்தரித்ததும் ஊருக்குத் திரும்பிவந்துவிட்டார் என்று கூறுவது அவ்வளவு பொருத்தமாக இல்லை. பிள்ளையைப் பெற்று எடுத்த பின், வெண்காட்டுப் பெருமானை மனமார வாழ்த்தி வணங்கியபின் தம் ஊர் சென்றார் என்று கொள்ளுவதே பொருத்தமுடைத்து என அறிக.

இது 12-ம் நாள் செய்யவேண்டியது; (3)" பெயரிடுதல் " (நாமகரணம்), இது 16-ம் நாள் செய்யவேண்டியது ; (4)குழந்தையை " ஆலயத்துக்கு எடுத்துச்செல்லுதல்" (உபநிஷ் கிராமணம்), இது மூன்றும் மாதத்தில் செய்யவேண்டியது. இவைகளை எல்லாம் முறைப்படி திருவெண்காட்டிலேயே செய்து முடித்துக்கொண்டு, திருவெண் காட்டு நாதருக்கும் உமை அம்மையாருக்கும் அபிடேக, அலங்கார, ஆராதனைகளைச் செய்து விடைபெற்றுக்கொண்டு, திருவெண்காட்டைப் பிரிய மனம் இலராய் அச்சுதன் களப்பாளர் தம் சொந்த ஊராகிய திருப்பெண்ணாகடத்துக்கு மனைவியுடனும் குழந்தையுடனும் வந்து சேர்ந்தார். ஊரார் பெருமகிழ்வுற்று, தக்கபடி ஊரை அலங்கரித்து, குடும்பத்துடன் அச்சுதன் களப்பாளரை வரவேற்று, மரியாதைகள் செய்து, தம் மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டார்கள். திருப்பெண்ணாகடம் முன்னையிலும் பன்மடங்கு பொலிவுற்று விளங்கியது.

குழந்தை *வெண்காட்டுப் பெருமாளுக்கு ஐந்தாம் மாதம் நடக்கும்போது, மங்களாம்பிகையின் உடன் பிறந்தாரும், குழந்தையின் நன்மாமனும் ஆகிய " காங்கேய பூபதி முதலியார் " திருவெண்ணெய் நல்லூரில் இருந்து திருப்பெண்ணாகடம் சென்று, தங்கையையும் குழந்தையையும் ஊர் வழக்கப்படி அழைத்துக்கொண்டு வந்து, தம் ஊரில் வேண்டிய சிறப்புக்களைச் செய்தார். சிறிது நாள் கழித்து, அச்சுதன் களப்பாளர் திருவெண்ணெய் நல்லூர் வந்து மனைவியையும் குழந்தையையும் அழைத்துக்கொண்டு திருப்பெண்ணாகடம் சென்றார்.

## (e) மெய்கண்டார் உபதேசம் பெற்றது

வெண்காட்டுப்பெருமாளுக்கு ஓர் ஆண்டு முடிவு அடைந்ததும், காங்கேய பூபதி திருப்பெண்ணாகடம் சென்று, தாயையும் சேயையும் திருவெண்ணெய் நல்லூருக்கு அழைத்துவந்து," சோறூட்டல் " (அன்னப்பிராசனம்) என்னும் கிரியையும்,"குழந்தையின் உடம்பை வளர்த்தல்" (பிண்டவர்த்தனம்) என்னும் கிரியையும் செய்து முடித்தார். வெண்காட்டுப் பெருமானையும் †மங்களாம்பிகையையும் சின்னாட்கழித்து, அச்சுதன் களப்பாளர் திருப்பெண்ணாகடம் அழைத்துச்சென்றார்.

வெண்காட்டுப் பெருமாளுக்கு இரண்டாம் ஆண்டு ஆரம்பம் ஆகும்போது, அவருடைய நன்மாமன் காங்கேய பூபதி திருப்பெண்ணாகடம் சென்று, தங்கையையும்

*சிறப்புப் பெயர்களை மொழிபெயர்ப்பது எந்த மொழியிலும் இல்லை. எந்த மொழியிலும் இல்லாத ஒரு வழக்கத்தை வடமொழியாளர் கையாண்டனர். "வெள்ளைக் கிணர்" என்ற ஊரின் பெயரை, White Well என்று ஆங்கிலேயர் மொழிபெயர்க்கவில்லை. ஆனால் வடமொழியாளர் "வெண்காட்டுப் பெருமாள்" என்ற பெயரை "சுவேதவனப் பெருமாள்" என்று மொழிபெயர்த்தார்கள். அதுபோலவே, "மறைக்காடு" என்பதனை "வேதாரணியம்" என்றும், "வெண்காடு" என்பதனை "சுவேதவனம்" என்றும், "முதுகுன்றம்" என்பதனை "விருத்தாசலம்" என்றும் மொழிபெயர்த்துள்ளமை காண்க.

†சில புலவர்கள் அச்சுதன் களப்பாளர் மனைவியார் மங்களாம்பிகையைச் சடையப்ப

குழந்தையையும் அழைத்துக்கொண்டு வந்து, "காதுகுத்தல்" (கர்ன வேதனம்), "முடிவாங்குதல்" (சவுளம்) என்னும் கிரியைகளையும் செய்துமுடித்தார்.

முன்னைப் பிறவிகளில் இழைத்த தவத்தால், வெண்காட்டுப்பெருமாளுடைய மனம் பக்குவத்தை அடைந்து இருந்தது. சாதாரணமாக மற்ற குழந்தைகளைப்போல் அழுவதும், வீண் சிரிப்புச் சிரிப்பதும் இல்லாமல் மோன நிலையில் இருந்து இறைவன் திருவடியைச் சிந்திப்பதும், தன்னேடொத்த பிள்ளைகளோடு விளையாட நேர்ந்தால், சிவலிங்க வழிபாட்டு விளையாட்டு விளையாடி ஏனைய பிள்ளைகளுக்கும் நல்லுணர்வு கொளுத்துவதும், கண்டார் வியக்கும்படி தான் கண்ட பொருள்களைப்பற்றியும், அப்பொருள்களின் தன்மைகளைப்பற்றியும், தம் பெற்றேரிடத்தும், மற்றேரிடத்தும் உசாவித் தெரிந்துகொள்ளுவதும், சப்பாணி கொட்டும்போதும், சிறுதேர் உருட்டும்போதும் சிவனுடைய நாமங்களைக் கூறுவதுமாக வெண்காட்டுப் பெருமாள் காலங்கழித்துவந்தார்.

இப்படியாகத் திருவெண்ணெய் நல்லூரில் சின்னள் இருந்து பின் அச்சுதன் களப்பாளர் குடும்பத்துடன் திருப்பெண்ணகடம் சென்றர். பெண்ணகடத்திலும் வெண்காட்டுப் பெருமாள் திருத்தூங்கானைமாடக் கோயிலிலேயே விளையாடிக்கொண்டும், நிட்டைகூடியும் காலம் கழித்துவந்தார்.

இரண்டாவது ஆண்டின் முடிவில், அதாவது, கி.பி. 1227-ல் வெண்காட்டுப் பெருமாள் தன் தாயாருடன் தன் நன்மாமன் வீட்டுக்குத் திருவெண்ணெய் நல்லூருக்குச் சென்றர். ஆங்கு, அவர் திருவருட்டுறையில் உள்ள பொல்லாப்பிள்ளையார் கோவிலிலேயே பெரும்பாலும் பிள்ளைகளுடன் விளையாடிக்கொண்டும், நிட்டை கூடியும் இருந்துவந்தார். விளையாட்டு நேரம் போக, வீட்டில் சாப்பாட்டு நேரம்போக,

---

முதலியாரின் உடன்பிறந்தவளாக, அதாவது, காங்கேய பூபதிக்கு அத்தையாக எழுதியுள்ளார்கள்.

கம்பர் காலமும் சடையப்ப முதலியார் காலமும் சகம் 1107 (கி.பி. 1185). வெண்காட்டுப் பெருமாள் பிறந்தது கி.பி. 1225 என்றும், அவர் சிவஞானபோதம் என்னும் நூல் செய்தது கி.பி. 1228 என்றும், அனவரதநாயகம் பிள்ளை முதலிய ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். கி.பி. 1185 க்கும், கி.பி. 1225 க்கும் 40 ஆண்டுகள் இடையீடு உள்ளன. கி.பி. 1185-ல் சடையப்ப முதலியார் முதுமைப்பருவத்தினர் ஆக இருந்தார். மங்களாம்பிகை உடன்பிறந்தவளாக இருந்தால் அவளும் முதுமைப்பருவத்தினளாக இருந்திருக்கவேண்டும். கி.பி. 1185-ல் முதுமைப் பருவத்தை எட்டிய ஒரு மாது, பின்னும் 40 ஆண்டுகள் கழித்து, கி.பி. 1225-ல் ஓர் ஆண் மகவை ஈன்றள் என்பது பொருத்தமற்றதாகும். ஆதலின், உடன்பிறந்தவளாக இருக்கமுடியாது. மகளாகத்தான் இருக்கவேண்டும். வெண்காட்டுப் பெருமாள் திருவெண்ணெய் நல்லூரில் "நன்மாமன்" காங்கேய பூபதி வீட்டில் வளர்ந்துவந்ததாகக் கூறுகின்றபடியாலும், சடையப்ப முதலியாருக்குக் காங்கேய பூபதிக்குப்பின் திருவெண்ணெய் நல்லூர் அம்பிகையின் அருளால் மங்களாம்பிகை பிறந்தாள் என்று கூறுகின்றபடியாலும், மங்களாம்பிகை மகளே அல்லாமல் உடன்பிறந்தவள் அல்லள்.

மற்ற நேரங்களில் பொல்லாப்பிள்ளையார் கோவிலின் முன் மண்டபத்தில் நிட்டை கூடி இருப்பார்.*

இப்படி இருக்கும்போது, நந்தியெம்பெருமானுடைய நேர் மாணுக்கர் சனற்குமார முனிவருடைய ஞானபரம்பரையில் வந்த "பரஞ்சோதி" முனிவர் தம் தென்னாட்டு யாத்திரையில் திருவெண்ணெய் நல்லூருக்கு வந்து சேர்ந்தார்.

பரஞ்சோதி முனிவர் முதலாம் மெய்கண்டாருடைய (சத்திய† ஞான தரிசனிகள்†) மாணவர். அம்முதலாம் மெய்கண்டார் சனற்குமார முனிவருடைய மாணவர் ஆவர்.

"சனற்குமார முனிவ" ருடன் ஒருசாலை மாணுக்கராய் இருந்த "திருமூலர்" கயிலாயத்திலிருந்து பொதியமலை அகத்தியரைக் காண, தென்னாடு நோக்கி வந்த போது, நேராகப் பொதியமலை போகாமல் கேதாரம், பசுபதி நேபாளம், அவிமுத்தம், விந்தம், பருப்பதம், திருக்காளத்தி, ஆலவனம், திருவேகாம்பரம், திருவதிகை பெரும்பற்றப்புலியூர், திருவாவடுதுறை முதலிய தலங்களை முறையாக வணங்கினர் என்பது சரித்திரம். அதுபோலவே," பரஞ்சோதி" முனிவரும் திருக்கயிலையினின்றும் புறப்பட்டுப் பல தலங்களை வணங்கிக்கொண்டு, திருவெண்ணெய் நல்லூர்வந்து,‡

---

* வெண்காட்டுப் பெருமாள் பிறந்ததுமுதல் அழுவதும், சிரிப்பதும் , பேசுவதும் இல்லாமல் ஊமையாக இருந்தார் என்றும், தாயார் தகப்பனர் மிகுந்த வருத்தத்துடன் மூன்றும் மாதத்தில் திருவெண்காட்டிலிருந்து திருப்பெண்ணகடம் வந்து சேர்ந்தார்கள் என்றும், இந்தச் சங்கதி தெரிந்து திருவெண்ணெய் நல்லூரில் இருந்த குழந்தையின் நன்மாமன் காங்கேய பூபதி என்பவர் திருப்பெண்ணகடம் சென்று, தங்கையையும் குழந்தையையும் அழைத்துக்கொண்டு வந்து, பொல்லாப் பிள்ளையார் வரப்பிரசாதியானதால் அவர் கோவிலிலேயே குழந்தையை விட்டுவைத்தார் என்றும், பொல்லாப் பிள்ளையார் அருளால் இரண்டாவது வயது முடிவில் குழந்தை பேசும் சத்தியைப் பெற்றது என்றும் சில புலவர்கள் எழுதியுள்ளார்கள். இது கனவின்கண் சிவ பெருமான் கூறிய "உனக்கு அணிமையில் உன் மனைவியின் மாட்டு உலகர் உய்ய அறிவறிந்த பிள்ளை உதிப்பான்" என்ற வாக்குக்கு முரணுக இருப்பதால் கொள்ளுவதற்கு இல்லை.

†'மெய்கண்டார்' என்னும் தமிழ்ச் சொல்லின் வடமொழி மொழிபெயர்ப்பே 'சத்திய ஞான தரிசனிகள்' என்பது.

சத்தியஞானம் = மெய் ; தரிசனிகள் = கண்டார்.

‡ வெண்காட்டுப் பெருமாள் திருவெண்ணெய் நல்லூரில் இருந்த காலையில், திருக்கயிலாயத்திலிருந்து சனற்குமார முனிவரது ஞானப் புதல்வராகிய முதலாம் மெய்கண்டார் (சத்திய ஞான தரிசனிகள்) இடம் உபதேசம் பெற்ற பரஞ்சோதிமுனிவர் என்பார் ஆகமத்தலைவராகிய ஐம்முனிவருள் தலை சிறந்த அகத்தியர் வீற்றிருக்கின்ற பொதிய மலையை நோக்கிச் செல்லுங்காலத்தில், அவரது ஒளி விமானமானது திருவெண்ணெய் நல்லூருக்கு நேராக வந்தவுடன் நின்றுவிட்டது. அதன் குறிப்பை உணர்ந்த பரஞ்சோதி முனிவர் விமானத்திலிருந்து திருவெண்ணெய்

திருவருட்டுறைக்குச் சென்று சிவபெருமானை வணங்கிவிட்டு வலம் வரும்போது, வெண்காட்டுப் பெருமானைப் பொல்லாப்பிள்ளையார் கோயிலில் சந்தித்தார். பரஞ்சோதி முனிவரைக் கண்டதும் வெண்காட்டுப் பெருமாள் ஓடோடியும் வந்து, அடியற்ற மரம்போல் அவர் திருவடிகளில் வீழ்ந்து, ஆட்கொள்ளவேண்டும் என்று வேண்டினர். பரஞ்சோதி முனிவர் பையனின் அதி தீவிர பக்குவத்தை நோக்கி, வயது கொஞ்சமாயிருந்தாலும் உயிர் பக்குவம் அடைந்து இருந்ததால், அச்சிறுவனுக்கு முறையே ஞான தீக்கையைச் செய்து, தீக்கை நாமமாகத் தன்னுடைய குருவின் பெயராகிய " மெய்கண்டார் " என்னும் பெயரைச் சூட்டினர். சூட்டி, பக்கத்தில் இருத்தி, இறை-உயிர்-மலம் என்ற முப்பொருள்களின் உண்மைகளையும், அவைகளின் தன்மைகளையும் புகட்டி, சிவஞானபோதச் செம்பொருள்களை 39 சூர்ணிகைகளாகப் (துணுக்குக்கள்) போதித்து, அஞ்செழுத்தை "உச்சரிக்கும் முறை", "எண்ணும் முறை" முதலியவைகளையும் உபதேசித்து, நிட்டைகூடும் முறையையும் காட்டி, பிறருக்கு உபதேசிக்க அதிகாரமும் கொடுத்துவிட்டுப் பிறகு பொதியை நோக்கிச்சென்றார். இனிமேல், நாம் வெண்காட்டுப் பெருமானை " இரண்டாம் மெய்கண்டார்" என்று வழங்குவோமாக.

## (f) சதாசிவ சிவாசாரியார் மெய்கண்டாருடைய மாணவர் ஆனது

உபதேசம் பெற்ற நாள்முதல் *"இரண்டாம் மெய்கண்டார்" திருவெண்ணெய் நல்லூரிலேயே தங்கி, நிட்டைகூடும் நேரம் தவிர, மற்றை நேரங்களில் தாம் கேட்டுத் தெரிந்துகொண்டதைப் பல மாணவர்களுக்குப் போதித்துவந்தார். நிட்டைகூடுவதும், மாணவர்களுக்குப் போதிப்பதும் பொல்லாப் பிள்ளையார் ஆலயத்திலேயே நடைபெற்றுவந்தது. திருவருட்டுறையில் இன்றும் பொல்லாப்பிள்ளையார் ஆலயத்தைப் பார்த்தால் நிட்டைகூடுவதற்கும் உபந்நியாசம் செய்வதற்கும் தகுந்த இடம் என்று ஒவ்வொருவரும் அறிவார்கள்.

அச்சுதன் களப்பாளரின் குலகுருவாகிய திருத்துறையூர் சதாசிவ சிவாசாரியார் அடிக்கடி மெய்கண்டாரைப்பற்றி விசாரிப்பதுண்டு. ஆனபடியால் திருவெண்ணெய் நல்லூரில் மெய்கண்டார் பரஞ்சோதியாரிடம் உபதேசம் பெற்றார் என்றும், பல

---

*நல்லூரில் இறங்கி வெண்காட்டுப் பெருமாளைக் கண்டார் என்று சில புலவர்களும்,*

*பரஞ்சோதி முனிவர் ககன குளிகையை வாயிலிட்டுக்கொண்டு ககன மார்க்கமாக வந்தவர், திருவெண்ணெய் நல்லூருக்கு நேராக வந்தபோது, வெண்காட்டுப் பெருமாள் வீதியில் சிறுதேர் உருட்டி விளையாடுவதையும், அவர் ஒளி பொருந்திய உடம்புடன் பக்குவப்பட்ட மனத்தையும் உடையவராய் இருப்பதையும் கண்டு, கீழே இறங்கிவந்து குழந்தையைச் சந்தித்தார் என்று சில புலவர்களும் எழுதியுள்ளார்கள்.*

*பரஞ்சோதி முனிவருடைய குரு முதலாம் மெய்கண்டார் ஆனதால், இவரை நாம் இரண்டாம் மெய்கண்டார் என்றேம். இவருக்கு " மெய்கண்டசிவம், மெய்கண்ட சிவாசாரியார், மெய்கண்டதேவர், மெய்கண்டநாதர் " என்ற பல பெயர்கள் உண்டு.*

மாணவர்களுக்கு ஆகம நூற் கருத்துக்கள் அடங்கிய அறிவு நூற்களை (சாத்திரங்களை) போதித்துவருகிறார் என்றும் கேள்விப்பட்டு, அவரைப் பார்க்கவேண்டுமென்று திரு வெண்ணெய் நல்லூருக்கு வந்தார். அச்சுதன் களப்பாளரும் காங்கேய பூபதியும் சதாசிவ சிவாசாரியரைத் தகுந்தபடி வரவேற்று, தக்க இடத்தில் அமர்த்தி, வேண் டிய மரியாதைகளைச் செய்து உபசரித்து வந்தார்கள். அச்சுதன் களப்பாளரும் அவர் மனைவியும், காங்கேய பூபதியும் அவர் குடும்பத்தாரும், இன்னும் ஏனைய சைவக் குடும்பத்தார் அனைவரும் சென்று, குலகுருவை வணங்கி, விபூதிப்பிரசாதத்தை யும் அவருடைய திருவருட் பிரசாதத்தையும் பெற்றுவந்தார்கள். மெய்கண்டார் ஒருவர் மாத்திரம் குலகுருவைத் தரிசிக்கச் செல்லவில்லை. தகப்பனாரும் நன்மாம னும் குலகுரு வந்திருப்பதைப்பற்றி மெய்கண்டாருக்குச் சொல்லியும் அவர் சும்மா இருந்துவிட்டார். ஆனால், நாள்தோறும் தாம் செய்யவேண்டிய கடமைகளாகிய நிட்டைகூடுதல், மாணவருக்குப் போதித்தல், அறிவு நூல்களை ஆராய்தல் முதலிய வைகளில் ஈடுபட்டிருந்தாரே யொழிய குலகுருவிடம் செல்லவில்லை. சதாசிவ சிவா சாரியாரும் மெய்கண்டார் இன்று வருவார் நாளை வருவார் என்று எதிர்பார்த்துக் கொண்டு இருந்தார்.

இப்படி இருக்க, ஆகூழ் வந்து அடுக்க, சதாசிவ சிவாசாரியார் தாமே மெய் கண்டாரை நேரில் பார்க்க எண்ணி, திருவருட்டுறையில் உள்ள பொல்லாப் பிள்ளை யார் கோவிலுக்குச் சென்றார். அவர் சென்ற காலத்தில் இரண்டாம் மெய்கண்டார் தம் மாணவர்கள் 48 பேருக்கும் "ஆணவ மல"த்தின் தன்மையைப்பற்றிப் போதித்துக்கொண்டு இருப்பதைக் கண்டார். அளவை முறை தவறாமல் மெய்கண் டார் மாணக்கர்களுக்குப் போதிக்கும் முறையும், மாணக்கர்களுக்கு மனதில் படும் படியாக எடுத்துச்சொல்லும் ஆற்றலும், சொற்களின் தெளிவும், அவர் கூறும் எடுத்துக்காட்டுக்களும் சதாசிவ சிவாசாரியாருடைய மனத்தைக் கவர்ந்தன. சதாசிவ சிவாசாரியர் உலக நூல்கள் அறிவு நூல்களை நிரம்பக் கற்றவர்; அதிதீவிர பக்கு வத்தை அடைந்தவர். ஆனால், அவருக்கு அதுவரை ஞானகுரு வாய்க்காததால், அவரிடத்திலும் ஆணவம் சிறிது தலைகாட்டிக்கொண்டுதான் இருந்தது.

மெய்கண்டார்முன் சதாசிவ சிவாசாரியார் போய் நேராக நின்றதும், மெய் கண்டார் பார்த்தும் பாராததுபோல, மாணவர்களுக்குப் போதிப்பதிலேயே முனைந் திருக்க, சதாசிவ சிவாசாரியார் சிறிது பதட்டங்கொண்டு, "ஆணவ மலத்தின் தன் மையைப்பற்றிச் சிறிதும் ஐயமறத் தெள்ளத்தெளியக் கூற வல்லையோ? ஆணவ மலத்தின் சொரூபம் என்னை?" என்று கேட்டவுடனே, மெய்கண்டார் இனியமுகத் தோடு சதாசிவ சிவாசாரியரைப் பார்த்தார். மெய்கண்ட ஞானபானுவின் பார்வை பட்டவுடனே, சதாசிவ சிவாசாரியரின் மனம் முழுப்பக்குவத்தை அடைந்துவிட்டது. மெய்கண்டார் பார்த்ததோடு, அவர் கேட்ட கேள்விக்கு விடையாகத் தமது விரலால் சதாசிவ சிவாசாரியரைச் சுட்டிக்காட்டி அவர் நின்ற நிலையேதான் ஆணவ மலத் தின் சொரூபம் என்பதனைச் சொல்லாமற் சொல்லி விளக்கினார். உடனே சதாசிவ சிவாசாரியர் மெய்கண்டார் பாதங்களில் அடியற்ற மரம்போல் வீழ்ந்து, தம்மை ஆட்கொள்ளும்படி வேண்ட, மெய்கண்டாரும் அவ்வாறே அவருக்கு ஞான தீக்கை யைச் செய்து, "அருள் நந்தி" என்ற தீக்கை நாமத்தையும் சூட்டி, உபதேசமும் செய்து, தம்முடைய மாணவர்களுள் முதல்வராக அமர்த்திக்கொண்டார். அன்று

முதல் மெய்கண்டாருக்கு 49 மாணவர்கள் ஆனுர்கள். 49 மாணவர்களில் அருணந்தி சிவாசாரியார்—மனவாசகம் கடந்தார் என்ற இரண்டு பெயர்களே இதுவரை தெரிந்துள்ளன. ஏனைய 47 பேர்களுடைய பெயர்கள் தெரியவில்லை.

நந்தியெம்பெருமான், அவர் மாணவர் சனற்குமாரர், அவர் மாணவர் முதலாம் மெய்கண்டார், அவர் மாணவர் பரஞ்சோதி முனிவர் இவர்கள் நால்வரும் "அகச் சந்தானுசாரியர்கள்."

மெய்கண்டார், அவர் மாணவர் அருணந்தி சிவாசாரியர், அவர் மாணவர் மறைஞானசம்பந்தர், அவர் மாணவர் உமாபதி சிவாசாரியர் இவர்கள் நால்வரும் "புறச் சந்தானுசாரியர்கள்" ஆவார்கள்.

## (g) மெய்கண்டார் நூல் செய்தது

இரண்டாம் மெய்கண்டார் பிறந்தது கி.பி. 1225-வது ஆண்டில் ஆகும். அவர் பரஞ்சோதி முனிவரிடம் உபதேசம் பெற்றது கி.பி. 1227-வது ஆண்டின் இறுதியில். அதாவது, அவருக்கு இரண்டு ஆண்டுகள் நிரம்பிய காலத்தில் ஆகும்.

கி.பி. 1228-ல் தமிழ்நாட்டின் நிலை எப்படி இருந்தது என்பது ஒவ்வொருவரும் அறிந்துகொள்ளவேண்டியது. அதாவது :—

(1) அறிவு நூல்கள் பெரும்பாலன ஒருமுகப்பட்டு இல்லாதனவாக, முன்னேடு பின் முரணி, அளவை நெறி பிறழ்ந்து இருந்தன. அதனுல்,

(2) கடவுள் அல்லாததைக் கடவுள் எனச் சுட்டியும் ;

(3) உயிர் என்று ஒரு முதல் இல்லை ; உணர்வுகளின் தொகுதியே அதுவாம் என்றும் ;

(4) உயிரினுற் செய்யப்பட்ட வினைகளே ஓர் உருக்கொண்டு, மீட்டும் மீட்டும்உயிர்களுக்குப் பிறப்பு இறப்புக்களை உண்டுபண்ணுவன எனவும் ;

(5) உலகமும், உலகத்திற்கு முதற் காரணமான மாயையும் இல் பொருள்களாம் என்றும் ;

(6) உயிர்களுக்கு அறியாமையைக் கொடுப்பது மாயை எனவும் ;

(7) ஒளியின் எதிர்மறை இருள்போல, அறிவின் எதிர்மறையே அறியாமை என்றும், அது ஓர் உள்பொருள் அல்ல என்றும் ;

(8) இம்மையில் நுகரும் இன்பத்தைத்தவிர, மறுமையில் அநுபவிக்கும் இன்பம் ஒன்றும் இல்லை என்றும் ;

(9) இப்பிறவி ஒழிந்தால் இனிப்பிறவி கிடையாது என்றும் ;

(10) ஈகை, அறம், தவம், உருவ வழிபாடு எல்லாம் மடவோர்க்கு உரியன என்றும்,

கூறும் நூல்களே மிகுத்து வழங்கின. அதனால் மக்களுக்குத் திரிபுணர்ச்சி மேலிட்டு, அவர்களுடைய பிறவிகள் பாழாகப்போய்க்கொண் டிருந்தன.

இத்தகைய மாறுபட்ட கொள்கைகளை எல்லாம் அவர் மாணுக்கர்கள் கூற, அக் கொள்கைகளை எல்லாம் மறுத்து, அவர்களுடைய ஐயங்களைத் தெளிவுபடுத்தி, அவர்கள் வேண்டுகோட்கு இணங்கி, திரிபுணர்ச்சி நூல்களின் இகல் அறுத்து, தம் முடைய ஞானகுரவரிடம் தாம் கேட்டதைச் சிந்தித்து, நிட்டைகூடிய காலத்தில் பொல்லாப்பிள்ளையாரால் உணர்த்தப்பட்ட கருத்துக்களையும் மனத்திற் கொண்டு, முப்பொருள் உண்மைகளையெல்லாம் அளவை நூன்முறைப்படி முன்பின் தொடர்பு வைத்து, உலகம் உய்ய, பன்னிரண்டு சூத்திரங்கள் அடங்கிய "சிவஞான போதச் செந்தமிழ் முதனூலை" யாத்து அருளினர்.

சிவஞான போத முதற் சூத்திரத்தில் "அந்தம் ஆதி என்மனர் புலவர்" என்றும், ஆறும் சூத்திரத்தில் "இரண்டு வகையின் இசைக்குமன் னுலகே" என்றும் அவர் கூறி இருப்பதால், தம் முடித்துக்கூறும் சைவ சித்தாந்த முப் பொருள்கள் தமிழ் நாட்டில் தமக்கு முன்னிருந்த ஆசிரியர்களால் கூறப்பட்டன ஆகும் என்பதைத் தெரிவித்துள்ளார்.

ஆதலின், கயிலாயம் முதல் பொதிகை ஈறுக விரிந்த தமிழ் நாட்டகத்து இருந்த சைவச் சான்றோர்கள் ஆராய்ந்து கண்ட முடிவுகள் தம் காலத்து மங்கியிருந் தவைகளை எடுத்து விளக்கிக் காட்டியுள்ளார் மெய்கண்டார் என்பதே போதரும்.

இத்தகைய அரிய, பெரிய ஞானநூலை மூன்றுவது வயது ஆரம்பத்தில் ஒரு குழந்தை இயற்றமுடியுமா? என்பார்க்கு, இவர் காலத்துக்கு முன் இருந்த காழிச் செல்வர் திருஞானசம்பந்தர் சரித்திரத்தை ஞாபகம் ஊட்டுவதைத்தவிர வேறு யாதும் சொல்ல இயலாது. இஞ்ஞான்றும் பல இளைஞர்கள் அவ்வாறு பல கலைகளி லும், சிலர் ஒவ்வொரு கலையிலும் வல்லுநராக இருக்கக் காண்கின்றோம். பல பத் திரிகைகளிலும் படித்துள்ளோம். ஆதலின், அவ்விதமாக ஐயம் ஏற்பட நியாயம் சிறிதும் இல்லை. இவர் கி.பி. 1245 வரை இவ்வுலகின்கண் தொண்டு செய்துகொண் டிருந்து கி.பி. 1245-ல் ஐப்பசி சோதிநாளில் இறைவன் திருவடியாகிய அருட்சோதி யில் கலந்தார்.

## (h) சிவஞானபோதம் முதனூலே அல்லாது மொழிபெயர்ப்பு நூல் அன்று

தற்காலம் தமிழில் இருக்கும் "சிவஞான போதம்" என்னும் நூல் வட மொழிச் சிவஞானபோதம் என்னும் நூலினின்று மொழிபெயர்க்கப்பட்டது என்று சிலபுலவர்கள் வாய் கூசாது, ஆதாரம் இன்றிக் கூறுகின்றார்கள். பின்வரும் கார ணங்களால் சிவஞானபோதம் மொழிபெயர்ப்பு அன்று என்பதும், வடமொழிச் சிவஞானபோதமே தமிழ்மொழிச் சிவஞான போதத்தினின்றும் மொழிபெயர்க்கப் பட்ட நூல் என்பதும் விளங்கும். அக்காரணங்களாவன :—

(1) சிவஞானபோத ஆசிரியராகிய மெய்கண்டார் தாம் மொழிபெயர்த்துக் கூறியதாக யாண்டும் கூறவில்லை.

(2) மெய்கண்டார் மாணக்கர் அருணந்தியாவது, அவர்பின் வந்த மறைஞான சிவம், உமாபதி சிவம் முதலியோராவது சிவஞானபோதம் மொழிபெயர்ப்பு என்று யாண்டும் கூறவில்லை.

(3) சிவஞானபோதப் பாயிரச் செய்யுட்களிலும் கூறப்படவில்லை. ஆனால் அப் பாயிரச் செய்யுள்களுக்கு உரை கூறுகின்றவர்கள் தம்முடைய சொந்தக் கருத்தைப் புகுத்தி மொழிபெயர்ப்பு என்று கூற முன்வருகிறார்கள்.

(4) சிவஞானபோதம் முதனூல், சித்தியார் வழிநூல், சிவப்பிரகாசம் சார்பு நூல் என்னும் வழக்கே, சிவஞானபோதம் மொழிபெயர்ப்பு அன்று என்பதை வலியுறுத்தும்.

(5) வடமொழிச் சிவஞானபோதப் பன்னிரண்டாவது சூத்திரத்தின் இறுதி அடி "ஏவம் வித்யா சிவஞானபோ தே இதி சைவார்த்த நிர்ணயம்" என்று கூறப்பட்டுள்ளது. அவ்வடியால் குறிக்கப்பட்ட சிவஞானபோதம் வட மொழியில் வேறு எதுவும் இல்லை. ஆதலின், அதனால் குறிக்கப்பட்ட சிவஞானபோதம் தமிழ்ச் சிவஞானபோதமேயாகும். அதனால் வடமொழிச் சிவஞானபோதமே தமிழினின் றும் மொழிபெயர்க்கப்பட்டது என்பது தெளிவு.

(6) வடமொழி இரவுர ஆகமம் பாசவிமோசனப் படலத்தில் உள்ள பன்னிரண்டு சூத்திரங்களைத்தான் மெய்கண்டார் தமிழில் மொழிபெயர்த்தார் என்று கூறுகிற வர்கள் பாசவிமோசனப் படலத்தைப் பார்த்தவர்கள் அல்லர். அந்தப் பாசவிமோசனப் படலத்தில் என்ன இருக்கிறதென்று செந்தில்நாத அய்யர் என்பவர் பார்த்துக் கூறுவதாவது :—" மாணக்கனுக்குத் தீக்கையைச் செய்து சிவஞானபோத நூலைக் கையில் கொடுக்க" என்பதே. பன்னிரண்டு சூத்திரங்களும் அங்கே இல்லை.

(7) *"சிவஞான போத முதனூல் விளக்கம்" என்னும் நூலிலும், †"சிவஞான போதம் தமிழ் முதனூலே மொழிபெயர்ப்பு அல்ல" என்ற நூலிலும், சைவசித் தாந்த நூற்பதிப்புக் கழகப் பதினான்கு சாத்திர வெளியீட்டு‡ முன்னுரையிலும் சிவ ஞானபோதம் மொழிபெயர்ப்பு அன்று என்பதற்கு நிறைய ஆதாரங்கள் காட்டப்பட் டுள்ளன. ஆண்டுக் கண்டுகொள்க.

## (i) வெண்ணெய்ச் சடையனும், வெண்ணெய் நல்லூர்ச் சடையனும்.

இவ்விரு வள்ளல்களும் வாழ்ந்தது கி.பி 12-ம் நூற்றாண்டு ஆகும். இவர்கள் இருவருடைய நாடும், ஊரும் வேறுவேறு. இவர்கள் இருவரும் ஒருவரே என்றும்

---

*திருமந்திரமணி துடிசைகிழார் அ. சிதம்பரனார் இயற்றியது.
† மாதவதாசன் மா-பாலசுப்பிரமணிய முதலியார் B. A., B. L., எழுதியது.
‡ K. சுப்பிரமணியபிள்ளை M. A., M. L. அவர்கள் எழுதியது.

ஒரே நாடு, ஒரே ஊரைச் சேர்ந்தவர் என்றும், சில புலவர்கள் எழுதியுள்ளார்கள். அப்படி அவர்கள் மயங்குவதற்குக் காரணம் இருவருடைய பெயரும் ஒன்று, இருவருடைய ஊர்ப்பெயரும் ஒன்றுயிருப்பதுதான். இவர்களைப்பற்றிய உண்மைச் சரிதம் இதுவெனச் சிறிது விளக்குவாம்.

வெண்ணெய்ச் சடையனது நாடு " சோழ நாடு." வெண்ணெய் நல்லூர்ச் சடையனது நாடு " நடுநாடு ."

வெண்ணெய்ச் சடையனது ஊர் " காவிரிக் கரையில் உள்ள வெண்ணெய் " என்னும் ஊர்.

வெண்ணெய் நல்லூர்ச் சடையனது ஊர் " தென்பெண்ணையாற்றின் தென் கரையில் உள்ள திருவெண்ணெய் நல்லூர்."

வெண்ணெய்ச் சடையனது மரபு " கார்காத்த வேளாளர் மரபு."

வெண்ணெய் நல்லூர்ச் சடையனது மரபு " தொண்டைமண்டலக் கொண்டை கட்டி வேளாளர் மரபு."

நடுநாட்டில் திருவெண்ணெய்நல்லூரைத் தலைநகரமாக்கொண்ட திருமுனைப் பாடி நாட்டுக்குச் சேர்ந்தது " புதுச்சேரி " (Pondicherry). தற்காலம் அது பிரஞ்சு இலாகாவில் உள்ளது. அதனைப் " புதுவை " என்று அழைப்பதும் உண்டு.அது ஒரு கடற்றுறைப்பட்டினம். கப்பல் போக்குவரத்துள்ள வாணிபத்துறை. அக்காலத்தில் அப்பட்டினம் திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்பமுதலியாருக்குச் சேர்ந்திருந்ததால், அவர் புதுவையிலும் சிலகாலம் வசிப்பதுண்டு. அதனல் அவருக்குப் "புதுவைச் சடையன்" என்ற பெயரும் உண்டு.

சோழ நாட்டிலும் மயிலாடுதுறைக்கு (Mayavaram) 5-மயில் தூரத்தில் காவிரிக் கரையில் "புதுச்சேரி" என்ற ஊர் இருக்கிறது. இப்போது அது "நவபுதுச்சேரி " என்று அழைக்கப்படுகிறது. அதற்கும் " புதுவை " என்று ஒரு பெயர் உண்டு. நவபுதுச்சேரியை அடுத்து, காவிரிக்கரையிலேயே "மூவலூர்," "வெண்ணெய்," "தேர் அழுந்தூர்" என்ற ஊர்களும் இருக்கின்றன. வெண்ணெய் என்ற ஊரில் உள்ள கார்காத்த மரபைச்சேர்ந்த சடையப்பப்பிள்ளைக்கு " நவபுதுச்சேரியிலும் " வீடும் நிலங்களும் உண்டு. அவர் நவபுதுச்சேரியிலும் சிலகாலம் வசிப்பதுண்டு. அதனல் அவருக்கும் " புதுவைச்சடையன் " என்ற பெயரும் உண்டு.

வெண்ணெய்ச்சடையனது தகப்பனர் "சங்கரப்பிரபு என்ற சங்கரம் பிள்ளை " ஆவர்.

வெண்ணெய் நல்லூர்ச் சடையனது தகப்பனர் " காங்கேய பூபதி முதலியார்" ஆவர்.

இலக்கியங்களில் " வெண்ணெய் " என்று பின்னெட்டு மொழி இல்லாமல் வரும்போது சோழநாட்டு வெண்ணெய் என்ற ஊரையும்," வெண்ணெய்நல்லூர்" என்று பின்னெட்டு மொழியுடன் வரும்போது நடுநாட்டுத் திருவெண்ணெய் நல்லூரையும் குறிக்கும் எனக் கொள்க.

நடுநாட்டுப் புதுச்சேரியினின்றும் சோழநாட்டுப் புதுச்சேரியை வேறு பிரித்துக் காட்டவே ஒட்டக்கூத்தர், சோழநாட்டுப் புதுச்சேரியை " நவபுதுச்சேரி " என்று தாம் பாடிய நாலாயிரக்கோவையில் குறிப்பிட்டுள்ளார். அது வருமாறு :—

" நாலாயிரக்கோவை—தரம்போக்கு துறை

" பதிநோக்கி அன்னையைத் தெண்டனிட்டேனெனும், பாங்கியரை
எதிர்நோக்கி நின்று தழுவுகின்றேனெனும், என்று " பொன்னி "
" நதிநோக்கி வாழும் நவபுதுச்சேரி " நன்னாட்டில் என்றன்
விதிநோக்கிக் காளைப்பின் மேவுகின்றேனெனும் வேதியரே "

இங்கே ஒட்டக்கூத்தர் " பொன்னிநதி நோக்கி வாழும் நவபுதுச்சேரி " என்று கூறியுள்ளதை நோக்குக.

கவிராட்சதன், கவுடப்புலவன் என்ற விருதுப்பெயர்களைக் கொண்ட ஒட்டக்கூத்தரைப் படிக்கவைத்துப் புலவனாக்கியது சோழநாட்டுப் புதுவைச்சடையன் என்பது,

" புதுவைச் சடையன் பொருந்து " சங்கரனுக்கு "
உதவித் தொழில்புரி ஒட்டக் கூத்தனைக்
கவிக் களிறுகைக்கும் கவிராட்சதன் எனப்
புவிக்குயர் கவுடப் புலவனு மாக்கி "

என்ற சோழமண்டலச் சதகத்தில் காட்டப்பட்ட மேற்கோள் செய்யுளால் அறியலாம்.

ஆனால், கவிச்சக்கரவர்த்தி கம்பரைப் படிக்கவைத்து, புலவனாக்கி, இராமாயணம் பாடும்படி செய்தது நடுநாட்டுத் திருவெண்ணெய் நல்லூர்ச் சடையன் என்ற புதுவைச் சடையன் என்பது உலகறிந்த செய்தி.

சேது சமஸ்தான வித்துவான் திரு. ரா-இராகவ அய்யங்கார் அவர்கள் " செந்தமிழ் " என்ற பத்திரிகையில் " ஒட்டக்கூத்தர்—புகழேந்தி " என்ற தலைப்பின்கீழ் கூறுவதாவது :—

" கூத்தர் தம் கல்வி நிறைவு இல்லாத இளமைப் பருவத்தில் சோழநாட்டின் கண் உள்ள புதுவையின்கண் குணங்கொள் சடையன்—புதுவைச் சடையன் — புதுச்சேரிக் கொடையன்—புதுவைத் திரிகர்த்தன் என்று வழங்கப்பெற்ற சிறப்புப்பெயர்களுக்கு உரியவரும், தமிழ் காத்தல், பேணுதல், பெருக்குதல் முதலியவற்றில் மிக்காரும், வரையாது அளிக்கும் வள்ளலும், பெருநிலக்கிழவரும், வேளாண் செல்வரும் ஆகிய " வெண்ணெய் நல்லூர்ச் சடையப்பர் " தந்தையார் " சங்கரப்பிரபு " வின் சமுகத்தைச் சென்று அடைந்து, அவரது அன்பையும் ஆதரவையும் பெற்று, அவர் விரும்பியாங்கு அவருக்கு வெற்றிலைச் சுருளை மடித்துக்கொடுக்கும் அடைப்பைத் தொழிலில் அமர்ந்து இருந்தனர் " என்பதே.

நவபுதுச்சேரிச் சடையனுக்கு மூவலூர்-வெண்ணெய்-தேரழுந்தூர் முதலிய கிராமங்களிலும் நிலங்கள் உண்டு. அந்தந்த ஊர்களிலும் சடையன் அரண்மனை ஒவ்வொன்று உண்டு. அதனால் அவரைப் புதுவைச் சடையன் என்றும், வெண்ணெய்ச் சடையன் என்றும், மூவலூர்ச் சடையன் என்றும் கூறுப. திருவாளர்

ரா. இராகவ அய்யங்கார் "வெண்ணெய்ச் சடையன்" என்று கூருமல், "வெண்ணெய் நல்லூர்ச் சடையன் " என்று கூறியதால் படிக்கிறவர்கள் தவறுதலாக எண்ணங் கொள்ளுகிறுர்கள். அவர் " சோழநாட்டின்கண் " உள்ள வெண்ணெய் நல்லூர் என்று கூறியதைக் கவனிக்கிறதில்லை.

வெண்ணெய்ச் சடையன் மகனுர் பெயரும் " காங்கேயன் " என்பது ; வெண்ணெய் நல்லூர்ச் சடையன் மகனுர் பெயரும் " காங்கேய பூபதி " என்பது. இதனுனும் சில புலவர்களுக்குக் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

ஒட்டக்கூத்தர் வெண்ணெய்ச் சடையனிடம் போய்ச்சேர்ந்தபோது " சங்கரம் பிள்ளை " முதிர்ந்த வயதுடையவராய் இருந்தார். அதனுல், அவருக்கு உதவியாய் இருக்கும்படி ஒட்டக்கூத்தனை வெண்ணெய்ச் சடையன் நியமித்தார். ஒட்டக்கூத்தர் சங்கரம்பிள்ளை, அவர் மகன் சடையப்பபிள்ளை, அவர் மகன் காங்கேயன் பிள்ளை மூவர் காலத்திலும் இருந்தவர். அவருடைய காலம் கி.பி. 1090 முதல் கி.பி.1162 வரை 72 ஆண்டுகள் என்பர் ஆராய்ச்சியாளர்.

ஒட்டக்கூத்தர் நாலாயிரக்கோவை பாடியது வெண்ணெய்ச் சடையன் மகனுர் காங்கேயன் பிள்ளைமீது என்பது :—

" கோலாகல மன்னரில் அவன்போல் கொடுத்தே புகழுங் கொண்டாரார்
மேலார் கவுடப்புலவன் எனும் விழுப்பேர் கூத்தன் முழுப்பேராய்
நாலாயிரக் கோவையும் புனைய நவில் கென்று இசைத்து நாட்டுபுகழ்
மாலாமெனும் " காங்கயன் " வாழ்வு வளஞ்சேர் சோழ மண்டலமே "

என்ற சோழமண்டலச் சதகப் பாட்டால் அறியலாம்.

" வேறுமங்கல நாள் வியந்து " காங்கயன்மேல்
கூறு நாலாயிரக்கோவை " கொண்டுயர்ந்தோன் "

என்று சதகத்தில் கண்ட மேற்கோள் பாட்டாலும் அறியலாம்.

கம்பர் இராமாயணம் பாடி அரங்கேற்றியது கி.பி. 12-ம் நூற்ருண்டு என்பது

" ஆவின் கொடைச்சகரர் ஆயிரத்து நூற்றெழித்து
தேவன் திருவழுந்தூர் நன்னுட்டு—" மூவலூர் "
சீரார்கு ணுதித்தன் சேயமையப் பாடினுன்
காரார் காகுத்தன் கதை "

என்ற தனிப்பாடலாலும்,

" எண்ணிய சகாப்தம் எண் நூற்றேழின்மேல் "

என்ற இராமாயணச் செய்யுளாலும், கி.பி. 1178 முதல் கி.பி. 1185 வரை உள்ள காலத்தில் இராமாயணம் அரங்கேற்றப்பட்டது என்று அறிகிறேம். இராமாயணம் அரங்கேற்றுபடி ஒரு நாளில், ஒரு மாதத்தில், ஓர் ஆண்டில் நடைபெறவில்லை ; ஏழு ஆண்டுகள் ஆயிற்று எனத் தெரிகிறது. கம்பர் தில்லையில் தீக்ஷிதர்களை ஒன்று சேர்க்க அவர் பட்டபாட்டையும், கழித்த காலத்தையும், சீரங்கத்தில் சிலாரூப நர

சிங்க மூர்த்தியை ஒப்புக்கொள்ளும்படி செய்த காலத்தையும், இன்னும் எத்துணையோ புலவர்களிடம் சென்றுசென்று, அங்கீகாரம் பெற்றதையும் நோக்க ஏழு வருடங்கள் ஆயிருக்கும் என்றே கொள்ளவேண்டியிருக்கிறது. கம்பருடைய காலம் "கி.பி. 1146 முதல் கி.பி. 1216 " வரை என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

மேலே காட்டிய பாட்டால் கம்பர் திருவழுந்தூர் நாட்டைச் சேர்ந்த "மூவலூரில்" பிறந்தவர் என்றும், அவருடைய தகப்பனர் " ஆதித்தன் " என்ற பெயரை உடையவர் என்றும், அவர் வளர்ந்தது, படித்தது, புலவனுக மிளிர்ந்தது எல்லாம் நடு நாட்டைச் சேர்ந்த திருவெண்ணெய் நல்லூர் என்றும் அறிகிறேம். கம்பர் தம்முடைய இளவயதில் திருவெண்ணெய் நல்லூரிலிருந்து புறப்பட்டுத் தம் சொந்த ஊராகிய மூவலூருக்குப் போய்விட்டுத் திரும்புகையில் சோழநாட்டு நவபுதுச்சேரிக்குச் சென்று, சங்கரம்பிள்ளை மகனுர் புதுவைச் சடையப்பப்பிள்ளையைப் பார்த்து அங்கே தங்கிச் சின்னுள் அளவளாவிக்கொண்டு இருந்தார். அப்போது அவருடைய விருந்தோம்பலை மெச்சிக் கம்பர்,

" மெய்கழுவி வந்து விருந்துண்டு மீளுமவர்
கைகழுவ நீர்போதும் காவேரி—பொய்கழுவும்
போர்வேற் சடையன் புதுவையான் இல்லத்தை
யார்போற்ற வல்லார் அறிந்து" *

என்ற பாடலைப்பாடி அவரை மகிழ்வித்தார்.

இப்பாடலால் புதுவையில் (நவபுதுச்சேரி) சடையப்பப்பிள்ளையின் வீடு காவிரிக் கரையில் உள்ளது என்றும், வீட்டின் புழக்கடைப்பக்கம் காவிரி நதி ஓடுகிறது என்றும், புதுவையான் இல்லில் விருந்துண்டவர்கள் எல்லாம் காவிரியிலேயே கைகழுவுவது வழக்கம் என்றும், காவிரி நீர் விருந்துண்பவர் கைகழுவுவதற்கே சரியாய் இருக்குமென்றும் கூறி, விருந்துண்பவர்களுடைய எண்ணிக்கை கணக்கில் அடங்காது என்றும் குறிப்பிட்டுள்ளது காண்க.

தமிழ் நாவலர் சரிதையிலும் 70-வது பாட்டில் " கம்பர் காவிரி எச்சில்படப் பாடினுர் " என்ற குறிப்பும் காட்டப்பட்டுள்ளது காண்க.

இதனுல், காவிரிக்கரையைச் சேர்ந்த புதுவையை ஊராக உடைய சடையனும், பெண்ணையாற்றங்கரையில் உள்ள திருவெண்ணெய் நல்லூர்ப் புதுவைச் சடையனும் வேறு வேருவர் என்பது விளங்கவில்லையா ?

புதுவை (நவபுதுச்சேரி)ச் சடையன் என்பவர் கார்காத்த மரபு என்பது இன்னெரு கல்வெட்டால் வலியுறுகின்றது. இக்கல்வெட்டும் மூவலூர்க் கோவிலில் உள்ளதே.

புதுவைச் சடையன் வழித் தோன்றலான " பிள்ளைப்பெருமாள் " என்பவர் மூவலூரில் கி.பி. 1450-ல் வசித்துவந்தார். அவருக்கு " வருசி மார்த்தாண்டன் "

*இப்பாட்டு மூவலூர்க் கோவில் கல்வெட்டில் கண்ட பாட்டு.

என்ற வேணாட்டு (திருவாங்கூர்)ச் சிற்றரசன் எழுதியனுப்பிய பாகுடக் கவியினால் தெரிகின்றது. அக்கவி வருமாறு :—

“ தேமா வயங்கு செய்யா........ம பாற்கடற் சேதிபர் கோன்
மாமால் “ புதுவைச் சடையன் ”..........மங்கை யுங்கே
ஆமானை அந்த ஆயிழை செய்த............தாசை யெல்லாம்
போமாறு கண்டுவிட்டா ளென்று கூறும் பூங்கொடிக்கே ”

“ காவிரியைச் சோணாட்டைக் “ காராளர் தம்மரபை ”
நாவலரைக் காவலரை நல்லோரை—பூவலயம்
உள்ளத் தகும்புதுவை ஊரைச் சிறப்பித்தான்
பிள்ளைப் பெருமாள் பிறந்து.”

இதனால் புதுவை(நவபுதுச்சேரி)ச் சடையன் கார்காத்த மரபு என்றும், சோழநாட்டினர் என்றும், சொந்த ஊர் காவிரிக்கரையிலுள்ள புதுவை (நவபுதுச்சேரி) என்றும், அறிந்தாம்.

இதுகாறும் கூறியவாற்றால், இரண்டாம் மெய்கண்டாருடைய தாயைப்பெற்ற பாட்டன் நடுநாட்டுத் திருவெண்ணெய் நல்லூர்ச் “ சடையப்ப முதலியார் ” என்றும், அவர் தொண்டைமண்டலக் கொண்டைகட்டி வேளாளர் மரபைச் சார்ந்தவர் என்றும், அவர் சேர-சோழ-பாண்டியர்களிடத்தில் நட்புரிமை பூண்டவர் என்றும், அவர் காலத்திலேயே சோழ நாட்டில் காவிரிக்கரையில் உள்ள புதுவையில் கார்காத்த மரபைச் சேர்ந்த “ சடையப்பப்பிள்ளை ” என்பவர் சேர-சோழ-பாண்டியர்களுக்கு நட்புரிமை பூண்டு சிறப்புற்றிருந்தார் என்றும், இருவரையும் ஒருவர் என்று பெயரொற்றுமையால் சில புலவர்கள் மயங்கி எழுதியுள்ளார்கள் என்றும் கூறினும்.

மெய்கண்டார் வரலாறு முற்றும்.

---

## மெய்கண்டாருடைய குடிவழி

காங்கேய பூபதி முதலியார் (திருமுனைப்பாடி நாட்டுக் குறுநில மன்னர்)

|

சடையப்ப முதலியார் (கம்பரைப் புலவனாக்கி இராமாயணம் பாடும்படி செய்தவர்)

|

காங்கேய பூபதி — மங்களாம்பிகை =பெண்ணாகடம் அச்சுதன் களப்பாளர்

|

வெண்காட்டுப் பெருமாள் என்கிற இரண்டாம் மெய்கண்டார்

## மெய்கண்டாரின் ஞானபரம்பரை

- ஆனந்த தேவர்
  - சீகண்ட பரமசிவம்
    - நந்தியெம்பெருமான்
      - சனகர்
      - சனந்தனர்
      - சனாதனர்
      - சனற்குமாரர்
        - முதலாம் மெய்கண்டார் எ. (சத்திய ஞான தரிசனிகள்)
          - பரஞ்சோதி முனிவர்
            - இரண்டாம் மெய்கண்டார் (சிவஞானபோத நூலாசிரியர்) எ. வெண்காட்டுப்பெருமாள்
              - அருணந்தி சிவம் எ. சதாசிவ சிவாசாரியர் (சித்தியார், இருபா இருபஃது என்னும் நூற்களின் ஆசிரியர்)
                - மறைஞான சிவம்
                  - உமாபதி சிவம் (சிவப்பிரகாசம் முதலிய எட்டு நூற்களுக்கு ஆசிரியர்)
                    - அருள் நமச்சிவாயர்
                      - சித்தர் சிவப்பிரகாசர்
                        - காழிகங்கை மெய்கண்டார்
                          - காழிப்பெருமபழுதை கட்டி சிற்றம்பல நாடிகள்
                            - பழுதைகட்டிச் சம்பந்தர்
                              - சீகாளத்திப் பழுதைகட்டி ஞானப்பிரகாசர்
                                - கமலை ஞானப்பிரகாசர்
                                  - குரு ஞானப்பிரகாசர் (தருமபுரம் மடம் தாபகர்)
                          - துகளறுபோதம்செய்த சிற்றம்பல நாடிகள்
                          - காழிச்சிறுபழுதைகட்டி சிற்றம்பல நாடிகள் (திருச்செந்தூர் அகவல் ஆசிரியர்)
                        - மூவலூர் நமச்சிவாய மூர்த்திகள் (திருவாவடுதுறை மடம் தாபகர்)
              - மனவாசகம் கடந்தார்
              - வேறு 47 பேர்கள்
      - சிவயோக மாமுனி
      - பதஞ்சலி
      - வியாக்கிரமர்
      - சுந்தரநாதர் திருமூலர்

## கால அட்டவணை

| | | | | AD. AD. |
|---|---|---|---|---|
| 1. | அப்பர் | ... | ... | 567—645 |
| 2. | அருணந்தி சிவம் | ... | ... | 1195—1250 |
| 3. | ஆதித்த சோழன் I | ... | ... | 880—907 |
| 4. | ஆதித்த சோழன் II | ... | ... | 966—970 |
| 5. | இராமாநுசர் | ... | ... | 1017—1137 |
| 6. | இராசராச சோழன் I | ... | ... | 984—1013 |
| 7. | இராசராச சோழன் II | ... | ... | 1077—1078 |
| 8. | இராசராச சோழன் III | ... | ... | 1146—1162 |
| 9. | இராசாதிராச சோழன் II | ... | ... | 1166—1178 |
| 10. | உமாபதி சிவம் | ... | ... | 1270—1315 |
| 11. | ஒட்டக்கூத்தர் | ... | ... | 1090—1162 |
| 12. | கம்பர் | ... | ... | 1146—1216 |
| 13. | குலோத்துங்கச் சோழன் I | ... | ... | 1070—1118 |
| 14. | குலோத்துங்கச் சோழன் II | ... | ... | 1143—1153 |
| 15. | குலோத்துங்கச் சோழன் III | ... | ... | 1178—1216 |
| 16. | சம்பந்தர் | ... | ... | 634—650 |
| 17. | சங்கரர் | ... | ... | 804—904 |
| 18. | சுந்தரர் | ... | ... | 694—712 |
| 19. | சேக்கிழார் | ... | ... | 992—1042 |
| 20. | சேரமான் பெருமாள் I | ... | ... | 667—712 |
| 21. | சேரமான் பெருமாள் II | ... | ... | 754—798 |
| 22. | சேரமான் பெருமாள் III | ... | ... | 798—834 |
| 23. | சேனபதி பெருமாள் நம்பி | ... | ... | 1162—1166 |
| 24. | புகழேந்தி | ... | ... | 1087—1156 |
| 25. | மறைஞான சிவம் | ... | ... | 1230—1275 |
| 26. | மாணிக்கவாசகர் | ... | ... | 250—282 |
| 27. | மெய்கண்ட சிவம் | ... | ... | 1225—1245 |

N. B:—இக்கட்டுரைக்கு வேண்டிய கால அட்டவணை கொடுக்கப்பட்டுள்ளது.

# பாரதியும் பெண்மையும்

(திருமதி. ர. இராசாமணியம்மையார், B.A., (Hons) L.T. சென்னை)

புலவர்கள் தாங்களியற்றிய காவியங்களில், பூமி, நதிகள், விண்மீன்கள், எண் வகைச் செல்வம் முதலிய அனைத்தையும் பெண்களாக வர்ணித்துள்ளனர். சமணர்களோ இன்னும் ஒருபடி அதிகமாகவே சென்றுவிட்டனர். ஏனெனில், அவர்கள், வீட்டுலகையும் பெண்ணாகவே பாவித்து "கைவல்ய மடந்தை" என அழைக்கின்றனர். அவ்வாறே அமரகவி பாரதியார், கண்ணனைக் "கண்ணம்மா" என்கிறார். மேலும், கொற்றவை, நாமகள், பூமகள் முதலிய பெண் தெய்வங்கட்கு வணக்கஞ் செலுத்தியிருப்பதுடன், புதுமைப் பெண்ணைப்பற்றியும் கூறியுள்ளார். மற்ற புலவர்கள் பெண்களை வர்ணித்திருப்பது வெறும் கற்பனை. ஆனால் பாரதியாரோ பெண்களின் பழங்காலநிலை, இடைக்காலநிலை, அவர்களிடமுள்ள குணங்கள், அன்னார் செய்யக்கூடிய காரியங்கள் முதலியவற்றைப்பற்றி விளக்கிக் கூறுகிறார். ஔவை பிறந்த நாட்டிலா அறிவுக்குப் பஞ்சம் என அங்கலாய்க்கிறார். அவர் ஔவையை உதாரணமாகக் கூறியதற்குக் காரணம், அவரிடமுள்ள அரசியல் வன்மை, புலமை, வீரம் முதலிய சிறந்த பண்புகளாகும்.

கல்விக்குத் தெய்வம் கலைமகளாயிருக்க, பெண்கள் ஏட்டைத் தொடுவதுகூடாது என்று வீட்டுக்குள்ளேயே அவர்களைப் பூட்டிவைப்பதன் பொருளென்ன?" பிச்சை புகினுங் கற்கை நன்றே" "எண்ணெழுத் திகழேல்" என்னும் அறிவுரைகள், பெண்களை விலக்கிக் கூறப்பட்டவை யல்லவே. இடைக்காலத்தில் எழுந்தது "அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு?" என்னும் எதுகை, மோனை நயத்துடன் கூடிய பழமொழி. அதைப் பலபெற்றோர் ஆமோதித்து, பெண்கள் படிப்பதற்கு அருகதையற்றவர் என்றும், இசை, நடனம் முதலிய கலைகள் பொதுமகளிருக்கே உரியனவென்றும் கூறி, அவர்களது அறிவு வளர்ச்சியைத் தடுத்தனர். அதனால் கலை வளர்ச்சியும் தடைப்பட்டது. பெண்கள் வெளியில் வரலாகாது. தமது எண்ணங்களை வெளியிடவும் அவர்களுக்கு உரிமையில்லை. ஆணுக்குப் பெண் அடிமை. இல்லத்திலுள்ள ஏனையோருக்கும் அவள் அடிமை. பணங்கொடுத்து வாங்கிவந்த மாட்டைத் தொழுவத்தில் கட்டியதுபோல் அவர்களைக் கட்டுப்படுத்தி யிருக்கிறார்களென்றும், எப்போதும் அவர்கள் மாடுபோல் உழைத்தும் அடிபட்டும் வருவதாயும், அந்த நாள் மலையேறிவிட்டதென்றும், "ஆணின்றிப் பெண்ணில்லை, பெண்ணின்றி ஆணில்லை," இருவரும் சமம் என்றும், ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்றெண்ணி யிருந்தவர் மாய்ந்துவிட்டார் என்றும் கூறுகின்றார் கவிஞர்.

நாயினிடம் யோசனை கேளாமலே யார் அதிகவிலை கொடுக்கிறார்களோ அவர்களுக்கு அதை விற்பதைப்போல், பெண்களையும் பிள்ளைவீட்டாரிடம் பணம் பெற்றுக் கொண்டு விற்கிறார்கள். சில ஜாதிகளில் பிள்ளைவீட்டாரும், மற்றும் சில ஜாதிகளில் பெண்வீட்டாரும் பணம்கொடுக்கும் வழக்கம் இருந்துவருகிறது. பெண்களை நாய் போல் கேவலமாக மதித்து, அவர்களைக் கொல்ல மனமின்றி, விற்பனை செய்கின்றனர் பெற்றோர். இதனை,

" நல்லவிலை கொண்டு நாயை விற்பாரந்த நாயிடம் யோசனை கேட்பதுண்டோ,
கொல்லத்துணிவின்றி நம்மையு மந்நிலை கூட்டிவைத்தார் "

என்னும் அடிகளால் குறிப்பிடுகின்றார்.

அடுத்தபடியாக, பெண்களை வற்புறுத்திக் கட்டிக்கொடுக்கும் வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம் என்கிறார். அக்காலத்தில் சுயம்வரம் இருந்துவந்தது. வில்லை வளைக்கும் வீரனையோ, அம்பையெய்யும் அதிசூரனையோ, ஏறுதழுவும் இளைஞனையோ ஒரு கன்னி கணவனாக ஏற்றுக்கொள்வாள். தனக்கேற்ற கணவரைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு பெண்ணைச் சார்ந்தது. போட்டியில் வெற்றிபெறும் வீரனே, வாழ்க்கைப்படியில் அடி வைப்பதற்கு அருகதையுள்ளவன். ஆனால் இடைக் காலத்தில் மணவிஷயத்தில் பெண் குறுக்கிடலாகாது. உனது நன்மையைக் கோருபவர்களன்றோ நாங்கள் என்று பெற்றோர் கூறி, கல்வியறிவற்றவனுக்கும், வயது சென்றவனுக்கும், பிணியாளனுக்கும், ஒழுக்கந் தவறியவனுக்கும் மணஞ்செய்து கொடுக்கின்றனர். ஏனெனில், பணந்தான் அவர்களுக்குப் பிரதானம். நிலையற்ற செல்வத்தை நம்பிச் செய்த காரியத்துக்காகப் பின்னால் அவர்கள் வருந்தவும் நேரிடும். பழந்தமிழிலக்கியத்தை நோக்குமிடத்து, குணம், குலம், கல்விபோன்ற பத்து அம்சங்களில் ஒத்திருப்பவனுக்கே பெண் கொடுத்தனர் என்பது நன்குவிளங்கும்.

பாரதியார் படைத்துள்ள புதுமைப்பெண் எப்படிப்பட்டவளென்று பார்ப்போம்.

1. " நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கு மஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கு மிருப்பதால் செம்மைமாதர்
திறம்புவ தில்லையாம் "

2. " ஞான நல்லறம் வீரசுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம் "

இந்த நற்குணங்களால் அவர்கள் தீயவழியில் செல்லுவதில்லை. அச்சம் குடி கொண்டால், பொந்தில்தான் வாழவேண்டும். முன்னணிக்கு வர இயலாது.

பிறகு, அன்னார் செய்யக்கூடிய காரியங்கள் என்னென்னவென்று கூறுகிறார். சில வகுப்பினர், தாங்கள் படிக்கும் வழக்கமில்லையென்றும், வெளியிற் செல்லு

தல் கூடாது என்றும், அவ்வாறு வழக்கத்துக்கு விரோதமான காரியம் செய்தால் உறவினர் பழிப்பர் என்றும், தெய்வகோபம் உண்டாகுமென்றும் கூறுவர். அத்தகைய கெட்ட வழக்கங்களை ஒழிக்கவேண்டும் என்பதனை

" மூத்தபொய்ம்மைகள் யாவுமழிப்போம்
மூடக்கட்டுகள் யாவுந்தளர்ப்போம் "

என்னும் அடிகளால் விளக்குகிறார்.

பாரதியாரின் புதுமைப்பெண்ணானவள் பட்டங்களாள்வதும் சட்டங்கள் செய்வதுமாகிய காரியங்களைச் செய்யவேண்டும் என்கிறார். சரித்திரத்தை நோக்குமிடத்து, இராணி மங்கம்மாள் பாண்டிய நாட்டைத் திறமையுடன் ஆண்டதாய்த் தெரிகிறது. இன்னும் அவள், அசோகர் செய்ததைப்போல் சத்திரம் சாவடி கட்டி, குளங்கள் வெட்டி, சாலையோரங்களில் நிழலுக்காக மரங்கள் வைத்துப் பயிரிட்டு, கல்விச்சாலைகள் ஏற்படுத்தியதை நாமனைவரும் புத்தகவாயிலாக அறிந்துள்ளோம். காலஞ்சென்ற கவியரசி திரு. சரோஜனி நாயுடு, மேனாட்டு மொழியில் சிறந்த கவிதைகள் இயற்றியதுடன் அமையாது, மத்திய மாகாணத்தை ஆட்சிபுரிந்ததை நம் காலத்தில் கண்டும் கேட்டுமிருக்கிறோம். இப்பொழுதும் அகில இந்திய மாதர் சங்கமானது உலக முன்னேற்றத்துக்கான வழிகளை ஆராய்ந்து செய்வதில் ஈடுபட்டிருக்கிறது. இதனின்றும், தொட்டிலை யாட்டுங்கை," தொல்லுலகை யாளுங்கை " என்னும் பழமொழி எவ்வளவு உண்மையானது என்பது புலனாகின்றது.

அடுத்தபடியாக, பெண்கள் வேதம் படைக்கவும், நீதிகள் செய்யவும் வந்ததாகப் பாரதியார் கூறுகிறார். வேதத்தைப் பெண்களும், ஒருஜாதியினரும் ஓதலாகாது என்று மறைத்துவைக்கப்பட்ட காரணத்தினால் மறையென்னும் பெயர்பெற்றது. ஆனால் மைத்ரேயி முதலியோர் வேதத்தைக் கற்கவில்லையா ? நீதியையெடுத்துக்கொண்டாலும் பெண்கள் இணையற்று விளங்கி வந்திருக்கின்றனர். தன் "சகோதரன் செய்த தவறுக்காக அவனை மலையினின்றும் உருட்டும்படி கட்டளையிட்டாள், இராணி மங்கம்மாள். எனினும், மனுநீதி கண்ட சோழன், பொற்கைப்பாண்டியன் முதலியோரைப்போல் அவள் பிற்காலத்தில் எழுந்த காவியங்களில் இடம் பெறவில்லை. கிரேக்க நாட்டில் நீதிக்குரிய தெய்வம் பெண் தெய்வமென்று கருதப்பட்டது. அதன் கண்களைக்கட்டிக் கையில் ஒரு தராசு வைத்திருப்பதுபோல் அமைத்திருந்தனர். இதிலிருந்து எந்நாட்டிலும், எக்காலத்திலும் சிறந்த முறையில் நீதி வழங்கப்பட்டதென்பதும், பெண்களும் ஆண்களுக்குச் சமமாக நீதி செலுத்தக்கூடும் என்பதும் தெளிவாகத் தெரிகின்றன.

சாதம் படைப்பது மாத்திரமன்று; பெண்களால் தேவசாதி படைக்கவும் கூடும். மக்களாய்ப் பிறந்துதான் நற்குண நற்செய்கைகள் காரணமாக, தேவராக மாறலாம். தாய்மாரின் குணாதிசயமே குழந்தைகளுக்கும் படிகிறது. சிறந்த அறிவு வாய்ந்தவரைக் கருவில் திருவுடையோர் என்கின்றனர். சிவாஜியின் தாயும் நெப்போலியனது தாயும் தம் குழந்தைகள் வயிற்றிலிருக்கும்போது வீரகாவியங்களைப் பிறர்

வாயிலாகக் கேட்டும், கற்றும் வந்தது, அன்னாரது புதல்வர் சிறந்த வீரராய்த் திகழு வதற்கு ஓர் காரணமெனக் கருதப்படுகின்றது. அதனாலன்றோ 'சூரப்பிள்ளைகள் தா யென்று போற்றுவோம்' என்கிறார் பாரதியார். குழந்தையானது நாள்முழுவதும் தன் தாயினிடமே இருக்கிறது. அது, மொழி கற்றுக்கொள்ளுவதும் தாயினிடந் தான். அதனால்தான் தாய்மொழி யெனப்பட்டது. எதிர்காலப் பிரஜைகளாக விருக் கும் இளங்குழந்தைகளை உருவாக்கும் சிற்பியாக விளங்குபவள் தாய்.
இறுதியாக,

"காதலொருவனைக் கைப்பிடித்தே யவன்
காரியம் யாவினுங் கைகொடுத்து
மாதரறங்கள் பழைமையைக் காட்டிலும்
மாட்சி பெறச்செய்து வாழ்வோம்" என்று பாடினார்.

பெண்ணானவள் எந்தக் கணவனையடைந்து, அவனது இன்பதுன்பங்களில் பங்கு பெற்று, பண்டைக்காலத்தில் மாதர் செய்துவந்த பலவகைத் தானதர்மங்களைச் செய்து, சீரிய முறையில் வாழ்க்கை நடத்தவேண்டும் என்கிறார் கவிஞர். பாரதியார் கூறிய புதுமைப்பெண்ணைப்போலவே எல்லாப் பெண்களும் நடப்பார்களானால், அவர்கள் உலக முன்னேற்றத்துக்குச் சிறந்த தொண்டுபுரிந்தோராவர்.

# நாகப்பட்டினம்

(திரு. புலவர். டாக்டர். மா. இராசமாணிக்கனுர், M.A., L.T., M.O.L., Ph. D.)

## சோழநாடு

“ செவிலித்தாய் என்ன ஓம்பும் தீம்புனற் கன்னி ” என்று புலவர்களால் ஏத்தெடுக்கப்பெற்ற காவிரியாறு தன் கிளையாறுகளுடன் பாய்வதால் “ சோழ வளநாடு சோறுடைத்து ” என்று பாராட்டப்பெற்றது. சோழநாடு என்பது தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களையும் வடவெள்ளாறு வரை உள்ள தென் ஆர்க்காட்டுப் பகுதியையும் தன் அகத்தே பெற்றது. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே சோழநாடு சோழர் என்ற மரபரசரால் ஆளப்பட்டு வந்தது. சங்க காலத்தில் புகழ் பெற்ற காவிரிப்பூம் பட்டினம் தலைநகராகவும் துறைமுக நகரமாகவும் விளக்கமுற்றிருந்தது.

## தேவாரக் காலம்

மாதவியின் மகளான மணிமேகலையின் காலத்தில் (கி.பி. இரண்டாம் நூற்றுண்டில்) காவிரிப்பூம் பட்டினத்தின் பெரும்பகுதி கடல் கொந்தளிப்பால் அழிந்தது என்பதை மணிமேகலை என்னும் காப்பியம் விளக்கமுறக் கூறுகின்றது. சங்க காலத்திற்குப் பிறகு தமிழகத்தின் பெரும்பகுதி பல்லவர் ஆட்சிக்கு உட்பட்டது. அக்காலத்தில் சோழநாட்டில் சிறந்த துறைமுக நகரமாக இருந்தது “நாகப்பட்டினம்” என்பது தேவாரப் பாடல்களால் தெரிகிறது.

“வங்க-மலிகடல் நாகை” என்று கி.பி. ஏழாம் நூற்றுண்டில் வாழ்ந்த நாவுக்கரசர் குறித்துள்ளார். அதே நூற்றுண்டில் வாழ்ந்த சம்பந்தர், மலைபோல் உயர்ந்த கப்பல்கள் தங்கும் நாகை என்று குறிப்பிட்டுள்ளார். துறைமுகப்பட்டினமாக இருந்தமையால் நகரம் செழிப்புற்றிருந்தது. இதனை 9-ஆம் நூற்றுண்டினரான சுந்தரர் “ செல்வக் கடல் நாகை ” என்று குறிப்பதிலிருந்து உணரலாம். நாகை “ காண்பினரிய மணிமாடம் நிறைந்த நெடுவீதி ” களைக் கொண்டது என்று சுந்தரர் பாடியுள்ளார்.

அந்நகரத்தில் கல்வி வளம் நன்னிலையில் இருந்தது என்பதைத் திருநாவுக்கரசர், “ கற்ருர் பயில் நாகை ” என்பதிலிருந்து நன்கறியலாம். நாகையில் சிவபெருமான் திருக்கோயில் ஒன்று பல்லவர் காலத்தில் (கி.பி. 300-900) இருந்தது. அதன் பெயர் “ காரோணம் ” என்பது. அக்கோவில் மேற்சொன்ன சமய குரவர் காலங்களில் பக்திக்கு நிலைக்களமாக இருந்தது என்பதும், மிக்க செல்வ வளம் பெற்றிருந்தது என்பதும் திருமுறைப் பாடல்களால் தெரிகின்றன.

"சுந்தரனே, கந்தமுத லாடையா பரணம்
பண்டாரத் தேயெனக்குப் பணித்தருளல் வேண்டும்"

என்பது சுந்தரர் நாகைக் காரோணத்திற் பாடிய பாடலின் ஒரு பகுதி. கோவிற் பண்டாரத்திலிருந்து, வாசனைப் பொருள்கள், ஆடைகள், ஆபரணங்கள் ஆகியவற்றைத் தமக்குத் தந்தருள வேண்டும் என்று சுந்தரர் சிவபெருமானை வேண்டியுள்ளார்.

## பெரிய புராணச் சான்று

கி.பி. 5 அல்லது 6-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த காரைக்கால் அம்மையாரது காலத்திலேயே நாகை செல்வத்திற் சிறந்த நகரமாகவும் துறைமுகப் பட்டினமாகவும் இருந்தது என்பது பெரிய புராணத்தால் தெரிகிறது. காரைக்காலிற் பிறந்து வளர்ந்த அம்மையார் நாகையில் கடல் வாணிகத்திற் சிறந்த வணிகன் மகனை மணந்துகொண்டார். கி.பி. 8-ஆம் நூற்றுண்டினர் என்று மதிக்கத்தக்க அதிபத்த நாயனுர் காலத்தில் நாகை "கப்பல் செல்வம்"பெற்றிருந்தது என்று சேக்கிழார் கூறியுள்ளார்.

## வரலாற்றுச் சான்று

கி.பி. 720-ல் நரசிம்ம பல்லவன் (இராஜசிம்ம பல்லவன்) சீனப்பேரரசை மதித்துப் பௌத்தர்கட்காக நாகையில் ஒரு கோவில் கட்டி, அதற்குப் பெயரிடுமாறு சீனப் பேரரசனை வேண்டினுன். சீனப்பேரரசன் அங்ஙனமே செய்து பல பரிசுகளும் அனுப்பினுன் என்பது சீனர் எழுதிவைத்திருந்த குறிப்புக்களிலிருந்து அறியலாம். சீனர்கள் பௌத்த சமயத்தினர் ; கடல் வாணிகத்திற் சிறந்தவர். அவர்கள் நாகையில் தங்கிக் கடல் வாணிகம் செய்தனர். அவர்கள் வழிபாட்டிற்குப் புத்தர் கோவில் பல்லவனுல் கட்டப்பட்டது. பல்லவ நாடு அக்காலத்திற் சீனநாட்டுடன் கடல் வாணிகம் செய்து வந்தது. சீனப்பேரரசனை மகிழ்விக்கவே பல்லவன் நாகையில் புத்தர் கோவிலைக் கட்டினுன். இக்குறிப்புக்களாலும் நாகை சிறந்த கடற்றுறைப் பட்டினமாக இருந்ததென்பதை நன்கறியலாம்.

கி.பி. 8-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த திருமங்கையாழ்வார் நாகைப் பௌத்த விகாரத்தில் இருந்த—முழுவதும் பொன்னுல் செய்யப்பட்டிருந்த புத்தர் உருவச் சிலையைக் கவர்ந்துசென்று, அப்பொன்னைக்கொண்டு திருவரங்கத்தில் திருமதில் எழுப்பித்தல் முதலிய திருத்தொண்டுகளைச் செய்தார் என்று வைணவ நூல்கள் கூறுகின்றன. இதிலிருந்து இராஜசிம்மன் கட்டிய பௌத்த விஹாரத்தைப்பற்றி நன்கறியலாம் அன்றே ?

## பிற்காலச் சோழர் காலத்தில்

கி.பி. 985 முதல் 1014 வரை அரசாண்ட இராசராசன் காலத்தில் நாகையில் "ஸ்ரீசைலேந்திர சூடாமணி விகாரை" என்னும் பௌத்த பள்ளி கட்டப்பட்டது. மலேயா, சுமத்திரா, என்னும் பகுதிகளை ஆண்ட ஸ்ரீமாற விஜயோத்துங்க வர்மன்

என்ற அரசனது வேண்டுகோட்படி அந்த விகாரையை நாகையிற் கட்ட இராசராசன் இசைவுதந்தான். அந்த விகாரை ஸ்ரீமாற விஜயோத்துங்கன் தந்தையான சூடா மணி வர்மன் பெயரால் கட்டப்பட்டது. ஆதலின் " சூடாமணி விகாரை " எனப் பெயர் பெற்றது. இராசராசன் நாகையை அடுத்த ஆனைமங்கலம் முதலிய ஊர்களை அவ்விகாரைக்குப் பள்ளிச் சந்தமாக அளித்தான். ஆயினும் சாசனம் எழுதுவதற்கு முன் அவன் இறந்துவிட்டதால், அவன் செல்வ மைந்தனுன இராசேந்திர சோழன் செப்புப் பட்டயத்தில் சாசனம் எழுதிக்கொடுத்தான்.

கி.பி. 12-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த சேக்கிழார்," சோழநாடு என்னும் கற் பகப் பூங்கொடியின் "மலர்" என்று சொல்லத்தக்க முறையில் பல நலங்களையும் பெற்று விளங்கியது நாகப்பட்டினம் என்னும் திருநகரம் " என்று பாடியுள்ளார். இதிலிருந்து அந்நகரம், சோழப் பெருநாட்டில் மிகச்சிறந்த நகரமாக இருந்தது என்பதை உணரலாம்.

## விஜயநகர் அரசர் காலத்தில்

பர்மாவில் பெகுநாட்டை ஆண்ட ராமாபதி அரசன் இலங்கைக்கு ஒரு தூதனை யும் பௌத்த பிக்ஷுக்கள் பதினெருவரையும் அனுப்பினன். அவர்கள் இலங்கை யில் தங்கள் வேலைகளை முடித்துக்கொண்டு கப்பலேறிச் சென்றனர். வழியில் அக் கப்பல் புயலிற் சிக்கி உடைந்தது. அவர்கள் உயிர் பிழைத்துக் கரையேறி நாகையை அடைந்தார்கள். அங்கிருந்து " படரிகாராமம் " என்னும் பௌத்த பள்ளியில் தங்கி இருந்தார்கள். அப்பள்ளிக்கு அருகே சீனப்பேரரசனுல் குகை வடிவமாகக் கட்டப் பட்டிருந்த கோவிலில் புத்ததேவரை வணங்கினர்கள். இந்த நிகழ்ச்சி கி.பி. 1477-ல் நடைபெற்றதாகப் பர்மா நாட்டுக் கலியாணி நகரத்துக் கல்வெட்டுக் கூறுகிறது.

## நாகையிற் காளமேகம்

திருநாவுக்கரசராற் சிறப்பித்துக் கூறப்பட்ட நாகை மக்களின் கல்வி நிலை தொடர்ந்து உயரிய நிலையில் இருந்து வந்திருத்தல் வேண்டும் என்பது பின்வரும் செவிவழிச் செய்தியால் அறியப்படும் : கி.பி. 15-ம் நூற்றுண்டில் வாழ்ந்த காள மேகப் புலவர் ஒரு முறை நாகை சென்ருர் ;" சோறு விற்குமிடம் எது ?" என்று தெருவில் பாக்குவைத்து விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்களைக் கேட்டார்;அதற்கு அவர்கள் நகைத்து," சோறு தொண்டையில் விற்கும் ", என்று குறும்பாகப் பதில் கூறினர்கள். அதனல் வெகுண்ட காளமேகம் அருகில் கிடந்த அடுப்புக்கரி ஒன்றை எடுத்து, எதிரிலிருந்த ஒரு வீட்டுச் சுவர்மீது,

" பாக்குத் தெறித்துவிளை யாடுசிறு பாலகர்க்கு
நாக்கு................"

என்பது வரை எழுதி, பசி கடுகியதால், உண்டுவந்து பிறகு பிள்ளைகளைச் சபித்து எழுதவேண்டும் என்று, இரண்டாம் வரியை அப்படியே விட்டுவிட்டுச் சென்ருர். அவர் செயலைக் கவனித்துக்கொண்டிருந்த பிள்ளைகள், அவர் சென்றபின், சுவர் அருகே சென்று, அவர் எழுதிவிட்டுச் சென்றதைப் பார்த்தனர். வாக்கியம் குறைவாக இருத் தலைப் பார்த்து, ஒரு கரித்துண்டை எடுத்து,

"நாக்குத் தமிழ்விளங்க நாகேசா,"

என்று இரண்டாம் வரியை முடித்துவிட்டு, வழக்கம்போல் விளையாடிக்கொண்டிருந்தனர்.

"நாக்குத் தெறித்து விழ நாகேசா"

என்று முடிக்கவேண்டும் என்று திரும்பிவந்த காளமேகம், தாம் விட்டுச்சென்றது நிறைவாக்கப்பட்டிருப்பதைக் கண்டார். அது பிள்ளைகள் செயல் என்பதை அறிந்தார்; அவர்தம் தமிழறிவிற்கு வியந்தார்; அப்பிள்ளைகளை அருகழைத்து ஆசிர்வதித்துச் சென்றார்.

## ஆங்கிலேயர் காலத்தில்

கி.பி. 1725-ம் ஆண்டில் "சீன கோவில்" என்ற பெயருடன் ஒரு கோவில் நாகையில் இருந்ததென்று வாலெண்டின் என்பவர் குறித்துள்ளார். அதே கோவிலைத்தாம் 1846-இல் பார்த்ததாகச் சர் வால்டர் எலியட் என்பவர் எழுதியுள்ளார். டச்சுக்காரர், ஆங்கிலேயர்கள், பிரெஞ்சுக்காரர்கள், இந்தியாவில் வாணிகம் நடத்திய 18, 19-ம் நூற்றாண்டுகளிலும் நாகை கடல் வாணிகத்திற் சிறந்திருந்தது; கிருத்தவப் பாதிரிமார்கள் அங்கிருந்துகொண்டு தங்கள் சமயத்தையும் கல்வியையும் பரப்பிவந்தார்கள். இவை அனைத்தையும் நோக்க, கடல் நாகை, பல்லவர் கால முதல் வெள்ளையர் காலம்வரை வாணிகத்திலும் கல்வியிலும் சிறந்திருந்தது என்பதை ஐயமற உணரலாம் அல்லவா?

## மகாவித்துவான் பிள்ளையவர்கள்

7-ம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பரும் சம்பந்தரும், நாகையிற் கற்றவரும் சிவநெறிச் செல்வரும் தம் காலத்தில் வாழ்ந்திருந்தனர் என்று குறிப்பிட்டுள்ளனர். நாகையில் கற்றவர் நீண்டகாலமாக இருந்துவந்தனர் என்பது முன்னரே குறிக்கப்பட்டது. சிவநெறிச் செல்வர்களும் அவ்வாறே இருந்திருத்தல் வேண்டும் என்று ஊகிப்பதில் தவறில்லை. கி.பி. 19-ம் நூற்றாண்டில் "தேவாரத் திருக்கூட்டம்" என்ற சிவபக்தர் சங்கம் நாகையில் இருந்தது. அதனைச்சேர்ந்த சிரியர் வேண்டுகோளின்படி மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்கள், "திருநாகைக் காரோணப் புராணம்" என்னும் அரிய நூலை 1868-இல் பாடினார்; ஓராண்டு முழுவதும் நாகையில் தங்கி, அவ்வரிய நூலைப் படித்து அரங்கேற்றம் செய்தார். அப்பெரியாருடைய அரங்கேற்ற வைபவத்தைப் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்களின் சமய குருவாகிய "சுந்தர சுவாமிகளும்" நேரிற் கண்டுகளித்தார். சிவநெறிச்செல்வர்கள் புராணத்தைப் பாராட்டிப் பிள்ளையவர்கட்குப் பெருஞ்சிறப்புச் செய்தனர்.

இங்ஙனம் நாகை கல்வி, செல்வம், சமயம் என்னும் முத்துறைகளிலும் பல்லவர் காலமுதல் மேம்பட்டுவந்தது.

# திருவள்ளுவரும்-திருக்குறளும்

(திரு. ஆ. கார்மேகக்கோனர், தமிழாராய்ச்சித் துறைத் தலைவர்,
அமெரிக்கன் கல்லூரி, மதுரை.)

திருவள்ளுவர் தோன்றிய காலத்தில் தமிழ் நாட்டில் தமிழ்மொழி தன் நிலையிற் குன்ருது நிவந்தோங்கி இலங்கியிருந்தது. இக்காலத்தில், தொல்காப்பியம் என்னும் ஒப்புயர்வற்ற இலக்கணமும், அதற்கு இலக்கியமான பல சான்ருேரது செய்யுள் நூல்களும் பல்கியிருந்தன. தமிழ் நூல்கள், இயற்கை வனப்பினையும், மக்கள் வாழ்க்கைக்கூறுகளையும், அவர்தம் பண்புகளையும் சித்திரிப்பவைகளாகத் திகழ்ந்தன. மக்களுக்குரிய அறங்களும், ஒழுக்கங்களும், பிறவும் அப்பாடலுள் ஆங்காங்குப் பொதிந்து கோப்புமுறையின்றிக் கிடந்தன. தொல்காப்பியம் என்னும் தமிழிலக்கணம், தமிழ்மொழியின் எழுத்துச் சொல் இலக்கணங்களை ஆராய்ந்து கூறுவதேயன்றி, மக்களது ஒழுக்கங்களையும் அகம் புறமென்று இருவகையாகப் பகுத்துக் கூறுவதாகவும் விளங்கிற்று. இலக்கண நூல்களில் மொழியிலக்கண மன்றி மக்களது ஒழுக்க இலக்கணமும் கூறுவது, தமிழ் இலக்கணமாகிய தொல்காப் பியத்திற்கே சிறப்பாக உரிய பெற்றியாகக் காணக்கிடந்தது.

தொல்காப்பியம், தகுதியில் தமிழ் மக்களது ஒருமைப்பாடு தோன்ற அவர்களது ஒழுக்கங்களை வரையறுத்துக் கூறுவதா யிருந்தும், பிற்காலத்துத் தமிழ் மக்கள் " பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் " என்பதனை மறந்து, பிறப்பினுல் உயர்வு தாழ்வு கற்பித்துப் பல்வேறு குலத்தினராகப் பிரிந்து வாழத் தலைப்பட்டனர். வைணவம், சைவம், ஆருகதம், பௌத்தம், லோகாயதம் முதலிய பல்வேறு சமயங்களும் ஒன்றையொன்று முரணிப் பரவியிருந்தன. இத்தகைய மக்கட் பிரிவும் சமயப்பகையும் நாட்டின் நலத்திற்குப் பெருங்கேடு பயக்குமென்பதை நம் தெய்வப் புலமையாளர் ஓர்ந்து, நாட்டில் சாதி சமயப் பிணக்குக்களைப் போக்கி, மீண்டும் பொது நோக்கும் சமதர்மமும் தழைத்தற்குக் கருவியான ஒரு பொதுமறையைத் தமிழ் மக்களுக்கு வழங்கியருள வேண்டுமென்னும் சீரிய குறிக்கோளுடையராய் இத் திருக்குறளென்னும் தமிழ்மறையை இயற்றியருள்வாராயினர்.

ஆசிரியர் தமது தூய இக்கருத்தை " பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும் கொல்குறும்பு மில்லது நாடு " என்ற குறளில் குறிப்பிட்டிருத்தலும், பல்குழுவும் என்பதற்குச் சங்கேதவயத்தான் மாறுபட்டுக் கூடும் பல கூட்டம் எனவும், அஃதாவது : சாதிபற்றியும், கடவுள்பற்றியும் புலர்க்கு உளதாம் ஒருமை

எனவும் உரையாசிரியர் அதற்குப் பொருள் உரைத்திருத்தலும் ஈண்டு நோக்கத் தக்கதாம்.

ஆசிரியர் தொல்காப்பியனுர் அகத்திணையியல் புறத்திணையியல்களுள் தமிழ் மக்களது ஒழுக்கங்களை முறையே அகம் புறம் எனப்பகுத்துக் கூறியிருப்பினும், அவை புலவரே அறியும் இறுக்கமும், செறிவும், சுருக்கமும் உடைத்தாக இருத்த லால் திருவள்ளுவர், அந்நூலையே தம் நூலுக்கு அடிப்படையாக வைத்துக்கொண்டு விரிந்த தமிழ் மக்களது ஒழுக்க இலக்கணமாகிய இக்குறளைச் செய்வாராயினர். இந் நூல் கூறும் பொருளை விதிமுகத்தாற் கூறுதலின் இலக்கணமும், இலக்கணங்க ளால் இந்நூற் பொருள் ஆராயப்படுதலால் இலக்கியமும் ஆகும். உரையாசிரிய ராகிய பரிமேலழகர் "அவற்றுள் வீடென்பது சிந்தையும் மொழியும் செல்லா நிலை மைத்தாகலின் துறவறமாகிய காரணவகையாற் கூறப்படுவதல்லது "இலக்கண வகையாற்" கூறப்படாமையின், நூல்களால் கூறப்படுவன ஏனைய மூன்றுமேயாம்" எனவும்," எடுத்துக்கொண்ட இலக்கியம் இனிது முடிதற்பொருட்டுக் கடவுள்வாழ்த் துக் கூறுகின்றுர்." எனவும் உரைப்பாயிரத்துள் உரைத்திருப்பது இதனை வலி யுறுத்தும்.

அறவொழுக்கங்கூறும் வடமொழி வேதங்களைப்பற்றி நச்சினுர்க்கினியர் உரைக்கு மிடத்து "இருக்கும், யசுரும், சாமமும் தலையாய வோத்து" இவை வேள்வி முத லியவற்றை விதித்தலின் இலக்கணமுமாம். வியாகரணத்தால் ஆராயப்படுதலின் இலக்கியமுமாம் என "அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்" என்ற சூத்திரத் துள் உரைத்திருப்பதும் ஈண்டுக் கருதத்தக்கதாம். தொல்காப்பியர் மக்களடை யும் உறுதிப்பொருள்களுள் அறத்தையும் பொருளையும் புறத்திணை யெனவும், இன்பத்தினை அகத்திணை யெனவும் பகுத்துத் தமது நூலுள் கூறியிருப்பவும், திரு வள்ளுவர் வடமொழியிற்போல தம் நூலை அறம் பொருள் இன்பமெனப் பகுத் திருத்தல் என்னையெனின்? உறுதிப்பொருள்களை அங்ஙனம் இரண்டாகப் பகுப்ப தன்றி அறம் பொருள் இன்பமெனப் பகுத்துக்கூறுதலும் தொல்காப்பியர் முத லிய பண்டைய தமிழ்ச் சான்றோர்கள் கருத்துமாதலின் இப்பொருட் பகுப்பும் தமிழ் நூல் மரபேயாகும்; வடநூல் முறையைப் பின்பற்றிய தன்றும் இதனை

"அந்நிலை மருங்கின் அறமுத லாகிய
மும்முதற் பொருட்கும் உரிய வென்ப"

என்ற சூத்திரத்தால் தொல்காப்பியர் நூலின் இப்பகுப்பு முறையைக் குறிப்பிட் டிருத்தல் கொண்டும், "சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும் அறத்து வழிப் படூஉம் தோற்றம்போல" என்ற புறப்பாட்டில் கூறுவது கொண்டும் உணரலாம்.

தொல்காப்பியர்," காமஞ்சான்ற கடைக்கோட் காலை "என்ற சூத்திரத்தாலும், அறுவகைப்பட்ட பார்ப்பனப்பக்கமும் என்ற சூத்திரத்தாலும் கூறிய பொருள்களையே திருவள்ளுவர், துறவறவியல் இல்லறவியல் என்னும் இருவியல்களாலும் விரித் துணர்த்துகின்றுர். "கொடி நிலை கந்தழி " என்னும் சூத்திரத்தால் தொல்காப்பிய ஞர் உணர்த்திய பொருளையே குறளாசிரியர் கடவுள் வாழ்த்து முதலிய பாயிர அதி காரங்களால் உணர்த்துகின்றுர். தொல்காப்பியனுர் வெட்சி முதலாக வாகையீறுக

உணர்த்திய அரசியலையே, செந்நாப்போதார் தம் தமிழ்மறையுள் பொருட்பாலில் அரசவியல் அங்கவியல்களுள் அமைத்துக்கூறுகின்றார். தொல்காப்பியனார் அகத்திணை இயல், களவியல், கற்பியல்களில் உணர்த்திய இன்பப் பகுதியினையே தெய்வப் புலமையாளர் காமத்துப்பாலில் தெளிவிக்கின்றார்.

திருவள்ளுவர் ஓராற்றான் இலக்கியமும், ஓராற்றான் இலக்கணமுமாகச் செய்த இந்நூலுள் புலவர்களேயன்றி ஏனைமக்களும் இதனை மேலும் மேலும் கற்க விழையவும் மறவாதுளங் கொள்ளவும் கருவியாகப் பல்வகைச் சொல்லணி, பொருளணிகளும், காப்பியச்சுவைகளும் ஆங்காங்கு அமையுமாறு இந்நூலை யாத்திருக்கும் திறன் மிகவும் போற்றுதற்குரியதாம். அத்திறனுள் சில காட்டுதும்:—"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய தூஉ மழை". இதுபோல கற்போருக்கு விநோதமும் இன்பமுமுறப் பல பாட்டுக்களில் சொற்பின் வருநிலை, பொருட்பின் வருநிலை ஆகிய சொல்லணிகளை அமைப்பர். எளியரென்று பலரோடு பகைகொள்வோன் தான் மிக்க ஆற்றலுடையவனேயாயினும் அப்பகைவர் ஒருங்குசேர்ந்தவழி வலியழிவான் என்னும் கருத்தினை, "பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம் சால மிகுத்துப் பெயின்" எனக்கூறியதுபோல் கருத்தினை ஒட்டணிபெற ஒட்டிவைப்பார். ஒரு தலைவியின் இடை நுண்மையை "அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு நல்ல படாஅ பறை" எனக் கூறியதுபோல் பலவிடங்களில் இலக்கணைக் குறிப்பால் பொருளுணர்த்துவர். சினத்தைச் சேர்ந்தாரைக் கொல்லியென்றும், அருளை அன்பின் குழவியென்றும், கண்ணோட்டத்தைக் கழிபெருங் காரிகையென்றும் கூறியதுபோல் பலவிடங்களில் பொருள்களை உருவகித்துக்கூறுவர். ஐம்பொறி அடக்கத்திற்கு ஆமை ஐந்துறுப்பு அடக்குதலையும் நிலையினிழிந்த மாந்தர்க்குத் தலையினிழிந்த மயிரினையும் ஆசிரியர் உவமித்துக்கூறிய அழகு கற்றோர் உள்ளத்தைப் பிணிப்பனவாகும். சிற்சில பாக்களில் புகழ்வார்போன்று பழித்து நகைச்சுவை ததும்பவைப்பர். "தேவ ரனையர் கயவர், அவரும்தாம் மேவன செய்தொழுகலான்" என்பது போன்ற குறள்களைக் காண்க. திருக்குறளுள் ஆசிரியர் அறத்துப்பால், பொருட்பால்களினும் காமத்துப்பாலிலேயே காப்பியச்சுவையைக் கவினுற அமைத்துள்ளார். அவற்றுள் ஒருசில தருவாம். தலைமகள் புலவிக்குறிப்பினைக் கண்ட தோழி, தலைவனைப் பார்த்து," இதற்குக் காரணம் யாது ?" என்று கேட்க, அதற்குத் தலைவன், "உலகத்துள் இன்பநுகரும் தலைவிதலைவர்கள் யாவரினும் யாம் மிக்க காதலுடையோம்" என்னும் கருத்துப்பட," யாரினும் யாம் காதலோம்" என்றேன். அதற்கு உன் தோழி அதனையறியாது "யாரினுமென்பதற்கு என்னால் காதலிக்கப்பட்ட வேறு பெண்கள் பலருள்ளும் உன்னிடத்திலேயே யான் மிகுந்த காதலுடையேன்" என்று சொன்னதாகக் கருதி, அம்மகளிர் எவரினும் என்னிடம் காதலுடையராயினீர் ? என்று புலந்துசொல்லி ஊடியுள்ளாள் என்று கூறிய கருத்துப்பட,

"யாரினுங் காதல மென்றேனா வூடினாள் யாரினும் யாரினு மென்று"

எனக் கூறியிருப்பது எத்துணை இன்பம் பயப்பதாய் இலங்குகின்றது.

தோழி தலைவியை நோக்கித் தலைவன் பிரிதற் குறிப்பு உணர்ந்தும் அவனோடு நீ ஊடல்கொள்ளாது இருப்பதற்குக் காரணம் யாது என்றதற்குத் தலைவி விடை

யிறுக்கின்றவள்—கண்ணில் மைதீட்டும் கோல் கண்ணினின்றும் விலகி யிருக்கும் போது நன்ருகக் கண்ணுக்குத் தெரிந்தும் மைதீட்டக் கண்ணை நெருங்குங்கால் அக் கோல் காணப்பெருதவாறுபோல் கணவனைக் காணுதபோது அவன் தவறெல்லாம் நிரம்பத் தெரிந்து, அவன் என்னிடம் சேர்ந்தவுடன் அத்தவறெல்லாம் காணுது போகின்றன எனக்கூறுகிறதாக அமைந்த

" எழுதுங்கால் கோல்காணுக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட இடத்து "

என்ற திருக்குறள் எத்துணை வியப்பும் நயப்பும் தருவதான உவமையணியுடன் திகழ்கின்றது.

இன்னும் தேவர்குறளில் இவைபோன்ற சிந்தைக்கினிய, செவிக்கினிய நயங்கள் அளப்பில ; அவற்றைக் கற்றுச் சுவைத்தின்புறல் மக்கள் கடனுகும்.

# கம்பரும் காப்பியச் சுவையும்

(திரு. E. S. வரதராஜய்யர், B. A.
அண்ணுமலைப் பல்கலைக்கழக ஆராய்ச்சித் துறை ஆசிரியர்)

ஒன்பான் சுவையும் ஒருங்கே அமையப்பெற்ற காப்பியங்களே சாலச் சிறந்தன என்று கூறுவர் பேரறிஞர். சுவை, மெய்ப்பாடு, குறிப்பு என்பன ஒரு பொருட் கிளவி. இதன் இலக்கணம் 2000 ஆண்டுகட்கு முன்னரே ஒல்காப் புகழுறும் தொல் காப்பியனுராற் செவ்வனே கூறப்பட்டுள்ளது. மெய்ப்பாடு பொருட்பாடு, இஃது எட்டு வகைப்படும். அவற்றுள் நகை, அவலம் என்ற இரண்டைமாத்திரம் எடுத்துக் கொண்டு அச்சுவைகளைப் பம்புபுகழ்க் கவிஞர் கம்பர் எவ்வாறு கூறியுள்ளார் என் பதை ஆராய்வதே இச்சிறு கட்டுரையின் நோக்கமாகும்.

மெய்ப்பாடு என்பது என்ன என்பதை முதற்கண் ஆராய்வோம். பேராசிரியர் தமது தொல்காப்பிய உரையில் " மெய்ப்பாடு என்பது உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோ ராற்றுன் வெளிப்படுதல் " என்று கூறினர். மற்றும் சுவைக்கப்படும் பொருளும், அதனை நுகர்ந்த பொறி யுணர்வும், அது மனத்துப்பட்டவழி உள்ளத்து நிகழும் குறிப்பும், குறிப்புக்கள் பிறந்த உள்ளத்தால் கண்ணீரரும்பலும், மெய்ம்மயிர் சிலிர்த்தலும் முதலாக உடம்பின் வரும் வேறுபாடாகிய சத்துவங்களும் இதில் அடங்கும் என்பர். நகை, அவலம் முதலாகிய உணர்வு முற்காலத்து உலகியலறிவா னெருவன் அவற்றுக்கு ஏதுவாகிய பொருள் பிறகண்டவழித் தோன்றிய பொறியுணர்வுகளே அவ்வச்சுவை யெனப்படும். உதாரணமாக வேம்பென்னும் பொருளும் நாவென் பொறியும் தலைப் பெய்துழியல்லது கைப்புச்சுவை பிறவாததுபோல அப்பொருள் கண்டவழி யல்லது நகையும் அச்சமும் தோன்று.

இம்முறையில் நகைச்சுவையை நோக்குவோம். நகை என்பது சிரிப்பு ; அது முறுவலித்து நகுதலும், அளவே சிரித்தலும், பெருகச் சிரித்தலும் என மூன் றென்ப. மேலும் அதுவே எள்ளல் இளமை பேதமை மடனென்று நான்கு வகைப் படும். இதன் உட்பிரிவுகளும் பலவுண்டு. கம்பர் இச்சுவையைக் கையாளு முறையை ஆராய்வோம்.

பஞ்சவடிக்கரையில் ஜனஸ்தானத்தில் சூர்ப்பணகை இராமபிரானை அணுகு கின்றுள். தனக்கியல்பான கோரவுருவை மாற்றிக் காமரூபியாகலின் ஓர் எழில் மிக்க பெண் உருவங்கொண்டு அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென நிற்கின் றுள். பெருமானது ஆடவர் பெண்மையை அவாவும் தோளிணையைக் கண்ணுறு

கின்றாள். காமவலைப்பட்டுத் தன்வயமிழந்து தவிக்கின்றாள். தன்னை யாழோர் மண முறையில் மணந்து தன் விரகத்தை ஆற்றுமாறு வேண்டுகின்றாள். இராமபிரான் மறுத்துக்கூறவே, அரக்கி தான் பேராற்றல் படைத்தவள் என்றும், தான் விழைந் தால் மூன்றுலகவாட்சியும் அளிக்கக்கூடும் என்றும், இரகுநந்தனனிடம் தன் பெருமையைப் பகர்கின்றாள். அவளது அறியாமையைக் கண்டு இராமபிரான், அவளைப் புகழ்வதுபோன்று,

"நிருதர் தமருளும் பெற்றேன் நின்னருள் பெற்றேனின்றே
டொருவரும் செல்வத்தாண்டு முறையவும் பெற்றேன் ஒன்றோ
திருநகர் தீர்ந்த பின்னர்ச் செய்தவம் பயந்த தென்னா
வரிசிலை வடித்த தோளான் வாளெயிறிலங்க நக்கான்" என்றான்.

தான் ஓரரசை நீத்துக் கானடைந்தபோதிலும் தனக்கு அவளது அருளால் மூன்றுலகவாட்சியும் கிட்டியதுகொண்டு மகிழ்வதாகவும், அவள் மூலமாக அரக்கர் அருளும், யாவற்றிற்கும் மேலாகக் கலங்காத வீரியன் ஆன இலங்காபுரி மன்னற் கிளையோளாகிய அவளது அருளும் கிட்டியது தனக்குப் பெரிய பேறென்றும் மொழி கின்றான். இங்கே அவளது பேதைமை காரணமாக, சானகி மணாளற்கண் நிகழ்ந்த நகையைக் காணலாம். இந்நிலையிற் சீதாபிராட்டியாரைக் கண்ணுறுகின்றாள். இராம னிடம் தான் கொண்டுள்ள காதற்கு அவள் பேரிடையூறுகும் என்று எண்ணி, அவளை ஓர் மாயப்பெண்ணென்றும், வஞ்சனையரக்கி என்றும், அவளைக் கண்டு தான் அஞ்சுவதாகவும் கூற, விநயமிக்க இராகவப்பெருமாள்,"கள்ள வல்லரக்கி போலாம் இவளை நீ காண்டியென்னா, ஒள்ளிய முறுவல் முத்தம் வெளிப்பட நக் கான்!" இவ்விடத்தும் அவளது பேதைமை காரணமாக நகை யெழுந்தது காண லாம்.

நிற்க, அநுமன் பிரமாத்திரத்தினாற் கட்டப்பட்டு, இலங்கை வேந்தன் முன்னர் இடப்படுகின்றான். இலங்கை மன்னன் அவனது வரலாற்றைக் கேட்க, அனைத்தும் அளவே மொழிகின்றான். அந்நிலையில், இராவணன் எயிற்றினம் எழிலிநாப்பண் மின்திரிந்தென்ன நக்கு, அநுமனை நோக்கி," வாலி வலியன் கொல் அரசின் வாழ்க்கை நன்றுகொல்" என்று வினவிய அளவில், நாயகன் தூதன் நகைத் தான். நகைத்து அரக்கனே அஞ்சாதே ; என்றைக்கு அயோத்திக்கிறையின் வாளி, " காரும் வார்சுவைக் கதலியின் கனியினைக் கழியச் சேரும் சூசிபோல்" வாலிதன் மார்பினை யூடுருவிச்சென்றதோ அன்றே, அப்பொழுதே அவன் உயிர் துறந்தான் என்றும், அவன் மீட்டும் வாரான் என்றும், ஒருவேளை அவனை (வாலியை) ஓர்காற் பிணித்துநின்ற வாலை விடுத்துச்சென்றானே என்ற கவலை வேண்டுவதில்லென்றும், ஊகம் இறந்தபொழுதே அதுவும் உடன் சென்றதென்றும் கூறினான். இங்கே இராவணனது நகை பெருமிதத்தான் எழுந்த நகை. அநுமன் நகையோ கடல்சூ ழிலங்கைக் காவலனது பேதைமையைக் கண்டெழுந்த எள்ளல் நகை என்ப துணரற்பாற்று. இனி வீரத்தெழுந்த வெகுளி நகையையும் இந்நகைச்சுவைப் பகுதியிலே யடக்கிக் கூறுவதும் உண்டு.

அங்கதன், சீதைமணாளனது ஏவலால் இராவணனிடம் தூது சென்றபோது, இலங்கேசன் அவனது வரலாற்றை வினவுகின்றான். பின்னர்த் தனது ஆருயிர் நண்ப

னை வாலிகாதலன் அவன் என்பதறிந்து, பெற்றதாதையைக்கொன்றவன் பின்னே சென்று அடிமை புரிந்து வாழ்தல் இழிவென்றும், அவனிசைந்தால் தானே அவனுக்கு மகுடம் சூட்டுவதாகவும் சொல்லத் தாரைதனயன்,

" தூதுவந் தரச தாள்கை
நீதரக் கொள்வேன் யானே யிதற்கினி நிகர்வே றெண்ணின்
நாய்தரக் கொள்ளும் சீயம் நல்லரசென்று நக்கான் "

இங்கே அங்கதன்பால் தோன்றிய நகை வீரத்தெழுந்த வெகுளி நகையாக இராவணனை யிகழ்ந்த தொன்றுகும்.

நிற்க, மாரீசன் வதைப் படலத்தில் இராவணனது பேரோலக்கம் வருணிக்கப் படுகிறது. பலரும் குழுமியுள்ளனர். அக்காலையில்,

" மின்னவிர் மணிமுடி விஞ்சை வேந்தர்கள், இன்ன போதிவ்
வழிநோக்குமென் றுணராராய்க் கரதலஞ் சுமந்த உச்சியராய்த் துன்னினர்"

என நகைச்சுவைபடக் கூறுவர் கல்வியிற் பெரியார். மணிமுடி யரக்கன் வகுத்த ஆணை கடத்தற் கரிதாகலானும், அவன் எச்சமயத்துத் தாமிருக்கும் இடத்துக் கண்களைச் செலுத்துவானே என்று ஒருதலையாக உணராமையின், வணங்கத் தவறினுலோ தாழ்த்தாலோ வரும் ஏதத்திற் கஞ்சிச் சென்னியிற் கூப்பிய கையராகவே திகழ்ந்தனர் என்று நகைச்சுவை ததும்ப நவின்றுசென்றனர். இவர்கள்போன்றே சித்தர்கள் பலர் செய்ததனையும் நோக்குவோம். இராவணன் தனக்குப் பணிமாறி நின்ற சேடியர்பால் ஏதோ சில மொழிகள் கூற, அவன் தமக்கு ஏதோ ஓர் ஆணை யிடுகின்றுன் என மாறுகக் கருதி, உடனே அவர் தங்கள் சென்னியைத் தாழ்த்து நின்றனர் என்பர். மற்றும் அவரை " அங்கையும் உள்ளமும் குவிந்த ஆக்கையர்" என்றும் மொழிவர். ஒரே வினைமுற்றைப் பயன்படுத்திக் கூறுவது நகையை விளைப்பதாகும். புறத்திலே காணப்படுகின்ற உறுப்பாகிய கைகள் மட்டும் குவியவில்லை, அவரது உள்ளமும் அச்சத்தாற் குறுகிக் குவிந்தது என்று கூறுவது போற்றற்பாலது. இவர்களை விடுத்துக் கின்னரரைக் கவனிப்போம். பிரதாப லங்கேசன் தன் அமைச்சர்களை நோக்கிச் சில இன்மொழிகளை இயம்ப, அவை இன்னவெனத் தெளியாதவராய் உள்ளம் நடுங்கி " என்னைகொல் பணியென இறைஞ்சினர், நெஞ்சினிற் பயங் கொண்டு " என்று நயம்பட மொழிவர். இத்தகைய நிகழ்ச்சிகளைக் கம்பநாடர் தாம் மிகுதியும் பழகியறிந்த சோழமன்னர்களின் நாளோலக்கங்களிற் கண்டு, அவற்றை உள்ளதுள்ளபடி தீட்டியிருப்பது அவரது நுண்மா ணுழைபுலத்தையும் உலகியல் அறிவையும் இனிது விளக்கும்.

நிற்க, கார்காலம் கழிந்தது. தன் மனையாளைத் தேடித்தருவதற்கான முயற்சியில் ஈடுபடாமற் காலம் தாழ்த்துச் செய்ந்நன்றி கொன்ற இரவிகாதலனைக் கொணர்க என வீராவேசம் கொண்டு இராகவன் கூற, இலக்குவன் புறப்பட்டுச் செல்கின்றுன். அக்காலையில் அவனது கோலாகலமான வரவைக்கண்டு சுக்கிரீவன் முதலியோர் அஞ்சி மலைக்குகைகளிற் பதுங்குகின்றனர். அஞ்சாத அநுமனும் எதிர்பட அஞ்சுகின்றுன். அப்பொழுது வேல்விழித் தாரை சில மகளிர் புடைசூழ வருகின்றுள்.

அவர்களைக்கண்ட இலக்குவன் நிலையைக் கவியரசர் சொற்கள்கொண்டே காண்போம். மைந்தன்,

"தாமரை வதனம் சாய்த்துத் தனுநெடுந் தரையினூன்றி
மாமியர் குழுவின் வந்தானுமென"

நின்றான். என்றவிடத்து நகைச்சுவை மிளிரக் காணலாம். மேலும் இங்கே இலக்குவனது பிறமகளிரை ஏறெடுத்துக்காணாத பிரமசரிய நிலையையும் காணலாம்.

இனி, ஏழிரண்டாண்டுகள் கானகத்திற் கழித்துப் பின் அயோத்திக்கு மீண்டு இராமபிரான் முடிசூட்டிக்கொள்கின்றான். அவனைப் பிரிந்து மனம் தளர்ந்தேங்கிய நகரமாந்தர் அளவுகடந்த உவகையினராய்த் தாம் செய்வதின்னதென் றுணராது தலைதடுமாற்றமாகச் செயல்புரிகின்றார். அச்செயலைக் கம்பர்,

"வேசிய ருடுத்த கூறை வேதியர் சுற்ற வெற்றிப்
பாசிழை மகளிராடை யந்தணர் பரிந்து சுற்ற"

என நகைச்சுவை தோன்றக் கூறுவர். அளவுமீறிய உவகையினர் ஒரு புடை கள்ளுண்டு களிப்பவரை யொப்பரன்றே.

இதுகாறும் நகைச்சுவைக்குச் சில உதாரணங்கள் தந்தோம். இனி அவலச் சுவையைக் கம்பன் வருணிக்கும் திறத்தை நோக்குவோம். எச்சுவையைப் பற்றிக் கூறினும், அச்சுவை படிப்போருள்ளத்தில் நன்கு பதிந்து, அவர்கட்கும் அந்த வந்த மெய்ப்பாடுகள் தோன்றுமாறு செய்பவரே பெருங்கவிஞர் ஆவர். நடிப்போன் ஒருவன் தான் நடித்துக்காட்டும் நிகழ்ச்சி பல ஆண்டுகட்குமுன் நிகழ்ந்திருப்பினும், அப்பொழுது நடந்ததுபோன்று நடித்துக்காட்டக் காண்பவர் உண்மை நிகழ்ச்சியைக் காண்பதாகவே எண்ணி நகைத்தும், அவலித்தும் நிற்பதை இன்றும் நாடகமேடையில் சிறந்த நடிகர் நடிக்கும்பொழுது காணலாம். நாடக நடிகரைப்போன்றே, காவிய ஆசிரியனும் இம்மெய்ப்பாடுகள் அமைய நன்கு மொழிவன். அவலச்சுவைப் பகுதிகள் சிலவற்றைக் காண்போம்.

இராமபிரான் எய்த வாளி தன் உடலிற்றைத்த அளவில் வாலி உயிர் துறந்து மலைபோல வீழ்ந்துகிடக்கின்றான். சுக்கிரீவன் கண்ணுறுகின்றான். மணம் வீசுகின்ற மாலையணிந்த மார்பனுன வாலியினது மார்பென்னும் மலையினின்றும் பெருக்கெடுத்து ஓசையுடன் இழியும் அருவிபோன்ற உதிரத்தாரையை நோக்குகின்றான். அவ்வளவில்

"உடன் பிறப்பென்னும் பாசத்தாற் பிணிப்புண்ட அத்தம்பியும்
நேசத்தாரைகள் வீழ நெடுநிலஞ் சேர்ந்தான்"

என்று கூறுவர் ஆசிரியர்.

இங்கே வாசத்தாரென்றது எதுபற்றி? போரின்கட் காயம்பட்டுப் பெருகிய குருதியில் தோய்ந்த மாலைக்கு நறுமணம் உண்டுகொல் எனச் சிலர் ஐயுறலாம். ஆனல் குட்டுப்பட்டாலும் மோதிரக்கையாற் குட்டுப்படவேண்டும் என்ற முதுமொழிக்கிணங்க இராமபிரான் கையினுல் மரணமெய்தி வீர சுவர்க்கம் புக்கவன் ஆதலின் அங்கே அரமகளிர் சூட்டும் மந்தார முதலிய மாலைவிசேடங்களால், அவன் மணம் வீசி நிற்பன் என்ருர், வாசத்தாரவன் என்ருர். அவன் மார்பை மலையாகவும் அதன் கண் ஓசையுடன் பெருகும் உதிரத்தை மலையருவியாகவும் உருவகித்துக் கூறியது அவலச்சுவையை மிகுத்துக்காட்டும். இங்கே உடன்பிறப்பாகிய பாசத்தையும், சுக்கிரீவனும் அப்பாசத்தைக் குட்பட்டவனே, விலக்கல்லன் என்றதையும் விளக்கி, அவன் அடைந்த அவலத்தை நன்கு கூறுவர் ஆசிரியர்." கடுத்த பகையும் கல்லறை கடவாது " என்பது முதுமொழி. "No enmity extends beyond the grave" என்பது ஆங்கிலப் பழமொழி. ஆகவே உலகியலை நன்கறிந்த கம்பர், சுக்கிரீவன் பெருக்கிய கண்ணீர்த்தாரையை உலகத்தாரை ஏமாற்றுதற்கு விடுத்த மோசத்தாரை யன்றென்றும் நேசத்தாரையேயென்றும் கூறினர். செய்யுளின் எதுகைமோனை யமைப்பினை நோக்கிடினும் நேசத்தாரையென்றே கொள்ளநேரும்." உடன்பிறப்பாற் ருேள் வலி போம் " என்பராதலின், வாலி பிரிவிற்குச் சுக்கிரீவன் பெரிதும் வருந்தினுன் எனக் கம்பர் கூறும் கூற்று அவலச்சுவையை நன்கு எடுத்துக்காட்டும்.

இனி, மாயாசனகப் படலத்தில், மருத்தன் என்னும் ஓரரக்கனைச் சனகனுக மாற்றி, அவனைப் பிராட்டிமுன்னர் நிறுத்திக் கொல்லப்புக்க அளவில், அஃது அரக்கர் மாயையென அறியாளாய்ப் பிராட்டி அவலித்து அழுதாள் என்ற வழிக் கம்பர்,

" மங்கை யழலும் வானுட்டு மயில்கள் அழுதார் "

என்று தொடங்கிப் பாடு கின்ருர்.

இங்கே மூவுலகத்துமுள்ள மங்கையரும், திருமகளின் அவதாரமும் தனது ஆருயிர்க்காதலன் ஆன வைகுண்டபதி தன் அருகில் இல்லாது அவமே கழிக்க நேரும் போதினையும், தான் எஞ்ஞான்றும் வீற்றிருக்கும் மலர்ப்போதினையும் ஒருங்கே வெறுத்து, அரசர் பொன்மனையிற் புக்கவளுமான, பிராட்டியாரது அழுகை கண்டு துன்புற்று அழுதார் எனக் கூறவந்தவர், அவர்கள் அழுததும் பெரிதன்று, சிலர் அழுகை யாவர் அழுகையையும் விஞ்சிநின்றது என்று கூறினர். அங்ஙனம் அழுதவர் யார் ? பிராட்டிக்கு மிகவும் நெருங்கின உறவினர்களா ? அவளது பிறந்த அகத்து உறவினரா, புக்ககத்துறவினரா ? என்ருல், அன்று. பின் யாவர் எனின், இலங்கேசனுல் சீதைக்குக் காவலாக அமர்த்தப்பட்ட அரக்கிமாரேயாவர். அவர்களோ எச்செயற்கும் இரங்காதவர். இரக்கமென்றெரு பொருளிலாத நெஞ்சினர். அவர்கள் அழுதார்கள். ஒப்புரவிற்காக அவலித்தாரோ இல்லை, இல்லை. இரங்காத அரக்கிமாரும் தளர்ந்தழுதார் என்று கவி கூறும்போது, அவலச்சுவையின் பேரெல்லையைக் காண்கின்ருேம்.

இனிப் பிறிதோரிடத்தை நோக்குவோம். இலக்குவன் ஏவிய வாளியால் இந்திரசித்து இறந்துகிடக்கின்ருன். அந்த அவசநிலையில் அவன் அன்னை மண்டோதரி மயங்கி அழுகின்ருள்.

"அம்புலி யம்ம வாவென் றழைத்தலு மவிர்வெண் டிங்கள்
இம்பர் வந்தானை யஞ்ச லென்றிரு கரத்தி னேந்தி
வம்புறு மறுவைப் பற்றி முயலென வாங்கும் வண்ணம்
என்பெருங் களிறே காண ஏசற்றேன் எழுந்தி ராயே"

என்று கூறுகின்றாள். சிறார்கள் உணவுண்ண மறுத்துப் பிடிவாதம் செய்வதுண்டு. அந்நிலையிற் றாய்மார்," மறப்புலி யுரைத்தும் மதியங் காட்டியும்" அவர்கட்குப் போனகம் ஊட்டுதல் பண்டைத்தமிழ் மரபு என்பதைக் கற்றோர் உணர்வர். அம்புலி காட்டுதல் என்ற வழக்கு இன்றும் தமிழ்நாட்டில் உண்டு. தாய்மார் "அம்புலி மானே வா" என்று கூறுவதும், பெரியோர் செய்கையைப் பின்பற்றிச் சிறுவர் செய்வது இயல்பாகலின், மழலைச் சிறுவரும் வாய்திறந்து வாவா என்று கூற, அப் பொழுது பொற்கிண்ணத்தில் உள்ள பாற்சோற்றைத் திறந்தவாயில் ஊட்டுவது மரபு. இம்மரபைப் பின்பற்றியேதான், பிற்காலத்துப் பிள்ளைத்தமிழிலும் அம்புலிப் பருவம் ஓர் பகுதியாக ஏற்பட்டது. இதன்படி, சாம, தான, பேத, தண்டம் என்ற வகையில், பாட்டுடைத்தலைவன் அல்லது தலைவியான சிறுவன் அல்லது சிறுமியுடன், வந்து விளையாடுமாறு அம்புலியை யழைப்பதாகச் செய்யுள் செய்வர் சிறந்த கவிகள் என்றும், பிள்ளைத்தமிழில் அப்பருவம் சிறந்த கற்பனைகள் அமையப் பாடப்பெறுவ தொன்றாகலின், சிறந்த கவிகளே அதனைத் திறம்படப் புனையமுடியும் என்றும் அறிஞர் அறைவர். இதுபற்றித்தான் "காசினியிற் பிள்ளைக் கவிக் கம்புலி புலியாம்" என்ற ஔவையார் வாக்கு ஏற்பட்டது.

நிற்க, மதியினிடமுள்ள மறுவை மானாகவும், முயலாகவும் கூறுவது மரபு. இந்திரசித்து என்ற மேகநாதன் சிறுகுழவியாயிருந்த காலத்து அவனது அன்னை யார், அவனைத் தன் ஒக்கலிலே வைத்துக்கொண்டு அம்புலி காட்டுகின்றாள். அப் பொழுது குழந்தை அம்புலியை விளையாட அழைக்கின்றான். ஏனைய குழந்தைகள் அழைத்து வாராமல் இருக்கலாம். சுரபதியாகிய ஆகண்டலனையே வெல்லும் ஆற் றல் படைத்த சிறுவன் அழைப்புக்கிணங்கிப் போகாவிடின் என்ன ஏதம் விளையுமோ என்று அஞ்சி, அம்புலி கீழிழிந்து வருகின்றான். உடனே குழந்தை, தன்முன் மெய்ந்நடுங்கி நின்ற விண்மதியைப் பார்த்து, அஞ்சாதேயென்று கூறி, மதியை இருகரத்தினேந்தி, அதில் உள்ள மறுவை முயல் என்று கருதித் தன் விளையாட் டுக்காக எடுத்துக்கொண்டான். இவ்வாறு அவன் புரிந்ததில் இருவர்க்கும் நன்மை யுண்டு என்பதைக் கவி நயமாக அமைத்துக்காட்டுவர். முயலை நீக்கிய அளவில் மதி களங்கமற்ற தாகிவிடுகிறது. குழந்தைக்கும் ஓர் விளையாட்டுப் பொருள் கிட்டு கின்றது. இந்தப் பண்டைய நிகழ்ச்சி மயன்மகள் நினைவில் எழ, அவள் ஆற்றொ ணாத் துயருடனே "களிறுபோல்வானே" அப்பொழுது, அதாவது உனது இளம் பிராயத்தில் நீ புரிந்தவண்ணம் இன்னும் ஓர் முறை புரியமாட்டாயா ? நான்காண மாட்டேனா ? என்ற சொற்கள் கன்னெஞ்சையும் கரையச்செய்யும் என்பது ஒருதலை.

மற்றும் மாற்றாந்தாயேவ இராமபிரான் இளையபெருமாளும் பிராட்டியும் பின் தொடர வனம் புகுந்தான். வான்மீகி இராமாயணத்தில், இராமன் வனம் புகும் போது தன் தந்தையிடம் விடையேற்றுச் செல்வதாகக் கூறப்பட்டது. கம்பர் சிறிது மாற்றிக் கூறுவது உலகியற்கு முற்றும் பொருந்தும் என்பது ஆராய்வார்க்கு நன்கு

புலனுகும். கேகயன் மகள் முன்பு நின்று " மின்னெளிர் கானமின்றே போகின்றேன் விடையுங்கொண்டேன் " என்று விடைபெற்று, இராமன் சுமந்திரன் தேர் செலுத்தச் சென்று கங்கைக்கரையை அடைகின்முன். புறப்படும்போது விடைபெறத் தன் தந்தையிடம் புகுவானுகில், இன்னும் சில நாழிகைகள் கழித்துப்பிரியும் அம் மகாரதனது ஆவி உடனே பிரியநேரும். ஆகவே கம்பர், அத்தகைய சந்தர்ப்பத்தை உண்டாக்கவில்லே. இந்நிலேயில் தயரதன் படுத்தபடுக்கையாக வேருேர் உரையுமின்றி " வீரன் வந்தனனே, வீரன் வந்தனனே " என்று விடாது மொழிகின்ருன். இன்ப துன்பங்களேச் சரிநிகராகக் கருதும் முக்காலமு முணரவல்ல வசிட்ட முனிவனும், அரசர்க்கரசன் படுகின்ற துயரத்தைக் காணமுடியாது வெளியேறுகின்ருன். அப்பொழுது சுமந்திரன் வந்துட்புகத் தயரதன் வாயினின்று எழும் சொற்கள் செவியிற்படுகின்றன. உடனே அவன் அதற்குத் தாம் அளிக்குமுறையாக " வேயுயர் கானம் தானுந் தம்பியும் மிதிலேப்பொன்னும், போயினன் என்ருன் என்ற போழ்தத்தே ஆவிபோனுன் " என்று கூறும் சொற்கள் எத்தகையோரையும் துன்பக்கண்ணீர் வீழ்க்குமாறு செய்யும் என்பதற்குத் தடையுமுண்டோ ?

பிறிதோர் நிகழ்ச்சியைக் கண்ணுறுவோம். வைதேகி கொண்கன் வனம் புக்க போது இயங்குதிணே நிலேத்திணேயாகிய பொருள்கள் யாவும் அழுதன. கிள்ளே யொடு பூவையழுத, கிளர்மாடத்துள்ளுறையும் பூசையழுத, உருவறியாப் பிள்ளே யழுத " என்று கூறிய கம்பர் " பெரியோரை யென்சொல்ல " என்று கூறித் துயர மிகுதியின் அளவுகடந்த தன்மையை அவலந்தோன்றக் கூறுவர். மற்றும் உலகியலில் பிரிந்தார்க்கிரங்கிக் கண்ணீர் பெருக்குவது வியப்பன்று. எனினும், பருவரல் இன்பம் என்ற இரண்டையும் ஒப்ப நோக்கிய பெருந்தவர் அருந்துயருழந்தார் என்று கூறும்போது, அவலச்சுவையின் பேரெல்லேயை நாம் உணர்கின்ருேம். துயரமே உழக்கவேண்டாத பெருந்தவர் சாதாரணத் துயரன்று, பெருந்துயருழந்தார் என்று கூறியது ஊன்றியாராயற்பாலது.

இறுதியாக ஓர் இடம் கூறி இச்சிறு கட்டுரையை முடிக்கலாம் என நினேக்கின்றேன். இராவணன் எழுநூறு யோசனே அகலமுள்ள இலங்கையரசன். அவன் நாட்டிற் கறங்கு கால்புகா கதிரவன் ஒளிபுகா. அவன் துன்பம் இன்னதென்றறியாதவன். அவன் மட்டுமா அவன் நாட்டிலேயே " களிக்கின்ருரலாற் கவல்கின்ருர் ஒருவரைக் காணேன் " என்று சிறிய திருவடி கூறியுள்ளான். ஆண்மையில் எவ்வகையிலும் இந்திரசித்திற்கு எள்ளளவும் குறையாதவனும்," பின்னெரிந்திர னிலாமையால் அதிகாயன் என்னும் பெயர் பூண்டவனும் ஆன அதிகாயன் இறந்து மலே போலக் கிடக்கின்ருன். இந்நிலேயிலும், இராவணன் கண்கலங்கினுன் எனக் கூறின் அவனது ஆண்மைக் கிழுக்காமென்று கருதி நமது கவியரசர் வெகுநயமாக "அதிகாயன் மருங்கு நின்று காட்டாதன காட்டிய தாதையைக் கண்ணிற் கண்டான் " இந்திரசித்து எனக் கூறுவர். இங்கே இதுகாறும் பிறர்க்குக் காட்டாம லிப்பொழுது காட்டியது இராவணன் கண்ணீர். இங்கே " கண்டனன் கற்பினிற் கனியைக் கண்களால் " என்ற இடத்திற்போல, இந்திரசித்து தன் கண்களால் கண்டான் என்று பொருள்படாது. இராவணனது நீர் பொதுளிய கண்களால் என்று பொருள்கோடலே நேர். முன் தொடரிலும், கற்பினுக்கனியை அவளது நீர் நிறைந்த கண்களேக் கொண்டே அறிந்தான் அநுமன் என்ப. இத்துணே ஆண்மையும் மனேதிடமும்

நிறைந்த இராவணன் தனது அருமை மகனும் தன்னிகரற்ற வீரனுமான இந்திர சித்தைப் போரில் இழந்து பரிதவிக்கு நிலை மிகவும் இரங்கத்தக்கதாக இருக்கும். அவனது பத்துத்தலையும் பத்து விதமாகப் புலம்பின என்று கூறுவர் புலவர். இப் பகுதியை அவனது பத்துத்தலைகளும் அவனது மகிழ்ச்சிக்காலத்தில் எவ்வெவ்வாறு கம்பீரமான தொழில்களைச் செய்தன என்று வருணிக்கப்பட்ட பகுதியோடு ஒப்பு நோக்கும்போது, அவலச்சுவை மிகப்பெருகிக் காணப்படும். " கூடினுர் முகக்களி நிரை யொருமுகம் குடிப்ப " எனத்தொடங்கும் சுந்தரகாண்டம் பிணிவீட்டுப் படலச் செய்யுட்களைக் கண்டு இவ்வுண்மை யுணர்க. இறந்த தன் மகனை நோக்கி அவன், திருமகளினும் பேரழகு வாய்ந்தவரான கந்தருவ மாதர்களும், சித்தமாதர்களும் பிறரும், தங்கள் கணவனைக் காட்டுமாறு வேண்டித் தன் அடியில் வீழ்ந்தால், அவர் கட்குத் தான் சொல்லும் ஆறுதல் யாது என்றும், தென்திசைக் கிழவனையும் ஆட்டி யலைத்த அவன், அப்பெண்டிரோடு பெண்ணுகக் கட்டியழுவதா என்றும் அவலித்து மொழிகின்றுன். இங்கே " அந்தொக்க அரற்றவோ " என்று கேட்கின்றுன். அந்து என்பது ஓசையிடக்கூட அறியாத ஓர் சிறு பூச்சி. இங்கே வாய்விட்டுக் கூவியழுதால் தனது பெருமைக்கிழுக்கு. துக்கமிகுந்த நிலையில் அழுகையும் சில சமயங்களில் வெளிவராது. தன்பொருட்டுத்தானே தன் மகன் உயிரிழக்க நேர்ந்தது என்று எண் ணும் தோறும் அவமானம் ஓர் புறம். இந்தத் துக்க நிலையில் அவன்,

" நேரிழை யொருத்தி நீரால்
எனக்குநீ செய்யத்தக்க கடனெலா மிரங்கி யேங்கி
உனக்குநான் செய்வ தானேன் "

என்று கூறுவதைக் கேட்ட எந்தக் கல்மனம்தான் பக்குவிடாது நிற்கும். இத்தகைய நிலையையே அவலத்தின் சிகரம் எனக் கொள்ளலாமன்றே ?

இவ்வாறு இன்னும் பல இடங்களில் பலதிறப்பட்ட சுவைகளைப் படிப்போர்க்கு மெய்ப்பாடு தோன்றுமாறு கூறுவர் கம்பர். அவைகளை ஆய்ந்து கற்றுல் கலைவிநோ தர்கட்குப் பெரும்பயனும் மகிழ்வும் உண்டாகும் என்பது நிச்சயம்.

# இருந்தமிழ்

(திரு. சிவக்கவிமணி. C. K. சுப்பிரமணிய முதலியார், B.A.,
வழக்கறிஞர், கோவை.)

## பெருமைப் பேச்சு

"தமிழ்" என்பது தமிழ் மொழி. "இரும்" என்னும் அடைமொழி பெருமை என்பதைக் குறிக்கும். இருநிலன்—இருங்கடல் என்பவைபோல. தமிழுக்குப் பெருமையாவது அதன் அளக்கவொண்ணுத பரப்பு, செறிவு, ஆழம் என்ற இவையுடைமையாம். பிறமொழிகளுக்கில்லாத சிறப்பியல்புகளுடைமையும் தமிழின் பெருமையினைக் காட்டுமென்பர். ஆசிரியர் எமது மாதவச் சிவஞான முனிவர் பெருமான் ற, ன, ழ, ஆய்தம், குற்றியலுகரம் குற்றியலிகரம் என்பனவாதி எழுத்துப் பாகுபாடுகளும், குறிப்பு வினை முதலிய சொற் பாகுபாடுகளும், அகம் புறம் என்னும் பொருட் பாகுபாடுகளும் முதலாயின தமிழுக்கே உள்ள சிறப்புக்கள் என்று காட்டியுள்ளார். கடவுளாற் படைக்கப்பட்டமையும் நிரம்பிய இலக்கண முடைமையும் தமிழின் பெருஞ்சிறப்பு என்றும் பெரியோர் கூறுவர். நின்று பயனின்மை முதலிய குற்றங்களின்றி எழுத்தும் சொல்லும் ஒத்தியலுதலும், சொல்லும் பொருளும் ஒத்தியலுதலும், வல்லோசைமிக்கு நிகழும் பிறமொழிகள் போலல்லாது மெல்லோசை இடைஓசை விரவி நிகழ்வதனுல் மூச்சுச் செலவு மிகாகாதும், நெஞ்சுரம் கெடாதும் ஒலித்தலால் தமிழ்மொழி தன்னைப் பேசுவோர்க்கு நீண்ட ஆயுள் தருதலும், மற்றும் இவைபோல்வன தமிழுக்குப் பெருமையாவன என்று சில ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். "நீண்ட தமிழா லுலகை நேமியி னளந்தான்" என்று கூறியவிடத்துத் தமிழுக்குப் பெருமையாவது உலகை அளந்து காட்டுவதற்குக் கருவியாயிருத்தல் தமிழின் பெருமையாகும் என்று அறுதியிட்டனர் கம்பநாடார். "ஞாலமளந்த மேன்மைத் தெய்வத்தமிழ்" என்ற ஆசிரியர் சேக்கிழார் பெருமானது திருவாக்கின் ஒரு பகுதியை மேற்கொண்டெழுந்தது முன்கூறிய கம்பர் பாட்டு; உலகை அளத்தலாவது உயிர்ப்பொருள் உயிரில் பொருள் என்றும், அறிவுடைப் பொருள் அறிவில் பொருள் என்றும் வகுத்துக் கூறப்படும் உலகத்தை அகம் புறமென்னும் பாகுபாட்டால் வகுத்து இலக்கண வரையறுத்த தமிழின் பெருமை என்று கூறுவர்.

இன்னும் பச்சைப் பசுந்தமிழ், கன்னித் தண்தமிழ், பைந்தமிழ், இன்றமிழ், தீந்தமிழ் என்றெல்லாம் எத்தனையோ அருமைப்பாடுகள் குறிக்கும் அடைமொழிகளைத் தந்து அவ்வப்பெருமைகள்பற்றி விரித்துப் பேசுவர் புலவர் பெருமக்கள்.

## சிறுமைப்பேச்சு

இவை ஒருபுறமிருக்கத் தமிழ் ஒரு தனிமொழியாகுமா ? "ஐந்தெழுத்தா லொரு பாடையென் றறையவும் நாணுவ ரறிவுடையோரே" என்ற புலவருமுண்டு. தமிழில் வேண்டா எழுத்துக்கள் பலவுண்டு ; அவற்றைக் களைந்தெறிந்து சுருக்கி அமைக்கவேண்டும் ; ஆங்கிலம்போல எல்லாவகையாலும் விரிந்த பெரியதோர் மொழி உலகில் வேறில்லை; அதற்கு 26 எழுத்துக்களே இருக்க, மிகச்சுருங்கிய இலக் கியப்பரப்பும் பேசுவோர் தொகையும் உள்ள தமிழில் 216 எழுத்துக்கள் எதற்கு? என்று வினவுவோர்களும் உண்டு. தமிழின் வரிவடிவம் எழுத்துக்களின் அமைப்பு இக்காலத்துக்குதவாத அனேகம் குறைபாடுகளை யுடையது, அதனைக் காலநிலைக்கேற்ற படி திருத்திச் சுருக்கித் தலையுங் காலும் கையுமாகக் கண்டித்துத் துண்டித்து அமைக்கவேண்டும் என்னும் ஆராய்ச்சியாளருமுண்டு. இவர்கள் இக்கொள்கைகளை நடவடிக்கையிலும் கொண்டுவந்து எழுத்து வடிவங்களைப் பலபடியாக மாறுபாடு களும் நிலைகுலைவுகளும் செய்து பத்திரிகைகள் நூல்கள் முதலியவற்றை வெளி யிட்டும் வருகிறார்கள். இது நாளடைவிற் பரவித் தமிழின் பழைய எழுத்துக்களின் வரிவடிவுநிலையைக் குலைத்துவிடுமாயின் முன்னை நாளில் அழிவுகளினின்றும் மீந்து நமக்குக் கிடைத்துள்ள ஒருசில பழந்தமிழ் நூல்களையும் பின்னுள் வருவார் படிக்க இயலாமையின் அவையெல்லாம் ஒருங்கே பயனற்று ஒழிந்துவிடும் என்பதற் கைய முண்டோ ? ஒருசில தமிழ் நூல்களை எரியிலிட்டெரிக்கவேண்டும் என்று கூவும் தீயோரினும் (தீயோர்=தீயினைக் கொள்வோர் என்பது பொருள்) இவர்கள் மிக வும் தீயோர் (கேடுசூழ்வோர் என்பது பொருள்) என்பதே தகுதியாகும். இனி, தமிழில் என்ன இருக்கிறது ? விடிந்து எழுந்தால் இராமாயணமும் பாரதமும் புராணங்களும்தான் ; இவை தவிர்ந்தால் உலகை வெறுக்கும் உதவாக்கரை நீதி நூல்களும்தான் ; இவையன்றி வேறுண்டோ ? இந்நாளுலகுக்கு வேண்டுபவை என்ன உண்டு என்று நிமிர்ந்து அறைகூவும் புதியர்களு முண்டு.

## கலப்புப் பேச்சு

இவை நிற்க, தமிழ்ப் பெருமைகளுள் தனித்தமிழ் என்பதொன்று என்று பெருமிதங்கொள்ளுவர் புலவோர் பலர். தமிழில் பேச்சு வழக்கிலும் எழுத்துவழக் கிலும் வடமொழிக் கலப்பு என்பதே கூடாது. தமிழ் தனித்தியங்க வல்லது ; வட மொழிக் கலப்பு அதனைக் குறைவுபடுத்தி அடிமைத்தன்மைக் குட்புகுத்தியது ; நமது முன்னோர்களும் அறியாது அதற்கு இலக்காயினர் என்பன வாதியாகக் கூறு வதும் நிகழ்வதும் இவர்களின் ஒழுகலாறு. மக்களுக்கு இட்டு வழங்கும் பெயர்களைக் கூட இன்னார்கள் மொழிபெயர்த்து வழங்குவர். இவ்வாறு தனித்துநின்று நிகழ் வதே தமிழன் பெருமையும் தகுதியுமா மென்பது இவர்தம் கொள்கை. இதற்கு மாறாகக் கூறுவோர் கூற்றுவது : உலகில் உயிர்ப் பொருள் எதுவும் பிறவற்றின் கலப்பின்றித் தனித்து வாழ இயலாது ; பிறவற்றினின்று தான் பெற்று வளர்த லும், தன்னுடையனவற்றைப் பிறவற்றுக்குத் தந்து வாழவைத்தலும்தான் உயிர்களின் உலகவாழ்க்கை யியல்பு. உயிரில்லாததுதான் தனித்து நிற்கும். இத் தன்மை எல்லா மொழிகளுக்கும் ஒக்கும். தமிழ்மொழி உயிருடன் கூடியது ; வள ரும் இயல்புடையது ; ஆதலின் தன் மொழிகளை உடன் வாழும் பிறவற்றுக்குத்

தரும் ; தானும் உடன் உள்ள பிறமொழிகளைக் கைக்கொள்ளும்." பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல" என்றார் இலக்கண நூலோர் ; இன்னும் சிலர் அதனோடமையாது " பழையன கழித்தலும் புதியன புகுத்தலும் " என்றார். இவ்வாறு கொண்டும் கொடுத்தும் தன்னிலை திரியாது வளர்ந்து வாழ்வதே தமிழின் பெருமை என்பது இவர்கள் கருத்து. வடமொழிச் சொற்களையே தமிழில் கொண்டு தொடர்புபடுத்தி உரையிலும் செய்யுளிலும் வழங்குவது பெருமை என்று கொண்ட காலமும் உண்டு.

## உண்மைப் பேச்சு

இனி, இவை யெல்லாம் நிற்க, அடியேன் இங்கு " இருந்தமிழ் " என்னும் தலைப்பில் பேச எடுத்துக்கொண்ட பொருள்கள் வேறு ; அவற்றை "ஞாலமளந்த மேன்மைத் தெய்வத்தமிழ் " என்று கூறிய இடத்தில் ஒருவாறு குறிப்பிட்டேன். ஞாலத்தை அளத்தலாவது உலகம் இன்ன நிலைமை யுடையது என்று அறுதியிடுதல். உலகம் முதலியவை அனுபவிக்கப்படும் பொருள்கள் என்றும், அவற்றை அனுபவிப்பவை உயிர்கள் என்றும், உலகங்களை உண்டாக்கி அவ்வனுபவங்களை ஊட்டுவிப்பவன் இறை என்றும் அளந்துகாட்டுதல் என்பதே தமிழின் உண்மை யியல்பு. இவற்றை எல்லா மொழிகளும் தத்தம் அளவில் பேசுவனதாமே ! எனில் அற்றன்று. அவற்றைத் தமிழ்மொழி அறிவிக்கும் நிலை வேறு. தமிழ்மொழியின் எழுத்துக்கள் " உயிர்-மெய் " எனப் பெயர்பெறுவன." உயிரும் உடம்புமா முப்பது முதலே;" எனவே உயிர் வேறு உடம்பு வேறு; உடம்பின் உயிர் வந்து ஒன்றுவது-பொருந்துவது. பெயர்-வினை என்னும் சொற் பாகுபாடுதானும் ஒரு பெரிய உண்மையை விளக்கி நிற்கின்றது. எழுத்துக்கள் ஒன்றும் பலவும் சேர்ந்து பொருளைக் குறிக்கும்போது " பெயர் " என்ற பெயர்பெறும். அது " வினை " யினை ஏற்கும். வினைகொடு முடியும். "வினை" என்பது ஞான நூல்களுள்ளே "கன்மம்" என்று பேசப்படும். தமிழ் மொழியில் "வினை யெச்சம்" என்பதொன்றுண்டு. அதுதான் வினைமுற்றுடன் கூடி முடிவுபெறும். வினைமுற்றுப்பெறும்வரை எஞ்சிய வினை பெயர்ப்பொருளை முடிவுபெற விடாது தடுத்து நிற்கும். இதனை மெய்கண்ட ஞான நூன் முடிவுகளுடன் வைத்து உற்றுநோக்கின் பல உண்மைகள் விளங்குவன. இனி, இந்தச் சொற்களினுல் பெறப்படும் பொருள்கள் " அகம் " என்றும் " புறம் " என்றும் இருவகைப் பொருள் நிலைகளை உடையது எனக் காண்பது தமிழ்மொழி யிலக்கணம். ஞான நூல் முடிவுகொள்வதும் " அகத்தும் புறத்தும் " அழுந்த நோக்கி யறியத்தக்கது உண்மைப் பொருளின்முடிபு என்பதுதான். இங்குக் கூறியன ஒருசில உதராணங்களேயாம். இவ்வாறே தமிழ்மொழியின் இலக்கண அமைதியே உண்மை ஞான நூல்களின் தத்துவமுடிபுகளைக் காட்டிநிற்கும் இந் நிலை வேறெம்மொழியினும் அமையவில்லை என்பது அறிஞர் துணிபு.

மேலே கண்ட கருத்துங்கண்ணுமாக நோக்கும்போது," தமிழ் " இருவகைப் படும். இவை தன்னைப் பயில்வோர்களை உண்மை நூலுணர்ச்சியிற் செலுத்தி " உருவாக்கும் தமிழ் " என்றும், அவ்வாறு " உருப்படாத தமிழ் " என்றும் ஆம். தமிழின் இயல்பினை உண்மையாக ஊன்றிப் பயின்றவன் உடம்பினும் உயிரின் ஏற்றத்தை அறிவான். அப்பொழுதே உயிரின் வினையெச்சம்-முற்றுக்களை அறிவான் ;

அதுபோழ்தே அதன் உடனுக உயிரின் குறைபாடுகளேயும் பொருள்வகையில் வைத்து அறிவான் ; அதனுல் அக்குறைவுகளே நிறைவாக்கும் இறைவனேயும் அறிந்து இறைவனுக்கு ஆட்பட்டு உய்திபெறுவான். இவ்வாறு தமிழின் உண்மையியல்பினே ஊன்றி யறியாது தமிழ் படித்தவன் உயிரில்லாத வெறுந்தமிழ் மட்டில் அறிந் தவனுய்த் தானும் கெட்டுத் தன் சார்பில்வரும் பிறரையும் கெடுத்துக் கேடுறுவன். ஆகையினுல் அத்தகைய வெறுந்தமிழினுல் துன்பம் நேரிடுவதனுல் அஃதழிக்கத் தகுந்தது என்று அறிவோர் துணிகுவர். இக்கருத்தினேயே திருநாவுக்கரசுநாயனுர் "வாயிருந் தமிழே படித்தாளுரு, ஆயிரஞ் சமணுமழிவாக்கினுன்" என்றருளி யுள்ளார். சமணர்கள் தமிழ் படித்தவர்கள். நல்ல தமிழ் படித்தவர்கள். கலே ஞானம் வல்லவர்கள் ; அவர்களது சங்கத்தமிழ், தூய தமிழ், தனித் தமிழ் என் றெல்லாம் பேசப்படும் பெருமை உடையதுதான் ; ஆனுல் இறைவருக்கு ஆட்படுத் தும் தன்மை யில்லாததனுல் அது வெறும் தமிழ் எனப்பட்டு அழிவாக்கப்படும் நிலேபெற்றது-ஏனெனில் அவர்கள் படித்த தமிழ் உண்மை நிலே உணர்ச்சி தந்தி ருக்குமாயின் திருப்பழயாறை வடதளியின் சிவனுரை மறைத்து, அந்த விமானத்தை மாற்றித் தங்களுடைய பொய்கொள் விமானமாக ஆக்கி வஞ்சனே செய்திருக்க மாட்டார்கள். அதுபற்றியே முன்கூறிய அரசுகள் திருவாக்கும் நிகழ்ந்தது. அதனே உணர்ந்த அரசன் அந்த ஆயிரஞ் சமணர்களேயும் தூராறுத்து அழித்து ஒட்டினுன். எனவே "இருந்தமிழ்" என்பது இறைவருக்கு ஆட்படுத்தும் தமிழ் என்றும், அவ் வாறு ஆட்படுத்தாத ஏனைய தமிழ்கள் எத்தகைய சிறப்புக்களே உடையனவேனும் அவையெல்லாம் அழியத்தக்க வெறுந்தமிழ் என்றும் அறிந்து நற்றமிழ் பயின் றுய்வு பெறுதலே தமிழர் கடமையாகும்.

# இலக்கிய ஓவியங்கள்—முத்தொள்ளாயிரம்

(திரு. புலவர். சரவண. ஆறுமுக முதலியார், M.A., B.O.L., L.T.,
தமிழ்ப் பேராசிரியர், ஆசிரியர் கல்லூரி, சென்னை)

## அறிவின்பம்

இப்பரந்த நிலவுலகின்கண் விளங்கும் உயிர் இனங்கள் அனைத்தினும், பகுத்தறிவு படைத்த மனித இனமே தலைசிறந்து விளங்குகிறது. ஏனைய உயிரினங்களுக்கில்லாத " மனமும் அறிவு விளக்கமும் " மனிதனுக் கிருப்பதே மக்களை விலங்குகளினின்றும் வேறு பிரித்தறிவதற்கு உரியதாயிருக்கின்றது. இது பற்றியே " மாவும் மாக்களும் ஐயறிவினவே " என்றும் " மக்கள் தாமே ஆறறி வுயிரே " என்றும் ஒல்காப் புலமைத் தொல்காப்பியனர் மக்களின் இலக்கணம் வகுத்தார்.

இங்ஙனம் அறிவு விளக்கம் பெற்ற மனிதன், ஏனைய உயிர்கள் நுகரும் ஐம்புல இன்பத்தைவிடச் சிறந்ததும், என்றும் அழிதலில்லாததும், மேலும் மேலும் நுகரவேண்டும் என்னும் ஓர் ஆர்வத்தினை ஊட்டவல்லதும் ஆகிய ஓர் அறிவின்பத்தை மனத்தால் நுகரமுடிகிறது. அத்தகைய ஓர் இன்பத்தை இலக்கியச்சுவையிலீடுபடுவதால் நுகரலாம். இலக்கியத்திற் சிறந்த உயர்நிலைப் பகுதியாகிய கவிதையிலிருந்து நுகரும் இன்பத்தைப்போன்ற இன்பம் வேறு எங்கும் இல்லையென்று சொல்லலாம். இலக்கிய நயமுணர்ந்து சுவைத்து இன்புறும் நோக்கமே இலக்கியப் பயிற்சியின் தலையாய நோக்கமும் பயனுமாகுமென்பர் இலக்கிய ஆராய்ச்சியாளர்.

உயர்ந்த ஆசிரியர்களால் எழுதப்பட்ட நூல்கள் " தொட்டனைத் தூறும் மணற்கேணி " போல் இன்பமூறும் ஊற்றுக்களாம் ; இலக்கியங்கள் நம் முன்னோர்களாகிய தெய்வப்புலமைச் சான்றோர்கள் தம் வாழ்நாட்களில் கண்டறிந்து வைத்த உண்மைகளாகிய விலைமதிக்கவொண்ணு மணிகள் நிரப்பி வைத்திருக்கிற பொற்பேழைகளாம். இப்புலவர்கள் தம் வாழ்க்கை நுகர்வுகளிலிருந்தும், பட்டு அறிந்தவற்றிலிருந்தும் எழும் உணர்ச்சிகளையும், உயர் கருத்துக்களையும், ஓசையினிமை, சொல்நயம், பொருள்நயம் முதலியவற்றோடு வெளிப்படுத்துவது செய்யுளாகும். ஒன்பான்சுவைகளை ஒருங்கேயமைத்து, பத்துவித அழகுகளும் பாங்குடன்பொருந்த, மனம் ஈடுபடுவதற்குரிய பொருளினிமை, சுருக்கம், செறிவு முதலியன விளக்கமுறுவது செய்யுளிலேயாம்.

## சொல்லோவியங்கள்

தமிழில் எழுந்த பண்டைய புலவர்களின் வாக்குக்களில், சிறப்பாகச் சங்ககாலச் சான்றோர் செய்யுட்களில், அவ்வச்செய்யுள் எழுந்த காலத்தில் வாழ்ந்த மக்களின்

பழக்கவழக்கங்கள், நடை, உடை, எண்ணங்கள், அவ்வந்நிலத்துத் தெய்வம், உணவுப்பொருள்கள், விலங்குகள், மரங்கள், பறவைகள், பறை, தொழில், யாழ், ஊர்கள், நீர்நிலைகள், பூக்கள், செடிகொடிகள், மரங்கள் முதலியவற்றேடு அந் நிலத்திற்குரிய மாந்தரின் ஒழுக்க நிலை, நாகரீகம், பண்பாடு முதலிய வாழ்க்கை நிலை அனைத்தையும் நாம் கண்டுகளிக்கலாகும். ஒரு களங்கமற்ற நீர்நிலையானது தன் கரை மருங்கிலுள்ள செடிகொடிகள், மரங்கள் முதலியவற்றைத் திரைச்சீலை யில் தீட்டிய ஓவியம் என்ன எடுத்துக்காட்டுவதுபோல், இப்புலவர்களின் செய்யுட் களும், புனைந்துரைகளும் உயர்வு நவிற்சிகளுமின்றி உள்ளதை உள்ளவாறே எடுத் துரைக்கின்றன. இயற்கை அமைப்புக்களையும், இயற்கைப் பொருள்களையும் இவர்கள் நுனித்து நோக்குகின்றுர்கள். இன்னும் மக்கள் இயற்கையையும், அவர்களின் பல இயல்புகளையும் ஆராய்ந்து அதன் பயனுய்த் தோன்றி எழும் உணர்ச்சிகளையும், மன வெழுச்சிகளையும், இன்ன நடையில் இன்ன சொற்களில் எழுதவேண்டும் என்னும் முன்னெண்ணம் இல்லாமலேயே அவர்களின் கருத்துக்கள் அவர்களை அறியாம லேயே வெளிப்படவேண்டிப் பிறிட்டுக்கொண்டு புறப்பட அவற்றைக் குறிக்குஞ் சொற் களும், தொடர்களும், அணிகளும் தாமே வந்தடைந்து நிற்க, அவர்கள் பாடு கிறுர்கள்.

இயற்கையின் எழிலையும், அழகையும், உண்மையையும், ஆங்காங்குத் திரிந்து நேரிற்கண்டு இப்புலவர் பெருங்களிப்பும் பெருகிய மனவெழுச்சியும் உடையவராய், வலியும் வருத்தமுமின்றி, பொருள்களுக்கு ஏற்ற சொற்கள் தாமே வந்தடையப் பாடினராதலின், இவற்றில் அமைந்த சொற்றொடர்கள், பொருள்களைத் தாம் நேரிற் கண்டுகளிப்பதுபோன்ற சொல்லோவியங்களாகத் திகழ்கின்றன.

சிறந்த புலவர்களின் செய்யுட்கள் வாழ்க்கையின் இயல்புகளை எடுத்துக்கூறு வதில் " ஒரு தனி அழகுண்டு." வாழ்க்கையின் அழகையும் உண்மையையும் அவர் கள் கற்பனைக்கண் கொண்டும் பார்க்கின்றனர். அவற்றைச் செய்யுளில் புதிய ஒரு கவினுறு கவிதையாக வகுக்கின்றனர். இவற்றைத்தான் " ஆக்கல் " அல்லது " படைத்தல் " என்பர். இவற்றைப் படிப்போருக்கும் ஒரு சிறந்த மனக்காட்சியாக வாழ்க்கைச் செயல்களும் நிகழ்ச்சிகளும் காட்சி அளிக்கின்றன. இத்தகைய கவிதை களைப் படித்து, அவற்றில் இலைமறை காய்களாகச் செறிந்துகிடக்கும் பொருள்நயங் களையும், அவற்றின் வெளித்தோற்றங்களாய சொல்நயங்களையுங் கண்டுணர்ந்து, சுவைத்து இன்புறுதலே கல்வியின் மிகச்சிறந்த நோக்கமாகும்.

## கவியமுதம்

உலகத்து நாம் பல்வேறு மக்களோடு பழகும்போதும், வயிற்றுப்பிழைப்புக் காகப் பலதுறைகளிலும் கிடந்துழன்று, ஓடி, ஆடித்திரிந்து உழைத்து, அலுத்துப் போகும்போதும் தோன்றக்கூடிய வெறுப்பையும் சலிப்பையும் போக்கவல்லன இலக்கியங்களே. சிற்றினம் சேரல், மடி, வீண் காலப்போக்கு, பயனில் கருத்தை யும் சொல்லையும் பாராட்டுதல் முதலிய பல குறைகளைப்போக்கி, பெரியோர் தொடர்பு, முயற்சி, காலத்தை நல்வழிகளிற் செலவிடல், பயனுள்ள கருத்தையும்

சொல்லேயும் பாராட்டுதல் முதலிய பலநிறைவுகளே அவற்றினிடத்தில் நிறுவவல்லது இலக்கியப் படிப்பு. இது பரந்த அறிவையும், விரிந்த நோக்கத்தையும் நல்கும். வாய் ஆருக, வயிறு களனுக உணரப்படும் வாய்ச்சுவையோ, சிறிதுநேரமே நிலேத்து நின்று, பிறகு மறைந்தொழிவதோடு, தெவிட்டும் தன்மையும் வாய்ந்தது ; அள வுக்கு விஞ்சினல் நோய்க்கு இடந்தரும். ஆனல், செவி ஆருகச் சிந்தைக் களனு கச் சென்று உணரப்படும் கவிச்சுவையோ எனின் தெவிட்டாத தெள்ளமுதமாய், மேலும் மேலும் வளர்ந்து, நினேக்கும்போதெல்லாம் புதிய இன்பம் பயப்பதாய், என்றும் நம்முள்ளத்தை இன்பத்தில் ஆழ்த்த வல்லதாயிருக்கிறது. "கவிப்பா அமுதம் இசையின் கறியோடு கண்ணறக்குண்ணக் குவிப்பான்" என்ற அடியில் கம்பர்பெருமானும், கவிப்பா இன்ப அமிழ்தமாகுமாற்றைச் சுருங்கச்சொல்லி விளங்க வைத்தமை காண்க. செய்யுட் சுவையில் இன்புறும் ஒருவர், எவ்வளவில் அதில் ஈடுபடற்குரியர் என்பதை, கவியோடு ஊனும் உயிரும் ஒன்றிக் கலந்த அந்நிலேயை,

"வான்கலந்த மாணிக்க
வாசகநின் வாசகத்தை

நான்கலந்து பாடுங்கால்
நற்கருப்பஞ் சாற்றினிலே

தேன்கலந்து பால்கலந்து
செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்

ஊன்கலந்து உயிர்கலந்து
உவட்டாமல் இனிப்பதுவே"

என்னும் இராமலிங்க அடிகளது தீஞ்சுவைப்பாடலே தெளிவாய் உரைக்கவல்லது.

கவி நயத்திலேயே ஆழ்ந்து அமிழ்ந்த வள்ளுவனுரும், பண்புடையார் தொடர்பு பயில்தொறும் இன்பம் மிகுவதை விளக்க,"நவில்தொறும் நூல் நயம்போலும்" என்னும் சிறந்த உவமையை வழங்கியுள்ளார்."செவியிற் சுவையுணரா, வாயுணர் வின் மாக்கள், அவியினும் வாழினும் என்," "செவிக்குணவில்லாத பொழுது சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்," என்னும் குறள்களில் செவிச்சுவை மக்களின் பிறப்புரிமையாகும் என்றும், அஃதிலார் மக்கள் பிறப்பினரே ஆயினும், மாக்களே யாவார் என்றும் அவர் கூறுவன காண்க. சுருங்கக்கூறின், பசி, நீர் வேட்கை, அவலக்கவலே, முதுமை, தளர்ச்சி முதலியவற்றைப் போக்கி, மட்டில்லா மகிழ்ச்சி யைத் தந்து, என்றும் இளமையராக்கவல்லது இவ்வின்பம்.

இத்தகைய இன்பத்தைச் சிறந்த செந்தமிழ்க் கவிதையாகிய முத்தொள்ளா யிரத்தில் வரும் மூன்று "ஓவியங்களி" லிருந்து செவிமடுத்து மகிழ்வோம். முத லில் பாண்டியனது போர்க்களச் சிறப்பியல்பைப் படம்பிடித்துக் காட்டும் ஒரு காட்சிக் குப் போவோம்.

## கண் புதைத்தல்

பாண்டியனது படைகளும், மாற்ருரது சேனைகளும் போர்க்களத் தெதிர்த்தன. யானைப்படை, யானைப்படையோடு பொருதது. காலாட்கள் காலாட்களைத் தாக்கினர். எதிரியின் சார்பில் கணக்கற்ற போர்வீரர் விண்ணுலகெய்தினர். தம் காதலர் போரிற் பொன்றினர் என்று கேள்வியுற்ற அவர்தம் மனைவிமாராகிய வீரப்பெண்டிர் போர்க் களம் புக்கு, "இனி உயிர் வாழோம்" என்று உறுதிகொண்டு தீ வளர்த்து அதிற் புகுந்தனர். இச்சமயத்து, வேப்பந்தார் புரளும் பாண்டியன், களிறேறிப் போர்க் களம் பார்க்கப்புறப்பட்டான். அவன் அப்போது கண்ட காட்சி—பெண்டிர் தீப்பாயும் காட்சி—பொறுக்கலாற்ருத அக்காட்சி—அவன் உள்ளத்தைப் பிடித்து அறுத்தது. அதற்குமேலும் அதைக் காணப்பொருத மாறன் தன் மேலாடையின் முந்தானை யில், தன் கண்களைப் புதைத்துக்கொண்டான். கண்களினின்றும் வழிந்தோடிய நீரையும் அப்படியே துடைத்துக்கொண்டு மிருக்கலாம். புலவர் தீட்டிய இச்சொல் ஓவியம் ஒரு காட்சியாக நம் உள்ளத்திரையில் படிகின்றது. இதை ஓவியமாகவும் மாணவர்கள் தீட்டி மகிழலாம். இதோ இருக்கிறது அக்காட்சிப் பகுதி.

" ஏனைய பெண்டிர் எரிமூழ்கக் கண்டுதன்
தானையாற் கண்புதைத்தான் தார்வழுதி."

என்பது அது. இனி இக்காட்சியின் மற்ருெரு பகுதியும் பார்க்கத்தகுந்தது. அரச னது துயரம், அவனேடு விட்டபாடில்லை; அஃறிணைப் பொருளாகிய யானையையும் பற்றியதாம். களிற்றியானையின் செய்தி என்ன ? அரசன் ஏறிவந்த களிறும் பிற களிறுகளும் போர்க்களத்தைப் பார்த்தன. மாற்ருரது களிறுகள் மாய்ந்துகிடப்ப தைக் கண்டு ஆற்ருத அவற்றின் பிடிகள், பொலிவிழந்தனவாய் புன்மைநிறைந்து புலம்ப, அதனைக் கண்ட களிறுகளும் தம்மரசனைப்போலவே பொறுக்கலாற்ருது தம் கண்களை மூடிக்கொண்டன. போரில் வெற்றி என்பது ஒன்று கிடைத்தாலும், அதனைக் கூர்ந்து பார்க்கும்போது, துயரம் என்பது உள்ளூரத் தங்கிக்கிடக்கும் என் பதை இச்செய்யுள் தெற்றனக் காட்டுகிறது. அவலச்சுவை வழிந்தோடுமாறு யானை கண் புதைப்பதில் ஆசிரியர் அமைத்துள்ள நயம் வியத்தற்குரியது. பாட்டு முழுவ தையும் இப்போது பார்ப்போம்.

" ஏனைய பெண்டிர் எரிமூழ்கக் கண்டுதன்
தானையாற் கண்புதைத்தான் தார்வழுதி—யானையெல்லாம்
புல்லார் பிடிபுலம்பத் தாங்கண் புதைத்தவே
பல்யானை அட்ட களத்து "

## புறங்கடை நின்றது

இனி அடுத்துச் சோழனது " யானை மறத்தை "ப் பார்ப்போம் : மலைபோன்று பருத்துத் திரண்டு வலிமையுடையனவாய் விளங்கும் தோள்களையுடையவன் " கிள்ளி." அவனது களிறு போர்க்களத்தினின்று மீண்டது. போரிலிருந்து மீண்ட வீரரையெல்லாம் வரும்வழியைப் பார்த்துக்கொண்டு," வருவார் கொழுநர் " எனக் கதவம் திறந்து வைத்துக்கொண்டிருக்கும் அவர்தம் காதலியர் வரவேற்று

மகிழ்ந்தனர். ஆனல் சோழனது களிற்றை வரவேற்க, அதன் பிடி காத்துக்கொண் டிருந்தும்,களிறு கோட்டைக்குள்ளேயே வரவில்லை;புறங்கடையிலேயே நின்றுவிட்டது. ஏன் உள்ளே போகவில்லை ? தன் அருமைக் காதலியின் முகத்தில் விழிப்பதற்கும் நாணிப் புறங்கடையிலேயே நின்றுவிட்டது. ஏன் நாணவேண்டும் ? பிடியினது கண் ணேயும் கருத்தையும் கவரவல்ல கட்டழகோடு களிறு விளங்கிற்று, போருக்குமுன். போருக்குப்பின் ? முடியை நோக்கினல் முன்னைய பொலிவில்லை. கொடிகள் தூக் கிய மாற்றார் மதில்களை கோடுகொண்டு குத்தித் தகர்த்ததால் நுனி சிதைந்து முறிந்தன கொம்புகள். அடியை நோக்கினல் அங்கேயும் முன்னைய அழகில்லை. ஏன் ? முடிசூடிய மன்னர்களையும் தன் அடி கொண்டு இடறித் தேய்த்த காரணத் தால், எண்ணற்ற முடிகளோடு உராய்ந்து, நகங்களும் தேய்ந்து உருவிழந்தன. இவை காரணமாக, பிடியின் முன்செல்ல, அழகழிந்து தோன்றும் பொல்லாமைக்கு நாணி, புறங்கடையிலேயே நின்றுவிட்டதாம் !

கோடும் நகமும் பொலிவிழந்தன என இழிவாகக் கூறினும், புலவர், அவையே வீரக்களிற்றின் வெற்றிச்சின்னங்கள் என உய்த்துணரவைத்து, களிற்றின் அழகையும் வீரத்தையும், கிள்ளியின் தோள்வலியோடு சேர்த்துப் பாராட்டி, காதலை யும் உடன் கூட்டி, இழிவில் வைத்துச் சொன்ன நயத்தை வியவாது என் செய் வது ! இயல்பாகவே புறங்கடையில் யானை நின்றதை, உள்ளே செல்ல நாணியது என்ற தன் குறிப்பை, அதன்மேல் ஏற்றிப் புலவர் புனைந்துரைத்த தற்குறிப்பேற்ற அணிநயமும் பாராட்டற்பாலது. பாட்டையே முழு உருவத்தில் பார்ப்போம் :

" கொடிமதில் பாய்ந்திற்ற கோடும் அரசர்
முடியிடறித் தேய்ந்த நகமும்—பிடிமுன்பு
பொல்லாமை நாணிப் புறங்கடை நின்றதே
கல்லார்தோட் கிள்ளி களிறு "

என்பதே அச்செய்யுள்.

முத்தமிழ் வேந்தரில் மாறனது மறத்தைக் கண்டோம். செம்பியனது சீரை யறிந்தோம். சேரனது சிறப்பையும் ஒரு செய்யுளில் பார்ப்போம் இயற்கை வளம் செறிந்து விளங்கும் சேரநாட்டினது சிறப்பை, புலவர் தீட்டியுள்ள ஒருசொல் ஓவி யத் துணைகொண்டு காண்போம். செவ்வாம்பற் பூக்கள் செக்கச் செவேரென்று பூத்துக் கிடக்கின்ற நீர்வளமிக்க வயல் ஒன்றில் அன்னம் முதலிய நீர்ப் பறவைக ளும் நீந்திக் கொண்டிருக்கின்ற சேரநாட்டின் ஒரு காட்சியைப் புலவர் கண் கொண்டு பார்ப்போம்.

## வெள்ளம் தீப்பட்டது

மாற்றார் மனதில் நச்சுப்போல் அச்சத்தை விளைவிக்கக்கூடிய இலைவடிவு கொண்ட வேற்படையைக் கையில் ஏந்திய சேரனது நாட்டில் பகைவர் படையெடுத்து வருவது என்று குடிகள் நடுக்குற்று அஞ்சிக் கூக்குரலிடவேண்டிய இன்றியமை யாமையில்லை. அவ்வளவு பாதுகாவல் உண்டு அங்கு. எனினும், ஓர் ஆரவாரம் மட்டும் கேட்கின்றது. அது என்ன ? சிறகுகளாகிய தம் கைகளாலே தம் இளங்குஞ்சு

களை நீர்ப்பறவையினங்கள் அணைத்துக்கொள்ளுகின்ற ஆரவாரம் மட்டும் இருக்கின்றது. ஏன் தம் குஞ்சுகளை அவை அணைத்துக்கொள்ளவேண்டும் ? தண்ணீர்ப்பரப்பு முழுவதிலும் தீப்பிடித்துவிட்டது என்று கருதி, அஞ்சி, தம் உயிர் கொடுத்தேனும் தம் இளம் குழவிகளைக் காக்கவேண்டும் எனக் கருதியமையால் அங்ஙனம் அணைத்துக்கொண்டன. தீ எப்படிப் பிடித்தது ? தண்ணீரில் தீ பிடிக்குமா ? தீயுமில்லை, ஒன்றுமில்லை. சேறுசிறக்கும் அவ்வயலில் செந்நிறம் பொருந்திய ஆம்பல்கள் இதழ் விரிந்து மலர்ந்திருக்கின்றன. மிகுதியாகப் பூத்திருந்ததால் தண்ணீர்ப்பரப்பு முழுவதிலும் செந்நிறம் பரவியிருப்பதை, வெள்ளம் முழுவதும் தீப்பரவியதுபோல, பகுத்தறிவு அற்றவையும், குஞ்சுகளின்பால் தாய்மையருள் உற்றவையும், ஆகிய இப்பறவைகள் கருதிவிட்டன. அவ்வளவே. இதைத்தான் புலவர் கற்பனைக் காட்சியாக நமக்களிக்கின்றார்.

மேலும், பறவையின் கவ்வை தவிர வேறொரு கவ்வையும் எழக் காரணமில்லை கோதை நாட்டில் என ஒழித்துக் காட்டணியின் வாசம் இதில் வீசுகிறதல்லவா ?

“ செஞ் ஞாயிற்றுத் தெறலல்லது
பிறிதுதெறல் அறியார் நின்னிழல் வாழ்வோரே
திரு வில்லது கொலைவில் லறியார்
நாஞ்சில் அல்லது படையு மறியார் ”

என்னும் புறப்பாட்டு அடிகளை இதனோடு ஒப்பிடுக. சேரநாட்டின் நீர் வளமும், நில வளமும், சேரனது வீரமும், அதோடு நகையும் வெளிப்படுகின்ற ஒரு கலவைச் சுவையை யல்லவா இதில் நாம் சுவைக்கின்றோம். இயல்பாகவே செந்நிறம் படிந்திருக்கின்ற சிறப்பில், பறவைகள் தீப்பிடித்ததாகக் கருதின என்னும் தன் குறிப்பை யேற்றிப் புலவர் வைத்திருக்கும் தற்குறிப்பேற்ற வாசமும் இதில் கலந்து வீசுகிறது. பறவையின் சிறகுகளை, அருமைத்தாய் சேயினை அணைக்கும் செங்கைகளாகச் சிறப்பித்ததில் உருவக நயமும் காண்க. இதோ இருக்கிறது முழுப்பாட்டும் :

“ அள்ளற் பழனத் தரக்காம்பல் வாயவிழ
வெள்ளந்தீப் பட்ட தெனவெரீஇப்—புள்ளினந்தங்
கைச்சிறகாற் பார்ப்பொடுக்குங் கவ்வை யுடைத்தரோ
நச்சிலைவேற் கோக்கோதை நாடு.”

இவ்வழகிய பாட்டின் சொல்லும் பொருளும்,

“ வழகிதழ்க் காந்தள் மேல் வண்டிருப்ப ஒண்தீ
முழுகியதென் றஞ்சி முதுமந்தி—பழகி
எழுந்தெழுந்து கைந்நெரிக்கும் ஈங்கோயே, திங்கட்
கொழுந்தெழுந்த செஞ்சடையான் குன்று.”

என்ற “ ஈங்கோய் எழுபது” பாடலிற் பயில்வதை ஒப்புநோக்கிச் சுவைத்தல் சிறந்த இன்பம் பயப்பதொன்றும்.

இத்தகைய சொல்லோவியங்கள் நிறைந்த செந்தமிழ்க் கவிதையே,“ முத்தொள்ளாயிர ” மாம்.

# கல்வியென்னும் பல்கடற் பிழைத்தும்

(திரு. வி. கலியாணசுந்தர முதலியார்)

மாணிக்கவாசக சுவாமிகள் போற்றித் திருவகவலில்," மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்-தீனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும்"—தக்க தசமதி தாயொடு தான் படுந்-துக்கசாகரத் துயரிடைப் பிழைத்தும்-ஆண்டுகடோறும் அடைந்த அக் காலை-ஈண்டியும் இருத்தியும் எனைப்பல பிழைத்தும்-காலை மலமொடு கடும்பகற் பசிநிசி-வேலை நித்திரை யாத்திரை பிழைத்தும்—மாதர்தங்-கூர்த்த நயனக் கொள்ளையிற் பிழைத்தும்-"கல்வி யென்னும் பல்கடற்" பிழைத்தும்—தெய்வ மென்பதோர் சித்தமுண்டாகி" என்று திருவாய்மலர்ந்துள்ளார். இதில் "கல்வி யென்னும் பல்கடற் பிழைத்தும் " என்னும் பகுதி சிந்திக்கற்பாலது.

தெய்வமென்பதோர் சித்தம் உண்டாவதற்குப் பல துறைகளைக் கடந்துபோதல் வேண்டும் என்று சுவாமிகள் அறிவுறுத்தப் புகுந்தார். அதில் அவர் "கல்வியென்னும் பல்கடல் பிழைத்தும் (தப்பியும்)" என்பதையும் குறித்தருளினர். கல்வி எல்லாவற்றையும் உணர்த்துங் கருவியா யிருப்பது. சுவாமிகள் அதையுங் கடிந்து கூறியுள்ளார். கல்வி பல பெரியார்களாலும் போற்றப்பட்டிருக்கிறது. கல்வியைப்பற்றிப் பெரியோர்கள் பகர்ந்துள்ள உரைகளைத்திரட்டினுல்,அவைகள் எத்துணையோ அடுக்கு அடுக்கு நூல்களாகும். கல்வியைச் சிறப்பித்துக்கூருத பெரியோரில்லை. எல்லாருங் கல்வியைப் போற்றியே பேசியுள்ளார். ஈண்டு இரண்டொருவர் உரைமீது கருத்துச் செலுத்துவோம்." கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன் " என்பது பிள்ளையார் திருவாக்கு. "கல்லாதபேர்களே நல்லவர்கள் நல்லவர்கள் கற்றும் அறிவில்லாத என் கர்மத்தை என் சொல்லுவேன்" என்பது தாயுமானுர் திருவாக்கு. அம்மொழிக்கும் இம்மொழிக்கும் அரண்செய்யும் மொழிகள் பலவுள. ஒரு பெரியார் திருவாக்கிலேயே " கல்வி வேண்டும் " என்னுங் கருத்தும்," கல்வி வேண்டாம் " என்னுங் கருத்தும் மிளிர்தல் உண்டு. இதை ஆராய்ந்து பார்த்தல் வேண்டும்.

கல்வி என்பது கல் என்னுந் தாதுவினடியாகப் பிறந்தது. கல் என்பது அகழ் என்னும் பொருளையுடையது. ஆகவே, கல்வி என்பது அகழ்தல் (தோண்டுதல்) என்று பொருள்படுதல் காண்க. இப்பொருள் தொன்றுதொட்டு வழங்கி வருவது. அகழ்தல் எனில் எதை அகழ்வது ? அறியாமையை அகழ்தல் என்க. அறியாமை அகல அகல அறிவு விளங்கும். இதனுல் அறியாமையை நீக்கி அறிவை விளக்குதற்கு உறுகருவியாயிருப்பது கல்வி என்பது பெறப்படுகிறது. இத்தகைய கல்வியைக் "கல்வி என்னும் பல்கடற் பிழைத்தும்" என்று ஏன் அடிகள் இழித்துக்கூறினுர்?

கல்வியைப் பலதிறமாகப் பிரிக்கலாம். இங்கே எடுத்த பொருளுக்கேற்ப அதை முக்கூறுபடுத்திக்கொள்கிறேன். ஒன்று ஏட்டுக்கல்வி. மற்றொன்று இயற்கைக்கல்வி. இன்னொன்று இறைக்கல்வி. இம்மூன்றனுள் ஏட்டுக்கல்விக்குத் தாயகம் இயற்கையும் இறையுமாகும். இயற்கை யின்பத்தை நுகர்ந்தோரும், அதன்வழி இறையின்பத்தை நுகர்ந்தோரும் தத்தம் அநுபவங்களைப் பின்வருவோர் பொருட்டு நூல்களாக எழுதிச் செல்வது வழக்கம். அவ்வெழுத்து ஏட்டுக்கல்வி என்று வழங்கப்படுகிறது. ஏட்டு நூல்களை இயற்கை-இறையின் படம் என்று கூறல் மிகையாகாது. இவ்வித ஏட்டு நூல்கள் போக, வேறுவித ஏட்டு நூல்களும் உண்டு. அவை இயற்கை-இறையை அடிப்படையாகக்கொண்டு பிறந்தன அல்ல. அவை, இயற்கை-இறைவழி நில்லாது மனம் போனவாறு சிலரால் எழுதப்பட்டவை. இருவித ஏட்டு நூல்களுக்கும் உள்ள வேற்றுமை என்னை ? இயற்கை-இறையை அடியாக்கொண்டு எழுந்த நூல்கள் அழிவதில்லை. மற்ற நூல்கள் சின்னாளில் அழிந்துபடும்.

உலகந் தோன்றிய நாள்முதல் அறிஞரால் நூல்கள் எழுதப்பட்டு வருகின்றன. நூல்கள் ஒரு துறையிலா எழுதப்படுகின்றன ? பலபல துறைகளில் எழுதப்படுகின்றன. அவை கடலெனப் பரந்துகிடக்கின்றன. ஒவ்வொரு கல்வித் துறையையும் ஒவ்வொரு கடலெனக் கூறலாம். பலவிதக் கல்வித் துறைகளிருத்தலால், அவைகளைப் பலகடல் என்று சொல்லலாம். இக்கருத்துப்பற்றியே சுவாமிகள் " கல்வியென்னும் பல்கடல்" என்று ஓதினர். கல்வியைக் கடலுக்கு ஒப்பிடுதல் பல்லாற்றுனும் பொருந்தும்.

உலகில் கல்வி என்று சொல்லப்படுவது பெரிதும் ஏட்டுக் கல்வியையேயாகும். ஏட்டுக் கல்வி பெரியோர்களின் அநுபவங்களையுடையது. அக்கல்வி, மக்கள் வாழ்வுக்கு வேண்டற்பாலதே. ஆனல் சாகும் வரை அதையே கட்டி அழலாகாது. ஏட்டுக் கல்விக்குரிய பருவம் இருக்கிறது. அஃது இளமைப்பருவம். அப்பருவத்துக்குப் பின்னர்த் தொடங்கப்படும் வாழ்வு படிப்படியே வளர்ந்துவளர்ந்து இயற்கையில் தோய்வதாதல் வேண்டும். அதற்குமேல் குருநாதன் அருளால் இயற்கையின் உள்ளுறையாகிய இறையுணர்வு தோன்றும். இயற்கை உடல்; இறை உயிர். உடல்வழி உயிரை உணர்தல்கூடும்.

ஏட்டுக் கல்விக்குரிய பருவங் கடந்தும் அக்கல்வியிலேயே படிந்துகிடத்தல் கூடாதென்பது சுவாமிகளின் உள்ளக்கிடக்கை. ஏட்டுக்கல்வியில் சுவைகொண்ட ஒருவன், அதனின்றும் விடுதலையடைதல் அரிது. அதன் அருமைப்பாட்டை நோக்கியே அடிகள் " கல்வியென்னும் பல்கடல் பிழைத்தும் " என்றுர். ஒரு துறையிலுள்ள நூல்களே கடல் போன்றிருக்கின்றன. அவ்வொரு கடலைக் கடத்தலே அரிது. பலகடலைக் கடத்தலின் அருமைப்பாட்டை விளக்கவும் வேண்டுமோ ? ஒரு கடலைக் கடத்தற்கே வாழ்நாள் போதாது. பலகடலைக் கடத்தற்கு மேலும்மேலும் வாழ்நாள் எப்படிக் கிடைக்கும்? சாகும்வரை ஏட்டுக்கல்வியில் உழன்றுகொண்டிருந்தால், அக்கல்வியின் உள்ளுறையாகிய இயற்கை-இறை எப்பொழுது விளங்கும்? ஆதலால் ஏட்டுக்கல்வியை ஓரளவில் நிறுத்திக்கொள்வது ஒழுங்கு.

ஏட்டுக் கல்விக்கென்றே வாழ்வை அர்ப்பணஞ் செய்தவர், வாழ்வின் நோக்கத்தை நிறைவேற்றத் தவறியவராவர். ஏட்டுக் கல்வியில் இருப்பன எல்லாம்

பிறருடைய அநுபவங்கள். அவைகள் நூலறி புலவன் வாழ்விலும் அநுபவமாதல் வேண்டுமன்றே? ஏட்டுக் கல்வியால் அநுபவம் விளையாது. கரும்பலகையில் ஆயிரம் ரூபா என்று எழுதுவதால் மட்டும் ஆயிரம் ரூபா கிடைத்துவிடுமா ? விளக்கு விளக்கு என்று எல்லாருஞ் சொல்லிக்கொண்டே யிருந்தால், விளக்கு வந்து இருளைப் போக்கிவிடுமா ? வாசா கைங்கரியம் மனேலயத்தை எப்படி யுண்டாக்கும்? பேச்சு, செயலாதல் வேண்டும். வெறும் ஏட்டுக் கல்வி அநுபவ வாழ்வுக்குரிய தாகாது.

இந்நாளில் புத்தகப் பூச்சிகள் அதிகம். இப்பூச்சிகளைப் படைக்கப் பல்கலைக்கழகங்கள் பல இருக்கின்றன. ஏட்டுப்பூச்சிகளின் பேச்சுக்கும் செயலுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை. ஒழுக்கம் ஒழுக்கம் என்று வாய் பேசும். செயல் அதற்கு மாறுபட்டு நிகழும். பேசுவோர் யாவர் ? கல்வியென்னும் கடலை யுண்டவர் ; பல்கடலை யுண்டவர். ஒழுக்கத்தைப்பற்றிப் பள்ளியில் ஆசிரியர் பிள்ளைகட்குப் போதிப்பர். அவரே வெளியில் ஒழுக்கத்தினின்றும் வழுக்கி வீழ்வர். சட்டசபையில் குடியைத் தடுக்கப் பேசுவர் சிலர். அவரே சட்டசபை விடுத்ததும் மதுக்கடை நுழைவர். பேச்சுக்குஞ் செயலுக்கும் எவ்வளவு ஒற்றுமை ! பேச்சுஞ் செயலும் ஏன் ஒத்திருப்பதில்லை ? காரணம் கல்வியை ஏட்டளவில் பயின்று நிற்பதேயாகும். ஏட்டுக் கல்வியால் பயன் விளைவதில்லை என்பது கவனிக்கப்படல் வேண்டும்.

ஏட்டுக் கல்வியை ஓரளவில் நிறுத்திக்கொண்டு, அதன் பொருளாயுள்ள இயற்கைக் கல்வியில் கருத்திருத்தப் பயிலல்வேண்டும். இயற்கை பெரிய பல்கலைக்கழகம். அக்கழகத்திற் பயிலப்பயில அஃது இறைக்கல்வியாகிய இன்பமூட்டும். இறைக் கல்வி அழியாதது ; அருளுடையது. அறியாமையைக் கல்லும் ஆற்றல் அதற்கே உண்டு. " கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன் " என்னுந் திருவாக்கிற் போந்துள்ள " கல்லார் " என்பது, இயற்கை-இறைக்கல்வி பெறுதாரைக் குறிப்பதென்க. " கல்லாதபேர்களே நல்லவர்கள் நல்லவர்கள் " என்னும் மெய்ம்மொழி ஏட்டுக் கல்வி பயின்று தகாத செயல் செய்வோரை நோக்கி எழுந்ததென்க.

இந்நாளில் அரசுகள் எவர்பா லிருக்கின்றன ? பெரிதும் ஏட்டுக்கல்வியாளர்பா லிருக்கின்றன. அவர் என் செய்கிறுர் ? பொருளல்லவற்றைப் பொருளாக்கொண்டு பேராசைப்பேயில் விழ்ந்து என்னென்னவோ செய்கிறுர்! அந்தோ! அச்செயல்களைச் சொல்லவும் வேண்டுமோ ? பத்திரிகாசிரியர் யார் ? மந்திரிகள் யார் ? சேனைத்தலைவர் யார் ? போர்க்கருவி காண்போர் யார் ? விஷப்புகை காண்போர் யார் ? இவரனைவருங் கற்றவரென்றே சொல்லப்படுகிறுர். கற்றவராயின் அவர்பால் கல்விப் பயன்களாகிய அறம் அன்பு அருள் முதலிய நற்குணங்களல்லவோ திகழ்தல்வேண்டும் ? இவைகள் தற்காலக் கல்வியாளர்பால் திகழ்கின்றனவா ? இதற்குக் காரணம் ஏட்டுக் கல்வியளவில் சகோதரர்கள் நின்று விடுவதாகும்.

" பாடை ஏறினும் ஏடது கைவிடேல் " என்றெரு பழமொழி உலகில் உலவுகிறது. இது சிலர் நினைவில் உறலாம். வாழ்வுக்கு முரண்பட்ட பழமொழிகளும் உலகில் உலவிவருகின்றன. அவைகளையெல்லாம் பிரமாணமாகக் கொள்ளுதல் கூடாது. "பாடை ஏறினும் ஏடது கைவிடேல்" என்னும் பழமொழிக்குப் புலபொருள் சொல்லப்படுகின்றன. அச்சேற்றிலிறங்க என் மன மெழவில்லை. ஏட்டுக் கல்வி மற்றக்கல்வி

களின் அடிப்படையாக நிலவுதலான், அதைப் பயிலாது வாளா கிடப்போர்க்கு அறிவு கொளுத்தற்கென்று அப்பழமொழி தோன்றியிருக்கலாம். அதைக்கொண்டு ஏட்டுக் கல்வியே மேலானது என்று நினைத்தல் தவறு. ஏட்டுக் கல்வி வேண்டும். ஆயுள் வரை அதையே கட்டியழுதல் கூடாதென்பதே ஈண்டு வலியுறுத்தப்படுகிறது.

ஏட்டுக் கல்வியைப் பெற்ற பின்னர் வாழ்வில் இயற்கைக் கல்வியைப் பயில்வது முறைமை. மேலுங் கீழும் நானு பக்கலும் சுற்றிச் சூழ்ந்துள்ள இயற்கைப் பள்ளி யிற் பயிலப் பயில அழுக்காறு அவா வெகுளி முதலிய தீயகுணங்களெல்லாம் அகல அகலச் சாந்தம் முகிழ்த்துக்கொண்டே போகும். சாந்தம் இறையென்று அநுபூதி மான்கள் அறிவுறுத்திச் சென்றுர்கள். இயற்கையின் உள்ளுறை இறையாதலால், இயற்கையில் கருத்து ஒன்றஒன்ற, சாந்தமாகிய இறையிலும் அஃது ஒன்றுவதாகும். படிப்படியே சாந்தநிலை கூடும். சாந்தம் வாழ்வின் பேறு. இதற்கென்றே உலகம் உடல் வாழ்வு கல்வி தொழில் அரசு முதலியன இயற்கை-இறையால் வழங்கப்பட் டுள்ளன. இவைகளின் வாயிலாகச் சாந்தம் பெற உழைத்தலே அறிவுடைமை. இச்சாதனங்களின் நிலைமை இப்பொழுது மாறுதலடைந்திருக்கிறது. இதனால் வாழ் வில் எரி பகை சூது முதலியன புகுந்து சாந்த நிலைக்குக் கேடு சூழ்ந்துவரு கின்றன. இவைகளைத் தகையும் வல்லமை ஏட்டுக் கல்விக்குக் கிடையாது. ஆகவே, இயற்கை-இறைக் கல்வி வாழ்வில் நுழைதல் வேண்டும்.

“ தெய்வமென்பதோர் சித்தம் உண்டா ”வதைத் தகையவல்ல துறைகள் பல உண்டு. அவைகளை மாணிக்கவாசக சுவாமிகள் “போற்றித் திருவக” வலில் நிரலே விளந்து கூறியுள்ளார். அவைகளினின்றும் பிழைத்துப் பிழைத்து (தப்பித் தப்பி) வரின்,“ தெய்வமென்பதோர் சித்த முண்டாகு ” மென்கிறுர். இஃது அநுபவ மொழி. தடைகளில் ஏட்டுக் கல்வியும் ஒன்றுதலின், சுவாமிகள் “ கல்வியென்னும் பல்கடல் பிழைத்தும் ” என்றுர். ஏட்டுக்கல்வி வேட்கை இளமையிற் கொள்ளலாம். சாகும்வரை அவ்வேட்கையில் வீழ்ந்து புரளலாகாது. அது கடலாய்-பெருங்கடலாய்-பல கடலாய்-மக்களை அலைக்கும். அக்கடலில் வீழலாகாதென்று அடிகள் எச்சரிக்கை செய்கிறுர்.

சகோதரர்களே ! ஏட்டுக் கல்வியை ஓரளவிற் கொள்ளுங்கள் ; வாழ்நாள் முழு வதும் அக்கல்விக் கடலில் வீழ்ந்து மாளாதேயுங்கள் ; இயற்கை-இறைக் கல்வியைப் பயிலுங்கள் ; இக்கல்வி அழியாதது ; அழியாத சாந்த வாழ்வைத் தருவது ; “ தெய்வமென்பதோர் சித்தம் உண்டாக” க் “கல்வியென்னும் பல்கடல் பிழைத்து”, இயற்கை-இறைக் கல்விக் கரை ஏற முயலுங்கள் ; வாணுளை வீணுளாகக் கழித்தல் வேண்டாம். சாந்த இன்ப வாழ்வு உண்டு. அதைப் பெருக்குங் கல்வியைப் பயி லுங்கள் ;“ கல்லாத மூடரைக் காணவும் ஆகாது-கல்லாத மூடர் சொல் கேட்கக் கட னன்று-கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லாராம்-கல்லாத மூடர் கருத்தறியாரே” எனவும்,“ கற்றுஞ் சிவஞானம் இல்லாக் கலதிகள்-சுற்றமும் வீடார் துரிசுறுர் மூடர்கள்-மற்றும் பலதிசை காணுர் மதியிலோர்-கற்றன்பில் நிற்போர் கணக்கறிந் தார்களே ” எனவும் வரூஉந் திருமூலர் திருமொழிகளை நோக்குக.

“ ஏழைத் தொழும்பனேன் எத்தனையோ காலமெலாம்-பாழுக் குழைத்தேன் பரம்பரனைப் பணியாதே ”—திருவாசகம்.

# இசைபெறு திருக்குறள்—கசடறக் கற்க!

(திரு. புரட்சிக்கவிஞர்—பாரதிதாசன்)

(அகவல்)

பகவற் கீதை பகர்ந்த கண்ணனை
நல்வட மதுரைக் கச்சென நவில்வர்
திருக்குறள் அருளிய திருவள்ளுவரோ,
தென்மது ரைக்கோர் அச்செனச் செப்புவர்.
இன்னணம் நல்கூர் வேள்வியார் இயம்பினர்.

இதனால் அறிவ தென்ன வென்றால்,
இருவேறு நூற்கள், இருவேறு கொள்கைகள்,
இருவேறு மொழிகள், இருவேறு பண்பாடு—
உள என உணர்தல் வேண்டு மன்றோ ?

கீதையைக் கண்ணன் தோதுள நான்மறை
அடிப்படை தன்னில் அருளினர் என்க.
அதுபோல் வள்ளுவர் அருமைக் குறளை
எதனடிப் படையில் இயற்றினர் என்றால்,
ஆரூர்க் கபிலர் அருளிய எண்ணூல்
அடிப்படை தன்னில் அருளினர் என்க.
எண்ணூல் தன்னைச் சாங்கியம் என்று
வடமொழி யாளர் வழங்கு கின்றார்.

பரிமே லழகர், திருக்குறளுக்குச்
சாங்கியக் கருத்தைத் தாம் மேற்கொண்டே
உரைசெய் தாரா ? இல்லைஎன் றுணர்க !
ஆதலின் அவ்வுரை அமைவில தாகும் !

சமயக் கணக்கர் மதிவழி கூறுது—
உலகியல் கூறிப் பொருளிது வென்ற
வள்ளுவன் என்ருர் மன்னு கல்லாடனுர்.
வள்ளுவர் எந்த மதத்தையும் சார்கிலார்.
சாங்கியம் மதமன்று. தத்துவ நூலே !
பரிமே லழகர் பெருவை ணவரே.
மதமிலார் நூற்கு மதமுளார் உரைசெயின்
அமைவ தாகுமோ ! ஆய்தல் வேண்டும்.

திருவள்ளுவர்தாம் இரண்டா யிரமெனும்
ஆண்டின்முன் குறளே அளித்தார் என்பர்.
ஆயிரத் தெழுநூ ருண்டுகள் கழிந்தபின்
பரிமே லழகர் உரைசெய் துள்ளார்
என்பதும் நினைவில் இருத்தல் வேண்டும்

பரிமே லழகர் உரையோ வள்ளுவர்
திருவுள்ளத்தின் திரையே ஆனது !

நிறவேறு பாட்டை அறவே ஒதுக்கிய
தமிழ்த்திரு வள்ளுவர் அமிழ்தக் கொள்கையை
நஞ்சென்று நாட்டினுர் பரிமே லழகர்.

பழந்தமிழ் நாட்டின் பண்பே பண்பென
அன்னுர் ஆய்ந்த அறமே அறமென
ஒழுக்கமே ஒழுக்க விலக்கணம் ஆமென
வள்ளுவர் நாட்டினுர். தெள்ளு தமிழர்
சீர்த்தியைத் திறம்பட எடுத்துக் காட்டினுர்.
பரிமே லழகர் செய்த உரையில்
தமிழரைக் காணுமா றில்லே. தமிழரின்
எதிர்ப்புறத் துள்ள இனத்தார் மேன்மையின்
செருகலே கண்டோம் ! செருகலே கண்டோம் ! !

வடநூல் கொண்டே வள்ளுவர், குறளே
இயற்றினுர் என்ற எண்ணமேற் படும்படி
உரைசெய் துள்ளார் பரிமே லழகர்.
எடுத்துக் காட்டொன் றியம்பு கின்றேன் ;

## இசைபெறு திருக்குறள்—கசடறக் கற்க !

“ ஒழுக்க முடைமை குடிமை ” என்பதற்கு—
உரைசொல் கின்றார் பரிமே லழகர் :
“ தத்தம் வருணத் திற்கும், நிலைக்கும்
ஓதப் பட்ட ஒழுக்கந் தன்னை
உடைய ராதல் ”—உரைதானா இது ?
“ ஒழுக்க முடைமை, உயர்தமிழ்க் குடிகளின்
தன்மை யுடைய ராதல் ”—தகும் இது
குடிமை என்பது குடிகளின் தன்மையே !
“ வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பில் தலைப்பிரிதல் இல் ” எனப் பகர்ந்ததில்
பழங்குடி குறித்த பாங்கும் அறிக.

நன்றுயாம் நவில வந்த தென்எனில்
திருவள்ளுவரின் திருக்குறள் தன்னைக்
கசடறக் கற்க ! கற்றே
இசையொடு தமிழர் இனிது வாழ்கவே !

# கம்பர் காவியத்தில் ஓர் ஓவியம்

(திரு. பூ. ஆலாலசுந்தரஞ்செட்டியார். M.A. தமிழ்ப்பேராசிரியர், சென்னை)

கவியால் இயற்றப்படுவது காவியமாகும். தமிழில் பொருள்தொடர்நிலைச் செய்யுளையே காவியம் என வழங்குவர். கவிஞன் தான் உலகத்தார்க்கு அறிவுறுத்த விரும்பிய சிறந்த பண்புகளைத் தனது காவியத்தின்மூலம் எடுத்துக்காட்டுகின்றான். இவ்வாறு காவியத்தின் முற்றிலும் கவி தன் கருத்தை அமைத்துச்செல்லும் பண்பிற்குப் பாவிகம் என்று பெயர். "பாவிகமென்பது காப்பியப் பண்பே" என்பது தண்டியலங்காரம். (தண்டியலங்காரம்-சூ-89). இச்சூத்திரத்திற்கு உரை எழுதப் போந்த உரையாசிரியர் "பாவிகம் என்று சொல்லப்படுவது கவிஞனுடைய கருத்தினாலே காப்பியங்களிலே அமைந்து தோன்றும் குணமேயாம். இராமாயணத்திலே இராமர் முதலியோர் சரிதத்தினாலே வாய்மை, அறம், கற்பு, வீரம் முதலிய விடயங்கள் கவி கருதியவாறு அமைந்து தோன்றுதலை உதாரணமாகக்கொள்க" எனக் கூறியது ஈண்டுச் சிந்திக்கத்தக்கது. எனவே ஒரு காவியத்திற்குப் பெருமை அளிப்பது பாவிகமே எனக் கொள்க. இப்பாவிகம் கவியின் கற்பனைசக்திக்கு ஏற்பக் காவியத்தில் காணக்கிடக்கும் பாத்திரங்களின் மனநிலையாலும் உரையாடலாலும் அப்பாத்திரங்களைக் குறித்துப் பிறர் கூறும் கூற்றுக்களாலும் விளங்கப்பெறும். இராமாயணத்துள் வந்துள்ள பல பாத்திரங்களுக்குக் கம்பர் அவ்வப்பாத்திரங்களுக்கு ஏற்பச் சிறந்த பண்புகள் அளித்துள்ளார்.

கம்பர் தாம் பாடியுள்ள இராமயணத்துள் பல ஓவியங்களைத் திட்டிக் காட்டியுள்ளார். இராமபிரானை அறத்தின் நாயகனாகவும், அநுமனைச் சொல்லின்செல்வனாகவும், சிறையிருந்த செல்வியாகிய சீதையைக் கற்பிற்கு அரசியாகவும், குகனைத் தோழமையின் கொழுந்தாகவும், இராவணனை ஆணவத்தின் அழிவாகவும் இலக்குவனைத் தமையனை விட்டு நீங்காத் தம்பியாகவும், பரதனை உடன்பிறந்தார் ஒற்றுமைக்கு உயிர்நாடியாகவும் கம்பர் நமக்குக் காட்டியுள்ளார். கம்பர் காவியத்தில் ஓர் ஓவியம் என்ற தலைப்பில் ஓர் என்பதற்கு ஒன்று என்றும் ஒப்பற்ற என்றும் பொருள் கொள்ளலாம். ஆனால் ஈண்டு ஓர் என்பது ஒப்பற்ற என்ற பொருளில் அமைக்கப்பட்டுள்ளது. கம்பர் காட்டியுள்ள ஓவியங்களில் பல்லோராலும் புகழப்படும் ஒப்பற்ற ஓவியமாக விளங்குவது பரதன் என்ற பாத்திரமேயாகும். விசுவாமித்திரர், இராமர், வாலி, அயோத்தி அமைச்சர், குகன், கோசலை, அநுமன் முதலிய பலரும் பரதனது பண்பினைப் பலவாறாகப் பாராட்டியுள்ளனர். இராமரினும் பரதனே சிறப்புடைய பண்புடையான் என்பதைக் கம்பர் நமக்குப் பல இடங்களில் எடுத்துக் காட்டியுள்ளார். குணத்தினும் அழகினும் பரதன் இராமரை ஒத்தவன்

என்று பாலகாண்டத்தில் கூறிய கம்பர், பின்னர் அயோத்தியா காண்டத்தில் பரதன் இராமரினும் மும்மடங்கு சிறந்தவன் என்றும் ஆயிரம் இராமர் சேர்ந்தாலும் பரதன் ஒருவனுக்கு இணையாகார் என்றும் கூறி இறுதியில் உயுத்த காண்டம் மீட்சிப்படலத்துள் எண்ணில் கோடி இராமர் இருந்தாலும் பரதன் ஒருவனுக்கு ஈடாகார் என்றும் பாடிப் பரதனது பண்பின் பெருமையினைப் போற்றும் முறையானது எல்லோரும் படித்து இன்புறுதற் குரியதாகும். இனி, பரதனது ஒப்பு உயர்வு அற்ற சிறப்பினை ஆராய்வோம்.

மிதிலை மன்னனாகிய சனகனுக்கு இராமனைப்பற்றியும் அவனுடைய உடன் பிறந்தவர்களைப்பற்றியும் எடுத்துக்கூறப்போந்த விசுவாமித்திரர் பரதனது பண்பினைச் சிறக்கப் பாராட்டியுள்ளனர். பல நீதிகளாகிய ஆறுகள் வந்து சேர்கின்ற கடல் போன்ற நிறைந்த குணங்களையுடையவன் பரதன் என்றும், அவன் தனது நற்குணத்திலும் அழகிலும் இராமனை ஒத்தவன் என்றும் முனிவர் கூறியது கீழ்க்காணும் செய்யுளால் அறியக்கிடக்கின்றது.

“ தள்ளரிய பெருநீதித் தனியாறு புகமண்டும்
பள்ளமெனுந் தகையானைப் பரதனெனும் பெயரானை
யெள்ளரிய குணத்தாலு மெழிலாலு மிவ்விருந்த
வள்ளலையே யனையானைக் கேகயர்கோன் மகள்பயந்தாள் ”

(குலமுறை கிளத்து படலம்—21)

உடன்பிறந்தார் ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக இராமாயணத்தில் பரதனைவிடச் சிறந்த பாத்திரம் இல்லையென்றே கூறலாம். ஏனெனில் காவியத்தலைவரான இராமர் பரதனது அன்பின் பெருக்கினைப் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார். மேலும் இராமர் பரதனைத் தமது உயிராகவே கருதுகின்றார் என்பதையும் அவ்வாறே பரதனும் இராமபிரானைத் தனது உயிராகவே கருதுகின்றான் என்பதையும் விளக்க இக்காவியத்தில் பல சான்றுகள் உள்ளன. இராமன் வில்லிறுத்த செய்தியினை அறிந்து சனகனது அழைப்பிற்கு இணங்கித் தசரதன் பரதன் சத்துருக்கன் உடன்வரத் தன் பரிவாரங்களோடு மிதிலைமாநகரை அடைந்தான். அதுபோழ்து தந்தையைக் கண்ட இராமர் தசரதரது திருவடியில் வீழ்ந்து வணங்க, அவர் தமது தாளில் விழுந்த தனயனை எடுத்து உள்ளக்குழைவோடு தழுவிக்கொண்டார். பின்னர் இராமபிரானிடத்து இறவாத இன்ப அன்புடைய பரதன் தன் கண்களில் நீர் சொரிய இராமரை வணங்குவானாயினன். அதைக்கண்ட இராமர் தந்தை தம்மைத் தழுவிக்கொண்டதுபோல் தமக்கு உயிராக விளங்கிய பரதனைத் தழுவிக்கொண்டார் எனக் கவி கூறுவது ஈண்டு நோக்கத்தக்கது.

“ உன்னுபே ரன்புமிக் கொழுகியொத் தொண்கணீர்
பன்னுதா ரைகடரத் தொழுதெழும் பரதனைப்
பொன்னின்மார் புறவணைத்(து) “ உயிரெனப் புல்லினன் ”
தன்னையத் தாதைமுன் றழுவினு லென்னவே ”

(எதிர்கொள் படலம்—26)

" பரதனைப் பொன்னின் மார்புற அணைத்து உயிரெனப் புல்லினான் " என்றதால எல்லோர்க்கும் உயிரினிடத்து உண்டாகும் அன்புபோல் இராமருக்குப் பரதனிடத்து அன்பு உண்டாயிற்று என்பது விளங்குகின்றது. அவ்வாறே பரதனும் இராமபிரானைத் தன் உயிராகக் கருதியதற்கு ஒரு சான்று தருவேன். தன் பாட்டனாகிய கேகய நாட்டு மன்னன் விருப்பப்படி பரதன் அந்நாட்டிற்குப் புறப்படும்போது தன் தந்தையை வணங்கிப் பின்னர் இராமபிரானது திருவடித் தாமரைமலர்களைத் தன் தலைமேற்கொண்டு வணங்கி, இராமரைத் தவிர தனக்கு வேறு உயிர் இல்லையாதலின் உயிரை விட்டு உடல் பிரிவதுபோல் மிக்க வருத்தத்தோடு தனக்கு உயிராகிய இராமபிரானைப் பிரிந்து சென்றான் எனக் கவி கூறுதல் காண்க.

" ஏவலு மிறைஞ்சிப்போ யிராமன் சேவடிப்
பூவினைச் சென்னியிற் புனைந்து போயினான்
" ஆவியங் கவனல தில்லை யாதலால் "
ஓவலி லுயிர்பிரிந் துடன்சென் றென்னவே "

(பரசுராமப்படலம்—48)

சில நாட்கள் சென்ற பிறகு தன் பாட்டனார் வீட்டினின்றும் அயோத்திக்குத் திரும்பிய பரதன் தசரதன் இறந்த செய்தியினைக் கைகேயியின் மூலமாக உணர்ந்து தந்தை இறந்தமை குறித்துப் பலபடியாகப் புலம்பினன். பின்னர் அவன் தன்னைத்தானே தேற்றிக்கொண்டு தனக்குத் தந்தையாகவும் தாயாகவும் கடவுளாகவும் தமையனாகவும் விளங்கும் இராமரைக் கண்டு தொழுதாலன்றித் தனது துயரம் நீங்காது என்ற முடிவுக்கு வந்தான்.

" எந்தையும் யாயுமெம் பிரானு மெம்முனும்
அந்தமில் பெருங்குணத் திராம னாதலால்
வந்தனை யவன்கழல் வைத்த போதலாற்
சிந்தைவெங் கொடுந்துயர் தீர்க லாதென்றான் "

(பள்ளியடைப்படலம்—58)

பரதன் இராமரைக் கடவுளாகவே கருதினான் என்பது இச்செய்யுளால் போதரும்.

இராமரைக் காட்டினின்றும் நாட்டிற்கு அழைத்து வருதற்கு எண்ணிய பரதன் தாய்மார் மூவரோடும் அமைச்சன் சுமந்திரனோடும் நால்வகைப்படைகளோடும் காட்டிற்குச் சென்றனன். பரதன் படையோடு வருவதைக்கண்ட இலக்குவன் பரதன் இராமரைக் காட்டினின்று துரத்தவருகின்றான் எனத் தவறாகக் கருதி அவனோடு பொருதற்குச் சித்தமாயிருந்தனன். இதனைக்கண்ட இராமர் இலக்குவனை நோக்கி, " தருமத்துக்குரிய தெய்வத்தின் வடிவமானவனும் நன்மை என்ற தேரினை நிலை நிறுத்தும் அச்சாணி போன்றவனுமாகிய பரதனை, நீ அவ்வாறு நினைக்கலாமோ? நீ கருதியது தவறாகும். அவன் என்னை அழைத்துச்செல்லுதற்கு இவ்வாறு வருகின்றான் " என்றார். இக்கருத்துக் கீழ்வரும் செய்யுளால் அறியலாகும்.

" சேனுயர் தருமத்தின் றேவைச் செம்மையின்
ஆணியை யன்னது நினைக்க லாகுமே
பூணியன் மொய்ம்பினுய் போந்த தீண்டெனைக்
காணிய நீயிது பின்னுங் காண்டியால் "

(திருவடிசூட்டு படலம்—47)

உடன்பிறந்தார் ஒற்றுமைக்குப் பரதன் எடுத்துக்காட்டாக விளங்குவதை இராமர் மற்றோரிடத்தும் இலக்குவனுக்கு எடுத்துக் கூறியுள்ளார். சுக்கிரீவன் வாலியை வலியப் போருக்கு அழைத்ததைக் கண்ட இலக்குவன், தன் தமையனைக் கொல்ல வந்த சுக்கிரீவன் பிறருக்கு எவ்வாறு துணை செய்வான் என்று இராமபிரானிடம் தெரிவிக்க, இராமர்,

" பித்தாய விலங்கி னொழுக்கினைப் பேச லாமோ
எத்தாயர் வயிற்றினும் பின்பிறந் தார்கள் எல்லாம்
ஒத்தாற் பரதன் பெரிதுத்தமன் ஆத லுண்டோ "

(வாலி வதைப் படலம்—34)

என்றார். பரதனது பண்புடைமை வாலியாலும் போற்றப்படுகின்றது. தன்மீது மறைந்து அம்பு செலுத்திய இராமனை ஏசிய வாலி,

" வாய்மையு மரபுங்காத்து மன்னுயிர் துறந்த வள்ளல்
தூயவன் மைந்தனேநீ பரதன்முன் தோன்றி னாயே "

(வாலி வதைப் படலம்—76)

என்று வெகுண்டு கூறினன். இதனால் இராமரினும் சிறந்தவன் பரதன் என்று வாலி கருதினான் என்பது பெறப்படுகின்றது.

அயோத்தி அமைச்சரும் அவையோரும் பரதனது ஒப்பற்ற பண்பினை எம்முறையில் பாராட்டினர் என்பதை இனி ஆராய்வோம். தசரதர் இறந்த பின்னர் அயோத்தி அமைச்சரும் வசிட்டரும் பரதனை அணுகினர். வசிட்டர் பரதனை நோக்கி நாட்டை ஆளுமாறு வேண்டிக்கொள்ள, அச்சொற்களைக் கேட்ட பரதன் மிகவும் வருந்தி நடுக்கமுற்று "ஐயனே மூத்தவன் இருக்க இளையவன் மணிமுடி அணிந்துகொள்ளுதல் முறையோ ? யான் கானகம் சென்று இராமபிரானை அழைத்துவந்து முடி சூட்ட முயல்வேன். அவர் அதற்கு இசையாவிடின் யானும் கானகத்தில் அவருடன் வாழ்வேன். இதுவே எனது கருத்து. யான் அரசுபுரிய வேண்டும் என்று தாங்களும் பிற அமைச்சரும் என்னை மீண்டும் வற்புறுத்துவீராகில் யான் என் உயிரை மாய்த்துக்கொள்வேன் " என்றான். இதனைக் கம்பர்,

" அன்றெனி லவனெடு மரிய கானிடை
நின்றினி தருந்தவ நெறியி னுற்றுவென்

ஒன்றினி யுரைப்பினென் னுயிரை நீக்குவென்
என்றன னென்றபோ திருந்த பேரவை ”

(ஆறுசெல் படலம்—18)

எனக் கூறுதல் காண்க. இதனைக் கேட்ட அவையோர் பரதனை நோக்கி “பெருமை மிக்க அரசரே ! தசரதன் உயிரோடு இருக்கும்போதே இராமபிரான் மணிமுடி தரித்துக்கொள்ள இசைந்தான். ஆனால் மன்னவன் இறந்த பின்னும் தாங்கள் அரச பதவி ஏற்க மறுக்கின்றீர்கள். எனவே அரசகுலத்தில் தோன்றிய இளவரசர்களுள் தங்களைப்போன்று புகழொடு தோன்றியவர் வேறு யாவர் உளர் என்று கூறிப் பரதனது குணநலத்தைப் புகழ்வாராயினர். இச்செய்தியினை அடியிற்காணும் செய்யுள் விளக்குகின்றது.

“ ஆன்றபே ரரசனு மிருப்ப வையனும்
ஏன்றனன் மணிமுடி யேந்தல் வேந்தநீ
வான்றொடர் திருவினை மறுத்தி மன்னிளந்
தோன்றல்கள் யாருளர் நின்னிற் றேன்றினுர் ”

(ஆறுசெல் படலம்—19)

இனி, கோசலை பரதனது பண்பினைப் போற்றிய முறையைக் காண்போம். ஆழி சூழ் உலகமெல்லாம் பரதன் ஆளவேண்டுமென்றும் இராமன் தவமேற்கொண்டு கானகம் சென்று ஏழிரண்டு ஆண்டுகள் கழித்துத் திரும்பிவருதல் வேண்டுமென்றும் தசரதன் கூறியதாகக் கைகேயி இராமரிடம் தெரிவித்தபோது இராமர் “ மன்னவன் பணியன்றாகில் நும்பணி மறுப்பனோ என், பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்றதன்றோ ” எனக்கூறிக் கைகேயியினிடம் விடைபெற்றுக்கொண்டு கோசலையின் கோயில் புகுந்தான். மணிமுடி அணிந்து தன்னிடத்து ஆசி பெறுதற்கு இராமன் வருவான் என்று தழைத்த உள்ளத்தோடு கூடிய கோசலையின் முன்னர் குழைக்கின்ற கவரியின்றிக் கொற்ற வெண்குடையும் இன்றி இராமன் தமியனாகச் சென்று தன் தாயை வணங்கினான். அதுபோழ்து கோசலை “ நெடுமுடி புனைதற்கு இடையூறு உண்டோ” என்று இராமனை வினவ, இராமன் “நின் காதல் திருமகன் பங்கமில் குணத்து எம்பி பரதனே துங்கமாமுடி சூடுகின்றான் ” என்றான். நான்கு மக்களிடத்திலும் வேற்றுமை அற்ற அன்புடையாளாகிய கோசலை இராமன் கூறியதைக் கேட்டு “ மூத்தவன் இருக்க இளையவன் அரசாளுதல் முறையன்று என்ற ஒரு குறைமட்டும் உள்ளது. பரதன் நிறைந்த குணத்தை உடையவன். உன்னைக்காட்டிலும் மும்மடங்கு நல்லவன் ” என்றாள்.

“ முறைமை யன்றென்ப தொன்றுண்டு மும்மையின்
நிறைகு ணத்தவ னின்னினு நல்லனால்
குறைவி லன்னெனக் கூறினா ளல்வர்க்கும்
மறுவி லன்பினில் வேற்றுமை மாற்றினாள் ”

(நகர் நீங்கு படலம்—5)

இச்செய்யுள் ஒன்றே பரதனது நிறை குணத்தை விளக்கப் போதிய சான்ருகும். இச்செய்யுளால் பரதன் இராமனினும் மும்மடங்கு சிறந்தவன் என்பதைக் கவி கோசலையின் வாயிலாகக் குறிப்பிட்டுள்ளார்.

தன் பாட்டனுர் வீட்டினின்றும் அயோத்திக்குச் சத்துருக்கனனேடு திரும்பி வந்த பரதன் இராமன் காடு சென்றதும் தசரதன் இறந்ததும் தன் தாய் கைகேயி சொல்லக்கேட்டு ஆற்றெணுத் துயரடைந்து அச்செயல்களுக்குக் காரணமாக விளங் கிய தன் தாயைப் பலபடியாகப் பழித்துத் தன்னையும் வெறுத்துக்கொண்டு தன் தாயின் முன்பு இருப்பதற்கு மனமில்லாமல் கோசலையின் கோயில் புகுந்து அவளது திருவடியில் விழுந்து புலம்ப, அதைக்கண்ட கோசலை "ஐயனே ! கைகேயி யின் கைதவத்தினை நீ அறிந்திலை போலும்" என்று கூற, பரதன் "அன்னையே கைகேயியின் வஞ்சகச்செயல் எனக்குத் தெரியாது. அது எனக்குத் தெரிந்திருக்கு மாயின் யான் பாபிகள் புகும் நரகத்தில் புகுவேனுக" எனச் சபத மொழிகள் கூறினுன். பரதன் குற்றமற்றவன் என்பதை அறிந்த கோசலை, கானகம் சென்ற இராமன் திரும்பிவந்ததைத் தான் கண்டதுபோல் மகிழ்ச்சியடைந்து உவகைக் கண் ணீரால் பெருகப் பரதனைத் தழுவிக்கொண்டு அவனது பண்பினைப் பாராட்டுவாளாயி னள். "மன்னர் மன்னவா! உமது குலத்து முன்னேர்களில் உன்னை ஒத்த தன்மை யுடையவர் யாவர் ?" எனக்கூறினுள் என்பதைக் கீழ்க்காணும் செய்யுள் விளக் குதல் காண்க.

"முன்னை நுங்குல முதலு ளோர்கடாம்
நின்னை யாவரே நிகர்க்கு நீர்மையார்
மன்னர் மன்னவா வென்று வாழ்த்தினுள்
உன்ன வுன்னநைந் துருகி விம்முவாள்"

(பள்ளியடைப் படலம்—120)

பரதன் இராமபிரானை மீட்டும் அயோத்திமாநகரத்திற்கு அழைத்துவர வேண் டும் என்ற கருத்துடன் தாய்மார் மூவரோடும் தம்பி சத்துருக்கனனேடும் அமைச் சன் சுமந்திரனேடும் மற்றப் படைகளும் புடைசூழக் காட்டிற்குப் புறப்பட்டான். பரதன் சேனைகளோடு வருதலைக்கண்ட குகன் பரதன் இராமனைக் காட்டினின்றும் துரத்திவிட வருகின்ருன் எனத் தவருகக் கருதிப் பின்பு பரதனிடம் சென்று அவன் காட்டிற்கு வந்த காரணத்தை வினவ அதற்குப் பரதன்,

"முழுதுலகு அளித்த தந்தை முந்தையோர் முறையி னின்றும்
வழுவின னதனை நீக்க மன்னனைக் கொணர்வா னென்ருன்"

பரதனது தூய எண்ணத்தினை அறிந்த குகன்,

"தாயுரை கொண்டு தாதை யுதவிய தரணி தன்னைத்
தீவினை யென்ன நீத்துச் சிந்தனை முகத்திற் றேக்கிப்

போயினை யென்ற போழ்து புகழினேய் தன்மை கண்டால்
ஆயிர மிராமர் நின்கே ழாவரோ தெரியி னம்மா"

(குகப்படலம்—35)

எனக் கூறிப் பரதனது பண்பினை வாயார வாழ்த்தினன். முன்பு அயோத்தியா காண்டத்தில் இராமனினும் பரதன் மும்மடங்கு சிறந்தவன் எனக் கூறிய கம்பர் இச்செய்யுளில் ஆயிரம் இராமர் சேர்ந்தாலும் பரதன் ஒருவனுக்கு இணையாகார் என்ற கருத்தினை வேடர் தலைவனாகிய குகன் வாயிலாக விளக்கியுள்ளார்.

தனது வேண்டுகோளுக்கு இணங்காது இராமபிரான் அயோத்திமாநகருக்குத் திரும்பிவர மறுத்ததை உணர்ந்த பரதன் அவரது பாதுகைகளை வேண்டிப் பெற்றுக்கொண்டு அவர் பதினான்கு ஆண்டுகள் கழிந்ததும் அயோத்திக்கு வராவிடின் தான் எரியிற் புகுந்து உயிர் விடுவதாகக் கூறி அயோத்திக்கு அடுத்துள்ள நந்தியம் பதிக்குச் சென்று பாதுகைகளை அரியணையில் இருத்தித் தான் தவவிரதத்துடன் வசிப்பானாயினன்.

பதினான்கு ஆண்டுகள் கழிந்தும் இராமர் அயோத்திக்கு வராமையால் பரதன் தீயில் விழுந்து இறக்கத்துணிந்தான். இச்செய்தியினைக் கேட்ட கோசலை கண்ணீரும் கம்பலையுமாக ஓடிவந்து பரதன் தீயில் விழுவதைத் தடுத்து "பெருமை மிக்கோனே! இராமன் ஒருவனேயன்றி அநேக கோடி இராமர்கள் சேர்ந்தாலும் உனது அளப்பரிய அன்பிற்கு ஒத்தவர் ஆவாரோ ? புண்ணியமே வடிவான உனது உயிர் போனல் மண்ணுலகும் விண்ணுலகும் வாழுமோ ? எனக் கூறிப் பரதனது ஒப்பு உயர்வற்ற பண்பினைப் பாராட்டினுள். இதனை,

"எண்ணில் கோடி யிராமர்க ளென்னினும்
அண்ண னின்னரு ளுக்கரு காவரோ
புண்ணி யம்மெனு நின்னுயிர் போயினல்
மண்ணும் வானு முயிர்களும் வாழுமோ"

(மீட்சிப்படலம்—232)

எனக் கம்பர் கூறுதல் காண்க. இச்செய்யுளில் எண்ணில் கோடி இராமர்கள் என்றாலும் பரதன் ஒருவனது அன்பிற்கு இணையாகார் என்பதைக் கவி நமக்குக் கோசலையின் வாயிலாக எடுத்துக் காட்டுகின்றார். முன்னர் அயோத்தியா காண்டத்தில் இராமனினும் பரதன் மும்மடங்கு சிறந்தவன் எனக் கூறிய கோசலை உயுத்த காண்டத்தில் எண்ணில் கோடி இராமர்கள் என்றாலும் பரதன் ஒருவனது அன்பிற்கு இணையாகார் எனக் கூறியது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

கோசலையின் வேண்டுகோளுக்குப் பரதன் செவிசாய்க்கவில்லை. அவன் தீயில் விழுதற்குச் சித்தமாய் இருந்தான். அந்தச் சமயத்தில் இராமபிரானால் அனுப்பப்பட்ட அநுமன் அங்கு வந்து இராமபிரானின் வரவினைத் தெரிவித்து, அவர் கொடுத்த மோதிரத்தைப் பரதனிடம் கொடுத்து "ஐயனே சத்தியமே வடிவான

உமது உயிர் நீங்கில் இராமன் உயிர் வாழ்வானே" எனக்கூறித் தனது கையினுல் அத்தீயினை அவித்துக் கரியாக்கினுன். இது

"ஐயன் வந்தன னுரியன் வந்தனன்
மெய்யின் மெய்யன்ன நின்னுயிர் வீடினுல்
உய்யு மேயவ னென்றுரைத் துட்புகாக்
கையி னுலெரி யைக்கரி யாக்கினுன்"

(மீட்சிப்படலம்—240)

என்ற கவியால் பெறப்படுகின்றது. இதனுல் அநுமனும் பரதனது பண்பினைப் பாராட்டினுன் என்பது அறியக்கிடக்கின்றது. இராமபிரானது கணையாழியைக் கண்ட பரதன் மட்டற்ற மகிழ்ச்சியுற்று அநுமனை வாயார வாழ்த்தினுன். பரதன் இராம பிரானிடத்தே அளவற்ற அன்புடையவன் என்பது முன்னரே கூறப்பட்டது. இறுதி யில் அயோத்திக்குத் திரும்பிவந்தபோது பரதன் இராமபிரானைக் கண்டான் என் பதைக் கூறவந்த கம்பர் தனக்கு உயிர்போன்ற இராமனைப் பரதன் கண்டான் எனக் கூறுகின்றுர். இதனை,

"கானிடைப் போகிய கமலக் கண்ணனைத்
"தானுடை யுயிரினைத்" தம்பி நோக்கினுன்"

(மீட்சிப்படலம்—326)

என்ற வரிகள் வலியுறுத்துதல் காண்க. இராமபிரானும் பரதனைத் தனது உயிரா கவே கருதினுன் என்பதைக் கவி நமக்கு மீண்டும் நினைப்பூட்டுகின்றுர். தனது தாளில் விழுந்த பரதனை நோக்கி இராமபிரான் விம்மிப் புலம்பி, நாவினுல் ஒன் றும் பேச இயலாமல் உயிரும் உடம்பும் ஒன்றுகச் சேர்ந்ததுபோல் பரதனை இறுகத் தழுவித் தளர்ந்தார் என்பதைக் கீழ்க்காணும் செய்யுள் விளக்குதல் காண்க.

"சேவடி பிரண்டு மன்பு மடியுறை யாகச் சேர்த்திப்
பூவடி பணிந்து வீழ்ந்த பரதனைப் பொருமி விம்மி
நாவிடை யுரைப்ப தொன்று முணர்ந்தில னின்ற நம்பி
ஆவியு முடலு மொன்றத் தழுவின னழுது சோர்வான்"

(மீட்சிப்படலம்—345)

இராமன் பரதனைத் தழுவுவதில் கன்றைக் கண்ட தாய்ப்பசுவைப் போன்றுன் என்ற கருத்தில் "கன்று காண் கறவை அன்னுன்" எனப் பிறிதோர் இடத்தும் உவமை கூறுகின்றுர். இதனுல் இராமர் பரதனிடம் கொண்ட அன்பின் நிலை விளங்குகின் றது. விசுவாமித்திரர், இராமர், வாலி, அயோத்தி அமைச்சர், குகன், கோசலை, அநுமன் முதலிய பலரும் பரதனது பண்பினைப் பலபடியாகப் பராட்டியுள்ளனர். இதுகாறும் கூறிய சான்றுகளால் கம்பர் தமது காவியத்தில் காட்டியுள்ள ஓவியங் களில் பரதனது ஓவியமே ஒப்பு அற்றதாக விளங்குகின்றது என்பது போதரும்.

# திருவள்ளுவர் பெயர்க் காரணம்

(திரு. வித்துவான். ஆ. சிவலிங்கனுர்,
விரிவுரையாளர், சி. பா. சு. தமிழ்க்கல்லூரி, மயிலம்)

திருவள்ளுவர் பெயர்க்காரணத்தைப் பலர் பலவாருகக் கூறினும் அவர் கூற்றுக்களையெல்லாம் இரண்டு பிரிவுகளில் அடக்கலாம். பிறந்த குடிபற்றி வந்ததென்பது ஒன்று ; ஸ்ரீ வல்லபன் என்ற வடசொல்லின் திரிபாக வந்ததென்பது ஒன்று. இவ்விரண்டினையும்பற்றிச் சிறிது காண்போம்.

" பாணன் " பறையன் " கடம்பன் துடியன் என்று
இந்நான் கல்லது குடியும் இல்லை "

என்ருர் ஒரு புலவர். பறையர் குடியில் வள்ளுவரும் அடங்குவர். இவர்களது தொழில் அரசாணையை முரசறைந்து தெரிவித்தலாம். இத்தொழிலேயே—பறையறைதலேயே வழிவழியாக மேற்கொண்டு வந்தமைபற்றி இவர் வழிக்கு " வள்ளுவர் குடி " யெனப் பெயர் வந்தது. இக்காலத்தில் வள்ளுவர் என்ற குடியினர் உளர். இவர்கள் மிகத் தாழ்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். உண்மையாகக் காலப் போக்கில் இவ்வாறு நேர்ந்ததேயன்றி வள்ளுவர் குடி ஓர் உயர்ந்த குடியேயாகும். பண்டு உயர்ந்த குடி தாழ்ந்த குடி எனப் பாகுபாடு கொண்டிலர். அவரவர் கொண்ட தொழில்முறைபற்றி மதிப்புக் கொடுத்துவந்தனர். கல்வியறிவிற் சிறந்தவர்களை மிக மேம்படுத்தினர். " செய்திவள்ளுவன் பெருஞ் சாத்தன் " என்ற புலவர் ஒருவர் குறுந்தொகை என்ற நூலில் காணப்படுகின்ருர். கலையில் சிறந்தவர்களை மதித்தனர் அக்காலத்தில். பாணர், பொருநர் முதலிய கலைஞர்களுக்கு அரசர்களிடத்தில் பெருமதிப்பு இருந்ததை நாம் சங்க நூல்களில் காண்கின்ருேமன்ருே ?

" வள்ளுவன் சாக்கை யெனும்பெயர் மன்னர்க்கு
உள்படு கருமத் தலைவர்க்கு ஒன்றும்."

என்பது திவாகரச் சூத்திரம். அரசர் கீழ் இருந்து காரியத்தலைமை பூண்டிருந்தனர் வள்ளுவர் என நாம் அறியலாம். வள்ளுவர் தாழ்ந்த சாதியினர் என ஒதுக்கப்பட்டிருப்பார்களாஞல் அரசர் காரியத்தலைமை மேற்கொண்டிருப்பரோ ? இவ்வள்ளுவர் எத்தகைய மதிப்பினர் என்பதைக் கீழ்வரும் பெருங்கதைப் பாட்டடிகளால் நன்குணரலாம்.

## திருவள்ளுவர் பெயர்க் காரணம்

" திருநாள் படைநாள் கடிநாள் என்றிப்
பெருநாட் கல்லது பிறநாட் கறையாச்
செல்வச் சேனை வள்ளுவ முதுமகன் " (2,2. 32-4)

இதில் " செல்வச் சேனை வள்ளுவ முதுமகன் " என்றது காணத்தக்கது. திருநாள் முதலிய மூன்று நாட்களுக்குமட்டும் முரசறையுமவன் சேனையுடையவனாக இருந்தான் என்று வருவதால் அவன் ஒரு பெரிய தலைமையினை யுடையவன் என நாம் அறியலாம். அதாவது அரசாணையினை முரசறைந்து தெரிவிக்கும் வள்ளுவர்கட்குத் தலைமைபூண்டவன் என உணரலாம். பிற ஊர்களில் பிற அதிகாரிகளின் ஆணைகளைப் பறைமூலம் தெரிவிப்பவர் பறையராகவும் அரசன் ஆணையினை அரசன் நகரில் சிறந்த காலங்களில்மட்டும் முரசறைந்து தெரிவிப்பவர் வள்ளுவர் எனவும் கொள்ளலாம். எனவே வள்ளுவர் என்பார் அரசனிடம் தலைமைப்பதவியைப் பெற்றவர் என்பது போதரும். புறநானூற்றில் நாஞ்சில் வள்ளுவன் என்பான் சேரவேந்தன் படைத்தலைவனாக இருந்தான் எனக் காணப்படுவதும் இதற்குச் சான்று பகரும்.

இவ்வள்ளுவர் பழங்காலத்தில் அரசனிடம் பொறுப்புவாய்ந்த தலைமைப்பதவியைப் பெற்றிருந்ததோடு முழுத்தம் கூறும் பெருங்கணிப் பதவியையும் பெற்றிருந்தனராவர் எனவும் கூர்ந்துணர இடம் உண்டு.

பண்டையரசர்களுக் கிருந்த ஐம்பெருங்குழுவில் " பெருங்கணி " என்பாரும் ஒருவர். இவர்கள் அரசர்க்குக் காலநிலைகளை அவ்வப்போது எடுத்துரைப்பர். இப் பெருங்கணிப் பட்டம் பெற்று அரசவையில் இருத்தற்குரியர் இன்னார் என்று வரையறை கூறப்படவில்லை. ஒரு வேளை இவர்களும் வள்ளுவர் குடியினராவரோ என எண்ணுகின்றோம். இக்காலத்தில் வள்ளுவக்குடியினர் வழிவழியாகச் சோதிடம் சொல்லுதலையே குலத்தொழிலாகக் கொண்டு அதனால் வரும் ஊதியத்தால் பிழைப்பதைக் காண்கின்றோம். பிறந்த குழந்தைக்குச் சாதகம் கணிக்கும் தொழிலை இவர்கள் மேற்கொண்டிருக்கின்றார்கள். இன்றும் சில இடங்களில் சோதிடம் நன்கு தெரிந்த வகுப்பினரிடம் சென்று புதிய சாதகம் ஒன்று கணிக்கவேண்டும் எனின், அவர்கள்," நாங்கள் கணிப்பதில்லை ; வள்ளுவனிடம் கணித்துவாருங்கள் ; அது கொண்டு பலன் சொல்லுகின்றோம் " எனக் கூறுவர். பரம்பரைத் தொழிலாகச் சாதகம் கணித்துப் பலன் கூறுதலைக் கொண்ட இவர்களே அக்காலத்தில் அரசர்களின் பெருங்கணிகளாகவும் இருந்திருக்கலாம் என எண்ணலாம். அவ்வாறாயின் பெருங்கணியின் சிறப்பு சொல்லத்தரமன்று. பெருங்கணியின் சிறப்பினை,

" எண்தரும் பெருங்கலை யொண்டுறை போகிக்
கண்ணகன் புணர்ப்பிற் கவின்பெற நந்தி
விண்ணகம் விளங்கு மேதகு நாட்டத்த
நாற்பொருள் உணர்ந்து பாற்பொருள் பன்னி
நூற்பொருள் நுனித்துத் தீப்பொருள் ஒரீஇ
அலகை வேந்தற் குலகம் கொண்ட
ஒழுக்க நுனித்த வழுக்கா மரபின்

புணர்ப்பியல் காட்சியின் புரையோர் புகழ
நிழற்பெருங் குடையும் நேரா சனமும்
செருப்பொடு புகுதலும் சேனை யெழுச்சியும்
யானையும் தானையும் ஏனைய பிறவும்
மண்ணகக் கிழவர் மனக்கோள் அருது
விண்ணகக் கிழவனின் விழுப்பம் கூறித்
தம்மிற் பெற்ற தவம்புரி தருக்கத்து
அரும்பரி சாரத்துப் பெருங்கணி" (2, 2, 10-24)

என வருவதுகொண்டு தெரியலாம். இவ்வாறு சிறப்பெய்திய பெருங்கணி வள்ளுவரே எனக் கொள்ளின் வள்ளுவரின் சிறப்பினை எவ்வாறு அளவிட்டுரைக்க முடியும்! இவ்வள்ளுவக்குடியில் தோன்றிக் கல்வியறி வொழுக்கங்களிற் சிறந்து விளங்கியவராதலின் நம் வள்ளுவரும் திருவள்ளுவர் எனப் போற்றப்பட்டார்.

இனி, "ஸ்ரீவல்லபன் என்ற வடசொல்லின் திரிபே "திருவள்ளுவர்" என்பது" என்பார் கூற்றினைச் சற்று ஆராய்வோம். உயர்திருவாளர், மு. இராகவய்யங்கார் அவர்கள் இக்கொள்கையினர். அவர்கள் கூற்று பின்வருவது :—

"வல்லபன் என்ற சொல் வள்ளுவன் எனத் திரிந்தது. வல்லபன் என்றது அன்புக்குரியவன், நாயகன், கரும அத்யக்ஷன் என்ற பொருள்கள் உடைத்தாம். ஸ்ரீ வல்லபன் என்பது அரசனைக் குறிக்கும்போது திருமகள் நாயகன் என்று பொருள்பெறும். எனவே, மன்னரின் கீழ்க் கருமத்தலைவராக விளங்கியவர்க்கு வழங்கும் வள்ளுவப்பெயரும் அவ்வல்லபச் சொல்லின் திரிபு என்று கொள்ளுவது ஏற்கும்." (ஆராய்ச்சித்தொகுதி. பக். 208)

அய்யங்கார் அவர்கள் வல்லபன் என்பது வல்லுவன் என்றாகிப் பின் வள்ளுவன் என்றாயிற்று என்பார்கள். வல்லுவன் என்றது அரசனைக் குறித்தற்குக் கீழ் வருமாறு சான்று காட்டுவர்.

"புதுக்கோட்டைச் சித்தன்னவாசலிலே அமைந்த மலைக்குகைச் சாசனம் ஒன்று பாண்டியன் அவனிபசேகரன் காலத்ததாக உள்ளது. இப்பாண்டியன் 9-ம் நூற்றாண்டில் ஆண்ட ஸ்ரீமாறன் "ஸ்ரீவல்லபனுவான்." இச்சாசனம் அமைத்தவர் மதுரையாசிரியன் இளங்கௌதமன் என்ற புலவர். அதனில் இப்பாண்டியன் "சிரீவல்லுவன்" என்று குறிக்கப்பட்டுள்ளான்."

"சோணாட்டுத் திருவிசலூரில் உள்ள சிவன்கோயில் வடக்குத் திருமதிலில் அமைந்த பரகேசரிவர்மன் இராஜேந்திர சோழனது (1011-13) மூன்றும் ஆட்சி வருஷத்தில் அமைந்த சாசனம் ஒன்றும் பாண்டியன் "ஸ்ரீவல்லுவர்" மனைவி ஷை கோயிலுக்குச் சில திருவாபரணங்கள் அளித்தனள் என்று கூறுகிறது. "பாண்டியன் ஸ்ரீவல்லுவர் தேவியார்....குந்தப்பாவையார்" என்பது அச்சாசனத்தொடர். அச்சோழன் காலத்துப் பாண்டியன் ஸ்ரீ வல்லபன் என்பது சாசனங்களிலேயே தெளிய அறிந்த செய்தியாம்."

" இச்சோழன் மகன் வீர ராஜேந்திரன் தென்னனைச் "சிரீ வல்லவன்" மகன் சிறுவன் மின்னவில் மணிமுடி வீரகேசரியை மதவரை யொன்றால் உதைப்பித்துப்" போந்தான் என்று அவன் மெய்க்கீர்த்தி கூறுவதும் காணலாம். இவற்றால் வல்ல பன் என்ற வடசொல் வல்லுவன் என்று தமிழிற் பண்டைக்காலத்தே திரிந்து வழங்கிவந்த தென்பது பெறப்படுகின்றது." (ஆராய்ச்சித் தொகுதி. பக். 207)

" சங்ககாலத்து விளங்கிய பெருமக்களுள் பழமை வாய்ந்தவர் தெய்வப்புல மைத் திருவள்ளுவர் ஆவர்" என ஓரிடத்துக் கூறிய அய்யங்கார் அவர்கள், திரு வள்ளுவர் பெயர்க் காரணத்துக்கு மிகப் பிற்பட்ட காலத்தரசர்களின் கல்வெட்டுச் சான்றுகளைக் காட்டுவது பொருத்தமின்று. சங்ககாலக் கல்வெட்டுக் கிடைக்கப்பெறு மையால் இலக்கியச் சான்றுகளாயினும் காட்டுதல் வேண்டும். சங்க இலக்கியங்களுக் குப் பிற்பட்ட நூலாகிய பெருங்கதையிலும் வள்ளுவன் என்பதே ஆளப்பட்டதும், சங்கப்புலவருள் ஒருவராம் " மாமூலனார் "பாடிய

" அறம்பொரு ளின்பம்வீ டென்னுமந் நான்கின்
திறம்தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும்
வள்ளுவன் என்பானோர் பேதை யவன்வாய்ச்சொல்
கொள்ளார் அறிவுடை யார் "

என்ற பாட்டகத்தும் அச்சொல்லே யாளப்பட்டதும் காணவேண்டும். வள்ளுவரைப் பிற இலக்கியங்களிலும் வல்லபர் என ஆண்டதாகத் தெரியவில்லை.

சொல்லாராய்ச்சிக்குக் கல்வெட்டுக்கள் அத்துணைப் பயன்படுவன அல்ல. வர லாற்றாராய்ச்சிக்கே பயன்படுவன. அதனால் இலக்கியச் சான்றுகளே காட்டத்தக்கன. இலக்கியங்களில் சிதைந்த சொற்கள் மரூஉமுதலிய பெயர்களுடன் ஏறுவது, உல கில் காணும் பெரும்பான்மையான வழக்குப்பற்றியேயாகும். " வல்லபன் " என்ற சொல் " வல்லுவன் " என ஆளப்பட்டதற்கு மேல் அவர்கள் காட்டிய சான்றுகள் போலப் பல உள்ளன," வல்லபன் " என்பது " வல்லவன் " என வேண்டுமாயின் திரியும் இயல்புண்டு. தமிழ் "வ"கரம் வடமொழிப் "ப"கரமாகவும், வடமொழிப் "ப"கரம் தமிழ் "வ"கரமாகவும் மாறி ஒலித்தல் உண்டு. வலம்-பலம், வண்டி-பண்டி (இக்கால வழக்கு) ; கோபம்-கோவம், சாபம்-சாவம் என்பனவற்றைக் காண்க. இவ் வகையில் " வல்லபன் " என்பது " வல்லவன் " என வந்தது என்னலாம்.

" தென்னவன் " சிரீவல்லவன் " மகன் சிறுவன்
மின்னவில் மணிமுடி வீரகேசரியை "

" திரிபுவனச் சக்கரவர்த்திகள் "ஸ்ரீ வல்லவதேவற்கு"

(S. I. I. Vol. V. No. 294.)

என்ற சாசனத் தொடர்களில் அரசர்க்கும்,

" சோழகுலாந்தக சதுர்வேதி மங்கலத்து ஸ்ரீவல்லவன் "கட்டளையிலும் "

என்ற தொடரில் அரசன்கீழ் அதிகாரிக்கும்,

" திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலசேகர தேவர்
மாடக் குளக்கீழ் மதுரைக் கோயிலுள்ளால்
" ஸ்ரீவல்லவன் " கூடத்துப் பள்ளிப்பீடம் "

என்ற தொடரில் ஒரு கூடத்திற்கும் வல்லவன் என்ற சொல்லே காணப்படுதல் காணலாம். எனவே "வல்லபன்" என்ற சொல் "வல்லவன்" என மாறும் எனக் கொள்ளலாம். ஆனுல் அது " வல்லுவன் " என மாறும் என்பது அத்துணைப் பொருத்தம் இன்று."வல்லுவன்" எனக் கல்வெட்டுக்களில் காணப்படுவது திரிந்து வழங்கிய வழக்கம் அன்று. கல்லில் வெட்டியவனின் தவருகும். அல்லது "வல்ல வன் " என்பதே" வல்லுவன்" என இழிசனர் அக்காலத்தில் கூறிவந்த முறைக்கு ஏற்பத் திரியும் எனக் கொள்ளினும் இலக்கிய வழக்கின்மையின் அத்திரிபு ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அப்படியே ஏற்றுக்கொள்வதாயின் இக்கல்வெட்டுக் காலங் களில் வல்லபன்-வல்லவன்-வல்லுவன்-வள்ளுவன் என்பன ஒரே பொருளில் வழங் கினவாகக் கொள்ளமுடியாது. அரசன் பெயர் வல்லபனுயின் அவனை வல்லவன்-வல்லுவன்-வள்ளுவன் எனப் பலவாருக மக்கள் கூறியது தவறேயன்றி வேறென் னென்று கொள்வது ? வல்லபன் என்ற அரசனைக் குறிக்கவரும் வல்லவன் என் றது ஏற்றுக்கோடற் குரியதேயன்றி, வல்லுவன்-வள்ளுவன் என்பன பிழை என்று தள்ளற்குரியனவேயாகும்.

திருவள்ளுவர் சங்ககாலப் புலவர்களில் முதற்காலத்தினர். அக்காலப் புல வர்கள் வடமொழிப் பெயர்களைக் கொண்டவர் அல்லர். புறம் முதலிய நூல்களில் " பிரம்மச்சாரி", "தாமோதரன்" போன்ற புலவர் உளரே எனின் அவரெல்லாம் சங்ககாலத்தின் இறுதிக்காலத்தில்—அதாவது ஆரியக் கலப்பு மிகைபடத் தொடங் கிய காலத்தில் இருந்தவர். அரசர்களும் தூய தமிழ்ப்பெயர்களே யுடையவரா யிருந் தனர். எனவே, நம் திருவள்ளுவரின் பெயர்க்காரணம் ஸ்ரீ வல்லபன் என்ற வட சொல்லின் திரிபு அன்று என்னலாம்.

" வல்லபன் " என்ற கருமத்தலைவனைக் குறிக்கும் வடசொல் " வள்ளுவன் " எனத் திரியும் எனக் கொண்டமையால், நம் திருவள்ளுவர் அரசன் கீழ் இருந்த ஒரு கருமத்தலைவராக இருந்தனராவர் எனக் கொண்டனர் அய்யங்கார் அவர்கள். சிறந்த ஒரு நூலை—அரசியல் அனுபவங்கள் நிறைந்த நூலை அவர் தந்தமையும் அதற்குச் சான்ருகக் காட்டுவர். திருக்குறளைத் தந்தமையாலேயே வள்ளுவர் அர சியல் தலைவராக இருந்திருப்பர் எனக் கொள்வதற்கில்லை. அக்காலப் புலவர்கள் சிறந்த அரசியல் அனுபவம் வாய்ந்தவர்கள் என்பதில் ஐயமில்லை." பிசிராந்தை யார், கோவூர்கிழார், பரணர், மாமூலர் " போன்ருரின் பாடல்களிலிருந்து அவர்கள் எத்தகைய அனுபவம் உற்றவர்கள் என நாம் உணரலாம். அதனுல் அவர் அனை வரும் அரசர்க்குக் கருமத்தலைவராக இருந்தனர் எனக் கொள்ளமுடியுமா ?

"வள்ளுவன் சாக்கை.........ஒன்றும்" என்ற திவாகரச் சூத்திரம் கூறியிருப்பது கொண்டு நம் வள்ளுவரும் அரசர் கீழ்க் கருமத்தலைவராக இருந்திருப்பர் எனக் கோடல் சாலாது. இருந்திருப்பாராயினும் ஒரு துறைக்குத்தானே தலைவராய் இருந்திருப்பர். மற்றைய துறைகளைப்பற்றித் தம் நூலில் கூறியிருக்கக் காரணம் யாது ? "வள்ளுவன்" என்ற சொல் முரசறையும் தலைவரை யுணர்த்தும்." சாக்கையன்" என்ற சொல் நகைச்சுவை நாடகத்தலைவனைக் குறிக்கும். வள்ளுவன் என்பது அனைத்துத்துறைத் தலைவர்க்கும் ஒன்றுது. ஒன்றும் எனின் "சாக்கையன்" என்பதும் அவ்வாறு ஒன்றுதல் வேண்டும்." சாக்கையன்" என்பது கூத்தர்தலைவனையும் "சாக்கை" என்பது அவன் கூத்தினையுமே குறிப்பன. சிலப்பதிகாரத்தில்தான் முதல்முதல் "சாக்கையன்" என்ற சொல்லைக் காண்கின்றோம்.

"பாத்தரு நால்வகை மறையோர் பறையூர்க்
'கூத்தச் சாக்கையன்' ஆடலின் மகிழ்ந்து"

(சிலம்பு. 3. நடுகல். 76-77)

என்பது சிலப்பதிகாரத்துக் கண்டது. பிற்காலக் கல்வெட்டுக்களிலும் "சாக்கைக் கூத்து" என்பது ஒன்று ஆரியக்கூத்தாக இருந்ததென்பது தெரிகின்றது." சாக்கையன்" என்பது கூத்துத்துறைக்குத் தலைவனுனதுபோல "வள்ளுவன்" என்பதும் ஒரு துறைக்குரிய தலைவனையே குறிக்கும் என்னலாம். நாஞ்சில் வள்ளுவன் என்பான் சேரர் படைத்தலைவனுக இருந்தமையாலும் வள்ளுவ முதுமகன் ஒருவன் அரசாணையினை முரசறைந்து அறிவிக்கும் தொழிலுடையவன் எனப் பெருங்கதையில் காணப்பட்டமையாலும், வள்ளுவக்குடி பெருங்கணித் தொழிலும் கொண்டிருந்தனர் என்று முன்கண்டமையாலும் வள்ளுவர் என்பார் பலதுறைகளையும் கைக்கொண்டவர் என்பது போதரும். அதனுல் திவாகரச் சூத்திரங் கொண்டு நம் திருவள்ளுவரை அரசர்க்கீழ்க் கருமத்தலைவராக இருந்திருப்பர் எனக்கோடல் பொருந்தாது.

எனவே, எவ்வகையிலும் வல்லபன் என்பது வள்ளுவன் எனத் திரிந்தது அன்று என்னலாம். வல்லபன் என்ற வடசொல் வல்லவன் என்ற தமிழ்ச்சொல்லின் திரிபே என்பது எம் கருத்து."வல்" என்பதன் அடியாக வல்லவன் வந்தது. வல்லமையுள்ளவன் வல்லவன். வல்லமையாவது ஒரு காரியத்தைச் செய்துமுடிக்கும் ஆற்றல். அவ்வாற்றலை—வல்லமையையுடையவன் வல்லவன் எனப்பட்டான். ஒரு துறைக்கு அத்துறை வல்லவனைத் தலைவனுக்குதல் இயல்பு. அதனுல் "வல்லவன்" என்ற சொல் ஒரு துறைத்தலைவனை யுணர்த்தும் எனக் கொள்வதில் இழுக்கில்லை. அச்சொல்லே ஆரிய வழக்கில் "வல்லபன்" என ஆயிற்றுப் போலும். நம்நாட்டுப் பொருள்கள் (பஞ்சுபோன்றன) அயல்நாடுகளுக்குச் சென்று உருமாறி மீண்டும் நம் நாட்டிற்கே வேறு பெயர்களுடன் வருதல்போலப் பல தமிழ்ச்சொற்களின் வேர்ச் (Root) சொற்கள் வடமொழியிற் சென்று உருமாறி மீண்டும் தமிழில் வந்து வழங்கலாயின. அவ்வழக்கத்திற் குரியனவற்றுள் வல்லவன் என்பதும் ஒன்றுகும்.

ஆரியர்கள் தமிழ்நாட்டிற்கு வந்த காலத்தில் தமிழர்களின் பண்பாடு நாகரிகம் முதலியவற்றை மேற்கொண்டனர். தமிழ்ச் சொற்களையெல்லாம் மொழிபெயர்ப்பாகவும் திரிபாகவும் மேற்கொண்டனர். ஐயாறு-பஞ்சநதம், பாதிரி-பாடலம், மயிலமலை-மயூராசலம் முதலியன மொழிபெயர்ப்புக்கள். முத்து-முத்தா, வலம்-பலம் முதலியன திரிபுகள். இம்முறையில் வல்லவன் என்பதை வல்லபன் எனத் திரித்து வழங்கினர். எக்காலத்தும் ஆரியர்கள் தமிழ்ச் சொற்களைத் திரித்து வழங்குவதிலேயே பெருநோக்கம் உடையவர்கள். அதற்குப் பின்வருவதும் ஒரு சான்று.

" தஞ்சைச் சாசுவதிபண்டாரத்தில் திருக்குறட்கு மொழிபெயர்ப்பாய் அமைந்த வடநூல் ஒன்றுளதெனவும், இது நூறு வருஷங்களுக்கு முன்பிருந்த சமஸ்கிருத பண்டிதர் ஒருவர் இயற்றியதென்றும் இவர் குறளாசிரியரை " வல்லபாசாரியர் " என்ற பெயரால் வழங்கியுள்ளார் என்றும் டாக்டர் ஸ்ரீமாந். பி. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரிகள் என்னிடம் ஒருகால் அறிவித்த செய்தி இங்கே குறிப்பிடத்தக்கது."

(ஆராய்ச்சித்தொகுதி. பக். 209)

இவ்வாறு அய்யங்கார் அவர்கள் கீழ்க்குறிப்பு ஒன்று எழுதியுள்ளார்கள். வடமொழிப் பண்டிதர் இயற்பெயராகிய திருவள்ளுவர் என்பதை அவ்வாறே குறிக்காமல் அதனை மொழிபெயர்த்து வல்லபாசாரியர் என்றது தவறுதானே ?

இனி வள்ளுவர் என்பது கருமத்தலைமைபற்றி வந்ததன்று ; குடிபற்றியே வந்தது என்பதற்கு யாம் கருதும் காரணம் கீழ்வருவது.

வள் என்பது தோல். தோல் சம்பந்தமான தொழில் புரிபவர் வள்ளுவர் எனப்பட்டார். பண்கொண்டு பிழைப்பவன் பாணன், கூத்துக்கொண்டு பிழைப்பவன் கூத்தன் ஆனமைபோல வள்ளுக்கொண்டு பிழைப்பவன் வள்ளுவன் எனப்பட்டான்.

" மாசற விசித்த வார்புறு * "வள்" பின் " (புறம் 50)
" வள்வார்ச் சிறுபறை கறங்க " (சீவக 458)
" வள்வார்க் குளிறிடி முரசம் " (சீவக 2150)

எனக் காணுமிடங்களில் வள் என்பது தோல் என்ற பொருளதாதலைக் காண்க. தோல் தொழிலாவது பறையறைதல். தோல் கொண்டு பறைசெய்து அறைதலின் பறையர் எனப்பட்டனர். வள்ளுவர் என்ற சொல் பறையர் என்ற சொல்லுக்கு இடம் தந்து தான் சிறிது மறைந்து, பின் பறையர் தலைவர்களுக் குரியதாயிற்று. பறையர் பறையறைபவராகப் பிரிந்தனர். வள்ளுவர், பறையின்றி முரசு கொட்டுபவராயினர். பறையர் சிற்றூர்களில் அரசர் அதிகாரிகளின் ஆணையினைப் பறையறைந்து

*வள்பு=வார். தோலைக் கிழித்துக்கொண்ட வார் என்பது பொருள். எனவே, வார் என்ற பொருளுடைய 'வள்' என்பது முதலில் தோலையுணர்த்திப் பின்னரே அதன் கிழித்த நீளப் பகுதியை யுணர்த்திற்று.

அறிவிப்பாராயினர். வள்ளுவர் அரசர் ஆணையினை நகரில் முரசறைந்து அறிவிப்பாராயினர் ; அதனால் வள்ளுவர் சேனையுடையவராயினர். முரசினை யானைமேலேற்றி யறைபவராயினர். காலப்போக்கில் அரசருடன் நெருங்கிய தொடர்புடையவராக விளங்கினர். இக்காலத்துப்போல தாழ்ந்த வகுப்பினர் எனக் கருதப்பட்டிலர்.சிறிது பிற்காலத்திலும் உயர்ந்த நிலையிலேயே விளங்கினர் என்பதை

"ஸ்வஸ்தி ஸ்ரீ சோகிரத்துப் பருடையாரும்....இராயசேக
ராயின வள்ளுவரும் கூடிச் செய்த கச்சமாவது"

(S.I.I. Vol. V. No. 775)

எனவரும் கல்வெட்டுத்தொடர் விளக்கும்.

இதுகாறும் கூறியவற்றால் "வள்ளுவர்" என்பது "வல்லபர்" என்பதன் திரிபன்று என்பதும், "வல்லவர்" என்பதன் திரிபு "வல்லபர்" என்பதும், வள்ளுத் தொழில் உடைமைபற்றிக் குடிப்பெயராகவே விளங்கியது என்பதும் அறியலாம். நம் திருவள்ளுவரும் அக்குடியில் வந்து சிறந்த புலமையும் அரசியல் அனுபவமும் உடையவராய்த் திகழ்ந்தமையின் இயற்பெயரின்றிக் குடிப்பெயராலேயே வழங்கப்பட்டார் என்பதும் அறியலாம்.

# திருவெம்பாவை

(திரு. நீ. கந்தசாமி பிள்ளை அவர்கள்,
அமைச்சர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை)

தேடுகின்ற ஆனந்த சிற்சபையிற் சின்மயமாய்
ஆடுகின்ற சேவடிக்கீழ் ஆடுகின்ற ஆரமுதே
நாடுகின்ற வாதவூர் நாயகனே நாயடியேன்
வாடுகின்ற வாட்டமெல்லாம் வந்தொருகால் மாற்றுதியே

இராமலிங்க சுவாமிகள்.

## திருவெம்பாவை

திருவெம்பாவை என்பது, சைவ நன்மக்களால் பலநூற்றுண்டுகளாகத் தெய்வத் தொடர்புடைய நூல்களாகப் போற்றப்பெற்று வரும் பன்னிரண்டு திருமுறைகளுள் ஒன்றுனதும், கற்பவர் உள்ளத்தையெல்லாம் கனிவித்து நற்பதந் தரும் நவமறிந்த திருவாதவூரடிகள் அருளிச் செய்ததுமான திருவாசகத்தின் பல பகுதிகளுள் ஒன்றுகும். இப்பகுதி பாடுதற்கு இனிமை வாய்ந்த இருபது செய்யுட்களைக் கொண்டது. மார்கழித் திங்களில் வைகறைப்பொழுதில் (விடியற்காலை) ஒவ்வொரு சைவ இல்லங்களிலும் சிவபெருமான் திருக்கோயில்களிலும் திருவெம்பாவையும் திருப்பள்ளியெழுச்சியும் முறையாக ஓதப்பெற்றுவருகின்றன. இவ்வாறு ஓதி வருவது குறைகின்ற காலங்களில் உலக நன்மை குறைந்தும், மிகுந்த காலங்களில் உலக நன்மை மிகுந்தும் வருகிறது என்று அறிவுமிக்க முதியோர்கள் கருதுகின்றூர்கள்.

## அருளிய இடம்

இத் திருவெம்பாவையை மாணிக்கவாசக சுவாமிகள் திருவண்ணுமலையில் தங்கியிருந்த காலத்தில் அருளிச் செய்ததாகக் கடவுள் மாமுனிவர் தாம் எழுதிய திருவாதவூரர் புராணத்தில் பின்வருமாறு கூறுகின்றூர்.

“திருவண்ணுமலையில் தங்கியிருந்த பொழுது மார்கழித் திங்களில் திருவாதிரைக்கு முன் பத்து நாட்களிலும் பெண்களெல்லாம் பொழுது விடிவதற்குமுன் ஒருவரை ஒருவர் அழைத்துக்கொண்டு நீராடுவதற்குப் போவதைப் பார்த்து அப்பெண்கள் பாடுகிறமுறையாக அமைத்துத் திருவெம்பாவையை அருளிச்செய்தார்.”

இக்கருத்தினைச் சார்ந்தே மகா வித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளையும் தமது திருப்பெருந்துறைப் புராணத்தில்

" திருமுதுகுன்றம், திருவெண்ணெய் நல்லூர், புகழ் மிகுந்த திருவதிகை, நான்முகன் வழிபாடு செய்த திருப்பாதிரிப்புலியூர் முதலிய இடங்களைக் கண்டு கை கூப்பி வணங்கிப் பிறைசூடிய பெருமான் திருவுருவமாகவே விளங்குகின்ற திரு வண்ணுமலைக்குச் சென்றுர். அவ்விடத்தில் திருவெம்பாவையும், திரு அம்மானை யும் அருளிச் செய்தார்."

என்று கூறுகின்றுர்.

இவர்கள் இவ்வாறு கொள்வதற்குத் திருவெம்பாவையில் உள்ள "அண்ணு மலையான் அடிக்கமலஞ் சென்று இறைஞ்சும் விண்ணேர்கள்" எனவரும் சொற் றெடர் துணை செய்திருக்கலாம் என எண்ணவேண்டி யிருக்கிறது.

கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் இப்பகுதி தில்லையில் அருளிச் செய்த தாகக் கருதி, தாம் எழுதிய " மாணிக்கவாசகர் வரலாறு " என்னும் ஓர் ஆசிரியப் பாவில் " அழகிய தில்லையம்பலத்துள் கூத்தாடும் சிவபெருமானுடைய பொன்னடி களைப் போற்றிக் கிளியும் குயிலும் தும்பியும் தெரிந்து தெளிவு அடையும்படிச் சொல்வது போலவும் மணம் மிகுந்த மலர்களை அணிந்த கருமையான கூந்தலும் சிவந்த வாயுமுடைய பெண்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வது போலவும் வேறு துறைகள் வழியாகவும் இறைவன் புகழை வாழ்த்திக்கொண்டு இனிமையா கத் தங்கிக்கொண்டு இருந்த காலத்தில்" எனக்கூறுகின்றுர். மேலே குறிப்பிட்டுள்ள ஆசிரியப்பாவில் பெண்களைப்பற்றிக் குறிப்பிடும் " மருமலர் கருங்குழல் செவ்வாய் மடந்தையர் ஒருவருக்கொருவர் உரைப்பன போலவும் " என்ற அடிகள் திருவெம் பாவையைக் குறிக்கின்றன என்பதை உணரலாம். இவர் தில்லையில் அருளியதாகக் கொள்வதற்கு " தேசன் சிவலோகன் தில்லைச் சிற்றம்பலத்துள் ஈசனுர்க்கு அன்பர் யாம் ஆர் ஏலோர் எம்பாவாய் " " ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன் நல் தில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும் கூத்தன் " என வரும் திருவெம் பாவை அடிகள் இடந் தந்திருக்கலாம் என்று எண்ணவேண்டி யிருக்கின்றது.

இவர்களுக்கெல்லாம் காலத்தால் முற்பட்டவராகிய பெரும்பற்றப்புலியூர் நம்பி தமது திருவால வாயுடையார் திருவிளையாடற் புராணத்தில் திருவெம்பாவையைத் திருப்பெருந்துறையிலேயே அருளிச் செய்ததாகக் கொண்டு,

" திருப்பெருந்துறையில்-இறைவன் திருவருள் பெற்ற பின்னர் பல பதிகங் களையும் பாடி அருமையானதும் பெருமை மிக்கதுமான அப்பட்டினத்திலிருந்து வெளியே வந்து அயலில் உள்ள இடங்களில் நடந்துகொண்டிருந்த அம்மானை முதலிய விளையாட்டுக்களைப் பார்த்துத் திரு அம்மானை, திருப்பொற் சுண்ணம், திருக் கோத்தும்பி, புகழ் மிகுந்த திருத்தெள்ளேணம், திருத்தத்தைச் செய்யுள், திருப்பூ வல்லி, திருஉந்தி, திருத்தோணேக்கம், சிறப்பு மிகுந்த திருவெம்பாவை, மாறு

பாட்டைப் போக்க வல்லதும் மெய்யென்ற சொல்லோடு தொடங்கப்பெறுவதுமான திருச்சதகம் ஆகிய இவைகளை எல்லோராலும் புகழ்ந்து போற்றத்தக்கவராகிய திருவாதவூரடிகள் பாடினர்" எனக் கூறுகின்றனர். இவர் இவ்வாறு கொள்ளுதற்குத் திருப்பெருந்துறையில் உள்ள ஒரு பொய்கைக்கு "மொய்யார் பொய்கை" என்று பெயர் வழங்கி வந்ததாகவும்," மொய்யார் தடம் பொய்கை" என்று திருவெம்பாவையில் கூறப்படுவது இப்பொய்கையேதான் ஆகும் என்றும் செவி வழியாக வந்த பழம் செய்திகளே அடிப்படையாக இருக்கலாம் என்றும் நினைக்கவேண்டியிருக்கிறது.

இவ்வாறு திருவண்ணாமலையிலும், தில்லையிலும், திருப்பெருந்துறையிலும் திருவெம்பாவை அருளிச்செய்ததாகக் கொண்ட ஆசிரியர் எல்லோருங் காலத்தால் மாணிக்கவாசகப்பெருமானுக்குப் பெரிதும் பிற்பட்டவர். ஆனபடியால் அவரவர்கள் கொண்ட கருத்து அவரவர்கள் காலத்திலும் வாழ்ந்துவந்த இடத்திலும் பரவியிருந்த கருத்தாகத்தான் கொள்ளலாமே யொழிய முடிபாக எதனையுங் கொள்வதற்கு இல்லை. திருவெம்பாவை எவ்விடத்திலிருந்து அருளிச்செய்யப்பட்டது என்பதிலிருக்கும் கருத்துவேற்றுமை அதன் தெய்வநலம் ததும்பும் உயர்வையும் பயனையும் ஒரு சிறிதும் மாறுபடச் செய்வதல்ல.

இந்நில உலகவாழ்க்கையில் மக்களுக்கும் தெய்வத்துக்கும் உளதாய தொடர்பைச் சமயத்துறையென்ற ஒரு தனித்துறையில் கருதுவதும் அதற்கேற்றபடி மிக மிகப் பழங்காலந்தொட்டே நடந்துவருவதொன்றாம். மக்கள் வாழ்க்கையில் மேற்கொள்ள வேண்டியவைகளிற் பலதுறைப்பட்ட செயல்களைப் போலில்லாது, சமயத்துறையென்பது மக்கள் நிலவுலகில் இறுதி யெய்திய காலத்திலும் மேற்கொண்டு என்ன நடக்கின்றது என்பதனை ஆராய்ந்து, ஒரு பரந்த நீடிய தொடர்பை மக்கள் வாழ்க்கையில் சிந்திக்கச் செய்வதாகும். இவ்வாறு சிந்தித்து அதன்படி உண்மைகளைக் கண்டு உருகவல்ல ஆன்றோர்களையே "சிந்தை செல்லாச் சேணெடுந் தூரத்து அந்தமில் லின்பத்து அரசாள் வேந்து" என நம் முன்னோர் புகழ்வாராயினர். சமயம் என்பது ஒரு இடத்திற்குள்ளோ, ஒரு காலத்திற்குள்ளோ, கருதவேண்டிய ஒரு சிந்தனையும் நடத்தவேண்டிய ஒரு செயலும் என ஆன்றோர்கள் கொண்டாரில்லை. மக்கள் வாழ்க்கையில் எவ்வெவ்வேலை செய்யினும், எவ்வெம்முறையில் வாழ்க்கை நடத்தினும், நிற்பினும், இருப்பினும், கிடப்பினும் தெய்வ வுணர்ச்சி எல்லா மக்களிடத்தும், அவரவர் நிலைமைக் கேற்பச் சிறிது சிறிதாகத் தோன்றி, வளர்ந்து, பேரின்பத்தை யடையவேண்டுமென்பது உலகத்தின் சமயத்தைப் போற்றிப் பரப்பிய பேரருளாளர்கள் எல்லோருடைய துணிபும் செயலும் ஆம். மக்களிடத்திற் பலபடிகளிலும் தெய்வ உணர்ச்சி பரவுவதற்கு ஆன்றோர்கள் மேற்கொண்ட செயல்கள் பல. அவற்றுள் செய்யுள் வாயிலாகவும், கதைகள் வாயிலாகவும், சிறு நூல்கள் வாயிலாகவும் பரவச்செய்தார்களென்பது உலகமெங்கும் காணக்கூடிய ஓர் உண்மையாகும். இவ்வாறு சிறு இலக்கியங்கள் வாயிலாகவும், செய்யுட்கள் வழியாகவும் தெய்வஉணர்ச்சியை எல்லாமக்களிடத்தும் எளிதாக வளர்க்க முயற்சி செய்த பெரியோர்கள் தமிழ்நாட்டில் எல்லாச் சமயத்திலும் இருந்துவந்திருக்கிறார்கள்.

மக்கள் உள்ளத்திலே எளிதாகப் பயிலப்பட்டு வந்த பாட்டுக்கள் உருவத்தில் அவர்கள் பல உயர்ந்த கருத்துக்களைத் தெளிவித்திருக்கிறார்கள். இத்தகைய எளிய பாட்டுக்களால் உலகில் வளர்ந்து நிலையாக நிற்கும் நன்மைகள் பல. இத்தகைய பாட்டு புருப்பாட்டு, தும்பிப்பாட்டு, தெள்ளேணம், சாழல், அம்மானை, பாவைப் பாட்டு என்று பண்டைய நாட்களில் வழங்கி வந்திருக்கின்றன. அருக சமயத்தைப் பரப்பவந்த ஓரறிஞர் பழங்காலத்தில் பாடியுள்ள ஒரு புருப்பாட்டை இங்குத் தருவது தகுதியுடைத்தாகும்.

" ஏதங்க ணீங்க வெழிலிளம் பிண்டிக்கீழ்ப்—புருவே
வேதங்க ணான்கும் விரித்தான் விரைமலர்மேற்—புருவே
பாதம் பணிந்து பரவுதும் பல்காலும்—புருவே "

இவ்வாறே புத்தரைப்பற்றித் திருவெம்பாவை முறையிற் பாடியுள்ள அவிநயனார் பாட்டொன்றும் கருதத்தக்கதாகும். தொல்காப்பியச் செய்யுளியல் உரையிலும், யாப்பருங்கல விருத்தி யுரையிலும் மேற்கோள் சூத்திரங்களிலும் பாவைப் பாட்டைப்பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன. நிகண்டுகளில் மிகவும் தொன்மையானதாகிய பிங்கல நிகண்டில் பெண்பாற் பிள்ளைத்தமிழுக்கு உறுப்புக் கூறுகிற இடத்தில் குளிர்ந்த நீரிலே மூழ்குதலும், பாவை ஆடலும் இளம்பெண்கள் விளையாட்டுச் செயல்களில் வைத்துச் செய்யுள் இயற்றவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இதனால், பாவைப் பாட்டென்பது பண்டைக்காலந் தொட்டுத் தமிழ்நாட்டிற் பெருவழக்கில் இருந்துவந்ததென்பதும், அதனைச் சிவபெருமான் திருவடியைச் சிந்திக்கும் முறையில் ஒரு புத்துயிர் கொடுத்து மணிவாசகப்பெருமான் அருளிச் செய்திருக்கின்றார் என்பதும் தெரியலாம்.

இத்தகைய பழம்பெருமை வாய்ந்த பாவைப்பாட்டை மணிவாசகப்பெருமான் சமயத்துறைக்குப் பயன்படுத்திக்கொண்டதுபோலவே ஸ்ரீ ஆண்டாளும் பயன்படுத்தியிருக்கின்றார். இது திருப்பாவை என்னும் பெயரோடு அருளிச் செயல் நூல்களில் (நாலாயிரப் பிரபந்தம்) ஒரு தனி இடம் பெற்றிருக்கின்றது. இனிய உணர்ச்சிமிக்க பொருட் செறிவுடைய முப்பது செய்யுட்களால் அமைந்துள்ளது. இதனை மார்கழித் திங்களில் நாள் ஒன்றிற்கு ஒரு பாட்டாக வைணவர்கள் ஓதிவருகின்றார்கள். இந்நூலுக்குப் பெரிய வாச்சான்பிள்ளை, அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் முதலிய பெரியோர்கள் மணிப்பிரவாள நடையில் சிறப்புமிக்க உரை எழுதித் தந்துள்ளார்கள். அவர்கள் உரையினால் இத்திருப்பாவையில் காணப்பெறும் சமய நோன்புக்கு வேதத்தில் விதியில்லை என்றும், ஆன்றோர்களது பழக்க வழக்கங்களைக் கொண்டே கொண்டாடப்பெறுகிறது என்றும் இதனாலேயேதான் " மேலையார் செய்வனகள் " என்று ஆண்டாள் அருளிச் செய்துள்ளார் என்றும் குறிப்பிடுவதைக் கொண்டு இந்நோன்பு தமிழ்நாட்டிலேயே தோன்றிப் பின்னர் வேற்றிடங்களில் பரவியிருக்கலாமென வுணரக்கிடக்கின்றது. ஆயர்பாடி மழையில்லாது வறண்டு வருந்திய காலத்து மழையை வேண்டி ஆயர்முதியோர்களது ஆணையின்படி ஆயர் கன்னியர்கள் இந்த நோன்பை மேற்கொண்டார்கள் என்பதும், இந்நோன்பால் கன்னியர்கள் விரும்பிய பயன் கண்ணனைத் தலைவனாகக் கொள்ளவேண்டும் என்பதும் உரையால் தெளியலாம்.

பாகவதத்தில் கார்த்தியாயினி தேவியை மணலால் பாவை உருவில் வைத்து ஆயர் கன்னியர்கள் நோன்பு எடுத்தார்கள் என ஒரு குறிப்பும் காணப்படுகிறது. இம்மேற் குறிப்புக்களால் ஆண்டாள் திருப்பாவையின் நோக்கம் மழை பொழிய வேண்டுவதும் தக்க தலைவனைப் பெறவேண்டுவதும் இவற்றை அடைவதற்குக் கார்த்தியாயினியை மணலால் பாவை வடிவில் அமைத்து வைகறையில் நீராடி வணங்கும் நோன்பை மேற்கொள்வது என்பதும் சுருக்கமாகக் கொள்ளலாம். திருவெம்பாவையைப் பயிலும்போதும் கன்னியர்கள் நாடு செழிக்க மழை வேண்டினர் என்பதும் தக்க தலைவர்களைப் பெறத் திருவருளை வேண்டினர்கள் என்பதும் தலைப்பில் குறிப்பிட்டிருக்கும் சக்தியை வியந்தது என்னும் குறிப்பினால் இது அம்மையின் தொடர்புடையது என்பதும் தெரியலாம். இவை இவ்விரு நூல்களுக்கும் பொதுத் தன்மைகளாகும். தமிழ்நாட்டு மக்களில் சைவரும் வைணவர்களுமே பெருந் தொகையினராகும். இவர்களால் அஃதாவது தமிழ்மக்களால் இப்பாவைப் பாடல் எவ்வளவு உயர்வாகக் கருதப்பெற்று வருகின்றதென்பதனைப் பக்தி வெள்ளம் பரவ அருள் தொண்டாற்றி வைணவ சமயமே "எம்பெருமானார் தரிசனம்" என்னும் பெயரால் வழங்கி வரும்படிச் செய்த உலகப் பெருமக்களுள் ஒருவராகிய இராமானுசர், அருளிச்செயல் பாட்டுக்கள் நாலாயிரத்துள்ளும் திருப்பாவையில் ஈடுபட்டதினால் "திருப்பாவைசீயர்" எனப் பெயரும் பெறுவாராயின் இதன் பெருமையை நாம் என்னவென்று சொல்வது. இவ்வாறே சைவர்களுள்ளும் வழங்கும் ஒரு வரலாற்றில் சிவபெருமான் மாணிக்கவாசகருக்கு ஒரு கோவை பாடவேண்டும் என்று கட்டளையிட்டபோது "பாவை பாடிய வாயினால் ஒரு கோவை பாடுக!" என்றனர் என்று கூறப்பெறுகிறது. இதனால் சைவர்கள் இத்திருவெம்பாவையை எவ்வளவு உயர்வாகக் கருதிவருகின்றார்கள் என்பதும் தெரியும்.

இத்தகைய பாவைப்பாட்டு நீராடுதலையே அடிப்படையாகக்கொண்டு எழுந்தமையின் தமிழகத்தில் நீராடுதலை எவ்வளவு போற்றி வந்தார்கள் என்பதனைக் கருதுவதும் தொடர்புடையதேயாம். வெப்பம் மிகுந்த நாடுகளில் தண்புனலுக்கு இயற்கையாகவே ஒரு தனிச்சிறப்பு உண்டென்பதும் புனலாடுவதில் மக்கள் பெரு விருப்பம் உடையவர்களாய் இருப்பார்கள் என்பதும் நன்கு தெரிந்த செய்தியேயாகும்.

தமிழ்நாட்டில் இந்நீராடுதல் என்பது மக்கள் தொகுதியிலும், தனி மக்களிடத்தும் பெரிதும் பாராட்டப்பெற்றிருக்கிறது. மணிமேகலைக் காப்பியத்துள் பாட்டுடைத் தலைவி எல்லாக் கலைகளிலும் வல்லவளாய் விளங்கினாள் என்பதனைக் கூறவந்த சாத்தனார் சிறந்த கலைகளைத் தனித்தனியாகவும் ஏனையவற்றைப் பொதுவாகவும் கூறுகின்றவர் "சுந்தரச் சுண்ணமும் தூநீ ராடலும்" என்று நீராடுதலைத் தனிக் கலையாக எடுத்துக்கூறுகின்றார். காவிரிப்பூம்பட்டினத்தில் † கரிகால் வளவன் புதுப் புனல் ஆடுதலைப் பெரிய திருவிழாவாகக் கொண்டாடிவந்தான் என்பதும் ஒரு விழாவில் அவன் மருமகனாகிய சேரர் இளங்கோமான் ஆட்டனத்தியைப் புனல்

---

† சிலம்பு. கடலாடு காதை: விண்பொரு பெரும்புகழ்க் கரிகால் வளவன், தண்பதங் கொள் தலைநாட்போல்.

வெளவியதும், அவ்வளவன் மகள் ஆதிமந்தியின் கற்பின் திண்மையால் அவன் மீண்டும் உயிர்பெற்று வந்தான் என்பதும் சிலப்பதிகாரம், அகநானூறு முதலிய சங்க நூல்களில் காணப்பெறும் வரலாற்றுச் செய்திகளாகும். காவிரியாற்றை வாழ்த்தும்போது இளங்கோவடிகள் ‡ உழவர்கள் உழவுத்தொழில் செய்வதினுல் உண்டாகின்ற ஒலியும், மதகுகள் வழியாகவும், கரைகளை உடைத்துக்கொண்டும் நீர் செல்வதால் உண்டாகும் ஒலியும், புதுப்புனலாடி மகிழ்ந்து திருவிழாக் கொண் டாடுவாருடைய ஆரவாரத்தால் ஏற்படும் ஒலியும் வான் ஓங்க நடந்தாய் காவிரி அன்னையே ! நீ வாழ்வாயாக ! எனக் கூறுகின்றுர். இதில் புதுப்புனல் ஆட்டத்தின் ஆரவாரம் குறிப்பிட்டது கருதத்தக்கது.

நீராடுகின்றதை விழாவாகக் கொண்டாடும் நீரணி விழாவின் செய்திகள் கொங்குவேள் மாக்கதையில் மிக விரிவாகக் கூறப்பட்டுள்ளவைகளைப் பார்ப்போமா னுல் நாகரிகம் மிகுந்ததாகக் கூறப்பெறும் இந்நாட்களில் நாகரிகம் மிகுந்து இன் பத்துறையில் பெரும் பொருளைச் செலவழித்து மகிழும் நாடுகளைக்கூட காண இய லாது. பெருங்கதையுள் கூறப்பட்டிருக்கும் நீர் விளையாட்டு நாகரிகத்திற்கு, இப் பொழுது நாகரிகத்தில் தலையணியாக விளங்கும் அமெரிக்கா (ஹாலிவுட்),பிரான்சு, இத்தாலி முதலிய நாடுகளில் காணப்படுபவை மிகமிகப் பிற்போக்கானவை எனக் கூறலாம். ஒரு சிறிது அவற்றை இங்குக் குறிப்பிடுதல் இந்நூலுக்கு ஏற்றுக்கொள் ளக்கூடிய தென்பதாகும்.

அரசன் நீரணி விழாக் கொண்டாடுவதென எண்ணினுன். இயற்கையாகவே அவ்விழாவில் ஆர்வமுடைய நகர மக்களெல்லாம் மிக்க குதூகலத்துடன் செய்ய வேண்டியவைகளைச் செய்தார்கள். நீரணி விழா இருபத்தொரு நாள் கொண்டாடுவ தென அரசன் முடிபு செய்தான். நாடெல்லாம் விழாவினுல் மகிழ்ந்திருக்கும் காலத்தில் எத்தகைய பெருங்குற்றம் செய்து நாட்டைவிட்டு அப்புறப்படுத்தப் பட்டவர்களும் நாட்டிற்குள் வந்து விழாவில் மகிழ அரசன் எண்ணினுன். அவ்விருபத் தொரு நாட்களில் தன்னுடைய மெய்காப்பாளரைத் தவிர வேறு எவரும் படைக்கலம் கைக்கொள்ளக் கூடாதெனக் கட்டளையிட்டான். அரசனும் அரசகுமாரர்களும் காவிதிப்பட்டம் எட்டிப்பட்டம் என்பன பெற்ற வேளாள வணிகப் பெருஞ்செல்வர்களும் நீர் விழாவிற்குச் செல்லும்போது அவர் களுடைய வேலையாட்கள் நெருங்கியிருந்த கூட்டத்தை விலக்கினுர்கள். வழியில் கூடியிருந்த இளைஞர்கள் நீர்விழா எங்கட்கே உரியது என்று உரிமை பாராட்டினுர் கள். நீர் விழாவில் ஆற்றங்கரையிலும், பொய்கைக் கரைகளிலும் பலவகையான வனப்பும், ஓவியமும் மிக்க மாடங்கள் அமைக்கப்பெற்றிருந்தன. அவற்றுள் உள்ளே நுழைந்தவர்களை எங்கு இருக்கின்றுர்கள் என்று காணமுடியாத கரந் துறை மாடமும் மகளிர்கள் ஏணி வழியாக மேல் உயரத்தில் ஏறி அங்கிருந்து நீரில் பாய்ந்து விளையாடுதற்கென அமைத்த நீர்பாய் மாடமும் இத்தகைய இன்னும் தனிச்

‡ உழவரோதை மத கோதையுடை நீரோதை தண் பதங்கொள்
விழவரோதை சிறந்தார்ப்ப நடந்தாய் வாழி காவேரி.

சிறப்பு வாய்ந்த மாடங்களும் இருந்தன. விழாவிற்குச் செல்கின்றவர்கள் உழைக் கலன் என்று சொல்வதாகிய தங்கள் கையுடன் வைத்திருக்கக்கூடிய பொன், வெள்ளியால் ஆகிய கலன்களைக் கையுடன் கொண்டு சென்றார்கள். இவைகளைத் தவிரத் தங்கள் ஏவலாளராகிய கூனர் குறளர்களிடத்தும் சிலபொருள்களைக் கொடுத் துக் கொண்டுவரச் செய்தார்கள். அப்பொருள்களின் பெயர் இக்காலத்துக்கு வியப் பைக் கொடுக்கக்கூடியனவாக இருத்தலின் சில குறிப்பிடுவோம். செம்பு, கவரி, குஞ்சம், அடப்பை, அணிகலப் பேழை, ஆடை வெட்டி, மதுமகிழ் குடம், பூப்பெய் செம்பு, அகில்துண்டு, சீப்பொடு சிக்கம் (சீப்புக்களை வைக்கும் உறி), காப்பியகோசம், கட்டில், பள்ளி, இணைவட்டு, முகக்கண்ணாடி, பந்து, பாவை, போகக்கலப்பை முத லியனவாம். நாழி பார்ப்பதற்காகக் கடிகையாரம் மார்பில் மின்னும்படி அணிந் திருந்தார்கள். நீரில் விளையாடும்போது ஒருவரிடை யொருவர் தண்ணீரை யெற்றி எறிவதற்காகச் சிவிலி, தாரை, நாழிகைத் தூம்பு, பந்து, வட்டு, கோடு முதலிய நீர் வீசு கருவிகளையுங் கொண்டுசென்றார்கள். நீரில் விளையாடும்போது எவ்வெப்பொருள் களைக் கொண்டு ஒருவர்மேல் ஒருவர் எறிவது, தூற்றுவது, தெளிப்பது, அடிப்பது என்று சில வரையறை வைத்திருந்தார்கள். சந்தனக் குழம்பை யெறிவார்கள். சுண்ணத்தைத் தூற்றுவார்கள். பூப்பந்தால் அடிப்பார்கள். பனி நீரைத் தெளிப் பார்கள். முதல்முதல் நீரில் முழுகும்போது அவரவர் தகுதிக்கேற்பப் பலவகையான தானங்களைச் செய்தனர். எழுவகைப் பருவ மங்கையர்களும், அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் பெண்களும் நீராடிய முறை மிகவும் அழகாகவும் நாகரிகமாக வும் கூறப்பட்டிருக்கிறது. வெளியிடங்களிலும் எல்லாரும் கூட்டமாக இருக்கின்ற இடங்களிலும் நம்நாட்டுப் பெண்கள் நீராடுவதை அயலவர் ஏளனம் செய்வதுண்டு. சில ஆண்டுகளுக்குமுன்பு இன்பத்துறை நாகரிகத்தின் தலையணி என்று சொல்லிக் கொள்ளும் அமெரிக்காவினது ஹாலிவுட்டிலிருந்து நவநாகரிக மணிகள் என்னி டம் பேசிக்கொண்டிருக்கும்போது இதனைக் குறிப்பிட்டார்கள். மறுநாள் சென்னைக் கடற்கரையில் உவாநீராடுதற்கு (அமாவாசை) நம் பெண்கள் பலர் வந்திருந்த பொழுது அவ்வமெரிக்காப் பெண்களும் உடன் சென்று கூர்ந்து கவனித்தார்கள். பின்னர் என்னிடம் வந்து " நாங்கள் அறியாது எண்ணினோம். நீராடுதலும், ஆடை யுடுத்தலும், உடலைத் தேய்த்தலும் ஒரு சிறந்த கலையாக உங்கள் பெண்களிடம் இருந்துவருகிறது " என்று வியந்ததை இங்குக் குறிப்பிட என்மனம் தூண்டியது. பின்னர் திருவையாற்றில் காவிரியிலும், தஞ்சையில் வெண்ணாற்றிலும் பெண்கள் நீராடுவதைப் பார்த்து அளவுகடந்து போற்றினார்கள். அதில் ஒருவர் சொன்னது " அமைதி, தூய்மை, உள்ளதைக்கொண்டு மகிழ்ந்து பெருமையடைதல் முதலிய நற்குணங்கட்கு நம் பெண்கள் இருப்பிடம் " எனக் கூறினர்.

பெருஞ்சிறப்புடன் அரசன் தலைமையில் நடக்கும் நீரணி விழாவைத் தவிர மக்களால் தனித்தும் கூடியும் பல பருவங்களில் நீராடு விழா நிகழ்ந்துவந்தன. அவை : இளவேனில் நீராடுதல், சித்திரை நீராடுதல், கார் நீராடுதல், ஆதிரை நீ ராடுதல், தை நீராடுதல் என்பன அவற்றுள் சிலவாகும். இவற்றுள் தை நீராடலே நம் திருவெம்பாவைக்கும், திருப்பாவைக்கும் அடிப்படையாக இருப்பதால் பழந் தமிழ் நூல்களில் வரும் குறிப்புக்களைத் தனித்தனியாகப் பார்த்துப் பின்னர் அவை களிலுள்ள பொதுத்தன்மையை ஆராய்ந்து தொகுப்போமானால் சில நல்ல பழைய

வழக்கங்களையும் அவை எவ்வெவ்வகையாக மாறுபட்டு இக்காலத்தில் வழங்குகின்றன என்பதனையும் நாம் தெரிந்துகொள்ள இயலும்.

‡ புறநானூற்றுள் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைக் கோவூர் கிழார் குறிப்பிடும்போது "தைத்திங்கள் காலத்திய குளிர்ச்சிமிக்க பொய்கையே போலக் கொடுக்கக் கொடுக்கக் குறைபடாத நெல்லும் நீருமாகிய இருவகைச் செல்வங்கள் பொருந்திய சிறப்புமிக்க நகரையுடைய கிள்ளிவளவன்" எனக் கூறினுர். இதில் பொதுவாகத் தைமாதத்திய தண்மைமிக்க பொய்கைக்கு ஒரு சிறப்பு பண்டைய நாட்களில் இருந்துவந்திருக்கிறது என்பது தெரிகிறது.

* நற்றிணைச் செய்யுள் ஒன்றில் தலைவனுடைய மலையைப்பற்றிக் கூறும் போது "மலைநாட்டு வாழும் கொடிபோன்ற மகளிர் காவல் காத்துவந்த பக்கமலைகளிலே பசிய தினைப் பயிருடைய முதல்முதலாக விளைந்த பெரிய கதிரைப் பறித்துக் கொண்டுபோன பெண்குரங்கு மரங்களில் தாவுதலையன்றி வேறொன்றும் கல்லாத ஆண்குரங்கோடு பெரியமலைமீதேறி அக்கதிரைத் தன் கையால் நெருடி தன்னுடைய திரைத்த முகவாயையுடைய கன்னங்களுக்குள்ளே அடைத்துக்கொண்டு பெய்கின்ற மழையில் நனைந்த தோற்றத்தையுடையதாக இருக்கும் தோற்றம், தை மாதத்து நீராடி நோன்பினுல் அதிக வுணவுகளை யுண்டால் நோன்பிற்கு இடையூறு வருமென்றஞ்சிப் பொரி முதலியவைகளை அடக்கிக்கொண்டு தோன்றும் நோன்பிகளைப்போல் தோன்றும் நாட்டையுடையவன்" எனக் குறிப்பிடுவதில் தை மாதத்தில் நீராடுவதும், நோன்பியர் உணவை உண்ணமாட்டார்களென்பதும் தெரிவதோடு நீரில் மூழ்கிய பின்னர் உடலைத் துவட்டமாட்டார்கள் என்று ஊகிக்கவும் இடமுண்டு.

† குறுந்தொகையுள் தலைவியின்பால் முன்பு வைத்துள்ள அன்பைத் தலைவன் மாற்றினுன் எனக் குறிப்பிடும் செய்யுள் ஒன்றில் "தலைவ, நீ முன்பு வேப்பின் காயை என் தோழி கொடுத்தாலும் அதனை இனிமைமிக்க சர்க்கரைக்கட்டி என்று மகிழ்ந்து ஏற்றுக்கொண்டாய். இப்பொழுது பாரிவள்ளலின் பறம்புமலையில் தைத்

---

‡ புறம் 70. தைஇத்திங்கள் தண்கயம் போலக்
கொளக்கொளக் குறைபடாக் கூழுடை வியனகர்.

* நற்றிணை 22. "கொடிச்சி காக்கும் அடுக்கற் பைந்தினை, முந்துவிளை பெருங்குரல் கொண்ட மந்தி, கல்லாக் கடுவனொடு நல்வரை யேறி, யங்கை நிறைய ஞெமிடிக் கொண்டுதன், திரையணற் கொடுங்கவுள் நிறைய முக்கி, வான்பெய னனைந்த புறத்த நோன்பியர், தையூண் இருக்கையிற் றோன்று நாடன், வந்தனன் வாழி தோழி யுலகங், கயங்க ணற்ற பைதறு காலைப், பீளொடு திரங்கிய நெல்லிற்கு, நள்ளென் யாமத்து மழைபொழிந் தாங்கே."

† குறுந்தொகை. 196. "வேம்பின் பைங்காயென் றோழி தரினே, தேம்பூங் கட்டி யென்றனி ரினியே, பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர், தைஇத் திங்கட் டண்ணிய தரினும், வெய்ய வுவர்க்கு மென்றனிர், ஐய வற்றா லன்பின் பாலே."

திங்களில் கிடைக்கக்கூடிய தண்மைமிக்க சுனையின் தெளிநீரைக் கொடுத்தாலும் சூடுடையதாகவும், உவர்ப்புடையதாகவும் இருக்கின்றது என்கிறாய். உன் அன்பு திரிந்ததெப்படி ? உன் அன்பை என்னென்றுரைப்பது ?" என்ற செய்யுளில் தைத் திங்களின் தண்ணீரின் இனிமையையும் அந்நாளில் பாரிவள்ளலின் பறம்பு மலை யில் உள்ள சுனைநீரின் தனிச்சிறப்பினையும் குறிப்பிடுகின்றார். காதலர்களுக்குள்ள அன்பின் உயர்வுக்குத் தைத்தண்ணீர் வழங்குவது சிறிது ஆழ்ந்து சிந்தித்துப் பொருள் தெரிந்து கொள்ளக்கூடியது.

நற்றிணையில் மற்றொரு செய்யுளில் தைத்திங்களில் தண்கயத்தில் நீராடும் நோன்புடையளாய ஒரு கன்னியை அவளுடைய உண்மைக்காதலன் குறிப்பிடுவது மிகவும் இயற்கையாகவும் இனிமையாகவும் இருக்கின்றது :

* "பரந்த தலையையுடைய கரிய எருமையின் பாலின் அளவையும் இனிமை யையும் பெருக்கவேண்டும் என்னும் எண்ணத்தினால் கன்றுகளைத் தொழுவத்து விட்டுவிட்டுப் பனிப்புல் மேய்வதற்காக ஓட்டிக்கொண்டு செல்லும் ஊரிலுள்ள மாடு மேய்க்கும் சிறுவர்கள் புறப்படுகின்ற விடிவதற்கு முன்னான நிலந்தெளியாத வை கறைப்பொழுதில் என் அன்பின் அறிகுறியாகத் தழையும் மாலையும் கொடுத்த வன் இவன். இவனையே தலைவனாக அடையவேண்டும் என்னும் வேண்டுதலுடன் தன்னுடைய நாணம் தடைப்படுத்த, அணிகளை அணிந்த தோழிகளுடன் தைத்திங்க ளிலே தண்ணிய நீரிலே படிந்து நீராடுகின்ற பெரிய தோளையுடைய சிறிய பெண்ணே யல்லாது நான் அடைந்துள்ள பிணிக்கு வேறு மருந்தில்லை." எனக் குறிப்பிடப்பட் டிருக்கிறது. இதில் தைத்திங்களில் கன்னியர் நீராடுவதும் களங்கமற்று எவனையும் தலைவனாகக் கருத்தில் கொள்ளாராய்த் தக்க தலைவனை ஆண்டவன் அருளவேண் டும் என்னும் வேண்டுதலை விடுத்துத் தான் காதலித்த அன்புடையனாகிய ஒருதலை வன்பேரில் மனம் பதிந்து நீராடுவதால் நாணம் தன்னைத் தடைசெய்வதையும் இங்குக் குறிப்பிடுவது கருதத்தக்கது.

‡ குறிஞ்சிக்கலியுள், தன்னை ஒருவாறு தலைவி புறக்கணித்தாள் என்று கரு தித் தலைவன் கூறுகின்றதாக வரும் பகுதியில்," யான் மிகவும் மனமாற்றத்தை அடைந்து மயக்கமுற்ற காலத்து நீயும் என்னோடு சேர்ந்து மயக்கமுற்று, எதனால் யான் இவ்வாறு மயக்கமுற்றேனென்று உள்ளன்புடன் கேட்டு ஆறுதல் சொல்லா

---

* நற்றிணை. 80. மன்ற எருமை மலர்தலைக் காரா, னின்றீம் பாற்பயங் கொண்மார் கன்றுவிட், டூர்க்குறு மாக்கள் மேற்கொண்டு கழியும், பெரும்புலர் விடியலில் விரும்பிப் போத்தந்து, தழையுந் தாருந் தந்தன னிவனென, விழையணி யாயமொடு தகுநாண் தடைஇத், தைஇத் திங்கள் தண்கயம் படியும், பெருந்தோட் குறுமக ளல்லது, மருந்து பிறிதில்லையா னுற்ற நோய்க்கே.

‡ குறிஞ்சி. 59. மருளியான் மருளுற இவனுற்ற தெவனென்னும்,
அருளிலை யிவட்கென அயலார்நிற் பழிக்குங்கால்
வையெயிற் றவர்நாப்பண் வகையணிப் பொலிந்துநீ
தையில் நீராடிய தவந்தலைப் படுவாயோ.

விட்டால், தக்க நாயகனைப் பெறவேண்டும்; அவனுக்கே தொண்டு செய்யவேண்டும் என்றெல்லாம் மனத்தெண்ணித் தை நீராடுதலாய தவத்தைச் செய்த கூரிய பற்களையுடைய கன்னிப்பெண்களுடன் கலந்து தைத்திங்களில் நீராடிய நோன்பால் அடையத்தக்க நற்பெயரைப் பெற்றவள் ஆவாயோ?" எனக் களந்து கூறுகின்ருன். இதில் தை நீராடுவதைப் பெண்கட்குரிய தவம் எனக் குறிப்பித்ததும், அத்தவத்தின் பயன் தக்க தலைவனை யடைந்து உள்ளம் ஒத்து என்றும் வாழ்வதே என்பதும் பெறப்படுகின்றன.

*ஐங்குறுநூற்றுச் செய்யுள் ஒன்றில், தலைவனது ஒழுங்கற்ற செயலைக் கண்டு வெகுண்டு தோழி கூறியதாக வரும் பகுதியில்," மணமிக்க மலர்களைச் சூடிய கூந்தலையுடைய பெண்கள் கூட்டங்கூட்டமாக வந்து நீராடும் தைத்திங்களினுடைய தண்ணிய பொய்கைபோலிருந்தது உன் நெறியற்ற மார்பு. இவ்வாறு நீ ஒழுகும் தவறுபட்ட ஒழுக்கத்தைப் பிறர் சொல்லக்கேட்டாலும் அளவுகடந்து வெகுளுவாள் என் தலைவி. நேரில் கண்டால் அவள் நிலை என்னும் ?" இதில் தைத்திங்களில் மகளிர் பலரும் தண்கயத்தாடுவர் என்பது குறிப்பிடப்படுகின்றது.

பழங்காலத்து நாட்டில் வழங்கிய செய்திகளும் சொற்றொடர்களும் இலக்கண நூல்களில் எடுத்துக்காட்டாகக் காட்டப்பெறுவதனைச் சிறிது ஆராயின் அக்காலத்து மக்கள் எல்லோரிடமும் பரவியிருந்த சில செய்திகளைத் தெரிந்துகொள்ளலாம். தொல்காப்பியத்துள் இளம்பூரணர் உரையினும், தெய்வச்சிலையார் உரையினும், நேமிநாத இலக்கண உரையினும், நன்னூல் மயிலைநாதருரையினும், கீழ்க்குறிப்பிட்ட சில சொற்களை எடுத்து ஆள்வதனைக் காணலாம்.

ஆண்பாலையும் பெண்பாலையும் பொதுவாக உணர்த்தக்கூடிய பெயர்ச்சொற்களும் வினைச்சொற்களும், அச்சொற்களால் தெரியப்பெறும் பெயர், தொழில் இவற்றைக்கொண்டு ஆண்பால் பெண்பாலுள் ஒரு பாலை விலக்கி ஒரு பாலையே கொள்ளவேண்டும் என்பது விதியும் மரபுமாகும் என்பதனைத் தெரிவிப்பபதற்கு எடுத்துக்காட்டும் " இன்று இவ்வூராரெல்லாம் தை நீராடுப " (இளம் பூரணம்), " இவ்வூர் மக்களெல்லாம் தைநீராடினர் என்றவழி பெண்பால் உணரப்பட்டது " (தெய்வச்சிலையார்), " இன்று இச்சேரியார் தைநீராடுவர்" என்றல் உயர்திணை இடத்துத் தொழிலாற் ருேன்றும் ஆணெழி மிகுசொல்" (நேமிநாதம்), "மருவூரார் தை நீராடினர், ஆதிரை நீராடினர் " (நன்னூல், மயிலைநாதர்) இச்சொற்றொடர்களால் தை நீராடுதல் என்பது பெண்கட்கே உரியதானபடியால் மக்கள் என்ற சொல்லும், நீராடினர் என்ற சொல்லும் மரபையொட்டிப் பெண்மக்களையே குறிக்கும் என்பதனைக் கற்பிக்கின்ருர். இவற்ருல் தை நீராடுதல் என்பது முன்னுட்களில் பெருவழக்கில் இருந்ததென்பதும் பெண்கட்கே உரியதென்பதும் பெறப்படுகின்றன.

---

* ஐங்குறுநூறு. 84.

நறுவீ ஐம்பால் மகளி ராடும்
தைஇத் தண்கயம் போலப்
பலர்படிந் துண்ணும் பரத்தை மார்பே.

இன்னும் பரிபாடலுள்ளும், சிலப்பதிகாரத்துள்ளும் காணப்பெறும் குறிப்புக் களால் நாம் தெரிந்துகொள்ளக்கூடிய சிலசெய்திகள் தைநீராடலைச் சிறிது விளக்கு கின்றன. பரிபாடலில் :" கனைப்பதுபோன்ற அதிர்ச்சி மிகுந்த பேரொலி வானத்தில் நிறைந்த கார் காலம் கழிந்தது. நடுக்கத்தைச் செய்யும் குளிர்ச்சிமிக்க பனிபெய் கின்ற காலந் தொடங்கிற்று. மழைபெய்தல் குறைந்து கதிரவன் வெப்பமும் மிகாத மார்கழித் திங்களில் திருவாதிரை நாளில் மதியில் தோன்றும் மறுமுழுமையும் தோன்றுதற்கு இடந்தந்து முழுஉருவில் திங்கள் தோன்றும் நாளும் கூடுகிறதைப் பரந்த நூல்களை ஆராய்ந்து உணர்ந்த அழகிய தன்மையையுடைய அறவோர் சிவ பெருமானுக்குச் செய்யவேண்டிய திருவிழாவைத் தொடங்கினுர்கள். மார்பில் மூன்று புரியாக உடைய நூலை யணிந்த அந்தணர் என்ற மரபினரும், அழகிய கலங்களைக் கையில் எடுத்தார்கள். அழகிய வளையை யணிந்த கன்னிப்பெண்கள் பரந்த நிலவுலகம் மழையில்லாது வெம்பக்கூடாது என்று இறைவனை வேண்டி " அம்பா " ஆடலைத் தொடங்கினுர்கள். செய்யவேண்டிய சடங்குகளை எவ்வாறு செய்வதென நன்கு உணர்ந்த வயதுமுதிர்ந்த பெண்டிர் அம்பா ஆடலின் முறை யைக் கன்னியர்க்கு அறிவித்தார்கள் " என வைகையாற்றில் மார்கழித் திங்கள் திருவாதிரை நாளில் கன்னியர்கள் மழைபெய்யச் சிவபெருமானை வேண்டிச் சில முறைகளைக் கைக்கொண்டு நீராடினுர்கள் எனத் தெரிகிறது.

சிலப்பதிகாரத்துள் கணவனை இழந்த கண்ணகி தான் பிறந்த காவிரிப்பூம்பட் டினத்தின் கற்புடைய மங்கையர்களை நினைத்துக் கதறும்பொழுது காவிரிக்கரையிலே வைத்திருந்த மணலாற் செய்த பாவையை "இந்தப் பாவை உன் கணவன் ஆகும்" என்று உடனிருந்த தோழிப்பெண்கள் சொல்ல, அந்தப்பெண்கள் எல்லாம் வீட்டுக் குத் திரும்பிச்செல்லவும் தான் ஒருத்திமட்டில் தண்ணீரால் அந்த பாவை சிதை வுருவண்ணம் காத்து நின்ற கற்புடை மங்கை என ஒரு செய்தி காணப்படுகின்றது. இதே செய்தி சிறிது விளக்கமாகப் பட்டினத்துப்பிள்ளை புராணத்தில் " வன்னி மரத்தையும், மடப்பள்ளியையும் சான்ருக வரவழைத்த கற்பரசியும், நிலைபெற்ற காவிரியாற்றின் மணலாற் செய்யப்பெற்ற பாவையை, உன்னுடைய கணவன் இப் பாவைதான் என உடன்வந்த தோழியர்கள் சொல்ல அவர்களெல்லாம் வீட்டுக்குத் திரும்பவும் தான்மட்டும் நீர் அலையினுல் அந்தப் பாவை கரையாதவண்ணம் காத் திருந்த திருமகளையொத்த கற்பரசியும் பிறந்த இடம் இந்தக் காவிரிப்பூம்பட்டின மேயாகும் என்று கூறப்படுகிறது. மேலே குறிப்பிட்ட இவ்விரு குறிப்புக்களையும் சிறிது விளக்கமாகப் பார்ப்போமானுல் இச்செய்திக்கு அடிப்படை வரலாற்றைச் சுருக்க மாகக் கீழ்க்கண்டவாறு கூறலாம்." காவிரிப்பூம்பட்டினத்திற் காலைப்பொழுதில் கன்னிப்பெண்களெல்லாம் ஒன்று சேர்ந்து காவிரியாற்றுக்கு நீராடப்போவார்கள். பெரும்பாலும் காவிரியில் நீர்ப்பெருக்கமும் சுருக்கமுமில்லாது, சில பகுதி நீரும் சில பகுதி மணலுமாக இருக்கக்கூடிய மார்கழித் திங்களிற்ருன் அதிக ஊக்கத் துடன் செல்வார்கள். நீராடும்போது கடவுளை எண்ணுவார்கள். நீராடுமிடங்களிலெல் லாம் கடவுள் தன் உருவத்தை மறைத்துக்கொண்டு நிற்பார் என்பது அவர்களது நம்பிக்கை. நீராடிய பின்னர் மணலில் தெய்வத்தை ஓர் உருவில் அமைத்து வழி பட எண்ணி, மணலால் ஒரு பாவை செய்வார்கள். அது இப்போதைய சிவலிங்க உருவத்திற்ருன் இயற்கையாக அமையும். நீராடிய பெண்களெல்லாம் அந்தப்

பாவையை வணங்குவார்கள். அப்பொழுது தாங்கள் வாழ்க்கைப்பட வேண்டிய நிலேயைப்பற்றியுந் தங்களுக்கு வரக்கூடிய தலைவரைப்பற்றியும் பேசுவதுண்டு.காமக் குறிப்பில்லாத கன்னியர்களானபடியால் விளையாட்டாகப் பேசுவதுமுண்டு. ஒருநாள் பாவையை வழிபட்டு வீட்டுக்குத் திரும்பும்போது எல்லாப் பெண்களும் புறப்பட்டு விட்டார்கள் ; ஒரு கன்னிகை மட்டும் அவர்கள் புறப்பட்டதை யறியாமல் கண்ணை மூடிக்கொண்டே பாவையைக் கும்பிட்டுக்கொண்டிருந்தாள். ஒரு பெண் துடுக்காக அவள் வரமாட்டாள், இந்தப் பாவைதான் அவள் கணவனென்று கூறினுள். உடனே எல்லாப் பெண்களும் விளையாட்டாக ஆம் ஆம் என்று நகைத்தார்கள்.கும் பிட்டுக் கண்ணை மூடிக்கொண்டிருந்த கன்னிகை கண்ணை விழித்தாள். எல்லோ ரும் சொல்வதைக் கேட்டாள். தோழியர்களே ! இது தெய்வம் நிறைந்த இடம், நீங்கள் எல்லோரும் இவ்வாறு கூறுவீர்களானுல் அது ஆண்டவன் திருவருளே. நீங்கள் வீட்டுக்குச் செல்லுங்கள். நான் இப்பாவையைத் தனித்துவிட்டிருக்க முடி யாது என்று அவ்விடத்திலே நின்றுள். பெண்களெல்லாம் வீட்டிற்குத் திரும்பி விட்டார்கள். தண்ணீர் சிறிது பெருக ஆரம்பித்தது. ஒருக்கால் பாவையை அழித்து விடுமோ என்று பயந்து கையினுல் வாரிவாரி வேறு பக்கமாகத் திருப்பிக்கொண் டிருந்தாள். தண்ணீர் இருந்தாற்போன்றிருந்து அதிகமாகப் பெருகத் தொடங் கியது. தன் ஆடையைக்கொண்டு நீர் பாவையை அழிக்காது தடுக்கமுயன்றுள். உடனே தண்ணீர் மிகுதியாகப் பெருகவே, இருந்தவண்ணம் தன் கையினுல் வளைத்துப் பாவையைக் காப்பாற்ற முயன்றுள். இருந்தவளுக்குக் கழுத்தளவு தண் ணீர் வந்துவிட்டது. ஊராரெல்லாம் ஓடிவந்தார்கள். தண்ணீர் அதிகமாகப் பெரு கிற்று. தனக்கருகிலே தாயும், தந்தையும், உடன்பிறந்தாரும், தோழியரும், உற வினரும் வந்து மகளே மகளே என்று அழைத்தார்கள். உடனே, அவள் கணவ னுடன் நான் ஆற்று வெள்ளத்தில் ஆழ்வதே இனியது என்று பேரின்ப ஒலியுடன் கூறி நீரில் மறைந்து காவிரிப்பூம்பட்டினத்தார்க்குத் தெய்வமாக விளங்கினுள்.

இத்தகைய குறிப்புக்கள் பல பழங்காலத் தமிழ் இலக்கியங்களிலும், தமிழ் நாட்டில் இப்பொழுது அருகியுள்ள பழக்க வழக்கங்களிலும் காணப்பெறுவன போன்று பழைமையைத் துணையாகக்கொண்டு திருவாதவூரடிகளும், ஸ்ரீ ஆண்டா ளும் தங்கள் தெய்வீகப் பாக்களைத் திருவாய் மலர்ந்தருளினுர்கள் என்பது தெளி யலாம்.

# எது அறிவு ?

(திருச்சி திரு. கி. ஆ. பெ. விசுவநாதம்)

"அறிவு" என்பது எது ? எது அறிவு ? என்னென்னவோ, எவரெவராலோ ஆராயப்பெற்றுவருகிற இக்காலத்தில் நாம் இதையாவது, இப்போதாவது ஆராய வேண்டாமா ? ஆராய்வோம். இன்றேல்," நாம் அறிவைப் பெற்றிருக்கிறோம்" என்று எவ்வாறு கூறுவது ?

அறிவு, கண்களால் காணக்கூடிய ஒரு பொருளல்ல ; என்றாலும் மக்களின் செயல்களைக் கொண்டே அதை ஆராய்ந்து அறியவேண்டி யிருக்கிறது. அறிவை யுடையவர்கள் "நல்லவர்கள்" என்றும் அறிவற்றவர்கள் "பொல்லாதவர்கள்" என்றும் சொல்லப்பெற்று வருகிறது.

இது உண்மையாகுமானால்," எதை அறிவு என்று கூறுவது ?" என்பது விளங்க வில்லை. இதனை ஆராயும்பொழுது நமக்குப் பல ஐயப்பாடுகள் தோன்றுகின்றன !

அறிவைக் காணவேண்டுமானால், உண்டு, உறங்கி, ஓய்ந்துகிடக்கும் நல்லபிள்ளை களிடம் சென்று பயனில்லை. ஓயாது "சேட்டை" செய்து, விரைவாகத் துன்பத்தை விளைவிக்கும் பொல்லாத பிள்ளைகளிடத்துத் தான் அறிவைக் காணமுடிகிறது.

பணத்தை முடிந்து தோளில் போட்டுக்கொண்டு நடந்துசெல்லும் நல்ல மனி தர்களைவிட, அதனை அவிழ்த்து எடுக்கின்ற "முடிச்சவிழ்க்கிகள்" அறிவை அதிக மாகப் பயன்படுத்துகிறார்கள்.

உயர்ந்த பொருளை வைத்து, உள்ளவிலை கூறுகின்ற நல்ல வியாபாரிகளைவிட மட்டப்பொருளை வைத்து அதிக விலைக்கு விற்றுப் பொய் கூறிப் பொருள் தேடும் "பொல்லாத வியாபாரிகள்" அதிக அறிவுடையவர்களாகக் காணப்படுகிறார்கள்.

நேர்மையாகத் தொழில் செய்கின்ற உத்தியோகத்தர்களைவிட இலஞ்சம் வாங் கித் தொழில் செய்யும் "உத்தியோகத்தர்களுக்கு" அதிக அறிவு வேண்டியிருக் கிறது.

உடலை வருத்தி, உழைத்துழைத்து உண்ணுகின்ற கிராம மக்களைவிட "உழைக்காது" உண்ணுகின்ற நகர மக்கள் அதிக அறிவுடையவர்களாகத் தோன்றுகிறார்கள்.

பொதுநலங் கருதித் தொண்டு செய்து வருகின்ற உண்மையான உழைப்பாளிகளைவிட தந்நலங் கருதிப் "பொதுத் தொண்டு செய்வதாக நடிக்கின்ற" தீயமக்களிடத்து அதிக அறிவு காணப்படுகிறது.

நெறி தவறாது வாழ்க்கை நடத்திவரும் பெண்களைவிட "நெறிதவறி" வாழ்வை நடத்தும் பெண்கள் அதிக அறிவுடையவர்களாகக் காணப்படுகிறார்கள்.

முடிவாகக் கூறுமிடத்து "யோக்கியர்களைவிட அயோக்கியர்களே அதிக அறிவுடையவர்களாக இருக்கிறார்கள்" எனக் கூறலாம். "நல்ல மனிதன்" என்றால், "பாவம்! ஒன்றும் தெரியாதவர்" என்றும், "பொல்லாத மனிதன்" என்றால், "எவராலும் ஏமாற்றமுடியாதவர்" என்றும் பொதுவாக நம்மிடையே வழங்கி வருகிற ஒரு வழக்கும் இதனை மெய்ப்பிக்கிறது!

அவ்விதமாயின், எது அறிவு? எவரிடத்துக் காண்பது அறிவு? பொல்லாத மக்களிடத்திலிருந்துதான் அறிவு ஒளி வீசுமா? நல்ல மக்களிடத்திலிருந்து "அது ஒளி வீசாதா?" என்ற கேள்வி நம்மிடையே விரைவாக எழும்.

இக்கேள்வியைப் பலரிடத்தும் கேளுங்கள். வருகின்ற விடைகள் உங்கள் அறிவுப்பசிக்கு ஏற்ற உணவாக இருக்கிறதா? என்றும் சுவைத்துப் பாருங்கள். பிறகு இதே கேள்வியைத் திருவள்ளுவரிடம் போய்க் கேளுங்கள். ஏனெனில் அவர்தான் "எது அறிவு?" என்பதைக் காட்டக்கூடியவர். அவர் ஒருவர்தான் அறிவு எது? என்பதைக் காட்டியிருக்கிறார். "அது எது?"

மண்ணை, பெண்ணை, பொன்னை—பொருளைக் கண்டால் மனம் அவற்றையடைய அவைகளின்மீது தாவுமாம்! மனத்தை அவ்வாறு செல்லவிடாமல் தடுத்து, தீய எண்ணங்கள், தீய செயல்களிடத்திலிருந்து விலக்கிக் காப்பாற்றி நல்ல எண்ணங்கள், நல்ல செயல்களினிடத்து அதைச் செலுத்துவது எதுவோ? அதுவே அறிவு! என்று வள்ளுவர் கூறுகிறார்.

இக்கருத்துக்களடங்கிய வள்ளுவரது சொற்களை அவருடைய வாக்கினாலேயே கேளுங்கள்:—

"சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு"

என்பதே அவரது வாக்கு.

" மனம் சென்ற விடமெல்லாம் அதனைச் செல்லவிடாது தடுத்து, தீமைகளி லிருந்து விலக்கி நல்லவைகளிடத்துச் செலுத்துவதே அறிவு " என்பது இதன் பொருள்.

" மனமே அறிவு !" என மயங்கி யிருப்பதினுலும், மனதின் செயல்களனைத் தும் அறிவின் செயல்களெனக் கருதியிருப்பதினுலுமே மேலே கண்ட ஐயப்பாடுகள் நமக்குத் தோன்றின.

மனம் வேறு, அறிவு வேறு என்றும், மனதிற்கும் அப்பாற்பட்ட ஒன்றே அறிவு என்றும், மனதை அடக்கி ஆள்வதே அறிவு என்றும் வள்ளுவர் வகுத்துக் காட்டுவதிலிருந்து நமது ஐயப்பாடுகள் அனைத்தும் அழிந்து ஒழிகின்றன.

" மனம் செல்லும் வழிகளை " தவறு " என எடுத்துக்காட்டித் திருத்தி நல்ல வழிச் செல்ல அறிவு அறிவுறுத்தினுலும் அதனையும் மீறிச் செயலாற்றும் என்ற வலிமை மனதிற்கு உண்டு " என்பதை வள்ளுவர் "நன்றின் பாலுய்ப்பது அறிவு" சொற்களால் கூருமற் கூறுகிறுர்.

திருடனுடைய மனம் திருட எண்ணுகிறது. திருடத் துணிகிறுன். பிறகு திருடு கிறுன். திருடும்போது அஞ்சி நடுங்குகிறுன். ஏன் ? " அது தவறு " என்று அவ னுடைய மனதுக்கு அறிவு அறிவுறுத்துகிறது. அறிவு உணர்த்தியும், தான் உணர்ந் தும், அறிவின் வழிச்செல்லாமல் ஆசையால் தூண்டப்பட்ட மனதின் வழிச்சென்று திருடிவிடுகிறுன். அறிவையும் மீறி மனம் செயலாற்றும் முறையை விளக்க இது ஒன்றே போதுமானதாகும்.

திருடுவது, பொய் சொல்லுவது, இலஞ்சம் வாங்குவது, ஏமாற்றுவது, நெறி தவறுவது ஆகிய எதுவும், எவ்வளவு திறமையாகச் செய்யப்பட்டாலும் அது அறி வின் செயல் அல்ல ; மனதின் செயலே என்றும், அதன் தவறுகளை உணர்த்தி நல்லவழியிற் செல்லத் தூண்டும் செயலே அறிவின் செயல் என்றும் திருவள்ளு வரின் திருக்குறள் நமக்கு தெளிவாகக் காட்டுகிறது.

கண்டவிடமெல்லாம் கருத்தைச் செலுத்தி ஓடி அலையும் மக்களுக்கு உண்மை உணர்த்தி, நல்வழி நடத்தும் பெற்றோர்கள் அறிவின் உரு ஆவார்கள். துள் ளித்திரியும் இளங்காளைகளை அடக்கி, உழவுக்குப் பயன்படுத்தி வரும் உழவன் அறி வுருவாளன். திமிர்பிடித்த குதிரைகளை அடக்கி வண்டியிற் பூட்டி ஒழுங்காகச் செல் லும்படி நடத்துகின்ற வண்டிக்காரனும் அறிவின் உரு ! மதங்கொண்ட யானையை அடக்கி, தீமை செய்வதினின்றும் விலக்கி நேரான வழியில் நடத்துகின்ற யானைப் பாகனும் அறிவுக்கு எடுத்துக்காட்டாக இருப்பவன் என்று இக்குறளால் அறியமுடி கிறது.

இதிலிருந்து அறிவின் வழிச் செல்லும் மக்கள் " அறிவைப் பெற்றவர்கள் " என்றும், மனதின் வழிச் செல்லும் மக்கள் " அறிவை இழந்தவர்கள் " என்றும் நன்கறிகிறோம்.

ஆகவே, தம்பிகளே ! தங்கைகளே ! உங்களுடைய ஐயப்பாடு என்னுயிற்று ? வள்ளுவர் கூறுகிற விடை எப்படி இருக்கிறது ?“எது அறிவு ?” என்பது இப்போது விளங்குகிறதா ? வள்ளுவர் காட்டும் அறிவு உங்கள் அறிவுக்குப் பொருத்தமாக இருக்கிறதா ?

எடுங்கள் திருக்குறளை ! படியுங்கள் நன்ருக ! “ மனம் செல்லும் வழி யெல்லாம் செல்லாமல், அறிவு செலுத்தும் வழியில் செல்லுங்கள்.” செய்வன செய்து சிறப்பெய்தி வாழுங்கள். உங்கள் அறிவு பொங்கட்டும் ! தமிழ் மொழி பொங்கட்டும் ! தமிழ் அறம் பொங்கட்டும் ! வள்ளுவர் நெறி என்றென்றும் பொங்கிப் பெருகட்டும் ! எனக் கூறுவதோடு இக்கட்டுரையை முடிக்கிறேன்.

# "யாதும் ஊரே யாவருங் கேளிர்"

திருமதி. மேரி. மாசில்லாமணியம்மையார், M.A., L.T.
கிறித்துவப் பெண்கள் கல்லூரி, சென்னை.)

புறநானூற்றுப் பாடல்களொன்றில் கணியன் பூங்குன்றனர் மேற்காட்டிய மொழிகளை யமைத்துள்ளார். பண்டைத் தமிழ் மக்களைத் தமது அறிவுரைகளாற் றிருத்திய நல்லிசைப்புலவருள் இவரும் ஒருவர். உண்மைத் தமிழனொருவனுக்கு, உலகின்கண்ணுள்ள ஊரெல்லாம் தன் ஊரே, உலக மக்களெல்லோரும் உறவினரே என்பது இவ்வடியின் கருத்து. சாதி மத பேதமகற்றி மக்கட்டொகுதியை ஒரே தொகுதியாய்க் கண்டவரிவர். வானத்தைக் கிழித்துச் செல்லும் ஆகாய விமானங்களும், திரை பொருங்கடலை நீந்திச்செல்லும் மரக்கலங்களும் பெருகிய தற்காலத்தில், இப்புலவர் பெருமான் கூறிய வப்பொன்மொழிகள், முன்னையைக் காட்டிலும் உண்மை மொழிகளாய்த் திகழ வழியுண்டு. இப்புலவர் அன்றறிந்த நாடு தமிழ் நாடும் அந்நாட்டை யடுத்த நாடுகளுமே. இன்றோ இவ்வுலக கோளத்திலடங்கியுள்ள நாடுகளுடனெல்லாம், வியாபாரம், பொருளாதாரம், அரசியல், கல்வி முதலியவை சம்பந்தமான தொடர்பு நாம் பூண்டுள்ளோம்.

பல்வகைக் கேளிகைகட்கும் வேடிக்கை விநோதத்திற்கும், உறைவிடமாய்த் திகழ்வது பாரிஸ் நகரம். எனினும், அந்நகரே, மேல்நாட்டுச் சரித்திரத்தில் மத்திய கால (Meadieaval ages) நாகரிகத்திற்கும், கல்வி நிலைக்கும், நுண்கலைகட்கும் இருப்பிடமானது. சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற மூன்று குறிக்கோள்களையும் ஒரு பெரும் புரட்சியால் சாதித்து, உலகினர்க் கவைகளைத் திரவியப் பொருளா யீந்த நகர் அப்பாரிஸ் நகரே. கோடைக்கால மாதங்களில், குவலயத்து மக்களுள், பணம் பதவி படைத்த மக்கள் பலருங்கூடி விநோதமாய்ப் பொழுது போக்கும் நகர் அது. மண்ணுலகில் மாபெரும் நிலையமெனப் பெயர்பெற்ற நூல் நிலையம் (Bibliothèque nationale) அங்குண்டு. அந்நிலையத்துள் நின்று கொண்டு, பல்லாயிரம் மைல்களுக்கப்பாலுள்ள தண்டமிழ் நாட்டை என்றடைவோமென்றேங்கினேன். ஆனால் அங்கு நான் கண்ட காட்சி என்னைத் திகைக்கவைத்தது. நூற்றுக்கணக்கான தமிழ்ச் சுவடிகள், சங்கத் தமிழ் நூல்கள், கம்பர் பாடல்கள், பெரிய புராணப் பாடல்கள், பிரபந்த நூல்கள்—இவையாவுமடங்கிய பழஞ் சுவடிகள் ; காந்தி மகான் கற்பித்த சொற்பொருட்களின் விளக்கமடங்கிய நூல்கள்— பண்டைத் தமிழர் சரித்திரத்தைப் பாராட்டும் நூல்கள்—இவைகள் யாவும் கண்டேன்.

"யாது மூரே யாவருங் கேளிர்"

இந்த வுலகினுக் கோர் நாடு—அது
என்னை மகிழ்விக்கு மோர் நாடு—அது
கம்பன் கபிலன் கணக்கறு பாவலர்
கண்டு களித்த தமிழ் நாடு—

என்று பாடித் தமிழின் பெருமையை வியந்தேன். பல்லாயிரம் மைல்களுக்கப்பாலிருந்த அந்நகர், அந்நேரத்தில் எனது நாடாய்த் தோன்றிற்று. " யாது மூரே " என்று நான் முணுமுணுத்துக்கொண்டேன்.

மற்றொரு நாள் அந்நகரின் உயர்ந்த மேடையில் கட்டப்பட்டுள்ள சாக்ரே கர் (Sacré Cœur) என்ற கோவிலைப் பார்க்கச்சென்றேன். அன்று பூரணச்சந்திரன். ஆனால் மங்கிய ஒளிதான். மேகப்படலம் அடிக்கடி சந்திரனை மறைத்தது. கோவிலை நோக்கி, எண்ணற்ற கற்படிகளை ஒன்றன்பின் ஒன்றாய்க் கடந்து ஏறிச் சென்றேன். படிகள் மீது ஏறும்போதே திரும்பித் திரும்பி, கீழேயிருந்த நகரையும்,அந்நகர்ப் பெருவீதிகள் அமைக்கப்பெற்ற ஒழுங்கையும், எல்லையில்லா மின்சார விளக்குக்கள் பலவர்ணத்துடன் விளங்கியதையும் கண்டேன். கோவில் அடிவாரத்தை யடைந்தேன். அங்குப் பல்வேறு மொழி பேசும் பல தேசத்தாரு மிருந்தனர். அந்த மங்கிய நிலவொளியில் மௌனமாய் நின்று, அக்கோவிலின் கண்கொளாக் காட்சியையும், அந்நகர் மக்கள், அவ்வெழில் சிகரத்தை இறைவனுக் கிருப்பிடமாயளித்த செயலையும் வியந்தோம். சீனன், ஆப்பிரிக்கன், அமெரிக்கன் இந்தியன்—யாவருக்கும் உரிமையான அவ்வழகையும் அமைதியையும் ரசித்துக்கொண்டு, சொல்லொணு மகிழ்ச்சிக் கடலிலிருந்தோம். அந்த ஒன்றுபட்ட மனப்பான்மையில், ஒருவர் மனத்துடன் மற்றொருவர் மனம் கலந்த அந்நிலையில்," யாது மூரே, யாவருங் கேளிர் " என்ற தண்டமிழ்ப் புலவர் மொழியில் எத்தனை உண்மை ! என்று நினைத்துக் கொண்டேன்.

மாதங்கள் கடந்தன. பின்னொரு நாள், ஜெர்மானியா தேசத்தில், பிராங்பட் (Frank furt) என்ற பட்டணத்தின் தெருக்களொன்றில் நடந்து சென்றேன். ஐயோ ! அந்நகரில் எங்கெங்கே நோக்கினும், அங்கெல்லாம் பாழடைந்த வீடுகள், கோவில்கள், குண்டு வீழ்ந்து உடைந்த பாலங்கள், விறுவிட்ட சன்னல்கள், சுவர்கள்; யுத்த வரக்கன் தாண்டவமாடிச் சீரழிந்த நாடென்பதை அத்தெருக்களே காட்டின. போன உலகப் பெரிய யுத்தத்தில், எமக்கெதிர்ப்புறத் திருந்து போர் புரிந்து இந்நிலையடைந்தவரல்லரோ இவர் என்றதோ ரெண்ணம் என் மனக்கோட்டையில் நுழைந்தது. ஆனால், தங்கள் நாட்டை இப்பொழுது அயலகத்தாராகிய நான்கு பெரும் நாடுகள் பங்கிட்டு உரிமையாக்கிக் கொண்டதையும், தங்கள் மக்கள் பல்வகைச் சுதந்தரங்களையும் இழந்து, அளவற்ற பழிச்சொல்லை ஏற்றுக்கொண்டதையும் அறிந்தும், தோல்வி மனப்பான்மையை எடுத்தெறிந்துவிட்டுத் தம் நாட்டை மீண்டும் உயர்நிலைக்குக் கொண்டுவரத் திடசித்தம் கொண்ட அம்மக்களின் உயர்வு தான் என்னே ! ஆடவரும் பெண்டிருமாகிய அவர்கள், பகல்தொட்டு இரவுவரை உழைத்து உண்டாக்கியுள்ள எண்ணிறந்த ஆப்பிள் மரத் தோட்டங்கள், திராட்சைச் செடித் தோட்டங்கள் இவைகளைக் கண்டேன். "ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்

தாழாதுஞற்றுபவர்'' என்ற திருக்குறட்கு அரிய எடுத்துக்காட்டாய் விளங்குபவர் இவரன்றே என்று வியந்து நின்றேன். காடு வெட்டி நாடாக்கி, குளம் தொட்டு வளம் பெருக்கி, சலிப்படையா உழைப்பால் சிறந்த தமிழரசர்கள் ஆண்ட நாட்டிலிருக்கும் எனக்கு, அம்மக்களுடன் ஒரு நெருங்கிய தொடர்பு இருந்ததாகத் தோன்றியது. அந்நிலையில்,'' யாது மூரே யாவருங் கேளிர் '' என்று அறிந்தேன்.

உலகத்தில் பெரும்பகுதியை யொரு காலத்தில் தமக்கே உரிமையாக்கிக் கொண்ட ஆங்கிலேயர்—பாரத நாட்டைத் தமக்கடிப்படுத்தி, இந்தியமாதாவின் சுதந்தர வுணர்ச்சியை யழித்து, தேசத்தொண்டர் பலருக்கும் சிறைவாசமளித்த ஆங்கிலேயர் நாட்டின் தலைநகராகிய லண்டன் பட்டணத்தில், பங்கிங்காம் அரண்மனையை அடுத்ததொரு வீதியில், வழி தெரியாது திகைத்துப்போய் நின்றுகொண்டிருந்தேன். எண்ணற்ற ஆங்கில மக்களும், அயல் நாட்டு மக்களும், அங்குமிங்கும் ஓடுவதும் சாடுவதுமா யிருந்தனர். அவரவர் தத்தம் பணியாற்ற விரைந்து சென்றுகொண்டிருந்தனர். ஒரு நொடியில் சோவென்று மழை பிடித்துவிட்டது. என் கையில் குடையுமில்லை, மழைச் சட்டையுமில்லை. கனமான தோல்பெட்டியொன்று வைத்திருந்தேன். மழைக் கொதுங்குவோ மென்று அந்நியர் வீட்டில் போய் நுழைகிற வழக்கம் ஆங்கிலேயரிடத்திலில்லை. அச்சமயத்தில், ஒரிளைஞன் ஓடிவந்தான்.'' மன்னித்துக்கொள்ளுங்களம்மா. நீங்கள் எங்கே போகவேண்டும்'' என்றான். நான் மஸ்வல் ஹில் (Muswell Hill) போகவேண்டு மென்றேன்.'' அப்படியானால் நீங்கள் 134-ம் நம்பர் வண்டியில் ஏறவேண்டும். இரண்டடி யெடுத்துவைத்தால் அவ்வண்டி நிற்குமிடத்தைப் போய்ச்சேரலாம். இவ்விடத்தில் அவ்வண்டி நிற்பதில்லை. உங்கள் பெட்டியை நான் தூக்கிக்கொண்டு வர எனக்கு அநுமதி யளிப்பீர்களா '' வென்று மிகவும் விநயமாய்க் கேட்டுவிட்டு, பெட்டியைத் தூக்கிக்கொண்டு நடந்தான். நாங்கள் வண்டி நிலையத்தைப் போயடைந்ததும் 134-ம் நம்பர் வண்டியும் வந்து விட்டது. என்னை வண்டியில் ஏற்றிவிட்டுப் ''போய்வாருங்கள்'' என்று மலர்ந்த முகத்துடன் இனிய சொற் கூறி நகர்ந்தான் இளைஞன். ஊரும் பேரும் தெரியாத அவ்வாங்கில இளைஞனின் உதவியை எங்ஙனம் மறக்கவியலும்? '' யாது மூரே, யாவருங் கேளிர் '' என்ற நம் தமிழ்ப் புலவர் பொன்மொழியை வியந்து கொண்டே சென்றேன்.

உயர்தரப் புலவனொருவன் கூறிய கூற்று அவன் காலத்திற்கு மாத்திரமே பொருந்தியதன்று. அது, முக்காலத்திற்கும் பொருந்தியதாகும். இதற்கு, உலகப் பெரும் புலவர்களாகிய ஷேக்ஸ்பியர் (Shakespeare), தாந்தே (Dante), ஹோமர் (Homer) முதலியோர் இயற்றியுள்ள நூல்களில் அழுந்திக்கிடக்கும் அரிய கருத்துக்களே சிறந்த சான்றா யமைகின்றன. இக்கருத்துக்களை, உலக மக்கள் யாவருக்கும் பொருந்திய உயர்தரக் காவியக் கருத்துக்கள் எனலாம். இந்த ரீதியில் அமைவதே நம் கணியங் குன்றனார் '' யாது மூரே, யாவருங் கேளிர் '' என்று கூறிய கூற்று.

# உழைக்க வேண்டும்

(கவிமணி-தேசிக விநாயகம் பிள்ளை)

1. மன்னும் சுதந்திரத்தை—நாட்டில்
மக்கள் அடைந்த உடன்
பொன்னை மழையாக—வானம்
பொழிந்து கொட்டிடுமோ ?

2. பாலை சோலையாகிக்—கனிகள்
பழுத்துதிர்ந்திடுமோ ?
சேலை சேலையாகப்—பருத்திச்
செடிகள் காய்த்திடுமோ ?

3. ஆக்கம் வேண்டுமெனில்—நன்மை
அடைய வேண்டுமெனில்
ஊக்கம் வேண்டுமப்பா—ஓயா
துழைக்க வேண்டுமப்பா.

4. உண்ணு முணவுக்கும்—இடுப்பில்
உடுக்கும் ஆடைக்கும்
மண்ணில் அந்நியரை—நம்பி
வாழ்தல் வாழ்வாமோ ?

5. நெற்றியின் வியர்வை—நிதமும்
நிலத்தில் வீழ்ந்திடிலே
சற்றும் வாடாமல்—சுதந்திரம்
தழைத்து வருமப்பா.

ஜாதிச் சண்டை எலாம்—ஓய்ந்து
தணிய வேண்டுமப்பா;
நீதி நாடெங்கும்—நிலைத்து
நிற்க வேண்டுமப்பா.

உலக மக்களெலாம்—அன்போ
டொருதாய் மக்களைப்போல்
கலக மின்றி வாழும்—காலம்
காண வேண்டுமப்பா.

## வெண்பா

நெற்றி வியர்வை நிலத்தில் விழவுழைப்போம்
பெற்ற சுதந்திரத்தைப் பேணுவோம்—சுற்றமெனப்
பன்னாட்டு மக்களையும் பாராட்டிப் பாரதமா
நன்னாட்டில் வாழுவோம் நாம்.



# கொல்லைப்புறக் காட்சிகள்

(திரு. ரா. தேசிகன் B.A., B.L., (Officier d'Académie) புதுவை)

பிரஞ்சுப் பெண்எழுத்தாளருள் சிறப்புவாய்ந்தவர் ழோர்ழ்சாந்து என்பவர். அவர் 1804-ம் ஆண்டில் பாரீசில் பிறந்தவர். சமூக சம்பந்தமான கதைகள் சிலவும் அரசியல் பற்றிய கட்டுரைகள் பலவும் எழுதியுள்ளார். அவ்வம்மையார் ஒரு நாள் கொல்லைப்புறத்துக்குச் சென்றார். இரண்டு காட்சிகளை அங்குக் கண்டார். அக்காட்சிகள் அவர் உள்ளத்தே பற்பல எண்ணங்களை எழுப்பின. அவர்தம் சிந்தனையைக் கிளறின. தாம் கண்ட காட்சிகளை ஆதாரமாகக்கொண்டு கிராம வாழ்க்கையைச் சித்திரிக்கும் ஒரு கதையையே அவர் எழுதிவிட்டார்.

ழோர்ழ்சாந்து கண்ட காட்சிகளில் முதலிடம் பெறுபவன் உழவன். அவன் அவர் உள்ளத்தில் ஒருசில உணர்ச்சிகளை உண்டாக்கிவிட்டான். அவர் கண்ட காட்சிகளும் கொண்ட உணர்ச்சிகளும் இங்கே சுருக்கிக் கூறப்படுகின்றன.

குடியானவர்கள் விதைப்பதற்காகப் பண்படுத்திக்கொண்டிருக்கும் ஒரு நிலத்தின் வரப்பின்மேல் நடந்துகொண்டிருந்தேன். என் முன்னே புன்செய் நிலங்கள் விரிந்து பரந்துகிடந்தன. முன்னாள் பெய்த மழையினால் உழுபடைச்சாலினூடே தங்கிய தண்ணீர் பகலவன் ஒளியில் பளபளவென வெள்ளிக்கம்பிபோல் விளங்கிற்று. கலப்பைகள் நீளக் கிளறிய நிலத்தினின்று மெல்லியதோர் ஆவி வெளிவந்து கொண்டிருந்தது.

என் எதிரே சிறிது தொலைவில், அகன்ற மார்பும் கண்டிப்பான முகக்குறிப்பும் வறுமையில்லா ஆடையும் கொண்ட ஒரு கிழவன் தன் பழங்காலத்துக் கலப்பையொன்றை ஓட்டிக்கொண்டிருந்தான். அக்கலப்பையைச் சாம்பர் நிறமுள்ள இரண்டு எருதுகள் இழுத்துக்கொண்டிருந்தன. அவை உயரமாய், சிறிது இளைத்தனவாய் இருந்தன. நீண்டு மடங்கிய கொம்புகளோடு கொல்லைப்புறத்து முதல்வர்கள்போல் அவை காணப்பட்டன. அந்த எருதுகள் இரண்டும் நெடுநாளாய் ஒன்று சேர்ந்து பழகிவருதலின் உடன்பிறந்தார் இருவர் போலவே இருந்தன.

ஆம். அத்தகைய எருதுகளை உடன்பிறந்தார் என்றே கிராம மக்கள் கருதுகிறார்கள். அவை, ஒன்று ஒன்றைவிட்டுப் பிரியின் மற்றொரு புதிய எருதோடு சேர்ந்து வேலைசெய்ய இணங்குவதில்லை. துன்பங்கொண்டு செயலற்றுக் கிடப்பதுண்டு. பிறிவாற்றாமையினால் இறப்பதுமுண்டு. கிராம நிலை அறியா மக்கள் ஓர் எருது தன் தொழிற்றுணைவனோடு கொள்ளும் நட்பினைக் கட்டுக்கதை யாக்கிவிடுகிறார்கள். மாட்

டுக்கொட்டிலில் ஒரு மூலையிலே உடல் மெலிந்து, வலுவிழந்து, விலாப்புறங்களை இடைவிடாது தன் வாலினுல் அடித்துக்கொண்டு, ஏக்கத்தோடு வெய்துயிர்த்து, உணவினை வெறுத்து, கொட்டிலின் வாயில்வழியிலே விழியை வைத்துக்கொண்டு, வெற்றுத் தரையைக் காலால் கிளறிக்கொண்டு, அடுத்துக்கிடக்கும் தன் துணைவனின் நுகத்தடியையும் கட்டுக்கயிற்றையும் மோந்துகொண்டு அடிக்கடி துன்பக் குரல் காட்டிக் கூச்சலிடும் அந்த இரங்கத்தக்க எருதினை அவர்கள் வந்து பார்க்கட்டும். உழவன் சொல்லுவான் :" ஓர் இணைமாடும் கைவிட்டுப் போனதுதான். இங்கிருக்குமிது தன் உடன்பிறந்தானை இழந்துவிட்டது. இனி வேலை செய்யாது. அது மாத்திரமா ! உணவுகூட அருந்தாமல் இறந்தும்விடும்."

அந்த வயது முதிர்ந்த உழவன் சந்தடியின்றி, வீண் முயற்சி செய்யாமல், பொறுமையாக வேலை செய்துகொண்டிருந்தான். அவனுடைய அடக்கமான மாடுகளும் அவனைக்காட்டிலும் விரைவாகச் செல்லவில்லை. ஆயினும் பராக்கு இல்லாத தொடர்ந்த பணியினுலும், மாருத பிடிவாதமான ஆற்றலினுலும் அவன் உழுபடைச்சால் வேகமாகவே சென்றுகொண்டிருந்தது.

கொல்லைப்புறத்து மற்ருெரு கோடியில் நல்ல தோற்றமுடைய இளைஞன் ஒருவன் ஏர் ஒன்றை ஓட்டிக்கொண்டிருந்தான். வெண்ணிறமுஞ் செந்நிறமும் கலந்த ஈர் எருதுகள் அவன் ஏரில் பூட்டப்பட்டிருந்தன. அவற்றின் வெகுண்ட நோக்கும், படபடத்த அசைவும் அவை இன்னும் நன்கு பழகாதனவென்பதைக் காட்டின. அவற்றின் துடிப்பும் துள்ளலும் நுகத்தடியை அலைக்கழித்தன. தார்க்கோலிட்டே அவற்றைத் தணிக்கவேண்டி யிருந்தது. அந்த எருதுகளைச் செலுத்தும் உழவன், சில காலமாகக் கரம்பாக விட்டுவிட்ட ஒரு நிலத்தைப் பண்படுத்திக்கொண்டிருந்தான். அது கடினமான வேலைதான். அவன் இளமைப் பருவமும், குறையா ஆற்றலும், அவன்றன் கட்டிளங்காளைகளும் அவ்வேலைக்குப் போதுமானவையாயில்லை.

ஆறு அல்லது ஏழு வயதுடைய சிறுவன் ஒருவன் ஏரின் இருமருங்கிலும் மாறி மாறி அதனைத் தொடர்ந்து நடந்துகொண்டிருந்தான். அவன் தன் கையிலிருந்த தார்க்கோலால் அடிக்கடி அந்த எருதுகளின் விலாப்புறத்தில் குத்திக்கொண்டிருந்தான். செருக்குள்ள அவ்விலங்குகள் சிறுவன் கைக்கு நடுங்கின. நுகத்தடியின் கயிறு கிறுகிறு என்று ஒலித்துக்கொண்டே இருந்தது. அதன் அதிர்ச்சி ஏர்க்கட்டையையும் குலுக்கிற்று. கெட்டியான ஒரு மண்ணுங்கட்டியோ அல்லது குறுக்கே ஓடியிருக்கும் ஒரு செடியின் வேரோ கொழுநுனியைத் தடுக்கும்போது உழவன் பெருங்குரலெடுத்து ஒவ்வொரு எருதையும் அவனிட்டுவைத்துள்ள பெயரினுல் கூவுகிருன். அக்கூச்சல் அவற்றைத் தணிவிப்பதற்கேயன்றித் தூண்டுதற்கன்று. இத்தகைய தடைகளால் அந்த எருதுகள் வெகுண்டு துள்ளிக் கலப்பையை உழுபடைச்சாலினின்று வெளியே இழுத்துவிடுகின்றன. அப்போது அடுத்துள்ள சிறுவன் தன் தார்க்கோலைக் கொண்டு அவற்றைக் குத்தி அடக்குகிருன். அவனும் கூச்சலிடுகிருன். ஆனுல் அவனுடைய மெல்லிய குரல் ஆற்றலற்றதாய் விடுகிறது.

இயற்கைக்காட்சி, உலைவில்லா உழவன், சிறுமையறியாச் சிறுவன், நுகத்தடியின் கீழ்க் காளைகள் இவையெல்லாம் ஆற்றலினுலோ அல்லது அழகினுலோ இனி

மையாகத்தான் காணப்படுகின்றன. தரை மடந்தை முறியடிக்கப்படும் இந்த வன்மையான போராட்டத்திலும், இனிமையும் அமைதியுமானதொரு சூழ்நிலை எங்கும் நிலவிக்கொண்டுதான் இருக்கிறது. தடை நீங்கி ஏர் தன் இயல்பான நடையை மீண்டும் பெற்றவுடன் உழவன் சாந்தமும் தெளிவும் கொண்டு களிப்புடன் தன் மகனை நோக்குகிறுன். சிறுவனும் புன்முறுவல் பூத்துத் தன் களிப்பினைக் காட்டுகிறுன்.

இதன்பின் அந்த வாலிப உழவன் ஆண்மையோடு ஒரு பாட்டுப்பாடத் தொடங்குகிறுன். தொன்றுதொட்டுப் பரம்பரையாக உழவர்களிடையே நிலவிவரும் சோகப் பாட்டே அது. எல்லா உழவர்களும் அதனைப் பாடுவதில்லை. ஏரில் பூட்டிய எருதுகளின் ஆற்றலைக் கிளப்பிக் காக்கும் திறனுடையோரே அதனைப் பாடுகின்றனர்.

அந்தப் பாட்டுக்கு ஏதோ ஒரு தெய்வத்தன்மை கற்பிக்கப்படுகிறது. பண்டை நாளில் அபூருவ ஆற்றலைக் கொண்டிருந்ததாகச் சொல்லப்படும் அஃது இன்று எருதுகளை ஊக்குவிக்கவும் அவற்றின் வெறுப்பைப் போக்கவும், அவற்றின் களைப்பை மறைத்துக் களிப்புறச் செய்யவும் பயன்படுகிறதென்று எவருஞ் சொல்லுவர். நேரான படைச்சால் அமையும்படி எருதுகளை நன்கு நடத்தவும், கலப்பையின் கொழுநுனியை அப்போதைக்கப்போது தூக்கியோ அழுத்தியோ அவ்வெருதுகளின் துன்பத்தைக் குறைக்கவும் மாத்திரம் கற்றிருத்தல் போதாது. எருதுகளுக்குப் பாட்டுப்பாடி மகிழ்ச்சியூட்டத் தெரியாத உழவன் நல்ல உழவனுகான். பாட்டுப்பாடுவதும் ஒரு கலை. அதற்கு விருப்பமும் தனி முயற்சியும் வேண்டும். கலை என்பது நிலையாகவுள்ளதொன்றைப்பற்றிய ஆராய்ச்சியன்று. உயர்ந்ததோர் குறிக்கோளின் உண்மையைக் காணும் முயற்சிதான் கலை என்பதை மறத்தல் கூடாது.

அந்தப்பாட்டு செவிவழி வந்த பாட்டுத்தான். உழவன் அதனைத் தொடர்ந்து பாடுகிறுனில்லை. வேண்டும்போது பாட்டை நிறுத்திவிடுகிறுன். பின்னர் விட்ட இடத்தினின்று மீண்டும் தொடங்குகிறுன். பாட்டின் அமைப்புமுறை சரியாயில்லை. அஃது இசை இலக்கணத்துக்கும் மாறுபடுகிறது. ஆயினும் பாட்டு இனிமையாகத்தான் இருக்கிறது. உழவுத்தொழிலுக்கும், எருதுகளின் நடைக்கும், கொல்லைப்புற அமைதிக்கும், பாடுவோனின் எளிமைக்கும் மிகப் பொருத்தமுடையதாயிருக்கிறது. கொல்லைத்தொழிலில் ஈடுபட்டவனே அதனை இயற்றி இருக்கவேண்டும். திறமுள்ள உழவனைத்தவிர வேறெவரும் அதனைப் பாடமுடியாது. இழுப்பும் பறிப்பும் உள்ள அப்பாட்டை அவன் மூச்சுப்பிடித்து நீள இசைக்கும்போது அதன் திருத்தமின்மை மறைந்து, சொல்லிலடங்காத இனிமையை அது பயக்கிறது. அப்போது அதனைத் தவிர வேறுபாட்டெதுவும் அந்தச் சூழ்நிலைக்கு ஒவ்வாதென்பது புலனுகிறது.

இப்படி அந்த வாலிபனும் சிறுவனும் ஒன்று சேர்ந்து பெருமையும் இனிமையும் வாய்ந்த பணியைச் செய்துகொண்டிருந்ததைக் கண்டபோது என்னுள்ளத்தே இரக்கமும் மதிப்பும் ஒருங்கே தோன்றின. ஆ ! ஆ ! எத்துணை இன்ப வாழ்வு உழவன் வாழ்வு ! ஆம், அதற்கு ஐயமின்று. ஆனுல் அந்த உழவன் அந்த இன்பத்தின் இரகசியத்தை அறிந்தானில்லை. அச்சிறுவனும் அதனை உணரமாட்டான். தாங்கள் அடக்கி ஆளும் எருதுகளுக்கு அவர்கள் ஒரு வகையில் மேம்பட்டவர்கள் என்று எண்ண எனக்குத் துணிவில்லை. அந்த உழவனுக்கு உணரும் ஆற்றல்

கிடையாது. அவன் தன் தாய் வயிற்றிலிருக்கும்போதே அவனை அடிமையில் ஆழ்த்திவிட்ட கயவர்கள் அவனுடைய வேட்கையை அடக்க இயலாமல் அவன் சிந்தனையை அடக்கிவிட்டார்கள்.

ஆயினும் என் ? பக்குவமடையாமல் பிள்ளைத்தன்மையிலேயே வலியவிட்டு விடப்பட்ட இந்த நிலைமையிலுங்கூட அவன், கலைப்பயிற்சியால் உணர்ச்சியை இழந்து விட்டவனைப் பார்க்கிலும் எழிலுடையவனாக விளங்குகிறான். அவனை அடக்கி ஆளும் உரிமை பெற்றிருப்பதாக நினைக்கும் மக்களே ! அவனினும் உங்களை மேலாக மதித் துக் கொள்ளாதீர்கள். அப்படி மதித்துக்கொள்ளும் தவறானது உங்கள் மனப் பான்மை உங்கள் உள்ளத்தைக் கொன்றுவிட்டதென்பதையும், மாந்தர்க்குள்ளே நீங்கள் பெரிதும் பக்குவமற்றவர்கள், கண்ணிழந்தவர்கள் என்பதையும்தான் காட்டு வதாகும். அவனுடைய எளிய மனம் உங்கள் பொய்யொளி கொண்ட புன் மனத் தைக் காட்டிலும் எத்துணையோ மேலானது.

சந்தடி யில்லாமல் அமைதியாக வேலை செய்கின்ற அந்த வயது முதிர்ந்த உழவனும், சுறுசுறுப்பாக வீறுகொண்டு தொழில் புரியும் இந்த இளைஞனும் உலகத் துக்கு உயர்ந்ததோர் பணியாற்றுகின்றார்கள். அவர்கள் ஆற்றுகின்ற பணியின் உயர்வை அவர்கள் அறிவதில்லை. அவர்கள் தங்கள் வலிமையையும், வாழ்நாளை யும் பூமியை வெட்டிக் கிழித்துப் பிளப்பதிற் செலவிடுவதைக் காண்பது துன்பந்தான். அவர்கள் பூமியினின்று செல்வங்களை வலியப்பறித்து வெளியில் கொணரும் கடின மான வேலைக்கு அவர்களுக்குக் கிடைப்பதெல்லாம் அரை வயிற்றுக் கஞ்சிதான். பூமியினின்று வந்த செல்வங்கள் அத்தனையும் ஒரு சிலரின் சொத்தாகிப் பலருடைய சோர்வுக்கும் அடிமைத்தனத்துக்கும் கருவியாகிவிடுகின்றன.

இயற்கை அன்னை என்றும் இளமை குன்றாது அழகுடைய அணங்காய், கொடை யுள்ளம் படைத்த கோமளமாய் விளங்குகிறாள். எல்லா உயிர்கட்கும் அவள் இன் பத்தையும் பொலிவையும் பொழிகிறாள். எவனொருவன் தன் கைகளைக் கொண்டு வேலை செய்து, தான் இயற்றும் பணியின் தன்மையை உணர்ந்து, தன் உரிமையை யும் அதன் வழி இன்பத்தையும் கண்டு, இறைவன் பணி இன்னதென்று மதித்து நடக்கின்றானோ அவனே மாந்தர்க்குள் உயர்ந்த இன்பவாழ்வுடையவனாவான். அறிவு மனம் கை கால்கள் இவையெல்லாம் ஒன்று சேர்ந்து இறை பொருளின் அருள்நோக்கை எதிர்நோக்கித் தொழிற்படும் இடத்தில்தான் இன்பவாழ் விருக் கிறது. அங்குத்தான் இறைவன் அருளும் மனிதன் மகிழ்வும் கலந்து உறவாடுகின் றன.

இவையெல்லாவற்றிற்கும் பொருத்தமாக இருக்கக்கூடியவன் உழவன் என்பதில் தவறில்லை. உழவன் தன் இன்பநிலையைக் கண்டானானால் அவன் வாழ்வு இன்பவாழ்வாக இருப்பதைக் காண்பான். அவன் உள்ளத்தில் இயற்கையாக மங் கிக்கிடக்கும் உணர்வு வெளிப்படும்போது அவன் தூய இன்பம் நுகர்ந்து பிறர் இன் பத்திற்கும் அடிகோலும் ஒரு கலைஞனாகக் காணப்படுவான். அப்படிக் காணப்படும் நாளும் வந்தே திரும். அதுவுஞ் சேய்மையிலில்லை. கொல்லைத்தொழில் ஓங்குக ! உழவன் வளம்பெற வாழ்க !

# “ சமயம் ”

(திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை, B.A., L.T., அண்ணாமலைப் பல்கலைக் கழகம்)

சமயம் என்பதுதான் என்ன? அது வரட்டுச் சாத்திரமன்று ; வெறுந் தத்துவக் கோட்பாடன்று ; பொருள்தராச் சடங்கன்று ; போலி வேடமன்று ; குருட்டுக் குருமார் செய்யும் வழிபாடுமன்று ; அறிவையும் அன்பையும் தூய்மையையும் வளர்க்கமாட்டாத ஆலயம் மடம் முதலிய அமைப்புமட்டுமன்று. மற்றென்னையோ எனின், மேற்குறித்த அடைமொழிகள் அணுகப்பெறாத சாத்திரமும், கோட்பாடும், சடங்கும், திருவேடமும், ஆசிரியனும், திருக்கோயிலும், திருமடமும் சாதனமாகக் கொண்டு, மக்களைச் செந்நெறியிற் செலுத்தும் ஓர் சிறந்த அமைப்புச் சக்தி ஆகும். சாதனங்களையே சமயம் என மயங்கி எண்ணி, அதைக்கெடுத்துத் தாமும் கெட்டு வந்திருப்பது சமயங்களின் சரித்திரத்தில் காண்பதொன்றே. ஆயினும் இதுபற்றியே போலிச் சமயத்தையும் உண்மைச் சமயத்தையும் ஒன்றென அறிஞர் கொள்ளார். ஒரு மனிதன் வாழ்க்கைக்கு அவன் மூச்சு எப்படி இன்றியமையாததோ,அப்படியே சமயமும் இனறியமையாததாம். “Religion is not a strange or added thing, but inspiration of secular life, the breathing of an eternal spirit through this temporal world” (Henry Drumond) இதன் கருத்து, “சமயம் என்பது புதுமையான, அல்லது, புறத்திலிருந்து கொண்டு வந்து சேர்க்கப்பட்டதொரு பொருளன்று. அது, நம் லௌகிக வாழ்க்கை நல்வழியில் நடைபெறத் தூண்டுமொரு சக்தி. என்றுமுள பரம்பொருள் இம்மண்ணுலகின் மூலமாக விடுகின்ற மூச்சு” என்பது. சமயமென்னும் சக்தி ஒருவன் வாழ்க்கையிற் புகுந்ததும் அவ்வாழ்க்கையினியல்பு மாறி மேம்படும். உடலும், மனமும், உயிரும் ஒருபரம்பொருளையே உயர்ந்த பொருள் என்று நாடி, அதனுடன் ஒற்றித்து நிற்கமுயலும். ஐம்புலச் சேட்டைகள் படிப்படியே அடங்கி அருள் ஆணைவழி இயங்கும். உலகு, உயிர், கடவுள் என்னும் முப்பொருளின் இயல்பும் தொடர்பும் ஓரளவு விளங்கும். இவ்வறிவின் வழி, வாழ்க்கை நடக்கும். சமய வாழ்வு நடத்துபவன் “வையத்து வாழ்வாங்கு” வாழ்வான்.“வானுறையும் தெய்வத்துள்”வைத்து மதிக்கப்படுவான். இல்லறநெறி பழுத்துத் துறவற நெறியில் புகுந்து, மெய்யறிவும் பெறுவான்.“ வாலறிவன் நற்றுள் ” தொழுவான் ; தாடலையாக நிற்பான். தன் பசுகரணம் பதிகரணமாக மடைமாறப்பெறுவான். “ தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனுய் ” அருளறம் பூண்பான். முடிவில் “ வானோர்க் குயர்ந்த உலகம் புகு”வான். சமயம் இவ்வாறு, மனிதனை விலங்குணர்வினின்றும் மீட்டு, அவனிடம் மனிதப் பண்பை நிறைவித்து, வானோர் தன்மை வருவித்து, முடிவில் பரம்பொருளோடு அவனை ஒன்றுவித்துப் பேரின்பப் பெருவாழ்வில் நிலைபெறுத்தும்.

இது சமய நெறியின் அடிப்படைத் தத்துவம். இந்நெறி பல படிகளையுடைய ஏணி போன்றது ; பல கிளை வழிகள் வந்துசேரும் பெருவழி போன்றது. மக்கள் சில பொதுத்தன்மைகளில் ஒத்திருப்பாரேனும், ஒவ்வொருவரும் தத்தமக்கே உரிய சிறப்பியல்களும் சில உடையர்.* ருசி பேதமேயன்றிப் பக்குவபேதங்களும் உண்டு. கூர்தல் முறையில் (Evolution) உடம்பும், மனமும், உணர்வும் பல அடுக்குக்களில் காணப்படும். ஆறறிவுடைய மக்கட் பிறப்பெய்திய பின்னரும் இவ்வேறுபாடுகள் காணப்படும். ஆதலின் அவரவர் பக்குவம், ருசிபேதங்கட்கேற்ப அவர்கட்குச் சமய நெறியும் வழிபடுபொருளும் தேவை. எனவே, பல சமயங்களும் தெய்வங்களும், பலப்பல வழிபாட்டு முறைகளும், நூல்களும் தோன்றின. இவற்றின் தேவையை அறிந்து அவற்றிற்குரிய இடத்தில் முறைப்படி வைத்து எல்லாச் சமயங்களையும் ஒன்றுகக் காணவேண்டும்.

சைவ சமயம் இங்ஙனம் காணும் இயல்புடையது ; இஃததன் பெருஞ்சிறப்பு. "சைவமுதலா அளவில் சமயமும் வகுத்து, மேல் சமயங் கடந்த மோன சமரசம் வகுத்தநீ" என்று தாயுமானுர் தக்ஷிணாமூர்த்தியைப்பற்றிக் குறிக்கின்ருர். "ஓது சமயங்கள் பொருள்உணரு நூல்கள் ஒன்றேடொன் ெறவ்வாமல் உளபலவும் இவற்றுள் யாது சமயம் பொருள் நூல் யாதிங்கென்னில், இதுவாகும் அதுவல்ல எனும் பிணக்கதின்றி," நீதியினல் இவையெல்லாம் ஓரிடத்தே காணநின்றது யாது அதுசமயம் பொருள்நூல்" என்பது "சித்தியார்த்" திருவாக்கு. சமய நெறியின் உச்சியில் சென்ருல் மனேலய இன்பசாகரம் வாய்க்கும் ; சமயாதீதப் பழம்பொருள் கிடைக்கும். இது," வாதமும் சமயபேதமும் கடந்தது" என்பர். தென்முகத் தெய்வம் மோன முத்திரை பிடித்த குறிப்பும் இது." ராமேச்சுரத் தொருவனுமே பல வாகி நின்றதொரு வண்ணமே," "நானவித உருவால் நமையாள்வான்" என்பன சம்பந்தர் திருவாக்கு." விரிவிலா அறிவினர்கள் வேருெரு சமயஞ் செய்தே எரிவினற் சொன்னரேனும் எம்பிராற் கேற்றதாகும்", "பல்வேறு சமயங்கள் கருதி-யானைக் கண்டார் மனமேவிய பிரிதியானை" என்பன அப்பர் அருண்மொழிகள். "ஒரு நாமம் ஓருருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ" என்பது ஒரு திருவாசகம்." சுருதி வானவனும், திருநெடு மாலாம், சுந்தர விசும்பின் இந்திரனும், பருதி வானவனும், படர்சடை முக்கட் பகவனும், அகவுயிர்க் கமுதாம், எருது வாகனனும், எயில்கள் மூன்றெரித்த ஏறு சேவகனுமாம், பின்னும் "கருதுவார் கருதும் உருவமாம்" கங்கைகொண்ட சோளேச்சரத்தானே" என்பதோர் அருமைத் திருவிசைப்பா. சைவத் திருமுறைகளில் இவைபோன்ற திருவாக்குக்கள் இன்னும் பலவுள. "ஏது பாவித்திடினும் அது வாகி வந்தருள்செய் எந்தை நீ குறையுமுண்டோ"," வேறுபடு சமயமெலாம் புகுந்து பார்க்கில், விளங்குபரம் பொருளே நின்விளையாட்டல்லால், மாறுபடுங் கருத்

* Indeed individuality is fundamental in man. It is not merely a certain aspect of the organism, but it permeates our entire being. It makes the self a unique event in the history of the world. It stamps its mark on the whole body and conciousness, although remaining indivisible, on each component of his whole." —P. 220 of "Man the Unknown" by Alexis Carrel.

தில்லை " என்பர் தாயுமானுர். இராமலிங்கர்," பெருகிய பேரருளுடையார் " " சிற் சபையில் நடிக்கின்ற நாயகனுர் தமக்கு " எனவரும் பாட்டுக்களில் இச்சமரசக் கொள்கையை அணிபெற எடுத்து விளக்குகின்றுர். அவரவர் உபாசனைக்கு ஒரே மூர்த்திதான் வேண்டும் என்பது உண்மையே. ஆனுல் பிறமூர்த்திகளை வெறுத்தல் பழித்தல் என்றும் கூடாது.

இத்தகைய பரந்த நோக்கமுடைய சமயந்தான் இந்நூற்றுண்டிற்குப் பொருத்த மானது. நாடுகளுக்குள் ஏற்படும் பிணக்குக்களைத் தீர்ப்பதற்குச் சருவதேச சங்கமும் உலகப் பொது நீதிமன்றமும் ஏற்பட்டுள்ளன. உலகப் பொதுநலத்தை ஓம்புதற்கா கப் பல குழுக்கள், எல்லா நாட்டினரும் உலகத்தை ஒன்றுகக் கண்டு, இன்ப துன் பங்களைச் சமமாகப் பகிர்ந்துகொண்டு, ஒன்றுபட்டு வாழவேண்டும் என்று நினைந்து பல துறைகளிலும் முயன்றுவருகின்றன. ஒருநாட்டு மக்கள் பல நாடுகளுக்குப் போய்ப் பார்த்து வருவதும் நெருங்கிய தொடர்பு பூண்பதும் பெருவழக்காகி வரு கின்றது. பிறர்பால் அன்பும் நன்மதிப்பும் கொள்வதும், நம்மை நாம் மேன்மேலும் புனிதமும் தகுதியும் உடையவர்களாக்கி வருவதும் அவசியமாயுள்ளன. இந்த நிலைமையில், எல்லாச் சமயங்களையும் தழுவிச்செல்லும் சமரச சைவ மனப்பான்மை மிக மிக இன்றியமையாதது. இத்தகைய பெருநோக்கம் நம் பாரத தேசத்துப் பண் டைச் சமயத்திற்முன் பெரிதும் அமைந்துள்ளது.

சைவ சித்தாந்தம், முப்பொருள் உள்பொருள் என்பதையும், அவற்றின் இலக்கணம் இன்னதென்பதையும், இறைவன் உயிர்களையும் உலகத்தையும் நோக்க, தானுதல், வேருதல், உடனுதல் என்னும் மூன்று நிலைகளில் உள்ளான் என்பதை யும், இம்மை உலகிற்கும், மறுமை உலகிற்கும், மோக்ஷ நிலைமைக்குமுள்ள தொடர்பு இன்னதென்பதையும், நாம் எங்ஙனம் பொது அறங்களையும் சிறப்பு (சமய) அறங்களையும் செய்து, ஆன்ம நிவேதனத்தின் பயனுய் அரசன் கழல் அடைவது என்பதையும், அடைந்து சீவன் முத்தராய் இவ்வுலகில் இருக்கும்வரையில் எப்படி வாழ்வது என்பதையும் இன்ன பிறவற்றையும் பற்றித் தெளிவாக எடுத்துரைக் கின்றது. பொது வாழ்விலும் சமய வாழ்விலும் இருபாலாரையும் சமமாகவே கருது கின்றது. " தொன்மையவாம் எனுமெவையும் நன்றுகா; இன்று தோன்றிய நூல் எனு மெவையும் தீதாகா ;" " புகல் அளவைக் களவாகி " என்பன போன்ற சித் தாந்த வாசகங்களின்படி அறிவாராய்ச்சிக்கு உரிய இடந்தருவதால் தற்கால அறி வியல் நூல் (விஞ்ஞான) முடிபுகளையும் ஆராய்ந்து அஞ்சாது வரவேற்கும் பண்பா டுடையதாயுள்ளது. யோகஞான அநுபூதிமான்கள் பரம்பரை இன்றளவும் நீடித்து வரும் நிகரிலாப் பெருமை உடையது. " அன்பே சிவம் ";" உலகுக் குயிராயவன் காண் "," தாய் தந்தை பல்லுயிர்க்கும் தாமேயாய தலைவர் ";" மருவி எப்பொரு ளும் வளர்ப்போன் காண்க " என்பன போன்ற மறைமொழிகளால் இறைவன் அன்பே வடிவினன் என்றும், நமக்கு அம்மையப்பன் என்றும் உணர்த்துவது. இடைக்காலத்து வந்து நுழைந்த போலிச் சாதிக்கட்டைத் தகர்த்தெறியும் மெய்ச் சரிதங்களையுடையது." குலங்கெடுத்துக் கோள்நீக்க வல்லான் தன்னை "," சாதிகுலம் பிறப்பென்னும் சுழிபட்டுத் தடுமாறும் ஆதமிலி " என்பன போன்ற பல வாசகங் களால் சாதிச் செருக்குணர்வை ஒடுக்கவல்லது. "எவ்வுயிரும் நீங்காதுறையும் இறை

சிவன் என்று எவ்வுயிர்க்கும் அன்பாயிரு ","ஈசனுக் கன்பிலார் எவ்வுயிர்க்கும் அன்பில்லார், தமக்கும் அன்பில்லார் " என்பன போன்ற மொழிகளால், உயிர்கட் கன்பு வைத்தலின் மூலகாரணத்தை உணர்த்துவது. " அரக்கனுர் வலிநெருக்கன் ஆலவாய் உரைக்கும் உள்ளத்தார்க்கு இரக்கம் உண்மையே " என்ற சம்பந்தர் திரு வாக்கானும்,"சலங்கெடுத்துத் தயாமூல தன்மமென்னும் தத்துவத்தின் வழிநின்று தாழ்ந்தோர்க்கெல்லாம் நலங்கொடுக்கும் நம்பியை " என்ற அப்பர் அருண்மொழி யானும்," கள்ளத் தலைவர் துயர்கருதித் தம் கருணை வெள்ளத் தலைவர் மிக " என்று " திருவருட்பயனின் " இறுதியில் உமாபதி சிவம் அமைத்த அருட்குறளா னும்," வந்தித்து நின்னை மறவாக் கடனுகச் சிந்தைசெய நின்னதருள் செய்யாய் பராபரமே " என்ற வேண்டுகையை அடுத்தே " எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி யிரங்கவும்நின் தெய்வஅருட் கருணை செய்யாய் பராபரமே " என எழுந்த தாயுமானுர் வேண்டுகையானும், " அப்பாநான் வேண்டுதல்கேட் டருள்புரிதல் வேண்டும் " என வரும் இராமலிங்கர் விண்ணப்பத்தானும், இன்ன பிற பல அருளிச் செயல்களானும் சிவபக்தியுடன் சீவகாருண்யம் இருந்தே ஆகவேண்டு மென்று வற்புறுத்துவது. திருவைந்தெழுத்தின் தொடர்பால் எத்தகைய இழிவை யும் பாவத்தையும், போக்கித் தாழ்ந்தோரை உயர்த்தலாம் என்று கட்டுரைப்பது. இல்வாழ்விலிருப்போரும் சிவாநுபூதிப் பெரும் பேற்றை எய்துதல்கூடும் என்று புலப்படுத்துவது. குறிகள், அடையாளங்கள், கோயில்கள், சாத்திர தோத்திரங்களை நிரம்ப உடையது. தபோதனர்களாலும் தத்துவ அறிஞர்களாலும், அரசர்கள் முத லிய மேன்மக்களாலும் பொதுமக்களாலும் பல்லாயிரம் ஆண்டுகளாகப் போற்றி வரப்பெற்றது.

இத்துணைச் சிறப்புடைத்தாய சைவ வாழ்வை நடாத்துதற்கு வழிகாட்டிகளாக நம் சமய குரவர்களும், சந்தான குரவர்களும், பிற பல அடியார்களும் உள்ளனர். சிறப்புவகையில், நம் நால்வரைப் பின்பற்றி நலமிக அடையலாம். இந்த நலம் தனிமனிதன் நலம் என்றும், சமுதாயநலம் என்றும் இரண்டு அடுக்கில் உள்ளது. தனி மனிதன் முழு நலமடைவதற்கு முதற்கண் வேண்டப்படுவது பொது ஒழுக்க மான கடைக்கால். இல்லறத்தார் " மிகுபொருள் வெஃகா " திருத்தலும், துறவ றத்தார் இறைவன் பற்றன்றி மற்றெப்பற்றும் இல்லாதிருத்தலும் மிகவும் முக்கிய மானவை. வாய்மை, தூய்மை, அன்பு, அருள் முதலிய பண்புகளை வளர்த்தல் வேண்டும். " சத்திய முரைக்க நாளும் சார்ந்த பல்லுயிர்கட்கெல்லாம் நித்தலு மிதமே செய்க, நினைப்பது சிவத்தையென்றும், அத்தன் வேதாகமத்தில் அருளிய பொருளிம்மூன்றும் எத்திறச் சமயத்தோர்க்கும் எவ்வெவர்களுக்கு மிட்டம்." இந் நிலையில் நிற்றற்கு, மரணத்தைப்பற்றி நாடொறும் ஒருமுறை ஊன்றி நினைத்தல் ஓரளவு துணை செய்யும் " நீநாளும் நன்னெஞ்சே ! நினைகண்டாய் யாரறிவார் சா நாளும் வாழ்நாளும் ?" என்ற சம்பந்தர் வாக்கினவசியத்தை உணர வேண்டும். சிவ தீக்ஷை, புனிதமும் அன்பும் பொருந்திய தினப்பூசை, பொருளுணர்ந்து செய் யும் பாராயணம், தியானம், விரதம், அன்பர் கூட்டுறவு முதலியவற்றின் துணை கொண்டு, முதலில் நாம் நம்மைச் சீர்திருத்திக்கொண்டு மேனிலை யடைதல் வேண் டும். இந்நெறி நிற்போர்க்குக் கடமை முரண்கள் அடிக்கடி எதிர்ப்படுதல் கூடும். நாயன்மார் முதலிய பல மேன்மக்கள் வாழ்க்கையில் இதனைக் காணலாம். சுந்தர

சோழன் கி.பி. 969-ல் இறந்தபோது, அவனோடு உடன்கட்டையேறிய அவன் மனைவி "வானவன் மாதேவி" முன் தோன்றிய கடமை முரணை நினைத்துப்பார்க்க எவர் நெஞ்சமும் பெரிதும் உருகும் : இவள் மகனாகிய முதலாம் இராஜராஜன் பாலுண்ணும் சிறுமகவா யிருக்கையில், கணவன் மரணம் நேர்ந்தது. குழந்தைக்காக உயிர் வாழ்தல் தருமமா? அன்றி, கணவனோடு மாய்தலே தருமமா? என்று அரசமாதேவி வினவித் திகைத்தாள். முடிவில் கணவனுயிருடன் தன்னுயிரைச் சேர்த்தலே தலையாய கடன் என்று முடிவுசெய்து தீப்பாய்ந்தாள்.* சாமானியர் வாழ்க்கையிலும் கடமை முரண் தோன்றும். நாம் நன்னெறியினின்றும் விலகிப் பரவப்படுகுழியில் வீழாதிருத்தற்கு, ஞானியாரடிகள் அநுட்டித்துவந்த ஓர் அறிவு சான்ற உபாயம் சாலச் சிறந்தது. அவர்கள் அடிக்கடி "சண்முகா! சண்முகா!" என்று சொல்லுவது வழக்கம். அதன் கருத்தை அவர்தம் சீடருள் ஒருவருக்கு ஒருநாள் விளக்கியருளினர். "சண்முகா" என்பது ஆறுமுகங்களை யுடைய முருகவேளைக் குறிப்பதாகும். அவன் ஆறுமுகங்களும், சுற்றிலுமுள்ள நால்திசை, மேல், கீழ் என்னும் மற்றிரு திசை ஆக ஆறு திசைகளையும் அநவரதமும் நோக்கி நிற்பன. ஆதலின் ஒவ்வொரு மனிதனது முக்கரண வேலைகளும், அவை எவ்வளவு மறைவில் நடைபெறினும் இறைவன் கண்ணுக்குத் தெரியும். இவ்வொரு நினைவு எப்போதும் நம்மிடமிருக்குமாயின், நாம் தீமை எதுவும் செய்யமாட்டோம். இறைவனை நோக்கி உளமுருகிச் செய்யும் பிரார்த்தனையும் உண்மையான ஒரு பெரும் சக்தி என்றும் உணரக்கடவோம்.

இங்ஙனம் சித்த சுத்தியை வளர்த்துச் சிவபூஜை செய்து, தெய்வ ஒளி நம் வாழ்வில் வீசும் நிலையை அடைய அயராது முயலவேண்டும். இதனுடன் மன்னுயிர்த் தொண்டும் ஆற்றிவர வேண்டும். குணம், குறி, பேர், ஊர், செயல் ஒன்றுமில்லாப் பரம்பொருள், பதிநிலை யடைந்து பஞ்சகிருத்தியஞ் செய்வதும், நடராஜர் தியாகராஜராய்த் திகழ்வதும், அவர் அடியடைய விரும்பும் அனைவரும் உன்னத்தக்க உண்மைகள். அவர் எண்குணங்கள் நம்மிற் பதியவேண்டுமாயின், நாமும் மன்னுயிர்த் தொண்டினை, நடமாடுங் கோவில்களில் நம்பனையே பூசிக்கின்றோம் என்னும் உணர்வுடன், ஒல்லும் வகையில் ஓவாதே செய்து வருதல் வேண்டும். "உண்டாலம்ம! இவ்வுலகம்........தமக்கென முயலா நோன்றாட் பிறர்க்கென முயலுநர் உண்மையானே" என்ற புறப்பாட்டும் நினைவு கூரத்தக்கது. இத்தகைய பொதுநல நாட்டம் ஒரு நாட்டு மக்களிடத்தில் இல்லாவிடில் அந்நாட்டு அரசாங்கம் எந்தப் பெருநலத்தையும் செய்தல் இயலாதுபோம்.

எனவே, சைவர்களாகிய நாம் நம்மை நாடோறும் புனிதப்படுத்திவர ஒருபுறம் முயன்றுகொண்டு, மற்றொரு புறம் புனிதமுறையில்-நமக்கியன்ற துறைகளில்-அன்புடன் பொதுநலத் தொண்டும் புரிந்து வருதல் வேண்டும். நம் தலைமுறையில் வாழ்ந்த காந்திமகான், யோகி அரவிந்தர் முதலிய சான்றோர் வாழ்க்கையே நமக்குப் போதிய சான்றுகளாகும். இங்ஙனம் நாட்டின் குடிமக்கள் பொதுநலம் நாடிக்

---

* *திருக்கோவலூர்க் கல்வெட்டில் "மூலமகப் பிரித்து முழங்கெரி நடுவணும் தலைமகற் பிரியாத் தையல்" என்று இக்கற்பரசியார் குறிக்கப் பெற்றுள்ளார்.*

கடமை செய்யாவிடில், செங்கோலாட்சி நிலவாது. வலியோர் மெலியோரைவதைத்து, உலகை நரகமாக்கிவிடுவர். ஆகவே நம் பொறுப்பினை உணர்ந்து, தனித்தும் ஒன்று சேர்ந்தும், பல துறைகளிலும் பொதுநன்மைக்காகத் தொண்டாற்ற வேண்டும்.

இத்தகைய சமய வாழ்வுதான் இருபதாம் நூற்றுண்டுலகை இன்னல் வடிவ இருளுலகமாக இழிந்தொழியா வண்ணம் காக்கவல்லது. Capitalism (முதலாளித் துவம்), Communism (பொதுவுடைமை) என்னும் இரண்டு மருண்ட வாழ்க்கை முறைகளின் வெறித்த போரை விலக்கவல்லது. இவ்விரண்டினுமுள்ள புன் மைகளைப் போக்கி நன்மைகளைப் பிணைக்கவல்லது. உலகமெல்லாம் ஒரு பெருங் குடும்பமாய், ஒரே பெரும் சத்திய தருமக் குடியாட்சியில் இன்புற்று வாழச்செய்ய வல்லது.

எப்படி ? சமயவாழ்க்கை நடத்துவோர், இராமலிங்க அடிகள் உணர்த்தியபடி, "கருணையும் சிவமே பொருள்" எனக் கடைப்பிடிப்பார். முதலாளிகளா யிருப்பின், யாக்கையும் செல்வமும் அழிவனவென்றும், அன்பும் அருளுமே நிலைத்த இன்பம் தருவனவென்றும் உணர்ந்து "மிகுபொருள் வெஃகாமை" என்ற பண்டைய மனப் பான்மையை மீண்டும் பெறுவர். தமது அறந்திறம்பா முயற்சியால் தம் தேவைக்கு மேற்பட்ட பொருள் வந்து சேரின், அது சிவன் தந்ததே என்றுணர்ந்து, மனமகிழ் வுடன் எளியோர்க்கு வழங்கி இன்புறுவர். நீர்வரவு பெரிதுடைய ஓர் ஏரி, தனது நீரை மதகுகளின் வழியாக, வயல்கட்கு வழங்கினுலல்லது, தன் கரை உடைய, தானே அழிந்துபோம் என்னும் தத்துவத்தை உணர்வர். "ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே செல்லும்வாய் எல்லாம்" செய்வர். செல்வர்கள் இவ்வகை நடத்திவரின் முதலாளித்துவத்தைப்பற்றிக் கூறப்படும் குறைகள் நீங்கிவிடும்.

இங்ஙனமே சமய வாழ்க்கையானது பொதுவுடைமைக் கட்சியின் புன்மையை யும் அகற்றும் : மக்களியாவரும் வறுமையாஞ் சிறுமையினின்றும் தப்பி, நிரம் பிய உண்டி உடை உறையுளுடன் இன்புற்று வாழவேண்டும் என்னும் குறிக்கோள் சிறந்ததே எனினும், அதனினும் சிறந்த மற்றோர் குறிக்கோளுக்குச் சாதனமாகும் அளவில்தான் அது ஏற்கத்தக்கதாகும் என்று கொள்ளும். "உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே" என்ற திருமந்திரத்தை வாழ்க்கைமுறைக் குறிக்கோளா கத் தரும். இம்மையின்பம் சமுதாயத்தில் பெருகுதற்காகப் பாவமுறைகளைக் கை யாளுதல் பெருந்துன்பமே தரும் என்று வற்புறுத்தும். உடலுக்கும் புலனுக்கும் இன்பம் பெருக்கினும், மனிதன் தன் அறிவு இச்சை செயற் சுதந்திரத்தைப் பலி கொடுத்துவிட்டு, இவ்வவனியில் வாழ்வதில் ஒரு மேன்மையுமில்லை என்னும் உணர்வை எழுப்பும். அழியாத சிவமே அனைத்தினும் சிறந்த பொருள் ஆதலின், அதனை, வறுமையின் சிறுமையும் வாழ்வின் மையலும் அகன்ற இம்மை வாழ்வி லேயே அடையுமாறு தூண்டும். நெறி திறம்பாத சமய வாழ்க்கையின் சக்தியைப் பற்றி இன்னும் விரித்துரைத்தல் வேண்டா.

# விஞ்ஞான வித்தின் விரிவு

(திரு. புலவர். சுந்தர-சண்முகனர், புதுவை.)

உலகம் முன்னினும் இவ்விருபதாம் நூற்றுண்டில் பெருவளர்ச்சி பெற்றுள்ள தென்பது கண்கூடு. வளர்ச்சி யென்றுல் நாடகத்தில்—அதிலும் பேசும் படக்காட்சியில், ஒரே விநாடியில் குழந்தை பெரிய மனிதனுக ஆகிவிடுகின்ற அத்தகைய வளர்ச்சியன்று. வீட்டில் குழந்தை படிப்படியாக வளர்ந்து பெரியமனிதனுக ஆகும் வளர்ச்சியைப் போன்றதே உலகின் வளர்ச்சியும். இந்நுட்ப முணராதார் சிலர், உலகின் இன்றைய புதுவளர்ச்சியின் பொலிவு நோக்கிப் புகழ்ந்து, பழைய மந்த நிலையைப் பழித்து இழித்துரைக்கின்றனர். இஃது எம்மட்டுப் பொருந்துமென்று சற்றுராய்வோம்.

மனிதனுக்கு ஒவ்வொரு பருவத்தில் ஒவ்வொரு துறையில் ஒவ்வொரு விறுவிறுப்பு முனைப்புற்றிருக்கும். அவ்வவ்வதனை அவ்வப்போது ஒரு வெற்றியாகக் கருதி அவன் வரவேற்கிறுன். குழந்தைப் பருவத்தில் குழந்தை, தன்னைப் பிறர் தூக்கிவைத்திருக்கும்போது, அவர்களுடைய பிடியிலிருந்து தப்பித் தன் தாயின் மடியை யடைவதில் ஒரு விறுவிறுப்புக்கொள்கின்றது. அடைந்தபோது வெற்றிற்கறிகுறியான மெய்ப்பாடுகள் அதன் மெய்யிற் படுகின்றன. அயல் நாட்டின்மேல் அணுகுண்டு வீசி வெற்றியடைந்தவர் கொள்ளும் மனமகிழ்ச்சிக்குக் குறைந்ததாக அக்குழந்தையின் மனமகிழ்ச்சியை மதிப்பிட்டுவிட முடியாது. மேலும் ஓரளவு வயது முதிர்ந்த சிறுவன், மற்றைய பிள்ளைகள் வெறித்துப் பார்க்கப் பார்க்க, தான் அவர்கள் எதிரில் உயர்ந்த தின்பண்டம் தின்பதிலும், சிறந்த வெடி (படாசு) வெடிப்பதிலும், விலையேறப்பெற்ற விளையாட்டுப் பொருள்கள் வைத்துக்கொண்டு விளையாடுவதிலும், மதிப்பிற்குரிய ஆடையணிகள் அணிவதிலும் விறுவிறுப்புக் கொண்டு வெற்றிமாலை சூடுகிறுன். இன்னுஞ் சில்லாண்டுகள் சென்றதும், முறையே விளையாட்டிலும், கல்வியிலும் மற்றைய மாணவரை வெல்ல விரும்புகின்றுன். அடுத்து, நடையாலும், உடையாலும், அழகாலும், ஆற்றலாலும் மற்றைய இளைஞரினும் தானே கன்னியரின் கண்களைக் கவர்ந்து வாகைசூட வேண்டுமென்று விறுவிறுக்கின்றுன். பின்னர் தொடர்ந்து பட்டம், பதவி, அரசியல் முதலியவற்றில் ஏனையோரினுஞ் சிறந்து செல்வத்தில் புரண்டு செம்மாந்திருக்கக் கனவு காண்கிறுன். கனவு நனவாகி வாகைமேல் வாகை வகைவகையாக வருவதுமுண்டு. எல்லா ஆட்டபாட்டங்களும் அடங்கிய காலத்து, யேசுவைப்போல், புத்தரைப்போல், காந்தியைப்போல் மாநிலம் மதிக்கவேண்டுமென்று விரும்பி அதற்குரிய நாடகமேடையில் ஏறி நடிக்கத் தொடங்கிவிடுகிறுன்.

மனிதனின் இத்தகு வியத்தகு செயல்களுள் எது பழைமை? எது புதுமை? எது தாழ்ந்தது? எது உயர்ந்தது? இவையெல்லாஞ் சரிநிகர் சமன். இவற்றுள் ஒன்றுக்கொன்று உயர்வு தாழ்வு கற்பிப்பது கற்பனை மட்டுமன்று; ஆராய்ச்சி யின்மையால் நேர்ந்த தவறுமாகும். ஏன்?

காந்தியண்ணலையே எடுத்துக்கொள்வோம். அவர் இளமையிலியற்றிய செயல்கள் எளியனவாகத் தோன்றின. முதுமையில் முகிழ்த்த செயல்களோ அரும்பெருந் தொண்டுகளாக மலர்ந்தன. அதனால் அவரது இளமையைப் பழைமையானது—தாழ்ந்தது என்றிகழவும், முதுமையைப் புதுமையானது—உயர்ந்தது என்று புகழவுஞ் சாலுமா? ஆண்டிற்கேற்ற—அறிவிற்கேற்ற—அநுபவத்திற்கேற்ற செயல்களே கைவரப்பெற்றன. இதற்கு இயற்கை யென்று பெயர் சூட்டல் நேரிது.

இனி யுலகை நோக்குவோம். இவ்வுலகந் தோன்றி யேறக்குறைய மூன்று கோடி யாண்டுகள் ஆகியிருக்கலாமென்று விஞ்ஞானிகள் உய்த்துணர்ந்து உரைத்துள்ளனர். இவ்வாண்டுகளை நூறு நூறு ஆண்டுகளாகப் பகுத்துக்கொண்டோமானால், ஒரு நூற்றாண்டிற்கும் மறு நூற்றாண்டிற்கும் உலக வளர்ச்சியில் பல மாறுதல் ஏற்பட்டிருப்பதை யுணரலாம். நீர்ப்பாசி, புல், பூண்டுகளிலிருந்து படிப்படியாக வாலுள்ள குரங்கு, வாலில்லாக் குரங்கு, மனிதன்வரை உயிர்த்தோற்றம் உண்டானதாகக் கருதப்பட்டு வருகின்றது.

மனிதனுக்குத் தொடக்கத்தில் பேசத் தெரியாது. உடை யுடுக்கத் தெரியாது. அந்த அறிவும் அப்போது எட்டவில்லை. சுருங்கச் சொல்லின் பசியுணர்ச்சி யேற்பட்ட போது உணவு தேடி யுண்பதைவிட வேறெதுவுஞ் செய்ய அறியாதவனா யிருந்தான். இந்நிலையில் வேட்டையாடுவதிலிருந்து பயிர்த்தொழிலுக்குத் தாவினான். படிப்படியாக மண், கல், மரம், இரும்பு முதலியவற்றால் கருவிகள் கண்டுபிடித்தான். தச்சு, நெசவு முதலியவற்றைச் செய்தான். நாளடைவில் வெறும் பேச்சுக்குமேல் எழுதவும் பழகி, படிக்கவுங் கற்று, பாராளவும் தேர்ச்சி பெற்றான். இப்போது விஞ்ஞான வெறி பிடித்து, அணுகுண்டு போடுவதிலிருந்து அயல் கோளங்கட்கு (செவ்வாய்-சந்திர மண்டிலங்கள்) தாவுவதுவரை வந்துவிட்டான்.

இவர்களுள், ஆதியில் ஆடையின்றி வாழ்ந்தவன் மூடன்—இப்போது அயல் கோளத்திற்குத் தாவுபவன்றான் அறிவாளி—என்பது பொருளா? இல்லை. இயற்கையென்னுந் துலைத்தட்டில் எடை போட்டுப் பார்க்குங்கால் இருவருஞ் சரிநிகர் சமனே! அவன் தானே இவன்! இவன்தானே அவன்! எட்டு வயதுச் சிறுவன் தானே எண்பது வயதுக் கிழவனானான். முப்பது வயது மனிதன் செய்யுஞ் செயல்களைச் செய்யத் தெரியாமையால் மூன்று வயதுக் குழந்தையை நாம் இகழ்வதுண்டோ? இகழ்ந்தால் அது அறிவீனமல்லவா? இதே முப்பது வயது மனிதன், இப்போது செய்யுஞ் செயலை மூன்று வயதில் செய்தானா? செய்ய இயற்கை யிடந் தராதே. 19-ஆம் நூற்றாண்டில் கம்பியில்லாத் தந்தியை (Wireless) கண்டு பிடித்த மார்கோனி (Marcony) ஐயாயிரம் ஆண்டுகட்குமுன் இருந்தால் அதனைக் கண்டுபிடித்திருக்க முடியுமா? பத்தொன்பது-இருபதாம் நூற்றாண்டுகளில் பேசும்

படக்காட்சி, ஒலி பெருக்கி, மின் விளக்கு, மின் வண்டி முதலியவற்றைக் கண்டு பிடித்த தாமஸ் ஆல்வா எடிசன் ஐயாயிரம் ஆண்டுகட்குமுன் அவற்றைக் கண்டு பிடித்திருக்க முடியுமா ? முடியாதன்றோ ? மற்றைய விஞ்ஞானிகளும் இத்தகை யோரே !

மற்றும், இன்னின்ன பொருளைக் கண்டுபிடித்த பெருமை இன்னின்ன விஞ் ஞானிகட்கு மட்டுந்தான் உரியது என்று சொல்வதும் பொருந்தாத தொன்றேயாம். மாணவன் பத்தாவது வகுப்புத் தேர்வில் வெற்றிபெற்றுள்ளா னென்றால், அதற் குக் காரணர் பத்தாவது வகுப்பு ஆசிரியர் மட்டுந்தான் என்று சொல்வது எங்ங னம் பொருந்தும்? அட்டை வகுப்பு ஆசிரியர் அ-ஆ சொல்லிக்கொடுக்காவிட்டாலும், மேலுந் தொடர்ந்து ஒன்பதாவது வகுப்புவரை மாணவன் படித்துக்கொண்டு வந் திராவிட்டாலும் பத்தாவது வகுப்பாசிரியர் என்ன செய்யமுடியும் ? எழுத்தே யறி யாத இருபது வயதின ஒருவனை ஒன்பது மாதத்தில் பத்தாவது தேர்வில் தேர்ச்சி பெறும்படிச் செய்ய அவராலாகுமா ? முடியாதன்றோ ?

எனவே, இன்று காணப்படுகின்ற—இனி காணப்படப்போகின்ற விஞ்ஞான வெற்றிக ளனைத்திலும் பழங்கால மனிதர்க்கும் பங்குண்டு என்பதை மறக்கவும்— மறுக்கவுங் கூடாது. இதனை யின்னுஞ் சிறிதாராய்வோம்.

## முத்தொழில்

புதிதாக ஒரு பொருளை உண்டாக்கவோ, காப்பாற்றவோ, மறைக்கவோ (அழிக் கவோ) மனிதனால் முடியாது. ஆனால், மனிதனே அம்முத்தொழிலைச் செய்வது போல் நமக்குத் தோன்றும். அத்தோற்றம் வெறுங் கானல் நீரே. ஓடம் மனிதனை அக்கரையிற் சேர்க்கிறது என்றெண்ணுகிறோம். அது தவறு. மனிதனே ஓடத்தை அக்கரையிற் சேர்க்கிறான் என்பதே உண்மை. அதுபோல, மனிதன் முத்தொழில் செய்யவில்லை. அவன் ஓடம். மற்றோர் ஆற்றலே அவனைச் செய்விக்கின்றது. அவ் வாற்றலுக்குப் பெயர் இயற்கை யென்று சிலரும், இறை யென்று சிலரும் இயம்பு வர். அதனாலென்ன ? தமிழ் என்றாலும் இனிமை யென்றாலும் சொல்தானே வேறு ? பொருள் ஒன்றுதானே !

அங்ஙனம் மனிதனால் முத்தொழில் செய்ய முடியாதென்றால் அவன் செய் வதுதான் என்ன ? என்ற வினாவிற்கு விடை வேண்டும். நாற்காலி யுண்டாக்கின வன் யார் ? மனிதன். அதனைப் பத்தாண்டுவரை வைத்திருந்து பாதுகாத்தவன் யார் ? மனிதன். நாடகம் பார்க்கும்போது நடிகன்மேலுள்ள வெறுப்பால், அந் நாற்காலியைத் தூக்கியடித்து ஒடித்து உடைத்து அழித்து, பின் அதனை அடுப்பி லிட்டு எரித்துச் சாம்பலாக்கியவன் யார் ? மனிதனே ! ஏன்—இங்கு அவன் முத் தொழில் செய்ததாக மேளதாளத்தோடு ஒத்துக்கொள்ளலாமே ? முக்காலும் முடி யாது. எப்பொழுது நாற்காலியை ஒடிக்கிறானோ, புத்தகத்தையும் துணியையுங் கிழிக் கிறானோ, ஒருவரிடம் ஒரு பொருளைக் கொடுக்கும்போது பதனமாக எடுத்துக்கொண்டு

போ என்று நம்பிக்கை யிழந்து அறிவுரை புகட்டுகிறுனே, அப்பொழுதே, மனித ஞல் எதையும் நிலேயாகக் காப்பாற்றமுடியாது என்ற உண்மை வெட்டவெளிச்ச மாகின்றது. நாற்காலி உண்டாக்கினுன் என்றுல், நடுத்தெருவில் நின்றுகொண்டு “ நாற்காலியே வா ” என்றதுமா நாற்காலி வந்துவிட்டது ? பேசும் படத்தில் திடீ ரெனத் தோன்றும் நாற்காலியும் தச்சன் கைவேலே தங்கியதன்றே ? மனிதன் மரத்தைத்தானே நாற்காலியாகச் செய்தான் ? மரம் ஏது ? விதையைத்தானே மரமாக்கினுன் ? அது போகட்டும். நாற்காலியை மறைத்தானென்றுல், நடுத்தெரு வில் நின்றுகொண்டு “நாற்காலியே போ” என்றதுமே நாற்காலி உலகத்தைவிட்டு முற்றிலும் மறைந்துவிட்டதா? அதனே புடைத்துத் தனித்தனிக் கட்டையாக்கினுன்; கட்டையை விறகாக அடுப்பிலிட்டுச் சாம்பலாக்கினு னல்லவா ? நாற்காலி மறைய வில்லேயே ; இப்போது சாம்பல் உருவத்தி லுள்ளதே ! எனவே, மனிதன் தன் னுடனேயே தோன்றி உலகில் நிலேத்துள்ள ஒரு பொருளே மற்றெரு பொருளாகச் செய்கின்றுன் ; அதுதான் அவனுல் முடியும் என்ற முடிவுக்கு வருவோம். வருவ தென்ன—அம்முடிவு தானே நம்மைத் தேடிவரும்.

ஒன்றை மற்றென்றுகச் செய்யும் மனிதன், ஒரு விநாடியிலாவது அல்லது ஒரு நாழிகையிலாவது ஒரு நாற்காலியின் பகுதிகளனைத்தையுஞ் செய்து பொருத்தி விடுகின்றுனு ? இல்லே. ஒரு நேரத்தில் ஒரு காலேக் கடைகிறுன். தனித்தனியாக நான்கு காலேயுங் கடைந்தபின், பின்னுல் சாரும் கட்டைகளேத் தனித் தனியாகக் கடைவான். பின் அக்கட்டை தாங்கிகளேச் செய்வான். மேலும் கைப்பிடிகளேச் செதுக்குவான். தொடர்ந்து கைப்பிடி தாங்கிகளே யிழைப்பான். அடுத்து, அமருந் தட்டுப் பலகையையும் அமைப்பான். இறுதியிலேயே எல்லாவற்றையும் இணேத்துப் பொருத்துவான். அதற்குப் பெயரே நாற்காலி. அவன் நாற்காலியின் ஒரு காலேத் தவிர மீதி யெல்லாவற்றையுஞ் செய்துவிட்டான் ; இறுதியில் எஞ்சியுள்ள அக்காலேக் கடைந்துகொண்டிருக்கிறுன் என்று வைத்துக்கொள்வோம். அப்போழ்து ஒருவர் அவனே யணுகி,“என்ன செய்கின்றுய்” என்று கேட்டால்,“நாற்காலி செய்கிறேன்” என்றே அவன் பதில் சொல்வானல்லவா ? அல்லது—அவன் இன்னும் நாற்காலி யின் எந்த உறுப்புக்களேயும் செய்யவில்லே ; முதன்முதலாக ஒரு காலேக் கடையத் தொடங்கியுள்ளான் என்று வைத்துக்கொள்வோம். அப்போது ஒருவர் அவனே நோக்கி,“ என்ன செய்கிறுய் ” என்று கேட்டால், அப்பொழுதும் அவன் “நாற்காலி செய்கிறேன் ” என்றுதானே பதில் சொல்வான் ? எனவே ஒருவன் ஒரு நாற்காலி செய்வதற்கு ஒரு நாள் பிடிக்குமென்றுல், முதல் விநாடியிலிருந்து கடைசி விநாடி வரையும், அவனுல் செய்யப்படும் பொருளுக்குப் பெயர் நாற்காலியே என்பது பட் டப்பகல் ஞாயிறேபோல் திட்டமாய்த் தெரியவருமே !

## விஞ்ஞானத்தின் விரிவு

மேல் எடுத்துக்காட்டப்பட்ட நாற்காலியின் தோற்றந்தான் விஞ்ஞானத்தின் தோற்றமும். தச்சன் கையில் உளியை யெடுத்ததுமே நாற்காலி யென்னுஞ் சொல் பிறந்துவிட்டதைப்போல, இயற்கையாய் விளேந்த காய், கனி, கிழங்குகளே யுண்டுவந்த

## விஞ்ஞான வித்தின் விரிவு

மனிதன் செயற்கையாகப் பயிரிடத் தொடங்கியதுமே விஞ்ஞானம் வெளிப்பிறந்து விட்டது. அவ்விஞ்ஞான வித்து, நாளடைவில் படிப்படியாக வேரூன்றி, முளேயீன்று, தண்டு நீண்டு, கிளேத்து, தளிர்த்து, தழைத்து, பூத்துக் குலுங்குகின்றது இன் றைக்கு ! (இனி வரப்போகும் விஞ்ஞான வளர்ச்சியைக் காய் கனியாகக் கழறுவது சாலும்.) அன்று தழையை மென்று தண்ணீரைக் குடித்த மனிதனே, இன்று ஒன் பது வெண்பொற்காசு செலவில் ஒரு வேளே யுணவு உண்ணச்செய்கிறது. அன்று மலேப்பிளவில் வாழ்ந்த மனிதனே, இன்று நூற்றிருபது அடுக்கு மாளிகையுள் நுழைந்து வாழச் செய்கின்றது. அன்று தழை யுடுக்கவும் அறியாதிருந்த மனிதனே, இன்று ஆயிரம் வெண்பொற்காசு மதிப்புள்ள ஒரு புடவை வாங்கச் செய்கின்றது. அன்று விலங்குபோல் ஊமையா யிருந்த மனிதனே, இன்று பல்கலேப் புலவனுக்கி வருகின்றது. அன்று சிறு மலேப்பிளவைக் கடக்கவும் அஞ்சிய மனிதனே, இன்று மதி (சந்திரன்) மண்டலத்திற்குச் செல்ல முன்கூட்டிப் பதிவு ( Register ) செய்து கொள்ள வைக்கின்றது. விஞ்ஞான வித்தின் விளேவுதா னென்னே !

அன்றைய விஞ்ஞானம் பால் என்ருல், இன்றைய விஞ்ஞானம் அதிலிருந்து எடுக்கப்பட்ட நறு நெய்யாகும். அன்றைய விஞ்ஞானம் விறகு என்ருல்,இன்றைய விஞ்ஞானம் விறகைக் கடைந்தெடுத்த வெந்தழலாகும். அன்றைய விஞ்ஞானம் ஒரு கோழி முட்டை யென்ருல், இன்றைய விஞ்ஞானம் அம்முட்டையி னின்றும் கால், வால், தலே முதலியவற்ருேடு வெளிவந்த கோழிக்குஞ்சாகும். இக்குஞ்சு இன்னும் பெரிய கோழியாகும். அன்றைய விஞ்ஞானம் ஒரு சிறிய ஆலம் வித்து என்ருல், இன்றைய விஞ்ஞானம் அவ்வித்திலிருந்து தோன்றிய ஆலஞ்செடியாகும். இன்னும் இச்செடி, ஒரு மன்னர் மன்னன் தன் பெரும் படைகளுடன் தங்குதற் குரிய அளவு நிழல்தரும் பெருமரமாக விழுதுவிட்டு விரிந்து படர்ந்து வளர்ச்சி பெறும். என்னே விஞ்ஞானத்தின் கருச் செறிவு !

மற்றும், அன்றைய விஞ்ஞானம் ஒரு செய்யுள் என்ருல், இன்றைய விஞ்ஞா னம் பல செய்யுட்கள் அடங்கிய காவியமாகும். இது இன்னும் மாபெருங் காவிய மாகும். ஆகா, விஞ்ஞான வித்தின் விரிவுதா னென்னே !



# கம்பர் காட்டும் பெண்கள்

(வித்துவான், பண்டித, திரு. கா. பொ. இரத்தினம், B.A. (Hons) Lond.
B. O. L. (Madras)
விரிவுரையாளர், அரசினர் ஆசிரிய கலாசாலை, கொழும்பு.)

இராமாயணக்கதை தமிழ் மக்கள் யாவருக்கும் நன்கு தெரிந்த ஒரு கதை. இந்தக் கதையின் நிகழ்ச்சிகளுக்குப் பெண்களே பெரும்பாலும் காரணமாயிருக்கின்றனர். கூனியும் சூர்ப்பணகையும் இல்லாவிட்டால் இராமர் காட்டுக்குப் போனதும், இராவணன் சீதையைச் சிறைவைத்தலும் நிகழ்ந்திருக்கமுடியாது. துர்க்குணங்கள் நிறைந்த பெண்களுடைய சூழ்ச்சிகளால் அவர்களைச் சேர்ந்தோர்க்கும் நாட்டு மக்களுக்கும் எவ்வளவோ கஷ்டங்கள் ஏற்படும் என்பதை இராமாயணஞ் சிறப்பாகக் காட்டுகிறது. தமிழ் இராமாயணத்தின் ஆசிரியராகிய கம்பர் பெண்களுடைய பலவிதமான இயல்புகளைப் பலவகையான நிகழ்ச்சிகளோடு தொடர்புபடுத்திக் காட்டியிருக்கிறார்.

தாடகை சூர்ப்பணகை கூனி என்போரையும் சீதை கோசலை முதலியோரையும் தமிழ்மக்கள் நன்கறிவர். துர்க்குணமுள்ள பெண்களைப் பார்த்துத் தாடகை சூர்ப்பணகை கூனி என்று பழிப்பதும் சிறந்த பெண்களைச் சீதை என்று போற்றுவதும் தமிழ்நாட்டுக் கிராமங்களில் இன்றும் நிகழ்ந்து வருகின்றன.

கம்பன் அழகுறச் சித்திரித்த பெண் பாத்திரங்களுள் சீதை, கைகேசி, கோசலை, கூனி, தாடகை, சூர்ப்பணகை, மண்டோதரி, திரிசடை, தாரை முதலியோர் விசேடமாகக் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களின் இயல்பைச் சுருக்கமாக அறிவோம்.

முதலில் சீதையைப் பார்ப்போம். இராமாயணத்தின் கதாநாயகி சீதாபிராட்டியாரே. இராமாயணம் சிறையிருந்த செல்வியின் ஏற்றத்தைக் கூறுகிறதென்று அறிஞர் உரைப்பர். இலங்கையில் அசோக வனத்தில் சிதாபிராட்டியார் சிறையிருந்து பெருந்தவஞ் செய்தார் ; பிறர் வாழத் தியாகஞ் செய்தார் ; அதர்மமும் அஞ்ஞானமும் அழிந்து தர்மமும் ஞானமும் நிலைத்து விளங்கப் பாடுபட்டார் ; நாட்டு மக்களின் நல்வாழ்வுக்குப் பெண்களின் நல்லொழுக்கமும் தியாகமுமே இன்றியமையாதன என்று நிலைநாட்டினர். பெண்களிடத்து அமைய வேண்டிய பெருங்குணங்களை யெல்லாம் கம்பர் சீதாபிராட்டியாரிடம் வைத்து அவரை ஒரு லட்சியப் பெண்ணைச் சிருட்டித்துள்ளார். தமிழ்ப்பெண்களுக்கு ஒரு இலக்கியமாகச் சீதாபிராட்டியார் இலங்குகிறர் எனலாம். சுருங்கக் கூறின், கற்பினுக்கு அரசியாகவும், அழகினுக்கு அழகாகவும், புகழின் எல்லையாகவும், நாணம் மடம் முதலிய பெண்மைக் குணங்களுக்கு இருப்பிடமாகவும் பிராட்டியார் விளங்குகிறர்.

அழகிலே சீதாபிராட்டியாருக்கு நிகரானவர்கள் இந்த உலகில் இல்லை. அகத் தழகும் நல்லுணர்வும் இல்லாத சூர்ப்பணகைகூடச் சீதாபிராட்டியாரின் அழகைக் கண்டு அதிசயப்பட்டுவிட்டாள். சீதையைக்கண்ட தன் கண்களை அப்புறப்படுத்தாமல் அவருடைய அழகினை நெடுநேரம் பருகினுள். அழகினுக்கு எல்லை இல்லை என்று உணர்ந்தாள். ஆண்களை அன்றிப் பெண்களையும் மயக்கும் பேரழகுடைய பிராட்டி யார் நற்குணங்கள் யாவும் உடையவர் எனினும், அவரிடத்தும் பெண்பாலாருக்குத் தனிமையாகவுள்ள சில குறைகள் இல்லாமல் இல்லை. இக்குறைகள் அவரை நமது அநுதாபத்துக்குரிய பாத்திரமாக ஆக்குகின்றன என்பதையும் நாம் உணரவேண் டும். "காட்டுக்கு நானும் கட்டாயம் வருவேன்", என்று இராமரிடம் அவர் வாதாடி ஞர்; பிடிவாதஞ் செய்தார்; பெண்களின் இயல்பினைக் காட்டினுர். காட்டிலே பொன்மானைக் கண்டவுடன் பிடித்துத் தரும்படி கேட்டதும், வீட்டிலே அழகிய கிளி களை வளர்த்ததும் அவருக்கு அழகான பொருள்களில் இருந்த ஆசையைக் காட்டு கின்றன. மான்பின் சென்ற இராமர் திரும்பி வராமை கண்டு இலக்குவனைப் போய்ப் பார்க்கும்படி கேட்டார். இலக்குவன் உடனே போகவிரும்பாதது கண்டு அவ னைத் திட்டிய கோபாவேசம், ஆத்திரக்காரனுக்குப் புத்திகுறைவு என்பதை மாத் திரமன்று, பெண்களுக்கு இயல்பாகவுள்ள சபல குணத்தையுங் காட்டுகிறது. இலக் குவனைக் கடிந்து பேசிய பிழையைப் பிராட்டியார் பின் நன்கு உணர்ந்து வருந்தி ஞர். அசோக வனத்திலே அநுமானைச் சந்தித்தபொழுது தம் மதியீனத்தைப் "பெரிய பேதைமைச் சின்மதிப் பெண்மை" என்று வெளிப்படையாகக் கூறினுர். இராமர் எப்போது வருவார் என்று இலங்கையில் இருக்கும்பொழுது ஏங்கித்தவித் தார்; கடைசியில் உயிர்விடவும் தீர்மானித்தார். இப்படி விரைவில் மனம் அழிந்த பிராட்டியார் இராவணனைத் திட்டும்பொழுதும் அவனை நாய் என்று பழிக்கும் பொழுதுங் கற்பின் திண்மையைக் காட்டி வீரப்பெண்ணுகவும் விளங்கினுர். என்ன கஷ்டம் வந்தாலும் இராமரையே நினைந்து நினைந்து உறுதியுடன் தம் கற்பினைக் காத்துநின்ற அவர், கற்புடைப் பெண்களுக்கு ஒரு பேரொளியாகும். அசோக வனத் திலே பிராட்டியாரைக் கண்ட இராமதூதன் அவரை வருணிக்குஞ் செய்யுள் பிராட்டி யாரின் பெருங்குணங்களை நன்கு காட்டுகிறது.

"விற்பெருந் தடந்தோள் வீர வீங்குநீ ரிலங்கை வெற்பின்
நற்பெருந் தவத்த ளாய நங்கையைக் கண்டே னல்லேன்
"இற்பிறப் பென்ப தொன்றும் இரும்பொறை என்ப தொன்றும்
கற்பெனும் பெயர தொன்றும்" களிநடம் புரியக்கண்டேன்."

இனிக் கோசலையின் இயல்புகள் ஆராயத்தக்கன. தாய்மை, கற்பு, பொறுமை, நாணம் முதலிய பண்புகளோடு சேர்ந்து இலங்குகின்ற தனிச்சிறப்பு கோசலைக்குரி யது. கைகேசியுடன் ஒப்பிடும்போது கோசலை மிக நல்லவளாக யாவருடைய மதிப் பையும் பெறுகிருள். தாராளமான மனம், கணவன் மக்கள் சக்களத்திகள் யாவ ரிடத்தும் மாறுபாடில்லாத அன்பு, மரபு தவருமல் நடக்க வேண்டுமெனும் எண் ணம், விரதம் மேற்கொள்ளும் மாண்பு, தாழ்ந்த சாதியினரையும் சமமாக மதித் துத் தன் மக்களெனப் போற்றும் அருட்டன்மை, கணவனைப் போற்றிப் பணி புரியும் இயல்பு—இவைகளுக்கெல்லாம் இருப்பிடமாகக் கோசலை விளங்குகிருள். இராம

னிடம் கொண்ட அன்பினுல் தானுங் காட்டுக்குப்போக விரும்பினுள். இராமன், "உன் கடன் உன்னுடைய கணவனை ஓம்புதலே" என்றதும் உடனே கடமையை உணர்ந்து அதன்படி ஒழுகிய அவளுடைய பெரும்பண்பு கைகேசியிடங் காணக்கிடையாதது.

கைகேசியோ சாகசமும், எண்ணியதை நிறைவேற்றும் தன்மையும் உடையவள். அரச குடும்பத்தில் பிறந்து அரசனுக்கு மனைவியா யிருக்கிறேன் என்ற பெருமிதம் உடையவள். இடாம்பீகமான வாழ்விலும், பிறருக்குக் கொஞ்சமுங் குறையாத நிலைமையிலும் ஆசை கொண்டவள். ஒழுக்கக் குறைவு இல்லாதவள் ஆயினும், உள்ளத்து உறுதியில்லாதவள். பட்டம், பதவி, மண், பொன் முதலிய வற்றில் மோகங் கொண்டவள். இராமனைத் தன் மகன்போலவே மதித்து அன்பு கொண்டிருந்தாள் எனினும் கூனியின் வலையிற் சிக்கினவுடன்—தன் உயர்நிலைக்குத் தாழ்வு வந்ததென்று உணர்ந்தவுடன்—தன்னலப்பேயின் உருவங் கொண்டாள்; இராமனைப் பகைவனுக எண்ணினுள்; போலிக் கோபமும் நீலிக் கண்ணீரும் வடித்தாள்; கணவன் பிச்சை கொடு என்று இரந்தாலுங்கூட இரங்காத கொடியவளாகினுள்; கட்டிய கணவனது உயிரையே உண்ணும் கூற்றுகவும் மாறினுள். தோற்றத்தில் நல்லவர்களாயிருக்கும் பெண்கள் தம் நலங்கருதி நீலிகளாக மாறும் இயல்பைத்தான் கைகேசி கடைசியில் காட்டினுள்.

இந்தக்கைகேசி கூட நல்லவளாகவே இருந்திருப்பாள் கூனி எனுங் கொடியவள் அவளின் மனத்தை மாற்றுவிட்டால். பாரதத்தில் துன்மதிக்கும் சூழ்ச்சிகளுக்கும் இருப்பிடமாக எவ்வாறு சகுனி மாமா விளங்குகிருரோ அவ்வாறே இராமாயணத்தில் கூனி விளங்குகிருள். பெண் இனத்துக்கே வசையீட்டி விளங்கும் இக்கூனியைக் கம்பர் மிக நுட்பமாகப் படைத்திருக்கிருர். கூனி மிகக் கெட்டவள்; காரணமின்றியும் பிறருக்குக் கேடு செய்யும் இயல்பு உடையவள்; அடுத்துக் கெடுக்குங் குணமும் பிறர் நன்றுய் வாழப்பொறுத தன்மையும் அவளின் இயல்புகள். பிறருக்குத் தீமை விளைப்பதற்காகத் தனக்கு வரும் ஆபத்துக்களையும் கஷ்டங்களையுங் கூடப் பொருட்படுத்தாத கயமைக்குணத்துக்கு அவள் இருப்பிடம். கைகேசிபோன்ற அன்பும் அறிவும் நிரம்பிய பெண்களையும் மயக்கிக் கெடச்செய்யும் சூழ்ச்சித்திறனும், சொல் வன்மையும் அவளிடம் காணப்பட்டன. நடிப்பும் பழிக்கு அஞ்சாமையும் எடுத்த காரியத்தை முடிக்கும் திண்மையும் கூனியின் தனிப்பெருமைகள். நாம் வெறுக்கும் பாத்திரங்களுள் கூனியைப்போன்ற தொன்றினைக் காணமுடியாது. சின்னஞ்சிறு கூனி தன் சூழ்ச்சியால் நாடு முழுதையுங் கலக்கிவைத்துவிடுகிருள் என்பதை உணரும்பொழுது கூனியைத் திட்டவே யாவரும் எண்ணுவர்.

இனி, இலங்கையில் வாழ்ந்த அரக்கர் குடியிலுள்ள பெண்களிற் சிலரைப் பார்ப்போம். இராமன் குடியை முடித்த கூனிபோல இராவணனுடைய குடிக்கு அழிவு தேடினவள் சூர்ப்பணகையே. இராவணன் தங்கையாகிய இவள் இராமனைக் காட்டிலே கண்டவுடன் காதல் கொண்டாள். ஆனுல் அருகிலே சீதையைக் கண்டவுடன் அவளுக்குப் பொறுமையும் கோபமும் உண்டாயின. சீதையைச் சக்களத்தியாக அவள் எண்ணினுள். அதனுல் சக்களத்தியைத் தொலைக்க முயன்ருள். இராமனிடங் கொண்ட விருப்பும் அதற்கு இடையூருகவிருக்கும் சீதையின்மேற் கொண்ட வெறுப்பும் சீதையைத் தொலைத்துவிடும்படி அவளைத் தூண்டின. சீதையின் அழ

கைப் பழித்து அவளைத் தூற்றினுள்; எடுத்துச்செல்ல முயன்ருள். இராமன்முன்னே "அஞ்சொல் இளமஞ்ஞையென அன்ன மென" அசைந்து காதல் மொழிகளைப் பிதற்றினுள். கடைசியில் மூக்கு அரிபட்டுத் தமையனை அடைந்து புலம்பினுள். அவனுக்குத் தன் இரகசியத்தைச் சொல்லாது அவனிடஞ் சேர்த்தற்குச் சீதையைக் கவர்ந்ததாலேயே தனக்கு மானபங்கம் ஏற்பட்டதென்று பொய்சொல்லிப் பாசாங்கு செய்தாள். சீதையின் அழகை வருணித்து அவனை அவளிடங் காதல் கொள்ளு மாறு செய்தாள். அரக்கர் குலம் அழிவதற்கே அடிகோலினுள். இராவணன் முதலியோர் அழிந்ததற்குச் சூர்ப்பணகை இராமன்மேற் கொண்ட காமமே காரணமாகிறது. தகுதியற்றவர்களிடத்துப் பெண்கள் ஆசை வைத்தால் அவ்வாசை குடி குலம் முழுவதையுமே அழித்துவிடும் என்பதை அவளின் காம விளையாட்டு நன்கு காட்டுகிறது.

சூர்ப்பணகையின் பாட்டியாகிய தாடகையைப்பற்றி இரண்டொரு வார்த்தை. தாடகையிடம் பெண்மைக் குணமே யில்லை. உருவம் மாத்திரந்தான் பெண்.அந்த உருவத்தில் ஆண்மையும் கொடுமையுமே குடியிருந்தன. பெண்மை உருவத்தில் ஆண்மைக்குணங் கொண்டவர்களை நாம் "ஆண்மாரிகள்" என்கிருேமே, இந்த ஆண்மாரிகளுக்குள் "ஆண்மாரி" தாடகை.

இராவணனுடைய குடும்பத்தில் சூர்ப்பணகை, தாடகை போன்ற கொடிய பெண்கள் இருந்தாலும் திரிசடை, மண்டோதரி போன்ற குணச்செல்விகளும் இருந்திருக்கிருர்கள். இளம் அரக்கிகளுள் திரிசடை ஒரு ஞானசூரியன்போலத் திகழ்ந்தாள் ; அன்பும் அறிவும் தியாக குணமும் படைத்தவள் அவள். சீதையிடம் மெய்யன்பும் உண்மை நட்பும் கொண்ட செம்மனச் செல்வியாகிய அவள் புலிகளுக்கிடையில் வாழ்ந்த மான்போல இலங்கையில் அரக்கியருக்கிடையில் விளங்கினுள்.

இராவணன் மனைவி மண்டோதரியின் மாண்பு இணையற்றது. இராவணன் உயிர் நீத்தவுடன் தானும் உயிர் நீத்த தலைக்கற்புடைய நங்கை அவள். தன் நாயகன் எவ்வளவு கெட்டவனுயிருப்பினும் அவனைத் தூற்ருது போற்றி உயிரென மதித்து வாழ்ந்த அவள் பெண்ணினத்திற்கு ஓர் ஆபரணம். இப்பெருந் திண்மை நிலையினுலே—கற்பினுலே—மூவுலகப் பெண்டிரும் அவளைப் போற்றினுர்கள்; மணிவாசகரும் அவளுடைய புகழைப் பாடினுர். சிறந்த கற்புடைய பெண்டிரை உயர்ந்தோர் போற்றுவர் என்று இளங்கோவடிகள் பாடினுர். இராமாயணத்திலே சீதையும் மண்டோதரியும் யாவருடைய போற்றுதலுக்கும் உரிமையுடைய கற்பரசிகளாக என்றும் விளங்குகின்றனர்.

# நிலவு தந்த குறள் விருந்து

(திரு. வித்துவான், G. சுப்பிரமணியபிள்ளை, M.A., B.L.)

"புலவர் திருவள் ளுவரன்றிப் பூமேற்
சிலவர் புலவரெனச் செப்பல்—நிலவு
பிறங்கொளிமா லைக்கும் பெயர்மாலை மற்றுங்
கறங்கிருண்மா லைக்கும் பெயர்"

என்று மதுரைத் தமிழாசிரியர் செங்குன்றூர்க்கிழார் பாடினர். அத்தகைய தலையான புலவர் திருவள்ளுவர். நிலவிருந்த அப்பெரும் புலவர் தரு விருந்தும் ஒரு பெரு விருந்தாம். அதனைச் சற்று நோக்குவாம்.

வாயிலின் முன்றிலில், வாசுகியம்மையார் வழிபாடு நடத்த, வள்ளுவதேவர் வான் நோக்கிய வண்ணம் வீற்றிருந்தார். எங்கும் நிலவு பளிச்சென்று அடித்துக் கொண்டிருந்தது. நீலவானிலே நிறைநாட் செல்வனாகிய திங்கள் கண்கவர் வனப் பொடு காட்சியளித்தான். சுற்றும் மீனினம் மகிழ்ச்சியொடு மிளிர்ந்தன. வானையே நோக்கியிருந்த வள்ளுவர் உள்ளத்தில் எண்ண அலைகள் பின்னி எழுந்தன. பத்துப் பன்னிரண்டு நாட்களுக்குமுன் ஒரு சின்னக் கம்பிபோல் நின்ற மின்னற்பிறை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து, கலையெலாம் நிறைந்து இன்று முழுமதியமாக அழகுடன் விளங்குகின்றது. அக்கலை வளர்ச்சியிலுள்ள கவர்ச்சிதான் என்னே! அக்குறைவிலா நிறைவிலுள்ள குளிர்ச்சிதான் என்னே! ஆனால் இவ்வளர் மதிக்குள்ள வனப்பு தேய்மதிக்கில்லையே! நிறைந்தது குறைவதைக் காணவே கண் கூசுகின்றது. தேய்மதியும் தேசு குன்றிவிடுகிறது. மாய்மதியம் நமது மனதை வருத்துகிறது. குறைமதியின் கோரக்காட்சி வெறுப்பை விளைவிக்கிறது. இவ்வுண்மையை உலகிடையிலும் நாம் காண்கின்றோம்.

இவ்வுலகிலே நட்பைப்போல் செயற்கரியது வேறு யாதுளது? தண்டாமரையிலே தாதாடிய வண்டு சந்தனமரத்தின் கொம்பரின் உம்பர் சந்திரவட்டுப்போல் இழைக்கும் இருலில் ஊறிடும் தேன் சிறுகச் சிறுக வளர்வதாகி நிறைந்துவந்து இன்பம் பயப்பதுபோல், பெரியோர் கேண்மையும் பெருக வளர்ந்து இன்பமூட்டும். அறிவுடையார் நட்புக்கள் பிறை நிறைந்து பெருகிவரும் தன்மைபோல நாள்தோறும் பெருகிக்கொண்டே வரும். இன்பம் நிறைந்துகொண்டே வரும். ஆனால், அந்தோ! அறிவிலாப் பேதை மாக்கள் செய்யும் நட்புக்களோ நிறைந்த மதி பின் குறையும் தன்மைபோல நாள்தோறும் குறைந்துகொண்டே வரும். அறிவுடையார் எண்ணாது எதையும் செய்யாராகலின், அவர்கள் செய்யும் நட்பு முதலில் சுருங்கிய அளவி

லேயே தோன்றி, அஃது இனிமை விளைப்பது கண்டு, நாள்தோறும் குறையாது நிறைந்துகொண்டே வரும். மேன்மேலும் வளர்ந்து மேன்மையுறப் பரிமளிக்கும். பேதையார் எண்ணமற்று எதையும் செய்துவிடுவராதலின், அறியாமையின் காரணமாகத் தொடக்கத்திலேயே அளவுகடந்த நட்பைச் செய்துகாட்டிப் பின் அன்னாரின் பேதைமை இன்னா விளைப்பது கண்டு பெரும் பேதுறுவர். விரைவில் அவர்கள் நட்பு, சந்திரன் தேய்ந்தழிந்து மறைவதுபோலக் குறைந்துகொண்டே வந்து பின் இல்லையாகிவிடும். தேய்மதியோன் ஒளி சாம்பி உருவிழந்து காட்சிக்கு இன்னாதவனாதல்போல் தேய்மதியார் நட்பும் இனிமை பயவாது வெறுப்பை யூட்டி வெறுமிதாகிவிடும். அப்புல்லறிவாளர் தொடர்பு குறைவதே தவிர வளர்வதென்பது ஒரு நாளும் இல்லை. அறிவுடையார் தொடர்பு ஒரு நாளும் குறையாது வளர்பிறைபோல் வளர்ந்துகொண்டே வரும். இவ்வாறு மதியினை முன்னும் பின்னும் உற்று நோக்கி மதியுடையார் செயலையும் மதியற்றார் செயலையும் உணர்ந்த திருவள்ளுவர் திருவாக்குப் பின் வருமாறு எழுந்தது :—

" நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்நீர பேதையார் நட்பு."

தமது உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வெள்ளை மதியை வள்ளுவர் மீண்டும் கருதலானார். திங்கள் ஒளி நிறைந்து விளங்கியது உண்மைதான். ஆனால் அவ்வொளியிலும் சிறிது இருட்சாயல் அல்லவோ ஒடிக்கிடந்தது ! கறை பிடித்ததுபோல் ஒரு சிறு களங்கம் அத்திங்களின் ஒளியை மறுப்படுத்திவிட்டதே ! மறுவோ மிகச் சிறிதுதான். ஆனால் அத்தனை ஒளியையும் ஒரு சிறு மறு மாசு படுத்திவிட்டதே ! திங்கள் கீழிடங்களிலே இருந்திருப்பின், அஃது ஒரு குற்றமாகவே தோன்றியிராது. மேலிடத்திலே உயர்ந்த ஒழுக்குடன் ஓங்கிச் செல்வதால், அதனிடத்துள்ள ஒரு சிறு குற்றங்கூட மறைக்கமுடியாதபடி உலகம் முழுவதற்கும் தெரிந்துவிட்டது. இதுபோலவேதான், உயர்ந்த குடியின்கட் பிறந்தார் மாட்டுளதாங் குற்றம் சிறிதேயாயினும் உலகெங்கும் பரந்து வெளிப்பட்டுவிடும். வானின்கண் விளங்கும் மதிபோன்றவர் உயர்ந்த குடியிற் பிறந்தார். அவரிடத்தே யாதானும் ஒரு குற்றம் நிகழ்ந்துவிடுமாயின், அது திங்களின்கண்ணே விளங்கும் மறுவினை ஒக்கும். திங்களின் களங்கத்தை உலகத்தினின்றும் எவ்வாறு மறைக்கமுடியாதோ, அதுபோல் உயர் குடிப் பிறந்தார் குற்றத்தையும் உலகம் அறியாவாறு செய்துவிட முடியாது. திங்களின் மறு சிறிதாயினும் அதன் பேரொளியின் காரணத்தாலும், உயரிய இடத்தில் தோன்றும் ஏதுவானும், பெரிதாக வெளிப்பட்டுவிடுகிறது. அதுபோன்றே, குற்றம் சிறிதாயிருப்பினும், அது புகழுடைய உயர் குடியினர்பால் நிகழுமாயின்,பெரிதாகி யாவராலும் அறியப்பட்டுவிடும். அதே குற்றம் அல்லது அதைவிடவும் பெரியதொரு குற்றம் கீழானொரிடத்துக் காணப்படுமாயின் அதனைக் கவனிப்பார் ஒருவருமில்லை. ஆதலால் உயர்குடிப் பிறந்தார் தம்மிடத்துக் குற்றம் சிறிதாயினும் வராதபடி தங்களைக் காத்து ஒழுகுதல் வேண்டும் என்ற உண்மை திங்களிடமிருந்து புலனாவதை வள்ளுவர் கண்டார். அவர் வாய்மொழி பின்வருமாறு பிறந்தது :—

" குடிப்பிறந்தார் கண்விளங்குங் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து."

இம்மதியம் எவ்வளவு எழில் வாய்ந்து ஒளிர்கின்றது ! அதன் நிலவொளி மனதிற்கு மட்டற்ற மகிழ்ச்சியை ஊட்டுகின்றது. முதியோர் உள்ளத்தில் உவகையைப் பாய்ச்சுகின்றது. இளையோர் இதயத்தில் இன்ப உணர்ச்சிகளை எழுப்புகின்றது. அதன் கதிரொளி காதல் வீணையிற் கவி பாடுகிறது. அன்பர்களை அகலாது அணுகச் செய்கிறது. இவ்வாறு சிந்தித்துக்கொண்டிருந்த வள்ளுவர் உள்ளத்திலே இளங் காதலர்கள் இந்நிலவொளியில் எவ்வெவ்வாறெல்லாம் தங்கள் காதல் உணர்ச்சியைக் காட்டிநிற்பர் என்ற காதற் சித்திரங்கள் ஒன்றன்பின் ஒன்ருக உருவெடுக்கலாயின.

ஓர் இளம்பெண்ணின் உள்ளத்தை ஓர் இளைஞன் கொள்ளைகொண்டான். களவுக் கூட்டத்தில் அவனைக் கலந்து பிரிந்த காதலி, பின்னுள் இரவுக் குறியிடை அவன் வருகையை எதிர்நோக்கி நிற்கிருள். இடையீடுகளானும் அல்ல குறியானும் அவனை எய்தப்பெருது மனம் நோகிருள். அவன் பிரிவுக் காற்ருது கலங்கிய அவள் மேனி வாடிய வாட்டம் கண்டு ஊரெல்லாம் அலர் பிறந்திருந்தது. வானிலே திங்களைக் கண்ட தலைவி, பாம்பினுல் பற்றப்படும்பொழுது மதியம் எவ்வாறு ஒளியிழந்து மங்கிவிடுகிறது என்பதை உன்னினுள். தலைவன் தன் நலனுண்டு பிரிந்தபின், தன் தளர்ந்த நிலையும் அவ்வாறே உள்ளது என நினைந்தாள். வானிலே உள்ள மதியம் பாம்பின் வாய்ப்பட்டால், அதனோடு யாதொரு தொடர்புமில்லாத உலகத்தாரெல்லாம் கலங்கியும் புலம்பியும் பூசல் விளைத்தும் நொந்து வருந்துகிருர்கள். தலைவன் உண்ட அவள் நலத்திற்கு வருந்துவார் ஒருவருமிலர். ஏதோ ஒருநாள் அவள் தலைவனுடன் காணப்பட்டதற்காக, அரவம் மதியினை விழுங்கும்போது உலகத்தாரிடை உண்டாகும் அலர்போல, இவள் மாட்டும் அலர் உண்டாகி ஊரெல்லாம் இதே பேச்சாகிவிட்டதே என்று வருந்துகிருள் :—

"கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்
திங்களைப் பாம்புகொண் டற்று."

திங்களின் மறைவு உலகிடை எவ்வளவு அமளியை உண்டுபண்ணுமோ, அதுபோலத் தலைவி தலைவனுடன் கொண்டுள்ள தொடர்பைப்பற்றியும் ஊரெல்லாம் அலர் அமளிபடுகிறதே என்பது அவள் குறித்த பொருள்.

தலைவி இவ்வாறு தவித்து நிற்கையில், அவளைக் காணவந்த தலைமகன் சிறைப் புறமாக நிற்கிருன். அவ்வமயம் வான்மீதிலே தண்மதி முதிர்ந்து கதிர் சாய்ப்பதைக் காண்கிருன். தன் காதலியின் முகம் போலவே இருக்கிறது அம்மதியம். ஆயின், வானின்கண்ணுள்ள உடுக்குலங்கள் ஏன் ஓரிடத்தில் நில்லாமல் நிலைமாறி இயங்குகின்றன என்ற ஆராய்ச்சி அவனுக்குப் பிறந்தது. ஆம், தன் காதலியின் முகத்தையும் திங்களையும் கண்ட மீனினங்கள், எது உண்மையான திங்கள் என்று தெளிவு பெருது பெண்ணினிடத்தும் விண்ணினிடத்துமாய் நகரும் காரணத்தால் தம் நிலையினின்றும் கலங்கித் திரிகின்றன என்ற முடிவுக்கு வருகிருன் :—

"மதியு மடந்தை முகனு மறியா
பதியிற் கலங்கிய மீன்."

" ஆ ! என்ன பேதைமை ! இந்த விண்மீன்களுக்கு இவ்வுண்மை தெரியவில்லையா ? இதிற் கலங்குதற்கு யாதொரு காரணமும் இல்லேயே. முன்னெல்லாம் குறைந்தே யிருந்து சிறிது சிறிதாக நிரம்பப்பெற்று இப்பொழுது விளங்குகின்ற இந்த மதி வேறு, என் காதலி முகம் வேறு என்பதை எளிதில் தெரிந்துகொள்ளலாமே. இத்திங்கள் கலையனைத்தும் நிரம்பப்பெற்றுங்கூட, அதன் மறு மறைந்தபாடில்லேயே. என் மாதரின் மாசற்ற முகத்தில் இத்தகைய களங்கமே கிடையாதே. இதைக் கொண்டாயினும் சிறப்பிலாத மதி யாது என்பதை அறியலாமே" என்று மீன்களை நோக்கி இரங்கினன். திங்களை இகழ்ந்தான். தன் தலைவியைப் புகழ்ந்தான். திங்களுக்குள்ள தேய்தலும், வளர்தலும், மறுவுடைமையும் ஆகிய குறைகள் தன் தலைவி மாட்டில்லாமை நோக்கி வியந்தான் :

" அறுவாய் நிறைந்த வவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து."

மேலும் திங்களை விளித்துப் பகர்கின்றன் :" ஐயோ பாவம் ! ஏ மதியமே ! நீ நன்றய் இரு ! நான் வேண்டாமென்று சொல்லவில்லை. என் ஆருயிர்க் காதலியின் முகம் போன்று பொலிவடையப் பார்க்கின்றய்நீ. நீ அவள் முகம்போல நான் மகிழும் வகை ஒளி வீசவல்லையாயின், உன்னையும் நான் காதலிக்கத் தவறமாட்டேன். ஆனல் உன் களங்கத்தைக் களையத்தான் உன்னல் முடியாதே. அதனல் நீ என் காதலி முகம்போல எங்ஙனம் கவின்விட முடியும் ? அது உன்னல் முடியாததால் நீ என்னற் காதலிக்கப்படாய்."

" மாதர் முகம்போ லொளிவிட வல்லையேற்
காதலை வாழி மதி."

தலைவன் மதிக்கு மற்ருேர் உபாயமும் கூறுகிறன்:" ஏ மதியமே ! நான் இன்னென்றும் உனக்குக் கூற விரும்புகிறேன். இந்தக் களங்கம் ஒன்றுதான் உனக்குள்ள குறை என்பது மட்டுமில்லை. என் காதலி முகத்தோடு ஒத்துவிளங்க வேண்டுமானல், நீ இவ்வாறு பலருங் காண வெளிப் புறப்படலாமா ? ஒரு நல்ல உயர்குடியிற் பிறந்த பெண்ணின் முகநலன் அனைத்தையும் அவள் கணவன் ஒருவனே அறிவான். ஏனெனில், உத்தம மங்கையின் பார்வை தன் கணவனிடத்தன்றிப் பிறரிடத்துச் செல்லாது. ஆதலால் அவள் முகத்துக் கண்ணழகையும் சேர்த்து அவள் முகப்பொலிவினைக் கண்டு மகிழும் பேறும் வாய்ப்பும் அவள் கணவனுக்கே உண்டு. குவளை மலர்போலுங் குளிர்ந்த கண்களை யுடையவள் என் காதலி. அவள் முகத்தின் நலன் முழுதையும் கண்டு அனுபவிப்பவன் நான் ஒருவனே யாவேன். பிறரால் அது கூடுவதன்று. பிறர்காணத் தன் முகத்தை வெளிக்காட்டமாட்டாள் என் காதலி. நீ பலரும் காணும்படியாய்ப் பரந்த வானிலே மிதந்துவருகிறய். உன் எழில் நலத்தை உலகனைத்தும் உகந்து பருகுதலால் தூய்மை குன்றிய குறையுடையாய். தூயவளான என் காதலி நான் கண்டு மகிழும் நிறையுடையாள். நீ எவ்வாற்ருனும் அவளுக்கு நேராகமாட்டாய். எவ்வகையிலாவது நீ அவள் முகத்தை ஒத்து விளங்குவையாயின், நீ இவ்வாறு பலருக்கும் அவள் முகத்தைக் கொண்டு

சென்று காட்டுவதை நான் விரும்பமாட்டேன். என் காதலி முகத்தை நீ ஒத்திருக்க வேண்டுமாயின் எனக்கன்றிப் பிறர்க்குப் புலப்படாது ஒதுங்குவாயாக.''

" மலரன்ன கண்ணாள் முகமொத்தி யாயின்
பலர்காணத் தோன்றல் மதி.''

களவுக்கூட்டம் கழிந்தபின் தலைவி தலைவனை மணந்துகொண்டு கற்பொழுக்க நெறிநின்று இல்லறம் நடத்திவருகிறாள். தலைவன் பொருள் காரணமாக அவளைப் பிரிந்தவன் குறித்த காலத்தில் மீளவில்லை. தலைவி தனிமைத்துயருக் காற்றாது தவிக்கிறாள். இராப்பொழுதிலே சந்திரன் வானிடைவயங்கி வருத்தத்தொடங்கினான். தலைவியின் சிந்தனைச் சுழல் வட்டமிட்டது. தன்னை வருத்துவதுபோலத் தனித் திருக்கும் தலைவனையும் இந்நிலவு காயும் அல்லவா ? அவன் அங்ஙனம் வருந்த நேர்ந்தால், தன்னை நினைந்துகொண்டு விரைந்து வருவது திண்ணம். அதற்காக வாவது இந்நிலவு மறையாமல் எரித்துக்கொண்டிருக்க வேண்டும். அவன் அவ் வாறு விரைந்து வராது போயினும் தன்னைப்பற்றி நினைத்தற்காவது நிலவு உதவி செய்யும். தனது நெஞ்சிலே தலைவன் பிரியாது குடிகொண்டிருக்கிறான். அதனால் மதி தன்னை எவ்வளவு வருத்தினாலும் தான் தாங்கிக்கொள்ளலாம். இதே வேளை யில் தன் கணவனும் மதியைப் பார்க்கத்தானே செய்வான் ? அவன் கண்கள் சந் திரனைச் சேர்ந்திருக்கும். அவன் கண்கள் சேர்ந்திருக்கும் பொருளைத் தன் கண் களும் சேர்ந்து காண்பதில் ஓர் இன்பம் இருக்கத்தானே செய்கிறது? ஆதலால் அம் மட்டுக்காவது இம்மதியம் மறைந்துவிடாது ஒளிவிட்டுக்கொண்டிருக்க வேண்டும். இம்மதியம் காய்வதால் தன்னால் உறங்கவும் கூடவில்லை. நிலவு நீங்கினால் தன் கண்ணிமை பொருந்திக் கனவின்கட் காதலனைக் காணலாம் என்று பலபலபடியாகத் தலைவியின் எண்ணங்கள் ஓடின. அவற்றைக் குறிப்பினுணர்த்தும் திருக்குறள் வரு மாறு :

" விடாஅது சென்றாரைக் கண்ணினாற் காணப்
* படாஅதி வாழி மதி.''

ஒவ்வோர் எண்ணமும் ஒவ்வொரு வண்ணக் குறளாய்த் திருவள்ளுவர் கருத் திடைத் திரண்டது. முத்தொளி பரப்பி வெண்ணிலாவும் வானிலே உருண்டது.

---

*படாஅதி=தோன்றாது மறைவாயாக, மறைந்துவிடாதே எனும் இரு பொருளும் உண்டு.

# வாழ்க்கைக் குறிக்கோள்

(மகளிர் பகுதி)

(திருமதி S. ருக்குமணி அம்மையார்)

வாழ்க்கை ! குறிக்கோள் ! ! வாழ்க்கையே குறிக்கோளுடையதுதான். குறிக்கோள் வாழ்க்கையைச் சார்ந்த ஒன்றேயாகும். வாழ்க்கையும் குறிக்கோளும் இணை பிரியா தியங்கும் வாழ்க்கையுடையன. இவ்விரண்டும் திரண்டு அமையின் "வாகு" ஆகும். இச்சொல்லுள் "வா" என்னும் எழுத்து, வாழ்க்கை என்னும் சொல்லினையும்,"கு" என்னும் எழுத்து குறிக்கோள் என்னும் சொல்லினையும் குறிப்பாலுணர்த்துவன எனக் கூறலாம். இவ்வுலகிடை வாழ்க்கை யொன்றினையே "கண்டது காட்சி","கொண்டது கோல"மாகக் கொண்டு நடாத்துவோர் பலராவர். குறிக்கோளுடன் இணைந்த வாழ்க்கையினைக் குவலயம் மதிக்க நடத்துவோர் சிலராகவே உளர். குறிக்கோளற்ற வாழ்வினை நடத்துபவர் விலங்கினை நிகர்ப்பவராவர்."கொன்றேன் பல்லுயிரைக் "குறிக்கோள்" ஒன்றில்லாமையினால் " என்றார் பெரியாரும். " உண்பதும், உடுப்பதும் உறங்குவதுமாக முடியும் " என்னும் பொன்னுரையும் குறிக்கோளின் இன்றியமையாமையினை வலியுறுத்துவதேயாகும். மக்கட் பிறப்பெடுத்தோர் யாவரும் குறிக்கோளுடன் கூடிய வாழ்க்கையினை உலகில் வாழுந்துணையும் நடாத்தியே தீருதல் வேண்டும். இதனை நினைவூட்டற்குப்போலும் பிறந்தவுடன் பச்சிளங்குழவிகள் " குவா "," குவா " எனக் கூவுகின்றன. குவா என்னும் சொல் " குறிக்கோள் வாழ்க்கை " என்னும் சொற்றொடரின் சுருக்கமாகலாம் என எண்ணுகின்றேன். மாந்தர்க்கு வேந்து என மன்னும் " இயற்கை ", முதற்குறிப்பு முறையில் இச்சொல்லைக் குழவிகளைச் சொல்லச் செய்கின்ற தென்றல் மிகையன்று.

ஐம்பெரும் பூதங்களும், செஞ்ஞாயிறும், தண்கதிரும், விண்மீன்களுங்கூட நுணுகி யாராய்வோருக்கு, ஏதோ குறிக்கோளினை உட்கொண்டே தொழிலாற்றி வருகின்றன வென்பது புலப்படும். மற்றும், அஃறிணை உயிர்த்தொகுதிகளும் தத்தம் இனத்தால் இப்புவனத்தை நிறைத்திடல் வேண்டும் என்னும் கொள்கை கொண்டே வாழ்க்கை நடத்துவதையும் நாம் காணலாம். இன்பம் என்ற ஒன்றைக் கூலியாக வுதவி, ஒவ்வோருயிரையும் குறிக்கோள் நெறியில் இயற்கையிறை இயக்குகின்ற தென்னத் தடையில்லை. இறையினது கைவன்மையின் முடிந்த குறிக்கோளாக வுள்ள மக்களினமும் குறிக்கோளுடை வாழ்க்கையின் பொருட்டே ஆக்கப்பட்டுள்ளது என்பது தேற்றம். இதனைக் கருதியே, மக்களுயிர்க்கு " மனம் " என்பதொரு

சிறப்புடைத் துணைக்கருவி தரப்பட்டுள்ளது. அம்மனப் புனத்துள்ளே புதைபொருளாக அமைக்கப்பட்டுள்ளதே "அறிவு". இவ்வறிவே குறிக்கோள் அல்லது கொள்கை என்பதன் அடிப்படையாகும். இதுபற்றியே, நாட்டுப்பற்றென்னும் நல்லுணவை நம்மனோர்க்கு ஊட்டியருளிய பாரதியாரும்," பகுத்தறிவின் துணையால் செய்யத் தக்கது இது, செய்யத்தகாதது இது, என்று ஒருவன் அறிந்து முன்பின் யோசித்துத் தன் வாழ்நாளில் நீடித்துச் செய்ய மனத்தால் ஒப்புக்கொள்ளும் கருமத் தொடரின் அஸ்திவாரமாகிய கருத்தே கொள்கையாகும்" எனக் கட்டுரைத்துப் போயினர்.

மக்களாவார் தொகுப்பினுள் குறிக்கோள் ஏதும் அற்றவரும் இவ்வுலகில் உள்ளனர். அவர்களை "மக்கட் பதர்" என்னலாம். இவர்கள், இந்நிலவுலகம் நிலை செய்து நிற்றற்பொருட்டுச் சுமையாகத் தோன்றிய தோன்றல்கள் ஆவர். மற்றும் பலர், குறிக்கோள் பல உள்ளத்தே கொண்டிருப்பவரெனினும் அவ்வழியிற் செயலாற்றற்கிலராய் வாளா கிடப்பர். இவர்கள் முன்னவரினும் ஒரு சிறிது உயர்வுடையரெனினும் உலகிற்குப் பயன்படுதலில் ஒரு சிறிதும் நயனிலராகலின் இவரும் நானிலத்தின் நற்சுமை போன்றவரேயாவர். ஒரு சிலர்தாம்—மிகச் சிலர்தாம்—வாழ்க்கைக்கேற்ற குறிக்கோளுடையராய், அதனை மெய்வருத்தம், பசி, உறக்கம், இகழ்வு, வாணுட்சுருக்கம் இன்னோரன்ன இடையூறுகள் எவற்றையும் பொருட்படுத்தாது எதிர்த்தூன்றித் தொழிலாற்றுபவராக உள்ளனர். இவரே, தமக்கென வாழாப் பிறர்க்குரியாளரெனப் பேரும் புகழும் பெற்று ஒளிர்வர். இத்தகை உத்தம வித்தக மக்கள் ஒரு சிலரையேனும் பெற்றுள்ளமையாற்றான் உலகம் நிலைபெற்றுள்ளதென்னலாம். " உண்டால் அம்ம ! இவ்வுலகம் " என இளம் பெருவழுதி இசைத்துள்ளமைக்கு இவரே ஏற்ற எடுத்துக்காட்டாளராகத் திகழ்வர். இங்ஙனம் தூய குறிக்கோள் பூண்டொழுகி இவ்வுலகிற் பீடுபெற்றோரே வீடுபெற்றோர் என விளம்பற்குரியர். உயர்ந்த குறிக்கோள் நெறியே வாழ்வினை நடத்தி உலகத்தார் உள்ளத்திலெல்லாம் என்றும் உளராதலே "வீடுபேறு" என்னத் தடை என்ன ? நம் நாளிலேயே இதனுக்கோர் எடுத்துக்காட்டாளராக இலகிய சான்றோர் சாந்தி எய்திய நம் காந்தியடிகளாவரன்றோ !

இதுகாறும் கூறியவாற்றால், இவ்வுலகிடை மக்கட் சமுதாயம் "மூவகை"இனத்தவரைக் கொண்டுள்ள தென்பதும், அவருள்ளும் செயல்புரியும் சீரிய குறிக்கோளுடையாரே சிறந்தோர் என்பதும், ஏனையோர் எவரும் பூரியரே யாவரென்பதும் தேறலாகும். இதனால் நாம் அறியத்தகுவது, வாழ்க்கையை வனப்புடையதாக்குவதும் வளம்படுத்துவதும் குறிக்கோள்—குறிக்கோளொன்றே என்பதாம்.

இத்துணை இன்றியமையாத் தன்மையைக் குறிக்கோள் குறிக்கொண்டிருத்தலின் நம் முன்னோர்கள்,—கட்டடத்துக்கு நாற்புறச் சுவர்போன்று—வாழ்க்கைக்கும் அது வீண்பட்டு வீழாவண்ணம் நான்கு நல்நோக்கங்களை ஆய்ந்து அறிவித்துப் போயினர். அவற்றை நன்னூல்கள் " அறம்-பொருள்-இன்பம்-வீடு " என நவிலும். இவற்றை அகமும் புறமும் என இரண்டனுள் அடக்கி யிசைப்பர் இலக்கண வல்லுநர். இவையும் அறம் என்ற ஒன்றினுள்ளே ஒன்றலும் ஒல்லும். இதுபற்றியே இளைஞர் சுவடியின் முதற்கண் " அறம் செய " எனத் தொடங்கினர் மடந்தையர்

திலதமெனத்தக்க அவ்வைப்பிராட்டியார். வாழ்க்கையே அறத்தின்—நற்குறிக் கோளின்—வண்ணத்ததாக வேண்டும் என்பதே முன்னோர் முடிபு. அன்னோர் வழி நிற்றலே கற்றோர்க்கும் மற்றோர்க்கும் கடப்பாடாகும்.

இனி, மக்கள் மேற்கொண்டொழுகும் வாழ்க்கை இருதிறத்ததாகும். அவை இல்வாழ்வும், துறவு எனப்படும் நல்வாழ்வும் ஆம். இவ்விரண்டனுள் எவர் எதனை மேற்கொள்ளினும் அவர்தம் குறிக்கோள் அறமொன்றன்கண்ணே அடங்கிவிடும். மற்றும் இக்குறிக்கோள் நெறி ஆடவர்க்குமட்டில் உரியதொன்றன்று. மகளிர்க்கும் மிகவுரியதே. சேர நாட்டுச் செம்மலாகிய வளந்துறந்த இளங்கோவடிகள் குறிக் கோள்கள் ஆடவர்க்கேலும் வகையினைத் தமிழணங்கின் நல்லடிக்குச் சிலம்பணிந்து பணிந்திடு முகத்தால் அறிவுறுத்துப்போயினர். மங்கையருலகுக்காகும் குறிக்கோள் நெறியினை நம் தமிழணங்குக்கு மணிமேகலை சாத்துமுகத்தால் சாற்றிப்போயினர் பாண்டிநாட்டுப் பழம் புலவர் ஏத்துபுகழுடைச் சாத்தனுர். தெள்ளிய வள்ளுவரோ இருபாலாரையுங் கருதி முப்பாலாக்கி வார்த்தனர். “ பெற்றோர் சொற் பேணல் ” என்னுமொரு குறிக்கோளினைக் கொண்டொழுகிய திறங் கண்டன்றே வான்மீகி இராமனை வடமொழியால் வாடாமாலை சூட்டி வழுத்தினுன். உடன்பிறப்போடும் ஒருமித்துவாழும் உள்ளமிலாக் கள்ளம்பற்றி யன்றே துரியனைத் தூற்றுவாராயினர் தூயரும். யாவர்க்கும் சீரிய குறிக்கோள்களை—கற்பனைகளை—இசைத்தருளி அவ்வழி செவ்விய முறையில் ஆற்றி நின்றமையாலன்றே ஒருத்தரும் இணையிலாக் “ கருத் தரும் ”, தாயகம் மானும் “ நபிகள் நாயகமும் ” வானுறவோங்கும் மாட்சிமிக்க காட்சியராயினர் ! ஆகலின், இவ்வுலகில் எத்திசைக் கண்ணும் எக்காலத்தும் ஆன் றோராயவர் குறிக்கோள் நாட்டுங் கொள்கையில் குறைவிலர் என அறியலாகும். நாமும் குறிக்கோளுற்ற வாழ்க்கையினையே நானிலத்தில் வாழுமளவும் நடத்த வேண்டுமென நயந்துரைத்தலே இக்கட்டுரையின் குறிக்கோளாகும்.

வாழ்நாளிலே குறிக்கோள் மேற்கொண்டொழுகுவதற்கு நாமனைவரும் கட மைப்பட்டுள்ளோமே யன்றி, அவற்றைக் கடைபோகுந்தனையும் நின்று முடித்தற் கான ஆயுளும் ஆற்றலும் அமையப்பெற்றிலேம். ஒரு சில கொள்கைகள் நம் நாளி லேயே நிறைவுறுதல் நிகழும். பிற சில, அவ்வழியொழுகும் பின்னையவரால் மேற் கொண்டு நிறைவேற்றப்படும். சான்ருக, நம் “ பாரத தேசிய மகாசபை ” மேற் கொண்ட “ தன்னுரிமைக் குறிக்கோள் ” முன்னைநாள் தொட்டுப் பற்பல மேதைய ரால் மேற்கொள்ளப்பெற்று, இறுதியில் அறமும் உண்மையும் திண்மையும் பழுத்த அடிகளார் முயல, நம் நாளில் நிறைவேறியுள்ளதைக் கொள்ளலாமன்றே ! குறிக்கோளாளர்க்கு எஞ்ஞான்றும் தோல்வி யென்பதே இலதாம். எனினும், மேற் கொள்ளப்படுங் கொள்கையானது, தன்னலமற்றதாய் நன்னலம் பல இந்நிலத்தே நல்க வல்லதாயிருத்தல் வேண்டும். குறிக்கோளின் நன்மை தீமைகளே புகழும் இகழும் பயக்கும். ஆதலால், நற்குறிக்கோள்களை மேற்கொண்டு புகழெய்தவேண்டு மென விளக்குதற் பொருட்டே இல்லற இயலின் இறுதிக்கண் “ புகழ் ” என்பு தொன்றினை நிறுவினர் திருக்குறளில். இப்புகழையும் நயவாது நன்றுற்றவேண்டு மென நாட்டுதற்கே “ அவா அறுத்தல் ” கூறித் துறவற இயலைத் தலைக்கட்டினர் அச்செந்நாப்போதார். மேலும், நற்கொள்கைகள் நலம் விளைத்தலும், தீய

கொள்கைகள் தீங்கு பயத்தலும் தட்டாமே நிகழுமெனக் காட்டற் பொருட்டே "ஊழ்" என்னும் உறுதி இறுதிக்கண் இசைத்தனர் இவர். இங்ஙனம் கூறியவதனுல் நாம் யாவரும் நல்ல குறிக்கோள்களை உள்ளத்துட்கொண்டு—பள்ளத்துப் பாயும் புனல் போல—இடையருமல் வாழ்க்கையில் முயலவேண்டுமென்பது வெள்ளிடை விலங்க லென விளங்குகின்றது. இதுபற்றியே யானும், மகளிருலகம் தற்போது மேற்கொள் ளத்தக்க தக்க குறிக்கோள்களை இளையளாகும் எனக்கேற்ற வகையில் என் மீதே சார்த்தி இனி இயம்பி இக்கட்டுரையை முடிக்கின்றேன்.

யான் இதுகாறும் கூறிய பொதுப்பகுதியால், நீவிர்," சொல்லளவல்லால் பய னில்லை " என்று கூறும் ஆன்ருேர் இழிப்புரைக்கு யான் இலக்காகாம லிருக்க விரும்புதலை அறியுமாறு கோருகிறேன். என்ன சிறந்த குறிக்கோள்களை மேற் கொண்டு யான் நடத்த இயலுமென எண்ணமிடும்போதே என் நெஞ்சம் அஞ்சவே நேருகிறது. பெரியதோர் ஆலந்தருவெனினும், சிறியதொரு வித்தினுள் கருவாய்க் கிடந்தே பின்னர் உருவாய் ஓங்குகின்றது. விருந்துண் களத்தே உணவருந்துவோர் முதியரா யிருப்பினும், பலராகவிருப்பினும் அவ்விருந்துணவினைப் பாகஞ்செய்வோர் முதியராயிருத்தல் வேண்டுமென்ற நியதி யில்லையன்றே ! மற்றும் இளையரா யிருப் பதும் நன்றன்றே ! ஆடவராகவே இருத்தல் வேண்டுவதும் இன்றன்றே ! மகளிரா யிருத்தல் மாண்புடைத்தாமன்றே ! இவ்விதிவழி கருதி ஒரு சில உரைக்கின்றேன்.

குறிக்கோள்களை மேற்கொண்டொழுகுதற்கு நாட்டமுடையோர், தாம் வாழும் கால நிலையையும், மக்கள் தேவையையும், தமதாற்றலையும் கூர்ந்தே தேர்ந்து கொள்ளல் நலம்.—முன்பொருகால், மக்கள் உள்ளமெல்லாம் கொலைக்குணம் குடிகொண்டது. எங்கும் வேள்வியின் பெயரால் பசுவதைகள் ! ஆடுகளை அடுகை ! குதிரைக்கொலை ! முதலிய கொடுஞ்செயல்கள் நடைபெற்றன. அக்காலத்தே உயிர் கட்குத் தேவையா யிருந்தது " அருளறம் " ஒன்றே. இதனையே தமது குறிக்கோ ளாகக் கொண்டனர் ஒருவர். பெரிய அரசு ! உரிய எழிலுடை மனையாள் ! இளைய குழந்தை ! அரிய இளமை ! இவற்றை அவர் சற்றுங் கருதினரிலர். மக்கள் மனத்து மருளை மாய்ப்பதையே விரதமாகக்கொண்டு முனைந்தனர் ; இனைந்தனர் பல்கால் ; முடிவில் வெற்றியே கண்டனர். கண்டனர் அருட்சமயத்தை. இவரே, "ஆசியஜோதி" யென அயலவரும் நயக்கும் "புத்தர்பிரான்". இவர், காலமும் தேவையும் கணித் துத் தமது குறிக்கோளை வகுத்துக்கொண்டமையால் அரசெலாம் அடிபணியும் அம ரத்துவம் அடையப்பெற்றுர்.—மற்றொருகால், பெரும்பாலார்க்கும் போரிலே விருப் பம் மூண்டது. அமைதி நஞ்செனப் பட்டது. போருக்கான முயற்சிகளே அல்லும் பகலும் அயர்ச்சியின்றி அடிகோலி ஆக்கப்பட்டன. வேதியருள்ளிட்ட எச்சாதியரும் போர்க்கலையிலே—கொலையிலே—ஈடுபட்டனர். அநீதி, அரசுமுடி சூடியது. இந்நிலை யிலேயும்—போர்க்களங் குறுகிய பின்னரும்—போரிட விருப்பற்றிருந்தான் ஒரு பெரு வீரன். அவனுள்ளத்தைப் போரிலே நாட்டங்கொள்ளச் செய்தாலன்றி அந் நேரத்தில் வேறு வழியில்லை. ஆதலாலன்றே, வண்ணம் சான்ற கண்ணன் எண்ண மெல்லாம் போர்முகப்பட்டு அவ்வருச்சுனனை அமர்வழிச் செலுத்தின. போர்நூல் சீர்பொருந்திய கீதையாயிற்று. இன்றும் இந்நூல் விழுப்புகழெய்தி விளங்குகின் றது.—பின்னொருகால், பொன்னும் நெல்லும் பொலிந்து விளங்கிய நம் நாடு

வறுமைவாய்ப்பட்டது. மக்கள் நெஞ்செல்லாம் அடிமை நஞ்சேறியது. தீராமிடிமை! அடக்குமுறைகளின் தாண்டவம் ! பெரியோர் உள்ளங்கள் செய்வகையும் உய்வகையுங் காணது கலங்கின. என் செய்வது ? போராற்றும் வன்மையுமில்லை ; வசதியுமில்லை. ஆதலால்," சத்தியாக்கிரகம் " உருக்கொள்ளலுற்றது. உண்மையும் அருளும் குறிக்கோள்களாயின. இவற்றையே படைக்கலங்களாகக் கொண்டு நம் நாட்டு நற்றந்தையார், என்றும், எங்கும், எவரும் காணுத வெற்றி கிடைப்பித்தனர் நமக்கு. தற்போது நம்மனைவரையும் உரிமையாளராய் உலவவிட்டு அமரராயினர் அவ்வடிகளார். இங்ஙனமே, காலமும் தேவையும் கருதித் துணிந்து நல்ல குறிக்கோள்களை வாழ்க்கையில் மேற்கொண்டு அவ்வழியில் ஆயுளுள்ளளவும் அஞ்சாமல் செல்லவேண்டுமென்பதே எனது பேரவா.

இம்முறையில், நம் நாளின் நிலைமையும், நம்மனோர் தேவையும் எவ்வாறுள்ளன ? போர்க்களத்தே குற்றுயிராய்க் குன்று வீரத்துடன் கிடக்கும் வீரனை, அவனுயிர் பொன்றியதும் உடலத்தைப் பிய்த்துத் துண்டாடித் தின்று களிக்கக் கருதி நாயும், நரியும், கழுகும், காகமும் பலவாகச் சூழ்ந்திருந்து ஆரவாரிப்பதேபோல –நம்மைச்சுற்றிலும் "பசியும்-பிணியும்-பகையும் (போர்)-அறியாமையும்"–முற்றுகையிட்டுக் கொண்டுள்ளன தற்போது. இந்நிலையைப் படம் பிடித்தாற்போல, " உறுபசியும், ஓவாப்பிணியும், செறுபகையும் சேராதியல்வது நாடு " என்னும் குறளால் கூறிவைத்த வள்ளுவர் வாய்க்குச் சர்க்கரைதான் வழங்கவேண்டும். "ஆமை" புகுந்த வீடு அழிவடையும் என்பர். இதனுண்மையை யானறியேன். என்றாலும் ஒன்று உறுதி. ஆமை முடிபுள்ள " அறியாமை " நம் நாட்டில் நிலைத்து நீந்தி விளையாடுகிறது. இவ்வறியாமையைப் புரட்டித்தொலைத்தாலன்றி நந்நாடு நன்னாடாகாதென்பது தெளிந்த துணிபு. ஆதலின் இவ்வறியாமையைப் போக்கும் போரில் பெருவீரங்காட்டி வெற்றிபெற வேண்டுமென்பது எனதொரு குறிக்கோளாகும். யான், கல்வியென்னும் அமுதக்கடலில் ஒரு சொட்டளவே சுவைத்துள்ளேன். எனினும், தகுந்த முறையில் கையாளப்படும் கல்வியொன்றே அறியாமையைப் புறங்காணுமென உணர்கின்றேன். முன்னை நாளிலும், அவ்வை முதலிய பல கல்வியறிவுடைக் காரிகையார் நாடெங்கும் நடந்து நற்கல்வி யூட்டித் தொண்டாற்றி யுள்ளனர். இவ்வாறே, கல்விகற்ற மகளிர், முதியர், இளையராகிய எவர்க்கும் கல்வியமு தூட்டும் தொண்டில் ஈடுபட வேண்டுமென எண்ணுகின்றேன். " வீதிதோறும் இரண்டொரு பள்ளி " நிறுவி, யாவரையும் கல்விகற்கத் தூண்டுவதே பாரதியார் வேண்டுவதாகலின், தோழிமார்கள் தொண்டர்படை கண்டு கொண்டு இப்பணியில் இறங்கவேண்டுமென விழைகின்றேன். அரிவையரால் அறிவடையப் பெற்றேமென நாட்டவர் நவில உழைப்போமாக ! மற்றும், கலையை மகளாகப் பண்டுதொட்டு நம்மவர் கூறி வழிபடுவதும் கருதத்தக்கதாகும். இல்லின்கண் உள்ள மாதர் கற்றிருந்தாலன்றி வீடுகள் கலைக்கோயில்களாக விளங்கமாட்டா. குடும்பத்திலுள்ள குழந்தைகட்கான அடிப்படைக் கல்வியறிவை அவ்வக்குடும்பச் சூழ்நிலைக்கேற்ப மகளிரே ஊட்டவல்லராக வேண்டுமென்பதும் எனது வேணவா. இங்ஙனம், நிகழலுறுமேல் அடிப்படைக் கல்வி போதனை அழுத்தமுற அமையும். அன்றியும் அரசியலார்க்கும் இது குறித்தாகும் செலவில் சிக்கனம் செய்தல் கூடும்." வாணி பூசைக்கு ஆவன செய்வீர் " என ஆர்த்தியோடு மாதருலகத்தை நோக்கி யழைக்கும் உண்மைக் கலைத்

தொண்டர் அழைப்பினை உளங்கொண்டு இயன்றளவும் முயன்று முன்னேறுவோமாக ! அறியாமையிருள் மறைக ! அறிவொளி உறைக நாடெலாம் !

மேற்காட்டிய அறியாமையை ஊர்தியாகவும், உறுபேரரணுகவுங் கொண்டு நாடெங்கும் பறந்து அமராற்றி மக்களை அழிவு செய்யும் அரக்கர்களே "பசியும்" "பிணி"யும் "பகை" யுமாம். இவற்றுள் பசியே கொடுமை மிக்கது. பசியின் கொடுமையைப் பற்பலவாறுகப் பண்டுதொட்டுப் பாவலர்கள் பாட்டிலும் ஏட்டிலும் காட்டிப்போயினர். பசிக்கு இடந்தரலாகா தென்பதே அவர்தம் கருத்தென்பது இதனுல் தெற்றெனத் தெரிகின்றது. அமைதியின்றேல் அனைத்தும் இன்றே ! இத்தகைய பசியினைத் தலைதூக்கவொட்டாமல் தடியும் பொறுப்பு, பண்டெல்லாம் பாவையர் பக்கல் ஒப்படைக்கப்பட்டிருந்த தென்னத் தடையிலது. அன்னை, நாழிநெல் கொண்டு காஞ்சியில் அறம் வளர்த்ததாகப் புராணம் புகலுகின்றது. தன் வாணுள் முழுதும் நீணுடெங்கும் திரிந்து பசிதுடைப்பான் பாடு பட்டனள் மணிமேகலை மங்கையார். "விருந்து கண்டபோது என் உறுமோ இராமன்" என ஏங்கினள் அவனைப் பிரிந்து சிறையிருந்த சீதை என்கிருர் கம்பநாடர். "பூண் அணி "மாதரொடு" புறங்கடை நிறுத்தும், பசிப்பிணி யென்னும் பாவி" என்ற கூற்றுல் மாதர்க்குரிய ஏற்றங் காட்டினர் மதுரைச் சாத்தனுர். நிலம், மழை, பொருள் முதலிய பசிதுடைக்கும் பண்டங்கள் பலவினுக்கும் பாவையரையே ஆதாரமாகக் காட்டினர் ஆன்றேர்."பெய் யெனப் பெய்யும் மழை","மழைவளந் தரூஉம் பெண்டிர்"," நிலமகள்","மண் மடந்தை","தானிய இலக்குமி" முதலிய வழக்குக்களும் வசனங்களும் மேலதற்குச் சான்ரும். ஆகையால், பசி நீங்கி, வசி வளம் பெருகச் செய்யும் கடமையை ஒல்லுமளவும் செல்லும் வாயெல்லாம் செய்யவேண்டு மென்பதே மாதர்க்குரிய மூன்றுங் குறிக்கோளாகும். வீட்டுப்பசி நீங்கின் நாட்டுப் பசியும் நீங்கும். மாதராவர் தத்தம் வாழ்விடங்களில் கொல்லைப்புறங்களில் ஓய்வு நேரங்களில் உழைப்பராயின் கீரை முதலிய காய்கறி வகைகளை விளைத்து வளம் பெருக்கலாகும். நாட்டுப்புறம், நகர்ப்புறம் ஈங்கெல்லாம் வாழும் எல்லா மங்கையரும் தங்கையரும் தங்கைகளால் பொருள் விளைப்பரேல் வளம் பெருகும். பவநகர் இராணியார் இசைப்பதும் இதுவே. மேலும், கொண்டாற் கொணரும் பண்டங்களைச் சிதறவிடாமலும், சீர்கெடாமலும் சிக்கனமாகச் செலவிடும் பண்பையும் மடந்தையர் மாணுறுத்துக் கொள்ளவேண்டும். "கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத் துணை" எனக் கூறுமாற்றுல் கொண்டானை வளப்படுத்துதலும், அவன் வளத்துக்கேற்ப வாழ்க்கை நடத்துதலும் பசி துடைக்கும் பரிசுடைப் பாவையர் கடன் எனப் பொய்யாமொழியாற் புகன்று போந்தனர் புலவர் ஏறுபோல்வார். பண்டங்கள் தமக்குக் கண்டு மிஞ்சினுலன்றி அறச் செயல் அரும்பாது. ஒவ்வொருவரும் தமக்குக் கண்டு மிஞ்சவைத்துத் தரும பத்தினியராய்வாழ வழிகோலுவதே எனதுவாழ்வின் தாழ்வில்லாக்குறிக் கோளாக்க விரும்புகிறேன். பட்டினி கெட்டினி ஒழிக ! அட்டினி தளிக்கும் அரிவை நல்லார் கரங்கள் அமுது பொழிக !

இதனையடுத்து யான் கருதுவது மூடுபனிபோல் நாடுபிணி யொழிப்பதேயாகும். இதுவே நான்காங் குறிக்கோளாக நாரியர் கொள்ளத்தகுவது. அணியணியாகப் பிணிப்படைகள் பலவழிகளாலும், நம் நாட்டுக்குள் புக்கு மக்களை மடித்துச் செல்

லுங் காட்சி மனத்தை உருக்குகின்றது. தொழுநோய், என்புருக்கி, புற்றுநோ யெனும் இவை நவீன திரிபுர அசுரர்கள் போலும்! பிற நோய்களும் பல உள. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமாதலால், எல்லாச் செல்வியரும் இச்செல்வ வளர்ச்சிக்குத் தளர்ச்சியின்றித் தாளாண்மையொடும் பாடுபடக் கடம்பூண்டுள்ளனர். தெரிவை நல்லார் தூய்மையே நோய் நீக்கத் துறையில் பெரும் பங்கு துணைபுரிய வல்லது. மற்றும் நோய் அணுகாவகை தகையவும் பயன்படும். வீட்டளவில் சிறு பிணிகளைக் களையவும், தளையவும், வேண்டும் மருந்தறிவும், மருத்துவ அறிவும் மாதர்குலத்தார்க்கு அறிவுறுத்தப் பாடுபட வேண்டும். நோயாளரின் நோயினை அரைப் பங்குக்கு மேலாகவே அவர்பால் பேசும் இன்னுரையே போக்கிவிடும். இத னாலேயே, மருத்துவரை "நாவிதர்" என நவின்றனர் நம் முன்னோர். இனியது கூறும் இப்பண்பு இயல்பாகவே எல்லா மகளிர்க்கும் குரல் வகையாலும் அமைந் திருத்தல் அறிகிறோம். இவ்வாய்ப்புடைய வனிதையர் மருத்துவக்கலை மகளிராய்த் தேர்ந்து தொழிலாற்றின் நாட்டின் பிணி தணியும். சுகாதாரம் பெருகும். மக்கள் உடலுரம் பெற்று மன்னுவர் என்பதில் ஐயமேது? மாதராவீர்! தூய்மை பேணுங் கள். தாய்மை போற்றுமின்! நோய்மை ஒழியுங்கள்! நாடு நாடாமாறு நாடுதிர்!

முடிவாக யான் கூறவும் கொள்ளவும் விரும்பும் குறிக்கோள், பகைபோக்கும் பணி மேற்கொள்ளலாம். இதுவே ஐந்தாம் குறிக்கோளாக யானியம்புவது. மங்கை யரைப் பொதுவாக, மெல்லியலாரென மொழிவரெனினும் அஃது அவர்தம் நல் லியல்பற்றி யெழுந்த விழுப்பெயரேயாகும். வீரம் என்பது மாதர்க்கும் ஆடவர்க்குப் போலவே இன்றியமையா அணிகலமாகும். செந்தழற்கு வெம்மைபோலவே அம் மையர்க்கு வீரமும் அமைவது. நீர்க்களத்தில் ஏரோட்டுதலேயன்றிப் போர்க்களத் தில் தேரோட்டுதலும் தெரிவையர்க் குரியதென்பதைக் கைகேயி, சத்தியவாமை முதலானோர் செயல் தெரிக்கின்றது. போர்மகள்-வெற்றிமகள்-படைமகள்-கொற்ற வை-காளி-நீலி-சூலி—என்பன வீரம்பற்றியே மாதர்க் கிடப்பெற்ற ஏதமறும் பெயர் களாம். பெண்படைகளும், இற்றை நாளிற்போலப் பண்டை நாளிலும் உண்டு. அப் படை வானகத்தும், முகிலகத்தும், கடலகத்தும் கரந்தும் திரிந்தும் கடுஞ்சமராற் றினவென்பர் கூவப் புராணத்தில். கண்ணகியின் சிலம்புப் படைமுன் காவலன் ஆற்றல் நிற்கவில்லை. மீனக் கண்ணியின் வீரங்கண்டு சிவன் மணாளனானான். இரச புத்திர மகளிர் வீரம் இரசமாகச் சரிதங்களாற் சாற்றப்படுகின்றது. கற்கும் ஆடவர்க் கும் இஃது ஊற்றப்படுகின்றது. வீரத்தாய்மார் பற்றிப் பண்டைப் பசுந்தமிழ் நூல் கள் பறையறைகின்றன. நம் நாளிலும் மாசற்ற போசனர் படையகத்தே தளந்தாங் கிய தையலாரை யறிவோம். இவை யாவும் மாதர்க்கு வீரம் உண்டு; வீரம் வேண் டும் என்பனவற்றையே எடுத்துக்காட்டுகின்றன. வீரமாதர்பால் தோன்றுவோரே விடலையர். காளையரை வீரராக்குவது காரிகையார் வீரவுரைகளேயாம். இம்முறையான மகளிர் பெரும்படை யொன்றும் அணி பலவும் ஆங்காங்கு அமைதல் வேண்டும். இம்மாதர் படைகள் ஊர்தொறும், நகர்தொறும் அமைதல் அமைவுடைத்து. இப் படைகள் அமைதி நாளில் அறியாமை யோட்டி யறிவூட்டும் பணியாற்றுக! பசிப் பகை போக்கி வசிப்ப வகை செய்க! பிணி தணித்து அணி யுறுத்துக! போர்க்காலம் நேரின், அக்காலும் களத்து வீரர்க்கு ஆம்பொருளாக்கி யளிக்கும் தொண்டியற்றுக! மருத்துதவி புரிக! உள் நாட்டையும் ஊரையும் யாரையும் குழப்பம் புரியாவகை

காவல் கோலுக ! இங்ஙனம் கலகம் விலக்கிப் பாரத அன்னையின் திலதமாய் விளங்குக மாதரணி. எனவே, அறிவூட்டி, உணவு பெருக்கி, பிணி துடைத்து, வீரம் பேணும் நெறியில் மாதர் பலர் ஈடுபட வேண்டுமென்பதே எனது வேண்டுகோளும் குறிக்கோளுமாகும். பாரதத்தாய் என்னினத்தார்க் கெல்லாம் இவ்வழி யுழைத்தற் கான ஆற்றலும், அறிவும் அளவின்றி அளிப்பாளாக ! வாழ்க நம் நாடு ! வாழ்க வண்டமிழ் ! வாழ்க யாவரும் யாவும் !

பிணியும் பசிபகையும் பேர்த்தறி வூட்டல்
அணியென்ப மாதர்க் கிவை.



# நாகப்பட்டினத்துப் புத்த சைத்தியம்

(திரு. சித்தாந்த கலாநிதி. ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை,
தமிழாராய்ச்சி விரிவுரையாளர், அ. ப. கழகம்)

மேனாட்டு மக்களின் நாட்டு வரலாறுகளைக் காண்போமாயின், நம் நாட்டு வரலாற்றிற் காணப்படாத தீ நெறியொன்று நிலவி யிருந்தது புலனாகும். மக்கட்குச் சமயத்துறையில் உரிமை யென்பது மேனாடுகளில் காணமுடியாதிருந்தது. அரசியல் உரிமை, வாணிக வுரிமை, சமுதாய வுரிமையெனப் பல உரிமைகளைப்பற்றி விரிவாகப் பேசும் அந்நாட்டவர்க்குச் சமயவுரிமை நெடுங்காலம் வரையில் தெரியாமலே இருந்துவந்திருக்கிறது.

மேனாடுகளில் மக்கட் சமுதாயத்தில் சீரிய நாகரிகம் தோன்றுதற்கு முன்பே இனிய நாகரிகம் தோன்றி நிலவிய நாடுகளில் நமது நாடு தலைசிறந்து விளங்குகிறது. கி.பி. ஒன்பது பத்தாம் நூற்றாண்டுகளில் நம் நாட்டில் நிலவிய நாகரிகத்துக்கு ஒப்பான நாகரிகம் மேனாடுகளில் தோன்றவேயில்லை. மேனாட்டவர்க்கு அந்நாளைய வாழ்வு நாகரிக முறையில் வைத்து எண்ணுதற்கு இடமில்லாமலே இருந்தது.

நாட்டு மக்கட்கு உள்ள உரிமைகளில் சமயவுரிமை யென்பது ஒன்று. அவரவரும் தாம் விரும்பிய தெய்வத்தை வழிபடுவது சமயவுரிமையாகும்; ஒருவர் மேற்கொண்ட தெய்வ வழிபாட்டையே பிறரனைவரும் மேற்கொள்ள வேண்டுமென வற்புறுத்துவது சமயவுரிமையைத் தடுக்கும் கொடுமையாம் என்பது இதன் கருத்து. இக்கொடுமையைப் பொறுக்க மாட்டாமையாற்றான் பல குடும்பங்கள் ஒருகாலத்தில் ஆங்கில நாட்டிலிருந்து அமெரிக்க நாட்டிற்குக் குடிபுகுந்தன. நம் நாட்டின் வடபகுதியில் பெருத்த அரசியல் மாறுதல்கள் உண்டானது இச்சமயவுரிமையைப் பறிக்கும் கொடுமையின் விளைவாகும்.

கி.பி. ஏழு எட்டாம் நூற்றாண்டுகளில் நம் தென்னாட்டில் சமயத் துறையில் பெருங் கிளர்ச்சிகள் உண்டாயின; ஆயினும் சமயவுரிமையைப் பறிக்கும் கொடுமை நிகழவில்லை. பௌத்தரும் சமணரும் சைவரும் வைதிகரு மெனப் பல சமயத்தவர் இந்த நாட்டில் தங்கித் தத்தம் சமயக் கருத்துக்களை மக்களிடையே பரப்பினர். அப்போது பிற சமயக் கருத்துக்களைச் சொற்போர் வாயிலாகக் கண்டிப்பது இச்சமயக் கிளர்ச்சிகளின் செயலாக இருந்தது. இவற்றால் மக்களுடைய பொதுவாழ்வில் உயிர்க்கேடு பொருட்கேடு உண்டாகவில்லை. அதனால் இந்நாட்டில் அரசு புரிந்த

வேந்தர்கள் சமயச்சொற்போர்களைத் தடுக்கவில்லை. கி.பி. ஏழாம் நூற்றுண்டில் காஞ்சி மாநகரைத் தலைமையாகக் கொண்டு அரசு நடத்திய பல்லவ வேந்தனுன முதல் மகேந்திர வன்மன் ஆட்சியில் பௌத்தம், பாசுபதம், காபாலம், சமணம் என்ற சமயங்கள் இருந்த திறத்தை அவன் எழுதிய நாடகத்திலே* காட்டியிருக்கின்றுன். தான் சமண சமயத்தை மேற்கொண்டொழுகிய போதும் பின்னர் அதனின் நீங்கிச் சைவத்தை மேற்கொண்டொழுகிய போதும் அவன் நாட்டில் மக்களுடைய சமய வுரிமையைப் பறித்துத் தான் மேற்கொண்ட சமயத்தையே மேற்கொள்ள வேண்டு மென வற்புறுத்தும் கொடுமை நடைபெறவில்லை ; வேட்டபடி யாளவல்ல நாட்டரச ஞக இருந்தாலும், நாட்டு மக்களது சமயவுரிமையைக் கெடுப்பது அரசியல் முறை யன்றென்பது இந்நாட்டில் தொன்றுதொட்டு வரும் நல்லியல்பென நன்கு அறிய லாம். அசோக மன்னனுடைய கல்வெட்டுக்களில் வேற்றுச் சமயங்கள் இருப்பது தெரிகிறபடியால், கிறித்து பிறப்பதற்கு முன்பிருந்த காலமுதலே சமயவுரிமையை மதித்தொழுகும் மாண்பு இந்நாட்டு வேத்தியல் மரபாக இருந்து வந்தமை தெளி வாகிறது. சைவ சமய குரவன்மார் காலத்தும் வைணவ ஆழ்வார் காலத்தும் சமய வுரிமை அரசவேலியாற் காக்கப்பட்டு வந்தமை நடுவு நின்று நோக்கும் நல்லோர்க்கு விளங்காமற் போகாது.

பல்லவராட்சிக்குப்பின் சோழ வேந்தரது ஆட்சி தமிழகத்தில் மேன்மையுறுவ தாயிற்று. இடைக்காலத்தில் விசயாலயன் வழிவந்த சோழ வேந்தர்கள் தமிழகம் முழுதும் தனியாணை செலுத்திப் புகழ் மேம்பட்டு விளங்கினர் ; அவர்கள் காலத்தே சைவ வைணவ சமயங்கள் வங்காளக்கடலைக் கடந்து கிழக்கிந்தியத் தீவுகள் எனப் படும் சாவகம் முதலிய தீவுகளிலும் சென்று பரவின. அந்தக் காலத்திலும் சோழ வேந்தர் மக்களது சமயவுரிமைக்கு ஊறு நினையாதொழுகியது மனங்கொள்ளத் தக்கதொன்று.

விசயாலயன் வழிவந்த சோழ வேந்தர் அனைவரும் சைவ வேந்தராவர்; தென் னுட்டில் சிவன் கோயில்கள் மிகப் பலவாய் இன்றும் வானளாவி நிற்கும் கோபு ரங்களாலும் மதில்களாலும் சிறப்புற்றிருப்பது இவ்வேந்தர்களின் சமயப்பணி யாகும். சைவத் திருமுறைகளை வழங்கிய ஆசிரியர்களுள் திருவிசைப்பாத் திருமுறை யைப் பாடிய சான்றேருள் இராசகேசரி வன்மரான கண்டராதித்த சோழரும் ஒருவ ராவர். இச்சோழ வேந்தர்கள் இடைக்காலத்தே தோன்றி நிலவியது சைவ சமய குர வர்கள் நிறுவிய சைவ நெறி என்றும் பொன்றுத நிலைபேறு எய்துவது குறித்தே என்னுமாறு இச்சோழர் வரலாறு அமைந்திருக்கிறது. இருப்பினும், அவர்கள் காலத்தே நம் நாட்டின் வடபகுதியில் (வடஇந்தியாவில்) மக்கள் சமயவுரிமையைப் பறிக்கும் செயல்கள் பல நிகழ்ந்தாற் போலவின்றிச் சமயவுரிமை பேணப்பட்டு வந் தமை வரலாற்றறிஞர் கண்டு இறும்பூது கொள்ளும் ஏற்றம்பெற்று விளங்குகிறது.

இது நிற்க, சங்க காலத்திருந்தே சீன நாட்டு வேந்தர்க்கும் கடாரத்தரசருக்கும்

*இது மத்த விலாச பிரகசனம் எனப்படும் ; இக்கட்டுரைகாரரால் வடமொழியி லிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுளது.

தமிழகத்தோடு தொடர்பிருந்த தென்பதைச் சங்க நூல்கள் குறிக்கின்றன. அது முதற்கொண்டே சீன நாட்டவர் தொடர்பு தமிழகத்தில் இருந்துவந்தது. நம் நாட்டின் வடபகுதியில் புத்த தருமம் தோன்றியபின் அது சீனநாட்டுக்குச் சென்றது ; சீனநாடு புத்த சமயம் நிலவும் பெருநாடாக மாறிற்று. புத்த பகவான் தோன்றிய நாடாதல்பற்றிச் சீனருக்கும் நம் நாட்டின்பால் பெருமதிப்புண்டாயிற்று. சீனநாட்டுப் புத்த துறவிகள் பண்டை நாளிலிருந்தே நம் நாட்டுக்கு வருவதும் சிலகாலம் இங்கே தங்கியிருப்பதும் பின்பு தமது நாட்டுக்குச் செல்லுவதுமாக இருந்து வரலாயினர். இஃது அவர்களுடைய சமயவொழுக்கமாகவே மாறியதும் உண்டு.

ஹியூன்சாங் முதலியோர் நம் நாட்டிற்கு வந்திருந்து அந்நாளில் தாம் கண்ட சிலவற்றைத் தம் குறிப்புக்களில் குறித்துவைத்திருக்கின்றனர். ஹியூன்சாங் வந்திருந்தபோது நம் தமிழகத்தில் நூற்றுக்கு மேற்பட்ட "சங்காராமங்கள்" இருந்தன என்றும், பத்தாயிரவர்க்குக் குறையாத "குருமார்கள் தேரவாதம் (ஸ்தவிர வாதம்)" பயின்றனரென்றும், "ததாகதர்" உரைத்த அறங் கேட்டு நாட்டவர் பலர் புத்தர்களா யிருந்தன ரென்றும், சோழ பாண்டிய நாடுகளில் புத்தர்களும் புத்த சைத்தியங்களும் மிகுதியாக உண்டெனினும் அவர் காலத்தே "புத்த தருமம்" அருகியிருந்ததென்றும் குறித்திருக்கின்றுர்.

சோழ நாட்டில் காவிரிப்பூம்பட்டினம் கடல் கொள்ளப்பட்டபின், பட்டினம் எனப் பெயர்பூண்ட வூர்கள் பல ஈழை நாட்டவரோடும் சீனநாட்டவரோடும் வாணிகம் புரிந்துவந்தன. அவற்றுள் தஞ்சை சில்லாவிலுள்ள நாகப்பட்டினமும் ஒன்று. இங்கே சோழவேந்தர் ஆட்சி இடைக்காலத்தே தோன்றிச் சிறப்பதற்குமுன்பே புத்த துறவிகள் பலர் தங்கிச் சங்காராமம் நிறுவித் தமது "புத்த தருமத்தை" மக்கட்கு அறிவுறுத்திவந்தனர். அக்காலத்தே தமிழகத்தையாண்ட வேந்தர்கள் அவர்கட்கு வேண்டும் அரசியற் காவல் புரிந்தார்கள். சமயவுரிமையைப் பேணித் தொன்றுதொட்டே புரந்துவரும் தமிழக வேந்தர்பால் மாறுன செயல் ஒன்றும் நடவாதன்றே !

இடைக்காலச் சோழர்கட்கு முன்பு தொண்டை நாட்டை யாண்ட மகேந்திரவன்மனுக்கு முன்னேருள் ஒருவனுய் விளங்கிய இரண்டாம் நரசிங்கவன்மன் காலத்தில் சீனநாட்டில் அரசுபுரிந்த சீனவேந்தன் நாகப்பட்டினத்தில் புத்தபகவானுக்கு ஒரு கோயிலெடுக்க விரும்பினுன். இரண்டாம் நரசிங்கனை கோக்கழற்சிங்கனும் அவன் விரும்பியவாறே புத்த சைத்திய மொன்றை யெடுப்பித்துச் சீனவேந்தனுக்குத் தெரிவித்து அதற் கிடத்தக்க பெயரைத் தெரிவிக்குமாறு சீனவேந்தனைக் கேட்டான். தன் வேண்டுகோளை ஏற்றுச் சைத்தியமொன்றை நிறுவிய நரசிங்கவன்மனது நற்பண்பை வியந்து அச்சீனவேந்தன் உயர்நிலைத்தூண் ஒன்றைத் தன் அன்புக்குறியாகத் தந்தான். புத்த சைத்தியம் நின்று நிலவி வருவதாயிற்று.

சில ஆண்டுகள் கழிந்தன. சைவ சமய வளர்ச்சியாலும் அரசியல் மாறுதல்களாலும் சீனர்களின் போக்குவரவு குறைந்துபோயிற்று. சீனநாட்டுக்கும் தமிழகத்

துக்கும் இடையிலுள்ள அருமணம் (Burma -கடாரம்), மலயம், சண்பகம், சாவகம் முதலிய பகுதிகளில் வாழ்ந்த மக்களிடையேயும் அரசியல் மாறுதல்கள் தோன்றின.

கடார நாட்டில் (அருமணம்-Burma) சயிலேந்திரரென்ற வேந்தர் தோன்றி ஆட்சிபுரிந்தனர். அவர்கள் பலரும் புத்தர்களாகவே காணப்படுகின்றனர். கி.பி. ஒன்பதாம் நூற்றுண்டின் இடையில் அருமணத்தின் வடபகுதியில் வாழ்ந்த சயிலேந்திர வேந்தன், வங்க வேந்தனுன தேவபாலனை வேண்டி நாலந்தாவில்(Nalanda) புத்த விகாரமொன்றை ஏற்படுத்தினுன். கி.பி. ஒன்பது பத்தாம் நூற்றுண்டில் சயிலேந்திர சூளாமணி வன்மன் என்பான் அருமண நாட்டின் தென்பகுதியிலிருந்து அரசுபுரிந்தான். இச்சூளாமணிவன்ம சயிலேந்திரன், நாலந்தாவில் புத்த விகாரம் உண்டாகியதறிந்து, நம் தென்னுட்டில் ஒரு புத்த விகாரத்தை நிறுவ விரும்பினுன். அது குறித்து அவன் செய்த முயற்சியால் நாகப்பட்டினத்தில் சீன வேந்தன் பெயரால் தோன்றி நின்ற புத்த சைத்தியம் சீர்குலைந்திருப்பது தெரிந்தது. அக்காலத்தே சோழநாட்டில் தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு முதல் இராசராசன் தனது புகழ்மிக்க பேரரசை நிறுவித் திகழ்ந்தான் ; சோழவேந்தன்பால் சூளாமணிவன்ம சயிலேந்திரன் தன் விருப்பத்தை நிறைவேற்றுமாறு கேட்டுக்கொள்ளும் திருமுகமொன்றை அரசர்க்குரிய சிறப்புடன் விடுத்தான்.

இடைக்காலத்தில் தோன்றிச் சிறந்த சோழவேந்தர்களில் ஒப்பாரும் மிக்காருமில்லாத ஒண்புகழ்பெற்ற பெருவேந்தன் இராசகேசரி வன்மனுன முதல் இராசராசன் என்பது உலகெங்கும் அறிந்த செய்தி. தனது தலைநகராகிய தஞ்சையில் அவன் எடுத்துள்ள பெருவுடையார் கோயில் அவனுடைய புகழுருவாய் நின்று காண்பார் காட்சிக்கு மாட்சி தந்துகொண்டிருக்கிறது. அவன் தன்னைச் சிவபாதசேகரன் எனக் கூறிக்கொண்டதும், மரக்கால், நிறைகோல் முதலிய அளவைகட்கு ஆடவல்லான் என்று பெயர் குறித்து வழங்கியதும் பிறவும் அவன் சிறந்த சைவன் என்பதை வற்புறுத்துகின்றன.

உண்மைச் சிவநெறி பேணும் சைவர்கட்குப் புறச் சமயங்கள் பலவும் சிவஞானம் பெறுதற்குப் படிமுறைகள் என்பது கொள்கை. புறச்சமய நெறி நின்று மக்களிடையே இழுக்குடைய ஒழுக்கங்களைக் கற்பித்தது பற்றியே அந்நெறி நின்றுரைப் பண்டைநாளில் சைவ சமய குரவர் பலரும் கண்டித்ததை அவர்களுடைய திருப்பாட்டுக்களிற் காணலாமேயன்றி ஏனைச் சமயவாதிகளைப்போலப் புறச்சமய வுண்மைகளை யெடுத்தோதி மறுக்கும் செயலை மேற்கொள்ளாமையைத் தெளியக் காணலாம். சிவநெறியில் நின்ற குடியில் தோன்றிச் சமயவுரிமையைப் பேணும் அரசியல் வாழ்வு நடத்தும் அரசர்வழித் தோன்றலான முதல் இராசராசன், சூளாமணிவன்மன் விடுத்த வேண்டுகோளை வரவேற்று, அவன் விரும்பியவாறு செய்துகொள்ளுதற்குத் தன் இசைவுத் திட்டினை நல்கினுன். சின்னுட்களில் நாகப்பட்டினத்தில் புத்த சைத்தியம் கட்டப்படுவதாயிற்று.

நாகப்பட்டினத்தில் சூளாமணிவன்மன் விரும்பிய புத்த விகாரம் கட்டப்படுகையில் இராசராசனது இருபத்தோராம் ஆட்சியாண்டு நடந்தது. அக்காலத்தே ஒரு நாள் "புத்த சாதுக்கள்" சிலர் தஞ்சாவூர்க்கு வந்தனர். வேந்தர்பெருமான் தஞ்சா

ஞர்ப் புறம்படி மாளிகையிலுள்ள "இராஜா சிரயன்" என்னும் திருவோலக்க மண்டபத்தில் வீற்றிருந்து அவர்களை வரவேற்ருன். அவர்கள் அரசனை வாழ்த்தி நாகப்பட்டினத்தில் சூளாமணி புத்த விகாரம் உருவாகி வருவதை மிக்க மகிழ்ச்சி யுடன் தெரிவித்தனர். சிறிது போது அவரோடு உறையாடி விடைகொடுத்துவிட்ட வேந்தர் பெருந்தகை, அமைச்சர் முதலிய அரசியற் சுற்றத்தாரை வருவித்து நாகப் பட்டினத்தில் எழும் புத்தவிகாரத்தின் நலம் குறித்துத் தான் செயற்பாலது யாது என அவர்களோடு ஆராய்ந்தான்.

பின்பு, தனது இருபத்தோராம் ஆட்சியாண்டு தொண்ணூற்றிரண்டாம் நாள் "க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுப் பட்டினக் கூற்றத்து நாட்டாரும் பிரம தேயக் கிழவரும் தேவதானப்பள்ளிச் சந்தக்காணி முற்றூட்டுவிட்ட பேரூர்த் தலைவர்களும் நகரங்களில் உள்ள தலைவர்களும் அறிக" என்று தொடங்கிக் "கிடாரத்தரையன் சூளாமணிவன்மன், க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுப் பட்டினக் கூற்றத்து எடுப் பிக்கின்ற சூளாமணி வன்ம விகாரத்துப் பள்ளிக்கு வேண்டும் நிவந்தத்துக்காக க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுப் பட்டினக் கூற்றத்தைச் சேர்ந்ததும் தொண்ணூற் றேழே இரண்டுமா முக்காணி முந்திரிகைக் கீழ் அரையே இரண்டு மா நிலமுடைய தும், எண்ணுயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்து முக்கலனே இரு தூணிக்குறுணி ஒரு நாழி நெல் வருவாயுடையதுமான ஆனைமங்கலம் என்னும் ஊரை, யாண்டு இருபத்தொன்ருவது முதல் பள்ளிச்சந்த இறையிலியாக வரியிலிட்டுக் கொடுக்க" என்று ஆணை பிறப்பித்தான்.

இந்த ஆணையை முடிமேற் கொண்டு, ஓலையெழுதும் நித்தவிநோத வளநாட்டு ஆவூர்க் கூற்றத்து விளத்தூர் கிழவன் அமுதன் தீர்த்தகரனும் ஓலைநாயகம் உய் யக் கொண்டார் வளநாட்டு வெண்ணுட்டுக் கேரளாந்தகச் சதுர்வேதி மங்கலத்துக் கிருஷ்ணன் இராமனுன மும்முடிச் சோழ பிரமராயனும், நித்தவிநோத வளநாட் டுப் பாம்புணிக் கூற்றத்து அரைசூருடையான் ஈராயிரவன் பல்லவரையனுன மும் முடிச் சோழப் போசனும், அருமொழித் தேவ வளநாட்டு நென்மலி நாட்டுப் பருத் திக்குடையான் வேளான் உத்தம சோழனுன மதுராந்தக மூவேந்த வேளானும் ஒப்பு நோக்கி," நாம் திட்டினபடியே வரியிலிட்டுக் கொள்க" வென்று கருமமாரா யும் ஆரூரன் அரவணையானுன பராக்கிரம சோழ மூவேந்த வேளானுக்கும், க்ஷத் திரிய சிகாமணி வளநாட்டுத் திருநறையூர் நாட்டுக் கற்குடையான் பிசங்கன் பாலூ ரானுன மீனவன் மூவேந்த வேளானுக்கும் தெரிவித்தனர். அவர் அதனை முறையே புறவு வரித் திணைக்களத்தாரான கிளி நல்லூர்க் கிழவன் கொற்றன் பொற்காரி கழுமலமுடையான் சூற்றியன் தேவடி முதலியோர்க்கு அறிவிக்க, அவர்கள் அதனை வரிப்பொத்தகக் கணக்கரான, சாத்தனூருடையான் குமரன் அரங்கனுக்கும், பருத்தி யூர்க் கிழவன் சிங்கன் வெண்காடனுக்கும் தெரிவித்தனர். அவர்கள் ஒருங்கே கூடி யிருந்து." யாண்டு இருபத்தொன்ருவது நாள் தொண்ணூற்றுறிஞல் பள்ளிச்சந் தம் இறையிலியாக வரியிலிட்டுக் கொடுத்த தங்கள் நாட்டுப் பட்டினக் கூற்றத்து ஆனைமங்கலம் அளந்தபடி நீங்கல் நீக்கி நிலம் தொண்ணூற்றேழே இரண்டுமாக் காணியரைக் காணி முந்திரிகைக் கீழரையே இரண்டுமாவும் பிடி சூழ்ந்து பிடாகை நடப்பிப்பதாக" என்று அறிவித்தனர்.

அவர்கள் வெண்ணெய் நல்லூர்த் தம்மடிபட்டன், தூப்பில் சீதாபட்டன் முதலியோரை வருவித்து," எல்லை தெரித்துப் பிடி சூழ்ந்து பிடாகை நடந்து கல்லும் கள்ளியும் நாட்டி அறவோலை செய்து போதுக " என்னும் வாசகத்தை நாட்டாருக்குப் பணித்தனர். நாட்டார் பலரும் பிடியானையின் பின்னேவர, ஆனைமங்கலமுடையான் கோன்புத்த வேளான் அப்பிடிமேல் இருந்து எல்லை தெரிவித்து நடத்தினான். முடிவில் நாட்டார் பலரும் கூடிப் " பட்டினக் கூற்றத்து நாகப்பட்டினத்துக் கடாரத்தரையன் எடுப்பிக்கின்ற சூளாமணி பன்ம விகாரத்துப் பள்ளிக்குப் பள்ளிச்சந்தம் இறையிலியாகக் கொடுத்த இந்நாட்டு ஆனைமங்கலம் பள்ளிச்சந்தம் இறங்கல் உட்பட யாண்டு இருபத்தோராவது முதல் பிடி சூழ்ந்து பிடாகை நடந்து கல்லும் கள்ளியும் நாட்டி அறவோலை செய்து கொடுத்தோ " மென்று கையெழுத்திட்டுத் தந்தனர்.

இவ்வோலை, பின்னர், அரசன் திருமுன் கொணரப்பெற்றது ; அதனை அரசியல் முதல்வர்கள் பலரும் ஆராய்ந்து ஒப்புதல் செய்தனர். இதற்கிடையே ஏறக்குறைய மூன்றாண்டுகள் கழிந்தன.

யாண்டு இருபத்துமூன்றுவது, நாள் நூற்றறுபத்து மூன்றில் உய்யக்கொண்டார் வளநாட்டுத் திரைமூர் நாட்டு நாடார் கிழான் அரையன் அருமொழியான இராஜேந்திர சோழப் பல்லவரையனும், உய்யக்கொண்டார் வளநாட்டு வெண்ணாட்டுக் கேரளாந்தகச் சதுர்வேதி மங்கலத்துக் கிருஷ்ணன் இராமனான இராசேந்திர சோழப் பிரமராயனும் நித்தவினோத வளநாட்டுப் பாம்புணிக் கூற்றத்து அரைசூருடையான் ஈராயிரவன் பல்லவராயனான உத்தம சோழப் பல்லவராயனும், இராசேந்திரசிம்ம வளநாட்டுக் குறுக்கைநாட்டுக் கடலங்குடி வேதகோமபுரத்துத் தாமோதரப்பட்டனும், உய்யக்கொண்டார் வளநாட்டு அம்பர் நாட்டுக் குறும்பில் கிழான் அரையன் சிகண்டனான மீனவன் மூவேந்த வேளானும் ஒப்புநோக்கிக் கையெழுத்திட்டு உறுதி செய்தனர்.

சோழ வேந்தர் பெருமானான முதல் இராசராசன் நாகப்பட்டினத்தில் தான் எடுத்த புத்த விகாரத்துக்கு நிவந்தமளித்துப் பள்ளிச்சந்தமாக ஆனைமங்கலமென்னும் ஊரை இறையிலியிட்டுக் கொடுத்த செய்தியைக் கடார நாட்டுச் சூளாமணி வன்மன் கேள்வியுற்றுப் பெருமகிழ்ச்சியுற்றான். ஆயினும் அவன் அக்காலத்தே உடல் நலம் குன்றிப் படுக்கையிற் கிடந்தான் ; சின்னாட்களில் அவன் இறந்து போனான். அதற்குப்பின் அவன் மகனான மாற விசயோத்துங்க வன்மன் அரசு கட்டிலேறினான். தன் தந்தை நாகப்பட்டினத்தில் எடுத்த புத்த சைத்தியம் முற்றுப்பெறுதபோதே இறந்ததும், அந்நிலையிலேயே சோழ வேந்தன் பள்ளிச்சந்தம் விட்டுச் சிறப்பித்ததும் அறிந்து சோழ மன்னனுடைய நட்புநலம் பெற்று அச்சைத்தியத்தை விரைவில் கட்டிமுடித்தான். இதுபற்றியே அவனுடைய வடமொழிச் செப்பேடுகள் நாகப்பட்டினத்துச் சூளாமணி வன்ம புத்த விகாரத்தை மாற விஜயோத்துங்க வன்மன் கட்டினானென்று குறிக்கின்றன.

சில ஆண்டுகட்குப்பின் முதல் இராசராசன் விண்ணுலகு புகுந்தான் ; அவன் மகனான இராசேந்திர சோழன் அரசகட்டிலேறிச் சோழநாட்டுப் பேரரசனாய் விளக்க

முற்ருன். அவன் காலத்தே பட்டினக்கூற்றத்து நாகப்பட்டினத்துப் புத்த சைத்தியப் பகுதி சோழகுலவல்லி பட்டினமெனப் பெயர்பெற்று நிலவிற்று. இராசராசன் செய்த சிறப்புக்கு நன்றிக் குறியாக மாற விஜயோத்துங்க வன்மன், சூளாமணி வன்ம விகாரத்தின் ஒரு பகுதிக்கு இராஜராஜப் பெரும்பள்ளி யெனவும், ஒரு பகுதிக்கு இராசேந்திரனைச் சிறப்பித்து இராசேந்திர சோழப் பெரும்பள்ளி யெனவும் பெயரிட்டுச் சிறப்பித்தான். அதுமுதல் சூளாமணி வன்ம விகாரம் இப்பெயர்களே கொண்டு நிலவிவந்தது.

ஆண்டுகள் பல கழிந்தன. புத்த விகாரங்கட்குரிய இடங்களில் காணியாளர் பலர் புத்த சங்கத்தாரை ஏமாற்றி அவரது இடத்தைக் கவர்ந்துகொள்ளலாயினர். தமிழ்நாட்டுப் பெருங்கோயில்களில் நுழைந்து அவற்றிற்குரிய நிலங்களைக் கவர்ந்து பெருஞ்செல்வம் பெற்றுக் களிக்கும் கோயிற் பெருச்சாளிகள் அக்காலத்தே புத்த விகாரத்திற்குள் நுழைந்து அதன் செல்வநிலையைச் சீர்குலைத்தன. புத்த சங்கத்தார் செய்துகொண்ட வேண்டுகோளை ஏற்று ஆவன செய்யும் அறிவும் ஆற்றலும் மாற விஜயோத்துங்கனுக்குப் பின் தோன்றிய கடாரத்தரசர்கட்கு இலவாயின.

இந்நிலையில் கி.பி. பதினேராம் நூற்றுண்டின் பிற்பகுதியில் முதற் குலோத்துங்கன் அரசு கட்டிலேறினன் ; இராசேந்திரனுக்குப்பின் தோன்றிய வேந்தர்கள் காலம், புத்த சங்கத்தார் தமது சைத்தியத்தின் நிலங்களை இழத்தற்கு வேண்டிய வாய்ப்பினை யளித்தது. கடார வேந்தரும் சோழ வேந்தரும் போதிய துணை செய்யாமையால் புத்த விகாரத்தில் இருந்த சங்கத்தார் அரசியற் சலுகை பெறுதற்கு வழியின்றி வருந்தியிருந்தனர். முதற் குலோத்துங்கன் அரசனானதும் புத்த சங்கத்துக்கு ஒரு நற்காலம் வருவதாயிற்று.

முதற் குலோத்துங்கன் ஆட்சிக்காலம் தமிழ்நாட்டுக்கு மிக்கதோர் இன்பக்காலமாகும். கடார நாட்டிலும் நல்லரசர் தோன்றினர். புத்த சங்கத்தார் தங்கள் கடார நாட்டு வேந்தனுக்குத் தங்களுக்குற்ற இடுக்கணைத் தெரிவித்து, சோழவேந்தனைக் கொண்டு தங்கள் குறையைப்போக்கி முறைசெய்யுமாறு முயன்றனர். அவர் வேண்டுகோட்கிசைந்த கடாரத்தரசன் அது குறித்து " இராஜவித்யாதர ஸ்ரீ சாமந்தன், அபிமானதுங்க ஸ்ரீ சாமந்தன் என்ற இருவரைக் குலோத்துங்கன்பால் தூது விடுத்தான்.

அவர்கள் இருவரும் நேரே நாகப்பட்டினம் வந்து சேர்ந்தனர். அங்கேயிருந்த புத்த சங்கத்தாரைக் கண்டு வேண்டுவனவற்றை அறிந்துகொண்டு முதல் இராசராசன் பள்ளிச்சந்தமாகத் தந்த செப்பேட்டை நன்கு ஆராய்ந்து அதனையும் எடுத்துக்கொண்டு முதற் குலோத்துங்கனைக் காணச் சென்றனர். குலோத்துங்கன், ஆயிரத்தளியான ஆகவமல்ல குலகாலபுரத்துக் கோயிலினுள்ளால் அமைந்த திருமஞ்சன சாலையாகிய காளிங்கராயன் மண்டபத்தில் திருவோலக்கமிருந்தான். கடாரத்திலிருந்து வந்த தூதுவரும் உடன்வந்த புத்த சங்கத்தாரும் வேந்தனைக் காணவே, அவன் அவர்கட்குரிய சிறப்புச் செய்து இருக்கை தந்து மகிழ்வித்தான். அரசியற் சுற்றத்தாருள் சந்திவிக்கிரக இராஜ வல்லப பல்லவரையரும் அதிகாரிகளான இராசேந்திர சிங்க மூவேந்த வேளாரும் உடனிருந்தனர்.

இராஜவித்தியாதரனும் அபிமானதுங்கனும் நாகப்பட்டினத்துப் புத்த விகாரத்துத் தோற்றமும் வளர்ச்சியும் முதல் இராசராசன் முதலிய வேந்தர் பெருமக்கள் செய்த சிறபபுக்களும் ஆகியவற்றை விரிவாக எடுத்தோதி, முடிவில் "கடாரத்தரையன் பட்டினக்கூற்றத்துச் சோழகுலவல்லி பட்டினத்து எடுப்பித்த இராஜேந்திர சோழப் பெரும்பள்ளிக்கும் இராஜராஜப் பெரும்பள்ளிக்கும் பள்ளிச்சந்தமான ஊர்கள் பழம்படியே அந்தராயமும் வீர சேஷையும் பண்ணையும் அண்டைவெட்டியும் முந்தாலியும் சுங்கமேரையும் உள்ளிட்டனவெல்லாம் தவிரவும், முன்பு பள்ளிச்சந்தங்களைக் காணியுடைய காணியாளர் தவிரவும், இப்பள்ளிச் சங்கத்தார்க்கே இவை காணியாக வமையவும் பண்ணியருள வேண்டும்" என விண்ணப்பம் செய்தனர்.

கேட்ட வேந்தன் தன் அதிகாரிகளை நோக்கி "உண்மை யாராய்ந்து உரியவற்றைச் செய்க" எனப் பணித்தான். அவர்கள் பட்டினக்கூற்றத்து நாகப்பட்டினத்தையடைந்து இன்றியமையாத ஆராய்ச்சிகளைச் செய்து "கடாரத்தரையன் ஜயமாணிக்க வளநாட்டுப் பட்டினக்கூற்றத்துச் சோழகுலவல்லி பட்டினத்து எடுப்பித்த இராசராசப் பெரும்பள்ளிக்குப் பள்ளிச்சந்தம் ஜயமாணிக்க வளநாட்டுப் பட்டினக் கூற்றத்து ஆனைமங்கலத்திலும், முஞ்ஞைக்குடியிலும், திருவாரூர்க் கூற்றத்து ஆமூரிலும், அளநாட்டு வடகுடியான நாணலூரிலும், கீழ்ச்சந்திரபாடியிலும், பாலையூரிலும், ஜயங்கொண்ட சோழ வளநாட்டுக் குறும்பூர் நாட்டுப் புத்த குடியிலும், விஜயராஜேந்திர சோழ வளநாட்டு இடைக்கழி நாட்டு உதய மார்த்தாண்ட நல்லூரிலும்* இருப்பது கண்டு, ஆங்காங்குள்ள நிலங்களையும் அவ்வவற்றுக்குரிய காணிக்கடனையும் அறுதி யிட்டையும் குறித்துத் தொகுப்பாக வேந்தர்க்குத் தெரிவித்தனர்.

வேந்தர் பெருமானை முதற் குலோத்துங்கன், நாட்டவரையும் அரசியற் சுற்றத்தாரையும் ஆராய்ந்து, ஆனைமங்கலம் முதலிய ஊர்களிற் கண்ட நிலங்களை இப்பள்ளிக்கு வேண்டும் நிவந்தங்களுக்காக "இறையிலி யாக்கினோம்" என்றும், இப்பள்ளிச்சந்தங்களையுடைய காணியாளரைத் தவிர்த்துக் குடிநீக்கிப் பள்ளிச்சங்கத்தார்க்கே "காணியாகக் கொடுத்தோம்" என்றும் குறிப்பிட்டு, "ஜயமாணிக்க வளநாட்டுப் பட்டினக் கூற்றத்துச் சோழகுலவல்லி பட்டினத்து ஸ்ரீ சயிலேந்திர சூளாமணி வன்ம விகாரமான இராஜராஜப் பெரும்பள்ளிக்குப் பள்ளிநிலையும் பள்ளிவளாகமும் இறையிலியாய்க் கொடுத்தோம் ; இப்படிச் செய்து கொடுக்க" என்று சோழர்பெருமான் திருவாய் மொழிந்தருளித் "திருமுகம் பிரசாதம்" செய்தருளினன்.

திருமுகம் பெற்ற சந்திவிக்கிரக இராஜ வல்லப பல்லவரையர், அதிகாரிகள் இராஜேந்திரசிங்க மூவேந்த வேளார்க்கறிவிக்க, அவர் செப்பேடு எழுதுவோனுக்கு நிகழ்ந்தது தெரிவித்துச் செப்பேடு பொறிக்குமாறு கட்டளையிட்டார். அவன், "தாமிர சாசனம் பண்ணிக்கொடுக்க வென்று சந்திவிக்கிரக இராஜ வல்லப பல்லவரையரும் அதிகாரிகள் இராஜேந்திர சிங்க மூவேந்த வேளாரும் சொல்ல இத்தாமிர சாசனம்

* சங்க காலத்தில் ஒய்மா நாட்டு நல்லியக் கோடனைச் சிறுபாணாற்றுப்படை பாடிச் சிறப்பித்த நத்தத்தனார் ஊரும் இந்நல்லூர்.

எழுதினேன், உட்கோடி விக்கிரமாபரணத் தெரிந்த வலங்கை வேலைக்காரரில் நிலையுடைய பணியன் நிகரிலி சோழ மதுராந்தகனேன்"* எனக் கையெழுத்திட்டு வழங்கினான்.

முறைவேண்டி நின்ற புத்த சங்கத்தார் வேண்டியாங்குப் பெற்றுத் தாம் எய்திய மகிழ்ச்சியால் வேந்தனை வாழ்த்தி விடைபெற்றுக்கொண்டு நாகப்பட்டினம் சென்று சேர்ந்தனர். செய்யவேண்டி யிருந்த திருத்தங்களைச் சாமந்தர் இருவரும் செவ்வே செய்துவிட்டுச் சோழ வேந்தன்பால் விடையும் அவன் செய்த சிறப்புக்களையும் பெற்றுக்கொண்டு தமது கடார நாடு சென்று சேர்ந்தனர்.

பெருவேந்தர்களான இரண்டாம் நரசிங்கவன்ம பல்லவனும் இராசகேசரி வன்மனான முதல் இராசராச சோழ வேந்தனும், முதற் குலோத்துங்க சோழ வேந்தனும் பெருஞ்சலுகை பெற்று இனிதிருந்த புத்த சங்கம், ஆண்டுகள் கழியக்கழியத் தன் செல்வநிலை குன்றிச் சீர்குலைவதாயிற்று. கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் வங்காளக்கடலிற் கலஞ் செலுத்தி யுலவிய மேனாட்டவர் கேள்விக்கு இது "புதுவேலி கோபுர" மென்றும், "பழங்கோபுர" மென்றும், "சீனகோபுர" மென்றும், "சயின கோபுர" மென்றும் பெயர் வழங்கி நின்றது. இதனையடுத்திருந்த பள்ளிவளாகம் பாழ்நிலமாயிற்று.

நாகப்பட்டினத்துக்கு வடக்கில் கடற்கரையில் ஒன்று ஒன்றரைக்கல் தொலையில் நின்ற இந்த இராசராசப் பெரும்பள்ளி மேனாட்டவர்களின் கண்களை உருத்துவந்தது." நான் பார்த்தபோது சதுரவடிவிற்றுய் மூன்று நிலைகளையுடைய கோபுரமாய்க் காட்சியளித்த இதன் ஒவ்வொரு பக்கத்திலும் ஒவ்வொரு வாயில் உண்டு; முற்றும் சிமண்டு கலவாது சிறுசிறு செங்கற்களால் இது கட்டப்பெற்றிருந்தது. கீழ்நிலையின் மூலைகள் இடிந்து மேற்றளமொன்று இருந்ததுண்டென வுணர்த்தும் குறிகளுடன் இது நின்றது" எனவும், "இதன்கண் அறிய சிற்பமோ கல்வெட்டெழுத்துக்களோ காணப்படவில்லை" யெனவும் W. எலியட் என்பார் குறித்திருக்கின்றார்.

கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடையில் புதுச்சேரியிலிருந்த ஜெஸ்ஸூட் கிறித்தவர்கள் பிரெஞ்சுக்காரர்கட்கு அஞ்சிப்போந்து இப்பகுதியில் குடியேறினர். சில ஆண்டுகளில் அவர்கள் இப்பகுதியைத் தமக்கு உரியவாக்கிக்கொண்டு கி.பி. 1859-ல் எஞ்சியிருந்த இப்புத்த சைத்தியத்தை இடித்துவிடக் கருதி அரசியலாரை அனுமதி வேண்டினர்.

அவர்கள் விண்ணப்பத்தை அந்நாளைய ஆங்கில அரசியலார் அப்பகுதிக்குரிய பொறிவல்லுநரான (Engineer) காப்டன் ஒக்ஸ் என்பார்க்கு அனுப்பிப் புத்தசைத்தியக் கட்டிடத்தைப் பார்வையிட்டுத் தனது கருத்தைத் தெரிவிக்குமாறு பணித்தனர்.

---

*இவைகள் Epigraphica Indica. xii-ல் No. 34 & 35 ஆக வெளியாகியிருக்கின்றன.

அவர் வந்து பார்த்து, "இதன்கண் கல்வெட்டோ, சிற்பமோ ஒன்றும் இல்லை; இது மிகுதியும் பாழ்பட்டுக் கிடத்தலால் இதனை இடிப்பது தக்கதே" என்று அரசியலார்க்கு அறிவித்தார். ஆயினும் எலியெட் என்பார்க்கு அதனை இடிப்பதில் விருப்பமில்லை. அதனையறிந்த சென்னைக்கவர்னர் தான் நேரில் கண்டு தமது கருத்தையுரைப்பதாகக் கூறினார். இதற்கிடையே சர். W. எலியெட் தமது ஆங்கிலநாட்டுக்குச் சென்றார். அப்போது நாகப்பட்டினம் போந்த கவர்னர் புத்த சைத்தியத்தைப் பார்வையிட்டு அதனைப் பழுதுபார்ப்பது வீண்முயற்சியும் பயனில் உழைப்புமாமெனத் துணிந்து அதனைச் சுற்றி வேலியிடுவித்துப் புகைப்படமொன்று* எடுத்து வைக்குமாறு பணித்தார்.

நாகப்பட்டினத்து ஜெஸ்ஸுட் கிறித்தவர்கட்கு அச்சைத்தியத்தை இடித்துத் தள்ளுவதில் எழுந்த நாட்டம் போகவேயில்லை. கி.பி. 1867-ல் அவர்கள் மறுபடியும் முயன்றனர். அந்நாளைப் பொறிவல்லுநர் (Engineer) அவர் விருப்பத்தை மறுத்துச் சில பகுதிகளைப் பழுதுபார்த்துச் செம்மைப்படுத்தி, "நாகப்பட்டினக் கடற்கரையருகே இயங்கும் கலங்கட்கு இக்கட்டிடம் கரைகாட்டியாக விளங்குகிறது; இங்கே வாழும் மக்களும் இதனை இடிப்பது கூடாதென மறுக்கின்றனர்" என்றொரு குறிப்பும் எழுதி அரசியலாருக்கு அறிவித்தார். ஆனால், அங்கே இருந்த செயின்டு ஜோசப் காலேஜ் தலைவர்கள், "அதனைத் தகர்த்தாலொழியத் தங்கள் கல்லூரிக்குக் காப்பு இல்லை" என விடாப்பிடியாய் நின்றனர். சென்னைக்கவர்னர் (Governor) அமைச்சரோடு ஆராய்ந்து, "கல்லூரித் தலைவர்களே அக்கோபுரத்தைத் தகர்த்து அதன்கட் பெறலாகும் பொருள்களைத் தங்கள் கல்லூரிக்குப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்" என்று தெரிவித்தார். கோபுரமும் தகர்க்கப்பட்டது.

இரண்டாம் நரசிங்கவன்ம பல்லவன் காலத்தில் தோன்றி, முதல் இராசராசன், முதல் இராசேந்திரன், முதற் குலோத்துங்கன் முதலிய சோழ மன்னர் காலத்தில் செல்வாக்குற்று நின்ற நாகப்பட்டினத்துப் புத்த சைத்தியம், ஆங்கிலராட்சிக்காலத்தில் நிலைபேறிழந்து இருந்த இடம் தெரியாமல் மறைந்துபோயிற்று. சமயவுரிமையின் கதி என்னவாயிற்று, காண்மின்.

---

*இப்படம் Epigraphica Indica. Vol. xxii பக். 213ல் உள்ளது.

# கல்வியும் கேள்வியும்

(தருமபுர ஆதீன வித்துவான், திருவண்ணுமலை ஆதீன விரிவுரையரசு, "செட்டிநாடு" இதழாசிரியர், பாலகவி, வயிநாகரம் வெ. இராமநாதன் செட்டியார், தேவகோட்டை.)

மனிதருள் மாண்புடையோர் அறிஞர்கள். அறிவுவிளக்கம் பெறுத மக்களால் உலகம் துன்பத்தையே அடையும். அறிவு இல்லாத மனிதனை "மரம்" என்று ஏளனஞ் செய்வது கண்கூடு. அவ்வறிவு இயற்கை யறிவு, செயற்கை யறிவு என இருவகைப்படும்.

உயிரினங்களைச் சார்ந்திருக்கின்ற பலவகைப்பட்ட தொடர்புகளில் அறிவொன்றே, மற்றெல்லாவற்றையும்விடச் சிறந்தது. அதற்குக் காரணம், அது அழிந்துபோகின்ற உடல் தொடர்புடையதா யில்லாமல், என்றும் அழியாததாகிய உயிர்த்தொடர்புடைய தாய் இருத்தலேயாகும். உடல் பற்றி வருகின்ற தொடர்பு அவ்வுடலழிந்ததும் ஒழிந்துவிடும். இதுபற்றியே உடல் தொடர்பிலே முதற் கண்ணதாகிய தாய்தந்தைய ராதியோரின் உறவுத் தொடர்பையும் பொருளென நம் முன்னோர் மதிக்காது விட்ட னர்.

"தந்தையார் தாயார் உடன்பிறந்தார் தாரமார் புத்திரரார் தாந்தாமாரே" என்ற அப்பரடிகள் திருவாக்கு இதனைப் புலப்படுத்த எழுந்ததேயாகும். அறிவு பல பல பிறவிகளிலிருந்து உயிரைப்பற்றி வருவதாதலின் அதனை, இயற்கையும் செயற் கையுமென இருவகையில் கொள்ளுதல் வேண்டும்.

முன்னைப் பிறவியிலிருந்து தொடர்ந்துவருகின்ற அறிவு, இயற்கை யறிவென் றும், இப்பிறவியில் கல்வியாலும் கேள்வியாலும், உண்டாகின்ற அறிவு செயற்கை யறிவென்றும், சொல்லப்பெறும். இயற்கை யறிவுச் சிறப்பு மனிதனுக்கு மட்டு மன்றி, மற்றை விலங்கு, பறவை முதலிய உயிரினங்களுக்கும் அமைந்திருக்க, நாம் காண்கின்றோம்.

மனிதனிலும் சிறந்த செயலும், பண்பும் உடைய பிற உயிரினங்களை நோக் கும்போது, அவற்றின் பழம் பிறவித்தொடர்பு நமது உள்ளத்திலே வருகிறது...... கற்றுத் தெரிந்துகொள்ளுதற்குப் போதிய பருவம் வரப்பெறுத இளம்பிள்ளைகளிற்

## கல்வியும் கேள்வியும்

சிலர், கலைத்துறையில் பல நாட்கள் உழைத்தாலும் காணமுடியாத நுட்பங்களில் வல்லவர்களா யிருப்பதைக் காட்சியாலும், கேள்வியாலும் அறிகிறோம்.

இவ்வாறு இயற்கையாகவே தொடர்ந்துவருகின்ற அறிவை நேர்மையான நெறியில் செம்மைப்படுத்திக் கொள்ளுதற்குக் கல்வியும், கேள்வியும் இன்றியமை யாதன. "கற்றல் கேட்டல் உடையார் பெரியார்" என்பது ஞான சம்பந்தப் பெருந் தகையார் திருவாக்கு.

இயற்கையிலேயே அமைந்திருக்கின்ற அறிவைக் கல்வியாலும், கேள்வியாலும் எவனொருவன் ஒளியுடையதாக ஆக்கிக்கொள்ளுகின்றானோ, அவனே பிறவியாலாய பயனைத் தேடிக்கொண்டவனாவான். கல்வி, கேள்விகளால் அறிவும், அறிவால் ஒழுக்கமும் செம்மைப்பட, அதனால் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, பின்னர் வானுறையுந் தெய்வத்துள் வைக்கப் பெறுகின்ற தகுதி மனிதனுக்கு உண்டாகும். கல்வியும் கேள்வியுமாகிய இரண்டனுள் கல்வி எல்லோருக்கும் ஏற்பதாக இருக்க வில்லை.

இளஞ் சிறார்களும், தொடர்ந்து இடைவிடாது உழைப்பவர்களும், உள்ளத்தை ஒருமைப்படுத்தி வேறு கவலையற்று வாழ்பவர்களும், ஆகியோருக்கே கல்வி பயனைத் தருகின்றது. கேள்வியோ பாகுபாடின்றி அனைத்து மக்களுக்கும் நல்ல பயனைத்தரு கின்றது.

பலநாட் கல்வியாற் பெறுகின்ற பயனை, ஒருநாட் கேள்வியால் அடைந்துவிட லாம். ஆனால் கல்விக்கும் கேள்விக்கும் கொள்ளுகின்ற ஆசிரியர்கள், பெருந்தகுதி யுடையவர்களாய் இருக்க வேண்டுவது மிகமிக இன்றியமையாதது. தகுதியற்றாரிட மிருந்து பெறுங் கல்வி கேள்விகளால், நாட்டுக்கு உண்டாகுந் தீமைகளை, வரலாற் றுண்மைகளை அறிந்தவர்கள் நன்கு உணருவார்கள்.

நல்ல ஆசிரியரிடத்தே பெறுங் கல்விகேள்விகள் மனிதனைத் தெய்வநிலைக்குக் கொண்டு செல்லும் தகுதியுடையன. இதுபற்றியே "செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்" என்றார் திருவள்ளுவர்.

இத்தகைய செவிச் செல்வத்தை நல்கும் கழகங்கள், நம் நாட்டிலே பல உள் ளன என்றாலும், அவற்றுள் உருவான பெரும் பயனைத் தருவன ஒரு சில கழகங் களே. தக்க அறிஞர்களின் தொடர்பு பெற்றுப் பல ஆண்டுகள் கொள்கை தவறாத குறிப்பில் நின்று, பணியாற்றி வருகின்ற கழகங்களுள் "புதுவைக் கல்வி கழக" மும் ஒன்று. இதன் வெள்ளி விழா நிகழ்ச்சி அன்பர்களுக்கு மகிழ்ச்சி தருவது. வாழ்க புதுவைக் கல்விக் கழகம்! வெல்க தமிழ்!

நலம் பெருகுக!

# தமிழ்த் தெய்வம்

(திரு. வித்துவான். ஈ. பண்டார நம்பியார்—பூதப்பாண்டி)

" பாலெல்லாம் பசும்பாலாகுமா ? நூலெல்லாம் திருவள்ளுவர் நூலாகுமா?" என்று கேட்டார் ஒருவர். உண்மைதான். தமிழ்த் தெய்வ வணக்கம் எத்தனையோ புலவர்கள் பாடி இருக்கிறார்களே, அவைகள் எல்லாம் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அவர்கள் பாடிய தமிழ்த் தெய்வ வணக்கமாகுமா ? என்று நாமுங் கேட்கிறோம்.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் தமிழ்த் தெய்வத்தை நேரில் தரிசித்தார். தமிழ்த்தெய்வம் அவருக்குக் காட்சி அளித்தது. நீர் நிறைந்த நீலக்கடலுடுத்த நிலமகளைத் தன் அகக்கண்ணால் பார்த்தார் பேராசிரியர். பரதகண்டம் அவளது எழில் ஒழுகும் சிறந்த வதனமாகக் காணப்பட்டது. வதனத்திற்குத் தகுந் தாற்போல் நெற்றி ; பிறைச்சந்திரனைப்போன்ற சிறு நெற்றி. தெக்கணமே அந்த நெற்றியாகத் தென்பட்டது. நெற்றியின் நடுவே ஒரு அழகான திலகம் ; நறுமணங் கமழும் திலகம். நமது தமிழகமே அத்திலகம் என்று உணர்ந்தார். திலகவாசனை நாற்றிசையும் பரந்தது. தமிழ்த் தெய்வத்தின் புகழ் எத்திசையும் மணப்பதாகத் தோற்றமளித்தது. தமிழ்த்தெய்வத்தை அப்படியே தரிசித்து மகிழ்ந்தார். மகிழ்ச்சி பொங்கித் ததும்பி ஒரு கவிதையாக வெளிவந்தது.

" நீராருங் கடலுடுத்த
நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத்
திகழ்பரத கண்டமதில்
தக்கசிறு பிறைநுதலும்
தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த
திரவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோல்
அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க
இருந்தபெரும் தமிழணங்கே "

பேராசிரியர் கண்ட காட்சி கவிதை உருவம் பெற்றுவிட்டது. இந்தக் கவிதைச் சித்திரத்தில் தமிழ்த் தெய்வத்தை நாமும் பார்க்கின்றோம். தரிசித்து மகிழ்கின்றோம். பாட்டைப் பல தடவை பாடியுங்கூட அனுபவிக்கின்றோம்.

தமிழ்த் தெய்வத்தைத் தரிசித்து மகிழ்ந்த பேராசிரியர் செயல் மறந்து வாழ்த்த ஆரம்பித்தார். இன்ன காலத்தில் தோன்றியது என்று எவராலுங் கூற முடியாத பழமையுடையது நமது தமிழ்மொழி என்ற எண்ணம் பிறந்தது. தமிழைப்போலவே பழமையுடைய ஆரியம், கிரீக்கு, இலத்தீன், ஈபுரு, அராபி, சீனம் முதலிய பலதேய மொழிகளையும் அவர் மறந்துவிடவில்லை. ஆனால்—அம்மொழிகள் தமிழைப்போல், மக்களைப் பெற்று மாண்புறவில்லையே என்று எண்ணினர். தமிழ்மொழி கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு போன்ற பல மொழிகளைப் பெற்றெடுத்தமை அவர் ஆராய்ச்சிக் கண்ணுக்குப் புலனாயிற்று. இந்த வழி மொழிகளிலிருந்துதான் எத்தனை கிளை மொழிகள் தோன்றியுள்ளன என்று நினைத்துப் பார்த்தார். இன்ன பலமொழிகளைப் பெற்றெடுத்தும், தமிழ்த் தெய்வம் இளமை குன்றாது, கன்னியென விளங்குவது கவிஞருக்கு வியப்பைத் தந்தது.

நம் அமிழ்தினுமினிய தமிழ் மொழியை ஆரியத்திற்கு ஒப்பிடலாமா என்று ஆலோசித்தார். ஆரிய மொழியின், இயற்கைக்கு மாறான உரத்த ஓசைகளும், பொருந்தா இலக்கண முடிபுகளும் அவருக்கு அருவருப்பை அளித்தன. தேவ பாஷை என்று கூறி எவரும் படிக்கவும் கேட்கவும் கூடாதவாறு தடுத்து வைத்திருந்த மொழியல்லவா அது ! அதன் பலன்தான் இன்று உலக வழக்கழிந்து, ஒழிந்து, சிதைந்தது. இந்த ஆரியத்திற்கு ஒப்பிடுவதா நமது தெய்வத் தமிழை என்று எண்ணினர். வேறு உவமை தேடினர். எல்லாம்வல்ல இறைவனைப்போன்ற இறவாத இளமைத் தன்மை நமது மொழிக்கு இருப்பது புலனாயிற்று. பரம்பொருளின் எல்லையில்லா விளையாட்டெல்லாம் அவர் அகக்கண்ணிற்குத் தோன்றின. பல்லுயிரையும் பலவுலகையும் படைத்துக் காத்து அழிக்கின்ற அலகிலா விளையாட்டுடையவனல்லவா இறைவன் ! அத்தனை தொழில்களைச் செய்தாலும் இறைவன் முன்னிருந்தபடியே இருக்கிறானே என்று எண்ணி வியந்தார். தமிழ்த் தெய்வத்தைத் தரிசித்த பேராசிரியர், பரம்பொருளையும் தரிசித்தமையால், ஒப்புமை புலப்பட்டது. உள்ளத்தில் ஓர் அபூர்வ உணர்ச்சி பிறந்தது. உணர்ச்சியில் பல வார்த்தைகள் வெளிவந்தன. எளிமை, இனிமை எல்லாம் நிறைந்த வார்த்தைகள். தமிழ்த் தெய்வத்தின் இளமைத் திறத்தை வியந்து போற்றிய ஓர் அருமையான கவிதையாக அமைந்தது அது.

"பல்லுயிரும் பலவுலகும்
படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன்
இருந்தபடி இருப்பதுபோல்,
கன்னடமுங் களிதெலுங்குங்
கவின்மலையா ளமுந்துளுவும்

உன்னுதரத் துதித்தெழுந்தே
ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக்
கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து
செயல்மறந்து வாழ்த்துதுமே"

என்பது அந்தக் கவிதை. இம்மாதிரியான ஒரு தமிழ்த் தெய்வ வாழ்த்து "மனேன் மணீய" ஆசிரியரால்தான் பாட முடிந்தது. வேறு யாரும் பாடியதாக இல்லை. பாடியிருப்பதாகக் கூறுகின்றவர்களிடம் "பாலெல்லாம் பசும்பாலாகுமா" என்ற கேள்வியைத்தான் கேட்கவேண்டிய நிலை ஏற்படுகிறது. தான் பெற்ற தரிசனத்தை நல்ல வடித்தெடுத்த சொற்களில் புனைந்துதந்த பெருமை பேராசிரியர் ஒருவர்க்கே உரியது. வாசிக்கின்றவருடைய நெஞ்சவீட்டில் உல்லாசமாக உலாவித் திரிகின்றது அவர் அருளிய வாழ்த்து. இதனை இதயப்பூர்வமாக அனுபவித்துப் பாடாத தமிழர் களுமுண்டோ?

பேராசிரியரது இதயத்துடிப்பிலே, பின்னும் எத்தனையோ கவிதைகள் தோன் றின. தமிழ்த் தெய்வத்தின் பெருமையை மேன்மேலும் எண்ணிப்பார்க்கலானுர். பரம்பொருளுக்கு ஒப்பானதமிழுக்கு வேறு உவமை உண்டா என்று தேடினுர். கிடைக்கவில்லை. தமிழ்மொழியின் இலக்கண இலக்கியப் பரப்பை எல்லாம் எண்ணி ஞல் அது ஒரு பெரிய கடல்தான். ஆனுல் கடலை உவமையாகக் கூறுவது புகழன்று. பிற புலவர்கள் கடலை உவமையாகக் கூறிவிடுவார்களோ என்ற அச்சங்கூட அவர் உள்ளத்தில் எழுந்ததாகத் தெரிகிறது. கவிச்சக்கரவர்த்தி கம்பன் தமிழைக் கட லுக்குத்தானே ஒப்பிட்டான். "தமிழெனும் அளப்பரும் சலதி" என்ருனே! சரி யன்று. இனிவரும் புலவர்களாவது அந்த உவமை கூருதிருக்க வேண்டும் என்பது பேராசிரியரது எண்ணம். ஆதலின், புலவர்களுக்கு எச்சரிக்கை விடுகின்ற முறை யில் பேச ஆரம்பிக்கின்ருர். அகத்திய முனிவர் கடலைக் குடித்தது உலகறிந்த விஷ யம். அவர் தென்னுட்டிற்கு வந்ததும் தமிழ்ப்புலமை பெறவேண்டும் என்று எண் ணங்கொண்டார். இயன்றவாறு முயன்று பார்த்தார். முடியவில்லை. கடலைக் குடிப் பதுபோன்று அத்துணை எளிதான காரியமா தமிழைக் கற்பது? பொதியமலைக்கு வந்தார். முருகப்பெருமானை வழிபட்டார். அப்பெருமான் அருளால் தமிழ்ப்புலமை பெற்ருர். கடல் குடித்த குடமுனிக்குக்கூட தமிழைக் கற்பதில் இவ்வளவு சிரமம் ஏற்பட்டதென்ருல், அந்தக் கடலை—சகர புதல்வர்களால் தோண்டப்பட்ட கடலை— தமிழுக்கு உவமையாகக் கூறுவது பொருந்துமா என்று கேட்கிருர் நமது கவி. இனி, பாட்டைப் பார்ப்போம்.

"கடல்குடித்த குடமுனியுன்
கரைகாணக் குருநாடில்
தொடுகடலை உனக்குவமை
சொல்லுவதும் புகழாமோ?"

என்று உணர்ச்சி நிறைந்த குரலில் பேசுகிருர் பேராசிரியர். அந்தக் குரல் படிக்கின்ற நமது உள்ளத்தையும் ஊடுருவிச் செல்லும் வேகமுடையதாக இருக்கிறது.

தமிழ் மொழிக்கு இலக்கணம் வாய்த்திருப்பதுபோல வேறு எம்மொழிக்கும் வாய்க்கவில்லை." கடல் கண்டோ மென்பர் யாவரே முடிவுறக் கண்டார்" என்ருர் கம்பர்." இலக்கணம் கற்ருே மென்பர் யாவரே முடிவுறக் கற்ருர் ?" என்றுதான் கூறவேண்டும். தமிழ் இலக்கணத்தைப் பொறுத்தமட்டில் இது உண்மைதான். வீர நக்கீரரை அறியாதார் யாவர் ? அவர் இறைவன் கவிக்குக் குற்றங் கூறிய வரலாறெல்லாம் தமிழ் நாட்டில் பிரசித்தமானவை. நக்கீரர் கேள்விக்கு விடை கூற முடியாமல் திண்டாடிப்போனுன் சிவபெருமான். ஒரு பிழைக்காக எவ்வளவு திண்டாட்டம் ஏற்பட்டது. சபை நடுவில் உரை இழந்து விழித்துப்போனுனே ! இவைகள் எல்லாம் ஆசிரியர் கண்முன்னே நடப்பதுபோல் காட்சி அளித்தன. தமிழ் இலக்கணத்தின் அருமையை எண்ணிப் பெருமிதங்கொண்டார். அவர் உள்ளத்தில் ஆர்வம் ஊற்றெடுத்துப் பொங்கியது. அருங்கவி ஒன்று வெளிவந்தது.

" ஒருபிழைக்கா அரனுர்முன்
உரையிழந்து விழிப்பாரேல்
அரியதுன திலக்கணமென்
றறைவதும் அற்புதமாமே "

என்று தமிழ் இலக்கணத்தின் பெருமையை வடித்தெடுத்துத் தமது வளமார்ந்த வாக்கில் பெய்துவைத்தார் பேராசிரியர். அவர் வாக்கில் புதியதோர் சுவையைக் காண்கின்ருேம். பாட்டைப் பாடிப்பாடி அற்புதமே அடைகின்ருேம்.

" ஞாலம் அளந்த மேன்மைத் தெய்வத்தமிழ் " என்ருர் சேக்கிழார் பெருமான். உண்மை என்கிருர் நமது பேராசிரியர். ஒரு காலத்தில் உலகம் எங்கும் தமிழ்மொழியானது பரவி இருந்தது ; குமரி முனைக்குத் தெற்கேயும் பதினுயிரம் ஆண்டுகளுக்கு முன்பே செழித்துப் பரவி இருந்தது. கி.பி. 1922 முதல் 1927 வரை பஞ்சாபில் " மொஹஞ்சோதாரோ " என்னும் இடத்திலும், சிந்துவில் 'ஹரப்பா" என்னும் இடத்திலும் ஆராய்ச்சி நடந்ததன் பயனுகத் தமிழின் பழமை மறுக்க முடியாத உண்மையாகிவிட்டது. இந்திய ஆராய்ச்சி இலாகாத் தலைவரான சர்.ஜான் மார்ஷல் " தமிழ் மக்கள் வாழ்ந்த காலம் சுமார் கி.மு. 3250 என்று கூறலாம். ஆரியர் கி.மு. 2600-க்குமுன் இந்தியாவில் இருந்ததில்லை. எனவே, அதற்கும் முற்பட்டவர் தமிழ் மக்கள் " என்று கூறுவது கவனிக்கத்தக்கது. இன்னும் வையகம் எங்கும் நம் தெய்வத் தமிழ் பரவி இருந்த உண்மை மொழிநூல் வல்லுநர் பலர்க்கும் உடன்பாடாகும். இவ்வுண்மைகளை எல்லாம் தம் ஆராய்ச்சித் திறமையால் கண்டறிந்தவர் பேராசிரியர்." உலகம் எங்கும் பரவி இருந்த தமிழ்மொழியில், மதியிற் களங்கம்போல் ஆரியம் தோன்றியது " என்று முடிவு கட்டினுர் அவர். ஆனுல், தமிழ் இன்ன காலத்தில் தோன்றியது என்று கூறமுடியாதபடி அவ்வளவு பழமையுடையதாகப் பட்டது. தமிழ்மொழி அனுதியான மொழி என்று அவர் தீர்மானித்தார். இவ்வுண்மைகளெல்லாம்,

"சதுமறையா ரியம்வருமுன்
சகமுழுது நினதாயின்
முதுமொழிநீ யநாதியென
மொழிகுவதும் வியப்பாமே"

என்ற அடிகளாக வெளிப்பட்டன. தாம் ஆராய்ந்து கண்ட பேருண்மைகளைக்கூட இனிய எளிய சொற்களில் வாரி வழங்கினார் பேராசிரியர்.

தமிழோடு தோன்றிய ஆரியம் முதலிய அயல் மொழிகளில் ஒன்றுதானும் இன்று உலக வழக்கில் இல்லையே என்று எண்ணிய பேராசிரியர் உள்ளத்தில், நமது மொழிக்கும் ஒரு காலத்தில் இக்கதி நேர்தல் கூடுமோ என்ற ஒரு சிறு ஐயம் எழுந்தது. தமிழ் மக்கள் பாமரராய், விலங்குகளாய் தாய்மொழியைப் புறக்கணித்து வாழ்வதும், இளைஞர்கள் பிறமொழியில் மேன்மையுறலாம் என்ற எண்ணத்தால் அயல் மொழிகளை ஆதரிப்பதும் பேராசிரியரது ஐயத்தை அதிகரிக்கச் செய்தன. சிந்தனையிலாழ்ந்தார் ; தெளிவு பிறந்தது. நமக்கே தேறுதல் கூற ஆரம்பித்துவிடுகிறார். சமணர்களோடு மாறுபட்ட ஞானசம்பந்தர் வைகையிலிட்ட ஏடு அழிந்ததா? இல்லையே ! எதிரேறி அல்லவா சென்றது. வைகைப் பெருக்கால்கூட தமிழ் ஏட்டை அழிக்க முடியவில்லை என்றால், எந்தக் காலவெள்ளத்தாலும் தமிழை அழித்துவிட முடியாது. அதற்கு வைகை நதியே சாட்சி. வைகையில் எதிரேறிய ஏடே அறிகுறி என்று கூறுகிறார்.

"வேகவதிக் கெதிரேற
விட்டதொரு சிற்றேடு
காலநதி நினைக்கரவாக்
காரணத்தி னறிகுறியே"

என்று பாடினார் பேராசிரியர். "என்றுமுள தென்றமிழ்" என்ற கம்பன் வாக்குப் பொய்க்குமா ?

அன்றியும், தமிழ் பரம்பொருளுக்கு ஒப்பானதல்லவா ? பரம்பொருள் அழிவுறுமா ? இல்லையே! தமிழுக்கும் அழிவில்லை. ஊழிக்காலம் என்பார்களே! அண்ட சராசரங்கள் எல்லாம் அழிய, பரம்பொருளாகிய சிவபெருமான் மட்டும் தனித்திருக்கும் காலம். அக்காலத்திலோ என்று எண்ணினார். ஒரு கனவு ஆரம்பமாயிற்று. கவிஞர்கள் எப்பொழுதும் கனவு காண்பவர்கள் தானே ! ஊழிக்காலம் ; எல்லாப் பொருள்களும் அழிவுற்றன. சிவபெருமான் மட்டும் தனித்திருக்கின்றார். அவர் தனித்திருக்கின்றாரே, எப்படிப் பொழுது போகிறது என்று எண்ணினார் பேராசிரியர். கையில் ஏதோ ஓர் ஏடு இருப்பதாகத் தெரிகிறது. உற்றுப்பார்க்கிறார். அது தான் மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம். அதைப் பாராயணம் செய்கிறார் சிவபெருமான். இப்படியா ஊழிக்காலத்தைக் கழிக்கின்றார் சிவபெருமான் என்று எண்ணுகிறார். கனவு தெளிகிறது. ஓகோ ! சிவபெருமான் தில்லை சென்று மாணிக்கவாசகர் சொல்ல, திருவாசகத்தை எழுதிச் சென்றாரே ! இதற்காகத்தான் போலும்! கடை யூழியிலுங்கூட சிவபெருமானும் தமிழ்த் தெய்வமுமே அழியாது விளங்கு

வார்கள் என்று தெளிவடைந்தார் பேராசிரியர். எவ்வளவோ வியப்பாக இருந்தது. அந்த வியப்பு ஒரு தாழிசையாக வெளிவந்தது.

" கடையூழி வருந்தனிமை
கழிக்கவன்றே அம்பலத்துள்
உடையாருன் வாசகத்தில்
ஒருபிரதி கருதினதே "

என்று நமது கவி பாடியதை நாம் திரும்பிப் பாடுகையில்—உள்ளூர உணர்ந்து பாடுகையில் தாய்மொழியைப் பற்றிய பெருமை நம் உள்ளம் முழுதும் பரவுகிறது; பேராசிரியர் தமிழ்த் தெய்வத்தின் பெருமையை நினைத்து அனுபவித்த சந்தோஷ உணர்ச்சி நமக்கும் ஏற்படுகிறது.

இவ்வாறெல்லாம், தமிழின் பெருமையைப் பேசிவந்த பேராசிரியரின் உள்ளம், சங்க இலக்கியங்களில் ஈடுபடுகிறது. பத்துப் பாட்டு இவர் உள்ளத்தையே அள்ளிப் பருகிற்று என்று கூறலாம். அந்த இலக்கியச் சோலையில் உலவித் திரிந்து இன்புற்ற அவர்கள், " தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் " என்று அவற்றுள் மூன்று பாட்டுக்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்கள். என்றாலும் ஆர்வம் அடங்கவில்லை. அந்த ஆர்வம் மற்றொரு கவிதையாக வெளிவந்தது. பிற்காலப் புலவர்களின் பொருத்தமில்லாத கற்பனைகளில் மயங்கிக்கிடக்கும் மக்களை, பத்துப் பாட்டு முதலிய நூற்களைப் படிக்குமாறு ஆற்றுப்படுத்துகிறது அந்தக் கவி.

" பத்துப் பாட் டாதிமனம்
பற்றினர் பற்றுவரோ
எத்துணையும் பொருட்கிசையும்
இலக்கணமில் கற்பனையே "

என்ற பாட்டைப் படிக்கும்போது நமது உள்ளமும் சங்க இலக்கியங்களில் ஈடுபடத் தான் செய்கிறது. சங்கத்தமிழ்ப் பாடி, தமிழர் புகழ் வளர்ப்பது நமது கடமையல்லவா ?

அடுத்தபடியாக உலகப் பொதுமறையாக விளங்கும் வள்ளுவர் நூலைப்பற்றிய நினைவு வந்தது. ஆனால், ஒரு குலத்திற்கு ஒரு நீதி வகுத்த மனுதர்ம சாஸ்திரத்தைப்பற்றியும் எண்ணினர். அதையும் ஒரு தர்ம சாஸ்திரம் என்கிறார்களே ! திருக்குறளை மறுவறக் கல்லாமைதான் காரணம் என்று முடிவுகட்டினர். உண்மையை விளக்கும் முறையில் ஒரு கவி தோன்றியது.

" வள்ளுவர்செய் திருக்குறளை
மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி
ஒருகுலத்துக் கொருநீதி "

என்பது அந்தக் கவி. வள்ளுவர் நூலைக் கசடறக் கற்கவேண்டும் என்பது பேராசிரியரது பெருவிருப்பம். நிறைவேற்ற வேண்டுவது நமது கடமை. இளமாணவர்களது முதற் கடமை.

கடைசியாக ஒரு கவி. "ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிக்கும்" திருவாசகத்தைப் பற்றியது. "திருவாசகம் இங்கொருகால் ஓதின் கருங்கல் மனமும் கரைந்துகும்" என்றுர் சிவப்பிரகாச அடிகள். உண்மைதான். மனங்கரைப்பது மட்டுமா ? மும்மலங்களையுங்கூட கெடுக்கும் என்கிறுர் பேராசிரியர். திருவாசகச் சுவையில் ஈடுபட்டவர்கள் கண்மூடித்தனமாக வேதபாராயணம் செய்ய முற்படுவார்களா என்று கேட்கிறுர் கவி.

" மனங்கரைத்து மலங்கெடுக்கும்
வாசகத்தில் மாண்டோர்கள்
கனஞ்சடைஎன் றுருவேற்றிக்
கண்மூடிக் கதறுவரோ ?

என்பதைப் படிக்கும்போது நமது உள்ளம் திருவாசகத்தை நாடுகிறதல்லவா ?

மனேன்மணீயத்தில் பாயிரமாக அமைந்துள்ள இந்தத் தமிழ்த் தெய்வ வாழ்த்தை ஒரு தனிநூல் என்று கூறுதல் பொருந்தும். தமிழ்த் தெய்வத்திற்குச் சூட்டப்பட்ட பாமாலை அது.

உலகில் எத்தனையோ மொழிகள் வழங்குகின்றன. எம்மொழியினரும் தங்கள் மொழியைத் தெய்வமாகக் கொள்ளவில்லை. ஆனல், தமிழ்மொழியை நாம் தெய்வமாக வழிபடுகின்றேம். தெய்வம் என்றே கூறினர்கள் நமது ஆன்றேர்கள். ஆசை பற்றியா அறைந்தார்கள். இல்லை. நிச்சயித்துக் காட்டினர்கள். "முத்தமிழும் ஆனன் கண்டாய்" என்றுர் நாவுக்கரசர். "தமிழ்த் தெய்வத்தை உள் நினைந்து ஏத்தல் செய்வோம்" என்றுர் வள்ளலார். காரணங் காட்டிக் கவி புனைந்தார் நமது பேராசிரியர். தமிழே நமது கண்கண்ட தெய்வம்.

நமது பேராசிரியர்—தமிழ்த் தெய்வ வணக்கம் அருளிய கவிஞர்—நவீன நாடகம் புனைந்து தமிழ்த்தாயின் குறைதீர்த்த தவப்புதல்வர்—அறிவு நூல் பயின்ற அருங்கலைக் குருசில் சுந்தரம்பிள்ளை அவர்கள் பூதவுடம்பை விடுத்துப் புகழுடம்புடன் இன்று விளங்குகிறுர். அவர் தமிழ்த் தெய்வத்திற்குச் செய்த பெரும் பணிகளால் அமரத்துவம் பெற்று விளங்குகிறுர். அவர்களை நாம் போற்றுகிறேம். தமிழர் அத்தனைபேரும் போற்றுகிறுர்கள். கொடுமலையாளக் குடியிருப்புடைய திருவனந்தபுரத்தில் வாழ்ந்துகொண்டே தமிழ்ப்பயிர் வளர்த்த அவர்கள் புகழ் உலகில் என்றும் நின்று நிலவும்.

# கம்பர் ஓர் ஏழை

(திரு. கோவைகிழார். C. M. இராமச்சந்திரஞ் செட்டியார், B.A., B.L.)

பொதுவாகவே புலவர்கள் ஏழைகள் என்பது மக்களுடைய எண்ணம். இவ் வெண்ணம் பல வாழ்க்கைகளிலே நேரில் கண்டறிந்ததின் பேரில் ஏற்பட்டதாகும். தமிழிலே ஒரு புலவர் " ஆவீன மழை பொழிய " என்ற செய்யுளேயும்," கல்லேத் தான் மண்ணேத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தாஞ " என்ற செய் யுளேயும் மனம் நொந்து எழுதினுர் என்ருல் அவரது வறுமையைப்பற்றி வேறு என்ன அத்தாட்சி வேண்டும்." புலவர் வறுமை " என்ற ஒரு சிறுநூலும் தமிழில் எழுதப்பட்டது என்ருல், வேறு எதையும் மிகுதியாகக் கூறவேண்டியதில்லே அல் லவா ? தமிழில் மட்டும் அல்ல, வேறு எல்லா மொழிகளிலும் இந்தச் சீர்கேடான நிலேமை புலவர்களிடம் இருந்தது. ஆங்கில நாட்டில் "தாம்சன்" என்ற ஓர் இளேய புலவன் தன் பாடல்களுக்கு எவரும் மதிப்புக்கொடாமலிருக்கப் பொறுக்கலாஞ வறுமையினுலே தற்கொலேபுரிந்துகொண்டான். வேறு மொழிகளிலும் புலவர்கள் இதே சிறுமை அடைந்திருக்கிருர்கள். இது என்ன வாழ்க்கையோ !

புலமை ஒன்றையே பிழைப்புத்தொழிலாகக் கொண்டவர்களே இந்தக் கொடிய வாழ்க்கையில் வருந்திஞர்கள் என்று கூறவேண்டும். வேறு தொழிலே வைத்துக் கொண்டு புலமையை ஒரு உல்லாசத்தொழிலாகக் கொண்டவர்கள் இந்தச் சீர்கேடு அடையமாட்டார்கள். புலமையே தொழிலாகக் கொண்டவர்கள் செல்வம்பெற வேண்டும் என்ற கொள்கையின்றி எப்பொழுதும் கவியழகுகளேயே சிந்தித்துக் கொண்டு இருப்பதினுல் வயிற்றுப்பாட்டை நினேக்கவும் அதற்குச் செய்யவேண்டிய செயல்களேச் செய்யவும் நேரம் அற்றவர்கள் ஆகிவிடுகிருர்கள். ஆகவே வறுமை என்ற பேயால் பீடிக்கப்பட்டவர்களாய் வருந்துகிருர்கள். நெருக்கடி வந்த காலத் தில் தாம் எழுதிய அரிய நூல்களே வாணிபர்களுக்குக் கூழுக்கு விற்றுவிடுகிருர்கள். ஆங்கில நாட்டிலே கோல்ட்ஸ்மித்து, ஸ்காட், கார்லேல் முதலிய பெரும் புலவர்கள் சில பணங்களுக்குத் தம் அருமையான கவிகளேயுங் கற்பனேகளேயும் விற்று வருந்த வில்லேயா ? அப்படியாஞல் தமிழ் நாட்டிலே ஒளவையாரும் கம்பரும் கூழுக்கும் கூலிக்கும் பாடிஞர்கள் என்ருல் அது வெறும் கட்டுக்கதையாகுமா ?

செல்வவான்களும் புலமை மேற்கொண்டு கவியின்பத்தையே சிந்தித்துப் பொழுது போக்கினதும் உண்டு. அன்ஞர்களும் வறுமை உற்ருர்கள் என்பது மிகை யல்ல. நேரில் ஒரு குறுநில மன்னரிடம் அவரது குடும்பம் தற்போது இழிந்தநிலே

அடைந்ததின் காரணம் சொல்லக் கேட்டிருக்கிறேன். அவருடைய பாட்டனுர் மிகப் படித்த பண்டிதர். வாழ்க்கை தொடங்கும்போது அவருக்குப் பெருத்த செல்வம் இருந்தது. கடன் இருக்கவில்லை. செய்யுட்களை இயற்றி இன்புற்றும், பண்டைய நூல் களைப் பதிப்பித்தும் மக்களுக்கு வழங்கி அவர்களுடைய அறிவை மிகப்படுத்துவது தம் கடமை என்று எண்ணியும் அதிலே ஈடுபட்டார். தம் பண்ணையத்தை அவர் கவனிக்கவில்லை. பல நூல்களை எழுதினுர். பலவற்றை அச்சடித்தார். சில ஆண்டு களில் கடன் ஏற்பட்டுப் பொருள் தொலையத்தொடங்கிற்று. ஆனுல் அதனைப்பற்றி அவர் கவலைப்படவே இல்லை. அவர் இறக்கும் தறுவாயில் சொத்துக்குமேல் கடன் மிகுதியாகிவிட்டதாம். அந்த வாழ்க்கையின் முடிவாக இப்போது உள்ள அவரது பேரனுர் பண்ணையம் இழந்து வறுமையில் உளைந்து வெறும் பட்டம் வைத்துக் கொண்டு உயிர்ப்பிணமாக இருக்கிருர். குறுநில மன்னரின் நிலைமையே இப்படி யானுல் வறுமையிலேயே பிறந்த புலவர்கள் நிலைமை எப்படி இருக்கும் என்று கூறவும் வேண்டுமா ?

தமிழ் நாட்டிலே புலவர்களின் வறுமை என்பது ஒரு பழமொழியே ஆகிவிட் டது. என்றுலும் கம்பர் போன்ற கவிச்சக்கரவர்த்திகள் இதே நிலையில் வருந்தினுர் களா என்று கேட்கலாம். சங்கத்தார் காலம் முதல் புலவர்கள் ஒரு செல்வன் அல் லது தலைவனை அண்டியே பிழைத்தார்கள் என்பது வரலாறு. கம்பரைப்பற்றியும் பல கதைகள் தோன்றியிருக்கின்றன. விநோத ரச மஞ்சரி முதலிய நூல்கள் அக் கதைகளை வெகு விமரிசையாக உரைக்கின்றன. அவைகள் படிப்பவர்களை உற்சாகப் படுத்துவதற்காகக் கற்பிக்கப்பட்டிருக்கலாம். கூழுக்குப்பாடிய கதைகளும் காசுக்கு இயற்றிய கதைகளும் உண்மையாக இருந்தாலும் இருக்கலாம். வெறும் கற்பனை யாக இயற்றப்பட்டிருந்தாலும் இருக்கலாம். ஆனுல் கம்பரே சில சொற்களை மெய்ம் மறந்து கூறியிருந்தால் அவைகளை நம்ப வேண்டாமா? அவைகளை எடுத்துக்கொண்டு அவைகளில் நாம் காணக்கூடிய சில எண்ணங்களை இங்கே எடுத்து எழுதுவோம்.

கம்பர் இராமனுடைய வரலாற்றைச் சொல்லத்தொடங்கும்போது அவனுடைய நாடு நகரங்களைப்பற்றிக் கூறுகிருர். அந்த நாடு உலகிலேயே எல்லாப் பண்புகளி லும் சிறந்த நாடாக இருத்திவைக்க வேண்டும் என்பது அவர் கருத்து. அப்படிப் பட்ட ஒரு சிறந்த நாட்டிலே கேடுகள் இருக்கக்கூடாது அல்லவா ? அவர் கருத்தில் தோன்றிய மிகக் கொடிய கேடுகள் வறுமையும் முதலாளித்துவமும் என ஊகிக்க லாம். ஏனெனில் அவை இரண்டினுலும் அவர் மிகவருந்தினுர்போலும். ஆகவே, அப்படிப்பட்ட கொடுமை கொண்ட மக்கள் இரண்டு வகையினரும் தன் அன்பிற் குகந்த தலைவனின் நாட்டில் இல்லை என்று உறுதிபடக் கூறுகிருர்.

"எல்லாரும் எல்லாப் பெருஞ் செல்வமும் எய்தலாலே
இல்லாரும் இல்லை, உடையார்களும் இல்லை"

என்று கூறுகிருர். அந்நாட்டிலிருந்த எல்லா மக்களும் அவரவர்க்கு வேண்டிய பொருள்களைப் பெற்றிருந்தார்கள். அதனைக் கேட்க, நாமோ, "ஆ நமக்கு அப்படிப் பட்ட சம்பத்து இல்லையே," என்று பொருமைப்படுவோம். அப்படிக் கோசலநாட்டில்

மக்கள் வேண்டியவற்றைப் பெற்றிருந்த வகையில்"அங்கே ஏழைகள் இல்லை, முதலாளிகளும் இல்லை" என்கிறார். ஏழைகள் வறுமைப்பிணியால் வருந்தும் மக்கள். முதலாளிகள் வறியவர்கள் அருகில் இருக்க அவர்களுக்குக் கொடாமல் அவர்களுடைய உழைப்பினால் தாமே செல்வர்களாகித் தன்னலத்தோடு வாழுபவர்கள். இவ்விருவரின் நிலைமைகளும் அமைதியுள்ள நாட்டிற்கு வேண்டியதில்லை. இந்த இரண்டும் நமது நாட்டில் இப்போது தாண்டவம் ஆடுகின்றன. கம்பருடைய கனவில் அவைகள் இல்லாத நாடு கோசலநாடு ஆகும் ; நகரம் அயோத்தி ஆகும். ஆகவே கம்பர் இந்த இரண்டு கொடுமைகளையும் கண்டிருந்து அவைகளைக் கண்டிக்கவே மேலே சொன்னபடி பாடுகிறார். கம்பர் வறியவர்களிடம் வறுமையின் கொடுமை அறிந்து அருகே முதலாளிகள் செய்யும் கொடுமைகளைப் பார்த்துச் சகிக்காமல் இருந்திருக்க வேண்டும். தம் அனுபவ நினைவை இங்கே ஊட்டியிருக்கிறார். தாமே வறியவராக இருந்து அந்த வறுமையின் கொடுமைகளை அனுபவித்தார் என்று கூறலாமோ ?

இனி மற்றோர் இடத்திலும் இந்த நிலைமையே வற்புறுத்துகிறார். ஏழைகளின் கூக்குரல் அவர் காதில் எப்போதும் ஒலித்துக்கொண்டிருக்கிறது போலும். கடல் மிகப் பெரியது. அதன்மீது ஏறிச்செல்லும்போது அதன் பரப்பின் பெருமை நன்கு தெரியும். அகலமும் நீளமும் கண்ணால் அளக்கமுடியாது. மனத்தால் நினைக்க முடியாது. வறுமையும் அப்படிப்பட்ட கொடிய பெருக்கத்தைக் கொண்டதே. வறுமையின் கொடுமையை யாரே அளக்கமுடியும் ! மேலும் கடலின்மீது செல்லும்போது அதன் கொந்தளிப்பைப் பார்க்கவேண்டும். பெரிய பெரிய கப்பல்களையும் ஆட்டிவைக்கின்றன அல்லவா ? வறுமை செய்யும் கொந்தளிப்பும் அதுபோல்வதே. வறியவனுக்கு ஒரு நாளேனும் மன அமைதி உண்டோ ? மேலும் கடலில் சுறு மீன்கள், திமிங்கிலங்கள், பாம்புகள், விடப்பிராணிகள் கணக்கிலவாக உண்டு. வறுமையில் சஞ்சரிக்கும் கொடிய நோய்கள், சச்சரவுகள், கூக்குரல்கள் முதலியவைகளுக்கு அளவில்லை. ஆகவே வறுமை ஒரு கடல் அல்லவா ?

இவ்வறுமையாகிய கடலைக் கடப்பது எப்படி என்று கேட்கிறார் கம்பர். தன்னுடைய இலட்சிய நகரமாகிய அயோத்தியில் ஈகையே இக்கடலைக் கடந்தது என்று ஆறுதல் கூறுகிறார். ஈகை என்பது ஒரு கப்பல். அதனையும் கலக்கிவிடும் வறுமையின் கொந்தளிப்பு. இருந்தாலும் அந்த ஈகை என்னும் கப்பல் அக்கடலைத் தாண்டி வறுமையும் அதனால் ஏற்படும் இரவும் (யாசகம்) இல்லாத ஒரு கரையை அடைந்ததாம். அந்த நகரம் என்று பொருள்பட

"ஈந்தே கடந்தான்
இரப்போர் கடல்"

என்று வெகு அருமையாக அந்நகரின் பெருமையைக் கம்பர் விளக்குகிறார்.

இதனால் கம்பர் வறுமையின் கொடுமைகளையும் வறியவரின் துன்பங்களையும் ஈகையின் பெரும் ஆற்றலையும் ஈவோரின் பெருந்தன்மையையும் கூறுகிறார். கம்பர் வறுமையை நேரில் அறியாமலா இவ்வாறு கூறுகிறார் ?

இத்தகைய சிறந்த நாட்டையும் நகரத்தையும் எவ்வண்ணம் மன்னர் மன்னனுகிய (சக்கரவர்த்தி) தயரதன் ஆளுகிருன் ? அவனே ஆற்றலில் சிறந்தவன். அது கண்டு பகைவர் ஒருவரும் எழவில்லே. மன்னனுக்கோ போர்புரியும் வேலே இல்லே. ஆகவே நாட்டில் குடிகள் நன்ருக வாழவேண்டும் என்ற கொள்கையே நிரம்பியவனுக இருந்தான். அந்த ஆட்சியை எவ்வகையில் நடத்துகிருன் என்று கம்பர் வருணிக்கிருர் ? உலகில் வேறு எந்தப் புலவனும் கருத ஒண்ணுத பெருமையில் அன்ருே வருணிக்கிருர் ? அவர் ஆண்டிருக்கும் ஓர் உவமை போதும் அவருடைய அரிய பெரிய புலமை மதியை விளக்குவதற்கு என்க. அந்த அரிய நுட்ப அறிவை இனி எடுத்துக்காட்டுவோம்.

ஓர் ஏழை மகனுக்கு ஒரே ஒரு சிறுவயல் (செய்) இருக்கின்றது. அதைக் கொண்டே அவனும் அவன் குடும்பமும் பிழைக்கவேண்டும். ஆகவே அவன் அச் சிறு வயலே வெகு அக்கறையோடு பாதுகாத்துச் செம்மைப்படுத்தி மிகுதியும் உழைத்து அதனுல் பெறும் பலனே எடுத்துப் பிழைப்பான் அன்ருே ? அவன் சற்றுச் சோர்வு அடைந்தாலும் பருவம் தவறினுலும் அவன் வாழ்க்கையே அம்பலமாகப்போகும். அவனும் அவன் குடும்பமும் தீராத இடும்பைகள் படவேண்டி வரும். ஆகவே, அவன் மிகவும் அக்கறையோடு உழைப்பான் அல்லவா ?

அந்த ஏழையின் அக்கறையிலே தயரதன் தன் பேரரசைக் காத்து வந்தானும் என்று கம்பர் கூறுகிருர். இதனுல் பல உட்கருத்துக்கள் தோன்றும். ஏழை எத்தனே அக்கறையோடு பாடுபடுவானே அத்தனே அக்கறையோடு தனது பெரிய அரசையும் தயரதன் காத்துவந்தான் என்பது ஒன்று. ஏழை எவ்வாறு ஒரு சிறு வயலே முழுவதுமாகக் காத்தானே, அப்படியே தன் பேரரசின் ஒவ்வொரு பகுதியையும் அரசன் காத்தான் என்பது மற்ருென்று. ஒருவனுக்கு அளவுக்கு மிஞ்சிய சொத்து இருந்தபோதிலும் அதில் ஒரு பகுதி தனக்குப் போதும் என்று இருந்தபோதிலும் அப்பகுதியை மட்டும் பாதுகாத்து அதன் பலனேடு திருப்தி அடைபவன்போல் அல்லாது, எல்லாப் பகுதிகளேயும் சரிவரப் பாதுகாத்து அவைகளின் பலன்கள் முழுவதும் பெற அரசன் முயன்றுன் என்பது இன்னுமொரு பொருள். அதாவது உலகில் செல்வவானும் ஏழையும் ஒரே விதமாகப் பாடுபடவேண்டும், செல்வம் இருக்றது என்ற காரணத்தைக் கொண்டு சோம்பேறியாக இருக்கப்படாது, உலகில் பிறந்தவன் ஒவ்வொருவனும் பாடுபட்டே தீரவேண்டும் என்ற பொருளாதாரக் கலேயின் உணர்ச்சி இதிலே இருக்கிறது அல்லவா ? ஆகவே, தயரதனுடைய ஆட்சியின் மேன்மையைக் குறிக்கும்போது பொருளாதாரச் சிறப்பைக் கம்பர் கனவு காண்கிருர் என்க .

இந்தக் கனவிற்கு எடுத்துக்கொண்ட உதாரண உவமை மிகச் சிறப்புடையது. அது ஏழையின் செய் எவ்வாறு காக்கப்படுகிறது என்பதே ஆகும். இந்த உண்மை ஓர் ஏழைக்குத்தான் விளங்கும். கம்பன் ஓர் ஏழையாக இருந்து ஒரு சிறு வயலே உழுது பயிரிட்டுப் பலனே எடுத்துத் தன் குடும்பத்தைக் காக்காமல் இருந்தால் இந்த உவமை அவர் மனதில் தோன்றி இருக்குமா ?

மற்ற எந்தப் புலவர்கள் இந்தச் சிறந்த உவமையை எடுத்து ஆண்டார்கள் ; ஆகவே கம்பர் சிறு செய் படைத்திருந்த ஓர் ஏழையாக இருந்திருக்கலாகாதா ? அச்செய்யுள் :

“ வையகம் முழுவதும் வறிஞன் ஓம்பும் ஓர்
செய் எனக் காத்து இனிது அரசு செய்கிறான்.”

என்பதே. இதனை ஊன்றி ஆராய்க.

மேலும், ஏழையாக இருந்த கம்பர், கடனும் பட்டு அதனால் வருந்தினாரோ என்று ஒரு கேள்வி எழும்பலாமே. எத்தனை எச்சரிக்கையாக இருப்பவனுக்கும் ஒரு காலத்தில் வினை வயத்தால் கடன் ஏற்படுவதுண்டு. அவ்வாறு கம்பர் கடன்பட்டிருக்க வேண்டும். அதனால் கலக்கம் உற்று நொந்திருக்கவேண்டும். அந்த அனுபவத்தைப் பிறர் நினைக்க ஒண்ணாத இடத்தில் உவமையாகக் கொண்டு அமைத்திருக்கிறார்.

இராம-இராவணப் போரின் இறுதியில் இராவணன் தோற்றுப்போய்த் தன் இனம் படை முதலியவை எல்லாம் இழந்து தன்னந்தனியே நிற்கிறான். அப்போது அவன் உள்ளம் எவ்வாறு இருக்கும்.“ கடன்பட்டார் போலக் கலங்கினான் இலங்கை வேந்தன்” என்றார் கம்பர். சில செல்வவான்களான அறிஞர்கள் இது என்ன கேவல மான உவமை ? கல்வியில் பெரிய கம்பர் இந்த அசம்பாவிதமான உவமையா எடுத் தாளுவார் ? என்று ஏளனம் செய்கிறார்கள். இவ்விதமாகச் சொல்லி அச்செய்யுள் கம்பருடைய வாக்கே அன்று, அது இடைச்சொருகல் என்று தள்ளிவிடுகிறார்கள். அந்தத் தார்க்கிகர்கள் ஏழைபடும் கடன் வாழ்க்கையை அறியாதார்கள் என்க. கடன் ஒருவனை ஆழ்த்திவிடும் சங்கடங்கள் சிறிதேனும் அறிந்திருந்தால் இவ்வாறு கூறவேமாட்டார்கள். கடன் தொல்லை கம்பருக்கு ஏற்பட்டிருக்கவேண்டும். அதனை அறிந்தே அதனை இலங்கை வேந்தன்மீது ஏற்றினார். ஓர் ஏழை கடன்பட்டால் சுற்றம் ஓடிப்போகும். வறுமைப்பேய் குடுமியை ஆட்டும். தாங்க ஒண்ணாத கவலை ஏற் படும். இலங்கை வேந்தனைச் சுற்றத்தார் விட்டு அகன்றனர். மானம் போகும் நிலை வந்துவிட்டது. அசுரர் தலைவனுக்கு ஒரு மானுடனால் இந்தக்கதி நேரிட்டால், அது கடன்பட்டவன் கதிபோல் இல்லையா ? இது சொன்ன கம்பர் ஓர் ஏழை அல்லவா?

இந்த எடுத்துக்காட்டுக்களைப்போலப் பல அவர் நூலில் இருக்கின்றன.எல்லாம் கம்பர் ஏழ்மை இன்னது என்று அறிந்தவர் என்று காட்டக்கூடியவையே. நண்பர் கள் இந்த நிலையை நன்கு ஆராய்ந்து ஒரு முடிவிற்கு வருவார்களாக !

# திருக்குறள்

(திருமதி. இராசரத்தினம் அம்மையார், M.A.,L.T., தமிழ்ப்பேராசிரியை, சென்னை)

" பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச் சாம்புனதம்
ஆவிற் கருமுனி யானைக்—கமரரும்பல்
தேவிற் றிருமா லெனச்சிறந்த தென்பவே
பாவிற்கு வள்ளுவர் வெண்பா."—

திருக்குறள் என்ற சொல்லானது மேன்மையுற்றதும் குறுகிய அடிகளாலானது மான ஒரு நூலைக் குறிக்கும். இந்த நூலின் அருமையை உணர்ந்தே நம் முன்னோர் " நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி " என்றனர். தமிழ் மொழியானது என்றும் நின்று நிலவுதற்குக் காரணமான பல சிறந்த நூல்களைப் பெற்றுள்ளது. எனினும் அவை அனைத்திலும் சிறந்து விளங்குபவை கம்பராமாயணமும் திருக்குறளும் என்பது சிலருடைய துணிபு. இக்கருத்தினை யடிப்படையாகக் கொண்டே தமிழுக்குக் "கதி" யாவார் இருவரென்றும்,"கதி" என்ற சொல்லிலேயே "கம்பர்" "திருவள்ளுவர்" என்ற இரு புலவர்களுடைய பெயர்களும் அடங்கி இருக்கின்றன வென்றும் பெரியார் கூறுவர்.

இந்நூல் இவ்வளவு சிறப்புடன் போற்றப்படுவது இது உலகுக்குரிய ஒரு நூலாக இருப்பதனாலேயாகும். இந்நூலில் பல பகுதிகளில் "உலகு" என்ற சொல் காணப்படுகிறது. வள்ளுவப் பெருந்தகையாரின் பரந்த உள்ளமானது தமிழ் நாட்டளவிலும் பரத கண்டத்தோடும் நில்லாது விரிந்து சென்று உலகமனைத்திலும் பரவியிருக்கிறது. உள்ளமானது குறுகி நில்லாது பரந்து சென்றதாலேயே உலகுக்கொரு நீதி நூல் வகுக்க முடிந்தது.

அறிவு ஆற்றலோடு கூடிய அவருடைய அன்புள்ள நெஞ்சில் ஆண்டவனும் இடம் பெற்றான். உயர்ந்த ஆத்திகவாதியாகிய நாயனார், கடவுளைப் பெயரினாற் சுட்டாது, அவனுடைய குணங்களால் குறிக்கிறார். ஆதி பகவன், வாலறிவன், மலர் மிசை ஏகினான், தனக்குவமை யில்லாதான், அறவாழி யந்தணன், இறைவன், வேண்டுதல் வேண்டாமை யிலான், பொறிவாயிலைந்தவித்தான், எண் குணத்தான், என்ற குணநலன்களாலேயே அப்பற்றற்றவனைக் குறித்துள்ளார். இவ்வாறு அகப்பற்றும் புறப்பற்றும் நீக்கிச் செய்த காரணத்தினாலேயே இந்நூலானது எக்காலத்தவராலும், எந்நாட்டவராலும் போற்றிப் பாராட்டிப் படிக்கப்பட்டு வருகிறது. இது

உலக இயல் உள்ளவாறு எடுத்தியம்பும் ஒரு நூலாகும். உண்மையானது என்றும் நின்று நிலவுதல் திண்ணம். நூல் மட்டுமா போற்றப்படுகிறது. அந்நூல் எழுவதற்குக் காரணமாக இருந்த தமிழ் மொழியே போற்றப்படுகிறது." வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு " என்ற பாரதியார் வாக்கு இதனை வலியுறுத்துகின்றது. தமிழ்நாடு மட்டுமா ? தமிழனும் உயர்வடைந்தான். இந்நூலின் அருமையை யுணர்ந்த அந்நிய நாட்டுச் சான்றோர் இதனைத் தம்மொழிகளில் பெயர்த்து எழுதலாயினர். அது மட்டுமா ? மேலான பல நூல்களையுடையோர் என்று கூறப்படும் ஆங்கிலேயரும் இதன் பெருமையை யுணர்ந்து தம் வேத புத்தகத்திற்கு அடுத்த இடத்தை இந்நூலுக்குக் கொடுத்திருக்கின்றனர். ஆகையால் தமிழர்களாகிய நாம் இதனைத் " தமிழ் வேதம் "—" உத்தர வேதம் " என்றெல்லாம் சொல்லிக்கொள்வதை யெல்லாம்விட அந்நிய நாட்டினர் நம் நூலுக்குக் காட்டிய மரியாதை மிகவும் போற்றற்குரியது. எங்கே வைக்கப்பட்டாலும் அறிவானது ஒளிவீசிப் பிரகாசிக்குமல்லவா ?

இத்தகைய அரிய பொக்கிஷத்தைக் கிடைக்கப்பெற்றும் நாம் அதனைப் பயன் படுத்தாமல் இருக்கிறோம். ஏனென்றால் நம் நாட்டவருள் பெரும்பாலோருக்குக் கல்வியறிவு கிடையாது. படிக்கத் தெரிந்த சிலரும், இது நம்முடைய நூலாகையால் எப்பொழுதாவது படித்துக்கொள்ளலாம் என்று அசட்டையாக இருக்கிறோம்." முற்றத்து முல்லைக்கு மணமில்லை " என்பது போல நம்முடைய தமிழ் நூலில் அரிய கருத்திருக்கப்போகிறதா என்ற அசட்டையும் சிலருக்கு உண்டு. ஆகையால் திருக்குறளைப் படிப்பதற்குரியவர் தமிழ்ப் பண்டிதரேயாகும் என்னும் எண்ணமும் இருந்தது. ஆனால் அவ்வெண்ணமானது இப்பொழுது மாறிவருகிறது.

வள்ளுவரை அறிந்தால் மட்டும் போதாது. அவருடைய கருத்தினைச் சிந்தித்து அவர் செலுத்துகின்ற நெறியில் சென்றால் நம் வாழ்க்கையானது நிறைவுற்றதாவதுடன், பயனுடையதாக அமையும். வள்ளுவனார் மிக்க எளிய வாக்கில் நீதி போதிக்கின்றார். இருந்தபோதிலும் அவற்றையெல்லாம் நன்றாக அறிவதற்குத் தக்க, திறவுகோல்களைப் போன்ற சிறந்த உரைகளும் எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளுள் மிகவும் விரும்பிப் படிக்கப்படுவது பரிமேலழகர் உரையாகும். முழு நூலையும் வாங்கிப் படிப்பதற்கு வசதியற்றவர்களுக்கு உதவுவதற்காகவே சிறு சிறு பகுதிகளாகவும் இது அச்சிடப்பட்டுள்ளது. சில ஆன்றோர்கள் திருக்குறள் நீதிக்கதைகள், ' திருக்குறள் குமரேச வெண்பா ' முதலியவற்றையும் எழுதி உதவியுள்ளனர்.

நம் நாட்டு மக்கள் இந்நூலின் பெருமையை நன்றாக உணரவேண்டுமென்று பலரும் பல துறைகளில் ஈடுபட்டுள்ளனர். பள்ளிக்கூடங்களிலும் திருக்குறளானது சிறு குழந்தைகள் முதல் பெரியோர் வரையில் கற்பிக்கப்பட்டு வருகிறது. இனி வருங்காலத்தில் படித்து அறிந்த ஒவ்வொருவரும் திருக்குறளை ஓதி உணர்ந்திருப்பார்க ளென்பது திண்ணம். உலக வாழ்க்கையின் எத்துறையில் ஈடுபட வேண்டுமாயினும், திருக்குறளைப்பற்றிய அறிவானது இன்றியமையாததாகும். சிறப்பாக இல்லறத்துறையிலே ஈடுபட விரும்புவர் யாவரும் திருக்குறளை ஓதி யுணர்தல் வேண்டுமென்பது திருவள்ளுவருடைய கருத்தாகும். இச்சிரிய நோக்கத்துடனேயே நூலின்

பெரும்பகுதியில் இல்லறத்தாரது இயல்புகளையும் கடமைகளையும் விரிவாகவும் தெளிவாகவும் விளக்கியுள்ளார். ஆகையால் மனிதர்கள் மனிதராக வாழவேண்டு மானல் திருக்குறளைப் படித்து, அதற்கேற்ப ஒழுகுதல் இன்றியமையாததாகும்.

பெருநாவலராகிய இவர் உலக மக்களின் இயல்புகளை நன்ருக அறிந்திருந்த தோடு அவர்களுடைய உள்ளக்கிடக்கையைப் படம்பிடித்துக் காட்டுவதிலும் தலை சிறந்தவராவார். ஒரு நாட்டிலுள்ள மக்களுள் சிறந்தவன் அரசனுவான். அவனு டைய கடமையைப்பற்றிக் கூறுங்கால்

“ கொடையளி செங்கோல் குடியோம்ப னுன்கு
முடையானும் வேந்தர்க் கொளி ”

என்றியம்பினுர். வறுமையினுல் பொருள் இல்லை என்று இரப்பவருக்குத் தன் னிடத்திலிருப்பதைக் கொடுப்பதும், தக்காருக்கு அருளோடு உபசாரஞ் செய்தலும், நீதி வழுவாமல் செங்கோல் செலுத்துவதும், தன் குடிமக்களுக்குத் தீங்கு நேரா மல் பாதுகாப்பளித்தலும் அரசனுடைய சிறந்த கடமையாகும் என்ருர். இவ்வாறு ஆராய்ச்சி செய்து திறம்படக் கூறியதிலிருந்து இவர் ஒரு சிறந்த இராஜ தந்திரி என்று விளங்குகிறது. அரசருக்குரிய நீதியைக் கூறவல்ல இவர் இரந்துவாழ்வ தையே தம் தொழிலாகக் கொண்டுள்ள பிச்சைக்காரர்களுக்கும், அவர்களுடைய தர்மம் இப்படிப்பட்டது என்று கூறுவதைக் காண வியப்பாய் இருக்கிறது. அதையும் சற்றுப் பார்ப்போம்.

“ இகழ்ந் தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ள
முள்ளு ளுவப்ப துடைத்து ”

என்ற வாக்கால், தம்மிடத்தில் ஒன்றுமில்லை என்று கூறி நம்பால் யாசிப்பவரிடம் பொருள் தரமாட்டேன் என்று மறுத்துரைக்காமல் தருவதோடு, அவருடைய தொழி லின் இழிவு தோன்ற இடித்துரைக்காமலு மிருந்தால், வசைக்குரிய பிச்சையெடுக் குந் தொழிலும் மகிழ்ச்சிக்குரியதாகும். “ ஈயென இரத்தல் இழி ”வுடையது என்று உள்ளுணர்வு கூறினும், உடலை வருத்தி முயற்சி செய்தற்கு விரும்பாத மக்கள் யாசிக்க முற்படுகின்றனர். அவ்வாறு யாசித்துப் பொருள் கிடைக்கப்பெற்ருல் அகம் மிகவும் மகிழப்பெற்றுத் திருப்தியடைவார்கள். அப்பொழுது அவர்களுடைய முகம் அழகு பெற்றுப் பிரகாசமடையுமென்று ஒரு சிறந்த ஓவியத்தைத் தீட்டிக் காட்டு கின்ருர் நம் முதற் பாவலர். மேலும்

“ அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று ”

என்று கூறியதால் “ அறம் ” என்ற பெயருக்கு உரியது இல்லறமேயாகும். அந்த இல்லறமும் பிறரால் போற்றக்கூடிய நிலையிலிருந்து பகைவராலும் பழிக்கப்படாத

தாயின் உண்மையான அறமாகும் என்பது விளங்குகிறது. இவ்வாறு இல்லறத்தைச் சிறப்பித்த புலவர் துறவறத்தைப் பற்றி யாது கூறுகிருர் என்று பார்ப்போம்.

" அடல்வேண்டு மைந்தின் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு "

யாவரும் போற்றும்படி இல்வாழ்வில் ஈடுபட வேண்டுமென்று பணித்த தெய்வப் புலவரே, யாவற்றையும் துறந்துவிட வேண்டுமென்றுங் கூறினர். அதாவது ஐம் பொறிகளால் நுகரப்படும் இன்பங்கள், அவ்வின்பங்களை யூட்டவல்ல பொருள்கள், முதலியவற்றை நீக்குவதுதான் உண்மையான துறவு என்ருர்.

நம்முடைய பொய்யில் புலவர் தாயுள்ளத்தையும், தந்தையுள்ளத்தையும், நட்பு உள்ளத்தையும், ஒழுக்க உள்ளத்தையும், இரக்க உள்ளத்தையும் ஒருங்கே அமையப்பெற்றவராவார். அவருடைய நூலை ஆழ்ந்து படித்தால் நாம் உயர்வடைவது திண்ணம். படிப்பது மட்டுமல்ல, படித்தவாறு ஒழுகுதலும் வேண்டும். அதற்காகப் பல கழகங்களை ஏற்படுத்தி, முறையாகப் பாடஞ் சொல்லவோ அல்லது சொற்பொழிவுகள் நிகழ்த்தவோ வசதியளித்தல் நம் கடமையாகும். 1330 குறள்களையும் கூருவிடினும், அதிகாரத்துக்கு ஒன்று வீதம் கூறினுலும் போதுமானது. அவ்வாறு கூறப்படும் 133 குறட்பாக்களில் கருத்தறிந்து ஒழுகினுல் நாம் நல்வாழ்வு எய்துதல் திண்ணம்.

" பாலெல்லாம் நல்லாவின் பாலாமோ பாரிலுள்ள
நூலெல்லாம் வள்ளுவர்செய் நூலாமோ—நூலிற்
பரித்தவுரை யெல்லாம் பரிமே லழகன்
தெரித்தவுரை யாமோ தெளி."

# சமய ஆக்கம்

(கவிஞர், அ. கு. ஆதித்தர்)

எல்லாரும் ஈரைந்து மாதம் சிறையிருந்தார் :
பொல்லா வலியுடனே பூமிவந்தார்—அல்லா,
அரன், புத்தன், ஏசு, அரி, அருகன் பக்தர்
பிரசவநோய் இல்லாரோ பேசு. (1)

சேற்றுப் புனல்நாப்பண் சேர்மேதி போலன்றி
ஆற்றுநீர்த் தூய்மைகொண் டாருண்டோ ?—நோற்றீன்ற
தாயர் பலரும்தம் பாரம் தணந்தன்றே
நோயின்றி வாழ்வார் நுவல். (2)

ஈனும் பொழுதிறந்தோர் எல்லாச் சமயத்தும்
காணுந் தகைமைத்தே கஷ்டமின்றி—ஈன்றெடுத்துப்
பாலூட்டிக் காப்பார் பலசமயத் துள்ளுமுளர் :
மேல்சமய முண்டோ ? மொழி. (3)

அன்னை தரும்பால், நல் லாவின்தீம் பாலருந்தி
மென்மழலை பேசி வளர்ந்ததன்றி—நின்றநிலை
உண்ணு துறங்கா துயர்ந்தோர் உளர்கொல்லோ ?
எண்ணுய் இதைச்சற்றே இன்று. (4)

தொட்டில் கிடந்து தவழ்ந்து நடைபயின்று
முட்டங்கால் தட்டி முன்வீழ்ந்து—எட்டி
அடிஎடுத்து வைக்க அறிந்ததன்றி, அன்றே
நடைதந்த மார்க்கம் நவில் (5)

உண்ட உணவெல்லாம் ஊனும் குருதியுமாய்
நின்று வளர்ப்பேற்றும் யாவருக்கும்—மண்டிபுரை
நீப்பும் யாவருக்கும் நேருவதே ; ஆகையினல்
மேற்பட்டார் யாவர் ? மொழி (6)

பெண் ஆண் இருவருமே சேர்ந்து பிறப்பதன்றித்
தன்னாற் பிறவிதரு மார்க்கமுண்டோ—கண்ணாரும்
அறிவின் நெறிநிற்பார் ஆராய்வார், உண்மை
தெரிவார், பகையார் தெளிந்து. (7)

எல்லாச் சமயத் தவரும் இறப்பதன்றிக்
கல்போல் நிலைத்திருக்கக் கண்டீரோ—வல்லீரே,
ஆவிச் செலவொழித்தல் ஆராயின் யாண்டுமிலை ;
மேவுமோ உம்சமயம் மாண்பு ! (8)

கற்றுச் சிறப்படைவர் ; இன்றேல் கனசெல்வம்
பெற்றுப் பிறர்க்கீந்து பேர்பெறுவர்—உற்றபடி
சமயத்தி னாற்சிறப்பு சாருமோ ? சாரின்,
உமக்குயர்ந்தார் உம்சமயத் தார் ! (9)

சேயுதிப் பின்றித்தம் சிந்தை கவன்றுழல்வோர்,
நோயும் மருந்தும் நுகர்ந்தழிவோர்—ஆயுங்கால்
எச்சமயத் தில்லை ? ஒருபடியே யாவுமாக
உச்சம்ஒன் றாகாதென் றோது (10)

பிறர்மனம் நோகாப் பெருநெறி கைக்கொண்
டறம்பொரு ளின்பம் அடைந்து—மறங்கடிந்து
தெய்வம் துணைசெய்யும் என்றே துணிந்துவினை
செய்துய்தல் சன்மார்க்க மாம். (11)

மக்கள் மகிழ்ந்துய்யக் கண்டோம் பலசமயம் :
துக்கந் தருமாயின், தூய்மை இலதாயின்
அக்கணமே விட்டகன்று, அன்பு அறிவுநெறி
நற்குழுநீர் காண்பதே நன்று. (12)

# ஊசலாட்டம்

(Oscillation)

(திரு. டி. பி. நவநீதகிருஷ்ணன், அண்ணுமலை நகர்.)

எங்கும் எதனிலும் உள்ளவை அலைகள். அலையின் தோற்றுவாய் "ஊசலாட்டம்" (Oscillation) அல்லது துடிப்பு (Vibration) எனப்படுவது. அவ்வாருன இயக்கம் இடைவிட்டவாறு மாறிமாறிக்கொண்டிருக்கும் திசைகளில் முறையே நடந்தேறி வருவது. அத்தன்மையுடைய ஊசலாட்ட இயக்கத்தின் முக்கிய இயல்புகளில் சிலவற்றை உன்னிக் காண்போம்.

முன்னும் பின்னுமாய் அன்றி மேலுங்கீழுமாய் அன்றி அவ்வாருகவே வெவ்வேறு திசைகளிலாய் மாறிமாறிக்கொண்டிருக்கும் அசைவுநிரலே துடிப்பு அல்லது ஊசலாட்டம் எனக் குறிக்கப்படுகின்றது. அங்ஙனம் வயங்கும் பண்டமொன்று இடம் விட்டு இடம் பெயர்ந்துகொண்டிருப்பது. அப்படி அது செல்லும்போது அதை அதன் துவக்க இடத்திற்கு இழுக்கும் போக்குடைய எதிர்வலிமைக்கு ஆட்பட்டவாறிருப்பது. நடுவைப்பினின்று பண்டம் சென்றுள்ள தொலைவுக்கு "திணைவிலக்கம்" (Displacement) என்று பெயர். திணைவிலக்கத்தின் அளவைப் பொருத்த வீதமானபடி எதிர் வலிமையினளவு அமைவதாகும். ஆகலின் பண்டப்பெயர்ச்சி தகைக்கப்பட்டுக் கொண்டு வருவதாகும். துவக்கத்தில் பண்டம் பெற்ற விரைவினளவை யொட்டிய வரையளவான தொலைவுக்கு அது சென்றவுடன் நிற்கின்றது ; ஆனல் நிலைப்பாய் விடுவதில்லை ; எதிர் வலிமையின் இழுத்தலுக்கு ஆட்பட்டு நடுவிடம் நோக்கித் திரும்பிவருகின்றது. நடுவினின்றுள்ள தொலைவு குறைந்துகொண்டே வருகின்றமையால், எதிர் வலிமையினளவும் குன்றிவருகின்றது. பண்டம் நடு வைப்பை அடைந்த தருணத்தில் எதிர் வலிமை அற்றுப்போகின்றது. ஆனல் இயக்க விரைவுடன் நடுவைப்பைப் பண்டம் அடைந்தமையின், அது அவ்வைப்பைக் கடந்துசெல்கின்றது ; அது செல்லும் திசை துவக்கத்தில் சென்ற திசைக்கு எதிர்முகமாயிருக்கும். அப்படி அது செல்லும்போது அத்திசையை யொட்டிய எதிர்வலிமை கூடவே உறுத்தப்படுகின்றது. விரைவு குன்றிவந்து எல்லையளவுத் தொலைவு சென்ற பிறகு பண்டம் மீட்டும் நடுவைப்பை நோக்கித் திரும்பிவருகின்றது. பிறகு மீட்டும் முதல் திசையில் வரையளவுத் தொலைவு சென்று திரும்பிவரலாகின்றது. எனவே, நடுவைப்பு ஒன்றின் இருபுறங்களில் முறையே அமைந்த வரையிடங்களிடை ஆடிவரும் இயல்புடையது "துடிப்பு" அல்லது "ஊசலாட்டம்" எனப்படும் இயக்கம், எனக் காண்கிறேம். புறவாட்ட இடமொன்று நடுவைப்பினின்றுள்ள தொலைவானது இயக்கத்தின் "மாவீச்சு" (Amplitude) எனப்படும். ஊசலாட்டத்தில் அதன் இயக்க விரை

வின் உடன்பிறப்பாய், நடுநோக்கி யிழுக்கும் எதிர்வலிமையும் தோன்றுகின்றது. அதன் அளவு நொடிக்குநொடி மாறிவருகின்றது. பண்ட இயக்க விரைவினளவும் வேறுபட்டு வருவதாகும் ; அதன் " வீற்றுகை " (Accelestion) (விரைவினளவு வேறுபட்டுக்கொண்டிருப்பின், நொடிக்குநொடி ஏற்படும் விரைவுமாற்ற அளவு " வீற்றுகை " எனப்படும்) யும் வேறுபட்டு வருகின்றது.

இன்னும் ஊசலாடும் பண்டமானது தன் வைப்பையும் விரைவையும் பொறுத்து முறையே இருவகை ஆற்றல்களுடையது. அவ்விரு வகை ஆற்றல்கள் " இருப்புத் திற ஆற்றல் (Potential Energy), இகைப்புத்திற ஆற்றல் (Kinetic Energy) என் றவை. இவற்றிடை பரிவர்த்தனங்கள் நடைபெறுகின்றன. அவ்விருவகை ஆற்றல் கள் எவை என்பதையும், ஆற்றல் எனின் பௌதிக நூன் முறையில் எதைக் குறிக் கும் என்பதையும் ஈண்டுக் கூறல் நன்று.

பண்டமொன்று அசையாத நிலைமையிலிருப்பின் அதை இயக்கவாயினும், இயங்கிக்கொண்டுள்ள பண்டமொன்றை நிறுத்தவாயினும், இயக்கப் பண்டத்து விரைவை மாற்றவாயினும் " வலிமை " (Force) உறுத்தப்படுகின்றது. விரைந் தேகிக்கொண்டுள்ள பண்டமொன்றின் மீது " எதிர்வலிமை " உறுத்தப்படுகின்றது எனக் கொள்வோம். பண்டத்தின் விரைவு வரவரக் குறைந்துகொண்டு வந்து முடி வில் அது நின்றுவிடுகின்றது. வலிமை முற்பட்ட நொடியினின்று பண்டம் நிற்புக்கு வரும்வரை, அப்பண்டம் ஓரளவுத் தொலைவுக்கு வலிமையை எதிர்த்து வந்துள்ளது. அப்படி நடைபெறும்போது அது "வேலை"செய்துவந்துள்ளது எனலாம். அவ்வேலையி னளவு வலிமையினளவைத் தொலைவினளவால் பெருக்குவதால் பெறப்படுகின் றது. அவ்வாறுன வேலை செய்யும் திறலை அப்பண்டமானது தன் இயக்க வழியே கொண்டிருப்பது. வேலை செய்யும் திறலே பௌதிக நூன் முறையில் " ஆற்றல் " (Energy) எனப்படுவது. இயக்க நிமித்தமான ஆற்றல் "இகைப்புத்திற ஆற்றல்" (Kinetic Energy) எனப்படும்.

மேடைமீது பண்டமொன்று வைக்கப்பட்டுள்ளது. அந்நிலைமையில் அது தாங் கப்பட்டிருப்பது. அப்படி தாங்கப்படாமல் மேடையோரத்தினின்று அப்பண்டம் விடப் படின் கீழே விழுகின்றது. விழும்போது விரைவடைகின்றது. அந்நிலைமையில் அதை நிறுத்தவேண்டுமாயின் அதை எதிர்த்து வலிமை உறுத்தப்பட வேண்டும். அவ் வலிமையை எதிர்த்து அப்பண்டம் வேலை செய்யும் திறலுடையது. எனவே மேட் டின் மீதிருந்தபோதும் அப்பண்டம், தன் உயரவைப்பு நிமித்தம் வேலை செய்யும் திறன் பொதிந்திருந்தது எனலாம். அவ்வாறுக இடத்தைப் பொறுத்துள்ள ஆற் றல் இருப்புத்திற ஆற்றல் (Potential Energy) எனப்படும்.

இனி ஊசலாட்டத்தின்போது நடைபெற்றுவரும் ஆற்றல் விளைவுகளைக் காண் போம். நடுவைப்பினின்று கிளம்பும் தருணத்தில் பண்டமானது தனது முழுவிரை வைப் பொறுத்த இகைப்புத்திற ஆற்றலுடனிருப்பது ! ஆகவே அப்போது அதன் ஆற்றல் முழுதும் அவ்வகையினதே. அடுத்த நொடியில் அப்பண்டம் சற்றுத்தொலை வுக்குச் சென்றுவிடுகின்றது. எதிர்வலிமையும் உடனே முற்படுகின்றமையின், பண

டத்து இகைப்புத்திற ஆற்றலில் ஓரளவு அவ்வலிமையை எதிர்த்து வேலே செய்யும் பொருட்டுச் செலவிடப்படுகின்றது. எனவே பண்டத்து இகைப்புத்திற ஆற்றலினளவு சற்றுக் குறைகின்றது. ஆனுல் அப்பண்டம் நடுவிடத்தினின்று விலகியிருக்கின்றது. அது செய்த வேலே அதனிலேயே திரட்டப்பட்டுப் பொதிந்ததாகிறது ; அதாவது குறைந்த அளவான ஆற்றல் இகைப்புத்திற ஆற்றலாய்ப் பண்டத்தில் சேமிக்கப்படுகின்றது. பண்டம் இருதிற ஆற்றல்களும் உடையதாகின்றது. செல்லச்செல்ல இகைப்புத்திற ஆற்றலினளவு முறையே குறைந்துகொண்டும் இருப்புத்திற ஆற்றலினளவு மிகுந்துகொண்டும் போகின்றது. வீச்சின் முடிவில் பண்டம் விரைவுற்றதாகின்றமையின் அது இகைப்புத்திற ஆற்றல் இல்லாததாகின்றது. அதன் ஆற்றல் முழுமையும் இருப்புத்திறத்தினதே. பிறகு பண்டம் நடுவைப்பை நோக்கி வருங்கால் இருப்புத்திற ஆற்றல் குறைந்துகொண்டும் இகைப்புத்திற ஆற்றல் மிகுந்து கொண்டும் வருகின்றது. நடுவைப்பைக் கடக்கும் தருணத்தில் அதன் ஆற்றல் முழுதும் இகைப்புத் திறத்ததாகவே யுள்ளது. இவ்வாருகவே மற்ருெரு புறவீச்சிலும் நிகழ்ந்து வருவதாகும்.

இதுகாறும் நான் எடுத்துரைத்துவந்த வகையானது பலவகையினவான துடிப்பு முறைகளில் ஒன்றும். அது "எளிய ஒருங்கிணேத் துடிப்பு" (Simple Harmonic Vibration) எனப்படுவது. அதைத்தவிர இன்னும் பலவகையினவான துடிப்புமுறைகளும் உள. அவற்றில் எதிர்வலிமைக்கும் திணேவிலக்கத்திற்குமான வீதத்தொடர்புகளும் இகைப்புத்திற ஆற்றலுக்கும் இயக்கத்திற ஆற்றலுக்குமான பரிவர்த்தன முறைகளும் பலவாருயிருப்பன.

இகைப்புத்திற ஆற்றல் இருப்புத்திற ஆற்றல் என்ற இரண்டும் இயந்திரவியல் ஆற்றல் ( Mechanical Energy ) என்ற பொது வகையில் அடங்கினவை. இயந்திரவியல் ஆற்றலேயன்றி, சூட்டு ஆற்றல், மின்சார ஆற்றல் இன்னேரன்ன வேறுபல வகைகளும் உள. இவ்வாருனவற்றிடை தக்க பரிவர்த்தனங்கள் ஏற்படலே யொட்டியும் துடிப்புக்கள் நேரிடலாம். எனவே, துடிப்பு அல்லது ஊசலாட்டம் என்றதன் முக்கிய இயல்பு, ஆற்றல் வகை மாற்றங்கள் தக்கவாறு முறையே நடைபெற்றுவரல் என்பதே எனக் காண்கிறேம். இயக்கத்தை யொட்டிய ஆற்றலின் தொகையளவு வேறுபடாது. ஆற்றல் வகைகளே யொட்டிய வீதப் பங்குகளே வேறுபட்டு வருவன.

யாவினும் அமைந்த அலேகளேப்பற்றி அறிதற்குமுன் அலேயை எழுப்பும் ஊசலாட்டத்தின் அடிப்படைத் தகவைத் தெளிவாய்க் கற்றல் தகுமன்றே ? ஊசலாட்டங்களேப்பற்றி அறியப்பட்ட செய்திகள் மிக. அவற்றில் நான் கூறினவை கோடியிலொரு பங்குக்கும் குறைந்தனவாம். ஆயினும் பௌதிக நூன்முறை யொட்டி ஊசலாட்டத்தின் முக்கிய பாங்கு எதுவென்பதை எடுத்துக்காட்டுவதே என் நோக்கமாம். அது சிறிதளவுக்காயினும் ஈடேறியுள்ளது என நம்புகிறேன்.

# பரிமேலழகர்

(திரு. வித்துவான், சி. துரைசாமி, தலைவர், தமிழ்க்கல்லூரி, மயிலம்)

" வள்ளுவர்நூ லன்பர்மொழி வாசகம்தொல் காப்பியமே
தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை—ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி யோராறும்
தண்டமிழின் மேலாந் தரம்."

என்ற பெரியோர் வாக்கை யுன்னி, பரிமேலழக ருரையும் ஏனைய நூல்களைப்போல் சிறந்த தொன்றாகப் பகர்வர் பழைமையோர். வள்ளுவர் நூலுக்குப் பதின்மர் உரை செய்தும் அவைகளுள் தலை சிறந்து நிற்பது பரிமேலழகர் உரையேயாதலின் இங்ஙனம் ஆன்றோர் பலராலும் கூறப்பட்டது. சுருங்கிய சொற்களில் விழுமிய கருத்துக்களைக் கொண்டு குறளே போன்று விளங்குகிறது பரிமேலழகர் உரையென்றால் அது மிகையாகாது. ஆனால், இக்காலத்து அவருடைய உரை பொருத்தமற்றது எனக் கருதிப் பலர் பல குறளின் உரைகளை மறுத்துவருகிறார்கள். அதனுள் ஒன்றை அது சரிதானா என ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாம்.

" இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றி னின்ற துணை "

என்ற குறளுக்கு " மூவர் " என்பது தொகைக்குறிப்புச் சொல்லெனக் கொண்டு மூவர் இன்னார் என்பதைச் சொல்ல வருகின்றார் பரிமேலழகர். அவர் இருந்த காலத்துச் சாதிமதக் கொள்கைகள் நாட்டில் வேரூன்றி இருந்தன. ஏன் ? சங்க காலத்தில்கூடச் சாதிமதக் கோட்பாடுகள் இல்லாமல் இல்லை. தொல்காப்பியத்துள் " மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம் கீழோர்க்காகிய காலமுமுண்டே ","அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்...." " வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை" என்ற பகுதிகளால் சாதிமதக் கோட்பாடுகள் இல்லாமலில்லை என்பது புலனும். "வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும் கீழ்ப்பாலொருவன் கற்பின் மேற்பாலொருவனு மவன்கட் படுமே " என்னும் புறநானூற்றுத் தொடரும் இதனை வலியுறுத்தும். அதனால் அக்கால வழக்குப்பற்றி இல்லறத்தில் வாழ்வான் செய்யவேண்டியன வெல்லாம் வேளாண்மை செய்தற் பொருட்டாதலின் அவன் செய்ய வேண்டிய உபகாரத்தை இன்னதென அறிவிக்கின்றார். அதனால் " இல்லிருந்து அறமியற்றும் பணியை மேற்கொண்ட இல்லறத்தான், இல்லறத்தான் ஒழிந்த மூவருக்கும் உதவி செய்ய வேண்டும் " என்பது வள்ளுவர் கருத்தெனக் கொண்டு, பரிமேலழ

கர் அக்கால நிலேக்கேற்ப " இல்லறத்தில் நுழையாது கல்வி பயிலும் சிறுவர்கள் என்றும் இல்லறத்திலிருந்து மக்களொடு மகிழ்ந்து மனையறங் காத்து மிக்க காம வேட்கை நீங்கித் தலேவனும் தலேவியும் தம்பதி நீங்கித் தொலேவில் சுற்றமொடு துறவறங் காத்தற்குரிய நிலேயிலுள்ளவர்கள் என்றும் முற்றுந்துறந்து முனிவர்க ளாகிய துறவறத்தினர் என்றும் மூவகைப்படுவர் " என்னும் கருத்துட் கொண்டு " மூவர் " என்ருர் என்று உரை கூறுகின்ருர்.

ஆனல்," துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும் இல்வாழ்வா னென்பான் துணே " என்ற குறளே நோக்கி, அதற்குப் பரிமேலழகர் கூறும் உரைக் கருத்தை உணராது, துறந்தார் என்று ஆண்டு கூறப்பட்டிருப்பதால் மூவர் என்ப தில் துறந்தோரைச் சேர்க்கலாகாது என்று முதல் குறளுக்குத் தமக்குத் தோன் றியவாறு வேறு பொருள் படைத்துக் கொள்வர் பிற்காலத்தோர். ஆனல், பரிமே லழகர்," முதற் குறளில் இல்லறத்தான் இல்லறம் ஒழிந்த ஏனைய மூன்று நிலேயி லுள்ளவர்களுக்கும் துணே என்றவர் இக்குறளில் இல்லறத்தார்களுக்கும் துணே யாவன் என்று கூறுகின்ருர் வள்ளுவர் " என்று கொண்டு, துறந்தார் என்பதற்கு ஆதரவானவரால் துறக்கப்பட்டவ ரென்றும் துவ்வாதவர் என்பதற்கு வறுமையுற் றவர் என்றும் இறந்தார் என்பதற்கு அநாதையாக விளிந்தவர் என்றும் உரை கூறுகிருர்.

இக்காலத்தும் பொன் பொருள் மனேவி முதலிய உடையவர்கள் யாதாமொரு காரணத்தால் வெளிப்போந்து சின்னுள் ஐயமேற்றலும் பொருளில்லாது வறுமை யுற்ருேர் ஐயமேற்றலும் கண்கூடு. அவர்களுக்கும் உதவி செய்யவேண்டும் என்பது தானே "இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு" என்னும் குறளின் கருத்து. இக்காலத்து அரசாங்கம் மேற்கொண்டு செய்துகொண்டு வருகிற " அனுதைப் பிணத்தை யடக்கம் செய்தல் " என்னும் பணி முற்காலத்து இல்லறத்தார் செய்யவேண்டிய அறமாகக் கூறப்பட்டிருந்ததாத லின் அதனேயும் கருதி இறந்தார் என்று கூறினுர்.

எனவே தம் காலத்துப் பழக்கவழக்கங்களே யொட்டி உரை செய்த பரிமேலழ கர், முதற் குறளில் இல்வாழ்வான், இல்வாழ்க்கைக்கு முன்னுள்ள நிலேயொன்று இல்வாழ்ந்தபின் உள்ள நிலேமை இரண்டு என்ற மூன்றையுமே கருதி அந்நிலே யில் இருந்தவரை " மூவர் " என்றும், அடுத்த குறளில் இல்லறத்திலிருந்தும் இல் வாழ்க்கையின் பயனே யடையாதவர்கள் என்றும் கருதி உரை கூறும் நயம் பாராட் டத்தக்கது.

# பத்தொன்பதாம் நூற்ருண்டின் தமிழ் நாடகங்கள்

(திரு. தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர், M.A., B.L., M.O.L.)

சிலப்பதிகாரத்தினை நாடகக் காப்பியம் எனக் கூறுவது வழக்கம். அகத்திணைப் பாடல்களும் புறத்திணைப் பாடல்களும் நாடக வழக்கில் வரும் கூற்றுக்களாகவே வருவதனைச் சங்க இலக்கியத்தில் காண்கிருேம். எனவே, மிகப் பழைய காலந் தொட்டே நாடக வழக்கு மக்கள் மனத்தினைக் கவர்ந்தமை புலனுகிறது. சிலப்பதி காரத்தில் வரும் சாக்கியர் கூத்தென்பதே மலையாளக்''கதைக்களி''யாக வழங்கு கிறது என்பர். கதைக்களி பேச்சின்றி நிகழ்வது. தமிழ்நாட்டுத் தெருக்கூத்தோ பேச்சும் பாட்டும் பாடிக்கொண்டே ஆடும் கூத்தாகும். எனவே பழந்தமிழ்க் கூத்தின் இயல்பு இங்கு மாறியேனும் விளங்கக் காணலாம்.

சிலப்பதிகாரத்திற்குப் பின்னரும் நாடகங்கள் தமிழ்நாட்டில் பெருவழக்காக இருந்தன. வடமொழிப் பாசரது (Bhasa) நாடகங்கள் தென்னுட்டில்தான் இன்று காக்கப்பெற்றுள்ளன. அப்பர் பெருமானுர் தடுத்தாண்ட மஹேந்திரவன்ம பல்லவ அரசர் " மத்த விலாசம் " என்ற களிக்கூத்து நாடகம் ஒன்று எழுதி யுள்ளார். சோழர்கள் அரசர்க்கரசராகத் தமிழ்நாட்டினையும் பிறநாட்டினையும் ஆளவந்த இடைக்காலத்தில், சோழ அரசர்களது வரலாற்றைக் காவியமாகப் பாடுவதோடு நாடகமாக ஆடும் வழக்கமும் தொடங்கியது. கல்வெட்டுக்களிலிருந்து நாம் அறி யும் இராசராச நாடகம் இந்த வகையைச் சேர்ந்ததாகும். வரலாற்று வகையான தனி மக்கள் வாழ்க்கையை விளக்கும் நாடகங்கள் இவ்வாறு எழுந்தன. இலங்கை யில் பூத தம்பி விலாசம் என்பது பத்தொன்பதாவது நூற்ருண்டில் பலராலும் போற்றப்பெற்றதாகும். இது பத்தொன்பதாவது நூற்ருண்டிற்கு முன் வாழ்ந்த பூததம்பி என்பாரின் வரலாற்றைக் கூறுவதாகும். தேவசகாயம்பிள்ளை ''வாசகப்பா'' என்பதனைப் பின்னர் ஆராய்வோம்.

கூத்தினை " வேத்தியல் " என்ற உயர்ந்த நாடகமாகவும் " பொது வியல் " என்ற இழிந்த நாடகமாகவும் இருவகையாக ஆராயலாம். பொது என்பதற்கு இழிவு என்ற பொருள்." பொது மகளிர் " என்ற சொற்ருெடரில் காணலாம். "இழி வான பொதுமக்களின் கூத்து " என்றும் பொருள் கூறலாம். இதனைக் கருங்கூத்து என்று கலித்தொகை என்ற பழந்தமிழ் நூல் வழங்குகிறது. நம் நாட்டு நாடகங் கள் இசைப்பாட்டு வடிவானவை. சிந்துகள் முதலியன மக்கள் மனத்தினைக் கவர்ந் தன. இத்தகைய பாடல்கள் கலம்பகம் முதலிய இலக்கியங்களில் வருவதோடு "பாடுதுறை" யில் நிறைய வரக் காண்கிருேம். பள்ளுப்பாட்டு, தட்டாரப்பாட்டு,

வண்ணுரப்பாட்டு என்று பலவகைப் பாட்டுக்கள் வழங்கி வந்துள்ளன. ஆனுல் இவை ஏதோ ஒவ்வொரு நிலையில் பாடுவனவாக அமைந்தவை. இவை, தொடர்கதையாக ஒவ்வொருவரும் பாடுவதாக வந்தால் நாடகமாகிவிடும். குறவஞ்சி நாடகமும், பள்ளு நாடகமும் நொண்டி நாடகமும் இவ்வாறு வளர்ந்து 18-ம் நூற்ருண்டில் சிறந்து விளங்கின. திரிகூடராசப்பக் கவிராயரின் குற்ருலக் குறவஞ்சி, மாரிமுத்துப்பிள்ளை யின் நொண்டி நாடகம் முதலியன இந்த வகையில் தலைசிறந்தனவாம். மக்கள் தங்களுக்கு அடங்கியவர்கள் வாழ்க்கையில் கொண்ட ஊக்கத்தையும் அன்பையும் இவை தெளிவுறுத்துகின்றன. மேன்மக்கள் வாழ்க்கையில் தோன்றும் குற்றம் குறைகளைக் கூறுவது அருமையே ஆம். ஆனுல் கீழ்மக்கள் வாழ்க்கையிலமைத்துக் கூறுவது எளிது. ஆகவே வசைபாடுவதற்கு இவை தக்க வழியாக அமைந்தன. உள்ளதனை உள்ளவாறு கூறுவதற்கு இடம் ஏற்பட்டது. ஆதலின் நாடக வளர்ச் சிக்கு இவையே பெரிதும் பயன்பட்டன. பிற்கால நூல்களின் பெருமை வெறுஞ் சொல்லழகேயாம். இக்குறைபாடோ அழகோ பிற்கால நாடகங்களிலும் காணலாம்.

பத்தொன்பதாவது நூற்ருண்டிலும் கொட்டையூர்ச் சிவக்கொழுந்து தேசிகர், "சரபோசிக் குறவஞ்சி" யை இயற்றினுர். இப்புலவரும் செம்பாகமாகப் பாடுவதில் வல்லவர். இவர் பாடிய அரசனும் அந்நாளில் சிறந்து வாழ்ந்த தஞ்சை அரசன். இந்த நூல் இருபதாம் நூற்ருண்டில் தமிழ்ப் பேராசிரியராம் சாமிநாத ஐயர் வழியே வெளிவந்த பெருமையைப் பெற்றுள்ளது. அவருடைய முன்னுரை கொண்டு இந்த நூலின் பெருமைகளை அறியலாம். முக்கூடற் பள்ளு நாடகமும் சிறந்ததேயாம். மதுரைக் கவிராயர் நொண்டி நாடகம் அப்துல்கரீம் என்ற இஸ்லா மியர் இயற்றியது. இது பலமுறை 19-ம் நூற்ருண்டில் பதிப்பிக்கப்பெற்றது. பிற மதத்தினரும் இந்த வகையான நாடகங்களைக் கையாண்டனர் என்பது இதனுல் தெளிவாகும். எனவே இந்துக்களது இலக்கியமாக மட்டும் ஒழியாது, நாடகம் தமி ழரது பொது இலக்கியமாகச் சிறந்தது எனலாம். அங்கமுத்துப் புலவர் என்பவர் பொய்கைப் பள்ளு என்பதனை 1891-ல் வெளியிட்டார். ஆதலின் இந்த நூற்ருண்டு முழுவதிலும் இத்தகைய நாடகங்கள் தமிழ் மக்களின் மனத்தினைக் கவர்ந்துவந் தன எனலாம். இலங்கையும் இதில் ஈடுபட்டது. "நகுமலைக் குறவஞ்சி" என்பதனை அந்த நாட்டு விசுவநாத சாத்திரியார் இயற்றினுர்.

நம் நாட்டுக் கதைகளுக்கு எல்லாம் தத்துவார்த்தம் என்னும் உண்மைப் பொருள் கூறுவது ஒரு வழக்கம். குறவஞ்சி நாடகத்தினை இவ்வாறு பயன்படுத்து வதனையும் எதிர்பார்த்தல் இயல்பே. எதிர்பார்ப்பதற்கு ஏற்ப முருகேச பண்டிதர் 1875-ல் தத்துவக் குறவஞ்சி இயற்றினுர். குறவஞ்சி மட்டுமேயல்லாமல் நாடகமே பொதுவாக இந்த வகையிற் பயன்படுவதனையும் காண்கிருேம். 1883-ல் வேலாயுத முதலியார் இயற்றிய ஆருதாரா விலாசம் என்பது யோக சம்பந்தமான தத்துவ நாடகமாகும். 1886-ல் இராமாநுச முதலியார் "காஞ்சிபுரம் கருக்கில் அமர்ந்தவர் திருவருள் விலாசம்" என்ற மதவகையிற் பட்டதொரு நாடகம் இயற்றினுர்.

பள்ளர், குறவர் முதலியோர் வாழ்க்கையைப் பின்பற்றி எழுந்த நாடகங்களைக் கண்ட வேறு சில புலவர்கள் பிற கீழ்ச்சாதியாரின் வாழ்க்கையைப் பின்பற்றி நாடகம்

இயற்றினுர்கள். V. G. கோவிந்த கவிராயர் 1899-ல் ஒட்ட நாடகம் இயற்றினுர். இவருக்கு இந்த வழி காட்டியவர் 1874-ல் சோகிகளைப் பின்பற்றிச் சோகி நாடகம் எழுதிய சுப்பராய முதலியாராவர். சாதியைப்பற்றி எழுந்த இந்த நாடகங்களைக் கண்டதும், சாதி பெருமை கூறிவந்த இந்த நூற்றுண்டில் அந்த வகையில் ஒரு நாடகமும் எழுந்தது. " காராளர் கார்காத்த நாடகம் " என்பதனைக் கிருஷ்ணசாமி செட்டியார் 1893-ல் இயற்றினுர். இது கார்காத்த வேளாளரைப்பற்றியதாகக் கர்ண பரம்பரையாக வழங்கியதனை நாடகமாக்கியதாகும்.

குறவஞ்சி முதலியவாக மேலே விளக்கிய நாடகப்பகுதிகள் பிறவகை நாடகங்களிலும் வரக் காண்கிறேம். " துரோபதைக் குறவஞ்சி ", " மின்னெளியாள் குறவஞ்சி" எனப் பல வெளிவந்தன. மார்க்கண்டேயர் நாடகம் முதலியவற்றில் குறத்தி குறம்கூற வருவதும், தோட்டி தனது மனைவியோடு பேசிப்பாடுவதும் வரக் காண்கிறேம். குற்றுலக் குறவஞ்சியில் வரும் பாக்களே இவற்றில் பொன்னேபோலப் போற்றிக் கையாளப்பெறவும் காண்கிறேம். கிருஷ்ண நாடகங்களில் இடையர்களும் காத்தவராயன் நாடகத்தில் சோகியர் முதலியோரும் தம் குடியியல்பை விளக்க வருகின்றனர்.

இப்படியே வாய்வழியாக வழங்கிவரும் நாடோடிக் கதைகள் பல. இவற்றைக் கடவுள் கூறியன எனப் போற்றுவார் இல்லை. ஆதலின் அவற்றை ஆசிரியர்கள் வேண்டியவாறு படைத்தும் காத்தும் அழித்தும் பாடுதல் கூடும். இங்குத்தான் நாடக வளர்ச்சிக்கு இடம் உண்டு. தமிழ் இலக்கியங்களில் வழங்கும் கதைகள் ஓர் உலகம் எனலாம். இவையோ வேறேர் உலகம் என்றே கூறிவிடலாம். கீழ்மக்களுடைய கடவுட் கொள்கையை அறிய இவை சிறந்த வழியாம். இந்த உலகில் புகுந்துலவிய சென்ற நூற்றுண்டைய தமிழ்ப் புலவர்கள் மக்களொடு ஒத்துவாழ்ந்தவர்களாவார்கள். இப்படிப் பலவகையாலும் சிறந்த நாடகங்களை ஆராய்தல் பெரும் பயனளிப்பதாம். சித்திராங்கி கதை தமிழர் மனத்தினைக் கவர்ந்தது போலும். அப்பாவுப்பிள்ளை 1878-ல் " சித்திராங்கி விலாசமும் ", பரசுராமகவி 1874-ல் " சித்திராங்கத விலாசமும் " எழுதினுர்கள். மதுரைவீரனை வழிபடுவார் உள்ள நாட்டில் " மதுரைவீரன் விலாசம் " நாடகமாக வழங்கிவருவதனைச் சொல்லவேண்டுமா ? அழகியசுந்தரம்பிள்ளை எழுதிய " மதுரை வீரன் விலாசம் " மிகப் பழையது. குட்டி உபாத்தியாயர் 1870-ல் மதுரை வீர விலாசம் எனப் புதியது ஒன்றை எழுதி வெளியிட்டார். ஆரவல்லி நாடகம் இன்று பேசும்படமாக வழங்குகிறது. இந்தக்கதையும் தமிழ் மக்கள் விரும்பியதேயாகும். மீனுக்ஷிசுந்தரதாசர் 1888-ல் ஆரவல்லி சூரவல்லி நாடகம் எழுதினுர். பெண்ணை மறக்குடி மங்கையாக வைத்து மறத்தினைப் பாராட்டுவது இல்லாண் முல்லை என்ற துறைப்பாடல்களில் சங்ககாலம் முதல் காணலாம். அல்லியின் கதையும் பவளக்கொடியின் கதையும் ஆரவல்லி கதை போன்றவையே. இவை அர்ச்சுனனேடு தொடர்பினைப் படைத்துக் கதையிற் புகுத்துவனவும் ஆம். பிறநாட்டில் வழங்கும் கதையைத் தமிழ்ப்படுத்தும் வகையில் இதுவும் ஒருவகை. தியாகராயபிள்ளை என்பார், 1893-ல் பவளக்கொடி கதையினை நாடகமாக ஆக்கித்தந்தார். வையாபுரிப்பிள்ளை எழுதிய நல்லதங்கை நாடகம் தமிழ்நாட்டில் வழங்கிய மற்றெரு கதையைக் கூத்துநூலாக ஆக்கித்தந்ததாகும்.

காத்தவராயன் நாடகம் முதலியனவும் 19-ம் நூற்றுண்டிலே வழங்கியனவே. இவற்றில் பல 20-ம் நூற்றுண்டில் அச்சில் வெளியாயின. பல வெளியாகாமலே மறைந்தன. ஆயிரக் கணக்கான நாடகங்கள் ஊர்கள் தோறும் வேனிற்கால இரவில் தெருக்கூத்துக்களாகத் தமிழ்நாட்டு மக்கள் மனத்தினை மகிழ்வித்து வந்திருத்தல் வேண்டும். அச்சான நூல்கள் கிடைப்பது அருமையாயிற்று. 19-ம் நூற்றுண்டின் முற்பகுதியில் அச்சான நூல்களைப் பதிவுசெய்ய வேண்டும் என்ற சட்டம் இருந்ததில்லை. மர்டாக் (Murdach) என்பவர் அக்காலத்துத் தமிழ் நூல்களில் அச்சாகியவற்றைப்பற்றி ஆராய்ந்து தொகுத்த நூல் ஒன்றுமே இந்த இருள் உலகில் சிறிது ஒளிவீசி நிற்கிறது. பின்னர் அச்சாகிய நூல்கள் சில லண்டன்மாநகரத்துக் காட்சிச்சாலையில் உள்ள நூல் நிலையத்தில் இடம்பெற்றன. அந்த நூல் நிலையப் பட்டி கொண்டு அவற்றை அறியலாம். பதிவு செய்யவேண்டும் என்ற சட்டம் வந்தபின் வெளிவந்தவற்றை அரசியலார் பதிப்பிக்கும் பட்டிகொண்டு அறியலாம். திரு. ப. சம்பந்தமுதலியார் அவர்கள் நாடக நூற் பட்டி ஒன்று குறித்துவைத்துள்ளார். சென்னை மயிலாப்பூரில் சோமசுந்திரம்பிள்ளை என்ற தமிழறிஞர் பழந்தமிழ் அச்சு நூல்களைத் தொகுத்துவைத்துள்ளார். பவானந்தர் கழகம், மதுரைத் தமிழ்ச்சங்கம், சரஸ்வதி மஹால் புத்தக நிலையம், அண்ணுமலைப் பல்கலைக்கழக நூல் நிலையம், திரு சம்பந்தமுதலியார் அரிதிற்றேடித்தந்த நாடக நூல்களிற் சில கிடைக்கும் சுகுணவிலாச சபையின் நூல் நிலையம், வேலூர் கிருஷ்ண ஐயர் அவர்களின் நூல் நிலையம், அடையாறு நூல் நிலையம் முதலியவற்றை என்னுடைய ஆராய்ச்சி மாணவர்களில் 19-ம் நூற்றுண்டின் இலக்கியங்களைப்பற்றி ஆராயும் திரு. சதாசிவனும் 19-20-ம் நூற்றுண்டின் தமிழ் நாடகங்களை ஆராயும் திரு. அருணசலனும் சென்று நேரிற்கண்டு மேற்கண்ட பட்டிகளோடு ஒப்பிட்டு நூறு நாடகங்கள் 19-ம் நூற்றுண்டில் அச்சானவை எனத் தொகுத்து உதவினர்கள். அவர்கள் ஆராய்ச்சியை அடிப்படையாகக்கொண்டு இந்தக் கட்டுரை எழுதப்பெறுகிறது. அச்சாகியவற்றில் நமக்குக் கிட்டியவை நூறே ஆயினும் எழுதப்பெற்றவை ஐந்நூற்றிற்கும் குறையாமல் இருக்கலாம்.

வாய்வழியே வழங்கிவந்த கதைகளைப்போல வரலாற்றுக்கதை போன்றவையும் வழங்கிவந்துள்ளன. சோழ விலாசம் என்பது சோழன் கதையைக் கூறுவது. இதனை அப்பாவுபிள்ளை 1898-ல் நாடகமாக எழுதி வெளியிட்டார். தேசிங்கு இராசன் கதை தமிழ்நாட்டிலுள்ள செஞ்சிக்கோட்டையில் வழங்கிய அரசனது கதை. ஆதலின், அக்கதையும் தமிழர் மனத்தினைக் கவர்ந்துள்ளது. மதுரை முத்துக்கவி என்பவர் 1869-ல் தேசிங்குராச விலாசம் என்ற நாடகத்தையும் வீரபத்திர ஐயர் என்பவர் தேசிங்குராச நாடகம் என்பதனையும் இயற்றி வெளியிட்டார்கள். பின்னுளில் வழங்கிய நாலு மந்திரி கதையும் 1872-ல் நாடகமாக வெளிவந்தது. மந்திரி என்ற பெயர் கொண்டு இதனை வரலாற்று நாடகம் என மருளுதல் ஆகாது. இது நாடோடிக் கதையை நாடகமாக எழுதியதே ஆகும்.

இராமாயணக்கதை பாரதக்கதை புராணக்கதை—முதலியனவும் பெரு வழக்கில் இருந்தன. அவையே இல்லாமல் தமிழ் நாட்டில் எழுந்த புராணக்கதைகளும் வழங்கின. திருவிளையாடற்புராணம், தல புராணங்கள் என்பன இத்தகையனவாம்.

பழைய நாடோடிக்கதைகள் இவ்வாறு மிகப்பழைய காலத்திலேயே புராணங்களிற் புகுந்தன. வரலாற்று வகையைச் சேர்ந்த கதைகள் பெரிய புராணத்தில் வந்துள் ளன. கந்தபுராணம் சைவர்கள் கொண்டாடும் புராணமாகும். வள்ளித்திருமணம் முதலியன தமிழ்நாட்டுக் கதைகளாகும். கந்தபுராணக் கதைக்கும் இராமாயணக் கதைக்கும் பல ஒற்றுமைகள் உண்டு.

இராமாயணக்கதை இராம நாடகமாக வழங்கிவந்தது. அருணாசலக் கவிராயரின் இராமநாடகம் எத்தனையோ முறை அச்சிடப்பட்டுள்ளது. சீதாகலியாணம் எத்தனை முறை தமிழ்நாட்டில் நடைபெறுகிறது! 1889-ல் சீதாகலியாணம் என்ற நாடகத்தை வேம்பம்மாள் இயற்றினர். பெண்களும் நாடக ஆசிரியர்களாக வரும் காட்சி 19-ம் நூற்றுண்டில் இவ்வாறு தோன்றுகிறது. "குசலவ நாடகம்" இராமாயணம் பிறந்த வரலாற்றினைக் கூறுவது. இதனை 1873-ல் வேங்கடாசல முதலியார் இயற்றினர். குசலவ நாடகம் எனப் பழையதொரு நாடகம் உண்டு.

இராமாயணத்திற்கு அடுத்துப் பாரதம் எங்கும் ஏதேதோ வடிவிலே வழங்கி வருகிறது. 19-ம் நூற்றுண்டில் நாடக இலக்கியம் இயற்றியவர்களில் பெயர்பெற்ற இராமச்சந்திர கவிராயர் " பாரத விலாசம் " இயற்றியுள்ளார். அதுவே அந்தநாளைய நாடகங்களில் தலைசிறந்த எடுத்துக்காட்டாக இன்றும் விளங்குகிறது எனலாம். அப் பெரியார் சூது, துகில் உரிதல், நச்சுப்பொய்கை முதலிய பகுதிகளை நாடகமாக்கி உள்ளனர். இராமநாடகக் கீர்த்தனைபோலப் பாரதநாடகக் கீர்த்தனையும் சென்னை யில் வாழ்ந்த சிங்காரமுதலியார் ஆதரவில் வெளிவந்தது. வேலாயுதப் புலவர் என்பவரும் பாரத விலாசம் எழுதியுள்ளார். அர்ச்சுனன் தவசு, நச்சுப் பொய்கை முதலிய பாரதக்கதைப் பகுதிகள் இதிலும் நாடகமாக அமைக்கப்பெற்றுள்ளன. 1881-ல் சரவண பண்டிதர் பாரத விலாசம் எனப் பெயர்வைத்துத் துகிலுரிதல் பகுதியை நாடகமாக்கினர். சபாபதி முதலியார் பாரதகாப்பியம் என்பதனை இயற்றி ஞர். 1882-ல் இராமாநுச சுவாமிகள் ஸ்ரீ மகா பாரத விலாசம் எனப் பெரிய பெய ருடன் ஒரு நாடகம் வெளியிட்டார். அரக்குமாளிகை என்ற நாடகம் பழையதாக வழங்கிவந்துள்ளது என மர்டாக் என்பார் தெரிவிக்கின்றார். 1889-ல் கிருஷ்ணப் பிள்ளை என்பார் 18-ம் போர் நாடகம் வெளியிட்டார். 1891-ல் இரத்தினசபாபதி முதலியார் துரௌபதி துகிலுரிதல் நாடகம் வெளியிட்டார். 1890-ல் வெளிவந்த தர்மபுத்திரர் நாடகம் என்பது யாழ்ப்பாணத்தில் சுவாமிநாத முதலியார் இயற்றி யது. பிறபகுதிகளை நாடகமாக்கும் முயற்சியில் பிறரும் ஈடுபட்டனர். சயிந்தவ நாடக அலங்காரம் என்பது கிருஷ்ணப்பிள்ளை என்பவர் 1895-ல் இயற்றியதாம். 1897-ல் கன்னைய நாயுடு கீசக விலாசம் என்பதனை இயற்றினர். பாண்டவர்கள் கலியுகம் பிறந்ததும் வைகுந்தம்போகும் கதையினைக் கலியாணசுப்பிரமணிய ஐயர் தரும நாடகம் என 1889-ல் எழுதினர். சிறு சிறு பகுதிகளையும் நாடகமாக ஒட்டிக்காட்டும் வன்மை இவ்வாறு பெருகிவரக் காண்கிறோம்.

பாரதத்தினில் வரும் கிளைக்கதைகள் முன்னெல்லாம் காப்பியமாக வந்தவை. இப்போது 19-ம் நூற்றுண்டில் நாடகமாக வரக் காண்கிறோம். நளன்கதை சிலப் பதிகாரம் தொட்டு தமிழ்நாட்டில் வழங்கிவரும் கதை. நளவெண்பாவையும் நைட

தத்தினையும் தமிழ்நாடு கற்றுக்களித்ததன்றே? அரிச்சந்திரன் கதையோ அரிச்சந்திரன் புராணம் வெளிவந்ததுமுதல் பலர் மனத்தினையும் உருக்கிவருகிறது. சகுந்தலை வரலாறு இந்தியரது பெருமைபெற்ற நாடகம் எனக் காளிதாசர் வழியே உலகம் பாராட்டுவதொன்றுகும். இவையனைத்தும் தமிழ்நாடகங்களாக வெளிவந்தன. இராமச்சந்திர கவிராயர் சகுந்தலை விலாசம் எழுதியுள்ளார். லக்ஷ்மி அம்மாளும் 1887-ல் சகுந்தலை விலாசம் எழுதியுள்ளனர். நாடக ஆசிரியராக விளங்கும் இரண்டாவது பெண்மணியாவர் இவர். நளன் கதையை நோக்கினுல் 1871-ல் கிருஷ்ணப்பிள்ளை தமயந்தி நாடகம் எழுதியிருக்கக் காண்கிறேம். 1877-லும் இது பதிப்பிக்கப்பெற்றது. அண்ணுசாமி முதலியார் எழுதிய நள விலாசம் மிகப்பழையதாகும். 1887-ல் தாமோதர முதலியார் நளவிலாசம் எழுதினுர். கிருஷ்ணசாமிபிள்ளை நள நாடகம் என்பதனை 1876-ல் வெளியிட்டார். இது கிருஷ்ணப்பிள்ளை எழுதிய நளநாடகத்தின் வேறு பெயரோ அல்லது புது நூலோ என்பது தெரியவில்லை.

வீரச்சுவைக்கு இரணியன் கதைபோல, அவலச்சுவைக்கு அரிச்சந்திரன் கதை 19-ம் நூற்றுண்டில் மிகப்பழக்கத்தில் இருந்தது எனலாம். 1883-ல் சத்தியபாஷா ஹரிச்சந்திர விலாசம் என அப்பாவுபிள்ளை எழுதியது வெளியாகியது. 1895-ல் பத்ரசாமி செட்டியார் அரிச்சந்திர நாடகம் ஒன்று வெளியிட்டார். 1874-ல் அரிச்சந்திர விலாசம் என்பதனை வேங்கடராம உபாத்தியாயர் எழுதினுர். அரங்கப்பிள்ளை கவிராயர் இயற்றிய அரிச்சந்திர விலாசம் 1875-ல் வெளியாயது. வரதராசலு நாயுடு 1875-ல் அரிச்சந்திர நாடகம் இயற்றினுர். நரசிம்ம நாயுடு இயற்றிய அரிச்சந்திர நாடகமும் அப்போது அச்சாகியது.

தமிழ்நாடு கற்பினையே கடவுளாகப் போற்றுவது. சிலப்பதிகாரம் அன்றே தமிழரது தலைசிறந்த காவியம். சாவித்திரியின் கதையும் கற்பின் பெருமையைப் பேசுவதேயாம். 1886-ல் கோவிந்தசாமி ராவ் என்பாரது சாவித்திரி நாடகம் அச்சாகியது. 1890-ல் சுப்பிரமணிய சாத்திரியார் சாவித்திரி நாடகம் ஒன்று எழுதி மலையாள எழுத்தில் வெளியிட்டார். ஈதொரு வியப்பேயாம். இந்த நாளைய தமிழ் நாடகங்கள் மலையாள தேசத்திலும் தெலுங்கு தேசத்திலும் தமிழர் வாழ்ந்ததாலோ, தமிழ் நாடகம் சிறந்ததாலோ, தெலுங்கெழுத்திலும் மலையாள எழுத்திலும் அச்சிட்டு வழங்கப்பெறக் காண்கிறேம். இந்தச் சுப்பிரமணிய சாத்திரியார் எழுதிய சாவித்திரி நாடகமும் மீனுக்ஷி நாடகமும் தமிழ் மொழியேயாயினும் மலையாள எழுத்தில் வெளியானவை. இந்திரசபா, நூதன பத்மினி சபா, பெரிய இந்திர சபா என்பன தமிழ்மொழியேயாயினும் தெலுங்கு எழுத்தில் அச்சிடப்பெற்றன.

பாரதத்தில் வரும் சந்தனு, ஊர்வசியை மணந்து கொள்வதனை இந்திரசபா என்ற புதுவகை நாடகமாக அப்பாவுப்பிள்ளை 1886-ல் எழுதி வெளியிட்டார். இந்திரனது சபையில் ஊர்வசி நடனம் நிகழுவதால் இந்தப் பெயர் பொருத்தமேயாம் என முன்னுரையில் அப்பெரியார் கண்டுள்ளார். இந்த நூல்தான் சபா என்ற பெயரோடு முதல்முதல் வெளிவந்தது. நாடகங்களில் நடனமாடுவதும் பெருவழக்காகியது. நடனகலையில் தமிழரின் ஊக்கம் வளர்ந்துவருவதனை இது குறிக்கின்றது எனலாம். தெருக்கூத்தாகவன்றி மேடைமேல் நாடகங்கள் ஆடவந்தமையும் இத

ஞல் விளங்குகிறது எனலாம். சபா என்ற பெயரோடு பல நூல்கள் வெளிவந்துள் ளமையால் முதல்முதல் இந்தப் பெயருடன் தோன்றிய இந்த நூல் பெரிதும் பாராட்டப்பட்டது என்பது வெளிப்படை.

புரூரவச்சக்கரவர்த்தியின் கதை புரூரவ வெண்பா என்ற தமிழ்க்காப்பியமாக வெளிவந்துள்ளமையால் தமிழ் உள்ளத்தினைக் கவர்ந்த இக்கதை 1897-ல் V.G. இராமச்சந்திரப் புலவர் வாயிலாகப் புரூரவச்சக்கரவர்த்தி நாடகம் என்ற வடிவில் வெளிவந்துள்ளது.

வைணவர் போற்றும் கடவுளாகிய கண்ணன் வரலாறு வருவதால் பாரதம் அவர்களிடையே சிறந்து விளங்குகிறது. பாகவதமோ திருமாலின் கதையினையே கூறுவது. வைணவர்கள் இதனைத் தம் கண்ணேபோலப் பாராட்டுவார்கள். கண்ணன் திருவிளையாடல்களில் சிலவற்றைச் சலக்கிரீடை என்ற நாடகமாக 1881-ல் ஒருவர் எழுதினர். 1890-ல் வேங்கடராம ஐயர் கிருஷ்ண நாடகம் இயற்றினர். ஶ்ரீநிவாச ஐயங்கார் என்பவர் 1897-ல் கிருஷ்ணகோபிகா விலாசம் என்ற நாடகத்தினை வெளியிட்டார். கோபால விலாசம் என்பது 19-ம் நூற்றுண்டில் தோன்றிய மிகப்பழைய நாடகம். குசேலோபாக்கியானம் தோன்றியது இந்த நூற்றுண்டில்தான் என்பதனை நினைவில் வைத்துக்கொண்டால் குசேலனுர் கதை நாடகமாக வழங்கவருவதனை எவரும் எதிர்பார்ப்பர். 1876-ல் குசேல விலாசம் சேஷகிரி ஐயரால் இயற்றப்பெற்றது. கண்ணன் வரலாற்றைக் கூறும் தசமஸ் கந்தத்தையே லக்ஷ்மம்மாள் 1887ல் நாடகமாக எழுதியுள்ளனர். இவ்வாறு இந்த அம்மையாரும் வேம்பம்மாளும் நாடக ஆசிரியர்களாக விளங்கும் நற்காட்சியைக் காண்கின்றேம். வாணுசுரனைக் காக்கவந்த சிவனும் பிள்ளையும் கண்ணனுக் கெதிர் தோற்றேடுகின்ற கதை திருமாலின் பெருமை கூறுவதாக வைணவருக்கு மிகமிக இனிக்கும். வாணுசுர நாடகம் என்பதனை மிகப்பெரிய நாடகமாக அப்பண்ண நாயகர் விரித்து எழுதியுள்ளார். இதுவும் பலமுறை பதிப்பிக்கப்பெற்றது.

திருமாலின் மற்றைய பிறப்புக்களில் நிகழ்ந்த வரலாறுகளும் பாகவதத்தில் உள்ளன. துருவன் கதையும், பிரகலாதன் கதையும் கசேந்திரன் கதையும் பதுமாசுரன் கதையும் தமிழ் நாட்டில் மிகப் பெருவழக்காய் உள்ளவை. பத்மாசூர நாடகம் சிவபெருமானினும் திருமாலின் சூழ்ச்சியே சிறந்ததெனக் காட்டுவதாதலின் வைணவர்கள் பாராட்டுவதேயாம். இது 19-வது நூற்றுண்டின் முற்பகுதியிலே வழங்கிவந்தது. துருவதாச சரித்திரம் என்பதனை, 1869-ல் குருசாமிதாசர் இயற்றினர். 1874-ல் வேங்கடாசல முதலியார் கசேந்திர மோட்ச நாடகத்தினை வெளியிட்டார். கசேந்திர மோக்ஷத்தோரா என்பதொன்றும் வெளிவந்தது. இதனை 1898-ல் முத்துலிங்க தேசிகர் இயற்றி வெளியிட்டார்.

தோஹ்ரா என்பது மராட்டிய மன்னர் தஞ்சையில் ஆளவந்தபோது தமிழ் நாட்டிற் புகுந்த இசைப்பாட்டு வகையாம். தரு என்பதும் இத்தகையதே. பின்னேர் இசைப்பாட்டினை எல்லாம் தரு என்று வழங்கத்தொடங்கினர். தோடயம் என்பது வடமொழிப் பாட்டுவகையைச் சேர்ந்தது. தெலுங்கு அரசர்களும் தமிழ் நாட்டை

ஆண்டதோடு, பல தெலுங்கர்களும் தமிழ் நாட்டிற் குடிபுகுந்தமையால் சீச பத்தியம், த்விபதம் என்ற தெலுங்குப் பாட்டுவகைகளும் தமிழிற் புகுந்தன. சீச பத்தியம் சிங்கார பத்தியம் என்றும் போற்றப்பெற்றது. பிறமொழிப் பாட்டினைப் பின்பற்றத் தொடங்கியோர் அவற்றின் இலக்கணத்தினை முற்றமுடியக் கையாண்டனர் எனச் சொல்லுவதற்கு இல்லை.

இரணியன் கதையைப்பற்றிப் பல நாடகங்கள் வெளிவந்துள்ளன. அவற்றில் இராமச்சந்திர கவிராயர் இயற்றிய இரணிய நாடகமும் குமாரசாமி உபாத்தியாயர் இயற்றிய ஹிரணிய விலாசமும் பலரும் புகழ்வன. முன்னது பழையது. பின்னது புதியது. பின்னதில் புதிய வகையான உருப்படிகள் உண்டு. 1888-ல் இரணிய நாடகம் ஒன்றனை லோகநாதமுதலியார் சோமசுந்தர முதலியார் முதலோர் வெளியிட்டனர். பிரஹலாத விலாசம் என்பதனை அரங்கநாத கவிராயர் இயற்றியுள்ளார். இதுவும் 19-ம்நூற்றுண்டின் முற்பகுதியில் வழங்கிவந்தது என மர்டாக் நூலிலிருந்து அறிகிறோம். இது பலமுறை அச்சிடப்பட்டது. 1890-ல் வேம்பு ஐயர் பிரகலாத சரித்திரம் இயற்றினர். அதே ஆண்டில் வேம்பம்மாள் என்னும் பெண்மணி பிரகலாத சரித்திரம் என்ற நாடகத்தினை எழுதி வெளியிட்டார். இவற்றினை எல்லாம் ஒப்பிட்டு ஆராய்ந்தால் இந்த நூற்றுண்டின் நாடக வளர்ச்சியின் இயல்பு ஒருசிறிது புலனுகும்.

நோன்பு நோற்பதும் தமிழரது மரபாகிவிட்டது. பலவகை நோன்புகளினல் நேரும் பயன்களை வற்புறுத்தும் கதைகள் பல. சிவராத்திரி நோன்பு, ஏகாதசி நோன்பு என்பன தலைசிறந்தன. ஏகாதசி வைணவருக்கு உகந்தது. அதன் பெருமையை விளக்க ருக்மாங்கதன் கதையை வைணவர்கள் பாராட்டிவந்தார்கள். இந்தக்கதையை வீராசாமி உபாத்தியாயர் 1896-ல் தர்மாங்கத விலாசம் என்றும் சுப்பராய முதலியார் 1887-ல் ருக்மாங்கத விலாசம் என்றும் 1895-ல் நாராயணசாமிப்பிள்ளை என்பவர் ருக்மாங்கத விலாசம் என்றும் 1871-ல் மணவாள ராமானுஜதாசர் என்பவர் ருக்மாங்கத சரித்திரம் என்றும் நாடகமாக இயற்றினர்கள். சிவராத்திரியின் பெருமையைச் சைவர் கொண்டாடுவது இயல்பு. சிவராத்திரி புராணம் என்று ஒரு நூலும் உண்டு. வேலாயுத கவி என்பார் 1876-ல் சிவராத்திரி நாடகம் இயற்றினர். இந்தக் கதையினையே 1896-ல் நாராயணசாமிப்பிள்ளை இந்திர சங்கம் சபை என்ற நாடகமாக வெளியிட்டனர். நாடகங்களுக்குச் சபை என்று பெயரிடுவது 19-ம் நூற்றுண்டின் கடைசி ஆண்டுகளில் நாம் காணும் காட்சியாகும். இந்திர சபா, பத்மினி சபா, நூதன பவழேந்திர சபா, நூதன பத்மினி சபா, பெரிய இந்திர சபா என்ற நாடகங்களைக் காண்க.

சைவர்கள் பாராட்டும் இராமாயணம் ஒன்று இல்லை. சிவன் பிறந்த வரலாறெனப் பாராட்டுவதற்கு ஒன்று இல்லாமையால் அடியார்களது பிறப்பு வளர்ப்பிலேயே ஈடுபடுவது இயல்பாகிவிட்டது. பெரிய புராணம் இத்தகைய பெருங்காப்பியமாக விளங்குகிறது. சிறுத்தொண்டநாயனர் விலாசம் என்பதனை மூன்று புலவர்கள் நாடகமாக இயற்றினர்கள். பரசுராம கவிராயர் ஒருவர், மற்றொருவர் சாம்பசிவப் பிள்ளை, மூன்றுமவர் நாராயணசாமி நாயுடு (1887). வேங்கடாசலம் பிள்ளை 1875-ல்

திருநீலகண்ட நாயனுர் விலாசம் எழுதினுர். நால்வர் முதலிகள் கதையில் மாணிக்க வாசகர் வரலாற்றினைக் குப்புசுவாமி கிராமணியார் 1876-ல் மாணிக்கவாசக சுவாமி விலாசம் என வெளியிட்டார். ஞானசம்பந்தர் வரலாற்றில் ஒரு பகுதியாகிய அங்கம் பூம்பாவை விலாசம் என்பதனை நாடகமாக ஆறுமுக முதலியார் இயற்றினுர். கதையின் ஒரு பகுதியினையும் நாடகமாக இயற்றும் திறம் இவ்வாறு வளர்ந்துவரக் காண்கிறேம்.

பெரிய புராணத்திற்கு அடுத்தாற்போலச் சைவமக்கள் பாராட்டுவது சிவபெருமானுரின் திருவிளையாடல்களைக் கூறும் திருவிளையாடற் புராணமேயாம். மீனுக்ஷி திருமணம் தமிழர் மனத்தினைக் கொள்ளைகொண்டுள்ளது. மதுரை மீனுக்ஷியம்மன் நாடகம் என்பதனைச் சுப்பிரமணிய சாத்திரியார் 1890-ல் இயற்றிய மீனுக்ஷிநாடகம் மலையாள எழுத்தில் வெளியானமையை முன்னரே குறித்தோம். திருவிளையாடல் நாடகம் என்ற ஒன்றனை 1791-ல் பிறந்த கிருஷ்ண பாரதியார் எழுதினுர். அதனை முத்து ஐயர் 1899-ல் வெளியிட்டார். திருவிளையாடற் புராணம் பழைய தமிழ் நாட்டுக் கதைகளைக் கூறுவதாதலின் இவை பெருவழக்காய் இருத்தல் இயல்பே.

வடமொழித் தொடர்புடையனவாக வழங்கும் சிவ கதைகள் அனைத்தும் கந்த புராணத்தில் உள்ளன என்றே சைவர் கூறிக்கொள்வது வழக்கம். முருகன் தமிழ்க் கடவுள். வள்ளியம்மை வரலாற்றினைத் தமிழர் மறப்பதில்லை. 1875-ல் முத்துவீரக் கவிராயர் இயற்றிய வள்ளியம்மை நாடகம் வெளிவந்தது. முத்தைய விலாசம் அல்லது வள்ளியம்மை விலாசம் என மற்றென்று 1875-ல் பதிக்கப்பெற்றது.

முருகப்பெருமான் கதையேயன்றிப் பிற கதைகளும் கந்த புராணத்தில் வரும் எனக் கண்டோம். தாருகவனக் கதை சைவப்பெரியோர் கண்ட அகப்பொருள் வரலாறு. கோபிகளும் கண்ணனும் விளையாடும் விளையாட்டினை இது நினைப்பூட்டும். உயிர்களும் கடவுளும் அன்பினுல் பிணைக்கப்பெற்றுள்ளன என்ற உண்மையை இக்கதை விளக்கும் என்று கூறுவோரும் உளர். தாருக வன விலாசம் என்ற நாடகம் இராமச்சந்திர கவிராயர் இயற்றியது. மன்மதனைச் சிவபெருமான் எரித்த கதையை வேனில் விழாவாக ஊர்தோறும் தமிழ்மக்கள் ஒவ்வோராண்டும் கொண்டாடி வருகின்றுர்கள். இப்போது மன்மதனைப்போல ஆடுவதுவே அந்த விழா. இந்தக் கதையினைப் பலரும் நாடகமாக ஆக்கித் தந்துள்ளமை வியப்பன்று. ஒவ்வோர் ஊரிலும் ஒவ்வொரு நாடகம் எழுதப்பெற்றிருக்கலாம். சங்கரகிருஷ்ண முதலியார் எழுதிய மன்மத விலாசம் பழையது. 1871-ல் திருமலை தாசர் மன்மத நாடகம் இயற்றினுர். 1882-ல் தாண்டவராய முதலியார் மன்மத விலாசம் என்ற நாடகத்தை வெளியிட்டார். பதுமாசுர நாடகத்தைப்பற்றி முன்னரே கூறினேம்.

கந்த புராணத்தில் வரும் மார்க்கண்டன் கதையும் "கூற்றம் குதித்தலும் கைகூடும்" எனப் பாடிய திருவள்ளுவர் காலம் முதல் தமிழ் நாட்டில் வழங்கிவரும் கதையாகும். 1868-ல் வேங்கடராம ஐயர் மார்க்கண்டேய விலாசம் இயற்றினுர். 1870-ல் நரசிம்ம ஐயர் மார்க்கண்டேய நாடகம் இயற்றினுர். இந்த நாடகம் இந்தக்

கதையை மிகவிரிவாக விரித்து எழுதியது. இந்த நாடகத்தையே மேலும் விரித்துப் பலர் ஆடிவருகின்றனர். 1875-ல் வரதராஜ ஐயர் மார்க்கண்ட நாடக அலங்காரம் எழுதி வெளியிட்டார். நாடக அலங்காரம் என்ற புதுப்பெயர் இந்தக் காலத்தில் வழங்கியதனை இது காட்டுகிறது. அலங்காரம் நிறைந்ததாக நாடகம் விளங்கும் என ஆசிரியர் கருதியதால் இந்தப்பெயர் புனைந்தனர் போலும். 1876-ல் கோபால கிருஷ்ண ஐயர் மார்க்கண்டேய நாடகம் இயற்றினுர். 1879-ல் சுப்பிரமணிய ஐயர் மார்க்கண்டேய விலாசம் இயற்றினுர். மார்க்கண்ட விலாசம் என ஒரு நாடகம் 19-ம் நூற்றுண்டின் முற்பகுதியிலும் வழங்கியது என மர்டாக் நூலின் வழியே அறிகிறேம்.

இவை அன்றி ஊருக்கு ஊர் ஒவ்வொரு தல புராணம் இருந்தது. அப்புராணங்களில் வரும் கதைகளையும் அங்கங்கே நாடகமாக நடித்துவந்திருப்பர். இவற்றில் சில பிற இடங்களிலும் வழங்கலாயின. திருவண்ணுமலையைப்பற்றி எழுந்த அருணுசல புராணத்தில் வல்லாள மகாராசன் கதை ஒன்று உண்டு. அதனை 1896-ல் ஸ்ரீ வல்லபதேவர் சரித்திரம் என்ற நாடகமாக வீராசாமி உபாத்தியாயர் எழுதினுர். உபாத்தியாயர் என்ற பட்டத்தோடு பலர் நாடகம் எழுதக் காண்கிறேம். இவர்கள் அனைவரும் ஊர்களில் தெருப்பள்ளிக்கூடம் நடத்தித் தமிழையும் கல்வியையும் வளர்த்தவர்கள் ஆவார்கள். இவர்கள் அந்த நாளில் கல்வியிற் சிறந்தவர்களாக இருந்தது வியப்பன்று. ஆகையால் இந்தத் தமிழறிந்த மக்கள் தலையில் தமிழ் நாடகத்தை வளர்க்கும் சுமையும் விழுந்தது. விழுந்ததும் வியப்பன்று. இவர்களில் பலர் கணக்குப்பிள்ளைகளாக இருந்து பெயரளவில் இல்லாவிடினும் உண்மையில் ஊரின் தலைவராக விளங்கி வந்தார்கள் எனலாம்.

பழைய கதைகளில் வருவோரைப்பற்றி புதிய கதைகளைப் படைத்து நாடகம் எழுதவும் 19-ம் நூற்றுண்டு தொடங்கியது. லக்ஷ்மீபிரிய விலாசம் என்பதனைச் சோமசுந்தரம் என்பவர் 1874-ல் வெளியிட்டார். இலக்குமியின் திருவிளையாடலைப் புலவர் தம் மனம் போனபடி கூறுகின்றுர். நல்ல கூட்டத்தில் படிக்கத்தகாத சில பகுதிகளும் இதிலுண்டு. இந்த நூற்றுண்டின் பிற்பகுதியில் எழுந்த நாடகங்கள் எல்லாம் இத்தகைய குற்றத்திற்கு ஆளானவையேயாம். இவற்றினைப் பார்க்கவந்து கண்டுகளிப்பவரின் இழிதகையான சுவையுணர்வினையே இந்த நிலை விளக்குகிறது எனலாம்.

இவ்வளவும் இந்து மதத்தினர் பாராட்டும் நாடகங்களாகும். மதத்தொடர்புடையன என்பதனை மறந்து மற்றைய தமிழரும் வெறுங்கதைகள் என்று நோக்கிக் கண்டுகளித்தனர். தமிழ இஸ்லாமியர் அப்பாசு நாடகம் என்பதனையும், அல்லி பாதுஷா நாடகம் என்பதனையும் பாராட்டிவந்தனர். உயர்ந்த நடையில் எழுதப் பெருவிடினும் பல இடையூறுகளிலிருந்து தப்புவது கதையில் ஒரு சுவையைத் தருகின்றது. குடி விலக்கு, நல்லொழுக்கம் முதலிய அறம் வெளிப்படுவதால் நல்ல படிப்பினைக்கொரு வழியாகவும் விளங்குகின்றன. அப்பாசு நாடகம் எழுதியவர் மகமது இப்ராஹிம் என்பவர். 1873-ல் இந்த நூல் அச்சில் வரக் காண்கிறேம். அல்லிபாதுஷா நாடகம் எழுதியவர் வண்ணக்களஞ்சியப் புலவர். 1870-ல் இது

அச்சாகியது. புலவர்களும் பொது மக்களுக்கு நன்கு விளங்கும் பேச்சு நடையில் எழுதுவது 19-ம் நூற்றுண்டின் நாடகங்களில் சிறந்து விளங்கக் காண்கிறேம்.

கிறிஸ்தவர்களது மதத்தொடர்பு பெற்ற நாடகங்களும் வெளிவரலாயின. வேத நாயக சாத்திரியார் ஞானத்தச்சன் நாடகம் என்பதனைப் பத்தொன்பதாம் நூற்றுண்டின் முற்பகுதியிலேயே எழுதி வெளியிட்டார். இது தத்துவப் பொருளை உள்ளுறையாகக் கொண்டதாகும். "வேதசாட்சியாகிய தேவசகாயம் பிள்ளை வாசகப்பா" என்பதனை முத்தைய புலவர் இயற்றினர். இது புனித வாழ்வு வாழ்ந்து தம் கொள்கையை விட்டுக்கொடாது உயிரையே தந்த சிறந்த கிறிஸ்தவரின் வாழ்க்கையையே நாடகமாக எழுதியதாகும். உள்ளதனை உள்ளவாறு உரைக்கும் உண்மை நாடகம். இந்த வகையாகப் பரவி வருவதனையும் காண்கிறேம்.

வாசகப்பா என்று பெயர் ஒன்று வழங்கியதும் இங்குக் குறிக்கத்தக்கதாம். இரணிய விலாசமும் இரணிய வாசகப்பா என வழங்கியது உண்டு. இந்தப்பெயர் இலங்கையில் பெருவழக்காக வழங்கியது எனலாம். அருணசலக் கவிராயர் எழுதிய இராம நாடகம் முழுதும் இசைப்பாட்டாம். கீர்த்தனையாக அமைந்தது. பாட்டினை அறிய முடியாத அவ்வளவு அறியாமையில் மக்கள் வாடிய காலத்தில் பாட்டின் கருத்தினை உரை நடையில் கூறவேண்டுவதும் இன்றியமையாது வேண்டப்படுவதாயிற்று. வாசகம் என்பது உரை நடை. பா என்பது பாட்டு. சம்பு நாடகம் என வடமொழியில் வழங்குவதனை இந்தப்பெயர் நினைப்பூட்டுகிறது. பாட்டும் வாசகமுமாக வருவதே வாசகப்பா நாடகமாம். இது நிற்க.

கிறிஸ்தவர்களிடையே வழங்கிய அடியார்கள் வரலாற்றினையும் சிலர் நாடகமாக எழுதி வழங்கினர். 1889-ல் ஞானசௌந்திரியம்மாள் நாடகம் என்பதனை முத்து நாயகர் இயற்றித்தந்தார். இந்த நாடகம் கிறிஸ்தவர்கள் கொண்டாடிப் பாராட்டும் நாடகமாக இன்றும் விளங்குகிறது. அர்ச்சிய எஸ்தாக்கியர் நாடகம் என்பதனை 1890-ல் தம்பிமுத்துப்பிள்ளை எழுதினர். 1895-ல் ஞானப்பிரகாசப்பிள்ளை இக்கதையினையே வேறெரு நாடகமாக இயற்றினர். விவிலியக்கதைகளும் நாடகத்திற்கு இடமளித்தன. பங்கு பிரித்து எடுத்துச்சென்ற பெருஞ்செலவாளிப் பிள்ளை திரும்பித் தந்தையிடம் வெறுங்கையோடு வந்தபோது அந்தத் தந்தை அவனை விருந்தோடு வரவேற்ற அன்பின் கதை விவிலியத்தில் உள்ளது. அதனை மரியதாசர் 1898-ல் நாடகமாக எழுதி வெளியிட்டார்.

இத்துணையும் பழைய அடிப்படையாகக் கொண்டெழுந்த நாடகங்களாகும். புதுமையாக எழுந்தவற்றை ஆராய்வதற்கு முன்னுகப் பிறமொழிகளிற் பழமையாக வழங்கியன தமிழிற் புகுந்த வரலாற்றையும் ஆராய்வது பொருத்தமாகும். வடமொழியில் வழங்கும் மாலதி மாதவம் என்ற காளிதாச நாடகம் தமிழில் வந்தது.

மேனுட்டுக் கல்வி பரவி வந்ததன் பயனுக ஷேக்ஸ்பியர் நாடகங்களும் மேனுட்டுப் பிற நாடகங்களும் தமிழில் வெளிவரும் காட்சி 19-ம் நூற்றுண்டில் தோன்று

கிறது. 1876-ல் வேணுகோபாலாச்சாரியார் முதன்முதலாக ஷேக்ஸ்பியரது வெனிஸ் வணிகன் என்ற நாடகத்தினைத் தமிழில் மொழிபெயர்த்துத் தந்தார். வேனிற் காலத்து நள்ளிருட்கனவு என்ற நாடகத்தினை நாராயணசாமிப்பிள்ளை 1894-ல் மொழி பெயர்த்தார். சிம்பலேன் என்ற நாடகத்தினை 1897-ல் சரசலோசன செட்டியார் மொழி பெயர்த்துதவினுர். ஆங்கிலப்பெயரை மாற்றித் தமிழ்ப்பெயராக்கிவிட்டார். தமிழ்மணங் கமழச்செய்யும் முயற்சியில் இதுவும் ஒன்று. இந்த நாடகத்திற்கு இவர் கொடுத்த தமிழ்ப்பெயர் சரசாங்கி நாடகம் என்பதாம். ஆங்கிலத்தில் அமைந்த பெயர் தலைவனதாகும். இங்கு அமைந்த தமிழ்ப்பெயர் தலைவியதாகும். தலைவியின் பெயரை நாடகங்கட்கு அமைக்கும் மனப்பான்மை பரவிவருவதனை இது சுட்டும். தாங்கள் கல்லூரியில் கற்ற நாடகம் தங்கள் உள்ளத்தினைக் கொள்ளைகொண்டது கண்டு அதனைத் தமிழாக்கி இவ்வாறு இவர்கள் மீட்டுக்கொண்டார்கள் போலும். வொரோனு நகரத்து இருகனவான்கள் என்ற நாடகத்தினை 1889-ல் இராமசுவாமி ஐயங்கார் மொழி பெயர்த்துச் சுகுணசேகரர் என்ற பெயருடன் வெளியிட்டனர்.

மேனுட்டுப் பிற நாடகங்களில் மோலியேர் என்ற பிரஞ்சு நாடகப்பேராசிரியர் எழுதிய " லோபி " என்ற நாடகத்தினை 1898-ல் ஐயாசாமி முதலியார் தமிழாக்கினுர். 1894-ம் ஆண்டு சாபக்லீஸ் (Sophecles) என்ற கிரேக்க ஆசிரியரின் இரண்டு நாடகங்களைத் தமிழில் வெளிவிட்டருளியது. நாராயணசாமிப்பிள்ளை எழுதிய மங்களவல்லி நாடகம் ஒன்று. இரண்டாவது இலக்குமணப்பிள்ளை எழுதிய லீல நாடகமாகும். பிள்ளையவர்கள் பாவாணராகவும் இசைவாணராகவும் இன்றும் சிறந்து விளங்குகிருர்கள். பாவிலேயே இந்த நாடகம் அமைந்தது. நாடக மேடையில் நடிப்பதற்கின்றித் தனியே படிப்பதற்கு உதவும் நாடகங்கள் இவ்வாறு வெளிவரத் தொடங்கின.

இதுவரை கூறிவந்த வேரிலிருந்தும் அடிமரத்திலிருந்துமே புதிய நாடகங்கள் கிளைக்கலாயின. பொதுவியல் நாடகங்கள் சமுதாயக் கேட்டினை விளக்கும் இயல்பு வாய்ந்தன எனக் கண்டோம். சீர்திருத்த நாடகம் எனத் தக்க வகையில் சமுதாய நாடகங்கள் புத்தம் புதிய வழியாகப் பழைய நாளையிலேயே தோன்றின. மாரிமுத்தாப்பிள்ளை யவர்கள் 18-ம் நூற்றுண்டிலேயே நீதி நாடகம் இயற்றியுள்ளார். 19-ம் நூற்றுண்டில் காசிவிசுவநாத முதலியார் இந்த வகையில் தலைசிறந்தவர் எனலாம். பிரமசமாசத்தைச் சேர்ந்து சீர்திருத்தக் கொள்கைகளைப் பரப்பவேண்டும் என்று வாழ்ந்த இவருடைய நாடகங்களில் இத்தகைய புதிய மணம் வீசக் காண்கிருேம். தாசில்தார் விலாசம் மேலானேர் வாழ்க்கையைப் படம்பிடித்துக் காண்பிப்பது. 19-ம் நூற்றுண்டின் முற்பகுதி நூல்களைத் தொகுத்துத்தந்த மர்டாக் இதனைக் குறிப்பிடுகிருர். தாசிகள் வலையில் செல்வர்கள் சிக்குவதனை டம்பாச்சாரி விலாசம் என எழுதி விளக்கினுர். டம்பாச்சாரி எனப் பெயர்பெற்ற செல்வர் சென்னைச் சிந்தாதரிப்பேட்டையில் வாழ்ந்தார். டம்பாச்சாரியார் வீடு என ஒன்று இன்றும் அங்குக் காட்டப்பெறுகிறது. இதனுள் இடக்கர்ச் சொல்லும் இழி வழக்கும் மிகுந்துள்ளதனல் மறு பதிப்பில் அவற்றை நீக்கி அச்சிட்டனர். காலத்தினைப்போக்க வேறு வழி இல்லாமையால் பல செல்வர்கள் பரத்தையர்க் கடியராய் வாழ்ந்தமையை இது விளக்குகிறது. இழி வழக்கில் ஈடுபட்ட பொதுமக்களின் மனப்பான்மை

யும் தெளிவாகிறது. கூலிக்கு மாரடிக்கும் கூத்தாடிச்சி நடிப்பு என மற்றெரு நூலும் இதே வகையில் எழுதினுர். இந்து மதத்திற் புகுந்த குருட்டு வழக்கங்களை எள்ளி நகையாடிக் கிறிஸ்தவர்களையும் ஏசிப்பேசிப் பிரமசமாசக் கொள்கைகளை நிலை நாட்டுவதே நோக்கமாகப் பிரமசமாச நாடகம் ஒன்றும் எழுதினுர். சமுதாய சீர் திருத்த நோக்கத்துடன் 1900-ல் ஆத்மாநந்த பாகவதர் என்பார் கலியாண நாடகம் என்பதொன்று எழுதி வெளியிட்டார். இது இந்துக்களிடையே வழங்கும் கலியாண வழக்கங்களை நகையாடித் திருத்த முற்பட்டது.

நாடகத்திற்காக நாடகம் என்பது போகச் சீர்திருத்தம் முதலிய நோக்கமே உயிராக நாடகங்கள் தோன்றலாயின. இந்நாளைய ருஷிய நாட்டு நாடகங்களின் பேரியல்பு இங்குச் சிறிது தலைகாட்டுகிறது எனலாம். "அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயன்" எனக் கருதிய தமிழர்க்கு இது புதியதும் அன்று. காதலியைப் போலக் கற்போரைத் திருத்தி நல்வழிப்படுத்த அன்றே காவியங்கள் எழுந்தன எனப் பண்டையோர் கருதினர். பர்னுட்ஷா முதலியோர் ஏதேனும் ஒரு கொள்கையை நிலைநாட்ட நாடகம் இந்நாளில் எழுதி வருவதற்குப் பெரிதும் ஒப்பாக இங்குக் கூறிவரும் நாடகங்கள் அமைந்தன என்பது முழுவதிலும் வழுவாகாது.

அரசியலின்றிச் சமுதாயம் ஏது? ஆனுல் அரசியலில் தமிழ் நாடு ஈடுபட வருவது இருபதாம் நூற்றுண்டில்தான். ஆதலால் அரசியலைப்பற்றிய நாடகங்கள் மிக் கோங்கி வளரப் பத்தொன்பதாம் நூற்றுண்டில் இடம் இல்லை. இருப்பினும் நாடகங்கள் அரசர் கொலுவீற்றிருக்கும்போது நாட்டின் நலத்திற்காகவே அரசன் உள்ளான் என்பதும் குடிமக்களையும் அழைத்து அவர்களது வளத்தகு வாழ்க்கையினை அரசன் ஆராயவேண்டும் என்பதும் பத்தொன்பதாம் நூற்றுண்டிலும் நினைவில் இருந்தன. அலிபாதுஷா நாடகத்தில் அரசன் நலம்பெற ஆளமுடியாதபோது அரசினைத் துறத்தலே மேல் எனக் குடிகள் கூறக் கேட்கிறேம். இவை நிற்க. இந்திய தேசிய காங்கிரசு 19-ம் நூற்றுண்டிலே தோன்றிற்று. அது சென்னையிற் கூடியதனை ஆரியசபாநாடகம் விளக்குகிறது.

நகைச்சுவையில் இந்த நாடு ஈடுபடவில்லை எனப் பலர் நினைக்கின்றனர். 19-ம் நூற்றுண்டில் நாடகங்களில் வருவோரைப் பார்க்கவந்த பொது மக்கட்கு இன்னுர் இன்னுர் என முன்னர்க் கட்டியம் கூறி அறிவிக்கும் கட்டியக்காரன் வருவதனைக் காணலாம். நாடக பாத்திரங்கள் வேடம் பூண்டுவருகிற வரையிலும் கட்டியக்காரன் பார்க்கவந்து எதிரே கூடியுள்ள மக்களை மகிழ்வித்துக் கொண்டிருத்தலும் வேண்டும் அன்றே? கொழுத்த சிரிப்புப் பொங்கி வழியும். கோமாளிக்கூத்துத் தலை விரித்தாடும். கட்டியக்காரன் இவ்வாறு வடமொழியிற் கூறும் விதூஷகனுக மாறுவதனைக் காண்கிறேம். அதற்கேற்ப இடையிடையே நாடகத்திலும் நகைச்சுவை விளைக்கும் பேச்சினைப் பேசுவதும் இயல்பாகிவிட்டது. கதையிலும்பாத்திரங்களது நடை முதலியவற்றில் குற்றங்காட்டிச் சிரிப்பதும் உண்டு. சீர்திருத்தத்திற்கு வித்து இவ்வாறு இடப்பட்டது எனலாம். நூலில் வாராத பேச்சுக்களையும் இடத்திற்கு ஏற்றவாறு கட்டியக்காரக் கோலம் பூண்டு ஆடவருவோர் தாமாகப் படைத்துப் பேசுவதனைத் தெருக்கூத்தினைக் கண்ட யாவரும் அறிந்திருப்பர். கட்டியக்காரன்

விதூஷகனுக மாறி வளர்வதனை மேலே நாம் கூறிய மார்க்கண்டேய நாடகத்தில் காணலாம்.

வெறும் நகைச்சுவையாகவே ஒரு நாடகமும் ஆதிநாராயண ஐயர் வாயிலாக 1896-ல் சனமனேல்லாசினி என்ற பெயருடன் வெளிவந்தது. இந்தப் பெயரிலிருந்தே வடமொழி யோசையில் தமிழர் மயங்கிய மயக்கமும் நாடகங்களின் மனேல்லாச நோக்கமும் இனிது விளங்கும்." நாடகத்திற்காக நாடகம். நாடகம் பொழுது போக்கும் இன்பக்கலை " என்ற கொள்கைகளுக்கும் இங்கு இடம் உண்டு.

வானமே கூரையாய் நடுச்சந்தியில் ஆடும் தெருக்கூத்துப் போய் மேடையில் நடிக்கும் வழக்கம் மேனுட்டுத் தொடர்பால் எழுந்தது. கூத்தாடுதல் ஊர் மக்களின் திருவிழாவும் பொழுதுபோக்குமாம். இவ்வாறு கலையாக இருந்தது மாறி, பின்னர் வாணிகத்துறையில் ஒன்றுயிற்று."பார்சி கம்பெனி" என்று பல கூட்டங்கள் பணம் பறிக்க இந்தியா எங்கும் கிளம்பின. நல்ல திரைகள் முதலியன எழுதிக் கண்ணைக் கவரும் வகையில் காட்டித் தம் மாய வலையை வீசின. இருந்தது இருந்தபடி இருக்க வேண்டும் என்ற மற்றொரு கொள்கை இவ்வாறு வேரூன்றியது. இந்த நாட்டத்துடன் பல கண்மயக்கங்களை அவை உண்டாக்க முயன்றன. இவற்றைப்பற்றிய அறிக்கைகளில் " தத்ரூபமாக இருக்கும் " என்ற சொற்றொடரைப் பன்முறையும் காணலாம். இந்த மாறுதல் நிகழ்ந்தது 19-ம் நூற்றுண்டில் முடிவு ஆண்டுகளிலாகும். வடநாட்டு வாடை வீசத்தொடங்கியது. இந்த வகையால்தான் இந்துஸ்தானி தெரியாதபோதும் பல மக்கள் கண்காட்சிக்காக இந்த நாடகங்களுக்குச் சென்றனர். அசையும் படங்களைப்போலவே இவர்கள் இவற்றைக் கண்டு களித்திருக்க முடியும். இவற்றினைப் பின்பற்றித் தமிழ் நாட்டில் தமிழரும் ஆடத்தொடங்கினர். இந்தத் தமிழ் நாடகங்கள் 19-ம் நூற்றுண்டில் எழுதி நடிக்கப்பெற்றுலும் 20-ம் நூற்றுண்டில் தான் அச்சிடப்பெற்றன.

புதிய கதையாகவும் பல தோன்றின. பத்மினி சபா என்பதனை 1884-ல் அப்பாவுப்பிள்ளை எழுதினுர். நூதன பத்மினி சபாவும் பெரிய இந்திர சபா என்பதும் வெளியாயின. 1893-ல் நூதன பவழேந்திர சபா என்பதனை மாசிலாமணி முதலியார் வெளியிட்டார். இது கற்பின் திறத்தினை விளக்குவது. இவை புது வழக்கினை ஒட்டியவை. ஆனல் 19-ம் நூற்றுண்டின் முற்பகுதியிலும் புது நாடகங்கள் எழுந்தன. மர்டாக் கூறும் "ரேந்தி நாடகம்" எத்தகையதோ அறியோம். 1859-ல் குமார குலசிங்க முதலியார் பதிவிரதா விலாசம் என ஒன்று கற்பின் பெருமையை விளக்க எழுதினுர். 1868-ல் மார்க்கண்ட முனிசாமிப்பிள்ளை என்பார் வீரகுமார நாடகம் என ஒன்று எழுதியுள்ளார். 1885-ல். T. T. அரங்காச்சாரியார் நந்திதுர்க்க நாடகத்தினை இயற்றினுர். பொன்னுசாமி நாயகர் அதே ஆண்டில் நிஜலிங்க சிக்கியர் சரித்திரம் என்ற நாடகத்தை எழுதி உதவினுர். பிறநாட்டு வரலாறுகள் தமிழர் கருத்தைக் கவருவதனை இவ்வாறு அறியலாம்.

முத்தண்ண ஆசாரியார் 1893-ல் மனேரஞ்சித நாடகம் என்பதொன்று எழுதினுர். மனேல்லாசமாகவோ மனேரஞ்சிதமாகவோ இருப்பதே நாடகமாம் என்ற

மற்றொரு கொள்கையை இந்தப் பெயரும் வற்புறுத்துவது காண்க. ஆனல் நாடகத்தின் உள்ளே சென்றுல், அறத்தினையோ சீர்திருத்தத்தையோ வற்புறுத்தும் நோக்கமும் இருக்கக் காண்போம். 1898-ல் சந்திரவதன என்ற நாடகத்தினை S. விசுவநாத முதலியார் இயற்றினர், 1899-ல் சுப்பிரமணிய பண்டிதர் மோஹனங்கி விலாசம் என்பதனை எழுதினர். வடமொழிப் பெயர்களில் அந்நாளைய தமிழர்க்கு இருந்த ஈடுபாட்டினை இதிலிருந்தும் அறியலாம். நூலில் வரும் தலைவியின் பெயரையே நாடகத்தின் பெயராக அமைக்கும் வழக்கம் பெருகிவருவதும் காணலாம்.

ஆங்கிலம் கற்ற அறிஞர் ஆங்கிலத்தில் உள்ளதுபோலத் தமிழிலும் நாடகம் எழுதவேண்டும் என எண்ணினர். தமிழையும் கற்றுப் பழந்தமிழ் நூல்களைப் புதியனவாகக் காணும் பேறுபெற்ற அவர்கள் நல்ல தூய தமிழில் எழுதவும் விரும்பினர்கள். உரை நடையில் எழுத விரும்பியவர் சிலர். பாவாகவே அமைக்க விரும்பியவர் சிலர். நாடகக்கலைக்கே புத்தம்புது நாள் பிறந்தது எனலாம். 1877-ல் பிரதாபசந்திர விலாசம் என்பதனை இந்த நோக்கத்துடன் இராமசாமி ராஜு என்பவர் எழுதி வெளியிட்டார். இது உரை நடையால் ஆகியது. இவ்வாறு முன் செல்வதே தமிழ் நாடகத்தின் முதற் படியில் ஏறுவதாம்.

பேரறிஞர் ஆன சுந்தரம்பிள்ளை அவர்கள் லிட்டன் என்ற ஆங்கில ஆசிரியர் எழுதிய கதையினை மட்டும் மனத்திற் கொண்டு தமிழ் மணம் வீசும் நாடகக் காப்பியத்தை மனேன்மணியம் என்ற பெயரோடு பாட்டாகவே பாடிமுடித்தார். இந்த நூல் வெளியானது முதல் புதிய இலக்கியங்களின் தோற்றுவாயாகக் கொண்டாடப் பெற்று வருகிறது. இதனை நாடகமாக நடித்து மகிழ்வதினும் காப்பியமாகப் படித்தே தமிழ் உலகம் மகிழ்ந்தது எனலாம். ஆசிரியர் தமது தத்துவசாத்திரக் கருத்துக்களையும் இடையிடையே புகுத்தியுள்ளார். தனித்ததோர் காவியமாகக் கருதத் தக்க சிவகாமி சரிதையும் இதனுள்ளேயே வருகிறது. இதை மேடைமேல் இனிப்பது அருமை. இந்த ஆசிரியரைப் பின்பற்றியும் பலர் எழுத முற்பட்டனர். நாடகம் இவ்வாறு இரண்டாவது படியில் ஏறியது எனலாம். தில்லானு பாட்டாகாது செந்தமிழ்க்காப்பியமாகும் சிறப்பும் நாடகத்திற்கு உண்டு என்பது வெளியாயிற்று.

இயற்கை அன்னையே தமிழ் நாட்டில் வடமொழியை முன்னரும் ஆங்கிலத்தைப் பின்னரும் கொண்டுவந்து சேர்த்தனள். இவற்றிடையே தமிழ் வாழ்ந்து ஓங்குகிறது. இந்த மும்மொழிகளின் மரபினையும் ஆராய்ந்து நாடகத்தினை வளர்க்க முந்தியவர் பரிதிமாற்கலைஞர் என்ற தமிழ்ப்பெயர் பூண்பதில் செருக்குக்கொண்ட வி. கோ. சூரியநாராயண சாத்திரியார் ஆவர். நாடக இயல் என்ற நாடக இலக்கண நூலைத் தம் ஆராய்ச்சியின் பயனுகச் சூத்திரங்களாக இயற்றி உதவினர். நாடக ஆராய்ச்சிக்கே கால்கோள் விழா இந்த முறையில் நடைபெற்றது. இந்த இலக்கணத்திற்கு இலக்கியமாகப் பல நாடகங்களை இயற்ற முற்பட்டு 19-ம் நூற்றுண்டு முடிவதற்குள் 1896-ல் ரூபாவதி என்ற நாடகத்தினையும் 1898-ல் கலாவதி என்ற நாடகத்தினையும் வெளியிட்டார். இவருடைய நடை பேச்சுநடை அன்று ; சிறிது செயற்கையாகவே தோன்றுமெனச் சிலர் கூறுவர். நாடகக்கலையை இவ்வாறு ஆராய்ந்து எழுதுவது அக்கலையில் மூன்றுவது படியில் ஏறுவதாம்.

நாடகத்திற்கே புத்துயிர் அளித்த பெருமை சம்பந்த முதலியாருக்கு உரியதாகும். இவருடைய நாடகங்களைப் பாராட்டாமற் போகலாம். இவரியற்றிய நாடகங்களில் அழகிய சொற்றெடராக ஒன்றும் எவர் மனதிலும் நிற்கவில்லை எனலாம். குறை எனக் காட்டக்கூடிய இந்த இயல்புகளும் இவர் நாடகங்கள் பொதுமக்களது உள்ளத்தோடு உள்ளமாய் அமைந்துவிடுகின்றன என்பதனையே வற்புறுத்தும். நாடகம் நடிப்பாரைக் கூத்தாடிகள் என இகழ்ந்த உலகில் அஞ்சாது தாமே மேடைமேல் ஏறித் தமிழுலகம் முழுதும் சுற்றி நடித்தவர் இவரே. அறிஞர் பலரையும் கூத்தாடிகளாக்கி நாடகத்தினை விநோதக்கலையாக உயர்த்தியவர் இவரே. அதற்கென சுகுணவிலாச சபையை நிலைநாட்டி அதனைப்போல எங்கும் பல சபைகள் எழுவதற்கு வழிகாட்டியவரும் இவரேயாம். எல்லா நாடகங்களும் இன்பமாக முடியவேண்டும் என்ற எண்ணத்தினை ஒழித்தவரும் இவரே. பாட்டின்றிப் பேச்சாகவே நாடகம் வரலாம் எனக் காட்டியவரும் இவரே. பேச்சு நடையாகவே இந்த நாடகங்கள் அமைந்துள்ளன. கதையை நீண்ட குறிப்புக்களை இரு பகரவளைவினிடையே தாராமல் இயற்கையாக அடுத்தடுத்து வரும் காட்சிகளாக அமைக்கும் திறமையை இவரிடம் காணலாம். இந்த வகையில் நடனக்கலையில் பல நுட்பங்களை இங்குக் காணலாம். தாம் நடித்தும் வந்தார். ஆதலின் இந்த நுட்பங்களைத் தாமே கண்டறிந்தார். தாமே நடித்து நுட்பங்களை அறிவதே நாடகக்கலையின் நான்காவது படியாகும்.

இவருடைய முயற்சிக்குக் கால்கோள் விழாவும் 19-வது நூற்றுண்டிலே நிகழ்ந்தது. முதல் இவர் எழுதிய நாடகம் லீலாவதி சுலோசனை என்பதாகும். தங்கையும் தமக்கையுமாம் இருவரில் ஒருத்தி நல்லவளாயும் மற்றெருத்தி தீயவளாயும் இருக்கக் கதையை நடத்திச் செல்கின்றுர். காதலியைக் காதலன் காண்பது பழைய நாடகங்களை நினைப்பூட்டும். இருவரின் வேற்றுமைப்பண்பு கொண்டே கதை நிகழ்கிறது. பலராக வர அவர்களில் பலவகைப் பண்புகளும் பின்னிக்கொண்டு சிக்கலாகிப் பின் அவிழ்வதனை அவரது பின்னைய நாடகங்களில் காணலாம்.

ஆனுல் இவர் வளர்க்கும் கலை தெருக்கூத்தாக ஓங்கிய கலையினும் வேறே எனல் வேண்டும். தெருக்கூத்து இன்று மிகக்கீழான நிலைக்குப் போய்விட்டது. பேசும்படத்தோடு நாடகம் முரண்படாவிடினும் எதிர்காலத்தில் நாடகம் புதிய நிலையை அடையத்தான் வேண்டும். அப்போது கண்கவர் நிலையில் உள்ள பேசும் படத்தினும், கருத்தைக் கவரும் நிலையில் நாடகம் அமையும். பாவிருந்தாகவும் இசைவிருந்தாகவும் அமைந்து மக்களை உயர் நிலைக்கு மனத்தேரில் ஏற்றிச்செல்வதே அதன் தொண்டாகும். அத்தகைய தொண்டினையே தெருக்கூத்துச் செய்துவந்தது. ஆகவே அதனை முற்றும் மறந்து விடுவதில் பயனில்லை. சம்பந்த முதலியார் எவ்வளவோ முயன்றும் இசையாகவே பேசிப்போவது இன்றும் நின்றபாடில்லை. ஈதொன்றே தமிழர் நாடும் நாடகத்தின் இயல்பினை விளக்குகிறது எனலாம். பேசும் படம் ஓர் உயிரற்ற கருவி. அதனை நினைத்த போதெல்லாம் முடுக்கிவிட்டால் ஒருமுறைபோலப் பலமுறையும் பாடி ஆடி வரும். ஆனுல் நாடகத்தில் பாட்டும் பேச்சும் ஒரு முறை போலப் பலமுறை வந்தாலும் பேசும் முறையும் பாடும் முறையும் உணர்ச்சி ஓட்டமும் அவை அமையும் நிலையும் கேட்போர் நிலையும் முறைக்குமுறை மாறிப் புதுமைக்கோலம் பூணும். மாறுதவற்றிடையே மாறிவரும் உயிர்க்கலை இங்குத்தான்

உண்டு. தெருக்கூத்தில் எதிர்பார்க்கக்கூடிய எவற்றினிடையேயும் எதிர்பார்க்கமுடியாத உயிர் ஒளி நுட்பமாக முதலிருந்து முடிவுவரை வீசக்கண்டு களித்தனர் தமிழர்.

கீர்த்தனை நாடகம், வாசகப்பா, விலாசம் நாடகாலங்காரம், சபா என்ற பெயர்கள் ஒரு வளர்ச்சியைக் காட்டுகின்றன. பின்னர் இத்தகைய பெயர்கள் இன்றித் தலைவர் தலைவியர் பெயரே நாடகத்தின் பெயராக அமையக் காண்கின்ற வளர்ச்சியும் தோன்றுகிறது. கீர்த்தனை நாடகம் இசைப்பாட்டாலாகியது. வாசகப்பாவில் பாட்டும் உரை நடையும் உண்டு. விலாசம் நாடகாலங்காரம் என்பன சிறிது விரிவடைந்த நிலையையும் இவை விநோதக்கலையாக விளங்கின என்பதனையும் சுட்டும். மத்த விலாசம் என நாடகங்களின் பெயராக 7-ம் நூற்றுண்டிலேயே அமைந்திருத்தல் காண்க. சபா என்ற பெயர் " நாடகம் மேடைமேல் ஏறியது " என்பதனைக் குறிக்கும் எனக் கொள்ளலாம்." பார்சி " என்ற அடையுடன் வரும் நாடகங்கள் ஓவியக் கலை, கண்கட்டுக்கலை முதலிய பிறகலைகளைக் கொண்டு மக்கள் கண்ணைக் கவரும் வகையில் இருந்ததனை இருந்தபடி காட்டும் நாடகங்களாம். பின்னர் மனோன்மணியம்போல் காப்பியமாக ஓதும் நிலைமைக்கு மாறிய நிலை ஒன்று. உரை நடையாகவே அமைந்து மேல்நாட்டினைப் பின்பற்ற முயன்ற நிலை மற்றொன்று.

இவ்வாறு மாறிமாறி வந்தாலும் இசையின் தொடர்பினை நாடகம் அடியோடு விட்டபாடில்லை. இசைப்பாட்டோடு அமைந்த நிலையில் இசை வளர்ச்சியும் அவற்றிடையே காணலாம். கீர்த்தனைகள், சிந்து, நொண்டிச்சிந்து, திபதை அல்லது த்விபதம், தோஹ்ரா, தோடயம், தரு சீசபத்தியம் முதலியவை கூத்தில் இடம்பெறுகின்றன. விருத்தத்தினைத் தாளமின்றிப் பாடிக்கொண்டே வரும்போது கடை அடியின் கடையரை யடியைத் தாளத்தோடு தொடங்கி அதனை ஒரு தருவின் முதற் பகுதியாக அறுத்துப் பாடுவதும் வழக்கமாகக் காண்கிறோம். இப்போது இந்துஸ்தானியில் கஜால் என வருவது இதனை நினைப்பூட்டுகின்றது. இவ்வாறு பாடப்பெறும் விருத்தப் பகுதியைக் கந்தார்த்தம் எனப் பழைய நாடகங்கள் வழங்கிவருகின்றன. " தருவிற்கு முன்சென்ற பொருள் " என்பது கருத்துப்போலும். அராகம் வரும் பகுதியைச் சுருள் என வழங்கிவரக் காண்கிறோம். இசையோடு கூத்தும் அமைதல் வேண்டும். தெருக்கூத்து என்ற பெயரே இதனை வலியுறுத்தும். ஆனால் பின்னாளில் தாளத்திற் கேற்பத் தாளிட்டுக் குதிப்பதொன்றே எஞ்சியது. பொருளை விளக்கி வரும் முறையில் கையையும் கண்ணையும் இயக்கி முகக்குறியாலும் பிறவகையாலும் விறல்பட ஆடி மெய்ப்பாட்டைப் பிறப்பிக்க வேண்டும் என்ற பழைய மரபு மலையாளர் போற்றும் களிக்கூத்தில் இன்றும் விளங்கக் காண்கின்றோம். ஆனால் அங்கு அது ஊமையாட்டமாகவே நிற்கிறது. தென்னாட்டுத் தெருக்கூத்தோ இசையாட்டமாக நிற்கிறது. கூத்துக்கலை புத்துயிர் பெற்று வளரும் இந்த நாளில் அதனையும் தெருக்கூத்தில் புகுத்தல் வேண்டும். கதைக்களியிற்போல நாடகத்தில் வருவோர் நிலைக்கேற்பக் கோலம் பூண்டு வருவதற்கு ஏற்ற மரபும் உண்டு. அரசர், அமைச்சர், படைவீரர், அசுரன் என்ற வேற்றுமையைக் குறிப்பான சில கோலங்கள் கொண்டே அறியலாம். காலத்திற்கு ஏற்ற சிறு மாறுதல்களோடு தெருக்கூத்துக்கள் எதிர்காலத்தில் புத்துயிர் பெற்று இயலிசை நாடகம் என்ற முத்தமிழ் விருந்

தாய் ஆகாய விமானத்திற்கும் எட்டாத இடங்களில் எல்லாம் கற்பனைப்பொறி யியக்கும் மனத்தேரில் ஏற்றிச்சென்று வாழ்வைச் சீர்திருத்தி மக்களை இக்கலையின்பத்தின் வழியே ஒருவரென வாழச்செய்து, பண்பாட்டின் உயர்வெல்லையை அடையச் செய்யும் என்பதில் ஐயம் இல்லை. எதிர்கால வாழ்வை அறியச்சென்ற காலத்தெருக்கூத்தின் இயல்பினை அறிந்து நிகழ்காலத்திற் கேற்பத் திருத்த முயல்வாருக்கு இங்குக் கூறிய நாடகங்களை ஆராய்வதும் கடமையாகும்.



# கம்பன் நீதியந் தலைவன்

(வித்துவான். திரு. சுந்தர-குமரன், கல்வே கல்லூரி-புதுவை)

உலகத்தைச் செம்மை நெறியில் நடாத்துவது நீதி. அந்நீதி முற்றுமுணர்ந்தவனே நீதியந் தலைவனாதற்குரியன். அங்ஙனம் முற்றுமுணர்ந்தவனே ஆயினும், இருவர் மாறுபட்டு ஒரு வழக்கிட்டாராயின் அவ்வழக்கை நன்கு ஆராய்ந்து, மாறுபட்டாரிருவரும் இசையுமாற்றானே முடிபு கூறும் திறனுடையனாதலும் வேண்டும். அத்திறன் அவன்மாட்டு இல்லையாயின் அவன் நீதியந் தலைவனாதற்கு உரியனாகான். இதனை,

" பொய்யுடை யொருவன் சொல் வன்மையினால்
மெய் போலும்மே மெய் போலும்மே."
" மெய்யுடை யொருவன் சொலன் மாட்டாமையால்
பொய்போலும்மே பொய்போலும்மே."
" இருவர் தஞ்சொல்லையும் எழுதரங் கேட்டே
இருவரும் பொருந்த உரையா னாயின்
மனமுற மறுகி நின்றழுத கண்ணீர்
முறையுறத் தேவர் மூவர் காக்கினும்
வழிவழி யீர்வதோர் வாளாகும்மே."

என அரசியல் அறிவு அனுபவத்தோடும் அமையப்பெற்ற அதிவீரராம பாண்டியன் வாக்கால் அறியலாகும்.

அற்றேல், அஃதாக ஒரு வழக்கில் மாறுபட்ட இருவரும் ஒப்ப முடிவு கூறுமாறு எங்ஙனம் ? எவ்வாற்றானும் முடிவுரை ஒருவர்க்குத் துன்பமும், ஒருவர்க்கு இன்பமும் பயக்குமாலெனின், கூறுதும் :

இருவர் ஒரு பொருள் பற்றி வழக்கிட்டாராயின், அவருள் ஒருவரிடத்தே நீதியும் மற்றொருவரிடத்தே நீதியின்மையும் இருக்குமன்றே ? அதனை நன்குணர்ந்து நீதியில்லாரைத் தண்டிப்பின் அதுவே இருவரும் பொருந்த முடிவுரை கூறியதாகும். எவ்வாறெனிற் கூறுதும் : முறையில்லா வழக்குடையான் தன் வாய்மொழியால் நீதியந் தலைவன் தவறாக முடிவுரை வழங்கினானெனக் கூறுவானாயினும்,

தன் மனத்தால் தான் செய்த தவற்றை யுணர்ந்து நான் இங்ஙனம் முறையில்லா வழக்கைக் கைக்கொண்டமையினு லன்றோ இத்தண்டனைக்கு உள்ளானேன் ; என எண்ணி அமைதியுறுவன். அன்றியும், பின்னொரு காலத்து யாவரேனும் இவ் வழக்கின் முடிவைப்பற்றி யுசாவின், என் செய்வது ! வாளாவிருந்தவென்னை பலர் தூண்டிவிட்டனர். அதனால் அதில் அகப்பட்டு அவமானம் அடைய நேர்ந்தது. எனத் தன் வாயால் கூறுதலும் கூடும் என்க. இங்ஙனம் உண்மை உணர்ந்து முடிவு கூறலே இருவரும் பொருந்தக் கூறலாகும். இங்ஙனம் கொள்ளாக்கால் இருவரும் பொருந்த உரைத்தற்கு வேறு வழியில்லை என்க.

இனிக் கம்பர் கூறும் முடிவுரையைக் காண்பாம்.

கடற்கரைச் சோலையிலிருந்த இராமன் முதலியோர் அனுமான் இலங்கை சென்று வந்தபின் இராவணன் மீது போர் தொடுக்குங் கருத்தினராய் இருந்து கொண்டிருந்தனர். அச்சமயம் விபீடணன் அவ்விடத்திற்குச் சில மந்திரிகள் சூழ வந்து இராகவ ! சரணம் என்று கூயினன். சேனையின் முன்னிருந்த வானரங்கள் அவர்களை அதட்டின. அதை யுணர்ந்த அனுமன், மைந்த துவிவிதர்களை அனுப் பிச் செய்தியை அறிந்துவருமாறு கட்டளை யிட்டனன். அவர்கள் சென்று செய்தியை அறிந்துகொண்டனர். மைந்தனென்போன் இராமனை வந்தணுகி ஐய ! விபீடணன் அடைக்கலம் என வந்துள்ளான், என்று கூறினன். அதைக்கேட்ட இராமன், தன் னைச் சூழ்ந்துள்ள சுக்கிரீவன் முதலியோர் உதவியை நாடியிருக்கும் ஒருவனுதலின், தானே ஒன்றுங் கூறிவிடாது தன் நண்பர்களை நோக்கி இவ்விபீடணன் நம்மால் சேர்த்துக்கொள்ளற் பாலனே ? அல்லது நீக்கற்பாலனே ? ஆராய்ந்து கூறுமின்கள் என்று கூறினான்.

அண்மையிலிருந்த சுக்கிரீவன் இராமனை நோக்கி ஐய ! இவ்விபீடணன் தன் தமையனை விட்டு வந்தது குற்றமாகும். இவன் தருமத்தை விரும்புபவனுயின் தரு மத்தை விரும்பாத உறவினரை விட்டுத் துறவு சேர்தலின்றிப் பகைவரை வந்தடை தல் நீதியோ ? இராவணன் வாழ்ந்த காலத்து உடனிருந்து போர் உண்டாய காலத்து அவனை விட்டுவிட்டானுயின் இவன் யாருக்கு உறவாகுவன் ? என இவை போன்ற பல நியாயங்களை எடுத்துக்காட்டி இவனைச் சேர்த்துக்கோடல் தக்கதன்று என்றனன்.

சாம்பவன், நீலன் முதலியோரையுங் கேட்க அவர்களும் அவ்விபீடணன்பால் குற்றங்காட்டி அவனைச் சேர்த்துக்கோடல் தகாதென்றனர்.

பின்னர், அனுமானை நோக்கி உன் கருத்து யாது ? செப்புக என, அனுமன் இவ்விபீடணன் தீயவனல்லன். " அகத்தின் அழகு முகத்தில் தெரியும் " அன்றே? இவன் வஞ்சனையில்லாதவன் என்பது முகத்தால் தெரிகிறது. இவன் நல்லொழுக்க முடையவன். தூதரைக் கொல்லலாகாது என்று தன் தமையனிடம் கூறி என்னைத் தப்புவித்தவனும் இவனே. இவன் மகள் திரிசடையே நம் பிராட்டிக்கு உறுதுணையா யுள்ளாள் எனப் பலவற்றையும் விளக்கமாக எடுத்துக்காட்டி இவனைச் சேர்த்துக் கோடல் தக்கதேயென்று கூறித் தன்னுரையை முடித்தனன்.

ஈண்டே கம்பன், இராமன் கூற்றுக முடிவுரை கூறுகின்றான். அதனை எங்ஙனம் கூறுகின்றான் என்பதைக் காண்போம். அரசர்க்கரசனாகிய தசரதன் மகனும் இராமன் முடிவுரை எவ்வாறிருக்க வேண்டும் என்பதைக் கம்பன் நன்கறிவானன்றோ ?

இராமன் அபயம் என்று வந்தோரை மறுத்தல் ஆகாது என்பதற்குப் பல உதாரணங்கள் காட்டி முடிவுரையாக,

“ ஆதலால் அபய மென்ற போழ்தத்தே அபய தானம்
ஈதலே கடப்பா டென்ப தியம்பினீர் என்பால் வைத்த
காதலால் இனிவே றெண்ணக் கடவதென் கதிரோன் மைந்த
கோதிலா தவனை நீயே என்வயிற் கொணர்தி என்றான்.”

என்று கூறினான்.

இதன் பொருள் : ஆதலால், ஒருவன் அபயமென்று என்னை வந்தடைந்தபொழுதே, அபயதானம் ஈதலே என் கடமையாகும். என்னிடத்து நீங்கள் வைத்துள்ள பேரன் பினால் இவனைச் சேர்த்துக்கோடல் தகுதியன்று என்று சொன்னீர்கள். இனிமேல் ஆலோசிக்க வேண்டியது என்ன இருக்கிறது ? சூரியன் மகனான சுக்கிரீவனே ! ஒரு குற்றமுமில்லாத அந்த விபீடணனை நீயே அழைத்துவருவாய் என்று கூறினான் என்பதாம்.

இனி, இம்முடிவுரையை ஆராய்வோம். இராமன் விபீடணனுக்கு அபயங்கொடுத்துச் சேர்த்துக்கொளல் வேண்டும் என்று மட்டும் கூறியிருப்பானாயின் மாறுபட்ட இருவரும் பொருந்த உரைத்தல் என்னும் நீதியந்தலைவன் இயல்பு அவனுக்கில்லாமற் போகும். அன்றியும் அக்கூட்டத்திற் பெருங் குழப்பமும் உண்டாயிருக்கும்.

ஆயின் இம்முடிவுரை இருபகுதியினரும் பொருந்தக் கூறியவா றெவ்வா றெனிற் கூறுதும்.

இம்முடிவுரை, அனுமன் உள அமைதிக்கு ஏதுவாதலுடைத் தென்பது வெள்ளிடை மலை. சுக்கிரீவன் முதலியோர் உள அமைதிக்கு ஏதுவாத லுடைத்தாமோ ! என்பதே ஈண்டு ஆராய்தற் பாலதாம்.

சுக்கிரீவன் முதலியோரை நோக்கி நீங்கள் அனைவரும் இவனுக்கு அபயந் தந்து நம்பால் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதை அறியாதிரல்லீர். என்பால் வைத்த அன்பால் அதனை மறந்தீர் என்பதைக் குறிக்கவன்றோ “ என்பால் வைத்த காதலால் இயம்பினீர் ” என்றான்.

பரதன், காட்டிற்குச் சென்றிருந்த இராமனை அழைத்துவரச் சென்றபோது, பரதனைக்கண்ட இலக்குமணன், தன் தமையனை நோக்கி அண்ணலே ! பரதன்

நம்மைக் கொல்ல வருகின்றான். அனுமதி தருக. இப்பொழுதே அவனைக் கொன்று விடுகின்றனன் என்றனன். அதைக் கேட்ட இராமன்

" எனைத்துள மறையவை யியம்பற் பாலன
பனைத்திரள் கரக்கரிப் பரதன் செய்கையே
யனைத்திற மல்லன வல்ல வன்னது
நினைத்திலை யென்வயி னேய நெஞ்சினால் "

எனக் கூறி இலக்குவனைத் தன் வயமாக்கியது ஈண்டு நினைவுக்கு வருகின்றது.

இராமன் சுக்கிரீவனைத் தனிப்பட்ட முறையில், அனுமன் கூறிய யாவும் நீ அறியாது கூறினையல்லை. என்பால் வைத்த அன்பே அவற்றை மறக்கச் செய்தது, என்பதைக் குறிக்கவன்றோ கதிரோன் மைந்த ! என விளித்தனன். இவ்விளி இக் கருத்தைக் குறிக்குமாறு எவ்வாறெனில் கூறுதும் : கதிரவனிடத்தே யாவும் பயின் றவன் அனுமன். நீ அக்கதிரவன் புதல்வனே யன்றோ ! என்ற குறிப்புத் தோன்று கின்றதன்றோ ?

அபயதானம் ஈதலே கடப்பாடு என்று இராமன் கூறியவுடன் சுக்கிரீவன் ஆழ்ந்த சிந்தனையில் இருந்துவிட்டனன். இக்காலத்தும் ஒருவர் கூற்றை ஒருவர் மறுத்துரைப் பாராயின் மறுக்கப்பட்டார், முகம் வேறுபட்டு ஆழ்ந்த சிந்தனையில் இருக்கக் காண்டு மன்றே ! அங்ஙனம் இருந்த சுக்கிரீவனை அவன் மெய்ப்பாட்டினால் நன்குணர்ந்து இராமன் இனி வேறெண்ணக் கடவதென்? என்று தேறுதல் செய்தனன்.

சுக்கிரீவன் உள்ளத்தை அமைதிப்படுத்தவே இராமன் அவனை நோக்கி நீ விபீ டணனைக் குற்றமுடையன் என்று எண்ணுகிறாய். அவன் நீ எண்ணுமாறு போன்று குற்றமுடையனல்லன். அங்ஙனமுடையனாயின் நீக்கற்பாலனே என்னுங் குறிப்பை வெளிப்படுத்தவே " கோதிலாதவனை " என்று கூறினான்.

இன்னும் என்வயிற் கோதிலாதவனை எனக்கூட்டி என்னிடத்தே குற்றமில்லா தவனை எனப் பொருள் கொண்டு நீ கூறியாங்கு விபீடணன் குற்றமுடையனே எனக் கொள்ளினும் என்னிடத்தில் யாதொரு குற்றமும் இல்லாதவனைச் சேர்த்துக்கோட லில் தவறொன்றுமில்லை எனச் சமாதானம் கூறினான் எனவுங் கொள்ளலாம்.

இன்னும் " கோதிலாதவனை " என்பதைக் கோதிலாது அவனை எனப் பிரித்து யாதொரு குற்றமும் உண்டாகாமல் விபீடணனை எனும் பொருள் கொண்டு என் னைக் காத்தலையே குறிக்கோளாக உடைய இச்சேனை வெள்ளம் என்பால் அன்பின் மிகுதியால் இராமன் விபீடணனைச் சேர்த்துக்கொள்ளும் செயலுக்கு இசைந்தது தக்கதன்று என்றெண்ணி அவ்விபீடணனுக்கு ஊறுசெய்ய முற்படுதலும் கூடும். அங்ஙனம் கூடாமை அவர்களுக்கு வேண்டுவன கூறி அவர்களையும் நீயே அமைதி உடையவர்களாக்கி அவ்விபீடணனைக் கொண்டுவருக என்பான் " கோதிலாதவனை நீயே கொணர்தி " எனக் கூறினான் எனக் கொள்ளலுமாம்.

உயர்தனிச் செம்மலாகிய நேரு அவர்கள் ஒருகால் ஒரு பெருங்கூட்டத்திற்குத் தலைமை வகித்திருந்த போது, அக்கூட்டத்திடையே சில அறிவிலிகள் பெருங்கலாம் விளைக்க அதனை அடக்குவான் சென்ற நேருஅவர்களை, அவரைச் சூழ்ந்திருந்த காவலாளிகள் இப்பொழுது நும்மை நீவிர் யாவரென அறிந்திலீர் போலும். நீவிர் இந்தியாவின் பிரதம மந்திரியாரன்றோ ? நுமக்கு ஓரூறுளதாயின் என்னாம்? ஆதலின் நீவிர் ஆண்டுச் சேறலாகாது எனக் கூறி அவர்தம் செயலை மறுத்தமை ஈண்டு ஒருவாற்றான் ஒப்புநோக்கற் பாலது.

" நீயே என்வயிற் கொணர்தி " என்று இராமன் கூறியதை உற்றுநோக்கின் சுக்கிரீவனை எத்துணை உயர்வு படுத்துத் தன்வயப் படுத்திச் சமாதானம் செய்கின்றான் என்பது தோன்றும். அதை நோக்குவாம்.

அபயம் அளித்தலே தகுதியெனக் கண்ட இராமன் தன் தம்பியாகிய இலக்குவனை யனுப்பி விபீடணனை அழைத்து வருமாறு செய்திருக்கலாம். அங்ஙனஞ் செய்திருப்பின் இராமன் குறைதானிரக்கும் அவற்கு ஓடிக் குறுகி நிற்கும் இயல்புடையனாவன். எங்ஙனமெனில் இலக்குவன் செல்வது இராமன் செல்வதோடொக்குமன்றோ? அதனை நோக்காது மறுத்த சுக்கிரீவனையே அனுப்பிக் கொண்டுவருமாறு சொன்னது இராமன் தன்னோடொப்பச் சுக்கிரீவனை உயர்வுபடுத்துத் தன் வயமாக்கிய மதிவன்மையும் வினைசெயல் திறமும் நன்கு புலப்பட ஏதுவாகின்றது. அன்றியும் காமத்தின் காரணமாக ஒழுக்கக்கேடுடையவனா யிருந்த உன் தமையனை நீ என்னாற் கொல்வித்துக் கிட்கிந்தையை நினதாக்கிக்கொண்ட தன்மைபோல இவ்விபீடணனும் காமம் முதலிய ஒழுக்கக்கேடுடைய தன் தமையனை என்னாற் கொல்வித்து அவ்வரசைப் பெற்றுப் பிறர்க்கு நலஞ் செய்தலாகிய கொள்கையோடு வந்துள்ளான். ஆதலின் அத்தகையோனை நீயே சென்று அழைத்துக்கொண்டு வரல்வேண்டும் என்று குறித்தான் என்பதும் புலனாம்.

இங்ஙனந் திறம்பட இராமன் கூறிய கூற்றினால் சுக்கிரீவன் முதலியோர் உளம் அமைதியுற்றன. அங்ஙன் அமைதியுற்றமையினா லன்றோ சுக்கிரீவன், இராமன் கூறிய முடிவுரை, ஐயுறவெல்லாந் தீரும் அளவையாய் அமைந்தது; இனி, இராமன் நிச்சயித்தபடியே விபீடணனை அழைத்துவருவல் என்றுவிரைவிற் சென்றான்.

இங்ஙனந் திறம்படக் கூறவல்ல கம்பனை அந்தோ! சிலர் பழிப்பர். அறிவுடையோனைப் பிறர் பழிப்பினும் அவன் அறிஞருள்ளத்து என்றும் நின்று நிலவுவன் என்பது ஒருதலை.

# தமிழன் உள்ளம்

(வித்துவான். திரு. சி. இராசகோபாலப் பிள்ளை, தலைமைத் தமிழாசிரியர்,
நகர உயர்நிலைப் பள்ளி, குடந்தை)

"உள்ளம் உடைமை உடைமை", "உள்ளத்தனையது உயர்வு" எனப் புகன்றனர் பொய்யாமொழியார். இன்னும் "உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து,வள்ளியம் என்னும் செருக்கு" (குறள் 608) என அவ்வுள்ளம் இலாதார்க்கு ஏற்படும் குறைபாட்டையும் இன்னது எனத் தெள்ளத்தெளியத் தெரிவித்துள்ளனர்.

எனவே மக்களாய்ப் பிறந்த ஒவ்வொருவரும் மக்களாய் வாழ வேண்டின் மாண்புமிக்க உள்ளம்—பரந்த உள்ளம்—உயர்ந்த உள்ளம்—அசைவிலா உள்ளம்—ஆழ்ந்த உள்ளம் உடையராய் வாழ்தல் வேண்டுமென்பது ஒருதலை. மக்களாய் வாழ்தலாம் மாண்பினை யளிக்கும் உயரிய உள்ளம் தமிழர்பால் எவ்வாறு மிளிர்ந்து இலங்கிற்று என்பதைத் தமிழ் நன்னூல்கள் சாற்றுதல் எங்ஙனம் என்பது தெளிவிக்கவே இயைந்தது இக்கட்டுரை. அதனால் தமிழர் அடைந்த ஒண்புகழ் அளவின் எல்லை யாதெனத் தெரித்தலுமாகும்.

இவற்றை யுணர்தலின் பயன் யாது எனிலோ நமது முன்னோர் நாற்றிசை மக்களும் ஏத்திசை பரப்ப வீரம் செறிந்து, காதல் தழைத்து, இன்பமும், அறனும், பொருளுமெய்தித்தம்நிகர் இல்லாத் தனிமையின் வாழ்ந்தனர் என்பதை யுணர்ந்து இறுமாந்து யாமும் அன்னவர்போல ஆகுதல் விழைந்து நன்னெறி நின்று நலம் பல புரிந்து துன்னலர் போற்றத் தூய்மை சேர் ஒள்ளியம் ஆதலும் ஆகும். ஆதலின் சிற்சில கருத்துக்களை எடுத்துக் குறிப்பாய்க் கழறுவோம்.

உள்ளம் என்பது உள்ளும் ஒரு தொழில். அத்தொழிலின் நிகழ்ச்சியே மக்களை உயர்ந்தோர், தாழ்ந்தோர் என மாறுபடச் செய்கின்றது. அந்நிகழ்ச்சி நிகழுமிடம் மனமாதலின் மனதிற்கு உரிய பெயர்கள் எவ்வளவோ அவ்வளவும் அவ்வுள்ளத்தைக் குறிப்பனவாகும். இவ்வுள்ளம் உயர்ந்த கருத்துக்களை உன்னி உணருமேயானால் அவ்வுள்ளமுடையான் உயர்ந்த மனிதனாகின்றான். அன்றி இழிந்த, தாழ்ந்த, புன்மையான கருத்துக்களைக் கருதுமேல் அவ்வுள்ளமுடையான் இழிந்த, தாழ்ந்த புன்மையான மனிதனாகின்றான். இது கருதியே வள்ளுவனாரும் "உள்ளுவதெல்லாம் உயர்வு உள்ளல்" என்றனர்.

இவ்விரு நிலையுமின்றி உயர் கருத்தையோ, இழி கருத்தையோ உய்த்துணரும் வலியின்றி செயலற்று ஒருவன் மனம் சோம்பி இருக்குமாயின் அவன் மனிதனுயினும் மரமேயாவான்—உருவில் மட்டும் மனிதனைப்போல் தோற்றமளிப்பான். " உரம் ஒருவற்கு உள்ள வெறுக்கை அஃது இல்லார் மரம், மக்கள் ஆதலே வேறு " (குறள் 610) என்றனர் பொய்யாமொழியும். இனித் தமிழன் உள்ளம் யாதென உணருவோம்.

இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் நூல்களைத் துருவி ஆய்ந்தோமாஞல் ஒவ்வோர் இடத்திலும் தமிழனது உள்ளம் அன்பு நிறைந்து —வீரம் செறிந்து—மானம் மிகுந்து—அறம் வளர்ந்து மக்கட் பண்புகள் முழுதும் வாய்க்கப்பெற்றிருத்தலைப் பரக்கக் காணலாம். முதலாவதாக தமிழன் உள்ளத்தில் அன்பு எவ்வாறு நிறைந்துளது என்பதைச் சிறிது நோக்குவோம்.

தமிழன் உள்ளம் அன்பே வடிவாய் விளங்கிற்று. மக்கள் வாழ்க்கைக்கே அன்புதான் ஆணிவேர் என்பதையும் அவன் அறிந்திருந்தான். ஒருவன் தனது அன்பை அறிதலாகாதென மறைத்து வைப்பினும் பிற உயிர் படும் இன்னலைக் கண்டு மனம் பொருதுருகி, பெருகியோடும் அவனது கண்ணீரே யாவரும் அறியப் புலப்படுத்திவிடும். அன்பானது தன்னை யுடையவனை உடல், பொருள், ஆவி என்ற மூன்றினுலும் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனுக ஆக்குவதுடன் உயிரும் உடலும் இயைந்து வாழ்தற்கும் காரணமாயுள்ள தென்பதையும் தமிழன் உள்ளம் உணர்ந்துளது. இதுவேயன்றி ஒருவன் அறம் ஆற்றுதற்கும் மறம் புரிதற்கும் அன்பு வேண்டற்பாலது என்பதையும் உணர்ந்திருந்தான் தமிழன்.

பாண்டிய மன்னருள் கல்வி கேள்விகளிற் சிறந்த பெரியாரான கடலுண் மாய்ந்த இளம் பெருவழுதி, செங்கோலோச்சி உலகாளும் பணி பூண்டும், ஓய்வு நேரங்களில் சோர்வின்றிப் பலகலை பயின்று புலவர்களுள் தாமொருவராய்ப் போட்டியிட்டுக் கவிபாடிப் புகழ் கைக்கொண்ட இகழ்விலாளர். இவர்பால் ஒருநாள் ஓரையம் தோன்றியது. அவ்வையம் யாதோவெனின், இவ்வுலக நிலைபேற்றிற்குக் காரணம் யாதென்பதே. இது கருதி பலநாள் சிந்திக்க ஒருநாள் உண்மை இன்னதென உணர்ந்தார். அவ்வுண்மையை உணர்ந்தவாறே ஓர் பாடலில் அமைத்தார். அப்பாடல் வருமாறு :

" உண்டா லம்மவிவ் வுலக மிந்திர
ரமிழ்த மியைவ தாயினு மினிதெனத்
தமிய ருண்டலு மிலரே முனிவிலர்
துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்
புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனி
னுலகுடன் பெறினுங் கொள்ளல ரயர்வில
ரன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாட்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே " (புறம் 182)

என்பதாம். இப்பொருண் மொழிக்காஞ்சி எவ்வளவு சீரிய பொருளைத் தன்னுள் ளடக்கிச் சிறந்து மிளிர்கின்றது. உலகாளும் மன்னன் பாடிய பாடலிது—ஓய்வுநேரங் களிற் கற்றுணர்ந்த கவிச்சித்திரமிது.—என்ன அழகு! என்னே அன்பின் பெருக்கு! பாண்டியன் நெடுஞ்செழியனிடம் குடபுலவியனர் உலகம் நிலைபெறுதற்குக் காரணம் நிலமும் நீருமே என்கின்றனர்.

"நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத் தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே" (புறம் 18)

என்பது அவர் வாக்கு.

இதற்குமேலாகச் சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை தனது முரசு கட்டிலிற் படுத்துறங்கியவர் விழிப்படையும் வரை கவரி கொண்டு வீசிப் பணி புரியும் பெருமை சான்ற மோசிகீரனர் உலகம் நிலைபெறுதற்குக் காரணம் மன் னனே என்கின்றனர்.

"நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்
அதனல் யானுயிர் என்ப தறிகை
வேல்மிகு தானை வேந்தற்குக் கடனே." (புறம் 186)

என்பது அவர் கூற்று.

உலக உயிர்களெல்லாம் நெல்லாகிய உணவினை யுண்டும், நீரை அருந்தியும் வாழ்கின்றன என்பது எல்லோரும் ஒப்ப உணர்ந்த கருத்து. உற்றுநோக்கின் அவற் றிற்கு மேலாக ஒரு முதற் காரணம் நிலவுகின்றது. அதுவே உலகாளும் மன்னன் என்பதாம். மன்னன் இன்றேல் உணவும் நீரும் தட்டின்றிக் கிடைக்கா ; அவை கிடைக்காவிடின் உலகம் வாழ்தல் யாங்ஙனம் ? வாழமுடியாதல்லவா ? ஆதலின் " மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் " என இறுமாந்து கூறினர் அப்புலவர்.

புலவர்கள் கூற்று இங்ஙனமிருக்க மன்னர் மரபிற்றேன்றி மன்னரும் புலவரு மாய் மிளிர்ந்த மாண்புமிக்க நம் இளம்பெரு வழுதியினது எண்ணம் எங்குச் சென்று நிற்கின்றது. உலகம் நிலைபெறுதற்குக் காரணம் எது வென்கிறர்.

" தேவர்க்குரிய அமுது கிடைப்பினும் அதைக் கிடைத்தற் கரியதெனக் கருதிப் பிறர்க் களிக்காமல் தாமே தனித்துண்ணுதவராகவும், யாரிடமும் வெறுப்பில்லாத வராகவும், பிறர் அஞ்சத்தக்க துன்பத்துக்குத் தாமும் அஞ்சி அத்துன்பத்தைப் போக்காமல் மடிந்திருக்கும் தன்மை இல்லாதவராகவும், புகழ் கிடைக்கின் உயிரையும்

அளிப்பவராகவும், பழி வருமாயின் உலக முழுதும் தமக்குரிமையாகக் கிடைக்கினும் ஏற்றுக்கொள்ளாதவராகவும், எக்காலத்தும் மனதில் கவற்சி இல்லாதவராகவும், தாம் முயலும் முயற்சி யாவும் தம் நலனுக்கே என்ற எண்ணமில்லாமல் பிறர் நலன்பெற வேண்டுமென்றே எண்ணி முயலும் இயல்பினராகவும் உள்ள மக்கள் வாழ்கின்ற காரணத்தினுற்றுன் இவ்வையம் நிலேத்திருக்கின்றது" என்று கூறுகின்றுர்.

அன்பு மிகுந்து அறம் நிறைந்து வீரம் செறிந்து இகழ்வின்றிப் புகழ்மலிந்து கவற்சியின்றித் தனக்கென வாழாப் பிறர்க்குரியாளராய் முயற்சியுற்று வாழும் மக்கள் வாழ்வாலேயே உலகம் வாழ்கின்றது என்ற உண்மையைத் தெள்ளத் தெளிய உணர்ந்த பெரியாராதலின் நம் வழுதி தம் பாடலில் தாம் உணர்ந்த அருங்கருத்தைப் பலருமறியும் வண்ணம் விரித் துரைத்தனர். என்னே அரசரின் எண்ணம் ! இத்தகைய மனப்பண்பமைந்த மன்னன் ஆட்சி எவ்விதம் இலங்கியிருக்கும்! இவர் ஆண்ட நாடு எத்தகைய நாடா யிருந்திருக்கும்! அந்நாட்டு மக்கள் எவ்வித பண்புடன் இருந்திருக்கவேண்டும் என்றுற்போன்ற கருத்துக்களேக் கருதுவோமாயின் நம் முன்னேர்கள் உள்ளம் எந்நிலே பெற்று விளங்கிற்று—அவர்களிடம் மக்கட் பண்பு எவ்வாறு குடிகொண்டிருந்தது—அவற்ருல் உலகில் அவர்களடைந்த மேம்பாடு யாதாயிருக்கும்—இவைகளே எல்லாம் எண்ணிப் பார்க்கப்பார்க்க அவர்கள் கால் வழி வந்த நமக்கு தற்பொழுது உள்ள நிலேயில் தமிழன்—தமிழ் மொழி—தமிழ் நாடு என்ருல் உலகமே—உலகில் உயர்ந்தோர் எனக் கருதும் தகுதி வாய்ந்தவர்களே காதில் போட்டுக்கொள்ளாத இந்நிலேயில் தமிழ் மறையாம் திருக்குறளே அறநூலெனக் கருதி அதில் கூறும் நீதிகளே அரசினரும் அறங் கூறவையினரும் தமது நீதி முறைகளில் ஏற்றுக்கொள்ளாத இந்நிலேயில் உள்ளம் என்ன பாடு படுகின்றது ! எவ்விதம் உருகுகின்றது! இந்நிலே நீங்கி முன்னுள் நன்னிலேயை நம் நாடு எய்துதல் ஒல்லுமோ ? ஒல்லாதொழியுமோ ? என ஐயுறுகின்றது.

அன்பினுலே யாரையும் தம்வழிப்படுத்தி ஆண்ட அருங்குணப் பண்பினர் நம் தமிழர். இவர்கள் அன்புடைமை, ஆன்ற குடிப்பிறப்பு இவ்விரண்டையும் மக்களினின்றும் பிரிக்கமுடியாத உரிப்பொருளாம் பண்புடைமை எனக் கண்டனரே யல்லாது, அரம்போலுங் கூரிய கல்வியறிவையும் உடல் உறுப்புக்களின் தோற்றத்தையும் மக்கட் பண்பெனக் கொண்டனரில்லே. தமிழ் மன்னர்கள் தம் நாட்டு மக்களில் யாரேனும் தீங்கு புரியின் அவரைக் கண்டு அவர் செய்த தீங்கையுணர்ந்து, அத்தீங்கு செய்தற்கு அவரை ஊக்கிய—அவரை விட்டு எவ்வகையிலும் விலகாமல் அவரிடம் அமைந்துள்ள இயல்பு யாதென வறிந்து அதனே அவரிடம் இல்லாவாறு அகற்றிடுவர். அகற்றவே அத்தீங்கு செய்தோர், தாமும் தமது கால்வழியினரும் நண்பரும் பின் எக்காலத்தும் எவ்விதத் தீங்கையும் கனவிலும் நினேயார்கள். இதுவே தீங்கு புரிந்தோர்க்காற்றும் சிறந்த தண்டனேயாம். வள்ளுவப் பெருந்தகையும் "இன்ன செய்தாரை ஒறுத்தல் அவர்நாண, நன்னயம் செய்து விடல்" (குறள் 324) என நவின்றனரல்லவா ? இஃதிவ்வாருக இக்காலத்து மக்கள் தீங்கு புரிதலின் காரணத்துக்கும் அத்தீங்கு புரிந்தாரை அரசு ஒறுத்தலுக்கும் எவ்வளவு தொடர்புளது—சிந்தியுங்கள் ! இவ்வொறுத்தலினுல் எத்துணே பேர் தீமையொரீஇ

நன்மக்களாயினர்—சொல்லவும் கூடுமோ ? இந்நிலையில் நாடு நன்னிலை எய்துவ தெங்ஙனம் ?

பாண்டி நாட்டில் பூதப்பாண்டியன் என்றொரு மன்னவன் அரசுமுறை பிறழாது செங்கோல் ஓச்சினன். இவன் புலமை நிறைந்தவன்—வீரமும் அன்பும் ஒருங்கே அமையப்பெற்றவன். ஒருகால் ஒல்லையூர் என்னுமிடத்தில் எதிர்த்த பகைவரை வென்று அவ்வூரைத் தன்னடிப்படுத்தினான். அதுமுதல் அவன் " ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன் " என்றே வழங்கலாயினன். இவனது இல்லாளும் கல்வியும் வனப்பும் வாய்க்கப்பெற்ற கற்புடை நல்லாள். இவ்விருவர் பாடல்களும் புறநானூற்றில் உள்ளன.

இவனைப் பல அரசர்கள் ஒருசேர வந்து பொரவேண்டும் எனப் பேசிக்கொண்டனர். அப்பேச்சு இவன் காதில் பட்டது. உடனே சினம் மிகுந்தது. மிகுந்த சினம் வீணே அடங்கவில்லை. வஞ்சினமாயிற்று. புலமையோ னாதலின் அவ்வஞ்சினச் சொற்கள் பாவாய் வெளிவந்தன. அப்பாவே :

" மடங்கலிற் சினைஇ மடங்கா வுள்ளத்
தடங்காத் தானை வேந்த ருடங் கியைந்
தென்னொடு பொருது மென்ப வவரை
யாரம ரலறத் தாக்கித் தேரொ
டவர்புறங் காணே னாயிற் சிறந்த
பேரம ருண்கண் ணிவளினும் பிரிக
வறனிலை திரியா வன்பி னவையத்துத்
திறனில் ஒருவனை நாட்டி முறைதிரிந்து
மெலிகோல் செய்தே னாகுக மலிபுகழ்
வையை சூழ்ந்த வளங்கெழு வைப்பிற்
பொய்யா யாணர் மையற் கோமான்
மாவனு மன்னெயி லாந்தையு முரைசா
லந்துவஞ் சாத்தனு மாத னழிசியும்
வெஞ்சின வியக்கனு முளப்படப் பிறருங்
கண்போ னண்பிற் கேளிரொடு கலந்த
வின்களி மகிழ்நகை யிழுக்கியா னொன்றோ
மன்பதை காக்கும் நீள்குடிச் சிறந்த
தென்புலங் காவலி னொரீஇப் பிறர்
வன்புலங் காவலின் மாறியான் பிறக்கே " (புறம் 71)

என்பதாகும்.

வெகுளி, மகிழ்வு, துயரம் ஆதிய பண்புகள் தமது அளவினும் மிகின் அறிவு தொழில் புரியாது என்பது உளநூல் கருத்து. அக்கருத்தையும் மாற்றிற்று இவனது உள்ளம் ; வெஞ்சினமிக்கு வஞ்சினங் கூறுங்காலும், அன்பினும் அறனினும் மேனிலை யுற்றது. அவன் கூறும் வஞ்சினத்தைக் கவனியுங்கள்.

"வேந்தர் பலர் தம்முள் ஒப்பக் குழுமிவந்து என்னேடு பொருதும் என்ப; அவரைத் தாக்கிப் புறங்காணேனுயின், சிறந்த பேரமருண்கண் இவளினும் பிரிக" என்பது முதல் வஞ்சினம். இதில் மனைவி மாட்டு வைத்த காதலன்பு மிளிர்கின்றது. சின மிகுங்காலும் காதல் குறையாதது போற்றத்தக்கதன்றே! ஆளுந் தலைவர் துன்பமோ, வெகுளியோ வேறு எவ்வித குறையோ கூறுங்காலும் தம்மடி நிழல் வாழ்வார் மாட்டு வைத்த அன்பு நெகிழ்தலின்றி முகிழ்த்தலே சாலச்சிறந்தது. அதுவே தமிழன் உள்ளம். அவ்வுள்ளம் பாண்டியன் மாட்டு மிளிர்தலை உன்ன உன்ன உளம் பூரிக்கின்றது.

இரண்டாவதாக," அறன் நிலை திரியா அன்பின் அவையத்து திறன் இல் ஒருவனை நாட்டி முறை திரிந்து, மெலிகோல் செய்தேன் ஆகுக" என்கின்றனன். இவ்வஞ்சினம் நீதியின் நேர்மை இத்தன்மைத்தென இசைக்கின்றதல்லவா? அரசனுக்கு வென்றி தருவது வேலன்று, கோடாத செங்கோலேயாகும். அரசன் வையகம் முழுவதையும் முறைசெய்து காக்கின்றான். ஆனால் அவனைக் காப்பது அவனது நீதியேயாகும் என்று புகன்றனர் பொய்யில் புலவர். இத்தகைய நீதியில் நமது பாண்டியன் உள்ளம் எவ்வாறு படிந்து கிடந்தது பாருங்கள். அரசனைக் காப்பது நீதி. ஆதலின் அந்நீதியை நடாத்தும் நெறிமுறை யுணர்ந்த அறங்கூறவையினர் அறத்தின் திறனை காட்சி, கருத்து, நூல் என்ற மூன்றானும் நன்குணர்ந்த மேதையராய் மிளிர்தல் வேண்டும். அது காலைதான் அறங்கூறவையில் நீதி நிலைக்கும். நீதி நிலைத்தால்தான் அரசன் அதன் பாதுகாவலில் வாழமுடியும். இஃதன்றித் திறனில் ஒருவனை நீதிமன்றில் நிறுவினால் அவன் அறன்முறை யுணரும் அறிவாற்றலின்மையானும், தன்னலங் கருதி மனந் திரிதலானும் முறைதிரிந்து நீதி வழுவுவன். வழுவவே அரசன் கோல் மெலிந்து பாதுகாவலின்றிப் பாழுறுவது திண்ணம் என்ற உண்மை யுணர்ந்தே," அறங்கூறவையத்துத் திறனில் ஒருவனை நாட்டி முறைதிரிந்து மெலிகோல் செய்தேனுகுக" என வஞ்சினங் கூறலாயினன்.

என்னே தமிழரசர் மனப்பண்பு! இவர்கள் ஆளும் நாட்டு மக்களின் நலமிகு வாழ்வை நவிலவும் வேண்டுமோ? இந்நாள் நீதி மன்றத்து அறங் கூறவையினர் புரியும் செயல்களை இதனேடு ஒப்பிட்டு உணரின் தற்கால மக்கள் மகிழ்வுறுதற்கும் அரசு நிலை பெறுதற்கும் ஏதேனும் வாய்ப்புளதோ? நீங்களே சிந்தித்துத் தித்தியுங்கள்.

மூன்றாவதாக " மாவன், ஆந்தை, அந்துவஞ்சாத்தன், ஆதனழிசி, இயக்கன் ஆகிய இவருட்பட்ட என் கண்போன்ற நண்பினர்களுடன் மகிழும் மகிழ்ச்சியை யான் இழக்க" என்கின்றனன். இக்கூற்று, பூதப்பாண்டியனது உளம் நட்பின் கெழுதகைமையில் எவ்வாறு ஊன்றி நின்றது என்பதை உணர்த்துகின்றது. என்னே பூதப்பாண்டியனது நட்பின் காதல். பல்கலை பயின்றோனுதலின் "போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை" (நெய்தற்கலி 16) என்ற நல்லந்துவனர் வாக்கையும்,"யாதும் கிழமையைக் கீழ்ந்திடா நட்பே பழைமை யெனப்படுவது; அப் பழைமையிற் றிரியாது நின்றாரது நட்பினை அந்நட்பினரால் பொருட்கேடு, போர்க்கேடு முதலான தொலைவு வந்த விடத்தும் நட்பு வரம்பு இகவாது நின்றவர் துற

வார்" என்ற செந்நாப்போதார் சீரிய கருத்தையும் நன்கு உணர்ந்துளன். எனவே போரில் தோற்பதினும் நட்பினருடன் கலந்து மகிழும் மகிழ்நகையைத் தப்புதல் மிகக் கொடுமையான தென்பதை நன்குணர்ந்தே வஞ்சினங் கூறி விஞ்சினன் போலும். இது போன்ற வஞ்சினம் தமிழர்பால் என்றும் நிலவுக!

"கலந்தாரைக் கைவிடுதல் விலங்கிற்கும் விள்ளலரிது" என்றுர் நாலடியாரும். ஏன்? ஆத்தி சூடியில் அவ்வையாரும் "கூடிப் பிரியேல்" என்று கூறினரன்றே! இவற்றையெல்லாம் உன்னுங்கால் தமிழன் உள்ளம் அன்பிற் றிளைத்து அருளின் மூழ்கி அறம் புரிந்து உரங்கொண் டொளிர்தல் விளங்குகின்றதல்லவா? இக் கூற்றுக்களால் தமிழன் உளத்தில் அன்பு நிறைந்து ஒளிர்தலை ஒருவாறு உணரலாம். இம்முறையில் பண்டைத் தமிழ் நூற்களை எங்குத் துருவினும் அங்கங்கும் தமிழன் உள்ளம் எத்தகைய மறச்செயல் புரியுங்காலும் அன்பின் பெருக்கிலே படிந்து அறவழி நிற்றலை அறிந்து மகிழலாம்.

எனவே தமிழர் யாவரும் தொல்லோர் உளப்பாங்கினை ஆன்ற கல்வியறிவுடன் ஓர்ந்து அறம் பல புரிந்து நாற்றிசை மாந்தரும் புகழ நல்வாழ்வு நடாத்துவம் இனிதே.



# ஒரு நிகழ்ச்சிச் சித்திரம்

(வித்துவான். திரு. R. S. மயில்சாமி P. O. L. பழனி)

கல்வித் துறைபடிந்த கண்மணியே ! கற்றபடி
நல்விதமாய் நாளும் நடைபயில்க—செல்வியே
நேற்றுப்பகல் வீட்டில் நிகழ்ந்ததொரு சேதி
சாற்றக்கேள் உண்டபின்பு சாந்தியாய்—வீற்றிருந்த
பங்கமிலா அத்தானைப் பார்த்துக் குறுஞ்சிரிப்பாய்
"உங்களைத்தான்" என்றக்காள் ஓதினாள்—இங்கிதமாய்
என்ன, என்றார். பாற்காரி ஏழுதரம் வந்துசென்றாள்
என்னிடத்தில் பைசாவும் இல்லையே—இன்னமும்நான்

எத்தனைநாள் இப்படியே இச்சகமாய்ப் பேசுநய
வித்தைதனைக் காட்டுவேன் வெட்கம் என்றாள்—அத்தானும்
மண்டை யுடைக்காதே மாதத்துச் சம்பளத்தை
கொண்டுவந்த அன்றே கொடுத்துவிட்டேன்—செண்டாடிப்
பத்துநாளில் குருவி பறந்துவிட்ட தென்றுசும்மா
நச்சுவதேன் என்றார். நம்மக்காள்—சத்தமாய்
எப்போதும் கேட்டபொழு திப்படியே கோபமா
அப்பப்பா இப்பிழைப்பா ஆச்சென்றாள்—அப்போது
பக்கத்தில் நின்றிருந்த பாக்கியத்தம் மாள்உரைத்தாள்
அக்கக்கா இப்படித்தான் அங்கேயும்—தக்கபடி

பல்வகையாம் கைத்தொழில்கள் பட்டணத்தில் உள்ளதினால்
நல்விதமாய் வாழலாம் நாமுந்தான்—செல்வதென்று
எல்லோரும் போனதுபோல் எங்களது வீட்டாரும்
நல்லநாள் பார்த்துநகர் நண்ணினார்—தொல்லைதனை
நஞ்சாய் நினையாமல் நம்பிக்கை கொண்டெழுவர்
பஞ்சாலை பிறதொழில்கள் பார்க்கின்றார்—அஞ்சாமல்
அல்லும் பகலும் அலைந்தாலும் மாதத்தில்
இல்லந் தனில் மகிழ்ச்சி ஏழேநாள்—சில்லரையா
முந்நூறு ரூபாய் முழுசாக வந்தாலும்
அந்நாளே தீர்ந்துவிடும் அத்தனையும்—எந்நாளும்

15. கூட்டுறவு ஸ்டோர்நிலுவை கொடுத்ததிலே மீதிதான்
வீட்டுக்கு வந்து விளையாடும்—ஓட்டந்தான்
வட்டிக்கும் வீட்டுக்காம் வாடகைக்கும் டீக்கடைக்கும்
பட்ட கடனுக்கும் பாலுக்கும்—துட்டெல்லாம்
துள்ளி யெழுந்தாடும் தோழர்க்கும் காப்பிதரும்
கள்ளமிலாக் காட்சிபல காண்பிக்கும்—உள்ளபடி
எட்டாம்நாள் வீட்டிலே எங்கும் முணுமுணுப்பு
சிட்டாய்ப் பறக்கும் சிரிப்பெல்லாம்—எட்டாமல்
அத்தை முகஞ்சுளிப்பாள் அண்ணு கடுகடுப்பார்
நித்தமும் பத்தியமே நீடிக்கும்—சொத்தைச்சொல்

20. எத்தனையோ வந்துவிழும் என்றுலும் ஊமைபோல்
ஒத்திருக்க வேண்டுமென் றேயுரைத்தாள்—இச்சமயம்
கந்தல் துணிஇடையில் கண்ணுள் குழிந்தமுகம்
அந்தம் இழந்தெழும்பே ஆனஉரு—இந்தவிதம்
அன்னமிலாச் சோர்வுடனே ஆடிவந்தான் கந்தப்பன்
என்னப்பா ! காலில் இரத்தமென—பொன்னம்மா
"தண்ணீர்" எனக்குழறிச் சத்தியின்றிப் பொட்டென்று
திண்ணைமேல் வீழ்ந்தான் திடுக்கிட்டோம்—தெண்ணீர்
தெளித்தோம் சுடுகாப்பி சீக்கிரத்தில் ஊற்ற
நெளித்தான் சிறிதுநினை வுற்றுன்—களிப்படைந்தோம்

25. கண்விழித்தான் அத்தானும் கந்தப்பா என்றழைக்க
அண்ணு ! என எழுந்தான் ஆர்வமுடன்—திண்ணைச்
சுவர்மேலே சாய்ந்தபடி சொல்லுகிறுன் உண்மை
எவர்மேலும் குற்றமதே இல்லை—அவரவர்கள்
எந்தெந்தக் காலத்தில் எதுபெற வேண்டுமோ
அந்தந்தக் காலம் அதுகிடைக்கும்—நொந்தென்ன
சின்னஞ் சிறுவயதில் செல்லப்பன் தோட்டத்தில்
அன்னத்துக் காக அமர்ந்துழைத்தேன்—பின்னுளில்
செல்வருக்கெல் லாமுழைத்தே சேர்த்த சிறுதொகையால்
கல்யாணஞ் செய்தேன் களிப்பாக—செல்வமணி

30. வீட்டுக்கு வந்தாள் விரிவடைந்த தென்குடும்பம்
தேட்டுக்குந் தீனிக்கும் சேரவில்லை—வாட்டமுறும்
பெற்றவட்கும் என்றன் பிரிய மனையாட்கும்
முற்றியது சண்டை மும்முரமாய்—வற்றியே
கூனிக் குறுகிதினம் "கொள்கொள்" எனுந்தந்தை
மேனி வலுக்கவழி வேறில்லை—தேனினிய
செல்வர் பசிப்பிணிக்குத் தீய்ந்த பருக்கையிலே
கல்வி அளித்தல் கனவன்றே—பல்வகையாய்க்
காலைமுதல் மெய்யைக் கசக்கிப் பிழிந்தாலும்
மாலையிலே கூலியந்த மட்டந்தான்—வேலைசெய்து

35. விற்றவிலை பார்த்தாயா வீணாய் உழுதிளைத்தோம்
பற்றுது நம்குடியே பாழாகும்—சற்றே
உழுதொழிலை இந்நாள் ஒழிக்கலா மென்றே
அழுகிறார் பண்ணையுளார் அங்கே—முழுமுழுக்க
சந்திரனும் சூரியனும் சார்மழையும் வெங்காற்றும்
வந்துவிளை யாடுவதென் மாமனைதான்—சொந்தமென
அத்தனுக்குக் கீழாடை யன்றியிலை நூறுதரம்
தைத்ததுணி ஒன்றேஎன் தாய்க்குண்டு—புத்திரர்கள்
தாய்க்கோழிச் செட்டைக்குள் தாவுகின்ற குஞ்சுகள்போல்
தாய்க்கிழிசல் சேலைக்குள் தாமொளிப்பர்—வாய்த்தசிறு

40. பச்சைக் குழந்தையொன்று பாலின்றிச் சாகவும்தாய்
மொச்சைதின்று மூச்சுவிட்டாள் முந்தாநாள்—நச்சுகின்ற
பாலகரும் பெற்றோரும் பட்டினியால் மாய்கின்றார்
காலகதி எண்ணிக் கலங்கியே—வாலிபன்போல்
பட்டணத்தில் வேலையொன்று பற்றினால் இவ்வறுமை
விட்டுவிடும் என்றுவந்தேன் வேகமாய்—எட்டியடி
வைக்கின்ற போது வழுக்கிவிழுந் தேன்குழியில்
பக்கமெலாம் காயந்தான் பார்த்தென்ன—அக்கரையாய்
இப்படியே வந்தேன் எஜமானைக் கண்டுகொண்டேன்
எப்படியும் துன்பமினி இல்லை " யென்றான்—" அப்பனே!

45. இன்றே குடியரசு எல்லோர்க்கும் ஒன்றுபோல்
நன்றே பிறக்குமிது நம்புவாய்—குன்றுமல்
எங்கும் வளம்பொலியும் இன்பமுடன் நாமெல்லாம்
மங்களமாய் வாழ்வோம் மகிழ்ந் " தென்றார்—தங்கையே!
கல்விப் பயிர்வளரும் கைத்தொழில்கள் ஏற்றமுறும்
செல்வஞ் சிறக்கும் திறலோங்கும்—பல்பொருளும்
இல்லாமை இந்நாட்டில் இல்லாமற் செய்கின்ற
வல்லார்கள் மேன்மேலும் வாழ்வார்கள்—பொல்லாத
சட்டந் திருத்தமுறும் சச்சரவு மட்டாகும்
பட்டதுயர் முற்றும் பறந்தோடும்—திட்டமாய்

50. அன்பு நிலவும் அருள் நிறையும் இவ்வுலகில்
இன்பம் பெருகும் இனி.

# தமிழ் வளர்ச்சி

(வித்துவான். திரு. மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை, கச்சியம்பதி)

" இருந்தமிழே ! உன்னால் இருந்தேன் ! இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன் ! "

—தமிழ் விடு தூது, 151.

" தமிழ் வாழ்க !" என்னும் இன்னொலி யாண்டும் ஒலித்துப் பேரின்பம் பயக்கும் இந்நாளில், தமிழ் வளர்ச்சியைப்பற்றி எண்ணுவதும் இயம்புவதும் தமிழ்த் தொண்டு புரிய விழையுந் தக்கார் பலர்க்கும் இன்றியமையாக் கடனாகும். சங்க காலத்துத் தமிழ் நாட்டில் தனியாட்சி செய்த தமிழன்னை, அயல் மொழிக்குத் தன் அரியணையை உரியதாக்கி அடிமை வாழ்வினை அடைந்திருந்தமைக்குக் காரணம், இந்நாட்டில் அயலார் ஆட்சி ஆணிவேர் ஊன்றி ஆக்கம் பெற்றமையே என்பது, அனைவரும் அறிந்த உண்மை.

தமிழர்—விண்ணவர் அளிக்கும் விருந்தினும்—அமிழ்தத்தினும் தமிழ்மொழி இன்பம் பயப்பதில்—உயிர்க்கு உறுதி செய்வதில்—ஒப்பற்ற கருவியெனக் கருதிய தமிழர்—பண்டைத் தமிழர்—பல துறைகளிலும் தமிழை வளமுறச்செய்து வாழ்ந்தனர். இறைவனும் தமிழ் இசைக்கு இதயம் களித்தனன்—இன்பத்தொண்டு இயற்றினன்—எனத் தமிழ் நாட்டில் கேட்கப்பட்டு வரும் தெய்விகக் கதைகள், அந் நாளில் வாழ்ந்த தண்டமிழ் வாணர் தமிழுக்கு அளித்த தனிப்பெருமதிப்பை உணர்த்த எழுந்தனவேயாகும் எனக் கருதுதல் குற்றமுடைய செயலாகாது.

முடியுடை மூவேந்தரும் முதன்மை தந்து வளர்த்த தமிழ்—பாவலன்பொருட்டுப் பச்சைப் பசுங்கொண்டலும் பின் தொடரச்செய்த செந்தமிழ்—பரவை மனை மீதில் அன்று ஒரு பொழுது தூது செல்லப் பரமனையும் பணிகொண்ட பைந்தமிழ்—தன்னால் வைதாரையும் இறைவன் வாழவைத்தற்கு வாய்ப்புத்தந்த வண்டமிழ்—இறவாப் புகழ்பெற்ற எண்ணற்ற நூற்களை இயற்றித் தந்த இன்றமிழ்—சித்தர் பலரைத் தோற்றுவித்த தீந்தமிழ்—இயல் இசை நாடகங்களால் இன்பம் விளைத்த எழிற்றமிழ்—பின்னாளில் கண் இருந்தும் காணாமலும், செவியிருந்தும் கேளாமலும், வாய் இருந்தும் பேசாமலும், குருடர்களாய்ச் செவிடர்களாய் ஊமைகளாய்த் தன் மக்கள் ஆளவந்த அயலார் மொழியின்மேற் கொண்ட அளவில்லாக் காதலால் மதியிழந்து மாறத் தானும் அஞ்ஞாதவாசத்தினை மேற்கொண்டு அல்லலுறுவதாயிற்று.

பழந்தமிழ் நூல்கள் பரணமேலேறிப் பதுங்கின ! எண்ணற்ற சுவடிகள் எரிக்கிரையாயின ! பதினெட்டாம் பெருக்குப் பற்பல சுவடிகளைப் பௌவத்திற் கொண்டு போய்ச் சேர்த்தது. புரப்பார் இலராகவே, புலவரும் இலராயினர் ; காவியங்காணும் கவிஞரும், பாவலரும், நாவலரும் அருகினர்.

ஒண்டவந்த மொழி உலவாச் செந்தமிழ் மொழியை ஒளிமங்கச்செய்து, அடுப்பங்கரையிலும் ஆட்சி புரிவதாயிற்று. ஆளவந்தவர்களின் மொழிக்கு அடிமைப் பணி பூண்டவரே, அருங்கலைவாணராகக் கருதப்பட்டனர். நாடெங்கும் ஆங்கில மொழியே ஆட்சி புரிவதாயிற்று. அறிஞர் பலரும் தமிழ் மொழியில் உரையாடுவதும் தம் மேன்மைக்கு ஊறு விளைக்குமெனக் கருதி, அங்கில உடை, அங்கில மொழி ஆகிய அயல்நாட்டுச் சரக்குக்களுக்கே ஆக்கமளித்துவந்தனர். மேடைப் பேச்சாளர்களும்—அங்கில மொழியை அரைகுறையாகக் கற்றவர்களும்—தங்களுக்குத் தமிழில் பேசத்தெரியாதென்பதைத் தனிப்பெருமதிப்புடன் கூறி, அன்ன நடை கற்கப்போய்த் தன்னடையும் இழந்தாற்போல, கருத்தாழமற்ற—கண்ணியமற்ற—தங்கள் எண்ணங்களைக் குழறிவந்தார்கள்.

தமிழைத் தக்க ஆசிரியரிடம் பயின்று, மொழித்திறத்தின் முட்டறுத்து, பெரும் புலமைபெற்று, போயொருத்தர் வாய்க் கேட்க நூலின்றி மன்னுதமிழ்ப் புலவராய்த் தம்மை நாடிவந்து பலரும் கேட்க வீற்றிருந்த பெரும்புலவர்கள், ஒட்டிய வயிறும், கட்டிய பீற்றலுமாய்க் காட்சியளித்தனர். அயல் நாட்டு மொழியில் ஆர்வங்கொண்டு, வயிற்றுப் பெருமான் பொருட்டு வரட்டுப்பாடமோதி, வாய் வந்தன பேசித்திரிந்த அயல் மொழிப் பட்டதாரிகள், அப்புலவர் பெருமக்களை இகழ்ந்து பேசுவதும், ஏளனம் செய்வதும் தம் அறிவுடைமைக்கு அழகெனக் கருதி, போற்று தலறியாப் புல்லர்களாய், எங்கும் தூற்றுதலையே செய்து, அயலானுக்கு அடி பணிந்து வாழ்க்கை நடத்திவந்தார்கள்.

இத்தகைய நெறி பிறழ்ந்த செயல்களால், தமிழ் கற்பாரும் நாளுக்குநாள் அருகினர். தமிழ் மக்களுட் பலர், தம் பெயரைப் பிழையின்றி எழுதவுந்தெரியாத நிலையில் உயரிய பதவிகளில் அமர்ந்து, அடிமைத் தொண்டாற்றி மறைந்தனர். அவர் கற்ற கல்வி, நாட்டின் உரிமையாட்சிக்கு அணுத்துணையும் ஆக்கந்தேடப் பயன்படாமற் புறஞ்சுவர் கோலஞ் செய்யவே துணைபுரிந்தது.

கடல் கடந்து வாணிகஞ் செய்யக் கருதி இவ்வள நாடு புகுந்த வெள்ளையர்கள், கொள்ளையர்களாய் மாறி, ஏமாளிகளாய்க் காட்சியளித்த இந்நாட்டவர் உதவி கொண்டே தம் நாட்டாட்சியை இந்நாட்டில் வேரூன்றச் செய்துவிட்டார்கள்.

இது காரணமாக, இந்நாட்டவர் தந்நாட்டு மொழியின் ஏற்றத்தை அடியோடு மறந்தொழிந்தமையின்,

“யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணோம் !
பாமரராய் விலங்குகளாய்க் குருடர்களாய்ச்
செவிடர்களாய்ப் பான்மை கெட்டு,

## தமிழ் வளர்ச்சி

"நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ ? சொல்லீர் !
சேமமுற வேண்டுமெனிற் றெருவெல்லாம்
தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர் !"

என உறங்கிய தமிழரை விழித்தெழப் பாடினார் நாட்டுமொழிப் பாட்டின் மூலம் மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் தமிழருக்கு ஊட்டக் கருதிய "பாரதியார்" என்னும் பழம்புதுக் கவிஞர்.

எங்கும் தமிழ் முழக்கம் கேட்கிறது ! "வாழ்க தமிழ் !" என்று இளஞ்சிறுரும் முழங்குகின்றனர். இது தமிழுக்கு மீண்டும் நற்காலம் பிறக்கிறது என்பதற்கு நல்லறிகுறிதான் என எண்ணி மகிழ்கிறோம் ! ஆனால், கற்பாரின்றி—கற்பிப்பாரின்றி—போற்றுவாரின்றி—புனைவாரின்றித் தமிழ் எவ்வாறு தழைத்தோங்கும் ? ஒலியளவாய் உருக்கொண்ட தமிழர் நல்லெண்ணம், செயலளவில் உருக்கொள்ள வேண்டாவா ? விளம்பரப் பலகைகளெல்லாம் கொட்டை எழுத்தில் தமிழணங்கின் சிதைந்த சொற்களைத்தானே விளம்பரம் செய்கின்றன ? பட்டம் பெற்ற "அறுணஜலங்களும், வெங்கிடாஜலங்களும், றெங்கஸ்வாமிகளும், திருவாங்கிடங்களும், பிரும்மணார்களும், ஹோட்டல்களும்" இன்றும் காட்சியளித்துக் கொண்டுதானே இருக்கின்றன ! தெருப்பெயர் திருத்தமறப் பொறிக்கப்பெற்ற பலகைகள் இன்னுந் தமிழ்நாட்டில் திகழ்ந்து கொண்டுதானே வருகின்றன !

ஆயிரக் கணக்கில் அச்சுவாகனமேறி வெளிவரும் தமிழ்ச் சுவடிகளிலும், நாட்செய்தித்தாள்களிலும் இன்றும் அம்மைத்தழும்புகள் அகன்ற பாடில்லையே! பேச்சிலும் எழுத்திலும் பிழைபட்ட சொற்கள் அல்லவா இன்றும் நாம் கேட்டுவருவனவும் பார்த்து வருவனவுமாய் உலவுகின்றன. வெட்கம் ! வெட்கம் !

அருந்தமிழ் அன்னைக்கு ஆக்கமளிக்க விரும்பும் அன்பர்களே,

"ஒல்லும் வகையால் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல்."

என்னும் வள்ளுவர் வாய்மொழியை உள்ளத்திற் கொண்டு, எங்குந் தமிழ்மொழி தழைத்தோங்கற்கான செயல்களில் அனைவரும் ஊக்கம் காட்டுங்கள். நகரின் பல இடங்களிலும் மாலைநேரப் பள்ளிகளமைத்துத் தமிழ் கற்கும் வாய்ப்பிழந்தார்க்கு நல்லாசிரியர்களைக் கொண்டு தமிழைக் கற்பிக்க வழிகோலுங்கள். ஒவ்வொரு சிற்றூரிலும் நற்றமிழ் நூல் நிலையங்களை நிறுவிச் சிறுவர், சிறுமியர், இளைஞர், முதியர், பெண்டிர் ஆகிய அனைவரும் ஒவ்வொரு நாளும் நூல் நிலையத்திலுள்ள நூல்களை வாங்கி ஓய்வுநேரத்திற் படித்துப் பயனடையும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள். நாட்டின் நலங்கருதும் செல்வர்கள், தங்களால் இயலுமளவு பொருளுதவி செய்து, இவ்வாக்க வேலை இடையீடின்றி நடைபெறச் செய்யுங்கள்.

## தமிழ் வளர்ச்சி

கல்விக் கழகங்களில் தமிழ்த்தொண்டு மேற்கொண்டுள்ள தமிழாசிரியர்களின் மதிப்பைப் பல வகையாலும் உயர்த்த முயலுங்கள். பதிப்பகங்களில் நல்ல தமிழ்ப் பயிற்சி பெற்றுள்ள அறிஞர்களை அமர்த்தி, அச்சேறும் சிறு விளம்பரத்தாள் முதல் கலையாக்கங் கருதி வெளியிடும் நூல்கள் இறுதியாக, அனைத்தும் பிழையறப் பார்வையிடச் செய்து, வெளியாக்குங்கள்.

இன்னும் அறிஞர்கள் எவ்வெத்துறைகளிலெல்லாம் தமிழுக்கு ஆக்கந்தேட இயலுமோ, அவ்வத்துறைகளிலெல்லாம் ஆக்கந்தேடுவதைத் தமது உயரிய கடமையாகக் கொண்டு பணியாற்றினாலன்றித் தமிழ் வளர வழியுண்டாகாது. வாழ்க தமிழ் !

தமிழ் மொழியைத் தழைத்தோங்கச் செய்வதில் ஆர்வங்கொண்டு அருந்தொண்டாற்றிவரும் புதுவைக் கல்விக்கழகம், வெள்ளி விழா கொண்டாடுவது, புதுவைக்கு மட்டுமன்றித் தமிழ் நாட்டிற்கே தனிப்பெரு மகிழ்ச்சியை விளைக்கத்தக்க செயலாகும். இக்கழக அமைப்பாளரும் அமைச்சரும் உறுப்பினரும் இடையறாது செய்து வரும் கலைத்தொண்டு அனைவர் பாராட்டுக்கும் உரியதாகும். வாழ்க கலைக் கழகம் ! அதன் தொண்டிற் பங்குபெற்ற-பெறுகின்ற-பெருந்தொண்டர் பலரும் பல்லாண்டு வாழ்க !

# அழியாக் கவிஞன்

(திரு. அ. ச. ஞானசம்பந்தன், M.A. சென்னை)

புதுவை என்ற உடன் கவிஞர் பாரதியாரின் நினைவுதான் மேலோங்கி வருகிறது. நம் காலத்து வாழ்ந்த இக்கவிஞர்பிரான் சிறப்பை இன்னும் நாம் நன்குக உணர வில்லை என்றே சொல்லவேண்டும். பாரதியாரின் தேசியப் பாடல்கள் நாட்டுப்பற்றை உண்டாக்குபவை. அப்பாடல்களால் நாட்டுப்பற்றுப் பெற்று நாட்டுத்தொண்டில் ஈடு பட்டவர் பல்லாயிரவர் எனின் மிகையாகாது. ஆனல் "என்று தணியும் இந்தச் சுதந் திர தாகம்" என்று இனிப் பாட வழியில்லை. பாடினல் அது பொருத்தமற்றதாக வும் இருக்கும். அப்பாடல்களிலும் ஒரு சில கால தேச வர்த்தமானம் கடந்து அழி யாமல் நிற்பவை என்று கூறுதல் பொருத்தமுடையது. எனினும் நாளைத் தமிழ் நாட்டின் பாரதியாரின் இடம் எங்கே ? எது கொண்டு அவர் புகழ் நிற்கப்போகிறது. நாட்டுப்பாடல்கள் ஒன்றுமட்டுமே அவர் ஆக்கி இருப்பின் வருங்காலத் தமிழ் நாட் டில் அவர் இடம் பெறுவார் என்று கூற இயலாது. அடிமைப்பட்டுத் தன்னுணர்ச்சி இன்றி இருந்து தமிழ் நாட்டைத் தட்டி எழுப்ப ஒரு கவிஞன் தேவைப்பட்டான். உறங்குபவனை எழுப்பி ஊக்கமூட்ட அக்கவிஞன் கையாளக்கூடிய வழி ஒன்றுதான். அது வெறியூட்டுவதேயாகும். அவ்வெறி புகுந்தால் அன்றி உறங்கும் சமுதாயம் தொழிற்பட முடியாது. ஆனல் நாட்டுப்பற்று என்ற வெறியுணர்ச்சியும் ஒரு கார ணம் பற்றித் தோன்றிய உணர்ச்சிதானே. காரணம் பற்றித் தோன்றும் எந்த உணர்ச்சியும் காரணம் முடிந்தவழி அழிவது இயற்கை யன்றோ ? சுதந்திரம் வேண்டி எழுந்த உணர்ச்சிவெள்ளம் அச்சுதந்திரம் கிட்டியவுடன் அடங்கிவிட்டது.

அவ்வாறுயின் பாரதியாரின் நாட்டுப்பாடல்களும் அவ்வுணர்ச்சி அடங்கியது போல் தாமும் அடங்கிவிட்டன. இவ்வகைப் பாடல்கள் மட்டும் அக்கவிஞர் ஆக்கி யிருப்பின் அவரும் நாளாவட்டத்தில் நம்மால் மறக்கப்பட வேண்டியவரே ஆவார். ஆனல் பாரதியார் இத்தகைய கவிஞர் அன்று. கால, தேச, வர்த்தமானம் கடந்த கவிதைகள் பல புனைந்துள்ளார் அவர். பாரதியார் பாடலை நன்குணர்ந்த பலரும் அந்நாட்டுப் பாடல்களில் கவனம் செலுத்தியதுபோல் இதிற் கவனம் செலுத்த வில்லை. நாட்டுப்பாடல் அறிந்தவர் நூறுபேர் என்று வைத்துக்கொண்டால் இக்கவி தைகளை அறிந்தவர் பத்துப்பேர்கூட இருக்கமாட்டார். காரணம் என்னை ? கலையை யாவரும் அறியும்படியாக நடுத்தெருவிற்குக் கொண்டுவந்து நிறுத்தவேண்டும் என்று கூரை முகட்டில் ஏறிக் கூப்பாடு போடும் மறுமலர்ச்சியாளர் கவனிக்க வேண்டிய இடம் இது. பாரதியார் பாடிய இக்கவிதைகள் முழுவதும் கலைத் தன்மை வாய்ந்தவை. கலைப்பண்பு நிறைந்த அக்கவிதைகளை அனுபவிக்க அனைவ

ராலும் ஆகாது. அக்கவிதைகளில் வெறியுணர்ச்சி இல்லை. தெருவோடு செல்வோரைத் தடுத்து நிறுத்தும் பளபளப்பு அவற்றிடம் இல்லை. தம்மை நாடி வந்து, பணிவோடு தம் பொருளை விளக்கவேண்டும் என்று வேண்டிக்கொள்ளும் கலைப்பித்தர்கட்கு மட்டுமே விளங்கக்கூடிய பண்பு வாய்ந்தவை அக்கவிதைகள். குயில்பாட்டு, கண்ணன் என் தந்தை, கண்ணன் என் தாய் என்பன போன்ற கவிதைகளை அனைவரும் படித்து இன்புறுதல் ஆகாத காரியம் ; அறிந்துகொள்ளுதல் அதனினும் கடினம் ; அனுபவித்தல் என்பது கலை மனம் படைத்த ஒரு சிலருக்கே ஒல்லுவதாகும்.

ஆனால் நாளை உலகில் பாரதியார் வாழப்போவது இத்தகைய பாடல்களால்தான். இவற்றில் பயின்றுள்ள உணர்ச்சிகள் நாட்டு விடுதலை உணர்ச்சியைப் போலத் தோன்றி மறைபவை அல்ல. இவை மனிதன் தோன்றிய நாளிலிருந்து அவன் இவ்வுலகில் வாழும் இறுதிநாள் வரை இருந்து தீரும் உணர்ச்சிகள். "காதல் போயில் சாதல் சாதல்" என்றுதான் ஆதி மனிதனும் கூறினன் ; நாகரிகம் படைத்த இன்றைய மனிதனும் கூறுகிறன் ; நாளைய மனிதனும் கூறுவான். நல்வழி நடப்பவர் துன்புறுதல் ஏன் என்ற வினவை ஏழாம் நூற்றுண்டில் வாழ்ந்த திருநாவுக்கரசரும், எட்டாம் நூற்றுண்டில் வாழ்ந்த நம்மாழ்வாரும் கேட்டதோடு அவ்வினு நின்றுவிடவில்லை. இன்றும் நம்மிடையே விடைகூற முடியாதபடி நிற்கும் இவ்வினுவை விடையாக்கிப் பாரதியார் "நல்வழி நடப்பவரைச் சற்று மனம் நையும்வரைச் சோதனை செய் நடத்தை யுண்டு" என்று பாடுகிறர். "ஓதி யுணர்ந்தும் பிறர்க் குரைத்தும் தானடங்கா" மக்கள் அன்றும் உலகிடை உண்டு ; இன்றும் உண்டு ; நாளையும் இருப்பர். இத்தகையருள் சிலர் ஒரே வழித் திருந்துதலும் உண்டு. அத்தகைய ஒரு சிலரைத்தான் "கண்ணன் என் சேடன்" என்ற பகுதியில் காண்கிறேம். சூதில் இழக்க இழக்கப் பற்று மிகுவது மனிதனின் உயிர் இயற்கை. இவ்வியற்கைதான் பாஞ்சாலி சபதத்தில் தருமனுக வடிவுபெற்று இலங்குகிறது. ஆணவம் முதலில் வெற்றி தருவதுபோலக் காட்டி இறுதியில் தன்னை மேற்கொண்டவனை அடியோடு அழித்துவிடும் இயல்பிற்று. அதுவே துரியனுக விளங்குகிறது. குப்பையிலேதான் மலர் கொஞ்சும் குருக்கத்திச்செடி வளர்கிறது. அதுபோலத்தான் விகருணன் துரியோதனக் கும்பலில் தோன்றுகிறன். உலகை ஆட்டிப்படைக்கும் சக்தியின் விளையாட்டு மனிதனின் ஆராய்ச்சி அறிவுக்கு அப்பாற்பட்டது. அச்சக்தியின் வடிவாகவே கண்ணன் விளங்குகிறன்.

இதுவரை கூறியவற்றிலிருந்து பாரதியார் அழியாக்கவியாக விளங்கும் உரிமை பெற்றவர் என்பதும், அதற்குரிய "அமரத்துவம்" பெற்ற பாடல்களையும் அவர் ஆக்கி உள்ளார் என்பதும், அக்கவிதைகளைப் போற்றிக் கற்றல் தக்கார் கடன் என்பதும் நன்கு விளங்குகின்றன அல்லவா ?

# தொண்டர் சீர் பரவுவார்

(வித்துவான். திருமதி. சு. கரும்படுசொல்லி, திருவையாறு)

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவுலா விய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

உலகத்தில் உள்ள எல்லாச் சமயங்களிலும் உள்ள பொது உண்மைகளேயும், சிறப்பு ஒழுக்கங்களேயும் சைவசமயம் தன்னிடத்தே ஏணிப்படிகள்போலக் கொண்டு அவற்றிற்கு மேம்பட்ட அதீத நிலேயில் இருக்கிறது. இதனுல் " சைவத்தின் மேல் சமயம் வேறு இல்லே " என்றும்," சைவ சமயமே சமயம் " என்றும் பெரியோர்கள் இதனேப் பாராட்டியுள்ளார்கள். இந்த அதீத வாழ்க்கையை நடத்திச் சைவத்தின் பெருமையை நிலேநாட்டியவர்களே அறுபத்து மூன்று நாயன்மார்கள் ஆவர். இவர்கள் " தொண்டர் " என்றும் கூறப்படுவார்கள்.

இவர்கள் மேனிமேல் பூசுநீறுபோல் உள்ளும் புனிதர்கள். பூகம்பம் போன்ற எவ்வித பெருந்துன்பத்துக்கும் அஞ்சாதவர்கள். தமக்கென விரும்பி மோட்சத்தையும் வேண்டிக் கேட்காத தம்முனேப்பு அற்ற வீரர்கள். எப்பொழுதும் சிவபெருமானின் திருவடிகளே மறவாதவர்கள். இவர்களது வரலாற்றுச் சிறப்பைப்பற்றிக் கூறிய காரணத்தால் தெய்வப் பாக்கிழாராகிய சேக்கிழார் "தொண்டர் சீர் பரவுவார்" என்று பட்டம் சூட்டப்பெற்ருர். எனவே அப்பட்டம் பெற்ற சேக்கிழாரையும் அவரது நூலேயும் பற்றிச் சிறிது எழுதுவாம்.

திருஞானசம்பந்தர் தேவாரம் முதலாகத் திருத்தொண்டர் புராணமென்னும் பெரிய புராண மீருகச் சைவத் திருமுறைகள் பன்னிரண்டாகும். அவற்றுள் பன்னிரண்டாவதாகிய பெரிய புராணம் பத்திச்சுவை நனி சொட்டும் செந்தமிழ்ப் பாக்களால் இயன்றது. தமிழ் மணமும் சைவமணமும் ஒருங்கே கமழ்வது. பண்டைத் தமிழ் நாட்டின் சிறப்பைச் செவ்வனே எடுத்துக்காட்டுவது. சைவசித்தாந்தக் கருத்துக்களுக்குத் தக்க எடுத்துக்காட்டுக்களேத் தன்னகத்தே கொண்டுள்ளது. சிற்றம்பலத் தெம்பெருமான் " உலகெலாம் " என எடுத்துக்கொடுத்த முதலேயுடையது. இத்தகைய அரும்பெறல் தெய்வத் திருமுறையைத் தமிழ் மொழி செய்த தவப் பயனுக, உலகுக்கு வழங்கிய பெரியார் சேக்கிழார் என்ற சிறப்புப் பெயர்பெற்ற " அருண்மொழித் தேவர் " ஆவர்.

"இப்பெரியார் சான்றோருடைத்தென" ஔவையார் புகழ்ந்து கூறியதொண்டை நன்னாட்டுப் புலியூர்க் கோட்டத்துக் குன்றை வளநாட்டுக் குன்றத்தூரில், வேளாண் குலத்தில் சேக்கிழார் குடியில் தோன்றினார். அக்குடிக்கு அவர் ஒரு திலகம் என விளங்கியதால் குடியின் பெயராலேயே இவரைச் சேக்கிழார் என்றே வழங்குவர். சிற்றிளம் பருவத்திலேயே கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கங்களில் இவர் சிறந்து விளங்கியதால் இவரது புகழைச் சான்றோர் பலர் கூறக்கேட்ட "சென்னி அபயன் குலோத்துங்கச் சோழன் தில்லைத் திருவெல்லை பொன்னின் மயமாக்கிய வளவர் போரேறென்று" புகழப்பட்ட சோழ மன்னன், தன் முதலமைச்சராக இவரை அமைத்துக்கொண்டான்.

அமைச்சுப் பூண்டோர்க்கு நுண்ணிய இயற்கையறிவும், திண்ணிய கல்வியறிவும், எண்ணிப் பேசும் சொல்வன்மையும், அரசன்பால் பேரன்பும், குடிகளிடத்து அருளும் இன்றியமையாதன. இவை யனைத்தும் ஒருங்கே வாய்க்கப்பெற்றிருந்தார் அருண்மொழித் தேவர்.

சமண காப்பியமாகிய சீவக சிந்தாமணிச் சுவையிலே அரசன் மூழ்கியிருப்பக் கண்டு அது தகுதியன்றென எடுத்துரைத்தும் அடியார் பெருமைகளை யெடுத்துரைத்தும், அவனது வேண்டுகோளினால் திருத்தொண்டத் தொகையை விரித்துத் திருத்தொண்டர் புராணம் இயற்றினார். இந்நூல் சிதம்பரத்திலேயே தொடங்கி முடிவு பெற்று ஆண்டே அரங்கேற்றப்பெற்றது. அங்கு இந்நூலைக் கேட்கவந்திருந்த அரசர்கள், மடாதிபதிகள், புலவர்கள், திருத்தொண்டர்கள் முதலிய பல்லாயிரக்கணக்கான மக்களுக்கும் அரங்கேற்றுதல் நடைபெற்ற ஓராண்டு முழுவதும் வேண்டிய உணவு, உறையுள், மருந்து முதலிய எல்லா வசதிகளையும் அனபாய அரசனே அளித்தான். அரங்கேற்ற முடிவில் புராணத்தையும் அதன் ஆசிரியரையும் யானை மேலிருத்தி நகர்வலஞ் செய்வித்துப் பெருமைபடுத்தினான். ஆசிரியருக்குத் தன் இரு கரங்களாலும் கவரி வீசிச் சிறப்புச் செய்தான். அம்மன்னனது அன்பும், அருளும், சைவப்பற்றும், அடியார் பணிவும் எத்துணையென யாம் கூறவல்லோம்.

சேக்கிழார் இயற்றிய நூலின் சுவைகள் பலவற்றினும் பத்திச்சுவையே ஏனைச் சுவைகளிலும் குறிப்பாகக் குறிக்கொள்ளத் தக்கது. ஆண்டவனை "அன்" விகுதியாற் கூறினும், அடியாரைக் கூறும் இடம் தோறும் "ஆர்" விகுதி வைத்தே "இளையான் குடிமாறனார், மானக் கஞ்சாறனார்" என்பன போலக் கூறியுள்ளார். இவர் கூறிய திருக்கூட்டச் சிறப்பு அடியார்களின் இலக்கணம் என்றே கூறலாம். எடுத்துக்காட்டாக, "மாசிலாத," "பூதமைந்தும்," "கேடும் ஆக்கமும்," ஆரங்கண்டிகை", என்று தொடங்கும் பாடல்களால் புலனாகின்றது.

இயற்கைப் பொருளை வருணிக்கும் போதும், பத்தியின் பண்பையும், செயலையுமே உவமை காட்டுவது இவர்பாலுள்ள தனிப் பண்பாகும். எடுத்துக்காட்டாகத் திருநாட்டுச் சிறப்பு, 6, 7, 21, 22, தடுத்தாட்கொண்ட புராணம் 159, திருக்குறிப்புத் தொண்டர் புராணம் 92, முதலிய செய்யுட்களால் புலனாகின்றன.

சைவ சமயத்தின்மேல் அவர் கொண்டிருந்த பற்று சாக்கிய நாயனுர் புராணம் 5-ம் செய்யுள், சண்டேசுவரர் புராணம் 9-ம் செய்யுள் முதலியவற்ருல் அறியலாம். முற்கூறிய செய்யுள்களிலேயே சைவ சாதனங்களாகிய திருநீறு, திருவைந்தெழுத்து என்பனவற்றின் மேல் கொண்டிருந்த பற்றும் புலனுகும். அடியார்களுக்குத் துன்பம் நேரிட்டதாகச் சொல்லவேண்டிக் கட்டாயம் ஏற்பட்ட சில இடங்களிலும், படிப்போர் கேட்போர் மனமும் செவியும் வருந்தாவண்ணம், மங்கலமாகக் குறிப்பாகக் கூறிச்செல்வது இவரது இயல்பாகும். உதாரணமாக ஏனதிநாத நாயனுர் புராணத்தில் " முன்னின்ற பாதகனும் தன் கருத்தே முற்றுவித்தான் " என்றும், மெய்ப்பொருள் நாயனுர் புராணத்தில் " பத்திரம் வாங்கித் தான் முன் நினைந்த அப்பரிசே செய்ய மெய்த்தவவேடமே மெய்ப்பொருள் எனத் தொழுது வென்ருர் " என்றும் கூறுகின்ருர்.

குலத்தாலும், செய்துவந்த தொழிலாலும், தொண்டாலும், அடைந்த அனுபவநிலையாலும் பலவேறு வகைப்பட்ட அடியாரின் வரலாறுகளைக் கூறும்போது அவ்வவ் நிலம், குலம், தொழில், தொண்டு, நிலைமை முதலியவற்றைச் செவ்வனே அளவிட்டுக் கூறுவார். உதாரணமாக," அந்தணராகிய ஞானசம்பந்தர், வேளாளராகிய இளையான்குடிமாறர், வேடராகிய கண்ணப்பர், புலையராகிய திருநாளைப்போவார், செம்படவராகிய அதிபத்தர், வண்ணுராகிய திருக்குறிப்புத் தொண்டர்," முதலிய நாயன்மார்களின் புராணங்களிலே காணலாம்.

இறைவனை வணங்குதல் முதலான வேளைகளில் அன்பர்களுக்கு நிகழும் மெய்ப்பாடுகளைக் கற்போர் உள்ளவாறு நேரிற் கண்டதுபோல் எடுத்துக்காட்டும் திறன் இத்தெய்வப் புலவருக்கு அமைந்ததுபோல் வேறு எவருக்கும் அமைந்திலது. உதாரணமாக,

" ஐந்துபே ரறிவும் கண்களே கொள்ள அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணமொரு மூன்றும் திருந்து சாத்து விகமேஆக
இந்துவாழ் சடையான் ஆடுமானந்த எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேரின்ப வெள்ளத்துள் திளைத்து மாறிலாத மகிழ்ச்சியில் மலர்ந்தார்."

என்னும் அருமைச் செய்யுளால் அறியலாம்." ஞானசம்பந்தர் என்னும் நாம மந்திரம் " " அரசின் நாமம் ஏத்தி" " நம்பியாரூரர் நாமம் நவின்ற நலத்தாலே " என்று கூறியுள்ள பகுதிகளாலே அத்திருப் பெயர்களின் பெருமையும் அவற்றின்பால் இவர்க்குள்ள ஈடுபாடும் புலனுகும்.

அகப்பொருள் பற்றிய நிகழ்ச்சிகளைக் கூறுமிடத்தும் கதாநாயகர்களின் பெருமைக்கும் தம்முடைய தகுதிக்கும் தாழ்வுவராத வகையில் சுவையும் குன்ருமல் கூறும் திறமையை என்னென்பேன். உதாரணமாக," கற்பகத்தின் பூங்கொம்போ," "முன்னேவந்தெதிர் தோன்றும் முருகனோ," "பேர்பரவை பெரும் பரவை " முதலிய அருமைப் பாடலால் புலனுகின்றன.

இவ்வரும் பெரும் நூலில் அமைந்துள்ள ஐந்திணை வளங்களின் அழகும் ஏனைய சொற்சுவை பொருட்சுவைகளும் சுருங்கிய கட்டுரையில் கூற இயலாது. இவை தனித்தனியே எழுதுவதற்கும் பேசுவதற்கும் உரியன.

திருஞானசம்பந்தர், அப்பர், நம்பியாரூரர் ஆகிய இவர்கள் தல யாத்திரைகளைப் பற்றிக் கூறிய இடங்களில் அவரவர் சென்ற வழி, மீண்ட வழி, வழிகளிலே உள்ள ஊர்கள், அவற்றின் இயல்புகள் காலநிலைகள் முதலியவற்றைப்பற்றித் தெள்ளிதின் விளக்குவதால் அவ்வவ் இடங்களுக்கு இவ்வாசிரியர் நேரே சென்று ஊன்றிப் பார்த்து அறிந்தே கூறியிருக்கின்றார் என்று கூறலாம். முடியுடை மன்னனுக்கு முதல் அமைச்சராய் இருந்ததால் இவ்வசதிகள் வாய்ந்திருத்தல் கூடும்.

மூவர் முதலிகள் இவ்வவ்வூர்களில் இவ்வச்சமயங்களில் இவ்வப்பாடல்களைப் பாடினார்களென்று இவ்வப்பாடல்களின் முதல் நினைப்பையும் தாளங்களையும் கூறுவதாலும் "காரைக்காலம்மையார், பட்டினத்தடிகள், சேரமான் பெருமாள்" முதலிய அருட்புலவர்களது பாடல்களின் சொல்லும் பொருளும் அங்கங்கே இவர் நூலில் மிளிர்வதாலும், தம் நூலுக்கு முந்திய பதினொரு திருமுறைகளிலும் நன்கு பயின்றுள்ளார் என்பது புலனாகும்.

இந்நூலை அன்போடு ஊன்றிப் பயில்வோர் சிவபத்திச் செல்வராகி இறைவனருளை எய்துவர் என்பது இந்நூல் தோன்றிய நாள் தொட்டு இன்றுவரைப் பலரும் அனுபவத்தில் அறிந்த உண்மை. இதனைப் பயில்வதால், சாதி, குலம், ஆண், பெண், செல்வர், ஏழை என்பதனால் வரும் உயர்வு, தாழ்வு பிணக்கம் நீங்கி மக்களாகப் பிறந்தோர் அனைவரும் எக்குலத்தில் பிறப்பினும், எந்நிலையில் இருப்பினும் இறைவன்பால் அன்புவைத்து வாழ்ந்து அவனது திருவருளுக்கு உரியராதல் இயலும் என்ற பேருண்மையும் வெள்ளிடை மலைபோல் விளங்கும்.

இவ்வரும் பெரும் நூலைப் பல்காலும் கற்றுப் பயில்வதும் இதனை ஆக்கிய தெய்வப்பாக்கிழாராகிய சேக்கிழார் திருவடிகளைச் சிந்தனை செய்வதும் தமிழர், சைவர் என்பார் ஒவ்வொருவருக்கும் கடமையாகும்.

சேக்கிழார் திருவடி வாழ்க !

# உலகு ஒரு பாடசாலை

(திரு. பண்டித. அ. நாராயணசாமி நாயுடு, காரைக்கால்)

உலகத்தைக் கண்டு நாம் தெரிந்துகொள்ள வேண்டிய பொருள்கள் அளவிறந்தன. ஒரு பாடசாலையில் பலதிற மாணவர்களும், அவரவர் அறிவாற்றலுக்கேற்ற பல வகுப்புக்களும் அமைந்திருப்பதுபோல், உலகத்திலும் பல சன்மங்களும் அவற்றிற்கேற்ற ஆன்மாக்களும் அமைந்திருக்கின்றன. பள்ளியில் பிள்ளைகள் எல்லோரையும் ஒரே கும்பலாய்ச் சேர்த்து வைத்துப் போதித்தால் மாணவரும் பலனடையார்கள், ஆசிரியர்க்கும் வேண்டுவன போதித்தற்கியலாது. சற்றேறக்குறைய ஒரே வகை யறிவினைப் பெற்ற சிறுவர்களை யாய்ந்தெடுத்து ஒரு வகுப்பில் சேர்க்கும் பேராசிரியர்போல் இயற்கைத் தந்தையாம் இறைவனும் பல திறப்பட்ட ஆன்மாக்களைப் பல வகுப்புக்களில் விட்டுப் பயில்விக்கின்றான். வகுப்புக்கள் தோறும் மாணவர் பல புதுப்புது உணர்ச்சிகளைப் பெற்று முடிவில் மக்களான போது தம் வாணாளில் தமக்கு நன்மைபயக்கும் வழிகளையுணர்ந்து பாடசாலையினின்று வெளியேறுவது போலவே உயிர்கள் இயற்கை யமைத்துள்ள வகுப்புக்களில் பலப்பல புதிய உணர்ச்சிகளைப் பெற்று மானிட வகுப்புக்கு வருகின்றன. இயற்கை யமைத்துள்ள வகுப்புக்கள் அளவிறந்தன. ஆயினும் மக்கள் வகுப்புக்கு வேண்டிய உணர்ச்சிகளில் முக்கியமானவற்றை இலக்கண நூலுடையார் எடுத்துக்காட்டுகின்றனர்.

ஏனைய மொழி வல்லுநர் வகுத்துக்காட்டாத அரிய இவ்விடயத்தைத் தமிழ் மொழியாளர் எடுத்துக் கூறுகின்ற இவ்வழக்கு நம்மிலக்கணப் புலவர்க்கே யுரிய தொன்றாகும்.

தமிழிற்கு இலக்கணங்கள் பலவேயாயினும், அவை தம்முள் " வீங்கு கடலுடுத்த வியன்கண் ஞாலத்துத்-தாங்கா நல்லிசைத் தமிழ்க்கு விளக்காகென-வானோரேத்தும் வாய்மொழிப் பல்புகழ்-ஆனாப் பெருமை யகத்திய னென்னும்-அருந்தவ முனிவன் ஆக்கிய முதனூல் " எனப் புகழ்பெற்ற அகத்தியம், முதற் சங்கத்தார் காலத்தில், தொல்காப்பியத்திற்றலைமை பெற்றும், இடைச்சங்கத்தார் காலத்தில் அதனோடுகூட நின்றுலவியும், கடைச்சங்கத்தார் காலத்தில் இறந்து பட்டது. ஆனால் தொல்காப்பியமோ அன்று முதல் இன்று வரையில் தமிழ்க்குப் பேரிலக்கணமா யமைந்து நிலவுகின்றது. இஃது அகத்தியர்பால் தமிழ் நன்குணர்ந்த அவர் மாணாக்கர், தொல்காப்பியனார், அதங்கோட்டாசான், துராலிங்கன், செம்பூட் சேய், வையா

யிகன், வாய்ப்பியன், பனம்பாரன், கழாரம்பன், அவினயன், காக்கைப் பாடினியன், நற்றத்தன், வாமனன் என்னும் பன்னிருவருள் முதன் மாணுக்கரென்று தம் மனேரனைவரானும் துதிக்கப்பெற்ற திரணதூமாக்கினி என்னும் இயற் பெயரினை யுடைய தொல்காப்பிய முனிவர் அருளிச்செய்தது.

துருக்கர் பராக்கிரம பாண்டியனை வென்று மதுரையை யாண்டு தொள்ளா யிரத்துப்பதினைந்து ஆண்டுகட்கு மேலாயிற்று. சங்கத்தார் காலத்திற்கும் பராக்கிரம பாண்டியன் காலத்திற்கும் இடையே சோமசுந்தர பாண்டியன் முதலாக நாற்பத்தி ரண்டு அனுலோம பாண்டியர் ஆட்சி புரிந்திருக்கின்றனர். ஆதலால் கடைச்சங்கம் ஒழிந்த காலம் இரண்டாயிரம் ஆண்டுகட்குக் குறையாது.

முடத்திருமாறன் முதல் உக்கிரப் பெருவழுதி யீருகக் கடைச்சங்கத்திருந்த நாற்பத்தொன்பதின்மர் பாண்டியர் அரசாண்ட காலம் மூவாயிரத்தைந்நூறு ஆண்டும், காய்சினவழுதி முதல் கடுங்கோன்வழுதி யீருக முதற் சங்கம் இரீஇய எண்பத்தொன்பதின்மர் பாண்டியர் அரசு புரிந்த காலம் நாலாயிரத்தைந்நூறு ஆண்டும் ஆம்.

ஆகவே, முதற் சங்கத்திற்கு முன்னரே முதல் நூல் கண்ட ஆசிரியர் அகத்திய ஞரிடம் தமிழ் கற்று, அச்சங்கத்திற்றுமும் உடனிருந்து தமது நூல் நிலவச்செய்த திரணதூமாக்கினி முனிவர் தொல்காப்பியம் இயற்றியபின் சென்றுள்ள காலம் எவ்விதத்தானும் பன்னீராயிரம் ஆண்டுகட்குக் குறையாது.

பன்னீராயிரம் ஆண்டுகட்கு முன் தோன்றிய தொல்காப்பியமும் ஆங்காங்கு "உணர்ந்திசினேரே" என்றும், "மொழிப வியல்புணர்ந்தோரே", "மொழிப புல னன்குணர்ந்த புலமை யோரே" எனவும், இன்னேரன்ன முடிவு கொடுத்தோது தலால், தமிழிலக்கியத்திற்கு இலக்கணம் வகுத்தோர் 12000 ஆண்டுகட்கு முற்பட்டவ ரென்பது புலனுகின்றது. அத்தகைய ஆன்றேர் காலத்து, ஏனைய நாடுகளின் நிலை யென்ன ! அது கிடக்க.

உயிர்கள் எந்தெந்தப் பிறவியில் என்னென்ன அறிவு பெற்று விளங்கின என்பது தொல்காப்பியம், பொருளதிகாரம், மரபியலில் விசதமாகக் கூறப் பட்டுள்ளது. அது வருமாறு : "ஒன்றறிவதுவே யுற்றறிவதுவே". இதில் ஆன்மாக் கள் அடைகின்ற உணர்ச்சிகளில் முதலாவது உணர்ச்சி யின்னதென்பது கூறப் பட்டுள்ளது. அவ்வுணர்வுதான் "உற்றறிவது" தன்னையடைந்ததை யுணரும் அறிவு. உயிருக்கு மனமில் வழி, தன்னைத் தொட்டதை யுணரும் உணர்ச்சி யுண்டோ வெனின், உயிருடைய நந்து, முரடு முதலிய உயிருள்ளவற்றிற்குச் செவி கண் முதலிய உறுப்புக்கள் இல்லாதிருந்தும், அவை மனவறிவில்லாதது விசதம்-இதை விளக்குதற்காகவே ஓரறிவுயிர்க ளின்னவை யெனக் கூறப்பட்டுள்ளது "புல்லு மர னும் ஓரறிவினவே" என்ற சூத்திரத்தால் புல்லுமரனும் சாதி யொருமைப் பெய ராய்ச் செடி, கொடி முதலியவற்றையுங் காட்டி நின்றன.

“ பின்னு முளவே அக்கிளைப் பிறப்பே ” என்று கூறியது புல், மரம் மாத்திர மின்றித் தாவரங்களெல்லாம் ஓரறிவுயிர் எனக் கூறற்கு. புல் முதல் மரம் இறுதியாக வுள்ள தாவரங்கள் எண்ணிறந்தனவாயினும் அவை யோரறிவினவேயாம். புல்லிற் குரிய உற்றறிவு “ தொட்டாற் சிணுங்கி ” போன்ற தாவரங்களில் நனி பெருகித் தோன்றுகின்றது. பின்னரும் அவ்வறிவு பலவகை மரங்களில் முறையே பக்குவ முற்றுப் பெருகுகின்றது.

“ இரண்டறிவது வேயதனோடு நாவே ” தொட்டாலுணருந் தன்மையதாய் மட்டு மிருந்த அவ்வோரறிவு, பின்னர் நாவினைச்சார்ந்த பொருளின் சுவையையுமறிந்து விளங்குகின்றது. இதற்குதாரணம் :

“ நந்து முரளு மீரறிவினவே
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே ”

இதனால் இரண்டாவது உணர்ச்சி நாவுணர்ச்சி யென்பதும் அதனை முதலுணர்ச்சி யோடு ஒருங்குடைய பிறப்புக்கள் இன்னவை யென்பதும், அதாவது நத்தை,கிளிஞ் சில், சிப்பி, மட்டி, சங்கு போன்றவை யென்றும் கூறப்பட்டது. இக்கூறப்பட்ட பிறப் புக்களில் இரண்டா முணர்வு வளரப்பெற்ற ஆன்மாக்கள், அதன்மேல், எறும்பு, கரையான் முதலிய சன்மங்களை யடைந்து மூன்றுவது உணர்வாகிய நாற்றமறியும் ஆற்றலைப் பெறுகின்றன.

“ மூன்றறிவதுவே யவற்றொடு மூக்கே ”

இம்மூன்று முணர்வைப் பெற்ற பிராணிகள் :

“ சிதலு மெறும்பும் மூவறி வினவே
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே ”

இவ்வாறு தம்மைத் தாக்கிய துணர்ந்து மீடலும், நாவுணர்வறிந்து கோடலும் நெய்யுள்வழி மோந்தறிதலும் பெற்ற ஆன்மாக்கள் அதன் பின்னர்,

“ நான்கறிவதுவே யவற்றொடு கண்ணே.”

என்றபடி நான்காமறிவாகிய பார்வையை

“ நண்டுந் தும்பியும் நான்கறிவினவே
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே.”

என்றபடி நண்டு, தும்பி முதலிய பிறப்புக்களைப் பெற்று மெய்யுடைமையின் உற் றுணர்வும், இரை கோடலின் நாவுணர்வும், நாற்றங்காண்டலின் மூக்குணர்வும், கண்ணுடைமையின் கண்ணுணர்வாகிய காட்சியும் பெற்று விளங்குகின்றன.

அதன் மேலும் அறிவு வளர்ச்சியின் பொருட்டு ஆன்மா "கேட்டல்" ஆற்றலைப் பெறுதற்கு

"ஐந்தறிவதுவே அவற்றெடு செவியே"

என்றபடி ஐந்தாவதுணர்வாகின்ற கேட்டலுணர்வை,

"மாவும் மாக்களு மையறி வினவே
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே."

என்னுமதற் கேற்ப விலங்கினங்களில் தோன்றி அவ்வைந்தாவது அறிவை நன்கு வளர்த்துய்கின்றது. மக்கட் பிறவியிலும் ஐந்தே அறிவொடு சனிக்கின்ற உயிர்களுண்டு. மக்கள் தேகத்தைப் பெற்றும், அதற்குரிய சிந்தனை யுண்மையைப் பெறுமல் துண்டந் துண்டங்களாய், முண்ட முண்டங்களாய்த் திரிதரும் ஆன்ம கோடிகளும் உண்டு. அவற்றை ஐயறிவுப் பிராணிகளென்றே ஆன்றோர் கூறுவர்.

இவ்வாறு பல பிறப்புக்களிலும் புகுந்து "......எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம் பெருமான்" என்றருளிய பெரியார் பனுவலின்படி பழுங்கி, ஆறுவதாகின்ற மனவுணர்வினை யான்மாவானது மனித யாக்கையிலேயே பெறுகின்றது. "ஆறறிவதுவே யவற்றேடு மனனே" "மக்கள் தாமே யாறறி வுயிரே" எனவெழுந்த இலக்கணச் சூத்திரங்களும் இதனையே நன்குணர்த்துவன ஆகும்.

இவ்வாறு, நன்மை தீமைகளைச் சிந்தித்து உண்மையைக் கண்டு அவ்வழியில் ஒழுகி உய்வதுவே," உடம்பினைப் பெற்ற பயனுவதெல்லாம் உடம்பினிலுத்தமனைக் காண்" என்ற உண்மை யுபதேசத்தின் பயன்.

இதுகாறும் பல யாக்கைகளிற் புகுத்தி அறிவு வளர்த்த இறை இனிச் சிறிது, அவரவருள்ளத்தே ஒளிந்து நின்று சுதந்திர மக்கள்போல் மன்பதைகளை விட்டுப் பார்க்கிறுன். அவர்கள் சிறிது வழி விலகியக்கண்ணும் அறிவுறுத்துகின்றுன்.

"வஞ்சித் தொழுகும் மதியிலிகாள் யாவரையும்
வஞ்சித்தோ மென்று மகிழன்மின் யாவரையும்
வஞ்சித்துளனெருவன் காணுங்கொல் லென்றஞ்சி
அங்கங் குலைவ தறிவு"

என்று மூதறிஞர் சொன்னதை யுணர்ந்து பிறர் தமக்கென்ன செய்யத் தாம் விரும்பாரோ அதனைப் பிறர்க்குத் தாம் செய்யாமலும், பிறர் தமக்கு என்னென்ன செய்தால் தமக்கு மகிழ்ச்சி யுண்டாகுமோ அவற்றையே பிறர்க்குத் தாம் செய்தும் "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்" எல்லா நலன்களு மெய்தி யின்ப நாடடைவர்.

# படித்த பெண்

(தமிழ்ப்புலவர், திருமதி. S. இலட்சுமி—பழனி)

நாயகி :—

சாரமற்ற கல்வி—பெற்றுச்
சங்கடத்தி லாழ்ந்தேன்
பாரமாகத் தோன்றும்—வீட்டுப்
பணிகள் யாவும் இன்றே
வீரமான நெஞ்சும்—எதிலும்
வெற்றி காணும் உளமும்
சீரதான உடலும்—தரவே
தேவி பாதம் பணிவேன்.

நாயகன் :—

அன்னை மார்கள் இல்லில்—புரியும்
அறங்கள் யாவும் விட்டே
மன்னுவேறு பணியில்—தங்கள்
மனதை வைத்தல் நலமோ
கன்னிமார்கள் என்றும்—ஆண்கள்
கடமை ஆற்ற ஊக்கி
வன்னமாக வாழ்தல்—இந்த
வைய வாழ்க்கை என்பார்

பெண்கள் புருடரைப்போல்—செல்வம்
பெருக தொழில்கள் கற்றே
எண்ணும் உத்யோகம்—உற்றே
எதிலும் சரிசம மாய்
கண்யமாக வாழ்வோம்—என்று
கருது வார்க ளானல்
நண்ணும் இந்தவுலகே—எவர்க்கும்
நரகமாகு மன்றே.

# கல்வியும் கற்பனையும்

(திரு. பி. கோதண்டராமன், M.A.,B.L.,)

கல்வியின் நோக்கம் என்ன ? குழந்தையை வாழ்க்கைக்குத் தயார் படுத்து வதே கல்வியின் நோக்கம் என்பர். வாழ்க்கை, அதுவும், இக்கால வாழ்க்கை, மிகச் சிக்கலானதொரு விஷயமாகும். அது ஒரு கலை. அக்கலையைக் கற்றோரே, அதில் தகுதி பெற்றவரே, அதை வெற்றியுற நடத்தமுடியும். வாழத்தெரிந்துகொள்ளாத வர் துன்புறுவர். அவர்களுடைய தோல்வி சமூகத்தையும் பாதிக்கிறது. ஆகவே, குழந்தைப் பருவ முதற்கொண்டே வாழ்க்கை நடத்துவதற்கான பயிற்சி பெற வேண்டும். இப்பயிற்சியை அளிப்பதே கல்வியின் நோக்கம்.

குழந்தையை வாழ்க்கைக்குத் தயார் படுத்துவதற்கான வழிகள் எத்தனையோ உண்டு. பழங் கல்வி முறையில் குழந்தைகளுக்கு அன்பு, அறிவு, சகோதரபாவம், நல்லுணர்ச்சிகள், உயரிய சிந்தனை, எளிய வாழ்க்கை ஆகிய பண்புகளை வளர்க்கும் பாடங்களே போதிக்கப்பட்டன. வளர்ந்துவரும் ஜனநாயகத்தில் இத்தகைய கல்வி போதாதென ஜீவனோபாயத்திற்குரிய பயிற்சிகள் வலியுறுத்தப்பட்டு வருகின்றன. தம் குழந்தைகள் இன்று ஏதேனுமொரு தொழிற் கல்வி கற்கவேண்டுமென்பர். அவர்களுக்குப் பல விஷயங்களைப் பற்றிய அறிவு வேண்டுமென்பர். உலக விஷயங் களைப்பற்றிய அறிவு இருந்தால்தான் இன்று வாழமுடியும் என்பர். பல விஷயங் கள் அவர்களின் சிறு மூளையில் திணிக்கப்படுகின்றன. உலக அறிவு விரிவடைய வேண்டுமென்ற அவாவில், பல சாஸ்திரங்கள், விஷயங்கள் கற்றுக்கொடுக்கப்படு கின்றன. இந்நூதனக் கல்வி முறையில் இன்று மானிடப் பண்புகளை வளர்க்கும் பாடங்களும் பயிற்சிகளும் குறைவாகவே காணப்படுகின்றன.

விழுமிய பண்புகளை வளர்க்கும் கல்வி மானிட உள்ளத்தைச் செம்மைப்படுத்தி யும், நற்குணங்களை வளர்த்தும் தனி மனிதனின் சுயரூபம் வெளிப்பட்டு விளங்கச் செய்கின்றது. ராமாயணமும், மகாபாரதமும், கீதையும், குறளும் இங்ஙனமே மக் களைப் பண்படுத்துகின்றன. அகமும் புறமும் வளர்ச்சியடைகின்றன. உண்மை யுணர்ச்சி, ஆன்ம நேயம், தயை, அன்பு, அறவுணர்ச்சி, வாய்மை, நேர்மை, எளிமை—யாவும் மலர்ந்து வாழ்க்கையில் அழகிய செயல்களாகப் பரிணமிக்கின் றன.

பல விஷயங்களைப்பற்றிய அறிவை ஊட்டும் கல்வி புத்தியைக் கூர்மைப்படுத்த லாம்; பலவகையான ஜீவனோபாயங்களுக்குரிய வழி காட்டலாம்; பொருள் திரட்டப்

பயன்படலாம். ஆனால், அவை மட்டுமே, மனிதனையோ மானிடப்பண்புகளையோ விழுப்பம் செய்யா ; அமைதியும், இன்பமும், உயர்வும் அளிக்கும் வாழ்க்கைக்கு இட்டுச் செல்லா.

வளர்ந்துவரும் ஜனநாயகத்தில் அறிவியற் கலைகள் இன்றியமையாதன ; வாழ்க்கைக்குப் பயன்படும் உபயோகமான அறிவுகள் பரவுதற்குரியன. விஞ்ஞானம் உலகையே மாற்றிவருகின்றது. விஞ்ஞான அறிவும் தொழிலறிவும் இக்கால வாழ்க்கைக்கு இன்றியமையாதன. ஆனால் அறிவுமட்டும் இருந்தால் போதுமா? கற்பனை வேண்டாமா ? உள்ளம் செம்மைப்பட வேண்டாமா ? சீரிய குணங்கள் இருக்கவேண்டாமா ? நேர்மையும், வாய்மையும், மனவுறுதியும், அன்பும், தயையும் இல்லாத ஒரு ஜனநாயகம் நிலைக்கமுடியுமா ? அறிவுடன் மனப்பண்புகளும் வேண்டும்; உள்ளத்தைப் பண் செய்யும் கற்பனையும் வேண்டும். இங்ஙனமாகப் பண்பட்ட மக்களே ஜனநாயக ஆட்சி நடத்தமுடியும். இப்பண்புகளை வளர்க்கும் கல்வியே ஜனநாயகத்திற்கு உகந்த கல்வியாகும். இக்கல்வியின் அடிப்படையில்தான் அறிவியல் கல்வி அமைக்கப்பட வேண்டும்.

உள்ளே இருப்பதை வெளிப்படுத்துவதே கல்வி. குழந்தைகளுக்கு அளிக்கப்படும் கல்வி அவர்களின் உள்ளத்தில் மறைந்துள்ள திறமைகளை, குணதிசயங்களை, ஆற்றல்களை மெல்லமெல்ல வெளிப்படுத்திப் பண் செய்யவேண்டும். இத்திறமைகள், இயல்புகளின் மீது குழந்தைக்குப் பூரண ஆட்சி வேண்டும். குழந்தைகளின் கற்பனையைத் தூண்டுவதன் மூலமாகவே இதைச் சாதிக்கமுடியும்.

சில ஆண்டுகளுக்குமுன், பள்ளிக்கூடங்களில் குழந்தைகளுக்கு இக்குணிக் கதைகளைப் பாடபுத்தகமாக வைப்பது சகஜம். இன்று பாடபுத்தகங்களில் இத்தகைய கதைகளைக் காண்பதில்லை. இன்று கற்பனைகளுக்கு மதிப்பில்லை. ஆனால், இது அபாயகரமானதொரு நிலையாகும். கற்பனைச் சக்தி தூண்டப்பெற்றால் உள்ளம் விரிந்து செம்மையுறும்.

பழைய இக்குணிக் கதைகளில் நீதி போதனை இருக்காது. மக்களுக்கு மகிழ்ச்சியூட்டுவதே அவற்றின் கருத்து. அதிசயங்களும் அற்புதங்களும் வாழ்க்கை யுண்மைகள் ஆகா. அவற்றை நாம் நம் சாதாரண உலகில் காண்பதில்லை. அதனாலேயே அவை நம்மைக் கவர்கின்றன. சப்பென்றுள்ள உண்மையிலிருந்து தப்ப அவற்றை நாடுகிறோம். குழந்தைகளுக்கு அவையே கவர்ச்சி யளிக்கின்றன. அக்கதைகளின் அழகும், வசீகரமும், லட்சியமும் உள்ளத்தைக் கவ்வுகின்றன. எட்டமுடியாதவற்றை எட்டிப்பிடிக்க முயலுகிறோம். லட்சியங்கள் கைகூடப் பெரு முயற்சி செய்கிறோம். வீரதீரப் புருஷர்கள் நம்மை ஊக்குகின்றனர். கற்பனை உலகம் செழுமையானதோர் உலகம். அங்கே கவிதையும் அழகும் சந்தமும் இசையும் காண்கின்றன. குழந்தை எழுச்சி பெறுகிறது. இக்கற்பனைக் கதைகளில் நீதி போதனைகள் இருக்காவாயினும் அநேகமாக நன்மையே இறுதியில் வெல்வதைக் காண்போம். குழந்தைகள் இக்கதைகள் கூறும் அழகிய கற்பனைகளில் உத்சாகத்துடன் மிதந்து செல்கின்றனர். அவர்களின் உள்ளம் நெகிழ்கிறது. அன்பும், தயையும், அனுதாப

மும் ஊற்றெடுத்துப் பாய்கின்றன. லட்சியத்தின்பால் நாட்டம் ஏற்படுகிறது. அழகின் மீது ஒரு கவர்ச்சி ஏற்படுகிறது. இவையாவும் நம் மனத்தைப் பண்படுத்துகின்றன.

கற்பனையைத் தூண்டி, நம் உள்ளத்தைச் செம்மைப்படுத்தும் கல்வியே குழந்தைகளுக்கு முதலில் வேண்டும். இதிலிருந்து குழந்தைகளுக்கு அறிவியற் கல்வி கூடாது என்று பொருள் கொள்ளலாகாது. அறிவியற் கல்வியே கல்வி எனக் கொள்ளலாகாது என்பதே எம் கருத்து. அடிப்படையாக கற்பனையைத் தூண்டி உள்ளத்தை விழுப்பம் செய்யும் கல்வி முதலில் நன்கமைந்த பிறகே அறிவியற் கல்வி ஊட்டப்பட வேண்டும். இதுவே இன்றைய தேவை. அறிவியற் கல்வியின்மீதுள்ள இக்கால மோகத்தால், உள்ளத்தை விழுப்பம் செய்யும் கல்வியை அலட்சியம் செய்யாமலிருக்க வேண்டும் என்பதே எம் விருப்பம்.

# கல்வியும் கலையும்

(திரு. ந. கனகராஜையர், B.O.L. புதுக்கோட்டை)

1. கல்வி : இன்பம் விளைப்பதற் கியானிங் கிருக்கையில்
ஏற்றம் உனக்கும் உண்டோ ?—கலையே
ஏற்றம் உனக்கும் உண்டோ ?

கலை : இன்பம் விளைப்பதே என்தொழி லென்பதை
ஏனோ அறிந்திலையே—கல்வியே
ஏனோ அறிந்திலையே.

2. கல்வி உள்ளம் உருக்கும் உருவம் உனக்குண்டோ
உண்மை உரைத்திடுவாய் கலையே
உண்மை உரைத்திடுவாய்.

கலை. உள்ளம் உருக்கியே உலகில் வாழுவேன்
உண்மை யிது வல்லவோ—கல்வியே
உண்மை யிது வல்லவோ

3. கல்வி மாக்களை மக்களாய் மாற்றும் திறமையும்
வாய்ந்துளதோ உனக்கே—கலையே
வாய்ந்துளதோ உனக்கே.

கலை. மாக்களை மக்களாய் மக்களைத் தேவராய்
மாற்றும் திறமுளதே—கல்வியே
மாற்றும் திறமுளதே.

4. கல்வி எண்ணும் எழுத்துமே கண்ணெனத் தக்க தென்
றேனோ அறிந்திலையே—கலையே
ஏனோ அறிந்திலையே.

கலை எண்ணி எழுதி யியற்றும் கலையிலும்
ஏற்றமுள துணர்வாய்—கல்வியே
ஏற்ற முள துணர்வாய்.

5. கல்வி. நாட்டு நலத்துக்கு நானே தலைவனும்
நன்மை யுணர்ந்திலையோ—கலையே
நன்மை யுணர்ந்திலையோ

கலை. நாட்டு நலத்தை நானும் பொறுப்பதை
ஞானமுளார் உணர்வார்—கல்வியே
ஞானமுளார் உணர்வார்.

# கருவூர்த் தேவர்

(புலவர், திரு. க. வெள்ளைவாரணனர், அண்ணுமலைநகர்)

கருவூர்த்தேவரென்பவர் திருவிசைப்பா ஆசிரியர் ஒன்பதின்மருள் ஒருவராவர். திருவிசைப்பா என்பது சைவத் திருமுறை பன்னிரண்டனுள் ஒன்பதாந் திருமுறையாகத் திகழ்வதாகும். இதன்கண் கருவூர்த்தேவர் பாடியனவாகப் பத்துத் திருப்பதிகங்கள் உள்ளன. அவை முறையே தில்லைச்சிற்றம்பலம், திருக்களந்தை ஆதித்தேச்சரம், திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம், திருமுகத்தலை, திரைலோக்கிய சுந்தரம், கங்கைகொண்ட சோழேச்சரம், திருப்பூவணம், திருச்சாட்டியக்குடி, தஞ்சை இராசராசேச்சரம், திருவிடைமருது என்னுந் திருத்தலங்களிற் கோயில் கொண்டருளிய சிவபெருமானைக் குறித்துப் பாடப்பெற்றனவாகும். இத்திருப்பதிகங்களிற் காணப்படுங் குறிப்புக்களைக் கொண்டு இவற்றைப் பாடியருளிய கருவூர்த்தேவரது வரலாற்றை ஓரளவு உணர்ந்து கொள்ளலாம்.

இவ்வாசிரியர் தாம் பாடிய திருவிசைப்பாப்பதிகங்களின் இறுதியிலுள்ள திருக்காப்புச் செய்யுட்களில் கருவூரன் என்றும் கருவூரனேன் என்றும் கருவூர் என்றும் தம்மைக் குறிப்பிட்டுள்ளார். இக்குறிப்பினுல் இவர் கருவூரிற் பிறந்து வாழ்ந்தவரென்பதும் கருவூருடன் நெருங்கிய தொடர்புடைமையால் கருவூரன் என அழைக்கப்பெற்ருரென்பதும் நன்கு விளங்கும். கருவூரென்பது கொங்குநாட்டுச் சிவதலங்களுள் ஒன்ருகும். இவ்வூரிலுள்ள திருக்கோயில் " திரு ஆனிலை " என வழங்கப்பெறும். இக்கோயிலுள்ளே தென்மேற்குத் திசையில் கருவூர்த்தேவர்க்குரிய கோயிலொன்றுளது.

கருவூர்த்தேவர் வேதியர் குலத்திற் பிறந்தவர். வேதங்களை முறைப்படி ஓதி வைதிக நெறியில் வழுவா தொழுகிய பெரியோராவர். இச்செய்தி " ஆரணம் பிதற்றும் பித்தனேன் " என்றும் " செழுமறை தெரியுந் திகழ் கருவூரனேன் " என்றும் " கருவூர் ஆரணம் பொழிந்த பவளவாய் " என்றும் இவ்வாசிரியர் தம்மைப் பற்றிக் கூறுங் குறிப்புக்களால் இனிது விளங்குவதாகும். இவர் மக்களுக்கு நலந்தரும் கலைகள் பலவற்றையும் நன்கு பயின்றவர்." நலமலிகலை பயில் கருவூர் " எனவும் " காட்டிய பொருட்கலை பயில் கருவூரன் " எனவும் வருந் தொடர்புகளால் இச்செய்தி புலனுகின்றது.

வேதங்களை முறைப்படி ஓதியுணர்ந்த கருவூர்த்தேவர் தமது தாய் மொழியாகிய தமிழின் இனிமையினையும் எப்பொருளையுந் தெளிய அறிவிக்குந் தெளிவுடைமை

யினையும் நன்கு தேர்ந்து அமிழ்தினுமினிய தமிழ்ப் பாடல்களின் சுவைநலங்களைத் துய்த்து மகிழ்ந்தார். தமக்குமுன் வாழ்ந்த அருளாசிரியர்கள் இறைவனைப்போற்றி உளமுவந்தபோதெலாம் உகந்துகந்து பாடிய செழும்பாடல்களைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதி இன்புற்றுர். இளமை, யாக்கை, செல்வம் என்பன என்றும் ஒரு நிலையில் நிற்பன அல்ல எனத் தெளிந்தார். இந்நிலையா வாழ்க்கையில் ஈடு படுவேனலேன் எனத் துறவறமாகிய தூயநெறியினை மேற்கொண்டார். இறைவன் எழுந்தருளிய திருத்தலங்கள் தோறுஞ் சென்று அப்பெருமானை வழிபட்டுப் போற்றுதலே இம்மக்கட் பிறவியால் வரும் பெரும்பயனெனக் கருதியொழுகினர். எல்லாம் வல்ல கடவுளை வாயாரப் பாடிப் போற்றும் தொண்டர் கூட்டத்திலே அப்பெருமானைக் கண்டு இன்புறலாமென்றும் தனது பொருள் சேர் புகழை இனிய இசைத் தமிழ்த் திறத்தால் மெய்யடியார்கள் பாடிப் போற்று மிடத்தைவிட்டு இறைவன் ஒரு கணமும் பிரிந்திரான் என்றும் முன்னைப் பெரியோர்கள் பாடிய பாடற்பொருளை யுளங்கொண்டு நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பி இறைவனை வழிபடுதலையே சிறந்த கடமையாகக் கொண்டொழுகினர்.

பகற்பொழுதெல்லாம் இறைவனை இனிய தமிழாற் பாடிப்பரவுதலும் எல்லோரும் அயர்ந்து கண்ணுறங்கும் நள்ளிருட் பொழுதில் ஓரிடத்து உயிராவண்ணம் அமர்ந்திருந்து தம் உயிர்க்குயிராகிய இறைவனை யுற்றுநோக்கி உள்ளமாகிய கிழியிலே அப்பெருமானது திருவுருவை ஓவியமாக எழுதிப் பார்த்துச் சிவயோக நெறியில் நிலைபெறவிருத்தலும் இவர்தம் அன்றாட அலுவல்களாயின.

இங்ஙனம் இரவு பகலாக இறைவனது திருவருளை யெண்ணி மகிழுமியல்பினராகிய இப்பெரியார் உணர்வின் நேர் பெறவரும் சிவபோகமாகிய பேரின்ப நிலையை ஒழிவின்றித் தம் ஐம்பொறி வாயிலாகவும் நுகர்ந்தின்புறும் நற்பேறுடையரானர். மாற்ற மனங் கழிய நின்ற பெருமானைத் தம் கண்ணாரக் கண்டு பிறவிநோய் தீர்க்கும் அருமருந்தாகிய இறைவனது அருளாரமுதத்தை ஆரப்பருகி அல்லலெலாந் தீரப்பெற்று அகமகிழ்ந்தார். இங்ஙனம் தாம் பெற்ற பேரின்பத்தினை இவ்வுலகில் எல்லோரும் பெற்று இன்புற வேண்டுமெனப் பெரிதும் விரும்பினர். வேதமாகிய தேனினை நிறையப் பருகி யின்புற்ற இப்பெரியார் வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனும் ஆறணிந்த சடைப்பெருமானது திருவருளைப் பெற்றின்புறுதற்கு வீறுயர் செந்தமிழால் வழிகண்டார். இன்ன தன்மையன் என்று அறிய வொண்ணுத இறைவனது பொருள் சேர் புகழை இனிய தமிழாற் பாடிப் போற்றுதலை வாயிலாகக்கொண்டு அப்பெருமானது பேரருளின்பத்தை இவ்வுலகோரனைவரும் பெற்று மகிழ்தற்கேற்ற வகையில் ஆலைப்படு கரும்பின் சாறு போன்றும் ஆராவமிழ்தம் போன்றும் அண்ணிக்கும் இன்றமிழ்ப் பாடல்களைப் பாடியருளினர்.

இவர் சிவயோக நெறிநின்ற சித்தராய் நோய் முதுமை முதலிய துன்பமின்றி இவ்வுலகில் நெடுங்காலம் வாழ்ந்து இனிய தமிழால் இறைவனைப் போற்றியவராவர். இச்செய்தி "அருமருந்தருந்தி அல்லல் தீர் கருவூர் அறைந்த சொன்மாலை" என வருந் தொடரால் இனிது விளங்கும். இவ்வாசிரியர் நெடுங்காலம் இவ்வுலகில் வாழ்ந்தமைக்குரிய காரணம் அருமை நிறைந்த தமிழ்ப்பாடல்களால் அடியார்க்

கெளிய பெருமானைப் பாடி மகிழ வேண்டுமென்னும் பெருவிருப்பமேயாகும். இவ்வுண்மையினை

“ ஆரணத்தேன் பருகியருந் தமிழ்மாலை பகரவருங்
காரணத்தி னிலைபெற்ற கருவூரன் தமிழ்மாலை ”

என வருந் தொடரால், கருவூர்த்தேவர் உலகினர்க்கு விளங்க எடுத்துரைத்தமை காண்க.

இவ்வாசிரியர் உலக மக்களனைவரும் கண்ணயர்ந் துறங்கும் நடுயாமப்பொழுதிலே தாம் ஒன்றிய சிந்தையராய்ச் சிவயோக நிலையிலிருந்து எல்லாம் வல்ல சிவபெருமானை நினைந்து போற்றி ஞாயிற்றின் ஒளியும் கண்ணொளியும் ஒருங்கியைந் தாற்போன்று அப்பெருமானது திருவருளில் ஒற்றித்து இன்புற்றுத் திருவிசைப்பாப் பாடிய திறத்தினை,

ஒருங்கிருங் கண்ணின் எண்ணில் புன்மாக்கள்
உறங்கிருள் நடுநல்யாமத்தோர்
கருங்கணின் றிமைக்குஞ் செழுஞ் சுடர் விளக்கங்
கலந்தெனக் கலந்துணர் கருவூர்
தருங்கரும்பனைய தீந்தமிழ்மாலை

என வருந் தொடரால் தெளிவாகக் கூறியுள்ளார். நீர் கலந்த பாலை நெருப்பில் வைத்துக் காய்ச்சுங்கால் நீர் முழுவதுஞ் சுண்டிப்போகப் பால் முன்னினும் பன்மடங்கு இன்சுவை பெறுதல்போல இறைவனது நிலைபெற்ற அருளாகிய தீயின் முன்னர் தம்பாலுள்ள நீரனைய தீவினை அறவே கெட்டொழியப் பாலனைய புண்ணியம் நன்ஞானமாகிய இன்சுவை யுடையதாய் விளங்குமாறு தாம் சிவயோக நெறியில் ஒழுகிய திறத்தினையும் அந்நிலையில் இறைவன் யாவராலும் உணர்தற்கரிய தனது நுண்ணிய தன்மையினை அருமையிலெளிய தனது அழகினுள்ளே யடக்கிக் கொண்டு தனது பேரருளால் தானே எளிவந்து தோன்றித் தம் கண்ணினுட் கருவிழியெனக் கலந்து அகலாது நின்று தனது திருவருட் கோலத்தைக் காட்டியருளுந் திறத்தினையும்

பண்ணிய தழல்காய் பாலளாம் நீர்போற்
பாவ முன் பறைந்து பாலனைய
புண்ணியம் பின்சென் றறிவினுக் கறியப்
புகுந்ததோர் யோகினிற் பொலிந்து
நுண்ணியை யெனினும் நம்பநின் பெருமை
நுன்னிடை யொடுங்கநீ வந்தென்
கண்ணினுண் மணியிற் கலந்தனை கங்கை
கொண்ட சோழேச் சரத்தானே

என வருந் திருப்பாடலால் அழகுபெற விரித்துரைத்துள்ளார்.

கி.பி. 985 முதல் 1014 வரை தமிழகத்தை ஆட்சி புரிந்த பெருவேந்தன் முதலாம் இராசராச சோழனுவன். இவ்வேந்தர் பெருமான் தஞ்சை நகரத்தில் தக்கிண மேருவென்னும் பெயருடன் இராசராசேச்சரத் திருக்கோயிலைக் கட்டினுன். இவ்வேந்தனுடைய அரும்பெறற் புதல்வனுகத் தோன்றிக் கங்கையாறு பாயும் வடநாட்டு மன்னரைத் தன்னடிப்படுத்திக் கடல் கடந்து கடாரம் முதலிய வெளிநாடுகளையும் வென்று மேம்பட்ட கங்கைகொண்ட சோழன் என்பான் தான் தன் பெயராற் புதுவதாக அமைத்த கங்கைகொண்ட சோழபுரத்தினுள்ளே கங்கைகொண்ட சோழேச்சரம் என்னுந் திருக்கோயிலைக் கட்டினுன். இவ்வேந்தன் கி.பி. 1012-முதல் 1044 வரை தமிழகத்தை யாட்சி புரிந்தான். இவ்விரு பெரு வேந்தர்களாலும் எடுக்கப்பெற்ற இரண்டு திருக்கோயில்களையும் நேரிற் கண்டு மகிழ்ந்த கருவூர்த்தேவர் அங்கெழுந்தருளிய பெருமானைத் திருவிசைப்பாப் பாடிப்பரவிப் போற்றியுள்ளார். எனவே இப்பெரியார் மேற்குறித்த முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன் ஆகிய இரு பெரு வேந்தர்காலத்தும் இருந்தவரென்பது நன்கு துணியப்படும். இதனுல் இவ்வாசிரியர் கி.பி. பத்தாம் நூற்றுண்டின் பிற்பகுதியிலும் பதினுேராம் நூற்றுண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர் எனக் கொள்ளலாம்.

முதலாம் இராசராச சோழன் தஞ்சையில் இராசராசேச்சரத் திருக்கோயிலெடுத்து அதன்கண் பெருவுடையாரைப் பிரதிட்டை செய்யுங் காலத்து அஷ்ட பந்தன மருந்து இளகிச் சிவலிங்கத் திருவுருவம் மருந்தினுற் பிணிப்புற்று நிலைபெருமையைக் கேள்வியுற்ற கருவூர்த்தேவர் அங்குவந்து அஷ்டபந்தன மருந்தினை இறுகும்படி செய்து பெருவுடையாரை நிலைபெற நிறுத்தினுரெனச் செவிவழிச் செய்தியொன்று வழங்கிவருகின்றது. தஞ்சை இராசராசேச்சரத் திருக்கோயில் திருப்பணி இராசராச சோழனது பத்தொன்பதாம் ஆட்சி யாண்டில் தொடங்கப்பெற்று, இருபத்தைந்தாம் ஆண்டில் குடமுழுக்கு நிறைவேறியது. குடமுழுக்கு நிகழ்ந்த காலமாகிய கி.பி. 1010-ஆம் ஆண்டு தொடங்கிக் கங்கைகொண்ட சோழன் ஆட்சிக்காலமாகிய கி.பி. 1044-ஆம் ஆண்டுவரை அப்பெருவேந்தர்களை நெருங்கி அளவளாவும் நிலையினராய்க் கருவூர்த்தேவர் சிவநெறியினை வளர்த்துவந்தார். துறந்தார்தம் தூநெறிக்கட் சென்ற இப்பெரியார், சோழமன்னர்பால் அளவற்ற பேரன்புடையவராய் அவர்களுக்குச் சிவனது திருவருளில் நம்பிக்கை யுண்டாக்கிச் சிவநெறியில் தளராத உறுதியுடையரா யொழுகப் பணித்தார். சோழரது பேரரசு நாடெங்கும் விரிந்து சிறத்தற்கு இன்றியமையாத தறுகண் உணர்வினைத் தமிழ் மக்கள் உள்ளத்தே கிளர்ந்தெழச் செய்தருளினுர். முடிவேந்தர் அடிபணிந்து போற்றும் திருவருட் செல்வராகிய இச் சிவயோகியார் அரசர் பெருந்திருவினை நுகர்தற்கேற்ற நல்வாய்ப்பினைத் தாம் பெற்றிருந்தும் அவ்வாய்ப்பு தம்மை உலகியற் பாசத்திற் பிணித்துவிடுமெனத் தெளிந்தவராதலின் அரசர் பெருஞ்செல்வத்தை நுகருமுளமின்றிக் கையில் உண்கலனுக ஓடொன்றை யேந்திக்கொண்டு ஊர்தோறும் திரிந்து பிச்சையேற்று உண்ணும் எளிய வாழ்க்கையினையே மேற்கொண்டொழுகினுர். இங்ஙனம் தெருவிற் பிச்சையேற்றுத் திரியும் கருவூர்த்தேவரின் உள்ளத்துயர்ச்சியினை நன்குணர்ந்த கங்கைகொண்ட சோழன் அச்சிவயோகியாரைப் பணிந்து அவர் திருவாய்மலர்ந் தருளிய திருவிசைப்பாத் திருப்பதிகங்களை ஆராஅன்பினுல் இறைவன் முன்னிலையில் ஓதி

வழிபடும் வாயிலாக அப்பெருமானது திருவருளை நிரம்பப் பெற்று வேந்தரெலாந் தன் ஆணைவழி யடங்கியொழுகச் செய்யும் வீறுடைய பேரரசனாக விளங்கினான். இச் செய்தியினை,

மங்கையோ டிருந்தே யோகுசெய் வானை
    வளரிளந் திங்களை முடிமேற்
கங்கையோ டணியுங் கடவுளைக் கங்கை
    கொண்டசோ ழேச்சரத்தானை
அங்கையோ டேந்திப் பலிதிரி கருவூர்
    அறைந்தசொன் மாலையால், ஆழிச்
செங்கையோ டுலகில் அரசுவீற் றிருந்து
    திளைப்பதுஞ் சிவனருட் கடலே

என வருங் கங்கைகொண்ட சோழேச்சரத் திருவிசைப்பாவின் இறுதிச் செய்யுளில் கருவூர்த்தேவரே தெளிவாக எடுத்துரைத்துள்ளார்.

மகளிர்பாற் செலுத்தும் விருப்பத்தினை நூறாயிரம் பங்கு செய்து அவற்றுள் ஒரு பங்கு அளவேனும் இறைவன்பால் மக்கள் அன்பு செலுத்துவாராயின் அவர்கள் தன்பால் வைத்த சிறிய அன்புக்கு மகிழ்ந்து மிகப்பெரிய தேவருலகத்தையே அவர்களுக்குரிய அன்பின் பரிசாக அருளுதல் இறைவனது பேரருளின் பெருமை யாகும். இத்தகைய இறைவனது திருவருட் பெருமையினை,

தத்தையங் கனையார் தங்கண்மேல் வைத்த
    தயாவை நூறாயிரங் கூறிட்(டு)
அத்தில் அங்கொருகூறு உன்கண் வைத்தவருக்(கு)
    அமருலகு அளிக்கும் நின் பெருமை ;
பித்தனென் றொருகாற் பேசுவ ரேனும்
    பிழைத்தவை பொறுத்தருள்செய், பூங்
கைத்தலம் அடியேன் சென்னிமேல் வைத்த
    கங்கைகொண்ட சோழேச்சரத்தானே.

என்ற திருப்பாடலால் கருவூர்த்தேவர் சுவைபெற விரித்துக் கூறியுள்ளார். இறைவன் திருவருட் பெருமையை எடுத்துக்கூறு முகத்தால் அப்பெருமான்பால் எல்லோரும் பேரன்புடையரா யொழுகவேண்டியதன் இன்றியமையாமையினையும் இத் திருப்பாடலில் வற்புறுத்தினமை காணலாம்.

சிவபெருமானுக்குக் கங்கைகொண்ட சோழேச்சரமெனத் தன் பெயராற் பெருங் கோயிலெடுத்து அப்பெருமான்பால் அளவிலாப் பேரன்புடையவனாகிய கங்கை கொண்ட சோழன் எல்லாம் வல்ல இறைவனது திருவருளால் வேந்தரெலாம் வணங்கும் பெருவேந்தனாகி இவ்வுலகில் ஆழிச்செங்கையோடிருந்து பேரரசுபுரிந்து சிவனருட் கடலில் திளைத்தின்புற்றான் என்ற நற்செய்தியை உலக மக்களுக்கு எடுத்

துரைக்குமுகமாக எல்லோரும் சிவனது திருவருளை விரும்பிச் செம்மை நெறியில் ஒழுகுதல் வேண்டுமென்பதனை மேற்காட்டிய திருக்கடைக்காப்புச் செய்யுளால் கரு வூர்த்தேவர் அறிவுறுத்தருளிய திறம் என்றும் நினைந்து இன்புறுதற் குரியதாகும்.

முதலாம் இராசேந்திரனாகிய கங்கைகொண்டசோழன் தான் எடுப்பித்த கங்கை கொண்ட சோழேச்சரத் திருக்கோயில் விமானத்தின் தென்கீழ்ப் பகுதியில் தனக்கு அருளாசிரியராய் விளங்கிய கருவூர்த்தேவரது திருவுருவத்தைக் கருங்கல்லால் அழகு பெறச் செய்து அமைத்துள்ளான். இத்திருவுருவமே கருவூர்த்தேவர்க் கமைந்த திருவுருவங்களுள் மிகப் பழையதாகும். தஞ்சை யிராசராசேச்சரத் திருக்கோயிலின் மேலைத்திருச் சுற்றிலும் இவரது திருவுருவம் அமைக்கப்பெற்று அன்பர்களால் வழிபடப்பெறுகின்றது.

இதுகாறும் கூறியவற்றால் சாதி குலம் முதலிய தளைகளை யறுத்துத் துறவுமேற் கொண்டு கையில் ஓட்டினை யேந்திப் பிச்சையேற்றுண்டு எல்லாம் வல்ல சிவபெரு மானை இனிய தமிழாற் பாடிப் போற்றுதலையே தமக்குரிய சிறந்த குறிக்கோளா கக்கொண்டு, இராசராச சோழன், கங்கைகொண்ட சோழன் என்னும் முடிவேந்தர் களால் நன்கு மதித்து வழிபடப்பெறும் அருளாசிரியராகித் திருநெறிய தமிழ் வளர்த்த திருவாளர் கருவூர்த்தேவர் எனக் கண்டோம். இவரைக் குறித்துப் பொருந்தாத பொய்க்கதைகள் சில பிற்காலத்தவரால் புனையப்பட்டன. கருவூர்த் தேவர் பாடியருளிய திருவிசைப்பாப் பாடல்களை நன்கு பயின்ற அறிஞர்கள் பிற் காலப் பொய்க்கதைகளை ஒரு சிறிதும் நம்பார் என்பது திண்ணம். கருவூர்த்தேவர் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாடல்கள் யாவும் நவிலுந்தொறும் சுவை மிகத் தந்து அன்பராயினார் உள்ளத்தில் அண்ணித்து அவர்தம் நாவிற்கு அமுதென இனிப்பனவாம். இவற்றின் சுவை நலங்கள் தனியே ஒரு கட்டுரையால் எழுதுதற்கு உரியன. தமிழன்பர்கள் தேனினுமினிய இத்திருவிசைப்பாப் பாடல்களைப் பன்முறை யும் படித்து இன்புறுவாராக.

# தொல்காப்பியம்

(வித்துவான், திரு. வே. வேங்கடராஜுலு ரெட்டியார்)

தமிழ் மொழியில் இப்போதுள்ள நூல்களுள் தொன்மை வாய்ந்தது தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலே. அது தொல்காப்பியனாரால் செய்யப்பட்டதனால் தொல்காப்பியம் என்று வழங்குகின்றது. தொல்காப்பியனார் என்னும் பெயரில் "காப்பியனார்" என்பது அவர் இயற்பெயர் என்றும், "தொல்" என்பது தொல்கபிலர் என்பதிற்போல அடைமொழி என்றும் கொள்ளலாகும். ஆயின், தொல்காப்பியம் என்பது பிற்காலத்தில் ஏற்பட்ட பெயரே என்பதும், ஆசிரியர் நூற்கு இட்ட பெயரன்று என்பதும் போதரும்.

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று அதிகாரங்களையுடையது. ஒவ்வோர் அதிகாரமும் ஒன்பது இயல்களாக அமைந்துளது. அதிகாரங்களை இவ்வாறு சமமாகப் பகுக்கும் வழக்கு வடமொழியிலும் உளது. பாணிணீயத்தில் ஒவ்வோர் அத்யாயமும் நான்கு பாதங்களாகப் பிரிக்கப்பட்டிருப்பது அறியத்தக்கது.

ஆசிரியர் தொல்காப்பியனார் வடமொழியிலும் புலமை நிரம்பியவர் என்பது "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்" என்னும் பாயிரத்தால் விளங்கும். அவர் வடமொழிப் புலமை உடையவராயினும் தமிழ் மொழிக்கு வேண்டாத வடமொழி இலக்கணங்களைத் தம் நூலில் கூறிற்றிலர். இது,

"எல்லா எழுத்தும் வெளிப்படக் கிளந்து
சொல்லிய பள்ளி எழுதரு வளியிற்
பிறப்பொடு விடுவழி உறழ்ச்சி வாரத்
"தகத்தெழு வளியிசை" அரில்தப நாடி
அளபிற் கோடல் "அந்தணர் மறைத்தே"
"அஃதிவண் நுவலா தெ"ழுந்து புறத்திசைக்கும்
மெய்தெரி வளியிசை அளபுநுவன் றிசினே."

என்னுஞ் சூத்திரத்தில், "வடமொழி வேதத்தின் கண்ணே வழங்குகின்ற ஒலி முறைகளை நான் இங்குக் கூறவில்லை" என்று ஆசிரியர் தெரிவித்திருப்பது காண்க. இவ்வாறே

"வேற்றுமை தாமே ஏழென மொழிப"

என்று பிறர் மதம் கூறி,

" விளிகொள் வதன்கண் விளியோ டெட்டே "

என்று தமிழ்க் கொள்கையை நிலைநிறுத்தினார். இதுவும் வடமொழியில் இந்திர னால் கூறப்பட்டுளது எனின், தமிழ் மொழியோடு ஒத்த கொள்கையை மேற்கொண் டார் என்க.

தொல்காப்பியத்தில் சில சூத்திரங்கள் பாணினீய சூத்திரங்களை ஒத்துக் காண் கின்றன. அவை ஐந்திர வியாகரணத்திலும் கூறப்பட்டனவாகலாம். நிற்க, எழுத் ததிகாரத்தில் எழுத்துக்களின் தொகை, பெயர், அளபு முதலியவற்றையும் அவை பிறக்கும் இடங்களையும் மொழியின் முதலிலும் இறுதியிலும் நிற்கும் எழுத்துக் களையும் கூறி, புணர்ச்சி யிலக்கணத்தை ஆறு இயல்களில் விரிவாக விதித்திருக் கின்றார். சொல்லதிகாரத்தில் வாக்கிய அமைதியையும், வேற்றுமை யிலக்கணங் களையும் கூறி, பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் ஆகிய நால் வகைச் சொற்களின் இலக்கணங்களையும் உரைத்திருக்கின்றார். பொருளதிகாரத்தில் அகத்திணை புறத்திணைகளையும், அகத்திணை ஒழுக்கங்களாகிய களவு கற்பு இயல் களையும், மெய்ப்பாடு (ரஸம்) உவமை இவற்றின் இலக்கணத்தையும், செய்யுள் இலக்கணத்தையும், பலவகைப் பொருள்களுக்கும் மரபு பற்றி வழங்கும் பெயர் களையும் கூறியுள்ளார்.

ஆராயுமிடத்து, எழுத்து சொல் இவ்வதிகாரங்களில் கூறப்பட்டவையே மொழிக்கு உரிய இலக்கணம் என்பதும், பொருள் அதிகாரத்தில் கூறப்பட்டவை யெல்லாம் காவியங்களில் கூறப்படுபவற்றைக் குறித்த இலக்கணம் என்பதும் புல னாகும். வடமொழியில் காவிய இலக்கணம் தனி நூல்களாகக் கூறப்பட்டுள்ளன. தொல்காப்பியனார் தனியே ஓர் அதிகாரமாக வகுத்துக் கூறியுள்ளார் என்று கொள்க.

பொருளதிகாரத்தில் கூறப்பட்டனவெல்லாம் தமிழ் மொழிக்கே உரியனவென் றும், அவ்வாறு வடமொழி யிலக்கணத்தில் கூறப்படவில்லை என்றும் கூறுவது அமைவுடையதன்று. அகத்திணை புறத்திணைப் பாகுபாடுகளும், செய்யுளியல் மர பியல் இவற்றில் கூறப்பட்டனவும் தமிழ் மொழிக்குச் சிறப்பானவையாகுமேயன்றி, அகத்திணை புறத்திணை இயல்களில் கூறப்பட்டுள்ள செய்திகள் தமிழுக்கே சிறப் பானவை யாதலில்லை. இங்கு, பொருளதிகாரத்தில் கூறப்பட்டுள்ள சில பொருள் களைக் குறித்துச் சிறிது கூறுவோம் :

பொருளதிகாரத்தின் முதலாவதாகிய அகத்திணை இயலில், முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள்களையும், அகத்திணை ஏழனையும் கூறி, அவற்றுள் பாலைத்திணையைப்பற்றி விரித்துரைத்துள்ளார். முதற் பொருளாவன—நிலமும் பொழுதும். நிலம் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என நான்கு வகையாகும். பொழுது—பெரும்பொழுது, சிறுபொழுது என இரண்டு பிரிவாகும். ஒவ்வொரு பிரிவும் ஆறு வகைப்படும். முல்லைத்திணைக்குப் பெரும்பொழுதினுட் கார்காலமும் சிறுபொழுதினுள் மாலைக்காலமும் உரியனவாகும். குறிஞ்சித்திணைக்குக் குளிர்

காலமும் முன்பனிக்காலமும் யாமமும் உரியவாகும். மருதத்திணைக்குச் சிறு பொழுதினுள் இரவின் கடைப்பகுதியாகிய வைகறையும், பகலின் முதற்கூறாகிய விடியலும், நெய்தல் திணைக்குச் சூரியன் படும் பொழுதை இறுதியாகக்கொண்ட பகலின் கடைக்கூறும் உரியவாகும். (இவ்விரண்டு திணைகளுக்கும் பெரும்பொழுது ஆறும் உரியன.) பாலைத்திணைக்கு வேனிற் காலங்களும், பின்பனிக்காலமும், நடுப் பகலும் உரியனவாகும். நிலத்தைக் கருதினும் உரிப்பொருளைக் கருதினுங் குறிஞ் சித்திணையை முதலாமதாக வைத்தல் வேண்டும். அவ்வாறு வைக்காமல் முல்லைத் திணையை முதலாவதாக வைத்ததனை நோக்குமிடத்து, காலத்தினுனே இத்திணை களின் முறை அமைக்கப்பட்டுளது என்பது புலனுதல் கூடும். ஓராண்டினுள் முதல் மாதம் ஆவணிமாதம் ஆகும். அவ்வாறே ஒரு நாளின் முதற்பகுதி இரவின் முதற் கூறு ஆகும். அதனுனே இவற்றை உரிமையாகக் கொண்ட முல்லைத்திணையை முதலாமதாக நிறுத்தினுராவர். இருவகைக்காலமும் இம்முறையே கொள்ளுதற்கு நச்சினுர்க்கினியர் கூறியுள்ள காரணம் அமைவுடையதாகும் :

"காலவுரிமை எய்திய ஞாயிற்றுக்கு உரிய சிங்கவோரை முதலாகத் தண் மதிக்கு உரிய கற்கடகவோரை யீருக வந்துமுடியுந் துணை ஓர் யாண்டாமாதலின், அதனை இம்முறையானே அறுவகைப்படுத்து இரண்டு திங்களை ஒரு காலமாக்கினர். இனி ஒரு நாளினைப் படுசுடரமையந் தொடங்கி மாலையெனவும், அதன்பின் இடை யாம மெனவும், அதன்பின் வைகறை யெனவும், அதன்பின் காலை யெனவும், அதன்பின் நண்பகலெனவும், அதன்பின் எற்பாடெனவும் ஆறுகப் பகுத்தார். அவை ஓரோவொன்று பத்து நாழிகையாக இம்முறையே சூத்திரங்களுட் சிறு பொழுது வைப்பர்", என்று அவர் எழுதியிருப்பதை அறிக.

சூரியன் அடைந்தது முதற்கொண்டு மீண்டும் சூரியன் அடையும்வரை உள்ள காலம் ஒருநாள் ஆக வழங்கும் முறைமை "அல்லும் பகலும்", "கங்குலும் பக லும்", "இராப்பகல்" என்னும் இருவகை வழக்காலும் அறியலாகும். அன்றியும், கழிந்த இரவினைப்பற்றி அடுத்துவரும் பகலில் பேசும்போது நேற்றிராத் திரி என்பது தவறு என்றும் இராத்திரி என்று சொல்வதே அமைதி என்றும் பலரும் கூறுகின்ற மரபினுலும் இரவும் பகலும் சேர்ந்ததே ஒருநாள் என்பது வலியுறும். ஆசிரியர் தொல்காப்பியனுர் "இராப்பகல்" என்னுந் தொடர்க்கு விதி கூறியிருத்தல் ஈண்டு அறியத்தக்கது. வடமொழியில் இரவின் நடுயாமம்முதற் கொண்டு பின்வரும் இரவின் நடுயாமம் வரை ஒரு நாளாகக் கொள்ளப்படுவதும் ஈண்டைக்குக் கருதத்தகும்.

ஒவ்வொரு திணைக்கும் உரிய சிறு பொழுதையும் பெரும்பொழுதையும் கூறிய பின், ஆசிரியர் பாலைத்திணைச் செயல்களைப் பல சூத்திரங்களில் கூறியுள்ளார். ஓதற் பிரிவு, தூதிற் பிரிவு, காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு முதலிய பிரிவுகளையும் அவற்றிற்கு உரிய மக்களையும் கூறுஞ் சூத்திரங்களின் பொருளில் உரைகாரர்கள் மாறுபடுகின்றனர். அவற்றுள் சில பொருந்துமாறு இல்லை. ஆயின், உண்மையான பொருள் இதுவென்று துணிவாகக் கூற இயலவில்லை. ஆசிரியர்காலத்து இலக்கியங்கள் நமக்குக் கிடைக்காமையே இதற்குக் காரணமாகும். அகத்திணை யியலின்

இறுதியில் கைக்கிளை பெருந்திணைகளைப்பற்றிக் கூறியுள்ளார். அவற்றை நோக்கு மிடத்து, பண்டைக்காலத்தில் பருவம் நிரம்பா இளமை மகளிரை நோக்கிச் சிலர் தம் வேட்கையைக்கூறி அதனுனே இன்புறுதல் உண்டென்பதும், மடலூர்தல், முதுமைக் காலத்திலும் வாழ்க்கையில் இருத்தல், வலிதிற் கூடுதல் முதலிய செயல் களும் நடைபெற்றன என்பதும் அறியலாகும். ஆயின் இச்செயல்களெல்லாம் அடி யவர், தொழிலாளர், ஏவலர் இவர்கள் திறத்திற் கூறுதல் வேண்டும் என்று ஆசி ரியர் உரைத்திருத்தலின், நன்மக்களிடத்தில் இச்செயல்கள் நிகழ்ந்திலவென்பது போதரும்.

இனி, தலைமக்கள் தாம் விரும்பிய மங்கையை உடன்கொண்டு சென்று தம் இல்லத்தில் மணம் புரிந்து கொள்ளுதலும், அவ்வாறின்றி முதியவரை விடுத்து மணம் பேசித் தலைவியின் இல்லத்தில் மணம் புரிவதும் வழக்காறு என்பது அறி யக்கிடக்கின்றது.

ஆசிரியர் தொல்காப்பியனுர் மெய்ப்பாட்டியல் என்னும் ஓர் இயலில் சுவை களைப்பற்றி முதலில் கூறியுள்ளார். சுவைகளுக்கு அவர் கூறியுள்ள பெயர்களை நோக்குவோம். அவை—நகை, அழுகை ; இழிவரல், மருட்கை ; அச்சம், பெரு மிதம்; வெகுளி, உவகை என்பன. ஆசிரியர் மாறுபட்ட இரண்டு இரண்டு சுவைகளை முறையே நிறுத்தியிருப்பது காண்க. இதனுல் உவகை என்பது வெகுளிக்கு மாறு பட்டதாய சந்தோஷத்தையே குறிக்கும். இது வடமொழியிற் கூறுஞ் சிருங்கார ரசங் குறிக்கும் பொருளைக் குறித்தலில்லை. உவகை ஒரு "பாவ"மாகுமேயன்றி ரசமாத லில்லை." உடைமை, இன்புறல் " என்னுஞ் சூத்திரத்தில் உடைமையை ஏனைய பாவங்களோடு சேர்த்திருப்பதனுல் அறியப்படும். ஆசிரியர் உவகைச் சுவைக்குக் கூறியுள்ள பொருள்களை நோக்கினும் இவ்வுண்மை அறிதல் கூடும்.

" செல்வம் புலனே புணர்வு விளையாட்டென்
றல்ல னீத்த வுவகை நான்கே "

என்றதனுல், உவகைச் சுவைக்குச் செல்வம், புலன், விளையாட்டு இவற்றைப்போன்று புணர்ச்சியும் ஒரு பொருளாகின்றது. செல்வம், புலன், விளையாட்டு இவற்ருல் உவகை உண்டாதல் கூடும் ; ரசம் உண்டாதலில்லை.

இனி, சுவையுண்டாகும் முறைமையினை ஆசிரியர் கூறிற்றிலர். உரையாசிரியர் களும் இயைபுறக் கூறினரல்லர். சுவையின் இயல்பினை யான் எழுதியுள்ள "சுவை இயல் " என்னுங் கட்டுரையில் காணலாகும்.

மெய்ப்பாட்டியலில் " ஆங்கவை ஒரு பாலாக " (சூ.12) என்னுஞ் சூத்திரத்திற் கூறப்பட்டுள்ள முப்பத்திரண்டு மெய்ப்பாடுகளும் சஞ்சாரி "பாவங்" களாகும். அதன் பின்னர்க் கூறிய ஆறு நிலைகளும் தலைவியின் காதலை அறிதற்குரிய குறிப்புக்கள் (அநுராக சூசகங்கள்) ஆகும். இவற்றுள் பலவும் வாத்ஸ்யாயனத்தில் வேட்கைக் குறிப்புக்களாகக் கூறப்பட்டுள்ளன. பின்னர் 22-ம் சூத்திரம் முதல் மூன்று சூத்திரங்களில் கூறப்பட்டுள்ள பொருள்களுள் பல சஞ்சாரி "பாவங்" களாகும்; சில வேட்கைக் குறிப்புக்களாகும். பசலை பாய்தல் என்பது சாத்வீக பாவம் ஆகும்.

மேற்கூறிய ரஸம், பாவம் முதலியன எல்லாம் தொனிப் பொருள்களே. தொனி—ரசத்தொனி, பாவத்தொனி, வஸ்துத்தொனி, அலங்காரத்தொனி என்று நான்கு வகைப்படும். இவற்றுள் முன்னைய இரண்டுமே சிறப்புடையன. இனி, தொனிப்பொருளில் நின்று மற்றொரு பொருள் தோன்றுதலும் உண்டு. தொனிப் பொருளையும் அதனினின்று தோன்றும் பொருளையும் தொல்காப்பியனார் கூறியுள் ளார்.

"இறைச்சி தானே பொருட் புறத்ததுவே !"
"இறைச்சியிற் பிறக்கும் பொருளுமா ருளவே
திறத்தியல் மருங்கில் தெளியு மோர்க்கே."

என்பன காண்க. இவற்றுள் முதற் சூத்திரத்தில் இறைச்சிப்பொருளின் இலக்கண மும், இரண்டாஞ் சூத்திரத்தில் இறைச்சிப்பொருளில் பிறக்கும் பொருளும் கூறப் பட்டுள்ளன." பொருட் புறத்தது " என்பதற்கு, செய்யுட் பொருளுக்குப் புறத்தே தோன்றுவது என்பது பொருள். பொருள் என்பதற்குக் கருப்பொருள் என்று நச்சினார்க்கினியர் கூறுவது பொருந்துவதன்று. இறைச்சி என்பது வடநூலில் "வியங்கியம்" எனப்படும். வியங்கியப்பொருள் செய்யுட் பொருளினும் சிறப்புடையதா யிருக்குமிடத்தில் தொனியாகும். வியங்கியப்பொருளில் பிறக்கும் வியங்கியம் "அனு-ரணனத்வனி" எனப்படும். அதாவது—ஒரு மணியை யடித்து நிறுத்திய பின்னும் அம்மணியினின்று உண்டாகுந் தொனியைப் போன்றது என்பதாம். ஒரு நீர் நிலையில் ஒரு கல்லை எறியின் அக்கல் விழுந்த இடத்தைச் சுற்றிச் சிறிய வட்டமும் அதனைச் சுற்றி மற்றொரு வட்டமும், அதனைச்சுற்றி இன்னொரு பெரிய வட்டமும்,இவ்வாறு பலவட்டங்களும் தோன்றுதற்போல, நல்லிசைப் புலவர் செய்யுளில் செய்யுட் பொருளுக்குப் புறத்தே இரண்டு மூன்று பொருள்கள் தோன்றுதல் உண்டு.

உள்ளுறை யுவமமும் உள்ளுறைப் பொருள் எனப்படுமாயினும் அது ஓர்இடத் தும் தொனி ஆதல் இல்லை. அணிவகையினுள் ஒட்டணியாகும். இறைச்சிப்பொருளே தொனி ஆகும். இவை இவ்விரண்டிற்குமுள்ள வேற்றுமை.

ஆசிரியர் உவமையியலில் நால்வகை உவமைகளையும் முதலிற்கூறி, பின்னர் உவமைகள் சிலவற்றைக் கூறி, அதன்பின்னர் உவமவுருபுகளை விரித்துக் கூறியுள் ளார். இன்ன உவமத்திற்கு இவ்விவ்வுருபுகள் வரும் என்று அவர் கூறிய நியதி கடைச்சங்கச் செய்யுட்களிலேயே பிறழ்ந்துபோயிற்று. ஆகலின், அந்நியதி அவர் காலத்திற்கு முற்பட்ட செய்யுட்களில் அமைந்திருந்ததென்பதும், அதனை நோக்கி அவர் கூறினாரென்பதும் தகும். உவமவியலின் இறுதிப்பகுதியில் உள்ளுறையுவ மத்தின் வகைகளையும் அவை கூறப்படும் முறைமையினையுங் கூறியுள்ளார்.

செய்யுளியலில் முதலில், செய்யுளின் உறுப்புக்களைக் கூறியுள்ளார். உறுப்புக் களுள் எதுகை, மோனை முதலிய தொடைகளையேயன்றி மெய்ப்பாட்டையுஞ் சேர்த் துள்ளார். இது பண்டையோர் கொள்கை. மெய்ப்பாடு செய்யுளின் உறுப்பாதல் இல்லை. இவ்வாறே வண்ணமும் உறுப்பாதல் இன்று.

தொல்காப்பியனுர் தங்காலத்தில் வழங்கிய பாக்களின் வகைகளைக் கூறியுள்ளாரேயன்றி, பிற்காலத் திலக்கணங்களில் கூறப்பட்டுள்ள பாவினங்களைக் கூறவில்லை. ஆகலின், பாவினங்கள் பிற்காலத்தில் தோன்றியவையாகும். ஆசிரியர் தமிழ் மொழியில் வழங்கிய பாட்டு முதலிய எல்லாவற்றையும் ஏழுவகையாகப் பகுத்துக் கூறியுள்ளார். அவற்றுள் உரைநடையும் ஒன்று. உரைநடை நான்கு வகையது. தொல்காப்பியனுர் காலத்திற்கு முன்னரே தமிழ்மொழியில் உரைநடை நூல்கள் இருந்தன என்று அறியும்பொழுது நாம் பெருமிதங் கொள்ளுதல் கூடும். ஆயின் அவற்றுள் ஒன்றுதல் நமக்குக் கிடைத்திலாமை வருந்துதற்குரியது. இன்னும் ஆசிரியர் காலத்தில் வழங்கிய " தொன்மை " (உரை இடையிட்ட செய்யுள் நூல்) " புலன் " (சேரி மொழியில் அமைந்த நூல்) முதலிய நூல்களும் பிற்காலத்தில் வழக்கற்றமை பெரிதும் இரங்கற்பாலதாகும்.

இனி, பொருளதிகாரத்தின் இறுதியியலாகிய மரபியலில்,ஆசிரியர் இருதிணைப் பொருட்கும் ஆண்பாற் பெயர் பெண்பாற் பெயர் இளமைப்பெயரும், உயர்திணை நான்கு சாதியும் பற்றிய மரபும், அஃறிணைப்புல்லும் மரனும்பற்றிய மரபும் அவை பற்றி வரும் உலகியன் மரபும் நூன்மரபுங் கூறியுள்ளார். இவற்றுள் மரபுபற்றிய பெயர்கள் பழைய நூல்களிலே தவறின. இக்காலத்தில் அம்மரபு சிறிதும் இல்லை எனலாம். உதாரணமாக—மக்கட்கு இளமைப்பெயராக, குழவி, மகவு என்னும் இவ்விரண்டனைத்தவிர வேறென்றும் உரியதன்று என்று ஆசிரியர் கூறியுள்ளார். இக்காலத்தில் " பிள்ளை " என்பதொன்றே பெருவழக்காயுளது. இனி, " குட்டி " என்னும் பெயர், மூங்கா, வெருகு, எலி, அணில் இவற்றிற்கும், நாய், பன்றி, புலி, முயல், நரி இவற்றிற்கும், குரங்கிற்கும் வழங்குதற்குரியது என்றுர். ஆயின், இக்காலத்தில் குட்டி என்பதனைப் பெரும்பாலும் விலங்குகள் எல்லாவற்றிற்கும் வழங்குகின்றோம். குட்டி என்னுஞ் சொல் குருடாயிருப்பது என்னும் பொருளைத் தருவதாகும். அதாவது—பிறக்கும் பொழுது கண் திறவாமலிருப்பது. வெருகு எலி முதலியவை பிறக்கும்போது கண் திறவாமலிருப்பனவாதலின் அவற்றிற்கு அமையும். ஆட்டுக்குட்டி என்பதுபோன்ற வழக்கு அமையாதன்றே ? ஆசிரியர், உள் வயிரமுள்ள விருச்சங்கட்கு மரம் என்றும், வெளிவயிரமுள்ளவற்றிற்குப் புல் என்றும் வழங்கியுள்ளார். அவ்வழக்கும் இக்காலத்தில் இல்லை. இவ்வாறே, மரபியலிற் கூறப்பட்ட மரபுப் பெயர்களுட் பெரும்பாலன அவ்வழக்கொழிந்தன. கடைச் சங்க காலத்திலே இம்மரபு பிறழ்ந்தொழிந்தது என்பதை அறியின் தொல்காப்பியனுர் காலம் அதற்குப் பெரிது முற்பட்டதாகும் என்பது எளிதில் புலனுகும். சங்க நூல் முதலாக இன்றுவரை யுள்ள இலக்கியங்களிற் காணப்படாத பல இலக்கண வழக்குக்கள் தொல்காப்பியத்தில் உள்ளன. ஆகலின், தொல்காப்பியம் தமிழ் மொழித் திறத்தால் பழம்பொருட்காட்சி நிலையம் போன்று விளங்குகின்றது.

# பழந்தமிழ் நாடும் நகரமும்

(டாக்டர். திரு. அ. சிதம்பரநாதச் செட்டியார், M.A., Ph.D.
தமிழ்ப்பேராசிரியர், அண்ணுமலைநகர்)

பழங்காலத் தமிழகம் என்றவுடனே, ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம் என்பது அறியப்படும். அக்காலத் தமிழ்நாட்டைப்பற்றிய செய்திகள் கடைச்சங்க கால இலக்கியம் எனக் கூறப்படுவனவற்றுள் குறிக்கப்பட்டுள; சிறப்பாக, பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, சிலப்பதிகாரம் ஆகியவற்றுட் சொல்லப்பட்டுள. அவற்றுட் சிலவற்றைக் காண்போம்.

பழைய தமிழ்நாடு சேர சோழ பாண்டியர்களால் ஆளப்பட்டது என்பது யாவரும் அறிந்ததே. சேரர்களுடைய தலைநகரம் வஞ்சி ; சோழருடையது காவிரிபுகும் பட்டினம் ; பாண்டியருடையது மதுரை.

இந்த நகரங்களில் காவிரிபுகும்பட்டினத்தைப்பற்றி அறிவனவற்றை முதலிற் காண்போம். அங்கே பலதிறப்பட்ட மக்கள் வாழ்ந்தனர் ; தட்ப வெப்ப நிலை நன்ருக அமைந் திருந்தது ; கடற் காற்று இனிமையாக வீசிக்கொண்டிருந்தது ; மண் நல்ல வளம் பொருந்தியதாக இருந்தது. அந்நகர மக்களின் சிறந்த தொழில் உழவே. காவிரியாறு கடலொடு கடந்த அவ்விடத்தில் வாழ்ந்த மக்கள் வேளாண்மைக்காக வானத்தை நோக்கி வாழ்ந்தவர் அல்லர். நெல்லும் கரும்பும் நிறைய விளைவிக்கப்பட்டன. அடுத்த சிறப்புடைய கைத்தொழிலாய் அமைந்திருந்தது நெசவே. அந்நகரத்திற் பஞ்சமும் தொழுநோயும் ஏற்பட்டதில்லை. அந்நகரத்தைச் சோழ அரசன் ஆண்டுவந்தான். அவ்வரசனை நாட்டின் முதற்குடியாக மதித்தார்கள். இது "பெருநிலம் முழுதாளும் பெருமகன் தலைவைத்த.........குடிகள்" என்ற சிலப்பதிகாரப் பகுதியால் அறியப்படும். அவ்வரசன் செங்கோலினனாக ஆண்டு வந்தான். அமைச்சர், புரோகிதர், சேனபதியர், தூதுவர், சாரணர் என்பவர்கள் அவனுக்கு உற்ற துணைவராய் இருந்து உதவிவந்தார்கள். அவர்களை "ஐம்பெருங் குழுவினர்" என்றார்கள். இவரை யல்லாமல் "எண்பேர் ஆயத்தார்" என்பாரும் அரசனுக்கு உறுதுணையாய் அமைந்திருந்தனர். அவர்கள் கரணத்தியலவர், கரும காரர், கனகச்சுற்றம், கடைகாப்பாளர், நகர மாந்தர், படைத்தலைவர், யானைவீரர், குதிரைவீரர் என்பவர்கள்.

அரசன் தக்க ஆட்களை அமைத்து, வரிகளை உரிய முறையில் வாங்கிக் குடிமக்களின் நன்மைக்குப் பயன்படுத்திவந்தான். உதாரணமாக, கரிகால்வளவன் என்ற

சோழன் தன் நகர எல்லையை அடைந்த பண்டங்கட்குச் சுங்கம் வாங்கும்படி பணித்திருந்தான். அவ்வாறு சுங்கம் வசூலிக்கப்பட்டுவிட்ட பொருள்களின்மீது அவனுடைய ஏவலர்கள் அவனது புலிமுத்திரையை இடுவது வழக்கம். இங்ஙனம் அவனது நகரத்தில் இறக்குமதி செய்து குவிக்கப்பட்ட பண்டங்கள் பல குன்றுகளைப் போலக் காட்சி அளித்தன. இதனைப் பட்டினப்பாலை என்னும் பழைய நூல்

"உல்குசெயக் குறைபடாது
.................................
அளந்தறியாப் பல பண்டம்
.......................................
புலிபொறித்துப் புறம்போக்கி
மதிநிறைந்த மலிபண்டம்
பொதிமூடைப் போரேறி"

எனச் சொல்லி யிருக்கிறது.

அந்நகரத்தில் இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்கள் இன்ன என்ற விவரமும் அறிகிறோம். அரேபியாவிலிருந்து கப்பல்களிற் குதிரைகளும், மேற்குக் கடற் பக்கத்திலிருந்து படகுகளில் மிளகுப் பொதிகளும், மேருவிலிருந்து மாணிக்கமும், பொதியமலையிலிருந்து சந்தனமரமும், பாண்டி நாட்டிலிருந்து முத்துக்களும், கீழ்க்கடற் பகுதியிலிருந்து பவளங்களும் வந்திறங்கின என அறிகிறோம். ஈழநாட்டிலிருந்து பனைவெல்லம் முதலிய சில உணவுப்பொருள்களும், பர்மாவிலிருந்து சில மணப்பொருள்களும், சீனதேசத்திலிருந்து கர்ப்பூரம் குங்குமம் முதலிய பொருள்களும் வந்திறங்கின.

காவிரிபுகும்பட்டினத்தில் வாழ்ந்த மக்களிற் சிலர் பகற்பொழுதில் ஓய்வு நேரத்தை எவ்வாறு கழித்தனர் என உருத்திரங் கண்ணனர் கூறியுள்ளார். நன்ருக உண்டுடுத்து வாழ்ந்த அவர்கள் சில வேளைகளில் ஊர்நடுவே கூடி, ஆட்டுக் கிடாயையும் சிவல் என்னும் பறவையையும் முட்டவிட்டு விளையாட்டுப்பார்ப்பது வழக்கம். இன்னும் சிலவேளைகளில், களரியிற் புகுந்து குத்துச்சண்டை, வெட்டுச்சண்டை, கவண்கல் எறிதல் முதலியவற்றில் ஈடுபடுவர். பல வேளைகளில், கடலாடியும், புனல் படிந்தும் நண்டுகளைப் பிடித்து ஆட்டியும், அலைகளோடு போட்டியிட்டும் பொழுதுபோக்குவர். இரவில் பட்டாடைகளை நீக்கி மெல்லிய பருத்தியாடைகளை உடுப்பர்; பாடல்கள் கேட்பர்; நாடகம் காண்பர்; வெண்ணிலவின் பயனையும் துய்ப்பர்.

இவ்வாறு இனிமையாகப் பொழுதுபோக்கினர் என்ருல், அம்மக்கள் மிக்க செல்வம் படைத்தவராகவும், உழைத்துழைத்து ஊதியம் திரட்டினராகவும் இருந்தனர் என்பது சொல்லாமலே விளங்கும் அன்ருே ? அவரெல்லாம் பகலிலே சாயுங்காலம் வரையும், பொழுது போனபின்னரும் தொழில் ஆற்றினவர். அவர்களிற் சிலர் பூவும் புகையும் விற்றவர்கள் ; சிலர் வண்ணமும் சுண்ணமும் விலை பகர்ந்தவர்கள் ; சிலர் பட்டாலும் எலி மயிராலும் பருத்தி நூலாலும் ஆன ஆடைகளை

இயற்றி விலைக்கு விற்றவர்கள். இன்னும் சிலர் அவரை, துவரை முதலிய எண் வகைத் தானியங்களை விற்று, ஊதியம் தேடினவர்கள் ; சிலர் பிட்டும் அப்பமும் விற்றவர்கள் ; மீன் விற்றவரும் உப்பு விற்றவரும் உண்டு. வெண்கலக் கன்னரும், செம்புக் கொட்டிகளும், மரவேலை செய்த தச்சரும், உழைத்துழைத்துக் களைத்துப் போன கொல்லரும் நாடகம் நயந்தும் ஆடல்கள் ஓர்ந்தும் வந்தார்கள் என அறிகிறோம். காவிரிபுகும்பட்டினத்திலே, உருக்குத்தட்டாரும், பணித்தட்டாரும், சிற்பாசிரியர்களும், சித்திரக்காரர்களும், தையற்காரர்களும் விரும்பித் தொழில்புரிந்தனர் என அறிகிறோம். துணியினாலும் நெட்டியினாலும் பூ, வாடாமாலை, பொய்க் கொண்டை முதலிய பொருட்களை அமைக்கும் கைத்தொழில் வல்லவர்கள் இருந்தார்கள். இவர்களைப்பற்றிச் சிலப்பதிகாரம் புகார்க் காண்டத்திற் செய்திகள் சொல்லப்பட்டிருக்கின்றன. புகாரின் கடற்கரைப் பக்கம் மருவூர்ப்பாக்கம் என ஒரு பிரிவாகவும், உட்பக்கம் பட்டினப்பாக்கம் என ஒரு பிரிவாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. மருவூர்ப்பாக்கத்தில் தொழிலாளரும், பட்டினப்பாக்கத்தில் அரசரும் செல்வரும் வாழ்ந்திருந்தனர்.

மதுரை ஆகிய பாண்டியர் நகரத்தைக் குறித்து மாங்குடி மருதனார் "மதுரைக் காஞ்சி"யிற் கூறியுள்ளார். மதுரை ஆறு கிடந்தாற்போன்ற தெருக்களை உடையது. தெரு ஆறு போலவும், இரு பக்கத்து வீடுகள் ஆற்றின் கரை போலவும் அமைந்திருந்தன. இனி, மதுரையின்கண் உள்ள கடைகளில் இரவிலும் பகலிலும் எவ்வாறு வாணிகம் நடந்தது என்பதை அறிவோம். அந்திக்கடையை அல்லங்காடி என்றும் பகற்கடையை நாளங்காடி என்றும் கூறுவது அக்கால மரபு.

சிலர் அறுத்த சங்கினை வளையல் முதலியனவாகக் கடைந்து தருவர் ; சிலர் அழகிய மணிகளுக்குத் துளையிடுவர் ; சிலர் பொன்னை உரைத்து மாற்றுக் காண்பர்; சிலர் பொன்வேலை செய்வர் ; சிலர் புடவை விற்பர். சிலர் அருமையான ஓவியம் வரைவர். சிலர் சிற்றுடையும் பெரும்புடவைகளும் கொண்டுவந்து தத்தம் சிறுவரொடும் நான்கு தெருக்கள் கூடும் இடங்களில் கால் கடுக்க நின்று விற்பர். பலாப் பழம், வாழைப்பழம், மாம்பழம், பாகற்காய், வழுதுணங்காய், வாழைக்காய், கிழங்குகள், கீரை முதலானவற்றை விற்கும் பல இரவுக்கடைகள் உண்டு.

இவ்விரவுக்கடைகளெல்லாம் முதல் யாமத்திலேயே மூடப்பட்டுவிடும். பிறகு, இரண்டாம் மூன்றும் யாமங்களிலே ஊர்க்காவலர்கள் உறுதியுடன் நகரில் உலாப் போவர். மழை பெய்து தெருவில் நிறைய நீரோடிக்கொண்டிருக்கிற பொழுதிலும், தம் கடமையில் வழுவாராய், கையில் வில்லும் அம்புமாக இவர்கள் திரிவார்கள் என மதுரைக்காஞ்சி சொல்கிறது.

மதுரை நகரத்தில் அக்காலத்தில் தொழில் புரிந்தார் இவரிவர் எனச் சிலப்பதிகாரம் கூறுவதை நோக்குவோம். சிலர் செம்பாலும் வெண்கலத்தாலும் பற்பல பாத்திரங்கள் செய்வர். சிலர் ஆனைக்கொம்பு முதலியவற்றைக் கடையும் தொழிலில் ஈடுபடுவர். வண்டியும் தேர்வட்டையும் தேர்க்கொடிஞ்சியும் செய்வோர் பற்பலர் உண்டு. கையில் துலாக்கோலொடும் மரக்காலொடும் நின்று பண்டங்களை நின்ற

விடத்திலேயே அளந்துகொடுப்போர் பலர். சில கடைகளில் ஆடகப் பசும்பொன் விற்கப்படும். இங்கே " சாம்பூனதம் விற்கப்படும் " " இங்கே சாதரூபம் கிளிச்சிறை விற்கப்படும் " என்ற குறிப்புப்பட எழுதப்பட்ட கொடிகள் திகழும். அதனால், சாமான் வாங்குவோர் ஒவ்வொரு கடையிலும் புகுந்து திரும்பாமல் வேண்டிய கடையில் புகக்கூடிய வசதி செய்யப்பட்டிருந்தது என அறிகிறோம்.

சேரர் பேரூர் ஒரூரின் தனிநிலை பெருததாய் நானிலத்தின் பான்மையும் பொருந்தப் பெற்றிருந்தது என்பது சிலப்பதிகாரத்தால் அறியப்படுகிறது. அந்நகரத்தில் மலையும் கடலும் கானும் வயலுமுண்டு என்று சொல்லத்தக்கபடி ஒரு வருணனை காணப்படுகிறது. " குறத்தியர் பாடிய குறிஞ்சிப் பாட்டினையும், உழவர் பாடிய ஓதைப்பாணியையும், இடையர் பாடிய குழலின் பாணியையும், நுளைச்சியர் பாடிய நெய்தற் பாணியையும் " செங்குட்டுவன் மனைவி கேட்டனளாய்ப் படுக்கையில் இருந்தாள் எனக் கூறப்பட்டிருப்பதால், அந்நகரத்தின் தட்ப வெப்ப நிலை கலப்புவாய்ந்தது என்பது பெறப்படும். அங்கு வாழ்ந்த மக்கள் வேட்டுவரும், உழவரும், இடையரும், பரதவரும் ஆகிய பல திறத்தவர் என்பது பெறப்படும். அந்த நகரத்தில் சிவனுக்கும் திருமாலுக்கும் சிறந்த கோயில்கள் அமைந்திருந்தன.

அக்காலத்தில் தமிழரசருடைய தலைநகரங்களிற் பிறநாட்டு வேந்தருடைய ஒற்றர்கள் வாழ்ந்துவந்தார்கள் என்பதற்குரிய சான்று சிலப்பதிகார வஞ்சிக் காண்டத்திற் காண்கிறோம். சேரன் செங்குட்டுவன் வடநாடு புகுந்து வெற்றிகொள்ள வேண்டும் எனத் தன் அமைச்சனிடம் சொல்லவும், அவன் கண்ணகிக்குக் கோயில் எடுக்க ஒரு கல்லிற்காகத்தானே போகவேண்டும், வடநாட்டு மன்னர்க்கு முடங்கல் அனுப்பினால் வந்துவிடும் என்றான். அப்பொழுது அழும்பில்வேள் என்பான் " முடங்கல் வரையவேண்டா, இந்த ஊரிற் பறை யறைந்தாற் போதும். இவ்வூரின் கண் வடநாட்டு மன்னரின் ஒற்றராய் வந்திருப்போர் அறிவித்துவிடுவர் " எனச் செங்குட்டுவனுக்குச் சொன்னான் எனப் படிக்கின்றோம். இதனால், சேரருடைய தலைநகரத்திற் பிறவேந்தரின் ஒற்றர்கள் வந்து தங்கியிருந்தனர் என்பதும், அவ்வாறே ஏனைய நாடுகளில் தமிழ் வேந்தரின் ஒற்றர்கள் போய்த் தங்கியிருந்தனர் என்பதும் அறியப்படும்.

இனி, நாட்டுப்புறங்களில் மக்கள் வாழ்க்கை நடத்திவந்த விதத்தைப் பார்ப்போம். சில இடங்களில் உப்புவாணிகர் வண்டி நிறைய உப்பு மூட்டைகளை ஏற்றிப் பக்கத்து ஊருக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்பர். அப்படிப் போகுங்கால் வண்டியில் பூட்டப்பட்ட எருது சோர்ந்தாற் பூட்டுதற்கு வேண்டும் என வேறு எருதுகளைத் தம்மொடு கொண்டுபோவர். வண்டியில் ஆடவர் ஏறிக்கொள்ளாது, மகளிரை ஓட்டச் செய்து, தாம் சாலையில் இருமருங்கும் எருதுகள் திருகாமலும் வண்டியச்சு முறியாமலும் பாதுகாத்துச் செல்வர். சில வேளைகளில், கையிலே குழந்தையையுடைய மகளிரும் அவ்வாறு எருதுகளைத் துரத்தி வண்டியை ஓட்டிக்கொண்டு போவது உண்டு என்பது பெரும்பாணாற்றுப்படையால் அறியப்படுகிறது. வேறு சில இடங்களில் மிளகுப்பொதிகளைக் கழுதைமீதேற்றிப் பக்கத்தே வாளுங் கையுமாகப் போய்க் கொண்டிருந்தவர்களும் உண்டு.

பெரும்பாணுற்றுப்படையில் அடியிற் காணுமாப்போல ஒரு வருணனை அமைந்துளது. ஆண்டு ஒரு குடிசை தோன்றுகிறது. அஃது ஈச்ச இலையால் வேயப்பட்டிருக்கிறது. குடிசையின் முன்பக்கத்தில் ஒரு விளாமரம் நிற்கிறது. அவ்விளாமரத்தடியில் ஒரு பார்வைமான் கட்டின இடம் தேய்ந்துபோயிருக்கிறது. அக்குடிசையிற் குழந்தையைப் பெற்றுள்ள பெண்ணொருத்தி குழந்தையோடு மான்றோலில் முடங்கிக் கிடக்கிறாள். அவ்வீட்டின் பிற பெண்டிர் இன்னோர் இடத்திற் காணப்படுகிறார்கள். அங்கே நிலத்தைக் கடப்பாரையினாலே குத்தித் தோண்டிக்கொண்டிருக்கிறார்கள். அங்கே எறும்புகள் தேடி வைத்துள்ள புல்லரிசியை வாரி எடுத்துக்கொண்டு வருகிறார்கள். விளாமர நிழலில் நிலவுரலிலே இட்டுக் குத்துகிறார்கள். ஆழ்ந்த கிணற்றிலிருந்து உவரிநீர் சிறிது முகந்துவருகிறார்கள். ஒறுவாய் போன பானையிலே அதைப் பெய்து, முரிந்த அடுப்பிலே அதை ஏற்றுகிறார்கள். அப்படி ஆக்குஞ் சோற்றோடு உப்புக்கண்டத்தைச் சேர்த்துக்கொண்டு தாமும் உண்டு பிறர்க்கும் அளிக்கிறார்கள்.

ஒரு நாட்டின்கண் ஓரிடத்தில் காயவைத்திருக்கும் உணவுப்பொருளைத் தின்ன வரும் கோழியைப் பொற்குழையினால் ஓட்டுகின்ற அளவு செல்வச் செருக்குடைய மகளிர் வாழ்ந்தார்கள் ; அந்நாட்டில்தானே ஒரு மூலையிற் பசியால் வாடிய மக்கள் பலர் வாழ்ந்தனர் எனச் சொல்லக்கூடிய வகையில் இவ்வருணனைகள் காணப்படுகின்றன.

நாட்டுப்புற வாழ்க்கையை நடத்திவந்த இடைக்குல மகள் ஒருத்தியின் செய்தியை இனிக் காண்போம். பொழுதுவிடிய இன்னும் ஓர் யாமம் இருக்கும்பொழுதே இவள் எழுந்து தயிர் கடைகிறாள். இவள் மத்தினால் கடைவது புலிமுழக்கத்தைப்போல் இருக்கிறது. தயிரைக் கடைந்து வெண்ணெயை எடுத்துவிட்டாள். இப்பொழுது, தலையிலே மோர்ப்பானை, அதற்குமேல் வெண்ணெய்ச் சட்டி இவற்றோடு புறப்பட்டு ஒரு நகர்ப்புறம் போகிறாள். தலையிலே பூஞ்சுமட்டின் மீது அப்பானை ஏற்றப்பட்டுள்ளது. இவள் காதிலே குழை அசைகிறது. குறிய கூந்தலையுடைய இவள் மோர் விற்று நெல்லைப் பெறுகிறாள். அந்த நெல்லெல்லாம் சுற்றத்தாரும் தானும் உண்பதற்கு ஆகின்றன. நெய்யை விற்று அதன் மதிப்பை அப்படியே நகரமக்களிடையே நிறுத்தி நிறுத்தி வைத்துவிட்டு மீள்கிறாள். நாளடைவில், அந்த மதிப்பைப் பொன் கட்டி ஆக்கலாம். ஆனால், இவள் அவ்வண்ணம் செய்ய விரும்பவில்லை. அந்தத் தொகைக்குப் பதில் பாலெருமைகளும் நல்ல பசுக்களுமே வாங்கிவருகிறாள்.

இவள் வீட்டிலே உள்ள ஆடவன் சிழ்க்கை அடிக்கும் வாயை உடையவன் ; செருப்புத் தழும்பு ஏறின காலை உடையவன் ; பசுக்களை விரட்டுகின்ற தடி அமைந்த கையினை உடையவன் ; ஒழிந்த நேரங்களில் மரங்களை வெட்டிவருதற்கு உதவும் கோடரியை யுடையவன் ; காவடி சுமந்த தழும்பமைந்த தோளையுடையவன். அவன் பால் கறந்த கையைத் தலையிலே தடவித்தடவி ஒருவித சிறந்த மணம் அவன் தலையிலே வீசுகிறது. கொம்பிலும் கொடியிலும் பூத்த பல பூக்களால் ஆன கதம்பத்தை அவன் தலையிலே சூடிக்கொண்டு வருகிறான். இப்பொழுதுதான் மாடுகளைமேய்த்து விடு திரும்புகிறான். அவனோடு சென்றால், அவன் வீட்டிலே பசுந்தினைச் சோறும் பாலும் கிடைக்கும்.

இனி, ஒரு நாட்டுப்புற மறையவர் வீட்டினை நோக்குவோம். அந்த வீட்டின் வாசலிலே பந்தல் போடப்பட்டிருக்கிறது. அப்பந்தர்க்காலில், ஒரு பசுங்கன்று கட்டப்பட்டுப் பொலிவாக விளங்குகிறது. வீடு மெழுகப்பட்டிருக்கிறது. அந்த வீட்டிலே கோழியோ நாயோ காணப்படவில்லை. ஒரு கிளி மாத்திரம் கூண்டிலே காணப்படுகிறது. அதுவோ வேதம் ஒலிப்பதுபோலத் தோற்றுகிறது. அந்த வீட்டுப் பெண் இப்பொழுதுதான் நல்ல வெண்ணெயில் மாதுளங்காயைப் பொரித்து மிளகுப்பொடியைத் தூவிக் கருவேப்பிலையிட்டுத் தாளித்துக்கொண்டிருக்கிருள். வாசனை மூக்கில் ஏறுகிறது. அவள் கையில் ஐந்தாறு வளையல்கள் ஒலிக்கின்றன. அங்கே போனல், நல்ல பருப்புச் சோறும் பொரியலும் மாவடு ஊறுகாயும் கிடைக்கும்.

இன்னுஞ் சிறிது தொலை சென்றல் ஆண்டு ஒரு வீடு தென்படும். அது வேளாளர் வீடுபோலத் தோற்றுகிறது. புதிய வைக்கோலால் அவ்வீடு வேயப்பட்டிருக்கிறது. பல பசுங்கன்றுகளைத் தாமணியாற் சேர்த்துத் தறிகளில் கட்டியிருக்கிருர்கள். அவ்வீட்டில் சில பெரிய நெற்குதிர்கள் காணப்படுகின்றன. அக்குதிர்களைக் "கூடுகள்" என்கிருர்கள். அவை ஏணிக்கு எட்டாத உயரமுடையன. முகட்டைத்திறந்து பழைய நெல் சொரியப்பட்டுள்ள கூடுகள் நிரம்பி இருக்கின்றன. அவ்வீட்டுச் சிறுவர் சிறுதேர் உருட்டி விளையாடிச் சோர்ந்துபோய்ச் செவிலித்தாயரிடத்துப் பால் நிறைய அருந்திப் படுக்கையிலே துயில்கிருர்கள். அங்கே சென்றல், வெண்ணெல்லிலிருந்து எடுத்த அரிசியாலான இனிய சோற்றைப் பெட்டைக்கோழிப் பொரியலோடு பெறலாம். இவைபோன்ற பழங்கால நாட்டுப்புறச் செய்திகளும் நகரச்செய்திகளும் சங்க இலக்கியங்களால் அறியப்படுகின்றன.

# கல்வி கேள்வி-திருக்குறள்

(வித்துவான், திரு. வீ. உலகவூழியனுர்)

## கல்வி படிப்பின் வேறுபட்டது

நாள்தொறும் படித்துக் கற்று உணர்ந்து அறிவாகி வாழ்விற் கலப்பதற்குப் பொருந்துவனவாய் அமைந்த புத்தகங்களும், பொழுதுபோக்கின் பொருட்டு அப் போதைக்கப்போது படிக்கப்பட்டுச் சிறிதறிவைத் தந்து மறைந்தொழிவனவாய் அமைந்தனவும் ஆக இருவகைப்படும் புத்தகங்கள் என்று அறிஞர் பாகுபடுத்திக் கூறியுள்ளனர்.

திருக்குறள் திருவாசகம் போல்வன முந்திய பகுதியுள்ளும், செய்தித்தாள்கள் சிறுகதைகள் போல்வன பிந்திய பகுதியுள்ளும் அடங்கும். முந்தியவற்றைக் "கற்றலும்" பிந்தியவற்றைப் "படித்தலும்" பொருந்தும்.

இக்கருத்தினைத் தெய்வப்புலவர்—திருவள்ளுவனுர் திருந்தக் கூறியுள்ளார். "கற்றல் வேண்டும். எவ்வாறு ? ஐயந்திரிபு முதலிய குற்றங்கள் இல்லாதவாறு. எவற்றை ? கற்கவேண்டிய சிறந்த நூல்களை. ஏன் ? கற்றபடி ஒழுக்கத்தில் நிற்றற் பொருட்டு".

"கற்க கசடுஅறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" என அறைகின்றுர்.

விரைந்து கற்றல் வேண்டும் என்பது தோன்ற முதலடியை முற்றுமோனையாகவும், முதற் சீர்ச்சொல்லை வியங்கோள் வினைமுற்றுகவும் அமைத்துக் கூறினர். கற்கப் புகுவார்க்குக் கல்லாரைவிட உயிர்க்காற்றுச் செலவு மிகுதலின் வாழ்நாட்குறைவும், பிணி பலவும் அவர்க்கு எய்துதலால் அன்னுர் ஆராய்ந்து அமைவுடையனவற்றையே கற்றல் வேண்டும் என்பது தோன்றக் "கற்பவை" என்றுர். இதனல் கற்றற்குரியன அல்லாதவை இன்றியமையாத விடத்துப் படித்துக் கழிக்கப்படத்தக்கன என்பது வள்ளுவரின் தெள்ளிய கருத்தென நாம் உணர்தல் வேண்டும்.

மனிதன் ஐயம் முதலிய குற்றங்கள் நீங்கிய வகையில் சிறந்த நூல்களையே கற்றல் வேண்டும்; அந்நூல்களிற் கூறப்பட்ட முறைப்படி ஒழுகல் வேண்டும் என்னும்

இவ்வுண்மைகளை நமக்கு அறிவுறுத்தும் வள்ளுவப்பெருந்தகை இக்கருத்துக்கள் அமையுமாறு இக்குறட்பாவை இயற்சீர்வெண்டளையே அமையக்கூறிய இசை ஒலிக் கூறுபாட்டை நாம் சிந்திப்போமாக. நிறைவேற்றுபவர் காரியங்களைச் செய்தற்கமைந்த பணிபுரி மக்களை வற்புறுத்தி அன்னவர்க்கு ஆணையிடும்போது ஏவும் ஓசைச்செல்வமானது இயற்சீர்வெண்டளை ஒன்றுனே அமைந்த இத்திருக்குறளில் வளம்பெற இருத்தலைப் பலமுறை நாவால் ஒலித்துச் செவிகருவியாக ஓர்ந்து உண்மை கண்டு மகிழவேண்டுகின்றேம்.

## மக்களாவார் யாவர்

தொல்காப்பியர் "மக்கள் தாமே ஆறறிவுயிரே" என மக்கட்கு இலக்கணம் கூறினர். சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் துய்த்தலும், அருந்தல் பொருந்தல் துயிறல் பெறுதலும் விலங்கு பறவை முதலியவற்றிற்கும் இயைந்து கிடக்கின்றன. இவை தம்மொடு மொழியைக் கருவியாகக் கொண்டு கசடு அறக் கற்பவை கற்றலே பகுத்தறிவுக்கு உரிமையுடையராய மனிதருக்குச் சிறப்பிலக்கணமாய் அமைந்தது. இச்சிறப்பியல்பினை அவ்விலங்கு பறவை முதலியவைகள் எய்துமாறு இல்லை. அவைகளுள் ஒருசில சிறிது பகுத்தறிவுடையனவாய்க் காணப்படுகின்றன; மொழியறிவும் வாய்க்கப்பெற்றுள்ளன என்னும் உண்மையை அறிவியல் அறிஞர்கள் நன்கு எடுத்துக்காட்டி விளக்கி நிறுவியுள்ளனர். எனினும், அவை பெற்றிருக்கும் மொழியறிவும் ஓரளவிற் பட்டனவேயன்றி மக்கள் பெற்றிருக்கும் அறிவு போல நிறைந்தனவாயில்லை. அன்றியும் அவை ஒருதுறை யறிவினையே அன்றிப் பலதுறை யறிவினைப் பெற்றில. இயற்கையில் தாம் எய்தியிருக்கும் உட்டுண்டலே (Natural instincts) அன்றி அவை புலமையொடு பொருந்தினவாகா. ஆதலால் அவ்விலங்கு முதலியன உயர்ந்தன எனச் சுட்டப்படாதனவாய் அஃறிணையாய் ஒதுக்கப்பட்டன.

காடு திருத்தி நாடாக்கி நகரமைத்து நகரக (நாகரிகம்) முறையே அரசியல் கண்ட உயர்திணைச் சுட்டுப் பொருந்தியவரே மனிதர் எனவும், கற்றவராவாரும் அவரே எனவும், மனிதயாக்கையுடன் காணப்படுவாராயினும் மனத்தில் உருவமைந்த எண்ணமிலராய் மொழிகருவியாகக் கற்கும் சிறப்பியல் அறிவு பெறுத நாகர் போன்ற விலங்கினர் (Cannibal) கீழ்களேயன்றி மனிதர் ஆகார் எனவும் ஆசிரியர் தொல்காப்பியர் கருதினர். அதனுற்றுன் அவர்

"உயர்திணை என்மனுர் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனுர் அவரல பிறவே" என்றும்

"மக்கள்தாமே ஆறறி வுயிரே"

என்றும் சூத்திரம் யாத்தார்.

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றுரோ டேனை யவர்"

என்ற வள்ளுவனுர்க்கும் இதுவே உடம்பாடு.இக்குறளுள் "இலங்கு" நூல் என்ற சிறப்புச் சிந்திக்கற் பாலது. முன்னர்க்காட்டிய நாகர்போல்பவரையே நரகர் எனத் திரித்து வழங்கினர். (நாகர் கால் ஒடிபட்டால் நரகர் ஆவர்) நாகர்போன்ற கீழ்கள் ஆட்சி யமைப்பு முறையறிவின்றி மொழியறிவின்றித் திரிதலின் மக்கட் சுட்டுப் பெறுதற்கின்மையின் மக்களாகக் கருதப்படவில்லே.

நெறிப்பட்ட ஆட்சிக்கும் கல்வியறிவுக்கும் நிலேபெற்ற தொடர்பு இருத்தலின் கல்வி என்னும் அதிகாரத்தினே ஆசிரியர் வள்ளுவனுர் பொருட்பாலில் இறைமாட்சி என்னும் அதிகாரத்திற்குப்பின் இணேய வைத்தார்.

## திருக்குறளிற் கல்வி கேள்விகள்

திருவள்ளுவனுர் தாம் கூறப்புகும் ஒவ்வொரு பொருளேயும் பப்பத்துப் பாக்க ளால் விளக்கக் கருதினர் ; அதிகாரம் ஒன்றுக்குப் பத்துப் பாக்களாக வரையறை செய்தமைத்தனர். இவ்வரையறையில் கல்வியின் சிறப்பினேயும், மக்கட்கும் நல்லர சிற்கும் அதன் இன்றியமையாமையினேயும் விளக்கிக் கூறப்புகுந்தனர்.சுருங்கச்சொல் லலில் விளங்கவைக்கும் அவர்தமக்கும் அவ்வாறு கூறுதல் இயலாதாயிற்று. தாம்அமைத்து எடுத்து ஓதப்புக்க முறை தமக்கு இடர்ப்பாட்டைத் தருவதாயிற்று. எனினும் அம்முறையை மாற்ருது வெவ்வேறு பெயரிட்டுக் கல்விக்குப் பல அதிகாரங்களே அமைத்தார். அவர் அதிகாரத்தைத் தடுக்கவல்லார் யாவர் ? "வல்லான் வகுத்ததே வாய்க்கால்" எனும் பெருவழக்கிற்கு இழுக்கும் உண்டோ? " கல்வி "," கல்லாமை "," கேள்வி "," அறிவு " என வரிசைப்பட வைத்த அதிகா ரங்களும்," சொல்வன்மை " போன்ற அதிகாரங்களும் "கல்வி"யை விளக்குவனவே.

" நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு "

" அறிதோ றறியாமை கண்டற்ருற் காமம்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு "

என்பன போன்ற குறள்களும் வேறு தலேப்புக்களுள் உள்ளனவேனும் உவமை வாயிலாய்க் கல்விச் சிறப்பினே நன்கு எடுத்தியம்புவனவாய் அமைந்துள்ளன. இவை போல்வன திருக்குறளில் பயில வந்துள்ளன. இவ்வாறு கூறுதல் ஒருவகை நூற் புணர்ப்பு (யுத்தி). தாம் செய்துகொண்ட வரையறையில் பிழை படாமல் எல்லே மீறிக் கல்வியின் பெருமையைக் கவினமைந்த பாக்கள் எழுபதின் மேற்பட்டனவால் இயம்பிய வள்ளுவனுரின் திறம் இருந்தவாறு என்னே ! இவ்வள்ளல் கல்வியைப் பற்றி எத்தகைய கருத்துடையவராய் இருந்தனர் என்பதனே நாம் நினேக்கக் கட வோம்.

## ஒரு நான்கு பாக்கள்.

மக்கள் உடம்பிற்குக் கண்கள் உள்ளன என்பதனே நாம் அறிவோம். அது போலவே மக்களின் உயிருக்கும் அகக்கண்கள் இரண்டுள்ளன என்று வள்ளுவர்

கண்டுபிடித்துள்ளார். அக்கண்களே எண்ணும் எழுத்தும். அவை காலம் இடையிட்டவற்றையும் நாடு இடையிட்டவற்றையும் உயிர்க்கிழவனுக்குக் காட்டும் கண்களாக அமைந்திருக்கின்றன. காலமும் இடமும் முதற் பொருள் ஆகும். இவை எல்லாப் பொருள்கட்கும் தாங்கிகள். இத்தாங்கிகளில் பொருளெல்லாம் தங்கியுள்ளன. கல்விக்கண்கள் இத்தாங்கிகளில் தங்கியுள்ள எல்லாப் பொருள்களையும் உயிர்க்கிழவனுக்குக் காண்பிக்கும் ஆற்றல் வாய்ந்தன. அந்த எண்ணும் எழுத்துமாகிய கண்களைப் பெருத மக்கள் கால இட எல்லைகளில் உலவும் பொருள்களை அறியாத குருடர்கள் ஆகின்றனர். இக்குருடர் உலக வாழ்க்கையாகிய பாதையில் ஓடவோ, ஒழுகவோ, நடக்கவோ முடியாதவராய் மறுகுகின்றனர். பாவம் கண்ணிலர் எங்கன் இயங்குவர் ? இவ்வுண்மையை

“ எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு ”

“ கண்ணுடையர் என்பவர் கற்ருேர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர் ”

என்னும் அருமைத் திருக்குறள்களால் நமக்கு விளங்க வைக்கின்றனர்.

கண்ணிழந்தவர் குருடர். கல்வியிழந்தவர் குருடரை ஒப்பர். குருடர் கோற்றுணை கொண்டு வழிநடை செல்கின்றனர். கல்வியிழந்த குருடரை ஒப்பார் உலகியல் வாழ்க்கைப்பாதையில் செல்லும் மதுகையிலராய் இருத்தலின் உவமை ஒரு பகுதி பொருந்தி முழுதும் பொருந்துமாறு இல்லையே எனலாம். முழுதும் பொருந்தும்.

கல்வியறிவு வாய்க்கப்பெருதவர் அது வாய்க்கப்பெற்றவர் எய்தும் பயனை எல்லாம் கேள்வியால் எய்துதல் முடியும். குருடர் கோலூன்றி இயங்குதல்போலக் கல்வியறிவில்லாதவர் கேள்வியால் அறிவைப்பெற்று உலகியல் வாழ்க்கையிற் சிறப்புற ஒழுகுதல் முடியும் என்னுங் கருத்தமையச் செந்நாப்புலவர்

“ கற்றிலன் ஆயினும் கேட்க அஃதொருவற்கு
ஒற்கத்தின் ஊற்ருந் துணை ” எனவும்,

“ இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார் வாய்ச் சொல் ” எனவும்

கூறியுள்ளது நம்மைத் தெளிவுபடுத்துகின்றது. “ அக்பர் ” போன்ற கல்வியறிவில்லாதவர் கேள்வியறிவாற் சிறந்திருந்தமை வெளிப்படை.

“ கற்றிலன்......துணை ” என்னுங் குறளால் கல்லாதவர் கேள்வியினுல் அறிவுபெற்று உலகியல் வாழ்க்கையில் தக்க இடம் பெறுதல் கூறியது பொருந்தும்.

" இழுக்கல்.........சொல் " என்னுங் குறளைக் கூறியது என்ன பயன் கருதி ? பெரும் பயன் இல்லையே. கூறியது கூறலாகவன்றோ முடிகின்றது என்று சிலர்க்கு ஐயம் உண்டாதலும் கூடும். கூறியது கூறலாகாது. வள்ளுவர் யாண்டுங் கூறியது கூறிற்றிலர்.

கல்வியறிவில்லாதவர் கேள்வியால் அறிவு பெறுதல் பொருந்தும். கல்வியறிவு வாய்க்கப்பெற்றவர் கேள்வியால் அறிவுபெற வேண்டியதில்லையே. குருடன் கோலூன்றிச் சேறல் முறை. குருடன் அல்லாத கண்ணுடையவன் கோலூன்றிச் செல்லுதலால் பயன் யாது விளையும் என்று வினவுவார்க்கு விடை கூறுதல்போல் அக் குறள் அமைந்துள்ளது. கல்வியறிவுடையவரும் ஒவ்வோர்கால் உலகியல் வாழ்க்கையில் நிகழும் சிக்கல்களிலும், தொல்லைகளிலும் சிக்குண்டு மாழ்குவர். ஒழுக்கமுடையார் வாய்ச்சொல்லைக் கேட்டு அதன்படி ஒழுகும் கல்வி யறிவுடையவர் அங்ஙன் சிக்குண்டு மயங்காமல் தாம் மேற்கொண்ட வினையைத் தட்டுப்பாடு முட்டுப்பாடு சிறிதும் இல்லாமல் முடித்து நிறைவு செய்வர். அங்ஙனம் அவர் அவ்வினையை முற்றுவிக்கும் செயல் கண்ணுடையவரும் வழுக்கும் சேற்று நிலத்தில் கோலூன்றி இயங்குதலை ஒக்கும். இவ்வுண்மை முந்திய குறளில் பெறப்பட்டிலது. இதனை அதனினின்றும் கிளந்து விதந்து கூறியிருத்தலின் இது கூறியது கூறலாகாமை காண்க. இது நயம்பட இயம்பியதே ஆகும்.

## காவிய அழகு.

பொருட்டொடர் நிலைச் செய்யுளாகிய காவியங்களில் இடையிட்ட செய்யுட்களில் எழுப்பும் வினாக்கட்கு விடை யிறுக்கும் முறையில் கருத்துக்களை அழகுபட அமைத்துக் கூறுதல் காவிய ஆசிரியர்க்கு இயலுவதொன்று. அவ்வாறு அமைத்துக்கூறும் காவிய அழகிலும் விஞ்சுமாறு அறநூலில் கருத்துக்களை அழகுற அமைக்கும் வள்ளுவரின் அறிவழகு வரம்பிறந்து நிற்கின்றது.

கல்வி என்னும் அதிகாரத்துக் கூறிய " எண்ணென்ப.........வாழும் உயிர்க்கு" "கண்ணுடையார்......கல்லாதவர்" என்னும் இந்த இரண்டு குறள்பாக்களிற் பெறப்படும் கருத்துப்பற்றி எழுப்பும் சில வினாக்கட்குக் கல்லாமை என்னும் அதிகாரத்தை இடையிட்ட கேள்வி என்னும் அதிகாரத்தில் " கற்றிலன்.........துணை " " இழுக்கல்.........சொல் " என்னும் இரு குறட்பாக்களால் விடைவிட்ட வள்ளுவனாரின் திருக்குறள் வாழ்க ! கல்வி தழைக ! கேள்வி செழிக்க !

# தமிழினம் தாழ்ந்ததேன் ?

(திரு. கா. அப்பாத்துரை M.A., L.T.)

இந்திய மாநிலத்தில் இன்றிருக்கும் நாகரிக அமைப்பில் தமிழினம் எல்லா இனங்களினும் தாழ்ந்த இனமாகவே உள்ளது என்பதைக் காணுதவர் இருக்க முடியாது—காணுததாக நடிப்பவர் தாங்கள் தமிழைப் பழிப்பவருடன் சேர்ந்தாவது அவ்விகழிலிருந்து தப்ப நினைப்பவரே யாவர்.

உயர்குலத்தவர்—பிராமணர், க்ஷத்திரியர், வைசியர்—தாம் ஆரியர், ஆரிய வட மொழிக்கு உரியவர் என்று கூறித் தமிழின் இழிவிலிருந்து தப்பப்பார்ப்பவர். சூத்திரருள் உயர்தகுதி பெற்றேர் க்ஷத்திரியர், வைசியர் ஆக முயன்று அந்நிலை நாடுவர். தாழ்த்தப்பட்டவர் தாழ்வை ஏற்றே தப்புவர். தன்மதிப்பு நாடும் தாழ்த்தப் பட்டவருக்கும், தாழ்ந்தவரான சூத்திரர்க்கும் தாய்மொழியான தமிழே பொக்கிடம். அவர்கள் தாழ்வு தமிழினத்தின் தாழ்வு.

தாய்மொழிகளிலும்—தாய்மொழி நாட்டுப் பகுதிகளிலும் விந்தியமலைக்கு வடபாலுள்ளவை வடமொழி அல்லவாயினும், வடமொழிக்கு ஒப்புடையவை அல்ல வாயினும், வடமொழியின் இனமொழிகள். தென்னுட்டு மொழிகளிலும் தமிழ் நீங்கலாகப் பிறமொழிகளைச் சார்ந்தவர் தம்மொழி தமிழின் இனமொழி, அதனுடன் தொடர்புடைய மொழி என்று கூற விரும்பாது, தம்மொழியை அரையாரிய மொழியாக்கிவிடப் பாடுபடுகின்றனர். பஞ்சை ஏழையை எவரும் உறவினர் என்று ஏற்க விரும்பாதது போலப் பஞ்சைத் தமிழன் உறவை எவரும் விரும்பவில்லை.

தமிழினத்தாரிலும் பல வகுப்பினர் மொழி வேறுபாட்டைக் காட்டி—தாம் பூணூலுக்குரிய வைசியர், க்ஷத்திரியர், பிராமணரில் தாழ்ந்த வகையினர் என்று காட்டித் தமிழின் தழும்பிலிருந்து தப்ப முயலாமலில்லை.

தமிழினம் ஏன் இப்படித் தாழ்வடைய வேண்டும் ?

புராணங்கள் கூறும் விளக்கம் ஒன்றுண்டு: தமிழினம் அரக்கர் இனம்-அசுரர் இனம். அவர்கள் அடக்கப்பட்டுச் சற்றுத் திருந்தினுலும், தம் இனத்தவர் அழிவையே தம் விழாவாகக் கொண்டாடினுலும், பிறப்புத் தழும்பு அவர்களை விட்டகலாது. அவர்கள் எவ்வளவு படித்தாலும், பக்தர்களானுலும், ஒழுக்கவான்களானுலும், தாசர், தாசி இனத்தவராகவே இருக்க முடியும்.

புராணங்களை இன்று ஆரியரே உண்மையில் நம்புவது கிடையாது—ஆனால் திராவிடர் பெரும்பாலார் நம்பவேண்டும் என்பதற்காக அவர்கள் இன்னும் சட்டம் செய்கின்றனர், பத்திரிகை நடத்துகின்றனர், புராணங்களைத் தெருவில் வாசிக்கின்றனர்.

ஐரோப்பியர் தொடக்ககால வரலாறு கூறிற்று :—"ஆரியர் மொழியும் ஐரோப்பியர் மொழியும் தொடர்புடையவை. ஆரியர் முன்னோரும், ஐரோப்பியர் முன்னோரும் ஒரே இந்து-ஐரோப்பிய இனத்தைச் சார்ந்தவர். ஐரோப்பாவை ஐரோப்பிய ஆரியர் வென்று குடியேறினர். இந்தியாவில் இந்திய ஆரியர் திராவிடரை வென்றழித்தும், அடக்கி ஒடுக்கியும் குடியேறி ஆண்டனர்" என்று.

ஆரியம் தம் புதுப்பெருமை விளக்கம் கேட்டு நடனமாடிற்று. ஆரிய ஆசிரியர் ஆரிய மாணவர் பக்கம் பார்த்துக் கடைக்கணித்துப் புன்முறுவல் செய்து, திராவிட மாணவராக உள்ள ஒன்றிரண்டு பேரை நோக்கி ஏளனமாக—எங்கள் இனம் உலகை ஆண்ட இனம், ஆள்கிற, ஆளவிருக்கிற இனம்—உங்கள் இனம் எங்களுக்கு அடிமை செய்துவந்த, வருகிற, வரவே படைக்கப்பட்டுள்ள இனம் என்றனர். புராணத்துக்குப் புதுமெருகு ஏற்பட்டது.

ஆனால் புதிய வரலாற்று ஆராய்ச்சி, புதைபொருள் ஆராய்ச்சி கூறுகிறது—ஆரியர் வட ஐரோப்பாவில் நாகரிகமற்ற இனத்தவராகவே இருந்துவந்தனர்-உரோமர் தொடர்பால், யூத கிறிஸ்தவ சமயத் தொடர்பால், கிரேக்கர் தொடர்பால், அராபியர் தொடர்பால்தான் நாகரிகம் பெற்றனர். அந்த உரோமரும் கிரேக்கருங்கூட முந்திய நடுநிலக்கடல் நாகரிகத் தொடர்பால், எகிப்திய பாபிலோனியத்தொடர்பாலேயே நாகரிகமும், கலையும், எழுத்தும் பெற்றனர். இந்தியாவிலும் திராவிடர் தொடர்பாலேயே மொழிப்பண்பும், எழுத்தும், இலக்கியமும், நாகரிகமும் பெற்றனர்.

ஆனால் திராவிடர்—சிந்துவெளித் திராவிடர், ஆரியருக்கு முன்—நடுநிலக்கடல் நாகரிகங்களுக்கு முந்தி—எகிப்திய, பாபிலோனிய நாகரிகங்களுக்கு முந்தி, அவற்றினும் பழமையும், அவற்றினும் பீடும் வாய்ந்த நாகரிகத்துடனும் வாழ்ந்தனர்—பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் வாழ்ந்தனர். ஆனால் ஆரியர்முன் அவர்கள் பட்டழிந்தனர். அழிந்த அதன் பகுதிகளில் அழிபாட்டின்மீது ஆரியர் கட்டிய புதிய நாகரிகமே இன்றைய ஆரிய—இந்திய நாகரிகம்.

ஆனால் திராவிட நாகரிகம் முற்றிலும் அழியாது நிலவுகிறது—திராவிடத்தில், விந்திய மலைக்குத் தெற்கில்.

ஆரியம் இவ்வாராய்ச்சியின்முன் செவிடாகிறது—ஊமையாகிறது. இப்பொழுது ஆரியத்திற்கு ஆராய்ச்சி என்றால் பிடிப்பதில்லை—அது கசக்கிறது—அது மாயையாகி விட்டது உலகத்தைப்போல.

ஆனால், நாகரிகத்தில் முந்திய திராவிட நாகரிகம் வீழ்வானேன்?

இன்று தமிழர் கெட்டழிவானேன்? அதே கதைதான்!

இன வேறுபாடற்ற திராவிட இனம், இன வேறுபாட்டால் பிறரைப் பிரித்தாலும், ஆரியத்தால் ஒற்றுமை இழந்தது. ஆரியர் இனவேறுபாட் டுணர்வை உள்ளத்தில் கொண்டு, திராவிடர் கருத்தில் அது படாமல் மறைத்து, சாதி என்ற பெயரால் அதன் நஞ்சைத் திராவிடர் வாழ்வில் நிலவரமாக்கினர்.

சமயம் சாதியுடன் ஒட்டப்பட்டுச் சாதி வேறுபாடு உறுதியாக்கப்பட்டது. புராணமும், மடமையும் மதத்தை வலுப்படுத்தப் பயன்படுத்தப்பட்டன. திராவிடர் மொழிகள், இலக்கியங்கள், கலைகள், பண்பாடுகள் அழிக்கப்பட்டன. திராவிடனின் கலைகள் வடமொழியில் பெயர்த்தெழுதப்பெற்று, திராவிடன் அம்மொழியையோ, அக்கலையையோ கற்கக்கூடாது என்று தடுக்கப்பட்டான்.

ஆனால் தமிழிலக்கியம் மட்டும் அழியவில்லை!

திராவிடன் நாகரிகம் உடையவன்; வீரன். ஆனால் இன்பத்தில் நாட்டமுடையவன்; போட்டிக் குணம் உடையவன். அவன் போட்டியைப் பொறாமையாக்கி, பொறாமையைப் பகைமையாக்கி, வேற்றுமையால் கொடுமை ஒருபுறமும், அடிமை ஒருபுறமும் வளர்த்து ஆரியம் தழைக்கிறது, திராவிடத்தை அழித்து.

வந்த வந்த அயலானைத் தன் வயப்படுத்தி ஐந்தாம் படையாய் ஆரியம் அயலாரை ஆளவைத்து ஆள்கிறது.



# கவின் கலை

(திரு. தமிழ்மணி, சாமி. வேலாயுதம் பிள்ளை, பி. ஏ., எல். டி.)

1. அழகும் அரும்பயனும் :—உலகப் பெரியாருள் ஒருவராய "சாக்ரடீசு (Socrates)" எனும் யவனர் எவையெவை பயன் தருவனவோ அவையே அழகுடையன எனக் கூறியதுடன் அமையாது அதற்கு ஒரு காட்டும் (உதாரணமும்) கழறியுளார். அவரது கண்கள் நீண்டு, சிவந்து, நீர்ப்பசை மிக்கு நண்டின் கண்கள் போன்றிருந்ததால் யாவரும் அவற்றை அறுவறுத்தனர். எனினும் அதற்கு நம் சாக்ரடீசு சிறிதும் பின்வாங்கவில்லை ! அவைதாம் அழகுடையன என அரற்றினர் ; அவற்றைக் கொண்டு இரு பக்கங்களிலும் நெடுந்தொலை காணக்கூடு மென்பதை விளக்கினர் ; எனினும் அவர் கூற்றை ஒருவரும், ஒப்பவில்லை. அஃது உண்மையாயின் மண் வெட்டியும், கலப்பையும் பூக்கள், ஓவியங்களைவிட அழகுடையனவாகக் கருதப்படல் வேண்டுமன்றோ ! இதற்கு சாக்ரடீசே தயங்குவர் என்பதில் ஐயமில்லை. அக்காலத்து யவனர்கள் அழகிலேயே அறிவைச் செலுத்திப் பயனுடையவற்றைப் புறக்கணித்த தால் அவர்களைத் திருத்த அவர் (சாக்ரடீசு) இவ்வாறு முனைந்திருக்கலாம். எனி னும் இக்கால மக்கள் பயன் பயனெனப் பண ஆசை பிடித்து உழல்வதால் நாம் சாக்ரடீசை வன்மையாகக் கண்டிக்கக் கடமைப்பட்டுளோம்.

2. அழகும் உண்மையும் :—அழகு நாட்டத்திலேயே தம் அறிவைச் செலுத் திய ஆங்கிலக் கவியாகிய " கீட்சு (Keats) " என்பார் " அழகே உண்மை, உண்மையே அழகு " என இவ்விரு பண்புகளையும் ஒன்று படுத்திக் கூறுகின்றார். இவையிரண் டும் ஒரு சிறு பகுதி ஒருங்கு விளங்கக்கூடியனவேனும் மிகப் பெரும்பகுதி மாறுபட்டும் வருவதைக் காண்கின்றோம். வறுமை, பிணி, சாக்காடு முதலியன எவ்வளவு உண்மை உடையனவேனும் அழகுடையனவேயல்ல ; நாகரத்தினம், சகோரம், சந்திரகாந்தம் முதலிய கலைஞரின் கற்பனைகள் அழகுடையனவேனும் உண்மையே ஆகா. எனினும் பொய்ம்மையையே பெருக்கித் தங்கள் ஆணையையே பரப்பிவரும் சர்வாதிகாரிகளும் அவர்களது வழித்தோன்றல்களும் இன்னுஞ் சாகா திருக்கின்ற இக்காலத்தில் பொய்ம்மை தனது அழகின்மையால் யாவரையும் வெறுப் படையச் செய்யவில்லையே என ஏங்கவேண்டியதா யிருக்கிறது.

3. உண்மை அழகு :—பின் அழகின் அடிப்படை யாண்டுளது என ஆராயப் புகின் " கண்டாரால் விரும்பப்படுந் தன்மை நோக்கமே அழகு " எனக் கூறுவர் தமிழ்ப் பேராசிரியர். இது எல்லா வகையாலும் ஏற்கத்தகுந்ததே யென்பதற்கு ஐயமில்லை. இனிய நாற்றத்தால் மூக்கும், சுவையால் நாக்கும், இசையால் காதும்,

ஊறுல் மெய்யும் இன்பமடைவதுபோல அழகால் கண்கள் களிப்படைகின்றன.இவ் வழகின்பத்துடன் அரும்பயனும் பேருண்மையும் ஒன்றுகூடின் பொன்மலர் நாற்ற முடைத்து என்பதுடன் அமையாது நல்லூறும் உடைத்து என நவிலத் தக்கதாகி மூவகை நலங்களுடன் முனைந்து நிற்பது உறுதியாகும். இத்தகைய அழகுப் பண் பாடே அறிவுடையோராற் போற்றிப் பயிலத்தக்கதும் ஆகும்.

4. அழகின்பத்தின் அடிப்படைகள் :—அழகால் கண்கள் களிப்புறுவதாக யாவருங் கூறினும் கண்களா இன்பம் அடைகின்றன ? இல்லை ! கண்கள் காட்ட, காணும் உள்ளமே உவப்படைவதாகும் ! ! இவ்வுள்ளமும் மாறி மாறி " எண்பது கோடி நினைந்து எண்ணுவ " தாகலின் மாறுதிருந்து மகிழவல்ல உயிரே உணர வல்லதாகும் என்பதே முடிந்த முடிபாகும். இவ்வுயிரும் "பேரா ஒழியாப் பிரிவிலா மாளா இன்ப மாகடல் " போன்ற, என்றுமுள்ள, எல்லா ஆற்றலுமுடைய, பேரின் பப் பொருளையே நாடினுலன்றி நல்லின்பத்தை நயக்கமுடியா தென்பது ஒருதலை. அவ்வாறு நயக்கும் பொழுது அழகின்பமே மற்றப் பொறிவழி யின்பங்களைக் கீழ்ப் படுத்தி, சிந்தை வாயிலாக, அமைதிப் பண்புடன் (சத்துவ குணத்துடன்) துய்க்கப் படுகிறது என்பதை மிக மிக அழகாக "ஐந்து பேரறிவுங் கண்களே கொள்ள, அளப் பருங் கரணங்கள் நான்குஞ் சிந்தையேயாகக் குணமொரு மூன்றுந் திருந்து சாத்து விதமேயாக......மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார் " எனச் சேக்கிழார் செப்புவது சிந்திக்கத்தக்கதாகும்.இத்தகைய அழகைமப்புக்களையெல்லாம் வைத்துக்கொண்டே வறியராய் வாழ்வோரே பெரும்பான்மையோராவர். ஆனுல் அருங்கலை வாணரோ சிறியதொரு பொருளைக்கொண்டே மன எழுச்சியை ( Inspiration ) உண்டாக்கிக் கொண்டு அரிய இன்பந் துய்ப்பதைக் காணலாம்.

5. அழகுக் கலைகள் :—யாவருக்கும் இன்றியமையாத இல்லமே அழகுக்கலை யின் பிறப்பிடமாகும். அதனை அழகுற அமைக்கப் புகுந்ததால் " கட்டிடக் கலை " ( Architecture ) கைவரப்பெற்றதாகும் ; அதில் அழகுடைப் பொருள்களைப் பொறிக் கப் புகுந்ததால் " ஓவியக் கலையும் " ( Painting ), நிலைநாட்டப் புகுந்ததால் "சிலைக் கலையும் " ( Sculpture ) தோன்றலாயின. யாவருக்கும் பயன்படும்படி பொதுக்கட்டி டங்கள் அமைக்கப்புகவே மடங்களும் கோவில்களும் மல்கின. இக்கோவில்களைச் சிறப்புறுத்த இயற்கலையும் ( Poetry ), அதனை உணர்வூட்டி உயர்த்த இசைக்கலை யும் ( Music ), இவற்றைப் பெருஞ்சிறப்புடன் பயன்படுத்த நாடகக்கலையும் (Drama), நாட்டியக்கலையும் ( Dancing ) வளர்ந்து வரலாயின. இக்கவின் கலைகள் யாவும் எவ்வளவிற் கெவ்வளவு அழகுற அமைந்தனவோ அவ்வளவிற்கவ்வளவு அழகின்பத்தை ஊட்டுவதுடன் அந்நாட்டு நாகரிகத்தின் நன்னிலையையும் விளக்க வல்லனவாயின.

6. அழகில்லங்கள் :—கவின்கலைகள் யாவும் தமிழ் நாட்டில் தனித்தன்மை யுடன் தோன்றி வளர்ந்து சிறப்புற்றிருப்பதுபோல வேறெங்கும் விளங்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும். சிதம்பரம், தஞ்சை, சீரங்கம், மதுரை முதலிய அருங்கலைச் செல்வங்கள்போல உலகில் வேறு கலா நிலையங்கள் காண்பது அரிதாவதன்றி இவை போற்றப்பெற்றுப் பயன்படுத்தப்படுவது போல வேறு யாண்

டும் யாதும் பயிலப்படவில்லை என்னலாம். தஞ்சை பெரிய கோவிலைப்போன்ற கட்டிடக்கலையின் சிகரம் வேறில்லை எனக் கலைவாணர்களால் கருதப்பட்டுவிட்டது.*பேரழகுடன் பொலியும் பெரிய கோபுரம் பெரும்படியான வேலைப்பாட்டில் தன்னிகரற்று விளங்குவதைப்போலவே அதனை அடுத்துள்ள முருகவேள் கோவில் நுணுகிய கட்டிடக் கலையின் நுந்தா விளக்காக நுவலப்படுகிறது. மதுரை மீனாட்சியம்மன், சீரங்கம் அரங்கநாதர் முதலிய திருவுருவங்கள் சிற்பக்கலையின் சீரிய செல்வங்களாய் முறையே கருங்கல் சுதை வேலைப்பாட்டின் சிகரங்களாயுள்ளன. தஞ்சைப் பெரிய கோவில் உட் சுற்றுச் சுவரில் புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டு விளங்குகிற சோழர் ஓவியங்கள் அசந்தாக் குகைச் சித்திரங்களுக்குப் பின்னடைவன அல்ல. இக்கோவில்களைத் திருவருள்பெற்ற நாயன்மார், ஆழ்வார் முதலிய தமிழ்ப்பெரும் புலவர்கள் பாடிச் சிறப்புறுத்தியதைப்போல உலகில் வேறெக்கோயில்களும் பெருமைப்படுத்தப் படவில்லை. இவர்களியற்றியுள்ள தேவார, திருவாசக, திருவாய்மொழி போன்ற, இயல் இசை நாடகப் பெருமை வாய்ந்த பெருமொழிச் செல்வங்கள் இலக்கிய உலகில் இணையற்றனவாகும். இவற்றிற்கு இசைந்த கர்நாடக சங்கீதமெனப் பெயரிய தமிழிசைக்கு ஈடான இசைச் செல்வம் வேறில்லை யென்னலாம். இக்கோவில்களில் சிறப்புற்று விளங்குகிற நாட்டியக்கலை உள்ளுணர்வை அழகுற அமைத்துக்காட்டுவதில் இணையற்றதாகும்.

7. கோவில்களிற் சிலர் காணும் குறைபாடுகள் :—இக்கலைக் களஞ்சியங்கள் அழகுடையனவேனும் அருங்கேடு முண்டாக்குவன எனக் கருதுவோர் உளர். மதமே மதிமயக்கந் தரு பொருள் எனவும், சமயங்களே சச்சரவுகளுக்கெல்லாம் அடிப்படை என்றும், கோவில்களே குருட்டுப் பழக்கங்களின் கொள்கலன் எனவும், இவைகளை வேரோடு கல்லிக் களைவதே சிறந்த தொண்டென்றுங் கூறுவோரையும் காணலாம். மதிப்பாரற்று மதம் மாண்டுவருவதுடன் அதன் ஆட்சியை அரசியலும், பொருட்பெருக்கமும், அறிவியலும் அடக்கி வருவதைக் காண்கின்றோம். சர்வாதிகாரமும், படைப்பலமும், அணுகுண்டுகளும், புதுக் கண்டுபிடிப்புக்களும் தந்து வரும் மதி மயக்கத்தைப்போன்று மதம் எந்நாளும் மயக்கமுண்டாக்கியதாகத் தெரியவில்லை. ஆதலின் மயக்கம் உண்டாக்கும் பொருளை மறந்து விளக்கந் தரு பொருளை வீழ்த்த முற்படுவதுதான் உண்மையான மதிமயக்கமாகும். கிட்டத்தட்ட இரு நூற்றாண்டுகளாகச் சமயச் சச்சரவு ஒழிந்துபோனதன்றி அதற்குப் பன்மடங்கு மேலாக வாணிபச் சச்சரவு, கட்சிச் சச்சரவு, கொள்கைச் சச்சரவு, பொறாமைச் சச்சரவு, பேராசைச் சச்சரவுகளே பெருகிவருவதுடன் இருபேர் உலகப் பெரும்போர்களை

*தமிழ்நாட்டுக் கோபுரங்களே தனிப்பெருமை வாய்ந்து சென்னை அரசாங்க அடையாளமாகக் கொள்ளப்பட்டுளது. இக்கோவில்களிலுள்ள தூண்கள், கொடுங்கைகள் பலகணிகள், மண்டபங்கள் அவ்வவ்வேலைப்பாட்டின் உயர்வு நவிற்சி அணியாய் விளங்குகின்றன. அங்குள்ள தேர்களும் வாகனங்களும் மரவேலை மாட்சியில் மிக மிகச் சிறந்துள்ளன. சீரங்கம், மதுரை முதலிய கோவில்களிலுள்ள திருவாபரணங்கள் போன்ற விலைமதிக்கலாகா வியத்தகு பொருள்கள் வேறு காண்பதரிதாகும். இவை யாவும் யாவர்க்கும் பொதுவாய்ப் பயன்பெற்று வருவதால் அடைகிற சிறப்பு அளவிடற்கரிதாகும்.

உண்டாக்கியு மிருப்பதைக் காணலாம். இவைகளை ஒழிக்க முற்படாது சமய மென்னுஞ் செத்த பாம்பைப் புடைக்க மயக்கம், சச்சரவு எனும் பொய்ப்போக்குக் காட்டி ஓடிவரும் போர்வீரர்களின் பேராண்மையைக் கண்டு நகைமுகங் காட்டுவதினும் வெல்லும் வகை வேறில்லை யென்னலாம். இம்மறவர்களின் மதிமயக்கத்தையும், சச்சரவுச் செல்வத்தையும், குருட்டுக் கொள்கையையும் சிறப்பாய் விளக்காதிருப்பது வருந்தத்தக்கதேயாம். கோவில்களில் சில சிறந்த பழக்கங்கள் குருட்டுத்தனமாய்ப் பின்பற்றப் படுகின்றன என்பது உண்மையே. அதற்காக அக்கோவில்களையே களைய முற்படுவது, கையடை (லஞ்சம்), தன்னலம், ஆற்றலின்மை முதலிய தீய பழக்கங்களையும் செயல்களையுமுடைய ஆட்சியாளருக்கு இடங்கொடுப்பதற்காக அவ்வாட்சி நிலையங்களையே அழிக்க முற்படுவதை ஒக்கும். அவ்வாறின்றித் தீய ஆட்சியாளர்களைத் திருத்துவதைப்போல காலத்திற்கும் அறிவிற்கும் பொருந்திய வகைகளில் கோவிற்பழக்கங்களைத் திருத்தி அமைப்பதே தேவை ஆகும். இஃது எவ்வாருயினும் நமது கவின்கலைச் செல்வங்கள் பயனும் உண்மையும் உடையனவா என ஆராய்வோம்.

8. கோவில்களாலாகும் பயன்பாடு :— இவை நகர மையங்களில் அமைந்து மிகப்பலர் எளிதில் வந்து தூயகாற்று, நல்ல உடற் பயிற்சி பெறத்தக்க பெருவாய்ப்புடையனவாய் விளங்குகின்றன. இவற்றை வலம் வருதலும், தூய்மை செய்தலும், விழுந்தெழலும், தோப்புக்கரணம் போடுதலும், உருண்டு சுற்றலும் (அங்கப் பிரதட்சணம் செய்தலும்), கும்பிடு தண்டம் போடலும் அருந்தொண்டாகக் கருதப்பெற்று நம்பிக்கையுடன் செய்யப்பெறுவதால் பலர் அடையும் நோய் நீக்கம் மிகப் பெரிதேயாகும். இவற்றிலுள்ள இணறுகளும் குளங்களும் குடிதண்ணீரை அந்நகர் முழுவதிற்கும் வழங்குவதுடன் அந்நீர் நல்ல உலோகப்பொருள் உடையதாய் (Mineral Water) பல பிணியாளருக்கு அரும் பயன் அளித்துவருவதைக் காண்கிறோம். அதில் எலுமிச்சம்பழம் போடுதல் வெல்லம் வாங்கிக் கரைத்தல் முதலிய வேண்டுதல்கள் அவற்றைத் தூய்மைப்படுத்தத்தக்க ஏற்பாடுகள் ஆகும். இவைகளில் உள்ள நந்தன வனங்களும், அவற்றிலுண்டாகும் மலர்களும் நச்சணுக்களை (Microbes) கொன்று தூய்மைப் படுத்துவதுடன் மனவெழுச்சிக்கு மாரு உணவாய் விளங்குகின்றன. இப்பூக்களால் செய்யப்பெறும் ஒப்பனைகளே (அலங்காரம்) ஓர் தனிக்கலையாகும். இக்கோவில்களில் திருமுழுக்காட்டிற்கு (அபிடேகம்) பயன்படுத்தப்படும் பாலும், தேனும், கருப்பஞ்சாறும், பஞ்சாமிருதமும், எலுமிச்சம்பழ நார்த்தம்பழ தமரத்தம்பழச் சாறுகளும்* மாவிளக்குக்களும் உயிர்ச்சத்து (Vitamin)

*சிதம்பரம் திருவாரூர் முதலிய கோவில்களில் இம்முழுக்காட்டுப் பொருள்கள் பெரும்பகுதி பிடித்தெடுக்கப்பெற்று யாவருக்கும் உண்ண வழங்கப்படுகின்றன. இதற்கெனவே ஆவுடையார் எனும் பகுதி முழுக்குப்பெறும் ஒவ்வொரு சிலையின் கீழும் நிலையாகப் பதிக்கப் பெற்றிருப்பதைக் காணலாம். எனினும் மிகப் பெரும் பகுதி இவை சேகரித்துப் பயன்படுத்தப் பெருதது பெரியதோர் இழப்பேயாகும். இதனைத் தடுத்துப் பயன்படுத்த முன்வரவேண்டியது அறிவாளிகள், அறநிலையப் பாதுகாப்பாளரின் அருங்கடமையாகும்.

மிக்கு நச்சு நீக்கிகளாய் (Antisceptic) விளங்கித் தூய உணவாகவும் பயன்படுகின் றன. ஈண்டு தயாரிக்கப்பட்டுப் படைக்கப்பெறும் தூய சத்துள்ள உணவு வகைகள் ஏழைகளுக்கு எளிய விலையில் கிடைப்பதுடன் பலர் பிழைப்பதற்கு வழியாகின்றன. இங்கு எரிக்கப்படுகிற சூடம், சாம்புராணி, ஊதுவத்தி, நெய் விளக்கு முதலியவற் றால் நச்சணுக்கள் புகைத்தொழிக்கப்படுவதுடன் (Fumigation) உள்ளம் உற்சாகப் படுத்தப் பெறுவதை உணரக்கூடியோர் மிகப் பலராவர். இக்கோவில்களின் பெருஞ் சுவர்கள் வரலாற்றுப் பதிவிடங்களாய் விளங்கி வந்ததுடன் உயிரோவியங்கள் வரிசை வரிசையாகத் தீட்டப்பெற்று இளைஞர் முதல் கிழவர் வரை, கற்றோருக்கன்றி மற் றோருக்கும் காட்சிக் கல்வி (Visual Education) நல்குவதுடன் கலைப்பண்பால் உள்ள உயர்வையும் உறுவித்து வருகின்றன. இவைகளிலுள்ள பெரும் பெரும் மண்டபங் கள், கூடங்கள், சுற்றிடங்கள், பொதுக்கூட்டங்கள், இசைவிருந்துகள், நாடகங்கள், திருமணங்கள் நடைபெறுவதற்கான அரும்பயன் அளித்துவருகின்றன. இவற்றி லுள்ள புறப்பாடுகள், திருவிழாக்கள் போல நன்மக்களையும் கலைஞர்களையும் கல்வி யாளர்களையும் ஒன்றுசேர்த்து ஊக்குவிக்கக்கூடிய நிலையங்கள் வேறில்லை என்ன லாம். இவை நெடுங்காலத்தை ஒட்டிய சிறந்த நடைமுறையாய் ஓரிடத்தில் இன்றேல் மற்றோரிடத்தில் ஆண்டு முழுவதும், நாடு முழுவதும் பரவி, இடத்திற்கும் காலத் திற்கும் ஏற்ற பண்புகளுடன் விளங்கி, நன்மை வழங்கும் பாங்குடையன ஆகும். இவ்வாறு இன்னும் பலப்பல *நலம்பாடுடைய தொரு பொதுச்சொத்தை, இயக்கத் தைப் போற்றி வளர்ப்பதைப்போன்ற சீரிய பொதுநலச் சேவை வேறிருக்கமுடியா தென்னலாம்.

9. கோவில்களின் உண்மைப்பாடு :—கட்டிடக்கலை, சிலைக்கலை, ஓவியக்கலை, வழி பாட்டுக்கலை முதலியவற்றிலுள்ள அடிப்படையான உண்மைகளை அவை பலப்பல நூற்றாண்டுகளாக, ஏன் ஆயிரமாண்டுகளாக மாளாது, வழங்கிப் பெருகிவருவதே நிறுவவல்லதாகும். திரு, கல்வி, ஆற்றல், ஆண்மை, காமம், துன்பம், மரணம், அறிவு முதலிய அடிப்படை உண்மைகளை முறையே இலக்குமி, சரச்சுவதி, துர்க்கை, திருமால், காமன், சனி, இயமன், வியாழன் முதலிய திருவுருவங்கள் இனிது விளக்குவதுடன் அவற்றை அடையவும் அல்லது நீக்கவும் உதவுவதால் இவை உண் மைக்கே உறைவிடமாகும். இவ்வாறே ஏனைய திருவுருவமும் ஒவ்வொரு பண்பை அல்லது செயலை விளக்கிக் கைவரவோ அல்லது விட்டு நீங்கவோ செய்யவல்லதாகும் என்பதை உணர்தல் உண்மை நலங்கனியச் செய்வதேயாகும். இவை நம்பாதோர்க் குப் பயனளிக்கா திருப்பதால் பொய்ம்மையாகி விடா. அறிவியலில் (Science) எத் துணையோ தேர்வுகள் (Theories), கோளுகைகள் (Hypothesis) நம்பினோர்க்குப் பயனளித்து அணுகுண்டு முதலிய அதிசயங்களுக்கு வித்தாகி உண்மையாகவே ஒப்புக்கொள்ளப்பட்டு வருவதைப்போலவே இத்தெய்வங்களும் அருங்கலைவாணர் களையும், அவர்களியற்றியுள்ள அருங்கலைச் செல்வங்களையும், அவை வாரி வழங் கும் ஆருயிர் இன்பங்களையும், அவற்றாலாய நாகரிக நலங்களையும் உண்மையாகவே ஒத்துக்கொளல் அறிவின்மை ஆகாது.

*ஈண்டு உயிர்க்கான உறுதிப்பாடுகள் ஊதியங்கள் குறிப்பிடப்படவில்லை.

10. அழகின் கொழுந்து :—இவ்வாறு எழுந்துள்ள அரிய திருவுருவங்களுள் உலகக் கலை ஆராய்ச்சியாளர்களால் ஒருமுகமாக உலகக்கலைப் பொருள்கள் யாவற்றுள்ளும் உச்சிமேற் புலவர் கொள்ளத்தக்கதாகக் கருதப்பட்டு விளங்குவது நச்சினார்க்கினியராகிய நடேசப்பெருமான் திருவுருவமேயாகும். அதன் தோற்றப்பொலிவு, அமைப்பழகு, குனித்த புருவம், குமிண் சிரிப்பு, என்று வந்தாயென்னுந் திருக்குறிப்பு, கலைப்பண்பு இவைகளை மட்டும் நோக்கி அவர்கள் அவ்வாறு போற்றுகின்றனரேனும் அதனை அடிப்படையாகக் கொண்டு எழுந்துள்ள அருங்கலைக் கோவிலையும், பெருநகர் அமைப்பையும், வழிபாட்டுச் செல்வங்களையும், விழாப் பெருமைகளையும், இலக்கியச் சிறப்புக்களையும், தத்துவ விளக்கங்களையும், மந்திர மாட்சிகளையும், அடியவர் தொகைகளையும், அவர்களது செயற்கருஞ் செயல்களையும், நாகரிக நல்லெழுச்சியையும் சிறிது சிந்திப்பாராயின் உலகில் வேறெக்கலைச் செல்வமும் இத்துணை வீறும் விளக்கமும் எய்தவில்லை என்பதனை வியந்து வியந்து “ சிந்திப்பரியன, சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன ” என்பதை ஒப்பி ஒப்பி இதனைக் கருதப்பெற “ மனித்தப்பிறவியும் வேண்டுவதே யிந்த மாநிலத்தே ” என மகிழ்ந்து குலாவுவர் என்பதற்கு ஐயமேயில்லை. இக்கலைச் செல்வங்களின் கண்கொளாக் கவினையும், உயரிய உண்மையினையும், அரிய பயனையும் கண்கொண்டு காணப் பெறுவதுடன் அமையாது உளங்கொண்டு ஊன்றப்பெறுவதுடன் நிற்காது, உயிர் கொண்டு உருகிப் பெருகி உவகை எய்த முன்வருவோரே உயர்ந்தோராவர்.

“ செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே.”

# பொய்ம்மை நெஞ்சமும் புலமைப் பஞ்சமும்

(நாவலர், நீதிவாதி, பேராசிரியர், இளசைகிழார்,
திரு. ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள், M.A., B.L.,)

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய சங்கச் செய்யுள்கள் இன்றும் குன்றுப் பெருமையுடன் எல்லாராலும் பாராட்டப்பட்டு வருகின்றன. பரந்த பழைய உலகில் வழங்கும் பிறமொழிகளில் பாட்டோ, உரையோ, நூலோ எதுவும் தோன்றாத பண்டைக்காலத்தில், தமிழில் அறிவும் அழகும் செறியும் செழித்த செய்யுள்கள் பல எழுந்து இன்றும் நின்று நிலவுகின்றன. ஒல்காப் பெருமை நிறைந்த தொல்காப்பியர் நூலும், எங்கும் என்றும் அறிஞர் எல்லாரும் பாராட்டும் எள்ளரும் புலமை வள்ளுவர் குறட்பாவும் சாவாத் தமிழுக்கு மூவா இளமைவளம் தந்து நிலவுகின்றன. ஆனால் சென்ற பல நூற்றாண்டுகளாகத் தமிழ் மொழியில் புதிய புலமை நலமும் அகன்றாழ்ந்த அறிவொளியும் பிறங்கும் சிறந்த செய்யுள் எதுவும் இயற்றப்படாதது வியப்பை விளைக்கிறதல்லவா ?

தொடர்ந்து ஆயிரம் ஆண்டுகளாக அரிய பெரிய செய்யுள்கள் பெருகி வந்த தமிழில், சென்ற சில நூற்றாண்டுகளாகப் படரும் புகழ்ச் சுடருடைய பனுவல்கள் தோன்றாமைக்குக் காரணம் என்ன என்பது சிந்திக்கத் தக்கதல்லவா ? புலமை ஒளி நிலவாத இந்த இடையிருட் காலத்தும் பாட்டுக்களுக்குத் தமிழில் பஞ்சமில்லை. எண்ணிறந்த பிரபந்தங்களும், மடம் உதவும் புராணங்களும், முடம் படும் சிலேடைகள், ஏகத்தாள் இதழ் அகல் அந்தாதிகளும், வண்ணங்களும், சிந்துகளும் பிறந்து நிலவாமல் நிலையாமல் இறந்து வருகின்றன என்பதை யாரும் மறுத்தற்கில்லை. பாவலர், படித்த பண்டிதர் தொகையோ பெருகிப் பரவிவருகிறது எனினும், அவரியற்றும் பனுவல்கள் நின்று நிலவாமைக்கு என்ன காரணம் ? சிறிது சிந்திப்போம்.

விசும்பில் தோன்றும் விண்மீன் எல்லாம், மங்காது ஒளிரும் ஞாயிறாகாது. அழலும் ஒளிப்பிழம்பாகிய ஞாயிறு போன்ற நாள்கள் வேறு, தமக்கு ஒளியில்லாமல் ஒளிரும் விண்மீன்களாய நாள்களைப்பற்றிச் சுற்றும் கோள்கள் வேறு என்பதை நாம் அறிவோம். அதுவேபோல் புலமை உலக வானத்திலும் அறிவொளி பிறங்கும் அரிய பனுவல்களும் நிலவும் ; இயல் அறிவு இன்றிப் போலி இரவல் பொலிவுடன் தோன்றி மறையும் செய்யுள்களும் எண்ணில எழுந்து விழுந்தொழிவதும் இயல்பாகும். படித்த பண்டிதர் பாடும் பாட்டும் அவரியற்றும் பனுவல்களும் அறிவொளி செறியும் புலச்சுடர்கள் அல்ல என்பதை யாவரும் அறிவர். அறிவே மக்கட்

பண்பு. வெறும் பொறி உணர்வு மக்கட்கு மட்டுமன்றி, மற்றுயிரினம் அனைத்திற்கும் பொதுவியல்பாம். உருவத்தாலும் உறுப்புக்களாலும் மாந்தரெனத் திரிபவரெல்லாம் அறிவுடை மக்களாகமாட்டார்.

“உறுப்பொத்தல் மக்கள் ஒப்பன்றால், வெறுத்தக்க
பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு” (குறள் 993)

என்பது பொய்யில் புலவர் பொருளுரையாகும். அறிவு தரும் நூற் பயிற்சி மட்டுமே கல்வியாகும். அறிவை வளர்க்காத ஏட்டுப்பாடம் எவ்வளவு பெரிதாயினும் அது ஓதல் அல்லது படிப்பாகுமன்றிக் கல்வியாகாது. உறுப்பும் உணர்வும் மட்டுமன்றி, மதி நுட்பம்கூட மக்கட் பண்பாம் அறிவுடைமை ஆகாது.

“அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட் பண்பில்லா தவர்”

எனும் வாய்மைக்குறள் மாயாத உண்மை உரைப்பதன்றோ? அறிவு ஒன்றே மங்காத ஒளி உதவும். அதனால் அறிவைப் பெருக்குவது புலவர் கடனாகும். அதற்கு மாறாக, ஏடுகளைப் படித்து அலையும் பாவலர்கள் “சொற்சுமை தாங்கி” களாவதன்றி அறிஞராகார். பண்டைக்காலத் தமிழ்ப் புலவர்களியற்றிய தங்கும் புகழுடைய சங்கநூல்கள், அறிவு சுடரும் கல்வியாளர் தந்த செல்வமாகும். அவை மங்காத புகழொளி பரப்பி நிலவுவதும் இயல்பாகும்.

பிற்காலத் தமிழுலகில் அறிவைப் பெருக்காதது மட்டுமன்றி, அதை மறைக்கும் சொல்வளத்தைப் பெருக்கும் போலிப் புலமையே மேலோங்கி வளர்வதாயிற்று. அதனால் தமிழ்வானில் நிலைத்த ஒளிச் சுடரின்றி இருள் பெருகிப் பரவிவருகின்றது. அது மட்டோ! அறிவொடு முரணி, அதைப் புதைக்கும் பொருளொடு பொருந்தாப் போலி நூற்பொதிகளும் மிகுகின்றன. அறிவில்லாப் புலவருக்கு ஆர்வமில்லாது போவதே வருந்தற்குரியது. அதன்மேல் அறிவைப் பழித்துப் பாமர மூடத்திற்குச் சாமரம் போடும் புன்புலமைப் பெருமிதம் வளர்வது தமிழுக்கும் தமிழருக்கும் இழிவைத் தரும். உதாரணமாகப் பிறகாலப் புலவருலகில் உதவி நிலவும் மடமைகள் ஒன்றிரண்டை எடுத்துக்காட்ட விடைதர வேண்டுகிறேன்.

பிற்காலப் பண்டிதர் கொண்டாடும் துணிவுகளுள் அகத்தியர் வரலாற்றுக் கதைகள் முதலிடம் பெறும். பிற்காலத் தமிழுலகில் முதல் மொழிநூல் இயற்றியவர் வடகயிலையிலிருந்து வந்த ஆரிய முனிவர் அகத்தியர் என்று ஐயமறக் கூறாத செய்யுளில்லை. அகத்தியர் சிவனையொத்த ஆற்றலும் தெய்வப்புலமையும் சிறப்பும் அமைந்த ஆரிய முனிவரென்று வான்மீகம் போன்ற வடமொழி நூல்கள் வற்புறுத்துவது போலவே, பிற்காலத் தமிழ் நூல்கள் யாவும் கூறுகின்றன. அகத்தியரே தமிழில் முதல் மொழிநூல் இயற்றித் தந்தவரென்றும், அவரியற்றிய “அகத்தியம்” நன்றி யற்ற அவர் மாணக்கர் தொல்காப்பியரின் சாபத்தால் அழிந்ததென்றும், முறையாகப் பிற்காலத் தமிழ் நூல்கள் பறையடிக்கின்றன. இக்கொள்கை

ஐயமறத் துணியும் மெய்யாமேல், எல்லையற்ற பண்டைக்காலம் முதல் உண்டாகி இறவாமல் நிலவும் சங்கச் செய்யுள்கள் ஒன்றிலும் அகத்தியர் பேரும் சுட்டப் பெருதது அதிசயமல்லவா ? தொல்காப்பியர் சாபத்தால் அகத்தியருக்கு ஆபத்து நேர்ந்தாலுங்கூட, அவர் பேரும் அவரியற்றிய முதற்பெரு நூலும் அவர்பால் பகைமை யில்லாத பனம்பாரனர் போன்ற புலமை சான்ற நன்மாணக்கர் பலரும் சொல்லா மல் சூழ்ந்து மறைக்கக் காரணமில்லை ; அது இயல்புமில்லை. சரிதக்குறிப்பே இல் லாதுபோனல் அகத்தியர் புகழ் மறக்கப்பட்டதாக நினைக்கலாம். அதற்கு மாருக நெடும்பல நூற்ருண்டுகளாகத் தொடர்ந்து பலப்பல நூற்புலவர் இயற்றி வழங்கும் பனுவல்கள் அனைத்திலும் அகத்தியர் பேரும் நூலும் சுட்டப்பெருதது அவர் வர லாறு பின் எழுந்த கட்டுக்கதை என்பதைத் திட்டமாக்கும். "நற்புலமை நூலனைத் தும் ஆரியப்புலவர் தந்ததும் அல்லது ஆரியரிடம் தமிழர் இரவலாகக் கொண்டதும் ஆகும் ; மற்றப்படி ஆரியர் தொடர்பற்ற தனித்தமிழ்ச் செய்யுள் எதுவும் தமிழ்ப் புலவர் செய்ததில்லை" என்ற மூடக்கொள்கை பிற்காலத் தமிழுலகில் பண்டிதரால் பரவலாயிற்று. ஆனல் கிடைக்கும் நூற்சான்று அனைத்தும் இப்பிற்கால அகத்தியக் கதை முழுதும் பழுதான வழு என்பதை வலியுறுத்துகிறது. அறிஞர் அனைவரும் என்றும் மறவாமல் போற்றும் தொல்காப்பியரின் இறவாத் தமிழ்நூல் அகத்தியத் தின் வழிநூல் என்றும், அதற்கு முதல்நூல் அகத்தியமே என்றும் வழங்கும் வர லாற்றிற்கு மாருக, அகத்தியரை முதனூலுடையார் என்று தொல்காப்பியர் சுட்டா மல் விட்டதுமல்ல ; தொல்காப்பியருக்கு முன், தமிழில் பல்காலும் பல புலவரியற் றிய முன்னூல்கள் பயின்றன என்றும் தொல்காப்பியரே தந்நூலில் சொல்லு வதைக் கேட்கிறோம். அதை இன்றுவரை எந்தப் பின்னூலாரும் உரைகாரரும் மறுக் காது ஏற்றுப் போற்றுவதையும் பார்க்கிறோம். அதனல் அகத்தியம் ஒன்றே தமி ழில் முதல்நூல் என்பது பிற்காலக் கட்டுக்கதை என்று திட்டமாய்த் தெளியலாகும்.

இந்த நூற்சான்றிற்கும் உண்மைக்கும் மாருக, தற்காலத்தில் தமிழில் முதல் நூல் இயற்றித் தந்த பெருமையோடமையாது தமிழ் மொழியையே தமிழருக்குத் தந்த சிறப்பும் ஆரிய அகத்தியருக்கே உரியது என்றும் பண்டிதர் பலர் கூசாமல் பேசக் கேட்கிறோம். கல்வியிற் பெரிய கம்பர் ஒருவர் அறிவு சான்ற பெரும் புலவ ராதலால், தமிழை அகத்தியன் தந்தான் என்ற கதையை மறுத்து," என்றுமுள தென்தமிழியம்பி (அகத்தியன்) இசை கொண்டான்" என்று பாடி இறுமாந்தார். மற்றப் பண்டிதப் புலவரெல்லாரும் தமிழ் மொழியே ஆரிய அகத்தியர் பேருபகார மென்றே பேசிவருகின்ற மூடக்கதையைக் கூறக் கேட்கிறோம். முன் இல்லாததும் அடியோடு ஆதரவற்றதுமான இப்பழியை இழிவென்று வெறுக்காமல் ஏற்றுப் போற்றுவது புலமைக்கும் அறிவுக்கும் பொருந்துமா ? பொருந்தா இப்பொய்யை ஆராயாமல் தேராமல் பேணும் நாணிலாப் பண்டிதரைத் தற்காலத் தமிழர் கொண்டாடுவது அறமா ? அறிவுத் திறமா ? நடுநிலையிற் சிந்தித்து இளந்தமிழர் தெளிவாராக ! !

இனி, பிற்காலப் பண்டிதர் அறிவை முற்றும் பறிகொடுத்து ஆரியக்கதைகளைத் தேராமல் வாரிக்கொண்டு தமிழில் புகுத்தி மெய்யெனக் கையாளும் மூடக்கொள் கைகளுக்கு முடிவில்லை. அவற்றுள் முழுதும் புலமைக்கு இழிவு தருவது தருமர்

பெருமை கூறும் பாரத சாரமாகும். ஆழ்ந்த ஆராய்ச்சியாவது, நீதிவாத நேர்மை யாவது வேண்டாமலே, தருமரைப் பாராட்டும் சரிதங்களைக் கேட்டவர் யாவரும் விருப்பு வெறுப்பின்றி நடுநிலையில் சிந்திப்பின், தருமர் வரலாறுபோல மக்கட் பிறப்பிற்கே பழிதரும் இழிகதை பிறிது எதையும் கருதவொண்ணுது. ஏழை மக்கள் எவருக்கும் பழிதரும் பிழையாம் பாவங்கள் பலவாகும். இழிவஞ்சிப் பழி நாணுதல் மானமுடைய மாந்தர் சிறப்பியல்பு." நாணுடைமை மாந்தர் சிறப்பு"என் பது வள்ளுவர் கொள்கை. பழிதரும் பாவங்களுள் எல்லாம், பழிநாணுவார் அஞ் சுவது பஞ்சமாபாதகங்களாகும். அவற்றுள், ஒவ்வொன்றே அழியாப் பழிதரும் பாதகமாம். தருமர் மக்களஞ்சும் பஞ்சமாபாதகங்களும் விரும்பிச் செய்து வந்த பெருந்தகவு பூண்டவர். தீதாங்காதல், சூதாடல், பொய் மொழிதல், ஈவதைவிலக் கல், கள்ளுண்டல் ஆக ஐந்தும் மாந்தர் அறவே வெறுத்து விலக்க வேண்டும் பாவங்களென்று நூல்கள் கூறும்.

காதல், கவருடல், கள்ளுண்டல், பொய்ம்மொழிதல், ஈதல் மறுத்தல் இவை கண்டாய்—" என்பது படிக்கும் இளைஞரும் நொடிக்கும் பாட்டு. இவற்றுள் நான்கு பாதகம் தருமர் செய்த செய்தியும், மற்ற ஒன்றும் அவர் செய்திருக்க வேண்டும் என்ற ஊகமும், வில்லியும் வியாசரும் சொல்லியதாகப் பாரதக்கதை கூறுகிறது.

அவை அனைத்திற்கும் காரணம் மனிதர் வாழ்வை நாசப்படுத்தும் ஆசையாகும். அறிவிழந்து மனிதர் அறமறந்து புரியும் பழிபாவம் அனைத்திற்கும், ஆசையே முதல் பெருங் காரணமாக முடியக் காணுவோம். பொன், மண், பெண் என ஆசை மூவகையாகும். அவற்றுள் ஏதாமொன்றால் தீதனைத்தும் போதருகிறது. தருமர் இவ்வாசை வகை மூன்றன் பாசங்களிலும் நேசம் நிறைந்த நெஞ்சு படைத்தவர்.

இம்மூன்றனுள் பொன்னாசை என்பது பொருளாசை. பொதுவாக ஏறக்குறைய எல்லோரிடத்தும் இருக்கக்கூடியது. அதை அளவுக்கு மிஞ்சி வளரவிட்டால், பொய், களவு, கொள்ளை, கொலை வரை குற்றங்களுக்குப் பொருள் வேட்கை ஆளாக்கும். எனில், பொருள் உலக வாழ்வுக்கு ஓரளவு இன்றியமையாதது." பொருளில்லார்க் கிவ்வுலக மில்லாகி யாங்கு"—எனவருங் குறளடி காண்க. தேரும் முயற்சி மாந்தருக்கு வற்புறுத்தப்படுகிறது.

" முயற்சி திருவினை யாக்கும் ; முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும் " (குறள்)

ஆனல் தருமன் பொருள் வெஃகி, பொல்லாத சூழ்ந்து, அருள் துறந்து, அறம் கொன்று, பிறர்க்குரிய மண்ணும் செல்வமும், பெண்ணையும் நாடி வஞ்சித்த வர லாற்றல், அவன் பொருளாசை மருள் நேசம் விளக்கமாகும்.

இனித் தருமர் மண்ணாசையைச் சிறிது எண்ணிப் பார்ப்போம். குருநாடு முழு தாளக் குருகுலத்தை வேரறுத்த தருமர் திருவிளையாட்டே மாபாரதக் கதையாகும். மயில் முறையில் முடிசூடி நாடாண்ட வேந்தன் திருதராட்டிரன். அவனிறந்த

பிறகு, அவன் மக்களுள் மூத்த சுயோதனனுக்கே வேத்தியல் உரியதாகும். சுயோதனனிறப்பினும் அவன் தம்பியர் நூறுபேருள் மூத்தவனே முடிசூடல் முறையாகும். இளைய பாண்டு, ஆளும் அரசனுக்குப் படைத்தலைவனாய், குருகுலப்பெரியோர் வீடுமர், வியாசர் போல்பவரால் நியமனம்பெற்று வாழ்ந்து உயிரிழந்தான். இறக்கும் வரை அவனுக்கு அரசுரிமை இறங்கவில்லை. திருதராட்டிரனுக்குப்பின் பாண்டு இறவாமல் இருந்தாலும், முடிவேந்தன் குடிப்பிறந்தார் உள்ளவரை பாண்டுவுக்கு நாடாளும் உரிமை கிடையாது. இதற்குமேல் தருமன் பாண்டுவுக்குப் பிறந்த மகனுமில்லை. குந்திக்கு விபசாரத்தில் பிறந்த குண்டகன்—தருமன். குருநாட்டின் தனியாட்சி யெய்த ஆசைப்படுகிறான்; சூழ்ச்சிகள் தொடுக்கிறான்; அவைகள் பலிக்காதென அறிந்து நியாயமுமின்றிக் குருநாட்டில் பாதி தாயம் கேட்கிறான்; எந்நாட்டிலும் எக்கதையிலும் அரசில் பிரிவினையும் பாக உரிமையும் கேட்கப்படாத புதுமையாகும். அவனுக்கும் தம்பிமாருக்கும் குருகுலத் தலைவர் உடன்பாட்டோடு மானியமாக ஊரும் நாடும் அரசும் உதவுகிறான். அதைச் சூதாடித் தருமன் தோற்கிறான். பிறகு துரியோதனாதியரை வேரறுக்கச் சதி செய்து துணைகோரி அடங்கா ஆசையால் மடங்காப் பாரதப்போரைத் தொடங்குகிறான். அரசனிருக்க அவன் மக்களைப் பொருது கொல்ல அவசியமும் அறமும் இல்லாமல், துரியோதனனோடு போர் தொடங்குகிறான். அதையறிந்து வெறுக்கும் சுயோதனாதிகளைக் கொன்று நாட்டைப் பிடுங்குகிறான். பார்ப்பாரர்க்குப் பணம் கொடுத்து அவர் புகழ முடிசூடி ஆளுகிறான். இது, பாரதப் போர்க் காரணமும், தருமர் மண்ணாசை விளைவுமாகும்.

இனி, தருமர் பெண்ணாசைப் பெருமிதத்தை ஆராய்வோம். பாண்டவருள் ஆற்றலும் அழகும் போற்றற்குரியவன் ஐவருள் நடுவனான பார்த்திபன். ஐவர்க்கும் ஆசிரியரான துரோணரைப் பாஞ்சால மன்னன் வென்று மான பங்கம் செய்தான். அதைப் பொறுத, அவனுக்குத் தோற்ற துரோணர், தம் மாணவருள் ஆண்டிற் கடையனும் ஆண்மையில் முதல்வனுமான அருச்சுனனைக் கொண்டு தன்னை வென்ற துருபதனை அடர்த்து அடக்கிக் கட்டிக்கொண்டுவரச் செய்தார். அப்பழிக்குப்பழி வாங்க விரும்பிய பாஞ்சாலன்,சிவன்பால் தவங்கிடந்து வரமிரண்டு வாங்குகிறான். அவற்றுள் ஒன்று துரோணரை வென்று கொன்று விருது தரும் மகனைப் பெறுதல். மற்றொன்று நேரிய போரில் இளைஞனாயிருந்தும் தன்னை வென்ற அருச்சுனனுக்கு ஏற்ற பொற்புடைய பெண்ணைப் பெறுதல். அவ்விரு வரங்களின் பயனாய்ச் சிவனருளால் அருச்சுனனுக் கென்றே கருவுயிர்த்துப் பிறந்தவள் பாஞ்சாலி. அவள் மணப்பருவம் எய்தியபோது, அருச்சுனனுள்ளிட்ட பாண்டவர்கள் உருக்கரந்து, நாடு கடந்து, மறைந்து திரிந்தனர். அதனால், அவளுக்குரிய மணவாளனான அருச்சுனனைக் கண்டுபிடிக்கக் கருதி, துருபதன் ஒரு சூழ்ச்சி செய்தான். "அருச்சுனனொழியப் பிறர் யாராலும் எய்து வீழ்த்த இயலாத தூங்கிச் சுழலும் ஓர் இயந்திரப் பளிங்கு நீரில் சுற்றும் மீனை நோக்காமல் அதன் கீழ் நீரில் தெரியும் அதன் நிழலைக்கொண்டு கணை தொடுத்து ஓடும் மீனைச் சாடி வீழ்த்துபவர்க்கே தன் மகள் உரியள்" என்று அரசகுல ஆடவர்க்கு அறிவித்தான். ஆண்மைத்திறலும் அம்பாளும் விரலும் உடைய இளைஞர் துரோபதி சுயம்வரப் பந்தலில் திரண்டனர். கீழ்நீரின் நிழலை நோக்கி மேலே ஒளிரும் பளிங்கில் சுழலும் மீனை எய்து வீழ்த்த முயன்ற இளம் பொருநர் எல்லோரும் தோற்று மீண்டபின், அந்

தணர் கூட்டத்தில் இருந்த அருச்சுனன் எழுகின்ருன். அம்மீனைத் தான் எய்து வீழ்த்தினுல் துரோபதியைத் தனக்கு மனைவியாய் அரசன் தருவானே ? எனக் கேட்டு, உடன்பாடு பெறுகிருன் ; மீனை யெய்து வீழ்த்துகிருன். அவனை யாரென்று தெரியாத அரசன் சபதப்படி மகளை அவனுக்கே உரியளாகத் தருகின்ருன். அவளை அழைத்துக்கொண்டு ஐவரும் தங்குமிடம் போகிருர்கள். அதற்குள் தருமர் அவளை மோகித்து, இன்பம் துய்க்க விரும்பி, அதற்கு உபாயமும் சூழ்ந்து துணி கின்ருன். அதன்படி தாய்வாயால் ஐவரும் பொதுவில் நுகர ஆணை பெற்று, பிறகு கொணர்ந்தது “ கனி ” யன்று “ கன்னி ” என உணர்ந்து வருந்திய குந்தியை, அவள் வாயில் தவறு பிறக்கவில்லை எனவும், வந்த பெண்ணை ஐவரும் பொது வில் அநுபவிக்கும் விருப்பம் தம் மனத்து இருந்த உண்மையாதலால், அதை அவள் சொன்னதில் தவறு இல்லை யென்றும், அவளைத் தேற்றுகிருன்.

“ தம்பிக்குரியாளைத் தான் மட்டும் விரும்பில், தன்னை அத்தம்பி வெறுத்து மறுக்கக்கூடு மென்று அஞ்சி, அவனுமஞ்சும் அடல் வீமனுக்குக் காமமூட்டித் தனக் குத் துணை கொள்ளின் அருச்சுனன் மறுக்கமாட்டான் ” என நினைந்து, தருமன் செய்த சூழ்ச்சி பலிக்கிறது. சிவன் வரமும், துருபதன் தவச்சூளும், அருச்சுனன் வில்லாண்மையும் அவனுக்கே தனியுரிமையாக்கிய துரோபதியின் பெண்மையை நயந்த தருமன், வஞ்சச் சூழ்ச்சியால் அவளை என்றும் தான் பெட்டொழுக வழி வகுத்துத் துரோபதியை ஐவருக்கும் பொதுமகளாக்கி முடிக்கிருன். இது, தருமன் காமக்காதலின் ஏம விரகையும், பெண்ணுசைப் பெருக்கையும் வெட்டென விளங்க வைக்கும். ஒருவனைப் பல பெண்கள் பகிர்ந்து நுகரும் வழக்கம் பல மனிதர் வகுப் பில் நிலவக் கேட்கிருேம். ஆனுல் நாணுடைய நாகரிக மனித இனத்து எங்கும் என்றும் தருமனைப்போல் குடிவழக்கில் ஒரு மகளைப் பலர் மருவும் பாதகத்தைக் கேட்டறியோம்.வெறுப்பின்றி,வெட்கமின்றி அக்கதையைப் பாராட்டிவருகின்ருேம். இவ்வருந்திறல் பெருந்தகைத் தருமன், தமிழகத்தில் தமிழினத்தில் புலவரால் சேர்த்து எண்ணப்படாதது நம் முன்னேர் செய்த புண்ணியமாகும். அறிவுடைய தமிழ்ப்புலவர் எவரும் ஆயிரம் ஆண்டுகளாய் இக்கதையை வெறுத்திகழத் துணி யாமை வியப்பன்ருே ?

இனி, தருமனின் சூதாட்டப் பேராசைத் தீதினை அவன் புகழ்பாடும் கதைகளே கூறுகின்றன. ஏதோ துரியோதனன் அழைத்ததை மறுக்கத் துணியாமல் தருமன் சூதாடியதாகக் கதைப்பவர் கதைக்கட்டும். வியாசரும் வில்லிபுத்தூராரும் இயற் கையில் சூதின்மீது ஆசைகொண்ட மனிதருள், தலைமை தாங்கத்தக்கவன் தருமன் என்று தெளிவாகக் கூறுகின்றனர். தருமன் சூதாட்ட வரலாறும் அவ் வுண்மையை வலியுறுத்தக் காணுகின்ருேம். பணையம் வைத்துத் தோற்ற பணக் குவியலோடு ஆட்டத்தைத் தருமன் நிறுத்தி யிருக்கலாம். அதற்குமாருகப் பொரு ளோடு அரசையும் அடகு வைத்து இழக்கின்ருன். அது போதாமல், தம்பியரையும் தன்னையுமே பந்தயம் வைத்தாடித் தோற்று அடிமைப்படுகிருன். அதுவும் போதா மல், இறுதியில் மனைவியையும் ஈடுவைத்துச் சூதாடி இழக்கின்ருன். இதைவிடக் கவருடலில் தருமனுக்குள்ள அவாவை வற்புறுத்தும் சான்று வேறென்ன வேண்டும் ?

மூன்றுவதாகத் தன்னலமும் பிறர்கேடும் கருதிப் பொய் மொழியும் இயல்பு தருமன் சுபாவமாகப் பாரதக்கதை கூறுவதை யாரும் மறுக்கமுடியாது. சாவாச் சிரஞ்சிவியான அசுவத்தாமா உள்ளவரை அவன் தந்தை வில்லேயும் கணையையும் விடுக்கமாட்டார். கையில் வில் உள்ளவரை அவரைக் கொல்ல யாராலும் இயலாது. அதனுல் வில்லே அவர் வெறுத்தெறிய, அவர் மகன் போரில் இறந்தான் என்று அவர் நம்பச் சான்று கூறத் தருமர் துணிகின்றுர். அதற்காக ஒரு யானைக்கு அசுவத் தாமா என்ற பெயரிட்டு, அதனை அருச்சுனனைக் கொண்டு எய்து வீழ்த்துகிருன். அதனைத் தருமன் துரோணரிடம், இறந்தது யானை என்று அவர் ஐயுருமல், தன் மகன் என்று நம்பும்படி நினைந்து பொய் புனைந்து தருமன் கூறுகிருன். அதை நம்பி வில்லைக் கைவிட்டு தேரில் துரோணர் சாய்கிருர். ஆயுதமின்றிச் சாயும் துரோணரைத் திட்டத்துய்மன் வில்லெடுத்துக் கணை தொடுத்துக் கொல்லுகிருன். தன் குருவான துரோணரை வஞ்சித்து அவரைக் கொல்லவும், போரில் அவ்வளவில் தனக்கு வெற்றி தேடவும் தெரிந்து, தேர்ந்து பொய் மொழியத் துணிந்த தருமன் பெருமையைப் பாரதமே பேசுகிறது.

இனி, நான்காவதாகப் போரில் துரியோதனனுக்குத் துணைசெய்யவரும் சல்லியனை வழியில் சந்தித்துத் தந்திரமாய் அவன் எண்ணியபடி பண்ணுமல் தருமன் சதிசெய்த கதையால் ஈகை மறுக்கும் அவன் பாதக இயல்பு தெளிவாகும்.

இதுவரை கூறியதால் தருமனின் காமக்காதல், கவருடுந் தவறெழுக்கம், பொய் மொழியும் வெய்ய நெஞ்சம், ஈதல் மறுக்கும் பாதக இயல்பு நான்கும் அவன் சரிதம் கூறும் செய்திகளாகத் தெரிகின்றேம். அவன் கள்ளுண்டு மதி மயங்கும் தவறுடையான் என்பதை அருச்சுனனையும் அவன் மகன் அபிமன்யுவையும் காரணமின்றித் தருமர் வைத சந்தர்ப்பங்களைக் கொண்டு ஊகிக்கலாம். இவ்வாறு பஞ்சபாதகங்களையும் அஞ்சாது புரியும் தருமனின் பெருமை அவனைப் பாராட்டும் கதைகளாலேயே தேற்றமாகிறது. பழியஞ்சா இழிதகவுடைய இத்தருமனை அவன் கதைகளைப் படித்தும் அவனை இகழாமல் புகழும் பண்டிதரின் புன்புலமையை என்னென்பாம் ?

புதிய பண்டிதப் புலவருலகில் அறிவை மடிக்கும் அற்புதங்களுக்கோர் அளவில்லே. உலகங்களையும் உயிர்களையும் கடவுள் படைப்பதாக அறிஞர் எங்கும் என்றும் கூறுவர். ஆனல் பிற்காலப் பண்டிதர் பத்திமையால் நித்தம் புத்தப்புதுத் தெய்வங்களைப் படைக்கின்றனர். இப்புதுமையை வேறெங்கும் காணலரிது. பிள்ளைகள் பாவைகளைப் பண்ணி அழிப்பதுபோலவே, பண்டிதர் தென்னுட்டில் தெய்வங்களை வேடிக்கையாய்ப் படைத்து விளையாடுகின்றனர். மனிதர்களையும் தெய்வங்களாக்கி, அவற்றிற்கு வழிபாடும் விழாவும் வகுக்கின்றனர். இப்புதிய தெய்வங்களுள் துரோபதை அம்மன் ஒன்று.

"அது தன்னைத் தொழுவார் பாவங்களைக் கழுவாயின்றிக் களைந்துவிடும்" எனப் புகலும் புதிய மதம் அதிசயம் அல்லவா ? மனிதர் பாவத்துக்குப் பாவமே இல்லாத ஈசன் மகனுன ஏசுவைக் கழுவேற்றிப் பலிகொடுத்த புதுச்சமயக்

கொள்கை வியப்பில்லை. பழியும் பாவமும் ஒழியாமல் வாழ்ந்த துரோபதை தெய்வ மாகித் தன்னைத் தொழுவார்க்கு வேறு கழுவாயின்றி முத்திதரும் புதுமதம் அற் புதமல்லவா? அதைப் படைத்த வித்தகர் புலமை வியப்பல்லவா? "ஐவருக்கும் பொதுமகள், அழியாத பத்தினி" அவள். அது மட்டுமா? ஆறுவது கருணையும் அடையாத வருத்தம் ஆருத துன்பம் தருவதாய் அவளே நாணுமல் ஒளியாமல் வெளிப்படுத்துகிருள்.

"ஐம்புலன்களும்போல் ஐவரும் பதிகளாய் எனக்கிருந்தும், இன்னும் வேறொருவன் என் பெருங்கொழுநன் ஆவதற் கிசையும் எனது பேரிதயம்." இது, வில்லிபுத்தூராழ்வார் சொல்லியது. இப்படித் தீராக் காமப்போரால் வாடிய புனித மன வனிதையை, அருந்ததிபோல் கற்புடையவள் என்று புதிய பண்டிதப் புலமை புகழ்கிறது; அத்தகையாளைத் தெய்வம் ஆக்கி, அவளுக்குக் கோயில் எடுத்து, மாந் தரைப் பூசை விழாக்களும் புரியப்பண்ணிய புதிய புலமை அறிஞருக்கு வியப்பும் மயக்கமும் விளைக்கும் அல்லவா? இந்த அற்புதக் காமக் கற்பிழி கடவுளை விற்பன பண்டிதர் புகழ்ந்து பாடிப் பூசனை செய்வது மக்கள் அறிவுக்கு அடுக்குமா? தங்கள் பெண்களைத் துரோபதைபோலப் பலருக்குப் பரோபகாரப்பட விடுவரா? இப்பழிதரும் வழுவைப் பண்டிதர் பாடிப்புகழ்வதைக் கேட்கும் பெண்களும் இளைஞரும் எண்ணு வதும் பிந்திப்பண்ணுவதும் என்னும்? இதில் தமிழர் சிந்திக்கவேண்டிய செய்தி ஒன்றுளது. துரோபதைக்குப் பாராட்டெடுக்கும் பார்ப்பாருள் யாரும் துரோபதை கோயிலில் கும்பிடவராமையும், பார்ப்பனப் பெண்டிருள் ஒருவருக்கேனும் துரோ பதை பெயரைச் சூட்டாததும், அவர் உள்ளக்கிடக்கையை விசதமாக்கும். கற்பிலாப் பெண்ணைக் கடவுளாக்கி வணங்கும் மடமையும் மானமின்மையும் மூட மாந்தர் தலையில் சுமத்தி, தமக்கவ்விழிவும் தொழுகையும் இல்லாது தவிர்த்து வாழும் அந்தணர் தந்திரமும் மந்திரச் சூழ்ச்சியும் விரகும் வியவாமலிருக்க முடியுமா? இதை இளந்தமிழர் ஓர்ந்து உண்மை தேர்ந்து தெளிவாராக.

உயிரினத்துக்கெல்லாம் பொறி உணர்வு பொதுவாகும். நன்று தீதுணர்ந்து, அறம்பிறழா தொழுக உதவுவது, மக்களை மாக்களின் வேருக்கும் "மக்கள் பண் பாவது" அறிவொன்றே. அதை வெறுத்து, நெஞ்சறிந்த பொய் பேசித் திரிவது புலமைக்கு மறுதலையாம். "நெஞ்சில் உரமுமின்றி, நேர்மைத்திறமும் இன்றி, வஞ்சனை செய்து" வாழும் பண்டிதர் மாட்சி கண்ட எழுநூருண்டாக மெய்ப்புலமை தமிழில் தளர்ந்தது. அறிவுக்கு மீண்டும் ஆட்சி தந்து, வாய்மை சாயாது, உணர்ச்சி ஓயாது ஓம்பி ஒழுகும் புலவர் இனிமுயன்று தமிழுக்குத் தனிப்பெரு வாழ்வு தருவாராக.

# அழகும் கனவும்

(திரு. கவியோகி. சுத்தானந்த பாரதியார் அவர்கள்)

அழகின் கனவே கவிதை—
    அருணச் சுடர்வா னுடனே
பழகும் எளிமை கவிதை—நகை
    பனிநாண் மலரும் கவிதை.

வந்திங் கிருந்தே செல்லும்—இந்த
    வாழ்வுக் குள்ளே வாழும்
விந்தைக் கனவும் கவிதை—ஒளி
    வீசும் அறிவும் கவிதை.

காற்று நிலவும் மலரும்—அன்பர்
    கண்ணும் மனமும் உயிரும்
ஆற்றின் அலையும் இசையும்—நெஞ்சை
    அள்ளும் கவியில் துள்ளும்.

பருவத் திருவை அணியும்—தினம்
    பரிதித் தேரில் உலவும்
உருவில் உணர்வைப் பொழியும்—கவி
    யுள்ளம் உலகாய்ப் பொலியும்.

# அருட்பா விளக்கம்

(திரு. கவியோகி. சுத்தானந்த பாரதியார் அவர்கள்)

முன்னுரை

சத்திய ஞான சமரஸ சபையிற் சாதனம் புரிந்தொரு குலமாய்
ஒத்தினிது இந்த உலகெலாம் வாழ, உயிர்க்குலம் கருணையில் ஓங்க
சுத்தசன் மார்க்கச் சுடர்ஒளி காட்டி அருட்பெருஞ் சோதியாம் தூயன்
நித்தியம் எனது நெஞ்சிலே பேசி நிலவுக செயலிலே நீடு.

ஆன்ம நேயர்காள், எல்லோருக்கும் வணக்கம். அனைத்தும் வாழ்க ! இந்தப் புனிதச் சபைமுன் நிற்கையில் என் உள்ளம் சிலிர்க்கிறது. உயிர் சிலிர்க்கிறது. மனம் எண்பதாண்டுகளுக்கு முன் இங்கே விளங்கிய அருள் விளக்கை நாடுகிறது ......நாவு துதிக்கிறது.

அருள்விளக்கே அருட்சுடரே அருட்சோதி சிவமே,
அருளமுதே அருள் நிறைவே, அருள்வடிவப் பொருளே
இருள்கடிந்தென் உளமுழுதும் இடங்கொண்ட பதியே
என் அறிவே என் உயிரே, எனக்கினிய உறவே

மருள்கடிந்த மாமணியே மாற்றறியாப் பொன்னே,
மன்றில்நடம் புரிகின்ற மணவாளா, எனக்கே
தெருள் அளித்த திருவாளா ஞானஉரு வாளா
தெய்வநடத் தரசே நான் செய்மொழிகேட் டருளே.

இதுதான் வள்ளலார் சத்திய ஞான சபையில் பாடிய அருள்விளக்கப் பாடல். இதுவே நான் அவரைத் துதிக்கும் பாட்டாகும். இப்பாட்டே வள்ளலாரின் வடிவம். இதுவே அவர் பெருமை, இதுவே அருட்பா விளக்கமுங்கூட. நான் கால்நூற்றுண்டு களாக மௌனத்தவத்தில் இருந்து மகாதுரிய சமாதியில் ஊன்றினேன். அதற்கு முன்பு வடலூருக்கு வந்திருந்தேன். இங்கே ஒரு குருக்கள் இருந்தார். அவரே வள்ளலாரின் கைப்பிரதிகளைக் காட்டினர். மற்றெரு பெரியவர், வள்ளலாரின் உற வினர், எனக்கு ஐயாவின் வாழ்க்கைக் குறிப்புக்களைச் சொன்னர். என் ஆசிரியர் தெய்வசிகாமணிப் புலவர் அந்தக்காலம் இங்கே வந்து ஐயாவை நேரில் கண்ட

துண்டு. அவர் அரிய பல விஷயங்களைச் சொல்லி அருட்பா ஓதச்சொன்னார். என் சிறுவயதில் கதிரைவேல் பிள்ளை எங்கள் ஊருக்கு வந்து தெய்வசிகாமணிப் புலவரிடம் தமது தமிழ் அகராதிக்குச் சாற்றுக்கவி கேட்டார். அந்த அகராதியில் அருட்சோதி என்ற பதம் இருக்கிறதா என்று பதம்பார்த்தேன். இல்லை. வள்ளலார் என்பதும் இல்லை. எங்களுள் விவாதம் தொடங்கியது. புலவர் சண்டவேகத்தில் அருட்பா என்பது தேவார திருவாசகங்களே என்றார். நான் தாயுமானார், பட்டினத்தார், அருணகிரிநாதர், இராமலிங்கர் அனைவரும் இறைவன் அருள் பெற்றே பாடினர். அவையும் அருட்பாடல்களே என்றேன். சரிதான் உமது ராமலிங்கர் சாகாவுடல் பெற்றாரா என்றார். ஆம்...என்றேன். எங்கே அவர் உடலைக் காட்டும் என்றார். நான் அருட்பா தொழுவூர் வேலாயுதமுதலியார் பதிப்பைக் காட்டி காற்றாலே புவியாலே ககனமத னாலே என்ற பாட்டைக் காட்டி இதுதான் நித்தியதேகம். உம் உடலும் என் உடலும் மற்றப் பஞ்சபூதசரீரமும் அழியும். இந்த அருட்பாதான் வள்ளலார் உயிர் உள்ளம் உருவம் எல்லாம். கவிதை உடல், கருத்து உயிர், அருள் உள்ளம். இந்த அருட்பா உள்ளமட்டும் வள்ளலார் இருப்பார். இது பஞ்சபூதங்களாலும் கொலைக்கருவிகளாலும் எதனாலும் காலத்தாலும் அழியா நித்திய சுத்த சத்திய சன்மார்க்க சமரச வேதம். வேதரிஷிகள் இன்றில்லை. வேதம் உள்ளது. அப்பர் இல்லை. அப்பர் தேவாரம் உள்ளது. அதுபோல் அருட்பாவாகவே வள்ளலார் இதோ இங்கே இருக்கிறார். எங்கும் இருக்கிறார் என்றேன். தெய்வசிகாமணி ஐயர் சரியான பேச்சு ; வள்ளலார் இந்த ஊரில் பல வீடுகளில் உயிரோடுலாவுகிறார் என்றார். அப்படியானால் அவரை இலங்கைக்குக் கொண்டுபோகிறோம். அங்கும் இருக்கட்டும் என்றார் கதிரைவேலுடன் வந்த ஓர் யாழ்ப்பாணி. அருட்பாவை எடுத்துச் சென்றார்.

வள்ளலார் இருக்கிறாரா, எங்கே, வருவாரா மாட்டாரா என்ற கேள்வியே தேவையில்லை. இதோ அருட்பா இதுதான் வள்ளலார். இதற்கு நாம் செய்யும் சேவையே வள்ளலார் பணி. ஏசுநாதர் பைபிள் வடிவாயிருக்கிறார். முஹம்மது குரானாயிருக்கிறார். குருகோவிந்த சிங்கன் பத்தாவது சீக்கிய குரு. அவன் இறக்கும்போது சீடர்கள் " குருவே தங்களை இனிக் காண்போமா " என்றழுதனர். குரு " அன்பீர் எங்கே கிரந்தசாகெபைப் பத்து அன்பர் சேர்ந்து படிக்கிறார்களோ, எங்கே திருநாமம் முழங்குமோ அங்கெல்லாம் நான் இருக்கிறேன்" என்றான். கண்ணன் எங்கே கீதை முழங்குமோ அங்கே நான் இருக்கிறேன் என்றான். அருட்பாவை ஓதுங்கள். அதன் வழி வாழுங்கள் ; அங்கே வள்ளலார் இருந்து உங்களை ஊக்குவார்.

## அருள் விளக்கம்

அருட்பா படிப்பு வல்லபத்தாலோ மனித முயற்சியாலோ வந்த பாடலன்று. உலகிலேயே இதைப்போன்ற அருள்வாக்கு இல்லை. மகாதேவ மாலை, பிள்ளைச்சிறு விண்ணப்பம், பிள்ளைப் பெருவிண்ணப்பம், இங்கித மாலை, அருள்விளக்க மாலை, வருந்தருணப்பாடல்கள் இவையெல்லாம் சாதாரணப்புலவர்கள் பாடும் பாட்டன்று. இவை திருவருள் வாக்கே. இந்த வாக்குடனேயே வள்ளலார் பிறந்தார். குழந்தைப் பருவத்தில் நடராசா சந்நிதியில் அவருக்கு ஞான சம்பந்தம் ஏற்பட்டது.

தாய்முதலோ ரோடுசிறு பருவத்தில் தில்லைத்
தலத்திடையே திரை தூக்கத் தரிசித்த போது,
வேய்வகைமேற் காட்டாதே என்றனுக்கே எல்லாம்
வெளியாகக் காட்டியஎன் மெய்யுணர்வாம் பொருளே.

இந்த ஞான சம்பந்தம் பாட்டருவியாகப் பொங்கியது. அண்ணன் சபாபதி, ஆசிரியர் சபாபதியிடம் தம்பியை அனுப்புகிறார். தம்பி தில்லைச்சபாபதியை ஆசிரியராகக் கருதி இயற்கையறிவால் பாமாலை புனைகிறார். நம்மை விஞ்சிவிட்டானே என்று பொறுமை கொண்ட ஆசிரியர் பாடம் சொல்வதை நிறுத்துகிறார். இராமலிங்கம் புத்தகப்படிப்பையும் நிறுத்தி வித்தகப்படிப்பில் தீவிரப்படுகிறான். அண்ணன் சினக்கிறான். படிக்காவிட்டால் சோறுகிடையாது என்று விரட்டுகிறான். அண்ணி மறைவாகச் சோறூட்டுகிறாள். ஒருநாள் "தம்பி, நீ ஒழுங்காகப் படித்தால் அண்ணன் மகிழ்வாரே. எங்களுடன் உண்ணலாமே ; படியப்பா" என்று நயக்கிறாள். இராமலிங்கம் அண்ணிசொல்லைப் படிகிறான். படிக்கிறான். எப்படி ? சென்னை கந்த கோட்டத்தில் அமர்ந்து முருகனுக்குத் தமிழ்மாலை சூட்டி உபாசிக்கிறான். அதுதான் படிப்பு. அவன் முருகனிடம் வேண்டிய வரம் என்ன ?

ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர் தம் உறவு வேண்டும் ;
உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
பெருமைபெறு நினது புகழ் பேசவேண்டும் ; பொய்ம்மை
பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
பிடியா திருக்க வேண்டும்
மருவுபெண் ணாசையை மறக்கவே வேண்டும் ; உனை
மறவா திருக்க வேண்டும்
மதிவேண்டும் நின்கருணை நிதிவேண்டும் நோயற்ற
வாழ்வில் நான் வாழ வேண்டும்
தருமமிகு சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர்
தலமோங்கு கந்த வேளே
தண்முகத் துய்யமணி—உண்முகச்
சைவமணி சண்முகத் தெய்வமணியே

இந்த வரங்களைப்பெற்ற இராமலிங்கத்திற்கு என்ன குறை ? அறிவு தன்னால் மலர்ந்தது. ஓதாமல் வேதாகமங்களை உணர்ந்தான். அவன் பெரியபுராணத்திற்குச் செய்த விரிவுரை அண்ணனையே திகைக்கச் செய்தது. வள்ளலார் பதினாறு வயது வரையில் முருகனையே உபாசித்தார். திருவாசகத்தையும் அப்பர் சம்பந்தர் தேவாரங்களையும் திருமந்திரத்தையும் ஓதியுணர்ந்தார். வேறு பாசநூல்களை ஓதவில்லை. பதிநூல்களையே விரும்பினார். திருத்தணி முருகனையே தமது குருவாக உபாசித்தார். தூய உள்ளம் கண்ணாடி, அதில் விளக்கொளியே அருட்சோதி யாண்டவன்-

இந்த உருவே அவர் உபாசித்தது. திருத்தணி முருகன்மேல் அவர் பாடிய பாடல்கள் கல்லும் கரையும் தகையன.

பண்ஏறு மொழி யடியார் பரவி வாழ்த்தும்
    பாதமலர் அழகினையிப் பாவி பார்க்கிற்
கண்ணேறு படுமென்றே கனவி லேனும்
    காட்டென்றாற் காட்டுகிலாய் கருணை யீதோ ?
விண்ணேறும் அரிமுதலோர்க்கு அரிய ஞான
    விளக்கே என் கண்ணேமெய் வீட்டின் வித்தே
தண்ணேறு பொழிற் றணிகை மணியே, சீவ
    சாட்சியாய் நிறைந்தருளும் சகச வாழ்வே

சுப்ர மணி என்பது சுத்தசக்திச் சுடரே. அது சிவக்கனலே. யோகிகளுக்குப் புருவ நடுவே ஆறுபட்டையாகத் தோன்றும் அருட்பிரகாசமே....இந்தப் பிரகாசத்தைக் கண்டபிறகு வள்ளலார் ஒற்றியூர் தியாகராசப்பெருமானை உபாசிக்கலானார். மகனைக் கண்டபிறகு தந்தையைக் கண்டார். ஒற்றியூர்ப்பதிகங்களும் இங்கித மாலையும் திருவாசகத்தேனாக இனிக்கின்றன. கடவுளுடன் அருட்செல்வத்திற்காகச் சண்டைபோடுகிறார் அன்பர்.

வெள்ளிமாமலை வீடென உடையீர் விளங்குபொன்மலை வில்லெனக் கொண்டீர்
வள்ளியீர் என நும்மைவந் தடைந்தால் வாய் திறந்தொரு வார்த்தையும் சொல்லீர்
எள்ளில் எண்ணெய்போல் எங்கணும் நின்றீர், ஏழையேன்குறை ஏன்அறி யீரோ?
ஒள்ளியீர் உமையன்றியொன் றறியேன் ஓங்கு சீர்ஒற்றி யூருடை யீரே.

## திருவருட்பேறு

நேசம் பதிந்துள்ளே நின்றுருகி நெஞ்சாரப்
பேசினாற் பேசும் பிரான்

நித்தம் நினைந்துருகி நின்மலனை ஒன்றுவிக்கில்
முற்றும் அவ னுடம்பேயாம்

யத்பாவம் தத் பவதி என்ற உண்மைக்கிணங்க ராமலிங்கம் அன்பினால் அருள் பெற்று அருளால் அறிவைப் பெற்றும் சீவன் சிவமயமாகப் பெற்றான்.

பூவினிற் கந்தம் பொருந்திய வாறே
சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது
ஓவியம் போலே உணர்ந்தறி வாளர்க்கு
நாவி யணைந்த நடுநெறி யாமே

உப்பும் அப்பும்போல் சீவனும் சிவானந்தக்கடலில் கரைந்தது.

சிவனுர் சீவ னுரை அறிந்தபின்
சிவனுர் சிவனு யிட்டிருப்பரே

எனதென தென்னல் இடராகும் என்றும்
அவனது என்ன அருள்.

மனிதனுள் இரண்டு சக்திகள் உண்டு. ஒன்று மாயாசக்தி. இது மனிதனை மயக்கி உலக சுகபோகங்களில் ஆழ்த்திப் பிறவிக்கடலில் புகுத்தும். இது ஆசை ஆணவம் கன்மம் காமம் வெகுளி மயக்கம் ஆகிய வடிவில் இயங்கும்.

காமம் வெகுளி கலக்கமி லாதமனச்
சேமத்தி னுல்இறையைத் தேர்

இந்த மாயாசக்தியை வெல்லவேண்டும். அதற்கு ஒரு சாதனம் மனதை வெளிச் செல்லாமல் அடக்கி உள்ளே லயிக்கும் தியானமே.

சுற்றும்பேய் நெஞ்சைச் சுருக்கிச் சுகவழியே
பற்றற்று நிற்கப் பயில்

யத்ரோபரமதே சித்தம் நிருத்தம் யோக சேவையா
யத்ரசை வாத்ம னுத்மானம் பச்யன் ஆத்மனி துஷ்யதி

எங்கெங்கே மனம் அலைகிறதோ அங்கங்கிருந்து அதைத் திருப்பி உள்முகமாக் இச் சுத்தான்ம சோதியில் லயிக்கச் செய்க !

யதா தீபோ நிவாதஸ்தோ நேங்கதே சோபமாஸ்ம்ருதா
யோகினோ யதசித்தஸ்ய யுஞ்ஜதோ யோகமாத்மன:

ஆடா மணிவிளக்கைப்போல் யோகி தன் ஆத்மஸ்வரூபத்தில் லயித்திருக்க வேண்டும் என்கிறது கீதை. இந்த மணிவிளக்கைத்தான் மனக்கண்ணுடியில் வள்ளலார் தியானித்தார். மனம் பரம்பொருளிடம் லயித்ததும் ஆசையாணவங்கள் ஒழியும்.

ஆசா நிகளம் துகளா கியபின்
பேசா அனுபூதி பிறந்ததுவே

அருணகிரிநாதர் அந்தச் சொரூபத்தை அழகாகப்பாடுகிருர் :

சுருதி யூடு கேளாது சரியையாளர் காணுது
துரியமீது சாராது—எவராலும்
தொடரொணுது மாமாயை இடைபுகாது ஆனுத
சுகமகோததியாகி—ஒழியாது

பரிதி காயில் வாடாது—வடவை மூளில் வேகாது
பவனம் வீசில் வீழாது—சலியாது
பரவை சூழில் ஆழாது, படைகள் மோதில் மாயாது
பரமஞான வீடேது—புகல்வாயே............................

இதுதான் வள்ளலார் கண்ட நித்திய தேகம். சுத்தான்மதேகிதான் அவரது நித்தியதேகம்.

கற்பூர தீபஒளி காட்டும் உடலுயிரும்
சிற்கனலே ஏற்றச் சிரம்
அழியாப் பொருளை அழியாது பற்றின்
அழியா அமரநிலை யாம்.

இதுதான் நித்திய தேகத்தின் சூத்திரம். இந்த நித்தியதேக உண்மை அவ ருக்கு வடலூரில் உதித்தது. வள்ளலார் வாழ்க்கை கந்தகோட்டத்தில் முளைத்தது, திருத்தணிநினைவில் தழைத்தது, ஒற்றியூரில் பூத்தது, வடலூரில் பழுத்தது. முதல் ஐந்து திருமுறைகளும் உபாசனையும் சாதனமும் உருத்தொழுகையும் கொண்டன. வடலூரில் எழுந்த ஆறும் திருமுறையும் மகாதேவ மாலையும் பக்குவமான சுயம் பிரகாசநிலையில் அருளாவேசத்தில் மலர்ந்தன. மற்றைந்தும் புராணக்கலப்புக்களும் மதக்கலப்பும் உடையன. சைவசமயத்தன. ஆறுந்திருமுறை மதச்சார்பற்றது. உல கிற்கெல்லாம் எல்லாச் சமயங்களுக்கும் பொருந்திய பொதுமறையானது. அதில் வள்ளற்பெருமான் தமது சாதனமுறையை விளக்கியிருக்கிறார் :

கடல்கடந்தேன் கரைகடந்தேன் கண்டுகொண்டேன் கோயில்
கதவுதிறந் திடப் பெற்றேன் காட்சியெல்லாம் கண்டேன்
அடர்கடந்த திருவமுதுண்டு அருள்ஒளியால் அனைத்தும்
அறிந்து தெளிந்து அறிவுருவாய், அழியாமை அடைந்தேன்
உடல் குளிர்ந்தேன் உயிர் கிளர்ந்தேன் உள்ளமெல்லாம் தழைத்தேன்
உள்ளபடி உள்ளபொருள் உள்ளவனாய் நிறைந்தேன்
இடர்தவிர்க்கும் சித்தியெல்லாம் என்வசம்ஆ கினவே
இத்தனையும் பொதுநடஞ்செய் இறைவனருட் செயலே...............

மனமாயக்கடலைக் கடந்தார் ; இருவினைக்கரைகளைத் தாண்டினார் ; உள்ளக் கோயிலைக் கண்டார். சித்தத்திரை விலகியது. ஆன்மக்கதவு திறந்தது. அருள்விழி திறந்தது. தெய்வக்காட்சிகள் புலனாயின. சிவத்தியானத்தில் அன்பமுதுண்டார். அருள்ஒளி நிறைந்தார். அனைத்தும் அருளால் அறிந்து அழியாநிலை பெற்றார் வள்ளலார்." ஆத்மனா விந்ததே வீர்யம் வித்யயா விந்ததே அம்ருதம் " என்பது வேதவாக்கு. தன்னறிவால் வீறு, பதியறிவால் அழியாமை வரும். இந்தநிலையில் யோகசுதந்தரம் போகசுதந்தரம் ஆத்மசுதந்தரம் தேகசுதந்தரம் எல்லாம் பொது நடச்சித்தனுக்கே அர்ப்பணமாயின.

என்றும் இருப்பதனில் என்றும் இருப்பதுவே
என்றும் இருக்கும் இருப்பு

இதுதான் சாகாக்கலை. தான்பெற்ற இன்பத்தை இனி உலகும் பெற வள்ளலார் முயன்றார். அதுதான் அருள்விளக்க மாலையாகி உலகை அழைத்தது.

பாதி இரவில் எழுந்தருளிப் பாவியேனை எழுப்பி அருட்
சோதி அளித்தென் உள்ளகத்தே சூழ்ந்து கலந்து துலங்குகின்றாய்
நீதி நடஞ்செய் பேரின்ப நிதிநான் பெற்ற நெடும்பேறை
ஓதி முடியாது என்போல்இவ் உலகும் பெறுதல் வேண்டுவனே.

## சன்மார்க்க சங்கம்

சென்ற நூற்றாண்டில் பாரதநாடு அன்னிய மாயத்தால் அறமிழந்து அல்லற் பட்டது. நம்மைத் தட்டியெழுப்ப அரிய பெரியார் எழுந்தனர். வடக்கே தயானந்த ஸரஸ்வதி வேதச்சிங்கம்போல் எழுந்து சத்யார்த்தப் பிரகாசம் அளித்தார். 1875-ல் ஆரியசமாஜம் நாட்டி தூய வேத உண்மைகளை விளக்கினார். மூடக்கொள்கைகளைக் கண்டித்தார். ராமகிருஷ்ண பரமஹம்ஸர் காளி உபாசனையால் சக்திபெற்று, சமாதியால் அறிவுபெற்று, சிறுகதைகளாலும் உதாரணங்களாலும் தெய்வசமரஸஞானத்தை விளக்கினார். 1892-ல் தான் விவேகானந்தரால் அவர் உள்ளம் ராமகிருஷ்ண சங்கமாக உருக்கொண்டு உலகெல்லாம் பரவியது. 1875-ல் பிளாவட்ஸ்கியும் ஆல் காட்டும் பிரமஞான சபை நாட்டி எல்லாச் சமயங்களும் அதில் வளரச்செய்தார். தென்னாட்டில் ஆறுமுக நாவலர் சைவசமாஜம் அமைத்துச் சிவசமயத்திற்குப் புத்துயிர் கொடுத்தார். ஆனால் வள்ளலாரோ யாரும் செய்யாத அற்புதங்களைச் செய்தார். அருட்பாவே ஆச்சரியமான அற்புதம். அவர் நோய்பேய்களை ஓட்டியதும், பொன் விளைத்ததும், பாம்புவிஷம் தீர்த்ததும், ஒரே சமயம் பல இடங்களில் இருந்தும், ஊணுறக்கமின்றித் துரியநிட்டை கூடியதும் சித்திகளே.

புண்படா உடலும் புரைபடா மனமும் பொய்படா ஒழுக்கமும் பொருந்திக்
கண்படா திரவும் பகலும் நின்றனையே கருத்தில்வைத்து ஏத்துதற் கிசைந்தேன்
உண்பனே எனினும் உடுப்பனே எனினும் உலகரை நம்பிலேன் எனது
நண்பனே நலஞ்சார் பண்பனே உனையே நம்பினேன் கைவிடேல் எனையே.

என்று அருட்சார்பில் வாழ்ந்தார். காசையும் பணத்தையும் கன்னியர் தமையும் காணியின் ஆட்சியும் கருதிலாது நேசமெல்லாம் சிவநேசமும் காமமெல்லாம் சிவ காமமும் ஆனார். தாம்கண்ட பேரின்பத்தை அருட்பெருஞ்சோதியை உலகும் கண்டு தனிப்பெருங்கருணையான இறைவனுடன் கூடி வாழலே சன்மார்க்கம். இறைவன் சுத்தன், அவனருள் சக்தி. அவனை அடையும் வழி சத்தியம். சத்தியவழியே நின்றால் சன்மயமான நின்மலப் பொருளை அடையலாம். தன்னுள் அதைப் பெற்றால் தன்னுள் ஒருமை கண்டால் உலகிலும் காணலாம்.

உள்ஒன்றி ஞலே உலகொன்றும் ஆதலினுல்
உள்ளத்தில் ஒற்றுமையை ஊன்று

இந்த ஒற்றுமைதான் ஆன்ம நேயம் என்பது.

அகிலவாழ் வத்தனையும் ஆன்ம விரிவாக
நிகழுவதே உண்மை நிறைவு.

மானிடர் தெய்வத் திருக்கூட்ட வாழ்வடைவர்
ஆன்மஒருப் பாட்டுரிமையால்

ஒன்றே உயிருலகம் ஒன்றே உலகிறைவன்
ஒன்றே இறைவன் உறையுள்.

இந்த ஆன்மஒருமையை உலகிற் பரப்பி உலகமெல்லாம் சத்திய ஞானசபை யாக்கி, மனிதரெல்லாம் சுத்த சமரஸ சன்மார்க்கத்தில் வாழச்செய்யவே வள்ள லார் எழுந்தார். அதற்கு வேண்டிய சாதன முறைகளைத் தாமே பயின்று உலகிற் கும் வகுத்துக்காட்டினுர் :

துரியமேற்பர வெளியிலே சுகநடம் புரியும்
பெரியதோர் அருட் சோதியைப் பெறுதலே எவர்க்கும்
அரியபேறு ; மற்றவையெல்லாம் எளியவே அறிவீர்
உரிய இம்மொழி மறைமொழி சத்தியம் உலகீர்.

அகத்தே கறுத்துப் புறத்தேவெளுத் திருந்த உலகர் அனைவரையும்
சகத்தே திருத்திச் சன்மார்க்க சங்கத் தடைவித் திட அவரும்
இகத்தே பரத்தைப் பெற்றுமகிழ்ந் திடுதற்கென்றே எனை இந்த
யுகத்தே இறைவன் வருவிக்க உற்றேன் அருளைப் பெற்றேனே.

வானரசு உன்னுள் அதைப்பெறு, பரமபிதாபோல் பூரணனுயிரு என்றுர் ஏசு நாதர். அவர் சிலுவையேறிப் பல்லாண்டுகளுக்குப்பின் பைபிள் எழுந்தது, சர்ச்சு எழுந்தது, கிறிஸ்துமதம் எழுந்தது, அது உலகைக் கவர்ந்தது. புத்தர் தியானத் தால் மனதை வென்று நிராசைவழியைக் காட்டினுர். புத்தசங்கம் எழுந்தது. புத் தனையே தெய்வமாகப் போற்றிப்பணிந்தது. புத்தமதம் இன்று உலகைக் கவர்ந் துள்ளது. கீதைமூலம் இந்துமதம் பலருக்குத் தெரிந்தது. ஆனுல் அப்பரும் தாயு மானுரும் வள்ளலாரும் மெய்கண்டாரும் போற்றிய சுத்தசன்மார்க்க சிவாத்துவி தம் இன்னும் தமிழருக்கே விளங்காமல் இருக்கிறது. உலகின் அருட்பெரியாருள் மிகப்பெரியார் வள்ளலார். அவர் அருட்பெருஞ்சோதி சித்திபெற்று, தனிப்பெருங் கருணையாகி மனிதசமுதாயத்திற்கே சன்மார்க்க ஒளி காட்டினுர். சன்மார்க்க சங் கத்தை வடலூரில் கூட்ட முயன்றுர். தான் என்ற முனைப்பேயின்றி எல்லாம் இறை வன் என்ற உணர்வுடன் பணிவுடன் வாழ்ந்தார். அவர் வாக்கைக் கேளுங்கள் :

தங்கமே யனையார் கூடிய ஞான சமரஸ சுத்த சன்மார்க்கச்
சங்கமே கண்டு களிக்கவும், சங்கம் சார்ந்திடும் கோயில்கண் டிடவும்
துங்கமே பெருஞ்சற் சங்கநீ டூழி துலங்கவும் சங்கத்தில் அடியேன்
அங்கமே குளிர்ந்து நின்றனைப் பாடி ஆடவும் இச்சைகாண் எந்தாய்.

ஆணவம்கொண்ட உலகில் இத்தகைய அருள்வாக்கும் சித்தியும் இருந்தால் தம்மையே கடவுள், தமக்கே வணக்கம், தம்மைச் சரண்புகலே புகல் என்று பறையடித்துப் பொருள் குவித்துப் போகபோக்கியங்களை உண்டு இறுமாப்பர். பிறரை மதிக்கமாட்டார்கள். அப்படி நான் பலரைக் கண்டிருக்கிறேன். வள்ளலாரின் தனிப் பெருமை அருட்பெருமை.

எல்லாம் அவனுடைமை எல்லாம் அவனுணை
எல்லாம் அவன்செயலென் றெண்.

நானேயோ தவம் செய்தேன். சிவபிரான் தானுக வந்தென்னை ஆட்கொண்டான் என்னும் மாணிக்கவாசகர் போலவே வள்ளலாரும் என்பேச்சு செயலெல்லாம் சிவன்பேச்சு செயல்—என்பெருமையில்லை எல்லாம் அவன்பெருமை என்கிறுர் :

நானுரைக்கும் வார்த்தையெலாம் நாயகன்சொல் வார்த்தையன்றி
நானுரைக்கும் வார்த்தையன்று நாட்டீர்நான்—ஏனுரைப்பேன்
நானுர் ? எனக்கெனஓர் ஞானவுணர் வேது சிவம்
ஊனுடி நில்லா வழி ?

ஆகாசத்திலிருந்து மின்சாரம் இறங்காவிட்டால் இந்த பல்பில் ஒளி வருமா ? மணியில் ஓசை வருமா ? பிரிஜிடேரில் குளிர் வருமா ? அடுப்பில் சூடு வருமா ? எலெக்ட்ரன் அணுக்கள் விண்ணிற் சுழன்றுவராவிட்டால் உலகில் அணுசக்தி ஏது ? வானெலி ஏது ? இறைவனருள் இன்றேல் விண்ணேது மண்ணேது ? இதை நன்றுயறிந்தே வள்ளலார் எல்லாம் வல்ல இறைவனையே வணங்கச்சொன்னுர். தமது படத்தைக்கூடச் சத்திய ஞான சபையில் வைக்கச் சம்மதிக்கவில்லை :

சன்மார்க்க சங்கத்தீர் சிற்றடியேன் உமது
தாள்வணங்கிச் சாற்றுகின்றேன் தயவினெடும் கேளீர்
என்மார்க்கத்து எனைநுமக்குள் ஒருவன்எனக் கொள்ளீர்
எல்லாம்செய் வல்லநம திறைவனையே தொழுவீர்
புன்மார்க்கத் தவர்போல வேறுசில புகன்றே
புத்திமயக் கடையாதீர் ; பூரணமெய்ச் சுகமாய்த்
தன்மார்க்க மாய்விளங்கும் சுத்தசிவம் ஒன்றே
தன்னுணை என்னுணை சார்ந்தறிமின் ஈண்டே....

என்று ஆணையிட்டுக் கூறினுர். அந்த அருட்சாதனத்தைச் செய்யத் தமிழர் வருவார்களா ? இன்றுலகம் வஞ்சமும் நஞ்சமும் போரும் போட்டிப்பொருமைக்காடுமாயிருக்கிறதே. அணுகுண்டுப்பயத்தில் உயிர் நடுங்கிக்கொண்டிருக்கிறதே. இருள்வழியில் ஏங்கியலைகிறதே. இந்த உலகிற்கு வள்ளலாரின் அருள்நெறியையும் ஆன்மநேயத்தையும் காட்ட வேண்டாமா? ஐயோ வள்ளலார் படித்துப்படித்துப் பாடினுரே

சாதியிலே மதங்களிலே சமயநெறிகளிலே
    சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச்சண் டையிலே
ஆதியிலே அபிமானித்து அலேகின்ற உலகீர்
    அலேந்தலேந்து வீணேநீர் அழிதல் அழகலவே....
நால்வருணம் ஆச்சிரமம் ஆசாரம் முதலாம்
    நவின்றகலேச் சரிதமெல்லாம் பிள்ளே விளேயாட்டே
பன்னெறிச் சமயங்கள் மதங்கள் என்றிடுமோர்
    பவநெறி இதுவரைப் பரவியததனுல்
செல்நெறி யறிந்திலர் இறந்திறந் துலகோர்
    செறியருள் அடைந்திலர் ஆதலின் இனிநீ
புன்னெறி தவிர்த்தொரு பொதுநெறி என்னும்வான்
    புத்தமு தருள்கின்ற சுத்தசன்மார்க்கத்
தன்னெறி செலுத்துக என்றஎன் அரசே
    தனிநட ராசாஎன் சற்குருமணியே......

என்ற நாயகன் வார்த்தை உங்கள் செவிக்கேறியதா? இந்த அருள் பொதுவேதத்தை அருட்பாவை உலகில் பரப்ப இனியேனும் வருவீர்களா ? தமிழர்களே வள்ளலாரை அறிவீர்களா ? அவரே உலக ரக்ஷகர். கலியுக தீர்க்கதரிசி. அவருக்காக, அவரது அருட்சுடரைப் பரப்ப நான் நீண்டகாலம் தவநிலேயில் இருந்தே, பேனுவை அசைத்தே, இன்று நாவை அசைக்கிறேன். உங்கள் மனம் அசையுமா ? இந்த வடலூரை உலகிற்குப் பொதுநிலேயமாக்க என் ஆர்வம் துள்ளுகிறது. அருட்சக்தியும் துணே செய்கிறது. உங்கள் உள்ளம் கரையுமா ? இங்கே நூறு ஏகரா நிலத்தில் ஒருபெரிய சுத்தசன்மார்க்க நிலேயம் காணவேண்டும். அதில் அருட்பா பாரதசக்தி தேவாரம் திருவாசகம் தாயுமானுர், பைபிள் குரான் குறள் ஆகிய உலக அருள்நூல்களெல்லாம் சாதனமுறையில் அன்பர் பயிலவேண்டும். அவர்கள் வாழ்வே யோகமாக வேண்டும். யோகப்பயிற்சியே மூச்சாக வேண்டும். அப்படி ஆயிரம் அருட்சோதி ஆன்ம நேயத் தொண்டர்களேப் பயிற்றுவோம். அவர்களே உலகெங்கும் அனுப்புவோம். அருள்வேதத்தை ஆங்கிலத்திலும் பன்மொழியிலும் ஆக்குவோம். உலகெங்கும் தமிழகத்திலிருந்து அருள்ஒளி பரவச்செய்வோம். இந்தப் பணிக்கு முதலில் நூறுபேர்கள் வருவீர்களா ? விவேகானந்தர் தலேமையில் உறுதிகொண்ட வாலிபர்கள் இன்று ராமகிருஷ்ண சங்கத்தை உலகெங்கும் நாட்டிப் பணி செய்கிறார்களே. அனிபெசண்டின் தியாசபிகல் சொஸைடியை இங்கே சென்னேயில் நாட்டி உலகெல்லாம் அதுமயமாக்கினுளே. எல்லாம் வள்ளலாருக்குப் பிறகு எழுந்தனவே. உள்ளம் உருகி உருகிப்பாடிய வள்ளலாருக்குத் தமிழர் செய்ததென்ன ? ஆண்டுதோறும் இங்கே கூடி அருட்பெருஞ்சோதி தனிப் பெருங்கருணே போட்டுத் தீபதரிசனம் பார்த்தாற் போதுமா ? அருட்பா கடல் கடந்து ஒலிக்கவேண்டாமா ? ஒரு பைபிளேக் கொண்டு கிறிஸ்துவப் பாதிரிகள் செய்யும் அற்புதங்களேக் காண்கிறீர்களே. அதுபோல் அருள்வேதத்தைக் கொண்டு நாம் ஏன் சர்வசமரஸத் தொண்டு செய்யலாகாது ? பணக்காரர்களே பணத்தை வைத்துக்கொண்டு என்ன செய்கிறீர்கள் ? இனி உலகில் பணத்தைப் பூட்டிவைக்க முடியாது......வட்டிமேல் வட்டிவாங்கிப் பெட்டிமேல் பெட்டி நிரப்பிப் [பண்ணுதை

தீமைகள் பண்ணிப் பகராத பொய்களைப் பேசி மானிட வாழ்வை வீணுக்குவீர்களா. இன்றேல் தமிழகத்தில் இங்கே அருட்சோதி ஆன்மநேய சுத்தசன்மார்க்க நிலையம் நாட்டி அருட்சித்தரைப் பயிற்றி உலகில் தமிழ்க்கலையும் அருட்கலையும் பரவச்செய் வீர்களா ? செத்தவரை எழுப்பவந்த சித்தரை அறியுங்கள். அவர் புகழ் உலகெங் கும் பரவப் பணிசெய்யுங்கள். அந்தப் பணிக்கே உடல் பொருள் ஆவியெல்லாம் அர்ப்பணியுங்கள். வாருங்கள் முதலில் பத்துப்பேர்கள்...பத்து அருள்விளக்குக்களை ஏற்றுவோம். அவை நூறு ஆகி, ஆயிரம் ஆகிப் பதினாயிரம் லட்சம் கோடி என்று விளங்கி உலகில் அருள்விளக்குக்கள் ஒளிரட்டும். இருள் நீங்கட்டும். இன்று உலகம் கொலைவழிச் சென்று மடிகிறது. அன்பின் வழியது உயிர்நிலை என்பதைக் காட்டு வோம் . . வள்ளலார் அழைப்பை மறுமுறை நினைப்பூட்டி உங்களைத் தூண்டுகிறேன்.

நினைந்துநினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பே
நிறைந்து நிறைந்து ஊற்றெழுங்கண் ணீர்அதனால் உடம்பு
நனைந்து நனைந்து அருள்அமுதே நன்னிதியே ஞான
நடத்தரசே என்உரிமை நாயகனே என்று
வனைந்து வனைந்து ஏத்துதும்நாம் வம்மின் உலகியலீர்
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர்
புனைந்துரையேன் பொய்புகலேன் சத்தியம்சொல் கின்றேன்
பொற்சபையிற் சிற்சபையிற் புகுந்தருணம் இதுவே

தமிழர்காள், சிலகாலத்திற்குமுன் நான் மகாத்மா ராமலிங்கம் என்ற ஆங்கில நூல் வெளியிட்டேன். அதைப் படித்த அமெரிக்கர் ஒருவர் இப்படிப்பட்ட மகாத் மாவை தமிழர் ஏன் உலகிற்கு விளக்கவில்லை. எங்கள் நாட்டில் பிறந்தால் இவரை உலகமகான் ஆக்கியிருப்போமே என்றார். அவருக்கு என்ன பதிற் சொல்லுவீர். அப்போது நான் பாடினேன் :

தினைத்துணையும் பேதமின்றிச் சீவகா ருண்யவழி சேர்ந்து வாழ
மனத்திருளை மாற்றிஅறி வானந்தத் துரியமலை வளநா டேற்றி
நினைத்திடவும் முடியாத நிலைக்குநமை அழைத்தானை நேரில் ஓர்நாள்
அனைத்துலகும் அறிவானைத் தமிழர் இனும் அறியானை அணிந்து வாழ்வாம்.

இந்த ஈற்றடியை மாற்றி " அனைத்துலகும் அறிந்திடவே தமிழர் அறிந்திசைப் பானை அணிந்து வாழ்வோம் " என்று மாற்றியமைக்கச் செய்வீர்களா ? உலகில் யாரும் சமரசம் பேசாமுன் வள்ளலார் உலக சமத்துவத்திற்கு வழிகாட்டினார் :

பலமதங்கள் ஒன்றெனவே வடக்கிருந்தும் மேற்கிருந்தும் பகரு முன்பே
தலமுயரும் தமிழகத்தில் அருளான்ம சமரசத்தை நாட்டி ஞானை
நலமுயரும் குருமணியை நவயுகத்து நபிமணியை இன்பம் ஓங்கி
உலகுயரும் தவமணியை உண்மையறி ஒளிமணியைப் போற்றி வாழ்வாம்.

வள்ளற்பெருமான் ஈந்த அருட்பாவைச் சாதனம் செய்து உலகெல்லாம் அருட் குலம் ஓங்கும் வகையைப் பாரதசக்தியில் நன்ருக விளக்கினேன். அருட்பாவை பாராயணம் செய்வோம். கூட்டம் கூட்டமாகக்கூடப் படிப்போம் :

ஊன் உருவி உயிர் உருவி உள்ளுருவிப் பாய்ந்தின்ப ஊற்றெடுக்கும்
தேனருவி யாகிவளர் தெய்வீகத் திருவருட்பா செய்த ஊற்றை
மானவர்க்குப் புதுவழியும் புதுயுகமும் புதுவாழ்வும் வழங்கி யிங்கே
வானரசைக் கொணர்ந்தானைத் துரியவள நாட்டரசை வழுத்தி நிற்பாம்.

அன்பர்காள், வள்ளலார் பெயரால் அருட்பணி புரிவோம் வாருங்கள். ஆண்டவன் சக்தி தருவான். மனந் திறந்து அன்பு பெருகி வாருங்கள். இதே வள்ளலார் தமிழரைத் தட்டியெழுப்பி ஆன்ம ஒருமைக்கு அழைக்கிருர் :

பித்துலகர் பிதற்றுகின்ற மதவாதச் சூதுகளைப் பிறகிட் டோட்டிச்
சுத்தான்ம ஒருமையினில் உரிமையினில் உலகெல்லாம் துலங்கச் செய்வோம்
அத்தனவன் அழைத்திதனை ஆற்றென்னில் ஆகாத செயலும் உண்டோ ?
இத்தலத்தில் எங்கெங்கும் சன்மார்க்க நிலையங்கள் எழுப்புவோமே.

அருட்பெருஞ் சோதி ! தனிப்பெருங்கருணை ! ஓம் சுத்த ஜோதி ! ஓம் சத்ய சக்தி !



# சங்கப்புலவர் குன்றியனார் கவிநயம்

(புதுவை, திரு. அரசமணி)

தங்க காலமாகிய சங்க காலத்தில் நல்லிசைப்புலவர் பலருள் வளம்பல கெழுமிய குன்றிய லன்ன செய்யுள் செய்திறம் பெற்று விளங்கிய குன்றியனார் என்பவரும் ஒருவராவர்.

"பாசவ லிடித்த கருங்கா ழுலக்கை
ஆய்கதிர் நெல்லின் வரம்பணைத் துயிற்றி
ஒண்டொடி மகளிர் வண்ட லயரும்
"தொண்டி" யன்ன என்னலந் தந்து
கொண்டனை சென்மோ மகிழ்நநின் சூளே" (குறுந். 238)

என்ற செய்யுளில் தொண்டி என்னும் நகரைச் சிறப்பித்திருத்தலின் அந்நகரே அவர் பிறந்தவிடம் போலும்! அகத்திற்கினிய அகநானூற்றில் இரண்டருங்கவிகளும், அருந்த உவகை பெறுங் குறுந்தொகையில் நறுங்கவிகள் ஆறும், நற்றுணையாகி நல்லின்பம் பயக்கும் நற்றிணையில் நலந்திகழ் கவிகள் இரண்டுமாக ஒருபத்துப் பாகனைய பாக்கள் இவர் பாடியனவாகக் காணப்படுகின்றன.

இவர், நெய்தல் நிலத்திற் காட்சியளிக்கும் மாலையை (நற்றிணை-117 நெய்தல்.)

"பெருங்கடல் முழங்க; கானல் மலர;
இருங்கழி யோத மில்லிறந்து மலிர;
வள்ளிதழ் நெய்தல் கூம்ப; புள்ளுடன்
கமழ்பூம் பொதும்பர்க் கட்சி சேர;
செல்சுடர் மழுங்கச் சிவந்துவாங்கு மண்டிலம்
கல்சேர்பு நண்ணிப் படரடைபு நடுங்கப்
புலம்பொடு வந்த புன்கண் மாலை"

என்று அழகுற வருணித்திருக்கிறது அறிந்தின்புறத்தக்கதே.

அகம் 40. நெய்தல்

"கானல் மாலைக் கழிப்பூக் கூம்ப
நீனிறப் பெருங்கடல் பாடெழுந் தொலிப்ப

மீனுர் குருகின் மென்பறைத் தொழுதி
குவையிரும் புன்னைக் குடம்பை சேர

அசைவண் டார்க்கும் அல்குறு காலைத்
தாழை தளரத் தூக்கி மாலை
அழிதக வந்த கொண்டலொடு கழிபடர்க்
காமர் நெஞ்சம் கையறு பினையத்
துயரஞ் செய்துநம் அருளா ராயினும்

அருஅ லியரோ அவருடைக் கேண்மை
அளியின் மையின் அவனுறை முனைஇ
வாரற்க தில்ல தோழி கழனி
வெண்ணெல் அரிநர் பின்றைத் ததும்புந்
தண்ணுமை வெரீஇய தடந்தாள் நாரை
செறிமடை வயிரிற் பிளிற்றிப் பெண்ணை
அகமடற் சேக்குந் துறைவன்
இன்றுயின் மார்பிற் சென்றஎன் நெஞ்சே.''

என்னும் இச்செய்யுளில் ஓர் கண் நெய்தற் காட்சியையும் மற்றோர் கண் மருதக் காட்சியையுங் கண்டு களிக்கின்றனவன்றே ?

தலைவன் பொருள்வயிற் பிரிந்த விடத்துத் தலைவி தோழிக்குச் சொல்லிய தாக வந்துள்ள இப்பாடலில் (அகம். 40)

" தோழி ! மருத நிலத்தில் நெல்லறுக்குங் காலத்தில் தண்ணுமை முழங்க, அம்முழக்கத்தால் நாரை அச்சுற்று (வயிர்) ஊது கொம்புபோல் பிளிற்றிப் பறந்து சென்று பனைமடற்கண் தங்குதற்கிடமாகிய நெய்தல் நிலத் தலைவன் மார்பின்கண் துயில்கின்ற என் நெஞ்சம் அவனின்றும் வாரற்க'' என்று கருத்துத் தரும் பகுதியாகிய

" வாரற்க தில்ல தோழி !
..............................
..................துறைவன்
இன்றுயின் மார்பிற் சென்ற என் நெஞ்சே !''

என்பது சுவைக்கச் சுவைக்கத் தெவிட்டாமல் இனிக்குந் தரத்ததாம். தலைவியின் நெஞ்சம் அவளை விட்டுச் சென்று தலைவனிடத்துத் தங்கிற் றென்ப தாகிய குறிப்பைத் துறைவனை விசேடிக்கு முகத்தால்

" தண்ணுமை வெரீஇய தடந்தாள் நாரை
செறிமடை வயிரிற் பிளிற்றிப் பெண்ணை
அகமடற் சேக்குந் துறைவன் "

என்று கூறி விளக்கினுள். அஃதாவது நாரை தண்ணுமை யொலிக்குப் பயந்து பறந்தோடி நெய்தல் நிலப் பனைமரத்தின் மடலகத்தே தங்கிற் றென்பதாம். நாரை அவள் நெஞ்சுக்குவமை. மடலகம் தலைவன் மார்பகத்திற் குவமை. நாரையும் தலைவியின் நெஞ்சும் தம்மிடத்திற்கே மீளின் அல்லலுழக்கு மென்க.

அதுவன்றி, அக்காலத்தில் அறுப்புத் தொடங்குங்கால் அச்செய்யின்கண் பறை முழக்குவார்கள் என்பதும், அவ்வொலி கேட்டு நாரைகளும் மற்றுள்ள அரிக் குருவி, ஊர்க்குருவி, சம்பங்கோழி, கானங்கோழி முதலிய நீர்ப்பறவைகளும் அடர் நெற்பயிர்க்கீழ் வசித்தலை விட்டுப் புறப்பட்டுயிர் வாழ்ந்தின்புறூஉம் என்பதூ உம் அறியப்படும். என்னே தமிழர்தம் இனிய உள்ளம் ! கருணை உள்ளம் !

இவ்வாறு அவன் நாட்டுக் குடிமக்களே இவ்வளவு கருணை நெஞ்சத்தின ராயின் தலைவருக்கு எவ்வளவு அளி நிறைந்திருக்கும் என்பதூஉம் தலைவி கூற்றில் அமைந்துளது காண்க.

இனி, தலைவி தன் நெஞ்சம் தூரத்தில் உள்ள தன் கேள்வன் மார்பிற்(நெஞ் சிற்) றுயில்வதாகக் கூறி, அத்துயிலினின்று நீங்கி அது இங்கே அவளிடத்து வாரா தமைதல் வேண்டும் என்று வேண்டுவது தலைவியின் மெய்க்காதலை விளக்கி இன் பம் மீதூருவிக்கின்றதன்றே ?

நெஞ்சம் தலைவனிடமிருந்து இவளிடம் வந்துவிடுமோ என்று ஏன் ஐயுறுகின் றுள் எனின்,

" அளியின்மையின் அவணுறை முனைஇ !" என்ற அடியால் தலைவனுக்குத் தலைவியினிடத்து அன்பில்லை என்று கருதி நெஞ்சம் தன்பால் வந்துவிடுமென்று கருதுகிறுள்.

அவ்வாறு கருதற்க என்பாள் வெண்ணெல் அரிநர் கருணையைக் குறித்தாள். நெஞ்சம் இவளிடத்தே வந்துவிடின் கருவி கரணங்களெல்லாம் தொழிற்படத் தொடங்கித் துன்பநுகர்ச்சி யுண்டுபண்ணுமாதலின் " வாரற்கதில்ல " என்றுள்.

மற்றோர் செய்யுளில், பொருள்தேட வேற்று நாட்டுக்குச் சென்ற தலைவன் தன் காதலியின் பிரிவாற்றுது,

காடு அணிகொண்ட காண்டகு பொழுதின்
நாம்பிரி புலம்பின் நலஞ்செலச் சாஅய்
நம்பிரிபு அறியா நலனொடு சிறந்த
நற்றோள் நெகிழ வருந்தினள் கொல்லோ ?

என்று நினைத்து வருந்துவதாக வந்துள்ள பகுதி தலைவன் அன்புள்ளத்தை விளங்கக்காட்டி எவ்வளவு இன்பஞ் செய்விக்க வல்லதாயிருக்கின்றது !

வேறு ஒன்றில், ஒரு தலைவன் பொருள் தேடிவந்து பின் மணம் புரிந்து கொள்ளுகிறேன் என்று சொல்லிப் பிரிந்தான். அப்போது தலைவி துன்புறுவாளல்லளோ ? தோழி அணுகி " அவர் பிரிவு துன்புறுத்துகின்றதோ ?" என்று வினவினள். அதற்கு அவள் " முதன்முதலாகக் கருக்கொண்ட வருத்தமுடைய அன்றிற் பெடை தன் சேவலை அழைக்கும் நள்ளிரவில் அவர் தேர் வருவதுபோல் தேர்பூண்ட மணி ஓசை கேட்டுக்கொண்டே இருத்தலான் என் கண்கள் உறக்கத்தை ஒழிந்தன" என்றுள். உருவெளித்தோற்றம் என்பது ஒன்றுண்டுபோல ஒலிவடிவுத்தோற்றம் இது வென்க. அச்செய்யுள் வருமாறு.

குறுந்தொகை 301. குறிஞ்சி

முழவுமுதல் அரைய தடவுநிலைப் பெண்ணைக்
கொழுமடல் இழைத்த சிறுகோல் குடம்பைக்
கருங்கால் அன்றில் காமக் கடுஞ்சூல்
வயவுப்பெடை அகவும் பால்நாள் கங்குல்
மன்றம் போழும் இன்மணி நெடுந்தேர்
வாரா தாயினும் வருவது போலச்
செவிமுதல் இசைக்கும் அரவமொடு
துயில்மறந் தனவால் தோழிஎன் கண்ணே.

நள்ளிரவுக் காலத்தில் தலைவியின் காதல்நோய் மிக்கிருந்தமையைத் தெரிவிக்கப் " பெடை தன் ஆண்பறவையை அகவும் " என்று இவள் நினைவுக் கேற்றவாறு புறநிகழ்ச்சியைக் குறித்தார். இன்னுங் காதற் சுவையைக் கனிவித்தற்குக்

" காமர் கடுஞ்சூல் வயவுப் பெடை "

என்று பெடையைச் சிறப்பித்தார். முதற் சூலினுல் உண்டான நோயையுடைய பெண்பறவை ஆண்பறவையை அழைக்கும் நடு இரவின்கண் தலைவன் தேர்வரவை நோக்குபவளின் குறிப்பு தானும் தன் தலைவனைக் கூடிக் கருக்கொண்டிருத்தற் கெண்ணிப் போலுமென்க.

நல்லிசைப் புலவர் குன்றியனுர் செய்யுட்களில் இன்னும் சுவைபல கெழுமிய செய்யுள் ஒன்றைக் கூறி இக்கட்டுரையை முடிப்பாம். அச்செய்யுள் கீழ் வருவது.

குறுந்தொகை. 117. தோழிகூற்று

மாரி ஆம்பல் அன்ன கொக்கின்
பார்வல் அஞ்சிய பருவரல் ஈர்ஞெண்டு
கண்டல் வேரளைச் செலீஇயர் அண்டர்

கயிறிரி எருத்திற் கதழுந் துறைவன்
வாரா தமையினும் அமைக
சிறியவு முள ஈண்டு விலைஞர் கைவளையே

ஆம்பல் என்று கூற எண்ணிய ஆசிரியர் அதற் கடைமொழியாக மாரி என்பதனைச் சேர்த்து 'மாரி ஆம்பல்' என்றுர். குறுந்தொகையில் "மாரி யானையின் வந்து நின்றனனே" என்ற இடத்தில் மாரி என்பதனை யானையுடன் சேர்த்த கருத்தை ஆண்டுக் காண்க. ஈண்டு மலர் கூம்பின நிலையைத் தெரிவித்தற்கும் நீரால் நனைவுபட்டிருத்தலை அறிவித்தற்கும் என்க." குள ஆம்பல்" என்று கூறியிருப்பாராயின், ஆம்பல் மலர்ந்த நிலையிலுளதோ குவிந்த நிலையிலுளதோ என்றையுற்றுப் பின் கூறப்படுங் கொக்குக் குவமையாகத் தடைப்படு மென்றுணர்க. புலவர்கள் தம் ஆழ்ந்த கருத்தை அடைமொழி வாயிலாகவும் அமைப்பர். இனி, கொக்குக்கு உவமை கூற வந்தவர் " மாரி ஆம்பல் அன்ன கொக்கு " என்றுர். தூரத்தே நின்று கொக்கை நோக்குவார்க்கும் மாரிக்காலத்து ஆம்பலை நோக்குவார்க்கும் உருவம் ஒன்றுகக் காணப்படுமன்றே ? யாங்ஙனம் ? சேய்மைக் காட்சியில் இருகால்கள் தோன்றுமல் ஒரு காலே தோன்றும்." கொக்கொக்க கூம்பும் பருவத்து " என்றதில் இருவகைக் கூம்புதல் உள. ஒன்று உளம் கூம்பல். மற்றென்று உடல் கூம்பல். இங்கே கொக்கின் உடல் கூம்பி அசைவற்றிருத்தல்போல் ஆம்பலும் இருக்கும் என்றறிக.

இனி, கொக்கினைக் கண்டால் நண்டுக்கு அச்சம் பிறக்கிறது. அதன்றிக் கொக்கைத் தன் பகைப்பொருள் என்று நண்டு அறிந்துகொள்வதும் வியப்பாக இருக்கிறது. நம்புலவர் கொக்கின் கண்பார்வைக்கே நண்டு அஞ்சிற்று என்பர். இது அதனிலும் விந்தை. " கொக்கின் பார்வல் அஞ்சிய பருவரல் ஈர்ஞெண்டு " என்றுர். (பார்வல்=பார்வை. பருவரல்=துன்பம். ஈர்=குளிர்ச்சி, ஈரம். ஞெண்டு=நண்டு.)

இனி," ஞெண்டு கண்டல் வேரளைச் செலீஇயர் " என்பது பாட்டில் ஓர் அடி. " நண்டு கொக்கிற் கஞ்சி தாழைவேர்கள் சூழ்ந்துள்ள வளைக்குள் ஓடிச் செல்லும் பொருட்டு " என்பது இதன் பொருள். வேற்றுப் பொருள் கனத்தால் வளைதூர்ந்து போகாமல் வேர்களிடையே வளை தோண்டிக் கொண்டிருக்கும் இயல்பினது நண்டு. என்னே இதன் அறிவு ! அவ்வியற்கை தோன்ற " வேரளை " என்றுர். வேர் என்று பொதுமையிற் கூருது கண்டல் என்று கூட்டியது அப்பொருள் அத்திணைக் கருப்பொருளாதலின். செலீஇயர், எதிர்கால வினைஎச்சம்-இன்னிசை அளபெடை.

இனி, நண்டு கொக்கின் பார்வைக்கஞ்சி விரைந்து செல்வதனை இடையர் தம் எருது கயிறு அறுத்துக்கொண்டு துள்ளி ஓடுவதுடன் உவமித்து

" நண்டு.........அண்டர் கயிறிரி எருத்திற் கதழும் " என்றுர். அண்டர்-இடையர். இரி=அறுபட்ட. இன்=ஐந்தாவது ஒப்புப் பொருள். கதழும்—விரையும்.

இனி ஓரிரண்டடியில் அகப்பொருட் கருத்துக்களை வைத்துக்காட்டுகிருர். அவ்வடிகளின் கருத்தாவது:

" தோழீஇ ! (இங்கே தலைவியை) நமது தலைவர் களவொழுக்கத்தையே கைக்கொண்டொழுகுகிறுர். அது காரணமாக நிகழும் பகற்குறியினுலும், இரவுக் குறியினுலும் அலரினுலும் பிறவற்றுலும் அச்சம் மிகுதி ஆகின்றது. நமது அச்சம் நீங்க அவர் வரைந்துகொள்ள முயன்றபாடில்லை. அவருக்கும் அச்சமுண்டாயினும் அதனையுங் கருதுகின்றுரில்லை. ஆதலின் அவர் வாராமல் தன் பதியின்கண்ணே தங்கிவிடுவாராயின் நமக்கு அச்சம் என்பது ஒழிந்ததாகிவிடும். நம் துயரினும் அச்சம் பெரிதாயிருக்கிறது. ஆயின், நம் துயரம் பெருகின் உடல் மெலியும், மெலியின் கைகளிலுள்ள வளைகள் கழலும். அவை கழன்றுல் செவிலித்தாய் முதலியோருக்கு உடலிளைப்பின் காரணம் தோன்றலாம். ஆயின், அது தோன்றுதிருக்கும்பொருட்டு வளையல்காரர்களிடம் சிறிய வளைகளும் விலைக்கு உள்ளன. அவற்றை வாங்கி அணிந்துகொள்ளலாம் " என இவ்வளவு பொருள்களும் தோன்ற

..........................................துறைவன்
வாராதமையினும் அமைக
சிறியவும் உளஈண்டு விலைஞர் கை வளையே.

என்றிவ்விரண்டடியால் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தார்.

கருத்துரை—மாரிக்காலத்துக் கூம்பிய அல்லி மொட்டுப்போன்ற கொக்கின் கண்பார்வைக்கு அஞ்சிய நண்டு, கயிறு அறுத்துக்கொண்டோடும் எருத்து மாட்டினைப்போல ஓடுதற்கிடமாயுள்ள துறையினையுடைய தலைவன் விரைந்து வரைய வாராது தங்கிடினும் தங்குக. அவன் பிரிவினுல் நமக் குடலும் மெலிந்து கைவளை சோரினும் சோர்க. சோரின் விலைஞர்களிடம் உள்ள சிறிய வளைகளை வாங்கி அணிந்து கொள்வோம். அவ்வாறு அணியின் செவிலித்தாய் முதலியோருக்கு உடலிளைத்த காரணம் என்னவென்று அறியவேண்டிய அவசியம் ஏற்படாது என்பதாம்.

இனித் துறைவனுக்கு அடைமொழிகளாக அடுக்கப்பட்டவைகளிலிருந்து வேறு பொருள்களும் எடுக்கவேண்டி இருக்கின்றன. அவையாவன :

கொக்கின் பார்வைக்கு நண்டு அஞ்சுகிறதுபோல தலைவியும் அயலார் பார்வைக்கு அஞ்சுகிறுள் என்பதொன்று.

கொக்கிற்கஞ்சி நண்டு ஓடுதலைக் காண்கின்ற துறைவன் நமது அச்சமும் இத் தன்மையது என்றறிவன் கொல்லோ ? என்பது மற்றொன்று.

இனி, தலைவிக்கு விளையும் அச்சத்தினைச் சிறிதும் அறிந்திலனே என்ற சினங் காரணமாக "வாராதமையினும் அமைக" என்றுள். அது நிற்க, தலைவன் தலைவியைக் காணுமல் சில நாட்கள் இருந்தாலுகில் அவனுக்குப் பிரிவுத்துயர் பெரிதுபட்டுத் தானே வரைய முயல்வன் என நினைந்து " வாராதமைக " என்று சொல்லவந்த தோழி தலைவிக்கு அவ்வாறு கூறுவது ஒரோவழி துன்பமாயினுமாகும் என்றடங்கி " வாராதமையினும் அமைக " என்றுள். அதுவும் நிற்க " வாராதமைக " என்ற

கருத்தே தோழியின் உள்ளகத்தே சிறந்திருத்தலின் தலைவன் வாராமலே இருக் கட்டும் ; தலைவியின் உடல் மெலியினும் மெலிக ; வளைகள் கழன்றுலும் கழலட் டும் ; என்று ஒரு வகையால் துணிந்து " சிறியவுமுள ஈண்டு விலைஞர் கைவளையே" என்று ஈற்றடியைக் கூறினுள். தலைவிக்கு வளை முதலியன பெற்றோரால் தொழில் நயமுறச் செய்யப்பட் டணிவித்தல் இயல்பு. அங்ஙனம் செய்யப்படாமல் வேறு வளை யல் உண்டென்பாள் " விலைஞர் கைவளையே " என்றுள். தயாராக முன்னரே செய் யப்பட்டு மிகுதியாக உள்ளன என்பதை " ஈண்டு " என்பதால் குறித்தாள்.

இனி இச்செய்யுளில் வரும் முக்கிய சுவைகளைக் கவனிப்போம்.

1. கொக்கின் பார்வல் அஞ்சிய பருவரல் ஈர்ஞெண்டு—அச்சச்சுவை.
2. ஞெண்டு கண்டல் வேரளைச் செலீஇயர் அண்டர்
கயிறிரி எருத்திற் கதழும்..................நகைச்சுவை.
3. துறைவன் வாராதமையினும் அமைக...............................காதற்சுவை.
4. சிறியவும் உள ஈண்டு விலைஞர் கைவளையே....................அவலச்சுவை.

குன்றியனுர் செய்யுள் நலத்தைப் பெரியோர் விரிக்கிற் பெருகி இன்பந்தரும். யான் இத்துணையோடு முடித்துக்கொள்கிறேன்.

# வரலாறும் வரலாற்ருசிரியனும்

(திரு. ர. திருநாவுக்கரசு, புதுவை)

வரலாறு என்பது [வரல்+ஆறு=(நிகழ்ச்சிகள்) வருகின்ற வழி] உள்ளதை உள்ளவாறு அறிவித்தலாகும். அது காலநிகழ்ச்சிகளைக் கண்முன் காட்டும் ஒரு கருவியாகும்-பொதுப்படையாக மக்கள் சமுதாயத்தைப்பற்றிய, நினைவில் வைக்கத் தகுதியுடைய சம்பவங்களை அறிவிக்கும் ஒரு நூல். கால ஒழுங்கின்படி நடைபெறும் செயல்களின் தன்மையை விவரிப்பதும் கணிசமான வளர்ச்சியில் இறந்தகால உண்மையைப் போதிப்பதுமான ஒரு கலை. மனித வாழ்க்கைக்கே அது ஒரு பெருந்துணையாயமைகிறது. மனித சமுதாயத்தின் கடந்தகாலச் செயல்களை அறிவிக்கும் வகையால் அச்சமுதாயத்தின் எதிர்காலச் செயல்களைத் திட்டஞ்செய்யும் ஒரு நீதிமான் எனவும் அதனைக் கொள்ளலாம்.

வரலாறு மக்கள் சமுதாயத்தைச் சீரமைக்குஞ் சட்டங்களை வகுக்கின்ற அளவு உயர்ந்த நிலையிலுள்ளது. அது மக்கள் எவ்விதம் ஓர் ஆட்சியிலிருந்து மற்ருேர் ஆட்சிக்குச் செல்லுகிருர்களென்பதைக் காட்டுகின்றது. நாம் காணுத இறந்தகால நிகழ்ச்சிகளின் ஒப்புமைகளாலும் மறுப்புக்களாலும் எதிர்கால வாழ்க்கையை நமக்கு அறிவித்து வழிகாட்டுகிறது. அந்நிகழ்ச்சிகளால் கொடியவர்களின் தீச்செய்கைகளை விளக்கி நல்லவர்களின் படிப்பினைக்கு உபயோகப்படுகிறது. காலமாறுதல்களினுல் ஏற்படும் நியாயமற்ற பயங்கரத்தைப் போக்க உபயோகப்படுகிறது. ஆகவே சமுதாயப் படிப்பினைக்கு வரலாறு ஓர் ஆதாரம். அது தொடர்ந்து ஏற்படும் சமூக மாறுதல்களைப்பற்றி ஆராய இடந்தருவதால் சமூக வளர்ச்சியில் மக்களைப் பழக்குகிறது. தெளிவற்ற சூக்குமமான விரிவுரைகளாலின்றி, நிச்சயமான காரியங்களைக் கொண்டு மக்கள் வழ்க்கைச் சட்டத்தையும் நிகழ்-இறந்தகால ஐக்கியச் சட்டத்தையும் அறிவிக்கின்றது. மக்கள் முக்கியமாகக் கொள்ளவேண்டிய சனநாயகக் கொள்கையில் அது அவர்களை ஈர்த்துச் செல்லுகிறது.

தனிமனிதனும் வரலாற்றினுல் பயன் பெறுமலில்லை. வரலாற்றுராய்ச்சி விரிவான மதிநுட்பமும், நியாயவாத அறிவும், காரிய காரணங்களைச் சீர்தூக்கிப்பார்க்கும் பண்பும் அளிக்க வல்லது.

வரலாறு எவ்விதப் புதுப்பொருள் கொண்டும் எழுதப்படுவதில்லை. அது நிகழ்ச்சிகளை அவற்றின் காலத்தோடு காணமுயலுகிறது. மற்றக் கலைகளைப்போல

வரலாற்றிலும் நிகழ்ச்சிகளைக் காண்பதும் அவற்றை அலசிப்பார்ப்பதும் அவற்றை ஒப்புமைப்படுத்துவதும் இல்லாமலில்லை. அவ்வாறு செய்யப்படுவதால் வரலாற்றை ஒரு வாழ்க்கைச்சித்திரம் எனலாம். ஒரு நாட்டின் வரலாறு செம்மையாக எழுதப் படவில்லை என்ருல் அந்நாட்டு மக்களின் வாழ்க்கை சீர்படாது. வரலாற்றுக்கலை ஏனைய கலைகளினும் மாறுபட்டதொன்று.

வரலாற்ருசிரியன் உண்மை விளம்பியாவான். நீதி நெறியிலும் அரசியலிலும் தான் முக்கியமாகக் கருதுகின்றவற்றைச் சாதிப்பதற்காகவும் தன் கட்சியைப் புகழ்வ தற்காகவும் ஒருவன் வரலாற்றுத் துறையில் நுழைவானுனல் அவன் ஒரு பொழு தும் வரலாற்ருசிரியனுகான். உண்மையான வரலாற்ருசிரியன் உண்மையை வெளிப் படுத்துவதொன்றிலேயே தன் கருத்தைச் செலுத்தி, அஃதொன்றையே தன் குறிக் கோளாகவும் கொள்ளுவான். வரலாற்ருசிரியன் நீதி செலுத்துகின்றவனுக்கு ஒப் பானவன். உண்மை நாடி வெளிச்சம் காண்பதில் அவன் எதையும் தள்ளான். பகை, பற்று, சினம் எதுவுமின்றி நடுநிலைமையில் நுணுக்கமாக ஆராய்ச்சி செய்த பின்பே தன் கருத்தை வெளியிட முற்படுவான். அவனுக்கு நன்முயற்சியும் நல் லெண்ணமும் மதிநுட்பமும் வேண்டற்பாலன.

தண்டிப்பது அல்லது மன்னிப்பது வரலாற்ருசிரியன் வேலையல்ல. சமூகத்தின் தொடர்ந்த மாறுதல்களினுல் தனிப்பட்ட மக்கள் அல்லது ஒரு தலைமுறையினர் எவ்விதம் வளர்ச்சியில் முன்னேக்கி வந்தார்க ளென்பதைக் காட்டுவதற்கு வர லாற்ருசிரியன் முயலுகிருன். பழைய காலத்தைப்பற்றித் தெரிந்துகொள்வதற்கும், மறைந்த நாகரிகத்தை உட்புகுந்து பார்ப்பதற்கும் நமக்குப் புறம்பாக உள்ள ஆளு கைகளைப் பாகுபாடு செய்வதற்கும் அவன் உதவியாகிருன்.

புலவன் பாடுகிருன். தான் கண்டவற்றை, அறிவுக்கெட்டியவற்றைப் புலமை தோன்ற வருணிக்கிருன். ஆனல் வரலாற்ருசிரியனே தான் எடுத்துக்கொண்ட பொருளுக்கு அதிகாரியல்லாமல் பெருங் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவனுகிருன். நிகழ்ச்சிகளின் தன்மையும் காலத்தின் போக்கும் அவனைக் கட்டுப்படுத்துகின்றன. மேலும் அவன் தன் விருப்பத்திற்கு நிகழ்ச்சியை மாற்ற இயலாதவனுகிருன். சரி யான வரலாற்ருசிரியன் எந்தக் காலத்தையும் எந்த நாட்டையும் சேர்ந்தவனுகக் கருதப்படான். ஒரு நாட்டுத் தலைவர்களைச் சிறப்பித்தும் மற்றெரு நாட்டுத் தலைவர் களை இழித்தும் வரலாற்ருசிரியன் வரைதல் கூடாது. குற்றமோ குணமோ அவை எங்கிருப்பினும் பகைமை நட்பு இவற்றை எல்லாம் ஒதுக்கி அவற்றை உள்ளவாறு வரலாற்ருசிரியன் எழுதவேண்டிய கடமையைக் கொண்டவனுகிருன். அந்தப்பண்பு தான் வரலாற்றின் இதயம் என்று சொல்லலாம்.

வரலாறு நாட்டின் உண்மை நிலையைத் தெரிவிக்கின்ற ஒரு கருவியாக இருக் கின்றதால் அது விரிவாக எழுதப்பட வேண்டியதாயிற்று. அதனுலே அது குறிக் கின்ற காலத்தின் நேர்மையான படத்தை நாம் கண்முன் பார்க்கின்றவர்களாகின் ருேம். இதனுல் வரலாற்ருசிரியன் பெருமுயற்சியில் ஈடுபட வேண்டும். அவன் தன்

காலத்தையும் தன்னைச் சுற்றியுள்ள பழக்க வழக்கங்களையும் விட்டுவிட்டு அப்பாற் சென்று அவன் அறிவிக்கப்புகும் காலத்தின் பாத்திரங்களையும் அவற்றின் தன்மைகளையும் அக்கால அரசர்களின் கட்டளைகளையும் இன்னும் அதுபோன்ற பலவற்றையும் அவன் சேகரிக்க வேண்டும். அதோடு நில்லாது அவன் பல ஊர்களையும் சுற்றிப்பார்த்து உண்மை அறிந்துகொள்ள வேண்டும்.

வரலாற்ருசிரியன் நிகழ்ச்சிகளை அடுக்குங்கால் நிரையும் வரிசையும் ஒழுங்குபட இருத்தல் வேண்டும். அந்த அழகான வரிசை அவன் எழுதுகின்ற வரலாறு முழுமையும் குடிகொண்டிருக்க வேண்டும். பார்வையில் அந்த முழுமை அவன் மாத்திரமன்றி அவன் எழுதும் வரலாற்றை வாசிப்பவர்களும் காணத்தக்கதா யிருத்தல் வேண்டும். அவன் வரைகின்ற எல்லாப் பாகங்களும் ஒன்றுபட்டுக் காணவேண்டும். எல்லா முக்கியச் சம்பவங்களும் ஒரே ஊற்றிலிருந்து வெளிவருகின்றனபோல் அவற்றுள் ஒருமைகாட்ட வரலாற்ருசிரியன் முயலவேண்டும். அப்படிச் செய்தால்தான் அவன் பயனுள்ள போதனையைச் செய்தவனுவான்.

ஒவ்வொரு நூற்ருண்டிலும் மக்கள் கொண்டிருந்த ஆட்சியைப்பற்றியும் ஒவ்வொரு நாட்டின் பழக்க வழக்கங்களைப்பற்றியும் அவன் சரியாகக் குறிக்கவேண்டும். காலத்தாலும் தேசத்தாலும் மக்களின் வாழ்க்கை முறை வேறுபடுகின்றதாதலால் இந்தக் குறிப்பு அவசியமாகிறது. காலத்தின் நிலையறியாச் சித்திரக்காரன் தீட்டுகின்ற சித்திரங்கள் அவ்வக்காலத்தின் உண்மைச் சித்திரங்களாகாமைபோல,காலத்தின் நிலையறியா வரலாற்ருசிரியன் வரைகின்ற வரலாறு உண்மை வரலாருகாது.

வரலாற்றின் அமைப்பே ஒரு கூட்டுவகையான வேலையாயிருக்கிறது. நிகழ்ச்சிகளை ஒழுங்காக அமைத்து அவைகளுக்குள் ஒருவித தொடர்பை ஏற்படுத்துதல், அவற்றின் காரணங்களை ஆராய்தல், இவை எல்லாம் வரலாற்றை உணர்வதற்கு வழி செய்வதாகும். இறந்த காலத்தை மீண்டும் உயிர்ப்பிக்கச் செய்கின்ற பொழுது அவ்விறந்த காலத்தின் ஒழுக்கங்களுக்கும் மனநிலைகளுக்கும் மாறுபட்டிருக்கின்ற அவன், நிகழ் காலத்திய சம்பவங்களை இறந்தகாலத்தோடு இணைத்துக்கெடுக்காதிருக்கப் பார்த்துக்கொள்ள வேண்டியவனுகிருன். ஆகையால்தான் வரலாற்றை ஒரு முறை பார்த்த அளவிலே அது பார்ப்பவர்களுக்குப் பல கேள்விகளை எழுப்புகிறதா யிருக்கிறது. ஆனல் அக்கேள்விகளுக்கு அது ஒரு பொழுதும் பதில் சொல்லும் நிலைமையிலில்லை. அக்கேள்விகளுக்குரிய பதிலை வரலாற்றை ஆராயும் பிற்காலத்தவரின் சமூகச் சேவையே கூறுவதாயிருக்கிறது.

வரலாறு ஒரு கலை என்று மேலே சொன்னேம். அந்தக் கலைக்கும் மற்றக் கலைகளுக்கும் வேறுபாடுண்டு. வரலாறு எதனையும் கற்பனை செய்வதில்லை. அதன் பண்பு கூர்ந்து நோக்குவதேயாகும் என்று பிரஞ்சு வரலாற்ருசிரியர் ஒருவர் கூறுகிருர்.

ஒரு வேதிநூற் புலவன் தன் நுணுகிய சோதனைகளால் பொருட்களைத் தேடி அடைகின்ருன். வரலாற்ருசிரியனே தனக்குரிய பொருள்களை நுணுகிப்பார்த்துக்

காண்கிறுன். ஆதலாற்றுன் வரலாற்றை ஆராய்வதற்கும், மற்றக் கலைகளைப்போலன்றி, தனி வகையான முறையைக் கைக்கொள்ளவேண்டி யிருக்கிறது. வேதிக் கலைக்குக் காட்டிய வேறுபாடு போன்றே மற்ற எல்லாக் கலைகட்கும் வேறுபாடு இருக்கிறது. ஒவ்வொரு கலையும் மனத்துக்கும் அறிவுக்கும் வேலை தந்து வளர்ச்சி அடைகிறது. வரலாற்றுக்கலை நுண்ணிய நோக்கையும் நடுவு நிலைமையையும் முக்கியமாகக்கொண்டு சம்பவங்களை உலகத்தின்முன் உள்ளவாறு வைக்கிறது. அது கடந்த காலக் கலையெனவும் கொள்ளப்படும். பொருளைப்பற்றிக் குறிக்குங்கால் அப்பொருளுக்குரிய காலத்தோடு வரலாறு பொருந்தியிருக்கவேண்டுமாதலால் மற்றக் கலைகளைப்போல் காலத்துக்கு அப்பால் அது பொருளை ஆராயும் தரத்ததன்று. ஒரு நிகழ்ச்சியின் காலத்தையும் இடத்தையும் சரியானபடி கண்டறிவதே வரலாற்றுசிரியன் முதல் வேலை. ஆகவே வரலாறு பொதுப்படையாகக் காலத்தாலும் இடத்தாலும் விரிந்த தனிக்கலையாகும்.

மனித சமுதாயத்தைப் பற்றிநிற்பதால் வரலாறு, கலைகளிலே சிறப்பானதென்று சொல்லலாம். முடிவான வாழ்க்கையை ஊக்கி எழுப்புதல் வரலாற்றின் வேலையாதலால் வரலாற்றுசிரியன் நாட்டமெல்லாம் உண்மையைத் தேடுவதிலேயே ஈடுபட்டிருக்க வேண்டும். அவன் தோத்திரத்தையும் வசையையும் ஒழிக்க வேண்டும். கூடுமான வரை முகமனில்லாமலும் குற்றமில்லாமலும் நல்லவற்றையும் தீயவற்றையும் நம்புகின்ற அளவுக்குச் சொல்ல முற்படவேண்டும்.அதற்கு அவன் மேதாவித் தன்மையை நாடவேண்டிய அவசியமில்லை. அவன் அனுவசியமான அடைமொழிகளையும் அலங்காரத்தையும் நீக்கவேண்டும். அந்தக் கழிவால் அவன் எழுதும் வரலாறு விறுவிறுப்புள்ளதாகவும் அழகியதாகவும் அமைகிறது.

உண்மை வரலாற்றுசிரியன் எல்லா நிகழ்ச்சிகளையும் விடாது வரைந்து காட்ட வேண்டிய அவசியமில்லை. எம்முடிவுக்கும் கொண்டு செலுத்தாத பல நிகழ்ச்சிகளை அவன் விட்டுவிடலாம். அப்படிக் குறைப்பதால் வரலாற்றிற்கு இழுக்கு ஏற்படாது. வாசகர்களை நிகழ்ச்சிகளின் நடுவே இழுத்து நிறுத்தி அவற்றின் தொடர்புகளை ஊகிக்கச் செய்து துரிதமாக ஒரு முடிவிற்கு வரச்செய்வதே வரலாற்றுசிரியனின் குறிக்கோளாக விருத்தல் வேண்டும். கண்டறியும் சம்பவங்களின் விளைவாக மாந்தரின் மனத்தின்கண், பண்பட்ட ஒரு கருத்து ஏற்படாதுபோயின் வரலாற்றுசிரியனின் பணி பயன் தராததாகும்.

வரலாற்றையும் வரலாற்றுசிரியனைப்பற்றியும் மேனுட்டு அறிஞர் கொண்ட கருத்துக்கள் சிலவற்றை இங்கே குறிப்பிடுவது நன்று :

வரலாற்றில் எவனெருவன் தன் கோட்பாட்டிற்கு நியாயமும், தன் கட்சிக்கு ஆயுதங்களும் தேடுகிறுனே அவன் மிகவும் கேவலமடைகிறுன் (எச். தேன்)

தேசபக்தி ஓர் அறம். வரலாறு ஒரு கலை. இவ்விரண்டையும் ஒன்றுகக் கலக்க வைக்கக்கூடாது.

வரலாற்றுக்கலை கற்பனையன்று. அது கண்ணுக்கு நல்லதொரு தோற்றத்தை அளிக்கின்றதேயாகும்( புஸ்தேல் தே கூலான்ழ்)

வரலாற்றில், எல்லாம் எல்லாவற்றிலும் ஆதிக்கஞ் செலுத்துகிறது (மிஷலே)

வரலாற்றைப்பற்றிப் பேசுங்கால் அதைக் காலத்தின் விளக்கம், நிகழ்ச்சிகளின் பாதுகாப்பு, உண்மையின் நேர்மையான சாட்சி, நல்ல யோசனைகளுக்கும் விவேகத் திற்கும் ஊற்று, ஒழுக்கத்திற்கும் நடத்தைக்கும் பற்றுக்கோடு என்றெல்லாம் அறி ஞர்கள் காரணமின்றிச் சொல்லியிருக்கமாட்டார்கள்.

ஆகவே, வரலாறு வாழ்க்கையின் கண்ணுடி. அதில் நன்மையும் தீமையும் காணலாம். அழகையும் அழகின்மையையும் பார்க்கலாம். அதிலிருந்து நமக்கு வேண்டிய பலன்களையும் பெறலாம்.



# கோவையார் ஓவியக் காட்சி

(பேராசிரியர், கவியரசு. திரு. அரங்க-வேங்கடாசலம் பிள்ளை)

## மூன்று காட்சிகள்

*காலம் : அந்தி மாலை.*
*இடம் : பொய்கைக் கரை.*
*உரியோர் : தலைவி, தோழி.*

### காட்சி–1

தோழி :

நங்காய் ! தாமரை முதலாய மலர்க்கொடிகள் பரவியுள்ள இப்பொய்கை நம் உள்ளத்தைக் கவர்கின்ற தன்றோ !

தலைவி :

ஆம் தோழி ! இப்பொய்கையைச் சூழ்ந்து, இன்சுவைத் தீங்கனிகளையும் நறுமண மலர்களையுங் கொண்டுள்ள பூஞ்சோலைகள் மிக்க மகிழ்ச்சியளித்து விளங்குகின்றன வன்றோ !

தோழி :

ஆம் தேவி ! இந்த இரண்டிடங்களினுமுள்ள மலர்களை யணுகி ஊதும் வண்டுகளின் இன்னிசை நம் செவிகட்கு எத்துணை இன்பம் அளிக்கின்றது.

தலைவி :

என் ஆருயிர்த் துணையே ! இந்நேரத்தில் பலவகை மலர்களின் நறுமணங்களைக் கொண்டு நம்மீது வந்து வீசும் தென்றற்காற்றின் இனிமையை என்னென்று கூறி மகிழ்வது !

தோழி :

தேவி ! இதுகாறும் நாம் கண்டு மகிழும் பேரின்பங்களைவிட மிகமிக மேலான காட்சி இன்பத்தை அளிப்பது அதோ மேற்றிசையில் எழுந்து தோன்றும் தண் பிறைக் கொழுந்தன்றோ !

தலைவி :

தோழி, நன்று கூறினை ! இங்கே ஒன்று நினைவிற்கு வருகின்றது. அது நம் அப்பர் அடிகள் அருளிய தெய்வக் கவியோவியக் காட்சி :

" மாசில் வீணையும்—(செவியின்பம்)
மாலை மதியமும்—(கண்ணின்பம்)
வீசு தென்றலும்—(மெய்யின்பம்)
வீங்கிள வேனிலும்—(கனிகள் மிகுங் காலம்—வாயின்பம்)
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே—(வண்டறைதற்கு
ஏதுவாகிய மலர்களின் மணம்—மூக்கின்பம்)
ஈசன் எந்தை இணையடி நீழலே "

என்பதன்றோ அத்தெய்வக் கவியின் திரு ஓவியக் காட்சி ? தோழி ! அப்பிறைமதியின் சிறப்புக்களை எண்ணி மகிழ்வாம்.

## காட்சி–2

தோழி :

நங்கர்ய், அதோ பார் ! ஒரு பெருங் கருங்கடல் ; அக்கடலின் ஒருபால் ஒரு பெருநகரின் பற்பல பகுதிகள்.

தலைவி :

ஆம், கண்டு மகிழ்ந்தேன் ! அதனுள் நடுப்பகுதியாம் நகரில் ஒரு பெரிய ஒளி சான்ற சுடர்க்கம்பம். அதன் உச்சியில் ஒரு சுடர் விளக்கு !

தோழி :

ஆம். அச்சுடர் விளக்கன்றோ, அக்கடலிலுள்ள கலங்களெல்லாம் நகரின் பிற் பகுதிகளிற் சென்று கலங்கி மயங்கி நிற்காது, நடுநாயகமாக விளங்கும் நகர்ப்பகுதிக்கு ஏகி, நகரை யடைந்து மகிழச் செய்யும் தெய்வத்துணை போல்வது !

## காட்சி–3

தோழி :

நங்காய் ! ஓ, இக்காட்சியின் வியப்பு என்னை ! முற்கண்டது உபமானம்; இஃது உபமேயம் அன்றோ ? எண்ணிப் பார் !

தலைவி :

ஆம் ! அதோ தோன்றுவது பிறவிப் பெருங்கடல். அதன் ஒருபாற் கரையில் தோன்றுவன பல்வகைத் தேவர்களின் திருத்தலங்களாம் பகுதிகள். அவற்றின்

இடையில் நடுநாயகமாய் ஒளிர்வது திருச்சிற்றம்பலமாம் திருத்தலம். அதன்கண் எழுந்து உலகெலாம் இருள்நீங்கி ஒளிர, அருளுருவாய், சுடர்மயமாய் நிற்பது, சிவ பெருமான் திருக்கோல அருட்காட்சி ! அதன் உள்ளத்து அருள் தண்ணிய வடிவு கொண்டு, உச்சி சென்று செஞ்சடைமேல் ஒளிர்வது பிறைமதி. அது, பிறதேவர்க ளிடத்தெல்லாம் சென்று, இடர் நீக்கி அருள்வாரைக் காணாது, மயங்கும் இடர் உறு வாரை நோக்கி, அந்நிலையின் நீங்கி இங்கு வந்து இங்குள்ள எம்மிறைவன் திரு வடியை எய்தி உய்தி பெறுமின் என்று அம்மக்களை அழைக்கும் அருளொளி விளக்கு ஆதலை அறிந்து மகிழ்வோம்.

தோழி :

நன்று கூறினை ! இனி இதனை முடித்திடும் மற்றொரு காட்சியினையும் இங்கு நாம் கண்டு மகிழ்வோம். அதோ பார் மேற்றிசைத் தோற்றத்தினை ! ஞாயிறு மறைந்த இவ்வமயத்துத் தோன்றும் செக்கர் வானத்தின் சிறப்பினை ! இது முற் கூறிய இறைவன் திருமேனி போல்வதொன் றன்றோ ?

தலைவி :

நன்று கூறினை !

தோழி :

பெருந்தகாய் ! அதன் உச்சியில் தோன்றும் பிறைமதிச் சிறப்பினையும் பார் !

தலைவி :

தோழி, நன்று ! நன்று ! நின் கூரிய மதியினை என்னென்பது ! அது அப் பிரான் முடிமேல் உளது போல்வ தன்றோ ?

தோழி :

(எண்ணியது கை கூடும் காலம் வந்தது என அகத்தே மகிழ்ந்து) நல்லாய், வாழி ! இப்பொய்கையினை மீண்டும் உற்று நோக்குவோம். அதோ தோன்றும் நீலப் பூக்களின் நிலைமையினைக் காண்பாயாக !

தலைவி :

அவை இந்நிலையில் விரிந்து விரிந்து, மலர்ந்து மலர்ந்து மிக்க எழில் பெறு கின்றன.

தோழி :

நன்று கூறினை நங்காய் ! அதோ தோன்றும் தாமரை மலரின் செவ்வியினை யும் உற்று நோக்குவாயாக !

தலைவி :

தோழி ! அவை கற்றுவல்ல சான்றோர்போல் அமைந்து ஒடுங்குகின்றன. ஆம். மதியம் தோன்றும் இந்நிலையில் குவளை மலர்தலும், தாமரை குவிதலும் இயற்கை எனலை இன்று கண்கூடாகக் கண்டு மகிழ்கின்றோம்.

தோழி :

என் ஆருயிர்ச் செல்வமே ! அக்குவளை மலரும் தாமரை மலரும் இதுகாலை நினக்கு உணர்த்துவன—நீ நின் குவளைமலர் போன்ற கண்ணால் இம்மதியினைக் கண்டும், அத்தாமரை மலர் போன்ற கைகளை இம்மதிமுன் குவித்தும் தொழுது வணங்கவேண்டும் என்பனவன்றோ ? வாழி ! அங்ஙனமே இப்பிறையினைக் கண்டு தொழுது மகிழ்வாயாக ! நான் இதோ தொழுகிறேன் ; நீயும் தொழுவாயாக ! (தலைவி தொழாததைக் கண்டு) ஆ ! என்னே நானுதல் உற்றனை !

இக்காட்சிகளைக் காட்டும் திருக்கோவையார் செய்யுள் :

ஒரு தலைவனைக் கண்டு தனக்கு மணமகனாக உட்கொண்ட ஒரு தலைவியை, ஐயுறும் தோழி, தெளிவு பெற அத்தலைவியை இங்ஙனம் பிறை தொழுக என்றலும், அத்தலைவி, தன்மனங் கொண்ட தலைவனை ஒழிய வேறு எத்தெய்வத்தினையும் தொழா மரபினள் ஆதலின் வணங்காதிருத்தலும், அதுகண்ட தோழி தெளிவு பெறலும் பண்டை மரபு. இத்துறையமைந்த செய்யுள் :—

## பிறை தொழு கென்றல்

"மைவார் கருங்கண்ணி செங்கரங் கூப்பு ! மறந்தும் மற்றைப்
பொய்வா னவரிற் புகாது தன்பொற் கழற்கே யடியேன்
உய்வான் புகஒளிர் தில்லை நின்றோன் சடைமேல தொத்துச்
செவ்வா னடைந்த பசுங்கதிர் வெள்ளைச் சிறு பிறைக்கே."

(இவ்வாறு திருக்கோவையாரின் ஒவ்வொரு செய்யுளிலுமுள்ள கருத்தோவியங்களை உள்ளக்கண் கொண்டு கண்டு கற்போமாயின் தெவிட்டாத தமிழின்பத்தில் திளைக்கலாம்.)

# குறுந் தொகையிற் சில உவமைகள்

(திரு. வித்துவான். மு. த. வேலாயுதனூர், புதுவை.)

பண்டைச் சான்றோர்கள் உவமையின் வாயிலாகச் சிறந்த கருத்துக்களை விளக்கி யிருக்கின்றனர். உவமைதான் கருத்து விளக்கத்திற்கு விழுமிய வுறுப்பாகும். அதுவே, புலவன் கூறுபவற்றைப் பசுமரத்தாணிபோல் பதியச்செய்யும் ஆற்றலுடை யது. உவமையின் இலக்கணம், அதன் பிரிவுகள் முதலியவற்றை இலக்கண ஆசிரி யர்கள் எடுத்தியம்பி யுள்ளனர். எனவே, ஓர் நூலுக்கு அணியெனத் திகழ்வது உவமையேயாம்.

நிற்க, எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றுன "குறுந்தொகை" என்னும் நூலிற் காணப்படும் உவமைகள் உயர்வுடையனவாகும். இந்நூல் "நல்ல குறுந் தொகை" என்று புலவர்களால் பாராட்டப்பெறுகின்றமையால், அதன்றன் பெற்றி இஃதென்றுணரலாம். "பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்பதுபோல, அந் நூலின்கண் காணப்படும் சில உவமைகளைக் கவனிப்போம்.

ஓர் தலைவன், தான் கண்ட தலைவியை நினைந்து உருகுகின்றுன். அவன்றன் காமநோய் பொறுத்தற் கரியதாயிற்று. இது கண்ட பாங்கன் அங்ஙனம் கலுழ்தல் ஆகாதென் றிடித்துரைக்கின்றுன். அப்போழ்து தலைவன் பாங்கனை நோக்கிக் கூறுவதாவது :" இடித்துரைக்கும் நண்பரே ! நீர் கூறியவாறு காமநோயை நிறுத் தலைச் செய்தால் நல்லதுதான். என் விருப்பமும் அதுவே. ஆனல், அவ்வாறு நிறுத்தலைச் செய்தல் அரிதாகிறது. ஏனெனில், இந்நோய் என்னுடலெங்கும் பரவி யது. ஆதலால் பொறுத்துக்கொண்டு நீக்குதற்கு அரிதாயுள்ளது."

இவ்வாறு கூறவந்த தலைவன் காமநோய் எப்படிப் பரவியது ? அந்நோயை நோன்று கொளல் எவ்வாறு ? என்பன போன்றவற்றை உவமை வாயிலாக விளக்குதல் மிகவும் சிறப்பா யமைகிறது.

நல்ல வெய்யில் காய்கிறது. அதனுல், கற்பாறை நெருப்புப்போல் கனலியுடை யதாயிருக்கிறது. அக்கற்பாறையின்மீது வெண்ணெயை வைத்து ஊமன் ஒருவனைக் காவல் காக்க நியமித்தனர். பாவம் ! அவ்வூமனுக்கோ கையில்லை. இப்படிப்பட்ட வன் எவ்வாறு வெண்ணெயைக் காக்க இயலும் ? வெண்ணெய், மிகுந்த கன லால் உருகுகிறது. உருகாமல் தடுக்கவேண்டும் என்ற அழுத்தந்திருத்தமான கருத்

துண்டு ஊமையனுக்கு. ஆனால், கையில்லை அங்ஙனம் செய்வதற்கு. பிறருதவியா லாகிலும் அதைச் செய்து முடிக்கலாமென்ற எண்ண மிருந்தும் கூவுதற்கும் வா யில்லை. அந்தோ ! அவ்வூமன் என்ன செய்ய இயலும் ?

வெண்ணெய் எங்ஙனம் கனலியால் உருகிப் பாறையெங்கும் பரவுகிறதோ, அதுபோல், நண்பன்றன் காமநோய் உடலெங்கும் பரவுகிறது. உருகாமல் காக்கும் பொருட்டு முயற்சி செய்யவும் இடமில்லை. காரணம் தன் கை இல்லாமையாகும். அதுபோல், காமநோயைத் தடுக்க இவனால் இயலவில்லை. ஊமன், பிறரிடஞ் சொல்லி யாவது, அவ்வெண்ணெயை எடுத்துப் பிறிதோரிடத்திற் பாதுகாக்க முடியவில்லை. அதுபோல், தலைவன், தனக்கேற்பட்ட காமநோயைப் பிறரிடஞ் சொல்லித் தீர்த்துக் கொளற்குரிய நிலையையும் பெறவில்லை. எனவே, தலைவன் எவ்வாற்றானும் தீயினுஞ் சுடும் காமநோயைப் பொறுத்துக்கொள்ளுதற்கேற்ற ஆற்றலற்றவனாய்க் காணப்படு கின்றான் என்ற கருத்தை வெள்ளி வீதியார் என்ற புலவர் உள்ளம் நெகிழ்ந்துரு கக் கூறுகின்றார். இதை

“ இடிக்குங் கேளிர் நுங்குறை யாக
நிறுக்க லாற்றினோ நன்றுமற் றில்ல
“ ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கிற்
கையி லூமன் கண்ணிற் காக்கும்
வெண்ணெ யுணங்கல் போலப் ”
பரந்தன் றிந்நோய் நோன்றுகொளற் கரிதே.”

என்ற “ குறுந்தொகைச் ” செய்யுளாலறியலாம்.

தலைவியைப் பிரிந்து செல்கின்றான் தலைவன். அவன் செல்லும் வழியோ கல் லும் முள்ளும் உறுத்தக்கூடியன. இவற்றையெல்லாம் நினைந்து நினைந்து, தலைவி, வருத்தத்தால் கண் துஞ்சவில்லை. மிகவும் வருந்துகின்றாள். உயிரனைய அவள்தன் தோழி, தன் தலைவி பிரிவுத்துன்பத்தால் இறந்துபடுவாளோ எனக் கவலை யுறுகின்றாள். இஃதுணர்ந்த தலைவி, தோழிக்கு முன்னிலைப்புற மொழியாக “ தலைவரைப் பிரிந்த துயரினும் இவள் வருந்துதலைக் காணுந் துயர் பெரி தாயிற்று ” எனக் கூறுகின்றாள். மேலும், தலைவிக்குத் தலைவன்றன் பிரிவால் உண்டாகும் துன்பத்தைப் பார்க்கினும், தலைவியின் துயரைக் கண்டு தோழி படுந் துன்பமே பெரிதாகத் தோன்றுகிறது. அத்துன்பத்தைப் பொறுக்கும் ஆற்றலற்றவ ளாகக் காணப்படுகின்றாள்.

தலைவி படுந் துன்பம் எத்தகைத்து என்பதற்கு நல்லதோ ருவமை வேண்டும். பிரிவுத்துன்பத்தைப் புலவர்கள் பற்பலவாறு குறிப்பிட்டுள்ளனர். ஆனால், இங்குக் காட்டப்படும் உவமை உயர்பெரும் புலவர்க்கோர் விருந்தாகும்.

நள்ளிருள். கிணற்றில் கபிலநிறமுள்ள பசுவொன்று வீழ்ந்து பெருந்துன்ப மடைகிறது. இந்நிகழ்ச்சியை ஓர் ஆண்மகன் காண்கின்றான். அவன் ஓர் ஊமன். எனினும், அவன்றன் மனம் வருந்துகிறது. ஆனால், அதைத் தெரியப்படுத்த முடிய வில்லை. மிகவும் கவல்கின்றான். இத்தகைய துன்பத்தையே

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . " கூவற்
குராலான் படுதுய ரிராவிற் கண்ட
உயர்திணை யூமன் போல "

என்று, தலைவி படும் துயருக்கு உவமையாகக் காட்டுகிறார்.

பசு இராக்காலத்தில் கிணற்றில் விழுந்துவிட்டதைக் கண்ட ஊமன் அதனை விளக்கப் பிறருக்குச் சொல்லும் வன்மை இல்லாமையால் மிகவும் வருந்துகின்றான். அதுபோலவே, தலைவியும் வருந்துகின்றாள். தோழி படும் பிரிவுத்துன்பத்தை அவள் எங்ஙனம் பிறருக்கு எடுத்துச்சொல்ல இயலும் ? சொல்லுங் காலமும் அது வல்ல. ஆதலால், காலத்திற்கு நள்ளிரவையும், துயரத்திற்குக் கிணற்றையும், தலைவிக்கு ஊமனையும் உவமித்தது மிகவும் பொருத்தமுடைத்தாம். இதை,

" கவலை யாத்த வவல நீளிடைச்
சென்றோர் கொடுமை யெற்றித் துஞ்சா
நோயினு நோயா கின்றே " கூவற்
குராலான் படுதுய ரிராவிற் கண்ட
உயர்திணை யூமன் போலத் "
துயர்பொறுக் கல்லேன் றோழி நோய்க்கே."

என்ற செய்யுளா லறியலாம்.

இச்செய்யுளின் நயமும் பாராட்டற்குரியது." ஊமன் " என்ற மொழிக்கு அஃறிணையாகிய கோட்டான் என்ற பெயரும் உண்டு. அப்பொருளை நீக்கித் தக்கபொருள் கொள்வான் வேண்டி " உயர்திணை ஊமன் " என்றார்.

குராற் பசு கூவலில் விழக்கண்ட ஊமனை உவமை கூறிய சிறப்பினால் கூவலென்ற அடை இதனை யியற்றிய ஆசிரியர் பெயருக்கு அமைந்திருக்கிறது. எனவே, இச்செய்யுளை இயற்றிய ஆசிரியர் " கூவன் மைந்தன் " என்னும் பெயரைப் பெற்றார்.

தலைவிக்குத் தோழி கூறியதாக வரும் மற்றோர் செய்யுள் :

தலைவன் பிரிவான் என்ற செய்தி கேட்ட தலைவி வருந்துகின்றாள். அவன் பிரிந்தால், எங்ஙனம் பிரிவுத்துன்பத்தைப் பொறுத்துக்கொண்டிருக்க வியலும் என்று தலைவி கலுழ்கின்றாள். அவள் உயிரனைய பாங்கி, அவள்தன் துயரத்தைப் போக்குவான் வேண்டிக் கூறுகின்றாள் :

" ஒள்ளிய நுதலையுடைய தலைவியே ! நீ தலைவன் பிரிவானென்று கவலற்க ; யான் அறிந்ததைச் சொல்கின்றேன் கேட்பாயாக. நீ உயிரோடிருக்கும் வரை அவன் பிரிந்து செல்லமாட்டான். இதனை நிச்சயமாய் உணர்ந்துகொள்" எனக் கூறுகின்றாள்.

இங்ஙனங் கூறுந் தோழி, தலைவன் எவ்வாறு உணர்ந்து, செலவு தவிர்வான்? என்பதற்குத் தக்க உவமையாகக் கூறும் கருத்தை நோக்க வேண்டும். ஒரு காரியத்தைச் செய்ய விழைந்தால், அக்காரியத்தால், துன்பம் நேரிடும் என்றுணர்ந்தவர்கள், அதைச் செய்யா தொழிதல் இயல்பல்லவா? இதற்கு என்ன உவமை கொள்ளலாம்? உவமையினழகு வேறல்ல. புலமையினழகு வேறல்ல. உவமையே புலவன்றன் நுண்மாண் நுழை புலத்தைக் காட்டவல்லது.

மலையில் நல்ல தேன் கூடுகள் அமைந்திருத்தலியற்கை. அத்தேன் கூடுகளை அழித்து அதன்கண்ணுள்ள நறவத்தைக் கைக்கொள்வர் மலைவாழ்நர். மலைச்சிகரத்திலிருக்கும் தேன் கூடுகளை அழிப்பதற்குக் கணுக்களமைந்த பெரும் மூங்கிற் கம்பத்தை ஏணியாகக் கொள்வர். கணுவைக் கழியாமல் கால் வைக்கும்படி செப்பஞ் செய்து சார்த்தி அக்கணுவையே படியாகக் கொண்டு ஏறுவது மரபு.

இங்ஙனமிருக்க, அம்மறவன் தான் உபயோகிக்கும் பழம் மூங்கிலை, ஏறுவதற்கு முன்னால் ஆராயவில்லை. ஆனல் ஏறும்போது, பழமையானதாகவும் உலுத்துப் போனதாகவும் காணப்படுகின்றது. மடப்பத்தையுடைய அம்மடவோன் என் செய்வான்? சிறிது ஏறினபோதிலும், அவ்வேணியின் இயல்பறிந்து அஞ்சி மீண்டும் இறங்குவான் என்பது துணிபு. எனவே, அம்மடவோன் போலவே, மேற்கூறப்பட்ட தலைவனுமாவன் எனக் கூறும் உவமை, இயற்கை அழகையும், பொருட்செறிவையும் ஒருங்கே உணர்த்துகிறது. இதையே,

> " பெருந்தேன் கண்படு வரையின் முதுமால்
> பறியா தேறிய மடவோன் போல "

எனக் கூறுகின்றார் புலவர்.

தலைவியை விட்டுப் பிரிதலைத் தலைவன் முதற்கண் மேற்கொண்டான். அப்பிரிவு, தலைவியின் உயிரைப் போக்கும் எனக் கருதினனல்லன். எனவே, இச்செய்கைக்கு உலுத்த ஏணியைக் கொண்டு மலையின்கண்ணுள்ள தேன்கூட்டை அழிக்கப் புறப்பட்ட மடவோனை உவமையாகக் காட்டினர் புலவர். மலையின்கண்ணுள்ள தேன் இறுல், நெடுவழி சென்று பொருள் தேடுதற் குவமையாக வந்தது.

சேய்நாடு சென்று வினை முற்றுவான் வேண்டிப் பிரிதலை மேற்கொண்ட செய்கை, தலைவியின் உயிரைக் கவர்தலுடன் அதனல் தனக்கும் மிகுந்த துன்பத்தை வருவிக்கும் என்ற உவமையைத் தோற்றுவிக்கிறது. சிறிது ஏறிப் பின் அவ்வேணியின் இயல்பறிந்து இறங்கின செய்கை, ஆராயாமல் வினை மேற்கொள்ளக் கருதியவன் செலவு தவிர்ந்ததற்கு உவமையாக வந்தது.

> " அல்குறு பொழுதிற் றுதுமுகை தயங்கப்
> பெருங்காட் டுளரு மசைவளி போலத்
> தண்ணிய கமழு மொண்ணுத லோயே
> நொந்தனை யாயிற் கண்டது மொழிவல்

"பெருந்தேன் கண்படு வரையின் முதுமால்
பறியா தேறிய மடவோன் போல"
ஏமாந் தன்றிவ் வுலகம்
நாமுளே மாகப் பிரியலன் றெளிமே."

என்ற செய்யுளால் மேற்கூறப்பட்ட கருத்தை நன்குணரலாம். இது," சிறைக்குடி யாந்தையார் " என்ற செந்தமிழ்ப் புலவரால் கூறப்பெற்றது.

எனவே, உவமையினழகு புலவனின் றிறனைக் காட்டும் அளவுகோலாகும். தொல்காப்பியர் " உவமை இயல் " என்றதொன்றைக் கூறி விளக்கும் முறையை நுணுகி ஆராய்ந்தோர் எத்தகைய விழுமிய நூல்கள், தொல்காப்பியர் காலத்திற்கு முற்பட்டே தோன்றி யிருந்திருக்க வேண்டும் என்றுணர்வர்.

எனவே, குறுந்தொகை என்னும் நூல் உவமையழகைக் கொண்டுளது. மேற் கூறிய மூன்று செய்யுட்களைக் கொண்டே அதன் உயர்வை நன்குணரலாம்.